www.padippakam.com

சனவரி 7 1994


| | |
|---|---|
| பெரியாரியம் | கூட்டுக் கட்டுரை |
| வகுப்பு வாதம் | நான்கு கட்டுரைகள் |
| அந்தோனியா கிராம்ஷி | மாற்றுக் கலாச்சாரம் |
| மாற்றுக் கலாச்சாரம் | வாழ்விற்கான சாத்தியங்கள்... |
| மருத்துவத்தில் மாற்றுகள் | ஓமியோபதி |
| அஜித்சிங் பெய்ன்ஸ் | நேர் காணல் |
| டங்கல் திட்டம் | இரண்டு கட்டுரைகள் |
| கள ஆய்வு | சிறீரங்கம் கோயிலில் ஒரு நாள் |
| பதிவுகள் | கடிதங்கள் |
| மாற்றுக் கலாச்சாரம் | கூட்டு விவாத அறிவிப்பு |


# நிறப்பிரிகை

படிப்பகம்

www.padippakam.com



சென்ற இதழுக்கும் இந்த இதழுக்குமான நீண்ட இடைவெளியைப் பற்றி வருத்தம் தெரிவிப்பதற்கு வெட்கமாக இருக்கிறது. இந்த இதழுடன் நிறப்பிரிகை—இலக்கிய இணைப்பு ஒன்று தனியே வெளியிடப்படுகிறது என்பதுதான் ஒரே ஆறுதல்.இலக்கிய இணைப்பு வழக்கமாக நிறப்பிரிகை கிடைக்கும் இடங்களில் கிடைக்கும். நிறப்பிரிகை சந்தாதாரர்களுக்கு இலக்கிய இணைப்பும் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வளவு கால இடைவெளிகளில் இலக்கிய இணைப்பு வெளிவரும் எனச் சொல்வதில் பொருளில்லை தொடர்ந்து வரும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறோம்.

சென்ற இதழில் வெளிவந்த பெரியார் பற்றிய கட்டுரைகள்-மிகுந்த வரவேற்பிக் குள்ளாயின. இந்த முறை கூட்டு விவாதம் மிகவிரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது இன்றைய தமிழ்ச் சூழலுக்கு அவசியமான ஒரு புதிய பெரியாரை கூட்டு விவாதம் முன் நிறுத்துகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பெரியார் பற்றிய பன்முகப் பட்ட பார்வைகளையும் தோழர்கள் படித்து அவற்றின் மீது கருத்துக்களை எழுதி விவாதத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டுகிறோம்.

இன்றைய இந்தியத் துணைக் கண்டச் சூழலை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மிக முக்கியமான அம்சமாகிய வகுப்புவாதம் பற்றிய நான்கு கட்டுரைகள் இந்த இதழில் வெளியாகியுள்ளன, இவை ஒவ்வொன்றும் தனித்தனியே முழுமையுடையதாகவும், நான்கும் ஒட்டு மொத்தமாக முழுமையுடையதாகவும் கட்டுரைகள் தயாரிக்கப் பட்டுள்ளன. பெரிய கட்டுரைகளைத் தோழர்கள் சிலசமயங்களில் தவிர்த்துவிடுவதை மனதிற்கொண்டு இந்த உத்தி கையாளப்பட்டுள்ளது.

நிறப்பிரிகை-முதல் இதழ்களிலிருந்து பார்த்தீர்களானால் மாற்றுக் கலாச்சாரம், மாற்றுக் கல்வி, மாற்று அரசியல் ஆகியவற்றைத் தொடர்ந்து முதன்மைப் படுத்தி வருவது தெரியும். மாற்று எனச் சொல்லும் போது இதற்குப் பதிலாக இன்னொன்று என்கிற ரீதியில் எதையாவது சொல்லி விடாமல் மாற்றாக உள்ளபல்வேறு சாத்தியங் களின்பால் கவனம் குவிப்பதே நமது நோக்கம். தோழர்களின் ஆலோசனையின் படி அடுத்த கூட்டு விவாதம் மாற்றுக் கலாச்சாரம் பற்றி நடைபெறும். தொடர்ந்து மாற்றுகள் பற்றிய கட்டுரைகளை நிறப்பிரிகை வெளியிட்டு வருவதால் சிறப்பாக இந்த இதழில் அதிகக் கட்டுரைகள் இடம் பெறவில்லை. மாற்று மருத்துவம் பற்றிய ஒருகட்டுரையையும் மாற்று வாழ்முறைக்கான சாத்தியங்கள் பற்றிய ஒரு மேலோட்ட மான பார்வையையும் வெளியிட்டுள்ளோம். அம்பேத்கர் போல இறந்து போன பல ஆண்டுகளுக்குப் பின் அதிக கவன்ம் பெற்றிருக்கக் கூடிய ஒரு சிந்தனையாளர் அந்தோனியோ கிராம்ஷி. ஆளும் வர்க்கத்திற்கான அரசியல்பற்றிய பார்வைகளை மனு முதல் மாக்கியவெல்லி வரை எத்தனையோ பேர் முன் வைத்துள்ளனர். ஒடுக்கப் பட்டவர்களின் அரசியல் பற்றி ஒரு ஒருங்கிணைந்த பார்வையை முன் வைத்தவர் கிராம்ஷி. அவர் சிந்தனைகள் பற்றிய ஒரு அறிமுகத்தைத் தோழர் சூ. மா செய்துள்ளார்.

இந்த இதழ் அச்சு முடிவுறும் தறுவாயில் உருகுவே பேச்சுவார்த்தை (காட்) முடிந்து டங்கல் அறிக்கை கையெழுத்தாகி விட்டது. 1930களில் ஏற்பட்ட மாபெரும் பொரு

www.padippakam.com

# பெரியாரியம்

## கூட்டுக் கட்டுரை - 6

**விவாத விவரம் :**
பார்க்க நிறப்பிரிகை-6 பக் 115 —116.

**நாள்:**
02—05—93 காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை

**இடம்:**
பழம்பெரும் திராவிட இயக்கத் தோழரும் தமிழ் வழிக் கல்விப் போராளியுமான திரு. **எம். எஸ்.** ராமசாமி அவர்களின் வீரமணி பள்ளி **மதுரை.**

**பங்கு பெற்றோர் :**
தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 135 பேர்கள் வந்திருந்தார்கள். பெண்கள் 6 பேர் மதிய உணவிற்குப் பிறகு அரங்கில் எண்ணிக்கை குறைந்திருந்தது. முற்றிலும் வேறுபட்ட பல் வேறு நிலைபாடுகளும் மோதும் களமாக விவாதம் அமைந்தது. இன்றைய அரசியல் சூழலுடன் மிகவும் நெருக்கமான உறவுடைய ஒரு, தலைப்பாக இருந்ததனால் பலரும் ஆர்வ முடன் பங்கேற்றனர். எனவே வழக்கமாக நிறப்பிரிகை கூட்டு விவாதங்களில் செய்வது போல ஒவ்வொரு கேள்வியையும் எடுத்துத் தனித்தனியாக விவாதித்து ஒருமித்த கருத்தை உருவாக்க இயலவில்லை. எனினும் முன் வைக்கப்பட்ட கருத்துக்களில் பொதுவாக உடன் படுகிற மையமான கருத்துக்கள் இறுதியாக அனைவர் முன்னிலையிலும் தொகுத்தளிக்கப் பட்டன. எழுதி வாசிக்கப்பட்ட கருத்துக்கள் தவிர பிற உரைகளின் முக்கிய பகுதிகள் இம் முறை ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டது. கூட்டு விவாதம் தொடர்பான ஒரு சிறு அறிமுகத்தோடு விவாதம் தொடங்கியது. நிறப் பிரிகையின் கருத்துக்களை **ராஜன் குறை** முன் வைத்தார்.

**நிறப்பிரிகை:**

1. பெரியார் பல்வேறு சமயங்களில் பல்வேறு முழக்கங்களையும், குறிக்கோள்களையும் முன் வைத்து பிரச்சாரம், இயக்கம், கிளர்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியிருந்தாலும் அவை அனைத்திலும் தொடர் சரடாக இருப்பதும், பிரதானமாக வெளிப்படுவதும் 'சாதி ஒழிப்பு' என்பதாகக் காணமுடிகிறது. எனவே பெரியாரியம் என்பது அடிப்படையில் சாதி ஒழிப்பே எனக் கருதலாம். சாதிப்படி நிலை அமைப்பைத் தகர்க்கக் கூடிய, சாதி சமத்துவத்தை நிறுவக் கூடிய கோரிக்கைகளுக்காகப் போராடுவது என் பதை ஒருபுறமும்,சாதியக் கருத்தியலின்மொத்த பின்புலத்தையும், சாதியத்தின் சட்டகமான பார்ப்பனீயத்தையும் அவை சார்ந்த குறியீடுகள் புனைவுகள் ஆகியவற்றையும் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்வது என்பதை மறு புறமும் சாதி ஒழிப்பிற்கான நடவடிக்கைகளாக பெரியாரியம் கொள்கிறது.

2. மேற்கண்ட பெரியாரிய அடிப்படைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் நாம் அத் துடன் ஆதிக்கக் களங்களைக் குறித்த நமது புரிதல்களை இணைத்துக் கொண்டு பல முனை களில் தீவிர பிரச்சாரங்களையும் இயக்கங்களை யும் செயல்படுத்த வேண்டும்.

3. பெரியார் அங்கீகாரம் பெற்றுள்ள அதே சமயத்தில் அவர் தகர்க்க விரும்பிய பலவும் இன்றும் நிலவுவதைப் பெரியாரியத்தின் தோல் வியாகப் பார்க்க முடியாது. கிராம்சியின் வார்த் தைகளில் சொன்னால், ''மரபு வழிபட்ட நிலை பாடுகளுக்கு கெதிரான தங்களின் புதிய நிலை பாடுகளை வெகுமக்கள்திரள் தக்க வைத்துக் கொள்ளும் என நம்பமுடியாது...'' பெரியாரின் இயக்கத்தை மட்டுமல்ல இதன் இன்றைய தாக்கத்தையும் புரிந்து கொள்ள கிராம்சியின் எழுத்துக்கள் பெரிதும் உதவக்கூடும், பெரி யாரைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற அரசி யலியக்கங்கள் அவருடைய கருத்தியல் போரை தொடராமல் சமரச நிலைபாடுகளெடுத்தது இன்றைய தேக்கங்களுக்கு முக்கிய காரணம்.

4 அவரது உச்சரிப்புகளைத் தெரிந்தே புறக் கணித்து விட்டு அவர் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு அவரை பொருப்பாக்க முடியாது. தெளிவாகச் சில கோட் பாட்டு ரீதியான புரிதல்களை உருவாக்கிய அம்பேத்கரின் பெயரையும் இன்று அரசு உட்பட



படிப்பகம்

www.padippakam.com

அனைவருமே பயன்படுத்துவதைப் பார்க்கும் போது இந்திய வெகுமக்கள் அரசியலில் கோட்பாட்டுருவாக்கமெல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம்தான் எனக் காணலாம். பெரியாரும் அம்பேத்கரும் ஹெட்கவாரின் (ஆர்.எஸ்.எஸ்.நிறுவனர்) நண்பர்கள் என்றுகூறி நாளை வரலாறு எழுதப்படலாம். அனேகமாக இக் காரணத்தினாலேயே பெரியாருக்குச் சோர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அவருடைய பலமும் பலவீனமும் மக்களிடம் நேரடியாக உரையாடுவதை மட்டுமே அவர் விரும்பியதுதான்.

5. 'பகுத்தறிவாளர் கழகம், சிந்தனையாளர் கழகம்' என அறிவார்த்த அணியினரை உருவாக்கும் முயற்சிகள் நடந்திருந்தாலும் பெரிய அளவில் அவர் பாணியில் அவருடைய தீவிரத்துடன் பிரச்சாரம் செய்யக் கூடியவர் பலர் உருவாகாததற்குக் காரணங்களைத் தொகுக்க வேண்டும். வெகுஜன அரசியல் முனைப்புகளை (Political aspirations) பேச முனைந்த தேசியவாத கம்யூனிசச் சொல்லாடல்கள் பெரியாரிய உச்சரிப்புகளை நீக்கியதும், சமரசப்படுத்தியதும் அவருடைய பாணியிலான செயற்பாடுகள் தொடராததற்கு முக்கிய காரணங்களாகக் காணலாம் அத்தகைய சொல்லாடல்களின் ஈர்ப்பும் கவர்ச்சியும் பெரியாரிய எதிர்கலாச்சார நிலைபாடுகள் பெறக்கூடிய கவனத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்திருக்கும் என்பதும் அனுமானிக்கக் கூடியதே. அவருடைய தனிப்பட்ட பண்புகளான நம்பிக்கை வறட்சி, அரசியல் பற்றின்மை போன்றவை அவர்தக்க அணியினரை உருவாக்குவதில் தடையாக இருந்தனவா என்பதும் ஆய்வு செய்யப் பட வேண்டும்.

6. கட்சி அரசியல், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில்அவருக்கு ஈடுபாடின்மை அல்லது அவநம்பிக்கை இருந்ததற்கானத் தடயங்கள் அவரது பல உச்சரிப்புகளிலுள்ளன. அவரது செயற்பாடுகளை கிராம்சியின் வார்த்தைகளில் 'WAR OF POSITIONS' என்றுபார்க்கலாம். அவரது இயக்கத்தை, (முன்பே சொன்னதுபோல) சரியாக விளங்கிக் கொள்ள கிராம்சியின் சிந்தனைகள் பெரிதும் உதவும் என்பதுடன் பெரியாரை முன் வைத்து கிராம்சியைப் புரிந்து கொள்வதும் விடுதலை அரசியலுக்கான புதிய அடிப்படைகளை உருவாக்குவதும் இன்றைய தேவை.

7. தமிழில் உயர்கல்வி கற்ற, உலக வளர்ச்சியில் பரிச்சயம் கொண்ட இலக்கியவகதிகள், கலைஞர்கள், அறிவுஜீவிகள் சிறுபத்திரிக்கைக்காரர்கள் பெரியாரிடம் போதிய ஈடுபாடு கொள்ளாமலும் அவரை விரிவாக விவாதிக்கவும் ஆராயவும் செய்யாததற்குக் காரணங்களாக ஒருபுறம் தெளிவின்மை, அறியாமை, இயலாமை, உழைப்பின்மை ஆகியவற்றைக் கூறலாமென்றால் மறுபுறம் அக்கறையின்மை, நேர்மையின்மை, கயமை, உயர்சாதித் தன்மை ஆகிய வற்றைக் கூறலாம். தமிழில் எழுதும் எழுத்தாளன், சிந்தனையாளன் யாரும் நம்முடைய மரியாதையைப் பெற வேண்டுமென்றால் தனது சாதீயத் தன்னிலையைத் தகர்த்துக் கொள்வதையும், தீண்டாமை, சாதீயம், பார்ப்பனீயம் ஆகியவற்றிற்கெதிரான சமரசமற்ற நிலைபாடுகள் எடுப்பதையும் நாம் முன் நிபந்தனைகளாக வைக்க வேண்டும். இலக்கிய கலைப் பிரதிகளில் செயல்படும் சாதீய முனைப்புகளை விவாதிக்கக் கூடாது என்று இன்று தமிழ்ச் சிந்தனைச் சூழலில் கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. இத்தகைய கூற்றுக்கள் மீது கடுமையான கருத்தியல் தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

8. இந்து சனாதனத் தத்துவங்களிலிருந்து பெறப்பட்ட வெகுஜன உலகப் பார்வைக்கு ஆற்றல் மிகு மாற்றாக பெரியாரிய உலகப் பார்வை வைக்கப்பட்ட விதம் பிரமிப்பிற்குரியது. அவ்விதத்தில் அதை அணுகுவதை விடுத்து இயங்கியல் பொருள் முதல்வாதம் என நாம் புரிந்து கொண்டிருக்கிற நமக்குச் சொல்லப்பட்டிருக்கிற மார்க்சியத்தின் எல்லைக்குள்ளாகவே சர்ச்சைக்குரியனவாக விளங்கி வரும் கருத்தாக்கங்களை நாம் புரிந்து கொண்ட விதத்தில் வீசிப் பார்ப்பது பயனற்றது எதிர் கலாச்சார நிலைபாடுகளைக் கொண்டு பெரியாரிய உலகப் பார்வையை விரிவாக விவாதிக்க வேண்டும். அவர் பிரதிநிதித்துவப் படுத்தியது தரகு முதலாளியரைத்தான் என்பது போன்ற கருத்துக்களும் பழைய பொருளாதாரவாதம் சார்ந்தவைதான். மார்க்சீயத்தின் எல்லைக் குள்ளாகவே இன்று இது வெகுவாகத் தகர்க்கப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். பொருளாதாரவாத அடிப்படையில் பெரியாரை அணுகமுயற்சிப்பது பயனற்றது வெவ்வேறு வர்க்க நலன்களை வெவ்வேறு அரசியல் கட்சிகள் இன்றைய சூழலில் நேரடியாக பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பது போன்ற சிந்தனைகள் வெகுஜன அரசியலை நாம் புரிந்துகொள்ளும் ஆற்றலையே அழித்து விடும். பெரியாரின் பிரதான செயல்பாடாகிய சாதீயம், மதம், பார்ப்பனீயம் ஆகியவற்றிற்கெதிரான கடும் பிரச்சாரத்திற்கும் தரகு முதலாளிகளின் நலன்களுக்கும் என்ன தொடர்புகள் இருந்திருக்க முடியுமென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்—பெரியார் முதலாளிகளைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதைத் தவிர. அவரது தனிநாடு கோரிக்கையை மட்டும் எடுத்துக்கொண்டால்கூட அவர் அதை எழுப்புகின்ற காலங்களில் தரகுமுதலாளிய வளர்ச்சி நிலைகளுடன் அதனைப் பொருத்திக் காட்ட முடியுமா என்பது கேள்விக்குரியது. நீதிக்கட்சி, தி.மு.க போன்றவை நடத்திய அரசியலுக்கும், பெரியாரின் இயக்கத்திற்குமுள்ள வேறுபாடுகள் தொகுக்கப் பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

9. சாதீயக் கருத்தியலை அம்பேத்கரும் பெரியாரும் அணுகிய முறைகளை சரிவரத் தொகுத்துக் கொள்வது இரண்டிற்குமான இணைவுப் பிரதேசத்தை உருவாக்கிக் கொள்வதுஇன்றைய இந்துத்துவ எதிர்ப்புச் செயல்பாடுகளுக்குப் பெரிதும் பயன்படும். இந்நோக்கில் இருவரது சிந்தனைகளும் சீரிய முறையில் ஆய்வுசெய்யப் பட வேண்டும்.

**கிராமியன்:** 1. பெரியாரியம் என்பதைக் சாதி ஒழிப்பை அடிப்படையாகக் கொண்டபெண்ணிய விடுதலையை நோக்கிய சிந்தனை என்னும் வரையறையில் ஏற்றால், பார்ப்பன எதிர்ப்பு என்பது அதன் சரியான நடவடிக்கையாகும். ஆனால் பார்ப்பனர், பார்ப்பனீயம் என்னும் அடையாளம் சிக்கலுக்குரிய நிலையில் பயன் படுத்தப்படுகிறது என்றே சொல்லலாம். ஒதுக்குதலும் ஒதுங்குதலுமே பார்ப்பனீயம் எனக் கொண்டால் பிறவியடிப்படையிலான பார்ப்பனீயம் போலவேபெண்ணைப் பிறவியடிப்படையில் ஒதுக்கி, தான் ஆண் என ஒதுங்கிக் கொள்கிற எல்லா மத நிறுவனங்களின் ஆதிக்கத் தன்மையை நாம் எந்தச் சொல்லில் அடையாளப் படுத்துவது? பார்ப்பனீயம் என்று வழங்கும் சொல்லில் அதன் கடுமை ஆணைப் பிரதானப் படுத்துகிறது என்பதாலேயே அதனை மட்டும் பேசுவது ஆணாதிக்கச் சொல்லாடலாகாதா? பெண் விடுதலை, குடும்பச் சிதைவு, கருப்பை மறுத்தல் என்னும் அடிப்படையில் இனவிருத்தி மறுப்பு என்பதே நம் கோட்பாடாக, இன விருத்தி x இனவிருத்திமறுப்பு என்னும் சொல் லாடல்களன் என யோசிப்பதே சாதீயம் போன்ற மனித ஒடுக்குதல் களுக்கும் எதிர்ப்பை உள்ளடக்கிய நடவடிக்கையாகும் என்பதே என் கருத்து.

2. இன்றைய சூழலில் பெண்விடுதலை, பாலியல் ஒடுக்க எதிர்ப்பு எனும் சொல்லாடலை உயர்த்திப் பிடித்துச் சாதி ஒழிப்பை நடைமுறையாக் கலாம். பார்ப்பன எதிர்ப்பு எனும் பழைய உள்ளடக்கத்தைப் பேசுவது வேளாள எதிர்ப்பை மறந்தது போல மீண்டும் பார்ப்பன வேளாள எதிர்ப்பை மட்டுமே பிரதானப் படுத்தாமல்பெண் விடுதலை பிரதானப் படுத்தப் பட வேண்டும். அது குடும்பச் சிதைவை உள்ளடக்கியதாக இருந்தால் மட்டுமே சாதீய ஒழிப்பைச் செயல் முறையாக்கும்.

3. சிந்தனை மறுக்கப்படும் போதே சிந்தனையாளர் பற்றிய பிம்பம் உருவாகிறது. பெரியார் வழிபடு தெய்வமாக உயர்த்தப்பட்டமைக்கு அவரது சிந்தனை உள்வாங்கப் படாமை முக்கிய காரணமெனலாம். மனிதாபிமானம் போன்ற நிலப்பிரபுத்துவக் கருத்தியல் மேலாண்மை தமிழ்க் கலாச்சாரத்திலும், கல்வி, மருத்துவம் வாயிலாகச் செயற்பட்ட மேற்கத்தியகலாச் சாரத்திலும் நிலவியதால் அதனடிப்படையில் பெரியாரின் சிந்தனையைப் புரிந்துகொண்டத் தங்கள் புரிதல்வழி செயல்பட்டார்கள். தமிழ்வர்கள் தேசியம், நாத்திகம், பார்பன எதிர்ப்பு, சாதி ஒழிப்பு போன்ற வற்றின் வழி ஒருங்கிணைந்தவர்கள் பெரியாரியத்தின் கருத்துக் குவியத்தைத் தொடர்பற்ற சீர்திருத்தங்களாகவே கண்டனர். குறியீடு, புனைவு, தொன்மம் போன்றவற்றில் பெரியாருக் கிருந்த தெளிவு அவருடனுறைந்த வேறு எவருக்கும் இல்லை எனவே சொல்லாலம் (முட்டாள்கள் மட்டும் என்னிடமிருந்தால் போதும் என்கிற அவரது தொண்டர் வரையறையை நினைவு படுத்திப் பார்க்கலாம்) பொதுப்புத்தி(Common Sense என்கிற கிராம்சிய கருத்தாக்கம் இங்கே சுட்டப் படுகிறது — தொகுப்பாளர்.) பிற்போக்கான நிலையிலிருக்கும் போதுஜன நாயகம் அறிவுக் குவியத்தை நீர்த்துப் போகவே செய்யும். அண்ணாத்துரையின் ஜனநாயகமே அவரது பிரதான சிறப்பு — அரசியல் மேம்பாடு — பெரியாரின் எதிர்ப்பு, பெரியார் இவர்களது பொதுப் புத்தியைக்கிண்டல் செய்து 'கண்ணீர்த் துளிகள்' எனப் பெயரிட்டது குறிப்பிடத்தக்கது.

4. சிந்தனைகள் கோட்பாடுகளாகக் கட்டமைக்கப் பட்டாலும் அறிவுச் சேகரத்தில் சமூகத்தில் நிலவும் கருத்தியல் வழி அதனைப் புரிந்துகொள்வது என்பது இருந்ததாலும், மார்க்சீயம் கோட்பாடாக்கப் பட்டிருந்தும் நீர்த்துப் போனது போலவே பெரியாரியத்திற்கும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. பொதுப்புத்தி மிகுந்த பிற்போக்கானதான நிலையில் கோட்பாட்டுருவாக்கம் அவரை தனித்துச்செயல்பட முடியாத நிலையை உருவாக்கிவிடும் என்ற அச்சமும் கோட்பாட்டுருவாக்கம் ஆகாமைக்குக் காரணமாக இருக் கலாம். செயற்பாட்டுக்குத் தடைநேரும் என்ற போது அவர் தீவிரத்தைத் தணித்துக் கொண்டமைக்கு பொதுவுடைமைப் பிரச்சாரத்தை அவர் கைவிட்டதையும் இதனோடு ஒப்பிட்டுப் பார்க் கலாம்.

5. பெரியார் தன் சிந்தனைகளை எழுதி வெளி இட்டாலும் சிறுகுழு அளவிலான விவாதத்துக்கு இடமளித்திருந்தாரா என்பது தெரியவில்லை. அப்படி இடமளித்திருப்பாரேயானாலும் வயது' அரசியல் பிம்பம் போன்ற அவரது தடைகள் உண்மையான விவாதத்திற்கு வழி செய்யாமல் தடுத்திருக்க வாய்ப்புண்டு. தலைமை என்பது பெரியாருக்குள் கருத்தியலாக இருந்ததென்பதை அவரது 'தொண்டு', 'சமூகத் தொண்டாகக் கருதி செயல்படுகிறேன்' என்பது போன்ற சொல்லாடல்களில் காணலாம்.

6. தானும் தன் இயக்கமும் எதிர்க்கலாச்சாரச்



படிப்பகம்

www.padippakam.com

செயற்பாடுகளைக் கொண்டியங்குவதால் மக்கள் திரள் அமைப்புகள் கட்டிச் செயற்பட முடியாது என்பதால் அழுத்தக் குழுவாக இருந்து அரசு எந்திரத்தைப் பகைத்துக் கொள்ளாமலேயே சிவில் சமூகத்தில் பார்ப்பனீய மேலாண்மையைத் தகர்க்கும்நிலையெடுத்திருந்தார். பிரிந்துபோன தி.மு.கவினர் திரும்பியபோது கூட பார்ப்பனீயக் கருத்தியல் மேலாண்மைத் தகர்ப்பை முன்வைத்தே அரசுடன் இணைந்து செயல்பட்டார் எனலாம். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் குறித்து அவருக்கு அவநம்பிக்கை ஏதும்இல்லை எனலாம். பார்ப்பனீயக் கருத்தியல் மேலாண்மை செலுத்தும் சமூகத்தில் அரசதிகாரம் என்பது பார்ப்பனீயத்துடன் கருத்தியல் சமரசம் செய்து கொள்ளாமல் முடியாது, என்பதாலேயே திராவிடர் கழகம் சமுதாய இயக்கமெனவும், ஆனாலும் அரசு மூலமும் சட்டம் மூலமும் பல காரியங்களைச் செய்து பார்ப்பனீய மேலாண்மையில் தகர்ப்பு ஏற்படுத்த முடியும் என நம்பினார்— பூணூல் போட்டால் ஆறு மாதம் தண்டனை என அறிவிக்க முடியுமா?''.

7. தமிழில் உயர்கல்வி கற்றவர்கள்— சைவ. வைணவ மொழிப்பண்டிதர்கள் ஒருபுறம். மொழி வழிபாடு நிகழ்த்திய கலாச்சாரக், கல்விநிறுவன பேராசிரியர்கள் மறுபுறம் தமிழ் அறிவுச் சேகரம் ஏதுமில்லை. நாத்திகம் கூட பெர்ட்ரன்ட்ரஸ்ஸல் இங்கர்சால் பெயர் குறித்துப் பேசினாலே மேற்கத்தியப் பெருமை என்னும் மேலைக் கலாச்சார பெரியவர்கள் இன்னொரு பக்கம் பார்ப்பனீயத்தைத் தாக்குவதால் உலக இலக்கியங்களுக்குள் ஒளிந்து கண்ணை மூடிக் கொண்ட பார்ப்பனீய இலக்கியவாதிகள், சிறுபத்திரிகைகள் போன்றவை பல தளங்களிலும் உன்னத கலைகளைத் தேடியலைந்ததால் கொச்சையாக, பாமரத்தனமாகப் பேசிச் செயற்பட்ட பெரியாரைத் திரும்பிப் பார்க்காதது மட்டுமில்லை இப்பொழுதுங் கூட வாய் திறக்க முடிவதில்லை. அவருடைய Crudity (கச்சாத்தனம்) கலைக் கடவுள் வழிப்பாட்டையும் தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டது.

8. சாராம்சத்தில் கருத்து முதல்வாதம் என்பதில் பொருளேயில்லை. பொருள்முதல் வாதமா, கருத்துமுதல் வாதமா என்ற ஒற்றை நுனியைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடுவதில் பொருள் இல்லை. யதார்த்தம் பிரதிபலிப்பு அல்ல என்பதும். பகுதிப்பட்ட புலனறிவு பட்டறிவால் சோதிக்கப் பட்டாலும் நிலைத்த உண்மை ஆகாது என்னும் அறிவுத் தோற்றவியலை ஏற்காமல் இயந்திரவகைப்பட்ட பொருள் முதலியம் எனப்பெயரிட்டு ஒதுக்குவதில் பொருள் இல்லை. தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பார்ப்பனரல்லாத தெலுங்கு, கன்னடர், மலையாளர் உள்ளிட்ட தரகு முதலாளியரைத்தான் அவர் பிரதிநிதித்துவப் படுத்தினாரென்றால் அவர் கருத்தியலில் அது எந்தப் பகுதி என்பதை விளக்க வேண்டும். வடவர் × தென்னவர்; ஆரியர் × திராவிடர்; தமிழ் × இந்தி போன்ற நிலைகளையெல்லாம் நிலவிய சூழலுக்கு ஏற்பவே பயன்படுத்தியிருக்கிறார். நீதிக்கட்சி உருவாக்கத்தில் அத்தகையதன்மை இருந்ததாகக் கொண்டாலும் சுயமரியாதை இயக்கம்/ திராவிடர் கழகம் சிந்தனை செயற்பாடுகளில் அத்தகைய போக்குகளைச் சுட்ட முடியுமா எனப்பார்த்தல் வேண்டும் மாறாக அவரது பொதுவுடைமைப் பிரச்சாரம், பார்ப்பன எதிர்ப்புடன் கூடிய கடவுள் மறுப்பு போன்றவற்றைக் கண்டு அவர் செயற்பாட்டிலிருந்து விலகியவர்களே அதிகம். தமிழ் மொழி குறித்தஅவர் கருத்தெல்லாம் இத்தகய முடிவுக்கு நாம் வருவதை அனுமதிக்காது.

9. அம்பேத்கரும் பெரியாரும் சாதி ஒழிப்பு நிலையில் நின்றாலும் இந்தியா பெண்விடுதலை போன்ற நிலைகளில் எதிரும் புதிருமானவர்கள் என்றே சொல்லலாம். அம்பேத்கர் ஆணாதிக்கவாதி என்னுமளவுக்குக் கருத்துக்களை வெளியிட்டார். பெண்ணிய நோக்கில் சாதி ஒழிப்பு எனப் பேசும்போது அம்பேத்கர் - பெரியார் சிந்தனைகளை இணைத்து நடைமுறைப்படுத்துவது என்கிற சாத்தியத்தை எப்படிச் சிந்திப்பது எனப்புரியவில்லை. பார்ப்பன எதிர்ப்புநிலையில் இருவருடைய புரிதல்களையும் சேர்த்துப் பேசலாம்.

**தமிழவன்:** (நேரில் வரவில்லை. கட்டுரை வாசிக்கப்பட்டது): பெரியாரின் கருத்துக்களை, பரணரின் கருத்துக்கள், திருவள்ளுவரின் கருத்துகள், வால்டேரின் கருத்துக்கள் இந்தியாதிகள் போல எடுத்து இன்று விவாதிப்பது இயலாது. கோ. கேசவன் தெளிவாகவும் கவனமாகவும் ஓரளவு அமைப்பியல் பரிபாஷையைத் தொட்டும் (மைய சாராம்சம், சுற்றெல்லை) எழுதிய கட்டுரை பழைய பாணி 'கருத்துத் தேடும் சிந்தனை' அதாவது 'பரணரின் கருத்துக்கள்' போல. பெரியாரின் கருத்துக்களை அவரே கருதுவதுபோல நாடகமாகவும் (நிறப்பிரிகை 6 பக் 37)' நிறப்பிரிகையின் பககங்கள் கருதுவது போல (தமிழவன் எதைச் சுட்டுகிறார் எனப் புரியவில்லை—தொகுப்பாளர்) முரண்பாடுள்ளவையாகவும் பார்க்கும் போது அவற்றில் மைய சாராம்சம் தேடுவது வியர்த்தம் மையசாராம்சத் தேடல் ஒருசாராம்ச வாதியின் செயல் சமீபத்தில் சுந்தர ராமசாமி எழுதிய ஒரு நாவல் முன்னுரையிலும் இந்த சாராம்ச வலியுறுத்தல் உள்ளது. சாராம்சவாதம் என்பது எப்படி கருத்து முதல் வாதத்தின் குழந்தை என்பது வேறொரு சந்தர்ப்பத்தில் எனவே சாராம்சவாதிகளின் கருப்புக் கண்ணாடி அணிந்து பெரியாரின் கருத்துக்களத்தில் துப்பறியக் கிளம்புவதைவிடுத்துபெரியாரின் செயல், சூழல், பேசப்பட்ட கருத்து, பேசபடாத கருத்து, பேசப்பட்ட கூட்டத்தினரின் அடை



படிப்பகம்

www.padippakam.com

யாளங்கள், பெரியாரின் போராட்ட வடிவத்தில் பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள் என்று ஒரு ஒட்டு மொத்த Performance Methodology (நிகழ்த்துதல் ஆய்வுமுறை) ஒன்றை உருவமைத்து அவரை அணுக வேண்டும். இது பற்றி ஓரளவு என்சமீபத்திய 'தமிழ்க்கவிதையும் மொழிதல் கோட்பாடுமில்' விளக்கியுள்ளேன். எனவே அனுபவம்மூலம், புலன்மூலம், உலகை/உண்மையை அறிவதுதான் ஒருவன் செய்ய வேண்டியது என்ற பெரியாரின் சிந்தனைத் தோற்ற காலத்திய அனுபவ முதல் வாதம் (Empiricism) இன்று உதவாது. அதிக வள மான அமைப்பியல் பின் அமைப்பியல் போன்ற வற்றைத் தொடர்ந்து இன்று வந்துள்ள நிகழ்த்துதல் கோட்பாடு—மொழிதல் கோட்பாடு இவை எல்லாம் அனுபவ முதல்வாத அழுகல் களைத் தோலுரித்துக் காட்டக் கூடியனவாகும். இது அணுகல் முறையில் எவ்வளவு உஷாராக நாம் இருக்க வேண்டும் என்பதற்காக.

இரண்டாவது விஷயத்துக்கு வருகிறேன். தி-க மற்றும் தி.மு க உச்ச கட்டத்தில் இருந்த காலத்திலேயே திரு. க நா.சு கடவுளை பற்றி ஒரு கவிதையில் சொல்கிறார். பெரியாரின் கடவுள் கொள்கையையும் க. நா. சு என்ற மாடர்னிச பிதாமகரின் கடவுள்கொள்கையையும் ஒப்பிடுவது மிகவும் முக்கியமான சில சிந்தனை களை ஏற்படுத்துகின்றன.

''மனிதனுக்கு கலை எதுவும் திருப்தி தராது. மேலே மேலே என்கிற ஏக்கத்தைத்தான் தரும். கலையின் பிறப்பு இந்த அடிப்படையில் ஏற்படு வது. கடவுளே இன்னமும் உயிர் வைத்துக் கொண்டிருப்பது இந்த அடிப்படையில்தான் சாத்தியம்'' —இதுதான் க.நா.சுவின் கடவுள் கோட்பாடு. கலையையும் கடவுளையும் முடிச்சுப் போடுகிறார், இப்படியெல்லாம் பெரியார் யோசிக்க மாட்டார். 'மேலே மேலே என்கிற ஏக்கம்' என்றெல்லாம் க.நா.சு. பேசுகையில் பெரியார் 'மேலே மேலே வெங்காயம்' என்று கூறிவிடுவார். பெரியாரின் கருத்து மீதான விமர்சனம் இந்த ''எளிமை ஆசை'' மீதும் அமைய வேண்டும் அதே போல் பெரியாரும், ஷ்தானோவும். தமிழக கம்யூனிஸ்டுகளும் இவர் களின் வாரிசுகளும் கலையை வெறுக்கிறார்கள். இதன் அடிப்படை புரியாதவரை பெரியாரின் சிந்தனை ஒரு பெரிய அறிவு இயக்கத்தைத் தமிழகத்தில் தோற்றுவிப்பதற்குப் தவறியதை சரியாகப்புரியமுடியாது. மணிக்கொடியின் கலை இலக்கியப் பார்வையும் அதன் வழிப்பட்ட புதுமைப் பித்தனின் ஆறுமையும், மௌனி, எழுத்துப் பத்திரிக்கை போன்றனவும் எப்படிப் பெரியாரின் கருத்தாறுமைக்குள் வராமல் போய்விட்டன? இதுபோல் பெரியார் சிந்தனை பற்றிய விவாதக் குறிப்புகளை மிகுந்த சிரமத் தோடு செய்துள்ள நிறப்பிரிகையும் பெரியாரை யும் அன்றைய தமிழக கலை இலக்கியத்தையும் இணைத்து ஓரிடத்தில் கூடப் பார்க்காதது இவர்களின் குதிரைப் பட்டைப் பார்வை பெரியார் வழியில் வந்தது என்று விளக்கத்தா -னோ? உடனே கலை இலக்கியம் சமூகத்தை மாற்றுமா? ஆட்சியைப் பெற்றுத் தருமா? என மிக எளிமையாளர்கள் கேட்பார்கள். மீண்டும் கடவுள் பற்றிப் பார்போம் 'கடவுளே இன்றும் உயிர் வைத்துக் கொண்டிருப்பது...' எனக் க.நா.சு கூறுவது க.நா.சுவையும் பெரியாரை யும் மிக அருகில் கொண்டு வருகின்றன. எனவே பெரியாரை கட்சிக்கோ, இயக்கத்துக்கோ பயன் படுத்துகிறவர்கள், க.நா.சுவை அந்த இயக் கத்தின் நிகழ்த்துதல் Spacel (வெளியில்) இணைக்க முடியுமா என்று யோசிக்க வேண்டும் முன் கூட்டிய 'நம்பிக்கைகளை' விடவே மாட் டோம் எனப் பிடிவாதமாய் இருப்பவர்களுக்கு இது கேலிக் கூத்தாகப் படும். அல்லது தமிழகச் சரித்திரத்தில் கலை இலக்கியம் சிந்தனை என்ற ஆழ் கலாச்சார விசாரிப்பு மரபு வேர்பிடிக்காத துக்கு பெரியாரின் சிந்தனைக்குள் காரணங்கள் உண்டா என்று பார்க்க வேண்டும். இந்த கலாச் சார மறுப்பு 'காண்பதே உண்மை' என்ற 19ம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் சிந்தனை மரபிலிருந்து பெரியாருக்கு வந்தது எனச் சொல்லலாமா? அல்லது படிப்பறிவற்றவர்கள் எனப் பெரியார் கேலியாகக் கருதிய மக்கள் திரளை அவரது நாடகத்தின் பார்வையாளராய் கொண்டதால் அவரது நாடகம் பார்வையாளரால் எழுதப்பட்ட போது இந்தக்கலை இலக்கியக் கொலை நடந்ததா? (நிகழ்த்துதலின் முக்கிய இலக் கணம் நாடகத்தைப் பார்வையாளர்கள் எழுது கிறார்கள் என்பது) இதன் தொடர்ச்சி தான் திராவிடப் பாரம்பரியம் சார்ந்தவர்களால் தமிழ்க்கலை இலக்கியம் அழிந்த வரலாறும். இந்த அழிவுக்கும் பெரியாரன்றி யார் காரணம்? அல்லது திராவிட பாரம்பரியம் செய்த கலை இலக்கிய அழிப்பு வரலாற்று விபத்தா? இன்னும் திருப்தியுறாமல் நமட்டுச் சிரிப்பு சிரிக்கும் நண்பர்கள் 'கலை இலக்கியம் என்ன அப்படிப் பெரிசு' என்று தான் கேட்பார்கள். அரசியல் தானே முக்கியம், கலை இலக்கியம் அதன் அக்குளுக்குள் அடங்காதா சார்? என தங்களை அமைப்பியல்வாதிகள் என்று கருதும் சிலரும் கேட்கிறார்கள். இவர்களுக்கு பார்த் பதில் சொல்கிறார். ''அதிகாரத்தின் பிடியில் இருந்து வெளியில் வர விரும்பினால் நம்மை மூடியிருக்கும் மொழியை நாம் ஏமாற்றக் கற்க வேண்டும். இதுதான் மொழியின்மீதான நித்தியபுரட்சி இப்படி மொழியை நித்தியத் துக்கும் ஏமாற்றும் துறைதான் இலக்கியம்'' மேலும் பார்த் கூறுகிறார்; ''இலக்கியத்தின் முதுகை வளைத்து அதனை தத்துவமாகவோ, விஞ்ஞானமாகவோ, வேறொன்றாகவோ சுருக் கிவிடமுடியாது'' இப்போது இப்படிச் சொல்ல லாம். சிந்தனையின் (பகுத்தறிவின்) முக்கிய



படிப்பகம்

www.padippakam.com

மான அடிப்படை சிந்திக்கும் ஆற்றலின் சுய உணர்தல். பெரியார் இந்த சுய உணர்தலற்ற சிந்தனையாளனா? அல்லது அவரது சீடர்கள் சிந்தனையின் (மொழியின்) வரம்புகளை நித்தியமாய் உடைத்தெறியும் (அதாவது சுய உணர்தலையும்) பண்பு அற்றவர்களா? பெண் களைப்பற்றி இவ்வளவு அசாத்தியமான அற்புத தமான விஷயங்களைக் கூறும் பெரியாரைப் போய் மொழி வரம்புக்கு (சிந்தனையின் சுய கட்டுப்பாட்டுக்கு) கட்டுப்பட்டவர் என்று எப்படி கூறுவது? ஆனால் ஒன்று மொழியின் இயங்கு தலை உடைத்து பெருவெளிப் பரப்பலை செய்யும் இலக்கியத்தை பெரியார் மறுத்தது தமிழகச் சரித்திரத்தில் திராவிடப் பாரம்பரியத் துக்கு கெட்ட பெயரை வழங்கியிருப்பது மறுக்க முடியாது.

மூன்றாவது விஷயம் தமிழக, இந்திய சாதிகளின் எதிர்மறை குணாம்சத்தைப் புரிந்த பெரியார் அதற்கு சில Positive (நல்ல) குணாம்சங்கள் உள்ளதைப் புரிந்தாரா? அதாவது எல்லோரும் ஏன் சாதியை அழிக்க வேண்டும் எனக் கூறிக் கொண்டே காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள்? சாதிகளுக்கு ஒரு சமூகச் செயல்பாடு உண்டு. நகரங்களில் வாழ்வரும் கிராமத்து இளைஞர்கள் நாற்பது வயது ஆனவுடன் அந்த ஊரின் சாதிச் சங்கத்துக்குப் போய் உறுப்பினர் ஆவதை எப்படி விளங்கிக் கொள்வது? பெரியார் இந்தப் பண்பைப் புரிந்திருந்தால் தன் தந்திரோபாயத் தை மாற்றியிருக்கலாம் முக்கியமாக பிராமணர் சாதிக்குள் ஒரு பிராமணர் எதிர்ப்பு இயக்கத்தை பெரியார் உருவாக்கி அச்சாதிக்கு வெளியில் உள்ள இயக்கத்தோடு இணைத்திருப்பார். இன்று பிராமணர்கள் தங்களுக்குள் ஓர் தற்காப்பு நிலை எடுத்து பாரதீயஜனதாவுக் கான அடித்தளமாய் மாறாமல் இருந்திருக் கலாம் பாரதி, வ.ரா போல் ஆயிரக்கணக்கான பிராமண புரட்சிக் காரர்கள் தமிழகத்துக்குள் கிடைத்திருக்கலாம்.

மனசில் பட்டவற்றைக் கூறியுள்ளேன். வேண்டுமென்றே பெரியாரின் எதிர்மறைகள் மீதுகவனம் செலுத்தி எழுதுகிறேன். நிறைகள் பற்றித்தான் பேச எல்லா இடத்திலும் நிறைய பேர் இருக்கிறார்களே.

ஞானி: 1. முதலில் சில மேற்கோள்கள் கோவையில் பெரியார் பேசியது. ''நமது இயக்கம் சீர்திருத்த இயக்கம் அல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவ தன்மைக்கு மத சம்மந்தமாக, கடவுள் சம்மந்தமாக, பெருளாதார அரசியல் சம்மந்த மாக அனுகூலமானவை இல்லை. ஆகவே, எப்படி சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தம் இவை இன்னும் நெடுங் காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன் படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாய் போவதற்கு இடையூறாய் கடவுளும் மதமும், அரசாங்கமும் குறுக்கே போடப்படு கின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொது நலச் சேவைகாரர்கள் அல்ல. புரட்சிக் காரர்கள் நமக்கு சீர்திருத்தக் காரர்களும் பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள். தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொரு வரும் குஷாலாகச் செய்ய வேண்டியதுதான்'' (ஆனைமுத்து தொகுப்பு பக் 509-512).

கட்சிக்குள் நடைபெற்ற கடுமையான விவாதம் ஒன்றின் போது பெரியார் கூறியது. ''பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற் போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்திற்கு பொருளாதாரமும் அரசியலும் அவசியம் அல்லவா? இந்த இரண்டையும் விட்டுவிட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையேயில்லை. சும்மா அலங்கார மாக, வேடிக்கையாக புராண முட்டாள்தனத் தையும், பார்பன சூழ்ச்சியையும் பேசிக் காலங் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்வேன் (ஏ எஸ் கே. இவர் தான் பெரியார், பக். 11). குடியரசு இதழில் வந்த அறிக்கை (31. 3. 35): ''சுயமரியாதை இயக்கம் சட்ட மறுப்பு இயக்கமல்ல. சர்க்கா ரோடு ஒத்துழையாமை இயக்கமல்ல. சட்டத் தையும் சமாதானத்தையும் மதிக்காத இயக்கம் அல்ல. சுயமரியாதை இயக்க வேலைத்திட்டம் சட்ட வரம்பிற்குட்பட்டே நடக்கும்'' (ஆனைமுத்து நூல்).

2. இந்த மேற்கோள்களிலிருந்து பெரியாரின் இறுதி இலக்கு சமதர்மத்தை நோக்கியே புரட்சி கரமான மாற்றம். இந்த மாற்றத்திற்கு குறுக்கே நிற்பவை சாதி மதம். இவற்றோடு பார்ப்பனீயம் அரசு, பொருளாதாரம். அதாவது முதலாளியம். நிலவுடைமை முறையையும் சேர்த்துக் கொள்ள லாம். அரசுத் தடை வந்தவுடன் பெரியார் தன் சுயமரியாதை இயக்கத்தைச் சட்ட வரம்பிற்குட் பட்டதாக மாற்றிக் கொள்கிறார். தனது இயக் கத்தைச் சீர்த்திருத்த வாத இயக்கமாக மாற்றிக் கொள்கிறார். இது பெரியாரின் குறுகிய எல்லை விரிந்த எல்லை சமதர்மம். அவ்வப்பொழுது குறு கிய எல்லையிலிருந்து விடுபட்டு சட்டத்தையும் அரசையும் மீறிச் செயல்படுபவராகவும் பெரி யார் இருந்தார்.

சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர் கள் தொடக்கத்தில் பெரியாரின் மீது அமர்ந்து சவாரி செய்ய விரும்பினார்கள். அரசுத் தடை



படிப்பகம்

www.padippakam.com

வந்தவுடன் காங்கிரசுக்குள் நுழைந்து சோசலிசக் கட்சி என்ற பெயரில் தங்கினார்கள். இன்னொரு கட்டத்தில் நேருவின் சோசலிசத்தை ஏற்றார்கள். புரட்சிப் பாதையைக் கைவிட்டார்கள். இன்று இறுதியாகப் பார்க்கும் பொழுது சோவியத் யூனியனிலும் சரி, இந்தியாவிலும் சரி, மார்க்சியம் என்பது பெருமளவில் முதலாளியக் கூறுகளை உள்வாங்கிக் கொண்ட கோட்பாடாகவே இருக்கிறது. பொருளாதாரவாதம், தொழிற் சங்கவாதம், அரசியல் அதிகாரவாதம் ஆகியவை இவ்வாறு மார்க்சியத்தை நம் சூழலில் முடக்கியவை. மார்க்சியர் செய்ய வேண்டிய முதன்மையான செயற்பாடு சமதர்மம் நோக்கிய சமூக மாற்றம். வர்க்கப் போராட்டம், புரட்சிக்கான கட்சியமைப்பு முதலிய கருத்துருவங்கள் செயற்பாடுகள் மூலமே இந்தச் சமூக மாற்றம் சாத்தியம். இதற்கான துணைச் சக்தி பெரியாரியக்கம். ஆகவே, மார்க்சியர் தோற்ற இடத்தில் பெரியார் வெற்றி பெறுவாரென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆனால் பெரியார் செய்துகெண்ட சுயவிமர்சனத்தின் படி பெரியாரியத்தை அர்த்தப் படுத்தும் பொழுது, அவர் தீவிரப்படுத்திய சாதி மத எதிர்ப்பு, பார்ப்பனியப் எதிர்ப்பு ஆகியமுனைகளை முற்றான தனி நிலைகளாகக் கொள்வது பெரியாரியத்தை குறைக்கும். மாறாக சமதர்மம் என்ற இலக்கிலிருந்து சாதி, மத, பார்ப்பனீய எதிர்ப்பு என்ற முனைகளை வேறுபடுத்தி விடக்கூடாது. இந்த முனைகளில் மட்டும் பெரியாரியத்தை முடக்கினால் அப்புறம் வீரமணி தலைமையிலான பெரியாரியக்கம் போல, பெரியாரியம் முதலாளிய அரசு அதிகார எல்லைக்குள் சுழல்வதாகச் சுருங்கிவிடும். இப்படிச் சுருக்குவதன் மூலம் பெரியாரியத்தை மார்க்சியத்திற்கு எதிரான போக்காக மாற்றியிருக்கிறார்கள் முதலில் சமூக மாற்றம், பிறகு பொருளியல் மாற்றம் என்று இவர்கள் தத்துவம் வகுக்கிறார்கள். இப்படி விளக்குவதன் மூலம் சாதி, மதம், பார்பனீயம் ஆகியவற்றை சமூக மாற்றத்திற்கு தடையான மூலச் சக்திகள் என உருப்பெருக்கிக் காட்ட முடியும். இந்தியச் சமூகமே சாதியச் சமூகம் என்ற வரையறை இதற்குப் பெரிதும் பயன்படும். மார்க்சியர் கூட இன்று இந்த வரையறைக்குள் சரிந்துள்ளனர். இதனால் மார்க்சியம் தனக்குள் சுருங்கிப் போயுள்ளது. இதற்கு மாறாக சமதர்மம் பற்றிய பெரியாரின் உறுதியான கருத்துக்கள் என்ற ஆதாரத்தில் பெரியாரியத்தை மறு உருவாக்கம் செய்வது நம் காலத்தின் கடமை சமதர்மம்தான் முற்றான கோட்பாடு. இடையில் சாதி, மதம், பார்ப்பனீயம் அரசு. அதிகாரம், முதலாளியம் இவற்றோடு ஏகாதிபத்தியம் ஆகியவற்றையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

3. பெரியாரின் கோட்பாடு அதாவது பெரியாரியம் என்பது சுயமரியாதை அல்லது தன்மானம் தான். இதுதான் பெரியாரின் தத்துவம். இதற்கு பெரியார் தந்த விளக்கங்கள் மிக விரிவானவை. ஒரு பெண்ணுக்கு எதுசுயமரியாதை? தொழிலாளிக்கு எது சுயமரியாதை? திராவிடனுக்கு, தமிழனுக்கு எது சுயமரியாதை? இப்படியெல்லாம் நிறைய கேள்விகள் எழுப்புகிறார். சாதி, மதம், இனம், மொழி, தேசம், தேசியம் என்று எதற்கும் மனிதன் அடிமைப் படக் கூடாது, மனிதனுக்குத் தன்மானம் வேண்டும், தேசபக்தி மூடத்தனம் என்றெல்லாம் பேசுகிறார். பார்க்க மேற்கோள் நிறப்பிரிகை -6 பக். 39. சுயமரியாதையின் விரிவு உலக சகோதரத்துவம் என்கிறார். சகோதரத்துவம் என்பது இங்கு சமதர்மம்தான். பகுத்தறிவு என்பதைப் பெரியாரின் தத்துவம் எனச் சொல்வது பொருந்தாது பகுத்தறிவு என்பது பகுத்தாய்தல்—ஒரு ஆய்வு முறை மட்டுமே. காரணம், காரியம், எதார்த்தம், தோற்றம், மாயை, மனிதன், விலங்கு என்று இந்த ஆய்வு செயல்படும். சிலசமயம் மனிதனை விட விலங்கு மேலெனச் சொல்லும். கை, கால் என்ற உறுப்புக்கள் தான் உன்னை, மனிதன் இல்லை எனச் சொல்லும். தாவும் தடுமாறும் இவ்வாய்வு முறை விடாபிடியாக நிறுவுவது சுயமரியாதை ஒன்றைத்தான். பகுத்தறிவு பெரியாரின் மெய்காண் முறை—அறிதல் கொள்கை—மட்டுமே. சுயமரியாதையாக இருக்க வேண்டும் என்றால் சமதர்மியாக இருக்க வேண்டும் என்பது பெரியாரின் அடிப்படையான கருத்து. அரசதிகாரம், முதலாளியம் என்கிற வரையறைக்குள் மார்க்சியர் இயங்கியதைப் போலத்தான் பெரியாரும் இயங்கினார். இந்த வரையறைகளை ஒப்புக் கொள்பவன் தன்மானம் / சுயமரியாதை இருப்பவனாக எடுத்துக் கொள்ள முடியாது.

4. இன்றைய நிலையில் மையப் படுத்தப்பட வேண்டியவை: இன்று சந்தைப் பொருளாதாரம், தாராள மயமாக்கல், உலகச்சந்தையோடு இந்தியாவை இணைத்தல் இப்படியெல்லாம் செயல்படுவது முதலாளியம். இதற்கு ஒத்தமுறையில் செயல்படுவது அரசதிகாரம். இவை இரண்டும் ஏகாதிபத்திய நலன்களை உள்ளடக்கிச் செயல்படுகின்றன. இதற்காகவே ராணுவப்பெருக்கம், அரசதிகாரத்தை நவீனப் படுத்துதல், நவீன அறிவியல் தொழில் நுட்ப இறக்குமதி, பசுமைப் புரட்சி இப்படி இன்று செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. தேசிய இன விடுதலைக் குரல்கள் அழிக்கப்படுகின்றன. மைய அரசு வலிமையாக நவீனமாக இருக்கவேண்டும் எதிர்ப்பியக்கங்களை ஒடுக்க வேண்டும் மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில்லாமல் வேறு அடிப்படைகளில் பிரிக்க வேண்டும். பஞ்சாயத்து வரை மைய அரசு தலையிட வேண்டும். முதலா



படிப்பகம்

ளியம்தான் குறிக்கோள். இதன் மூலம் ஆதிக்கம் பெறுவது ஏகாதிபத்தியம். இந்திய ஒருமை, வலுவான மைய அரசு என்ற அடிப்படையில்தான் இந்துத்துவம் எழுந்திருக்கிறது. இது தமிழனின் தன்னுரிமையை வரலாற்றை, மொழியை அழிக்கும். பகுத்தறிவு இயக்கத்தை அழிக்கும். இது இன்றைய சூழல்.

இந்துத்துவம் முஸ்லீம்களை ஒடுக்குவதற்கு மட்டு மல்ல முஸ்லீம்களில் தொடங்கி தொழிலாளி, உழவர், பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், பெண்கள் ஆகிய அனைவரையும் ஒடுக்கத்தான். அரசியலையும் பொருளியலையும் மறைக்க இங்கு மதவாதம் பேசப்படுகிறது. அரசாதிக்கத்தை முதலாளியத்தை நிறுவுவதற்கான கருத்தியல்களில் ஒன்று பார்ப்பனீயம். இதற்கு உயர் சாதிகள் ஒத்துழைக்கும் பிற்பட்ட வர்களின் கோரிக்கைகளை அரசதிகாரம் உள்வாங்கிக் கொள்வதன் மூலம் அவர்களைத் தன் கட்டமைப்புக்குள் கொண்டு வரலாம். முதலாளியத்தை ஒழித்து மக்கள் நலன்களுக்கு ஒத்த முறையில் தொழில்துறை, வேளாண்மையை உருவமைத்து இருக்க முடியுமானால் சாதி மதங்களின் ஆதிக்கம் குறைந்திருக்கும். இதற்கு மாறாக முதலாளியம் உச்ச அளவில் சுரண்டலை அதிகரித்துள்ள நிலையில், அரசதிகாரம் உச்ச அளவில் ஒடுக்குதலை திணித்திருக்கிற நிலையில் மக்களின் வேதனைகள் அதிகரிக்கின்றன. அறிவு தடுமாறுகிறது ஆகவே, கோயில்களையும் புதிய புதிய கடவுள்களையும், தலைவர்களையும், மக்கள் தேடிச்சென்று காலில் விழுந்து வழிபாடு செய்கின்றனர். நவீன முதலாளிய வளர்ச்சிக்கு நவீன தொழில் நுட்ப அறிவு தேவைப்படுகிறது. இவ்விடங்களில் பார்ப்பனர் இடம் பெறுகின்றனர். சுரண்டலும் ஒடுக்கு முறையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழலில்தான் பார்ப்பனீயம், சாதி, மதம் என்ற பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும். இவை மூன்றையும் முற்றான தனி நிலைகளென பிரித்துப் பார்ப்பதன் மூலம் நம் சிந்தனையாளர்கள் மீண்டும் பார்ப்பனீயம் என்று சிலர் சொல்கிற இந்தச் சூழல் வட்டத்திற்குள்தான் இயங்குகின்றனர். பெரியாரியத்தை இப்படிக் குறைக்கக் கூடாது. அரசின் அடக்கு முறைக்கு ஒத்து, சீர்திருத்த இயக்கமாக தன்னை மாற்றிக் கொண்ட பெரியாரியத்தை இப்பொழுதேனும் தனக்கு இட்டுக் கொண்ட முன்னையை தளைகளிலிருந்து விடுவிக்க வேண்டும். பெரியாரின் புகழ்பாடி, பெரியாரை சாதி எதிர்ப்பு, மத எதிப்பு, பார்ப்பன எதிர்ப்பு ஆகியவற்றுள் முடக்குவதன் மூலம் பெரியாரின் ஆற்றலை இன்றைய சூழலை மாற்றுவதற்கேற்ற முறையில் பயன் படுத்த முடியாது.

**உஞ்சை ராசன்:** 1, 2: பெரியார் என்றவுடன் நிழலாடும் கருத்துக்கள், செயலாக்கங்கள் ஆகியவற்றில் குறிப்பாகச் சிலவற்றைக் கூற வேண்டுமானால் பகுத்தறிவிலிருந்துவெளிப்பட்டதீண்டாமை எதிர்ப்பு. சாதி எதிப்பு, பார்ப்பன, பார்ப்பனீய எதிர்ப்பு, இந்துமத/கடவுள் மறுப்பு, பெண்ணுரிமை, மொழி, தேசிய இனம் குறித்தவைகளைக் கூறலாம். இவைகளிலும் அவர் பிரதானமாய் மேற்கொண்ட செயல் தீண்டாமை ஒழிப்புமேயாகும் என்பதே ராசன் குறை தொகுப்பிலிருந்து (நிற. 6) நமக்குக் கிடைக்கும் செய்தி. இத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு தீர்வு காணப் புகும் போதுதான் இத்தகைய ஒடுக்குமுறையை வலியத் திணித்து நிலைப் படுத்திய பார்ப்பனிய கருத்தியலையும் இது தனக்கு ஆதரவாக வடித்துக்கொண்ட இந்துமதத்தையும் இவ்விரண்டின் மூலம் சுரண்டும் பார்ப்பனர்களையும் துணை போகும் பிறசாதியினரையும் எதிர்க்கிறார். தந்திரமும் சூழ்ச்சியுமிக்க பார்ப்பனர்கள் கடவுள் பக்தியின் மூலம் தங்களை நிலை நிறுத்திக் கொண்டதனால் கடவுள் நம்பிக்கையை மறுதலிக்கிறார் பெரியார். பெரியாரிடம் பொதுவாக வெளிபட்ட இந்து மத, பார்ப்பனிய, கடவுள் எதிர்ப்பு ஆகியவற்றை மட்டுமே தமிழ் மக்களுக்கு காட்டிய அவரது வாரிசுகள் எதை அழிப்பதற்காக இவற்றை முன் வைத்தாரோ அந்த தீண்டாமை, சாதி, பெண்ணடிமை எதிர்ப்பு ஆகியவற்றை பின்னுக்குத் தள்ளினார். இப்போக்குகள் பெரியாரிடமே தோன்றி விட்டன. இதனால்தான் அம்பேத்கர், பூலே போன்றோர் ஏற்படுத்திய நம்பிக்கையை விட பெரியாரால் ஏற்படுத்த முடியவில்லை. தீண்டாமை, சாதி, பெண்ணடிமை எதிர்ப்பை அவரே சொன்னது போல அரை நிமிடங்கூடத் தாமதியாமல் செயல் படுத்தினால் பெரியாரியம் இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாய் முடியும்.

3, 4: அவரது இயக்கத்திற்கு ஏற்பட்டிருப்பது தோல்விதான் என அறுதியிடும் போது அது பார்ப்பனியத்தின் வெற்றி என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்களை நேரடியாகப் பாதிக்கும் அடக்குமுறைகளை எதிர் கொள்ளாமல் (எடு: தீண்டாமை, சாதி, பெண்ணடிமை எதிர்ப்பு) அருவமாய் அமைந்த கடவுள் எதிர்ப்பு. புராண எதிர்ப்பு போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்ததால் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தொடர்பில்லாததாய் இதனை அணுகி வெறும் பார்வையாளர்களாக மாறினர். பெரியார் கலாச்சாரத் தளத்தில் பணியாற்றினார் இது அரசியல் வடிவம் பெறும் போது அதில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாததால் அரசியலுக்கு மாறியவர்கள் தாங்கள் புரிந்து கொண்ட வகையில் அல்லது தங்களது நலனுக்கேற்ற வகையில் பெரியாரைப் பயன்படுத்திக் கொண்டனர். அரசியலதிகாரத்தின் மூலமே அனைத்து விசயங்களிலும் தலையிடலாம் என்பதை பெரியார் புரிந்து கொள்ள வில்லையா இல்லை புரிந்தும்

விட்டு விட்டாரா என்கிற சந்தேகம் எழுகிறது.

7,9: தமிழ் அறிவுஜீவிகளில் பெரும்பான்மை யோர் பார்ப்பனர்களாக.மேல் சாதியினராக இருந்தனர். நாலாந் சாதியினரான பெரியாரது கொள்கைகளை இவர்கள் உயர்த்திப் பிடிக்காததற்குக் காரணமே சாதிதான். இந்தியக் கட்டமைப்பின் உயர்ந்த பண்புகளாய் இவர்கள் கருதிய தீண்டாமை, சாதி, பெண்ணடிமை, கடவுள் ஆகியவற்றிற்கு எதிராக இருக்கும்போது இதனைச் செய்வார்களா? இன்று பார்ப்பனியமும் இந்து மதமும் பெரும்பான்மையை விழுங்கும் சிறுபான்மைத் தந்திரத்துடன் செயல்படுகின்றனர். இதனால் அடிநிலையிலுள்ள தலித் மக்களும் பிற்படுத்தப் பட்ட மக்களும் எஞ்சிய வாழ்க்கையையும் பறி கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் அம்பேத்கர் சிந்தனை முக்கிய மாகிறது. இதனைப் பெரியார் சிந்தனையுடன் இணைப்பது மிக அவசியமானது. இந்தச் சிந்தனை இணைப்பு என்பது புறநிலையில் தலித்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் ஒன்றி இணைவதற்கு இட்டுச் செல்லும். இது 'மண்ணின் மைந்தர்களின்' ஆட்சி அமைய வழிவகுக்கும். அப்படிப்பட்ட ஆட்சியதிகாரத் தால் மட்டுமே அம்பேத்கரும் பெரியாரும் காண விரும்பிய தீண்டாமையற்ற, சாதியற்ற, சுரண்டலற்ற சமூகம் அமையும்.

எனவே இன்றைய சூழலில் பார்ப்பனிய எதிர்ப்பை மையப்படுத்தி செயல்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களிடையேயுள்ள ஒற்றுமையைச் சாதகமாக்கும் அதே வேளை முரண்பாட்டையும் களைய வேண்டும். முரண்பாடு தீண்டாமை வடிவத்தில் இருக்கிறது தீண்டாமையை விட்டொழிப்பதானது பார்ப்பனர்களை வீழ்த்துவதாக மாறும். இம் மாற்றமே நாம் அடையப் போகும் அரசியல்/ சமூக/ பொருளாதார மாற்றமாக அமையும். அமையப் போகும் பொன்னுலகிற்கு தீண்டாமையை மட்டுமே பலியாக்குவோம்.

கு.தருமலிங்கம் (ம.க.இ, புதுக்கோட்டை):
பெரியார் தீண்டாமையை எதிர்த்தார் என இங்கே சிலர் சொன்னார்கள். வைக்கம் போராட்டம் உதாரணமாகச் சொல்லப்படுகிறது ஆனால் அது தன்னெழுச்சியாக நடைபெற்ற ஒன்று. ஏனெனில் தொடர்ந்து சாதிக் கொடுமைக்கு எதிராக பெரியார் எதையும் செய்யவில்லை காரணம் என்ன? இந்து மத ஆதிக்க நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் அவரைத் தன்வயம் இழுத்துக்கொண்டார்களா? புத்த மதத்திற்கு ஆன கதி பெரியாருக்கும் ஏற்பட்டதா? எடைக்கு எடை தங்கம் கொடுத்து அவரைஇழுத்து விட்டார்களா? கீழ்வெண்மணிக் கொடுமை பற்றி அவர் ஏதும் அறிக்கை நிறப்பிரிகை

விட்டாரா? இங்கே தீண்டாமை கொஞ்சம் ஒழிந்திருக்கிறதென்றால் பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக சிறு முதலாளித்துவம் வளர்ந்திருப்பதுதான் அதற்குக் காரணம். தாழ்த்தப்பட்டவர் சைக்கிளில் போகக் கூடாது என ஊர்க்கட்டுப்பாடு ஆனால் தாழ்த்தப்பட்ட வரை சைக்கிளில் போக அழைக்கிறார் சைக்கிள் கடை வைத்திருக்கும் உயர் சாதி சிறு முதலாளி. பஸ் முதலிய நவீன மாற்றங்களும் தீண்டாமை ஒழிப்பிற்குக் காரணமாகியுள்ளன. பிரபல தி.க தலைவர் திருவாரூர் தங்கராசு வீட்டில் பள்ளு பறையர்கள் கையைக் கட்டிக் கொண்டு வெளியே நின்றிருந்ததை 1950 களில் நானே நேரில் பார்த்திருக்கின்றேன். பிராமனர்களோடு சூத்திரர்களுக்குச் சமத்துவம் வேண்டுமென்று தான் திராவிட இயக்கம் போராடியது. பஞ்சமர்களுக்காகப் பெரியார் இயங்கியதில்லை கடவுள் மறுப்பு என்கிற விசயத்தில் கூடப் பிள்ளையார் சிலையைச் செய்துதான் உடைக்கச் சொன்னாரேயொழிய கோயில்களிலுள்ள சிலைகளை உடைக்கச் சொல்லவில்லை. ஏழைகள் இருக்கும் வரை சாமியை ஒழித்து விட முடியாது. எனவே நாத்திகப் பிரச்சாரத்தில் பெரியாருக்குத் தோல்விதான். அரசியலதிகாரப் பிரச்சனையிலும் பெரியாருக்குக் குழப்பம்தான் ஆனால் அம்பேத்கர் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதில். தெளிவாக இருந்தார்.

எம். எஸ். ராமசாமி:
பெரியார் தீண்டாமை ஒழிப்பிற்கு நிறையச் செய்திருக்கிறார் வைக்கம் போராட்டம் அதற்காகத்தான் கலப்புத்திருமணம், மறுமணம் சீர்திருத்தத்திருமணம் செய்யவேண்டுமென்றார் இதெல்லாம் சாதி ஒழியத்தானே! ''மக்களில் ஒரு பிரிவினர் தீண்டக்கூடாது, பார்க்கக்கூடாது தெருவில் நடக்கக்கூடாது என்கிற கொள்கை யோடு இருக்கும் ஒருமதத்தை இன்னும் உலகத்தில் வைத்துக் கொண்டிருப்பதானது அந்த மத மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலக மக்களுக்கே அவமானம் என்றுதான் சொல் வேன். அதோடு அந்த மதத்தை ஏற்படுத்திய தாகச் சொல்லப்படும் தெய்வத்திற்கும் தெய்வீகத்திற்கும் மிக மிக இழிவு'' என்றும் சொன்னார். இதைவிட என்ன சொல்லணும்? ''குலதருமக்கல்வி'' என்று ராஜாஜி சொன்னார். ''எட்டாத கத்தியை'' என்றார் பெரியார். இதைவிட என்ன சொல்லனும்? ராஜாஜி ராஜினாமா செய்துவிட்டுப் போனார்' ''மக்களுடைய அறிவையையும் திறமையையும் தைரியத்தையும் வளர்க்கக் கூடிய ஆதியஇறந்த கதைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம் மக்களுடைய அறிவையையும் தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் வளர்ச்சி'' என்று சொன்னார், யார் வளர்த்தோம்? ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட

www.padippakam.com

மக்களுக்கும் யார் பின்னால் போனால் நன்மை கிடைக்குமோ அவர்கள் பின்னால் போனார். ஜஸ்டிக் கட்சிக்கு அப்படிதான் போனார். இந்த அடிப்படையச் சங்கராச்சாரியைக் கூடப்போய்ப் பார்த்து ஓட்டுப் போடச் சொன்னார். தனக்குப் பிறகு இயக்கத்தையும் சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டுமென்று ராஜாஜியிடம் யோசனை கேட்டார். அவர் யோசனைப்படி மணியம்மையைப் பதிவு செய்து கொண்டார். விண்ணப்ப மனுவில் ஒரு விவரத்தைப் பூர்த்தி செய்ய மறந்துவிட்டார். படிவம் விடுதலை அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது. அரசு என்பவர் கடிதத்தைக் பிரித்துப் படித்து விட்டு அண்ணாதுரையிடம் சொன்னார். அண்ணா கட்சியை உடைத்தார், பெரியாரின் சக்தியெல்லாம் போனது ஆட்சிக்குப் போவது. அவசியம் என அண்ணா சொல்கிறாரே என்று நான் பெரியாரிடம் கேட்டேன் ஆட்சிக்குப் போனால் பிறகு ஆட்சியில் இருப்பதே நோக்க மாய்ப் போய்விடும் என்று சொன்னார். எம்.ஜி.ஆர் விசயம் அப்படித்தான் ஆனது. அண்ணா சட்டசபையில் நீடித்திருந்தால் எல்லாம் செய்திருப்பார். சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கினார். 'சத்யமேவ ஜயதே' யை 'வாய்மையே வெல்லும்' என ஆக்கினார். தமிழ்நாடு என மாற்றினார். 5 ஆண்டுக்குள் தமிழ் வழிக்கல்வி என்றார். அதற்குள் செத்துப்போனார். பின் வந்தவர்கள் செய்யவில்லை. தமிழ்நாடு தமிழருக்கே என்றார் பெரியார். இந்தி ஒழிக என்றார். படித்தவன் படிக்காதவனைச் சுரண்டிச் சாப்பிடுகிறான் என்று சொன்னார்.

**அ.மா. :**
தமிழே வேண்டாம். ஆங்கிலம் தான் ஆட்சி மொழி, வீட்டு மொழி கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் பெரியார் சொல்லி யிருக்கிறாரே ?

**எம். எஸ். ராமசாமி :**
அதெல்லாமில்லே. அப்படியெல்லாம் சொல்லலே. ''மொழி உணர்ச்சி இருக்க வேண்டும். சமுதாய உணர்ச்சி இருக்க வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி வேண்டும். மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ நாட்டு நினைவோ எப்படி வரும்?'' என்றுதான் பெரியார் சொல்லியிருக்கிறார். கிராமப்புறங்களில் கல்வி நிலைமை மோசம். அஞ்சு வகுப்புக்கு ஒரு வாத்தியார்தான் இருக்கிறான். இதைப்பற்றியெல்லாம் யார் பேசுகிறார்கள்? பெரியார் பற்றிப் பேசும் நீங்கள் யாராவது கடவுள்ஒழிப்பு பிரச்சாரம் செய்திருக்கிறீர்களா?. தங்கள் பெயர் வருவதற்கு ஒரு பத்திரிக்கை வேண்டும் என ஆளுக்கொரு பத்திரிகை நடத்துகிறீர்கள். பெரியார் கொள்கை பரப்ப யாரும் எதுவும் செய்வதில்லை.

**தி. சு. நடராசன் :**
தருமலிங்கத்தின் கருத்தோடு நான் உடன்படுகிறேன். கடந்த ஐந்தாண்டுகளாக பார்ப்பன எதிர்ப்பு Ideology (கருத்தியல்) வளர்ந்து கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல விசயம் தான். ஆனால் அந்த Ideology பெரியார் பக்கமோ அல்லது வேறு இப்படி தவறான திசையில் போய்விடக் கூடாது. பெரியார் தலித்களுக்காக பாடுபடவில்லை என்பதுதான் உண்மை. கீழ்வெண்மணியில் 44 பேர் கொல்லப்பட்ட போது பெரியார் உயிரோடுதான் இருந்தார். ஆனால் ஒன்றும் அறிக்கை விட்டதாகத் தெரியவில்லை. இம்மானுவேல் கொலை செய்யப்பட்டபோதும் அவர் என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. இன்றைக்கு பிராமண எதிர்ப்பு என்பது தலித் விடுதலையோடு இணைந்துதான் இருக்க முடியும். பொத்தாம் பொதுவாக பிராமண எதிர்ப்பு என்று பெரியார் மாதிரி இன்று பேச முடியாது. இருபது வருடங்களுக்கு முன்பு வேண்டுமானால் அது சரியாக இருந்திருக்கலாம் இன்றைக்குப் பெரியாரின் அணுகுமுறை குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர் பக்கம் நின்று செய்வது என்கிற விசயத்தில் நிச்சயமாய் இன்று relevant ஆக- பொருத்தமாக- இருக்கமுடியாது. பெரியாருடைய Symbol ஐத் தேடிப் போகிற மாதிரி இருக்கிறது. ஆனால் வெறும் Symbol (குறி) மாத்திரம் இன்று பயனில்லை. Symbol ஐத் தாண்டிப் போகணும். ஒண்ணும் கையில் அகப்படாதவனுக்கு ஏதோ ஒன்று கிடைத்தது போல பெரியார் கிடைத்து விட்டதாய்ப் பார்க்க முடியாது, பார்க்கக் கூடாது.

**இலக்கிய வெளிவட்டம் நடராஜன்:**
பெரியாரியம் இன்றைய சமூகத்துக்கு எந்த அளவு கணிசமான பங்கை ஆக்கப் பாதையில் வகிக்கிறது என்கிற நோக்கத்தில் தான் இன்று இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது அந்த வகையில் திரு. தருமலிங்கம் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பினார். அதற்கு பெரியவர் எம். எஸ். ஆர் சொன்ன பதில் அவ்வளவு சரியாகப் படவில்லை இன்றைய சமூகப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் பெரியாரியம் என்பது தீர்வாக முடியுமா? சாதி ஒழிப்பு அல்லது மூடத்தன எதிர்ப்பு என்பது எல்லாம் முதலாளித்துவச் சிந்தனையாளர்களே பல்வேறு காலகட்டங்களில் முன்வைத்த ஒன்று தான். பிரெஞ்சுப் புரட்சியில் இதைவிட முற்போக்கான கருத்துக்களெல்லாம பேசப்பட்டன. ஆனால் நடைமுறையில் என்ன நடந்தது? சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துக்களையெல்லாம் வைத்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்றி யார் யாரை அடிமைப்படுத்தினார்கள் என்பதெல்லாம் வரலாற்றில் உங்களுக்குத் தெரியும். சாதி ஒழிப்பு தீண்டாமை ஒழிப்பு என்பதெல்லாம்

நிறப்பிரிகை



படிப்பகம்

www.padippakam.com

சிறந்த கருத்துக்களாக இருந்தாலும் அதைப் பெரியார் பேசினார் என்பதாலேயே பெரியார் பெரிய பங்களிப்புச் செய்துவிட்டார் எனச் சொல்லமுடியாது நம்மைப் பாதிக்கக் கூடிய எத்தனையோ பொருளாதாரப் பிரச்சனைகள் உள்ளன. அரசியல் பொருளாதார ஆதிக்க சக்திகள் தமக்குக் கீழே உள்ள ஒடுக்கப்பட்டவர்களை எத்தனையோ கொடுமைகட்கு உள்ளாக்கி வருகின்றன. அதற்கெல்லாம் பெரியாரியம் என்ன தீர்வை முன் வைக்கிறது? இந்த வகையில் தான் பெரியாரியம் என்ன சாதி தீண்டாமை ஒழிப்பு என்பது மட்டும் சமூகப் பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் தீர்வாகிவிட முடியாது என்கிறேன். பெரியாரோடு எல்லாம் முடிந்துவிட்டது என்பது போல எம். எஸ். ஆர் சொன்னார். பெரியார் என்ன சொன்னாரோ அவற்றை அவருக்குப் பின்னுள்ள அவரது இயக்கத்தவர்கள் மற்றும் அவர் பெயரால் நடைபெறும் பல்வேறு இயக்கப் போக்குகள் கடைபிடிக்கவில்லை என்பதும் தெரிகிறது.

**சுந்தர் (மதுரை):**
பெரியாரியம் குறித்த நிறப்பிரிகை கட்டுரைகளை இங்கே வந்திருக்கிற பலரும் படிக்காததாலேயே விவாதம் ஒரே தளத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. ராஜன்குறை கட்டுரை பெரியாரது சிந்தனைகளில் இதுவரை அடையாளம் காணாத சிலவற்றை முன்னிலைப் படுத்தியுள்ளதைப் பார்க்கலாம். ஞானி, கிராமியன், ராஜன்குறை ஆகியோரது பேச்சுக்களைக் கூர்ந்து கவனித்தால் இரண்டு மூன்று விசயங்கள் புதிதாய் முன்னிலைப் படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். ஒன்று சொல்லாடல்களம், வெகுஜனச் சொல்லாடல், கிராம்சியின் War of Positions போன்ற கருத்தாக்கங்கள் அதிகம் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதுவரை இவைகளெல்லாம் பெரியார் ஆய்வில் பயன்படுத்தப் பட்டதில்லை. ஏதோ நவீனமான விசயங்களைப் பெரியாரில் இயந்திர கதியில் பொருத்திப் பார்க்கிறோமா இல்லை பெரியாரில் இதற்கெல்லாம் இடமிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தால் இருக்கிறது என்று தான் தோன்றுகிறது. அதில் ஒரு விசயத்தில் மட்டும் கவனத்தைக் குவித்து நான் முடித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். முக்கியமாக சாதியும் பாலினமும் சந்திக்கும் இடம் இங்கே முதன் முதலில் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிராமியன் கட்டுரை இதில் அதிகக் கவனத்தைச் செலுத்தியிருக்கிறது. சாதிய அதிகாரம் என்பது எவ்வாறு உற்பத்தியாகிறது? ஒரு கூட்டத்தை நாம் சாதிய அதிகாரத்தின் உருவமாகப் பார்க்கிறோம். இவர்கள் பார்ப்பனர்கள். இவர்கள் நிலவுடைமைப் பிற்பட்ட சாதிகள் இப்படி அல்லது சாதீய அதிகாரத்தை ஒரு கருத்தியலாகப் பார்க்கிறோம். ஆனால் சாதீய அதிகாரம் என்பது ஒரு கூட்டத்திலோ அல்லது ஒரு கருத்திலோ நிரந்தரமாக நிலைபெற்றுவிட்ட விசயமல்ல. அது கணந்தோறும் தொடர்ந்து நமது பேச்சுக்களில், செயல்களில் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. நம்மை மாதிரியானவர்கள் உள்ளடங்கிய அரங்குகளிலும் கூட இது உற்பத்தியாகிறது. சாதியும் பாலினமும் சந்திக்கும் புள்ளியில் தான் இந்த உற்பத்தியை நாம் தேடவேண்டும். இந்த வகையில் பெரியார் குடும்பத்தை ஒரு Problematic (பிரச்சினைப் பாடு) ஆக எடுத்துக்கொள்வது முக்கியமானது. வம்சத் தொடர்ச்சி, வம்சாவெளி என்கிற கருத்தை அவர் மறுக்கிறார். பெண்கள் கருத்தடை, கருமறுப்பு தொடர்பாக ரொம்ப காலத்துக்கு முன்பாகவே 'பெண் ஏன் அடிமையானாள்'-இல் முன் வைத்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை. எதையெல்லாம் Granted (இயற்கையானது) என மார்க்சிய மற்றும் திராவிட இயக்கங்களிலுள்ள முற்போக்காளர்கள் பேச்சுக்கிடமில்லை எனக் கருதி வருகிறார்களோ அதையெல்லாம் பெரியார் Problematic ஆக்கியிருக்கிறார். வம்சத்தினுடைய தொடர்ச்சி என்பதெல்லாம் இயற்கை சார்ந்த விசயமல்ல, சமூகத்தால் உருவாக்கப் பட்டவை இவற்றில் நாம் குறுக்கிட முடியும் என்கிறார். அறுபதுஎழுபதுகளில் மேனாடுகளில் பெண் விடுதலை இயக்கங்கள் முன் வைத்த மாதிரியான முற்போக்கான சிந்தனைகளை அவர் முன் வைக்கிறார். மனித இருப்பே செயற்கையானது என்கிறபோது இந்த மாதிரி விசயங்களை கடவுளின் செயல் என்பதாகவோ இயற்கையின் விளைவு என்பதாகவோ கருதாமல் இவைகளில் மனிதன் சமூகம்குறுக்கிட முடியும் என்கிறார். வம்சாவளி என்பது சாதீய அதிகாரத்தை உற்பத்தி செய்கிற விசயத்தைத் தான் 'தேவர் மகனும்' சொல்கிறது. கலப்புத் திருமணம், கருத்தறிப்பில் குறுக்கிடுதல் ஆகியவற்றின் மூலமாக சாதியும், பாலியலும் சந்திக்கும் புள்ளியில் தாக்குதல் கொடுப்பது என்பதைப் பெரியார் சுட்டிக் காட்டியுள்ளார். கல்பனா கண்ணபிரான் போன்றவர்கள் எழுதி 'Caste and gender' பற்றிய கட்டுரை தவிர வேறு யாரும் இந்த நோக்கில் பேசியதில்லை என்றே நினைக்கிறேன். இந்த இரண்டும் சந்திக்கும் புள்ளியில் அடிப்பதன் மூலமாக இந்த இரண்டு சார்ந்த அதிகாரங்களையும் ஒரே சமயத்தில் காலி பண்ணுவது பற்றிய சிந்தனையை ராஜன்குறை, கிராமியன் கட்டுரைகள் முன் வைக்கின்றன. (மானிட வாழ்க்கைக்கு) அர்த்தமில்லை, லட்சியமில்லை என்கிற கருத்தைக் கூறும் பெரியாரின் மேற்கொள்களை நிற-6, பக்-46லிருந்து வாசித்துக் காட்டுகிறார். பெரியாரது சிந்தனைகளுக்குப் பின்னணியாக



படிப்பகம்

www.padippakam.com

எத்தகைய மேற்கத்திய தத்துவப் பார்வைகள் இருந்தன என்று தெரியவில்லை. ஆனால் மேற்கத்திய 'பாசிட்டிவிச' சிந்தனையின் தாக்கம் என்று சொல்லக் கூடிய அவரது மூட நம்பிக்கை எதிர்ப்பு என்கிற கூறை மட்டுமே மார்க்சியர்களும் திராவிட இயக்கத்தினரும் எடுத்துக் கொள்வதென்பது அவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது.

**ஞானி:** இன விருத்தியை மறுப்பதனால் ஆணாதிக்கத்திலிருந்து விடுபட முடியும். அதனால் உடனடியாக சாதி ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியும் என்றா நீங்கள் சொல்கிறீர்கள்?

**சுந்தர்:** அப்படி ஒன்றும் Package ஆக ஒரு தீர்வை வழங்குவதல்ல நான் சொல்வது. ஆனால் இந்த விசயத்தைப் புரிந்து கொண்டோமானால் நம் காலத்திற்கேற்றார் போல வேறு சில தீர்வுகளையும் கூட யோசிக்க முடியும் ஆணாதிக்கத்திற்கும் சாதி அதிகாரத்திற்குமிடையில் ஒரு ஒருமை இருக்கிறது என்பதுதான் உதாரணமாக கல்பனாவின் கட்டுரையில் மேல் சாதிக்கும் கீழ்சாதிக்குமுள்ள உறவு ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள உறவைப் பலவகைகளில் ஒத்திருக்கிறது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது தங்கள் பெண்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத கீழ் சாதியினரைப் 'பெட்டை சாதி' என்கிறான். அந்த சாதியே ஆண்மையில்லாத சாதி. ஆக ஆண்மை/ பெண்மை என்பதும் சாதி ஆதிக்கம் என்பதும் வெவ்வேறு உலகமல்ல. இரண்டு அதிகாரங்களும் குடும்பம் என்கிற ஒரே புள்ளியில் உற்பத்தியாகிறது. பெரியார் தான் இதைச் சுட்டிக் காட்டியவர்.

**அ.மா.** இந்தப் புரிதலின் அடிப்படையில் பெரியாரின் செயல்பாடுகள் எந்த வகையில் தனித்துவமிக்கதாக இருந்தன என ஏதாவது சொல்ல முடியுமா சுந்தர்?

**சுந்தர்:** இல்லை அதுபற்றி நான் ஒன்றும் உடனடியாகச் சொல்வதற்கில்லை.

**ஞானி:** சொந்த வாழ்க்கையில் குடும்பப் பற்று அதிகம் இல்லாமலிருந்திருக்கிறார். பிறந்த குழந்தையைக் கூட சென்று பார்க்கவில்லை. பெண் விடுதலை விசயத்தில் தன்னைப் பற்றிச் சுய விமர்சனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

**டி, என். கோபாலன் (தலித் தோழமை மையம்):** பெரியார் பலவிசயங்களைச் சொல்லியிருக்கலாம் எழுதியிருக்கலாம். ஒரு தத்துவவாதி சொல்வதைச் செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. மார்க்ஸ் தத்துவம்-நடைமுறை பற்றிச் சொன்ன விசயங்களுக்குள் நான் போகலை. அ. மா, சுந்தரை ஒரு கேள்வி கேட்டார். தான் சொன்னவற்றை அவர் நடைமுறைப்படுத்தினார் என்று சொல்ல முடியுமா? இந்தக் கேள்விக்கு நாம் யாருமே பதில் சொல்ல முடியாது. ஒரு சிந்தனையாளராக அவர் சொன்னது இருக்கட்டும். ஒரு சமுதாயச் செயல்வீரராக அதனைச் செயல்படுத்த அவர் என்ன செய்தார்? அவர் பங்களிப்பு என்ன? நான் அறிந்தவரை பெரியார் முன்னிலைப் படுத்தியது பார்ப்பன எதிர்ப்புதான், சாதி ஒழிப்பு கூட அப்புறம்தான். பிராமண அதிகாரத்தை வேரோடு அறுத்ததில் அவருக்கு ஒரு பங்களிப்பு இருக்கிறது. மற்றபடி தலித்கள் பெரியார் இயக்கத்திலிருந்து விலகியே இருந்தனர். தி. மு. க ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்கள் வலிமையான நிலைகளை அடைந்திருக்கின்றனர். தலித்களின் ஓட்டுகள் எம். ஜி. ஆருக்குப் பிறகு தான் திராவிட இயக்கத்திற்கு வந்திருக்கிறது. ஏன் தி. க, தி. மு. கவுக்குப் போகவில்லை? கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி என்றெல்லாம் சொன்னாரில்லையா? சொன்னதற்கு மேல் கடவுள் மறுப்புக்காக என்ன செய்தார்? அவருக்குப் பின்னால் வந்தவர்கள் என்ன செய்தார்கள்? திராவிடஇயக்கத்திலேயே கடவுள் நம்பிக்கை அதிகமானது. திராவிட இயக்க ஆட்சியில் தலித்கள் மீது பிற்படுத்தப் பட்டோர் தாக்குதல்கள் நடந்தபோது அவர் என்ன நிலைபாடு மேற்கொண்டார்? நிற. 6ல் 38 ம் பக்கத்திலுள்ள பெரியார் மேற்கோளைப் பாருங்கள். பார்ப்பன உயர்சாதி ஆதிக்கத்தை ஒழித்தாலே பொதுவுடைமை ஏற்பட்டுவிடும் என்கிறார்: பெரியார் எங்கு விட்டாரோ அங்கிருந்து நாம் தொடங்க வேண்டும். பெரியாரிடமே இதற்கான கூறுகள் உள்ளன. ஆனால் அதற்கு பெரியாரை அணுகும்போது எந்த illusion இல்லாமல் அணுக வேண்டும். பெரியாரைச் சுற்றி Myth (புனைவு) களை உருவாக்கிவிடக் கூடாது. அப்படிச் செய்தால் நமக்கு Credibility போய் விடும்.

**ராஜன் குறை:** பெரியார் என்ன செய்தார் அவரது அரசியல் என்ன என்று தானே கேட்டீர்கள். கடுமையான நேரடிப் பிரச்சாரம் என்பதுதான் அவரது அரசியல் அதை அவர் மிகக் கடுமையாக தொடர்ந்து அறுபது எழுபது ஆண்டுகள் மிக விரிவாக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மேற்கொண்டார். எழுதுறது யார் வேண்டுமானாலும் எழுதலாம். சிறு பத்திரிக்கைக் காரர்களெல்லாம் எந்தெந்த மூலையிலோ .உட்கார்ந்து என்னென்னவோ எழுதுறாங்க; பெரியார் செய்தது அப்படியல்ல. அவருக்கு திட்டவட்டமான அரசியல் நடைமுறை இருந்தது. அது மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களது மரபுவழிப்பட்ட நம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com

கள் மீது, கருத்தியல் மீது தாக்குதல் தொடுப்பது மாற்றியமைப்பது. அந்த நடைமுறையைப் பற்றித்தான் நாம் இன்று விவாதிக்க வேண்டியிருக்கிறது.

**சுந்தர்:** கோபாலன், முடிக்கும்போது நம்ம Credibility நம்பகத்தன்மை போயிடும் என்றீர்களே. அதில் 'நம்ம' என்பது யார்? 'நம்பகத் தன்மை' ன்னா என்னா? நகர்ப்புறத்தி லே வெவ்வேற ஆட்களா இருக்கிறோம். நமக்குன்னு பொதுவா எதுவும் Credibility இருக்கான்னலாம் தெரியல.

**கோபாலன் :** 'நம்ம' ன்னா இதைப் பற்றிப் பேசுகிறவர்கள்.

**சுந்தர்:** இல்லை, நீங்கள் வாசிச்ச மேற்கோள்ல பார்ப்பன சாயமுள்ள பொதுவுடைமை ன்னு வருதில்லையா, அதுதான் 'நம்ம' இல்லை இங்கே நிறையபேர்.

**கோபாலன்,** பெரியாரை நான் வெறும் சிந்தனாவாதி என்று சொல்லவே இல்லை. சிந்தனாவாதியா இருந்தா எதை வேணும் னாலும் பேசிவிட்டுப் போயிடலாம். ஆனால் அவர் சிந்தனாவாதி அல்ல. அவர் ஒரு செயல் வீரர். பிராமண ஆதிக்கத்தை ஒழித்திருக்கிறார் செயல்வீரர் என்பதால்தான் அவர் எந்த அளவிற்கு சொன்னதைச் செய்தார் என்ற கேள்வி வருகிறது.

**கிராமியன்:** சிந்தனை, செயல் என்பதல்லாம் வேறு வேறு எனப் பெரிய வேறுபாடை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அப்படி இல்லைங்கிறது தான், அதனால்தான் ''செயல் அதுவே சிறந்த சொல்'' என்றெல்லாம் சொல்கிறோம். 'கிராம்சி' பற்றியெல்லாம் பேசுறோம். பொருளடிப்படையிலான மாற்றம்தான் உயர்ந்தது, கருத்தடிப்படையிலான மாற்றம் ரொம்பப் பிற்போக்கானது என்ற கருத்தை வைத்துக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். தலித்கள் மத்தியில் பேசும் போது உனக்குப் பணம் முக்கியமில்லைய்யா, சாதி ஒழியனும்யா அப்பத்தான் உன்னை மதிப்பான்கிறார். அதே சமயம் இன்னொரு ஊர்லே கிறிஸ்தவ தலித்களிடம் பேசும் போது என்னய்யா மதம் மாறினிய சாதி ஒழிஞ்சுட்டா? மதிப்பு வந்துட்டா? பணம் வேணும்யா, பணம் இருந்தாத்தான் மதிப்பான் என்றார். அவர் எதையும் புரியாமல் பேசினதாய் நினைக்க வேண்டாம். கருத்தியல் பிரச்சாரம் என்பதே ஒரு செயல்தான் அதை நாம் மறந்துடக் கூடாது.

**ரவிக்குமார்:** நிற 6. பக் 42ல் உள்ள மேற் கோளைப் பாருங்கள். டி. என். கோபாலன் வாதங்களுக்கு பதில் சொல்வது போல் இது அமைந்துள்ளது. தீண்டாமை ஒழிப்பைக் கண்டு பார்ப்பனர் கவலைப்படுவது சரி சூத்திரர் ஏன் கவலைப் பட வேண்டு மென்கிறார் பார்ப்பனர் களை விலக்கிவிட்டு அங்கே யாரை வைப்பது என்கிற கேள்விக்கும் பெரியாரே பதில் சொல்லி விடுகிறார். சாதி ஒழிப்பு என்பதை மையப் படுத்தித்தான் பெரியார் இயங்கினார் என்பதை தொகுத்துச் சொல்லியுள்ளோம். அதை விட்டு விட்டு வெறும் பார்ப்பன எதிர்ப்பாக பெரியாரை குறுக்குவதால்தான் மற்ற மேல் சாதிக்காரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆதரவாக இருந்தார் என்கிற அர்த்தம் வரும். கோபாலன் பேச்சு அப்படித்தான் அமைந்தது.

**எம். எஸ். ராமசாமி:** ''மேல்சாதித்தன்மை இந்த நாட்டிற்கும் பெரும்பாலான மனித சமுதாயத்திற்கும் மிகமிகக் கேடானதாகும்... ஒரு பெரிய மோசடியும் கிரிமினல் தன்மையு மாகும். ஆகவே என்ன விலை கொடுத்தாவது அதை ஒழித்தே ஆகவேண்டும்'' இதுவும் பெரியார் சொன்னதுதான், வெறுமனே பார்ப்பனீயத்தை மட்டும் அவர் எதிர்க்கவில்லை

**கோபால் (கல்பாக்கம்):** இப்ப விவாதம் ஏதோ பெரியார் நல்லவரா கெட்டவரா என்பது போல போய்க் கொண்டிருக்கிறது. இதை விட்டு விட்டு பெரியாரியத்துக்கு வருவோம். சூழலுக்கு தகுந்தாற்போலத்தான் செயல் இருக்க முடியும் கால கட்டத்தை மீறி எதுவும் செய்ய முடியாது. காலகட்டத்தை மீறி பின்னால் இருக்கும் மக்களின் தயார் நிலையைப் பற்றிக் கவலைப் படாமல் ஒரு தலைவன் செயலில் இறங்கினால் அது தோல்வியில்தான் முடியும். பெரியாரது கால கட்டத்தில் பார்ப்பனரல்லாதவர்க்கு அரசதிகாரத்தில் இடம் என்பது சரிதான். அதற்கப்புறம் சாதி ஒழிப்பு பற்றி அவர் என்னென்ன Steps எடுத்தார் என்றால் இதோடு நிற்கக் கூடாது மொத்தத்தில் சமூக நீதி மலரவேண்டும் என்பதாக சாதி பற்றிய அவரது உச்சரிப்புகள் (Statements) இருந்தன. அவர் அதைச் செய்யாமல் விட்டார் என்றால் அந்தக் காலத்தில் அதற்கு சாத்தியக் கூறுகள் இருந்து அவர் செய்யாமல் விட்டாரா என்றுதான் பார்க்கவேண்டும். பார்ப்பனர்களை எதிர்ப்பது என்னும் போது பிற்பட்டவர்கள் அந்தக் காலத்தில் அதற்குத் தயாராக இருந்தார்கள். தலித்கள் ஏன் வரவில்லை என்று கேட்கக் கூடாது. பார்ப்பனர்கள் தூக்கி எறியப் பட்ட பிறகு தலித் பிரச்சினையில் தலித்கள் தயாராக இருந்து அவர் அதெல்லாம் செய்ய முடியாது என்று பின்னால் போனாரா என்று தான் பார்க்க வேண்டும். இன்றைக்கு தலித் பிரச்சினை முன்னுக்கு வந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பிற்படுத்தபட்டவர்களை அடிப்பதில் எல்லாருக்கும் வேகம் இருக்கிறது. அன்றைக்கு அந்த நிலை இருந்ததா? தலித்கள் கேட்டு வரட்டும். அப்ப பெரியாரியம் பேசுகிறவர்கள் இல்லை இல்லை முடியாது என்று சொன்னால் பெரியாரியம் தோற்றுவிட்டது என்று சொல்வோம். மார்க்ஸ் 'மூலதனம்' தான் எழுதினார். அப்புறம் ஏகாதிபத்தியமெல்லாம் வந்துவிட்டது எனவே மார்க்சியம் தோல்வி என்று சொல்ல முடியுமா? விடுதலை, விடுதலைக்கான வர்க்கப் போராட்டம் என்பதுதான் மார்க்சியம். அந்த வகையில் அது எல்லாக் காலத்திற்கும் பொருந்தும். பெரியாரியமும் அப்படித்தான்.

**பேரா. பரமசிவம் (தியாகராயா கல்லூரி):** பெரியாருடைய காலச் சூழல் மட்டுமல்ல, அவர் யாருக்கு எதிராக இருந்தார் என்பதும் முக்கியம். தலித்களின் எழுச்சி இப்போது ஏற்பட்டுள்ளது. அப்போது ஏன் ஏற்படவில்லை? 'பூனா ஒப்பந்தம்' என்றொரு நிகழ்ச்சி அப்போது நடந்தது. அதற்கு முன்பு தமிழ்நாட்டு தலித் தலைவர்கள் யாருமே காங்கிரசுக்கு எதிராகத்தான் இருந்தார்கள். அதற்குப் பிறகு தான் காங்கிரஸ் ஆதரவு என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. பூனா ஒப்பந்தம் வேறு யாரையும் விட தமிழ்நாட்டு தலித் மக்களைத்தான் அதிகம் பாதித்தது. ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டதில் தமிழ்நாட்டு தலித் தலைவர்கள் தான் அதிகம். ஒப்பந்தம் முடிந்த மறு மாதமே 'அரிஜன்' இதழை ஆரம்பிக்கிறார் காந்தி. 'மகாத்மா' 'அரிஜன்' என்கிற இருமதம்சார்ந்த கருத்தாக்கங்கள் தமிழ்நாட்டு தலித் மக்களை ரொம்ப மயக்குகிறது. பூனா ஒப்பந்தம் இல்லாவிட்டால் தமிழ்நாட்டு தலித் மக்களின் எழுச்சி இன்னும் ஒரு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக இருந்திருக்கும். இதை Counter பண்ணுகிற அளவிற்கு பெரியாரிடம் அன்று நிறுவன பலம் இல்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடாதேன்னு வெளியேயிருந்து அம்பேத்கருக்குச் சொன்ன ஒரே ஆள் பெரியார் தான். 'காந்தி கண்டன கீதம்' ன்னு அப்பவே பெரியார் இயக்கம் ஒரு பாட்டுப் புத்தகம் போடுகிறது. 'அரிஜன்' என்கிற பெயரை எதிர்க்கிறாங்க. ஆக பூனா ஒப்பந்தத்தால் தலித் மக்களுக்கு ஏற்பட்ட காங்கிரஸ் மயக்கம் 67 வரை நீடித்தது. இன்னொரு விசயம் பெரியார் எப்போதுமே பிராமணீயத்தை ''அதிகாரத்தை நோக்கிய நகர்வாகவே'' பார்த்தார். எனவே பிராமணியத்தை வேரறுப்பது என்பதை அதிகாரத்தைப் பிடுங்குவது என்பதாகப் பெரியார் பார்த்தார்.

**எம். எஸ். ராமசாமி:** தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடே பெரியாரால் தான் வந்தது.

**கண்ணன் (மதுரை படிப்பு வட்டம்):** 'தலித்' என்பதை வர்க்கமாக அடையாளப் படுத்தினால் Subaltorn Class- (அடித்தட்டு வர்க்கம்) எனலாம். பெரியார் காலத்தில் நிலவுடைமை வர்க்கம் என்பது சைவ- வேளாளர்தான். நிலமற்ற பெரும்பான்மையினர் என்பது தலித்கள் தான். கோயில்களில் அதிகாரத்தை எல்லாம் மையப்படுத்தியவர்கள் கோயில் நிலத்திலும் மற்ற இடங்களிலுமிருந்த நிலமற்ற மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்றகோரிக்கையை வைக்கவில்லை என்பதை 'வாஷ் புருக்' சுட்டிக் காட்டுகிறார். இது ஒரு முக்கியமான பிரச்சினை வெறும் பொருளாதாரப் பிரச்சனை என ஒதுக்க முடியாது.

**பாண்டின் (இந்திய மக்கள் முன்னணி):** பெரியாரைக் காப்பாற்றியாகணும்கிற அக்கறையோ அடிச்சு விரட்டணும்கிற நோக்கமோ எனக்கு கிடையாது. No sentiments with Periyar 1908 லிருந்து 1920 வரை அவர் ஒவ்வொரு காங்கிரஸ் மாநாட்டிற்கும் இட ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு போவதும் அது தோற்கடிக்கப்படுவதும், இது கடவுளுக்கு எதிராக இருக்கு மதத்துக்கு எதிரா இருக்கு எனச் சொல்லப்படும் காரணங்களையெல்லாம் அவர் மறுதலித்துப் போவதிலும் ஒரு dialectical Process இருக்கிறது. எது மனித இருத்தலுக்குத் தடையாக இருக்கிறதோ அதைத் தொடர்ந்து மறுத்தல் என்பது அவரது போக்காக இருந்தது. அதுக்குப் பின்னாடி என்னால் பார்க்க முடியவில்லை. என்ன காரணம்னு சொன்னா யாரை எதிர்க்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்த அளவிற்கு யாரைத் தக்க வைக்க வேண்டும் என்பதில் கவனமில்லை. பார்ப்பன எதிர்ப்பில் கவனமிருந்தது. அன்றைக்கு பிற்பட்டவர்கள் தான் வந்தார்கள் தலித்கள் வரவில்லை என்றார் கல்பாக்கம் தோழர். அப்படியானால் அம்பேத்கர் எப்படி வந்தார்? காலச் சூழலை மறந்துட்டுப் பேசக் கூடாது. வெண்மணி பற்றிப் பெரியார் பேசவில்லை என்றார்கள். அந்த விசயத்தில் நான் பெரியாரை மதிக்கிறேன். இந்தக் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் பெரியார் வெண்மணியை சரியாகக் கணித்தார். அது ஒரு கூலிப் போராட்டம். வெறுமனே ஒரு வர்க்கப் போராட்டம். அதில் தலையிடவேண்டாம் என அவர் நினைத்திருக்கலாம். கொல்லப்பட்ட கூலிக்காரர்கள் தலித்களாக இருந்தால் தலித் இயக்கக்காரர்களுக்கு வசதியாய் போய்ட்டு. ''தலித்களை கொன்னுட்டன்னு'' சொல்றதுக்கு 'இனிவரும் உலகம்' கட்டுரையில் பெண் விடுதலை பற்றியெல்லாம் நிறையச் சொல்கிறார். ரொம்ப ஆழமாக உள்ளே போகிறார், மனித இருப்பு என்பதையெல்லாம் தாண்டி ஆனால் சமூகத்தை மறந்துவிடுகிறார். நீ



படிப்பகம்

www.padippakam.com

மட்டும் விடுதலை பெற்றால் போதும் என்று பெண்ணைப் பார்த்துச் சொல்கிறார். கருப் பாதையைச் சாத்திக் கொள் என்கிறார். ஆனால் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர் போடக் கூடாது எனக்கட்சியில் தீர்மானம் இயற்றிய பெரியார் கருத்தடை செய்து கொண்டால்தான் கட்சியில் சேரலாம் என்று சொல்லவில்லை. அதை யாரும் மறந்துவிடக் கூடாது. மன்னிச்சுக்குங்க. என்னா? சுந்தரர்ரு...புரியுதா? குறைந்த பட்சம் மாநாட்டுத் தீர்மானங்கள் கூடப் போடவில்லை. பிரச்சாரமும் நடைமுறையில் அதிகம் இல்லை. கருத்தடை செய்து கொள்ளுங்கள். ஆண்களோடு தாராளமாக உறவு வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் சொல்லவில்லை. பெண் விடுதலை பற்றி பெரியார் இப்படிச் சொன்னார் எனப் பெருமை பேசுகிற யாரும் நடைமுறையில் இதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவுங்க ஏத்துக் கொள்ளாததை நீங்க ஏங்க போட்டு உயிரை வாங்குறீங்கன்னு எனக்குப் புரியல்லே. பெரியாருடைய தெல்லாம் நல்ல நோக்கங்கள் தான். ஆனால் நடைமுறைக்கு ஒவ்வாதது. அவரை கொச்சைப் பொருள் முதல்வாதி என்றெல்லாம் முத்திரை குத்துவதல்ல நமது நோக்கம். அவரிடமிருந்து கொள்ளுவது எது, தள்ளுவது எது என்று பார்க்க வேண்டும். மராட்டியத்திலும் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களை அடித்தளமாகக் கொண்டு அது இருந்தது. தமிழ்நாட்டு பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் யாரை அடித்தளமாகக் கொள்வது என்பதில் கவனமற்று இருந்தனர். தலித் இயக்கத்தின் நாயகனாகப் பெரியார் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை என்பது வருத்தப்படக் கூடிய செயல்தானேயொழிய அவர் மீது குற்றம் சாட்டும் செயலில்லை. நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் கருத்துப்படி இரண்டாயிரத்தின் இறுதிப் பத்தாண்டுகள் என்பது தலித்கள் விசயத்தில் ஏதோ ஒரு வகையில் கணக்குத் தீர்ப்பதாகவே இருக்கும், மராட்டியத்தில் தலித் இலக்கியம் உருவானது போல இங்கேசிலர் முயற்சிக்கிறார்கள். ஆனால் அது செயற்கையாகத்தான் இருக்கிறது. கோபாலன் சொன்னமாதிரி— நீங்கள் உடனே பார்ப்பான்னு சொல்லுவீங்க— இன்னைக்கிக் கூட தலித்கள் காங்கிரசுடைய ஓட்டு வங்கியாகத்தான் இருக்கிறார்கள். ஏன்னா ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதற்கு காங்கிரசுதான் வடிவு கொடுத்தது.

**கண்ணன்:** அதல்ல; நிலச்சீர்திருத்தமெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில்தான் நடந்தது.

**பாண்டியன்:** ஆமா. அது மாதிரி பல விசயங்கள் திராவிட இயக்கங்களின் ஆட்சியிலே இடைநிலைச் சாதிகள்தான் வலுவடைஞ்சிது. எனக்குக்கூட அந்தக் கிழவன் மேல கொஞ்சம் செல்லக் கோவம். தஞ்சாவூர் மாவட்டத்திலே நிலமெல்லாம் பார்ப்பானிடம்தான் இருந்தது. ஆனால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்டவரை பார்த்து ''போய் அந்த நிலத்தையெல்லாம் பிடுங்கு'' எனச் சொன்னாரா? மேல்சாதி என்பது மட்டுமல்ல சமூக அந்தஸ்து. கிராமப் புறங்களில் சொத்து இருப்பதும் சமூக அந்தஸ்து தான். நாடார்கள் மத்தியில் ஏற்பட்ட சமூக மாற்றத்தை நாம் அறிவோம்; ஆனால் இன்றைக்கும் பசும்பொன் மாவட்டத்தில் சாணார்கள் தலித்களைப் போலத்தான். மற்ற மாநிலங்களில் உள்ளது போல இல்லாமல் தமிழகத்தில் பெயருக்குப் பின்னால் சாதி தொங்கிக் கொண்டிருப்பதை ஒழித்த பெருமை திராவிட இயக்கத்துடையதுதான். ஆனால் அவர்கள்தான் கிராமப்புறத்தில் தலித் மக்கள் வெட்டிக் கொல்லப் படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் சிரீரங்கம் கோயில் கருவறைப் போராட்டம் பற்றி எல்லாரும் பேசுகிறோம். ஆனால் ஒவ்வொருகிராமத்திலும் கோயில்களில் தலித்கள் உள்ளே நுழையாமல் தடுப்பது யார்? அதையெல்லாம் விட்டு விட்டு சவுகரியமாக சிரீரங்கம் கோயில், மீனாட்சி கோயில் என்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். தலித் பிரச்சினையில் எதிரி பார்ப்பனர்கள் மட்டுமல்ல மற்ற பிறசாதியினரும்தான் என்பதையெல்லாம் மறந்து விட்டு ''சொல்லாடல்'' பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது.

**மதியம் இரண்டு மணிக்கு முடிந்த காலை விவாதம் உணவு இடை வேளைக்குப் பின்பு மீண்டும் மாலை மூன்று மணிக்குத் தொடங்கியது.**

**அ. மார்க்ஸ்:** வழக்கமான நமது கூட்டு விவாதங்களைப் போலவே இன்றும் முற்பகல் விவாதமானது பலரும் தங்களின் கருத்துக்களை விரிவாக முன் வைக்கும் களமாக அமைந்த தென்றாலும் விவாதப் புள்ளிகளில் பொதுக் கருத்துக்களைத் தேடும் முயற்சியை எஞ்சியுள்ள கொஞ்ச நேரத்தில் நாம் செய்தாக வேண்டி -யிருக்கிறது. அந்த வகையில் காலை விவாதங்களின் அடிப்படையில் நாம் சில விசயங்களைத் தொகுத்துக் கொள்ளலாம். ரசியா மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பின் உலகெங்கிலும் மதவாதமும் பாசிசமும் உயிர்ப்பித்துள்ளன. இசுலாமிய எதிர்ப்பு என்கிற அடிப்படையில் மேலை ஏகாதிபத்தியங்கள் இணைகின்றன. கிறித்தவ மதவாத சக்திகளின் ஆதிக்கத்தில் கருத்தடை உரிமை மறுப்புச் சட்டங்களெல்லாம் நாடுகள் தோறும் நிறைவேற்றப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ஆசியாவில் இசுலாத்திற்கு எதிரான சக்தி என்ற வகையில் இங்கே வளர்ந்து வரும் இந்து பாசிசத்தை அமெரிக்காவும் மேலை நாடுகளும் ஆதரிக்கின்றன. மசூதி இடிப்பிற்குப் பின்பு பாரதீய ஜனதா தலைவர் சிக்கந்தர் பக்திற்கு அமெரிக்கா பெரிய வரவேற்பளித்துள்ளது இப்படி ஏகாதிபத்தியத்தின் ஆசியோடு புத்துயிர்ப்புப் பெறும் இந்து பாசிசம் வலிமையாகவும் வேகமாகவும் வளர்ந்து வருகிறது. பார்ப்பனீயத்தை, வருணாசிரமத்தை நிலை நாட்டுவதுதான் இந்துத்துவத்தின் நோக்கம் என்பதில் அய்யமில்லை. இந்தியாவின் வேறெந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்தில் இந்துத்துவம் புத்துயிர்ப்பு பலவீனமாக இருப்பதற்குப் பெரியார் மற்றும் திராவிட இயக்கங்களின் பங்களிப்பை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. எனினும் வருணாசிரம சக்திகள் தமிழகத்தைக் குறி வைத்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. இத்தகைய உலகளாவிய பின்னணியில்தான் பெரியாரின் முக்கியத்துவத்தை, இன்றைய சூழலில் அவரது பொருத்தப் பாட்டை நாம் யோசிக்கிறோம். இந்தியச் சமூகங்களின் பிரத்தியேகத் தன்மைகள் குறித்து எல்லோரும் அறிவோம். உலகெங்கிலும் முகிழ்த்த சனநாயகஉணர்வென்பது இந்தியாவில் வேர் பிடிக்காதற்கான காரணங்களைக் காலனிய ஆட்சியில் மட்டும் நாம் தேடிக் கொண்டிருக்க முடியாது. இதர காலனி நாடுகளில் வளர்ந்துள்ள அளவிற்குக் கூடச் சனநாயக உணர்வுகள் இங்கே வளரவில்லை. பார்ப்பனீய மதமும் சாதீயக் கட்டுமானமும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாதியப் படிநிலையில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட சாதியராக உணர்கின்ற மனநிலைதான் உள்ளதேயொழிய ஒரு குடிமகனாக உணரும் தன்னிலை இங்கே கட்டமைக்கப்படுவதில்லை. இத்தகைய தன்னிலைஉருவாக்கத்தில் இந்துக் குடும்பம், இந்துச் சட்டங்கள், இந்துக் கோயில்கள் சார்ந்த மரபுகள், இவற்றினடியாக வளர்த்தெடுக்கப்பட்ட கருத்தியல்கள் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தக்கருத்தியல் செயல்படும் களமாக இந்துக் குடும்பம், இந்து மதம், இந்தியக் கல்வி' ஒழுக்க மதிபபீடுகள், தொடர்புச் சாதனங்கள் முதலியவை செயல்படுகின்றன. இந்தக் கூறுகளைத்தான் நாம் சிவில் சமூகம் என்கிறோம். ஆதிக்க சக்திகளின் மேலான்மையை ஆகப் பெரும்பான்மையான மக்கள் கேள்வி முறையின்றி அதிக எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் மனநிலையை இச்சிவில் சமூகம் உருவாக்குகிறது. இத்தகைய ஆளும் வர்க்கக் கருத்தியலை பொதுவான கருத்தியலாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் தன்மையைத்தான் மேலான்மை செயல்படுதல் என்கிறோம். ஏகாதிபத்தியம் உள்ளிட்ட புதிய புதிய ஆதிக்க சக்திகள் தங்களின் மேலான்மையை உருவாக்குவதற்கு பழைய சிவில் சமூகம் எந்தப்பெரிய தடைகளையும் உருவாக்காததால் சிறிய மாற்றங்களோடு அதனை அப்படியே தக்கவைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றன. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு அதி வேகமாக வளர்ச்சியடைந்து வந்த சமூக சனநாயகக் கட்சிகள், பாட்டாளி வர்க்கச் சித்தாந்தம் ஆகியவற்றையெல்லாம் ஒரே கணத்தில் நொறுக்கித் தூளாக்கிப் பாசிசம் தலையெடுத்த போதுதான் கிராம்சி போன்ற மார்க்சியர்கள் மேலாண்மை, சிவில் சமூகம் போன்ற கருத்தாக்கங்களையெல்லாம் சிந்திக்க தொடங்கினர். கொடும் பொருளாதாரச் சுரண்டலுக்கெதுராக ஆட்சி அதிகாரத்தை நோக்கி மக்களைத் திரள வைக்கக் கூட இந்த மேலாண்மையில் ஒரு கிழிவை— Rupture— ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றிப்பேசினர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னுங் கூட பழைய சிவில் சமூகத்தில் உரிய மாற்றங்களைச் செய்து தகர்க்காமல், மேலாண்மையில் கிழிசலை ஏற்படுத்தாமல் என்னதான் பொருளாதார மாற்றங்களைச் செய்தாலும் மக்களுக்கு விடிவு ஏற்படப் போவதில்லை என்பதற்கு புரட்சிக்குப் பிந்திய சமூகங்கள் சான்றாகிப் போன இன்றைய சூழலில் மீண்டும் கிராம்சி போன்றோரின் சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றன.

ஏகாதிபத்தியத்திற்கும் உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கும், இந்தியாவில் பார்ப்பன உயர் சாதி ஆதிக்கங்களுக்கும்' (உள்ளூர் முதலாளிகளாகவும் இவர்களே உள்ளனர்) உகந்த பழைய மேலாண்மையைத் தகர்காமல் பழைய சிவில் சமூகத்தில் கலகங்களை மேற்கொள்ளாமல் பொருளாதார மாற்றங்களையும் ஆட்சி அதிகாரத்தையும் நோக்கிய நேரடியான வர்க்கப் போராட்டங்களை— கிராம்சி இதனை War of Movements என்பார்— நோக்கி மக்களை ஈர்ப்பது சாத்தியமில்லை. இதனை உலக வரலாறு மட்டுமல்ல இந்திய வரலாறும் நிருபித்துவிட்டது. இந்தச் சூழலில் நாம் மேலாண்மையில் சிதைவை ஏற்படுத்தக் கூடிய War of Positions— ஐ முதலில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை மேற்கொள்ளாமல் War of Movementsல் இறங்கினால் தோல்விதான் முடியும். இந்த வகையில் தான் நாம்கிராம்சி, பெரியார் போன்றோரைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

War of Positins எனும்போது மேலாண்மையில் கிழிவை ஏற்படுத்துதல் என்னும்போது இதனை நாம் எப்படியெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது? இது கால, இடச்சூழலுக்கு தகுந்தாற் போல வேறுபடும். பொதுவாகச் சொல்வதானால் சிவில் சமூகத்தில் கலகம்



படிப்பகம்

www.padippakam.com

செய்தல் என்றோம், பல்வேறு நுண்களங்களில் அதிகாரத்திற்கெதிராகப் போராடுதல், கல்வி பாலாதிக்கம் போன்ற இதுவரை புறக்கணிக்கப் பட்ட துறைகளில் கவனம் செலுத்துதல்; இந்தியாவைப் பொறுத்த மட்டில் பார்ப்பனியம் இந்து மதம், சாதீயம் தொடர்பான கருத்தியல் களில் சிதைவை ஏற்படுத்துதல்; நிறுவனங்களின் மீது தாக்குதல் தொடுத்தல். மேலாண்மைக் கருத்தியல் என்பது பல்வேறு குறியீடுகள், பிம்பங்கள், புனைவுகள் மூலம் செயல்படுகின்றன நேற்று ஒரு கள ஆய்விற்காக சிரீரங்கம் கோயி லுக்குப் போயிருந்தோம். பெண்களை ஏன் அர்ச்சகராக்கக் கூடாது என்றால் ''தீட்டு, மாத விலக்கு'' என்கிற பதில் சர்வ சாதாரணமாய் பெண்கள், பார்ப்பனரல்லாதார் உள்ளிட்டு எல்லோரிடமிருந்தும் வருகிறது. கருவறைக்குள் நுழைந்தால் என்ன என்றால் தாயின் கருவறைக்குள் நீ நுழைவாயா என்று திருப்பிக் கேட்கிறார்கள். கருத்தியற் களத்தில் இந்த ஆணாதிக்க, பார்ப்பன மேலாண்மையைத் தகர்க்காமல் அரசியல், பொருளாதாரக் களத் தில் தகர்ப்பதற்காக எவ்வாறு மக்களைத்திரட்ட முடியும்? தீட்டு, தாய்மை, கருவறை போன்ற குறியீடுகள், பிம்பங்கள் இவற்றை நொறுக் காமல் கருத்தியலில் சிதைவை எவ்வாறு ஏற்படுத்த முடியும்? இப்படி பிம்பங்கள், குறிகளில் தர்க்குதல் தொடுத்த வகையிலும் பெரியார் கவனம் பெறுகிறார். மரபு வழிப்பட்ட கருத்தியலுக்கெதிரான தொடர்ந்த பிரச்சாரம் என்பது அவரது அரசியல் திட்டமாக இருந்தது என்கிறார் ராஜன்குறை.

அப்படியானால் பெரியாரை அப்படியே சரி என்கிறோமா? அரை நூற்றாண்டிற்கு முன்னுல் பெரியார் மேற்கொண்ட செயற்பாடுகளை அப்படியே மாற்றங்களின்றித் தொடர்வதுதான் இன்றைய பணி என்கிறோமா? இந்தியாவுக் கான மார்க்சியம் தான் பெரியாரியம் என்கிறோ மா? மார்க்சியம் உட்பட எந்தத் தத்துவமும் முற்று முழுதான எல்லா இடங்கள், எல்லாக் காலங்களுக்குமான மனித விடுதலைக்கான தத்துவமாக முடியாது என்பதை சமீப கால நிகழ்வுகள் உறுதி செய்துவிட்டன. மரபு வழிப் பட்ட பொதுவுடைமைக் கட்சிகள் உட்பட மார்க்சியத்தில் இட்டு நிரப்ப வேண்டிய இடை வெளிகள் பற்றி ஆய்வுகள் செய்ய இன்று மாநாடுகள் கூட்டிக் கொண்டிருக்கின்றன. சுற்றுச் சூழல், பெண்ணியம் எனப் பல்வேறு கூடுதல் அம்சங்களை இணைப்பது குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன. அதேபோலத் தான் பெரியாரியத்தில் இன்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சங்கள் என்னென்ன? இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகள் என்ன என்ன என்பது குறித்து ஆய்வு செய்யத்தான் நாம் இன்று கூடியுள்ளோம்.

அந்த வகையில் இந்து பார்ப்பனீய மேலாண் மைக்கு எதிராகத் தொடர்ந்த கருத்தியல் பிரச் சாரம், ஆதிக்கக் குறியீடுகளைச் சிதைத்தல். சாதி ஒழிப்பை மையச் சுடராகக் கொண்டு இயங்குதல் போன்ற அம்சங்களில் பெரியாரின் பொருத்தப்பாட்டை இன்றைய காலை விவாதம் சுட்டிக் காட்டியுள்ளது. பெரியாரியம் என்பதை வெறுமனே மூடத்தன எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்று சுருக்கிவிடாமல் ஆணாதிக்க எதிர்ப்புக்கும் சாதி ஒழிப்பிற்குமுள்ள இணைப்புப் புள்ளியை கவனிக்க வேண்டிய அவசியத்தை கிராமியன், சுந்தர் ஆகியோர் வலியுறுத்தி யுள்ளனர். மரபு வழிப்பட்ட திராவிட இயக்கத் தினர் கண்டு கொள்ள மறுக்கும் முக்கிய புள்ளி இது. சாதீயத் தன்னிலையை உருவாக்குவதில் பாலாதிக்க நிறுவனமாகிய குடும்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பம் என்கிற நிறுவனத் திற்குள்தான் ஒரு குழந்தைத் தன்னை ஆணாக பெண்ணாக/பார்ப்பானாக/பறையனாக/தேவ னாக/நாடானாக அடையாளம் காண்கிறது. பின்பு இத் தன்னிலை நமது கல்வி முறை, தொடர்புச் சாதனங்கள் எனச் சிவில் சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களால் இது வலுவூட்டப் படுகிறது ''கருத்தறிப்பு உரிமையைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள், சமூக விருத்தி பற்றி உங்களுக்கென்ன கவலை?'' எனப் பெரியார் பெண்களை நோக்கிக் கேட்டதை நடைமுறைக்கு ஒவ்வாதது, உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னது என நீங்கள் புறக்கணிக்க முடியாது. இதிலுள்ள நியாயத்தை ஆணாதிக்க நோக்கில் நின்று விளங்கிக் கொள்ள முடியாது. தேவதாசி முறை யை ஒழிக்க வேண்டுமென இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குரலெழுப்பிய போது 'இந்தியக் கலாச்சாரத்தின் ஒரங்கமான கோயிற் கலை களைக் காப்பவர்கள் தேவதாசிகள். தேவதாசி முறையை ஒழித்தால் இந்தியக் கலாச்சாரம் அழியும். அதோடு இப்போது கோயிலுக்குத் தேவதாசிகள் வேண்டாமென்பீர்கள்; அப்புறம் அர்ச்சனை செய்ய பிராமணர் வேண்டாம் என்பீர்கள்' என்று சத்திய மூர்த்தி அய்யர் இதனை எதிர்த்தார். அய்யர் சொன்னது சரியா தப்பா என்பது இருக்கட்டும். உண்மையென்றா லும் கூட இந்தியக் கலாச்சாரம் அழிவது பற்றி தேவதாசிகள் ஏன் கவலைப்பட வேண்டும்? ஊர் நாறுமே என தலையில் மலம் சுமப்பவன் ஏன் கவலைப்பட வேண்டும்? சமூகம் விருத்தி யாகாதே எனப் பெண்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

பெரியாரில் இட்டு நிரப்பப்பட வேண்டிய இரு முக்கிய இடைவெளிகள் மேலும்காலை விவாதம் கவனத்தைக் குவித்துள்ளது. ஒடுக்கப்பட்டவர் களின் சார்பாக நின்று உள்ளார் ஆதிக்க சக்தி களை எதிர்க்கும் நோக்கில் பெரியார் அம்பேத்கர் போன்றோர் ஏகாதிபத்திய எதிர்ப்



படிப்பகம்

www.padippakam.com

புக்கு முன்னுரிமை அளிக்காத நிலை எடுத்ததை நாம் அறிவோம். இன்றைய இந்துத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்குமுள்ளஉறவை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். எனவே நமது War of Positions செயற்பாடுகளில் பின்னணியில் நிற்கும் ஏகாதிபத்தியத்தை நாம் மறந்துவிட முடியாது. ஞானி இதனைச் சுட்டிக் காட்டினார் அதே போல இந்துத்துவத்தை எதிர்ப்பது என்பதன் அடிப்படை தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமைதான். இந்த ஒற்றுமைக்குத் தடையாக இருப்பது தீண்டாமைக் கொடுமை. இந்த ஒற்றுமைக்கு முன் நிபந்தனையாக இருப்பது தீண்டாமை ஒழிப்பு. எனவே தீண்டாமை ஒழிப்பை நிறைவேற்றுவதன் மூலமே பார்ப்பனிய எதிர்ப்பிற்கு அடித்தளமிட முடியும். இந்த வகையில் தீண்டாமை ஒழிப்பை முன் நிலைப்படுத்த வேண்டிய அவசியத்தை தருமலிங்கம் போன்றோர் சுட்டிக் காட்டினர்

வெண்மணி பற்றியும் இம்மானுவேல் கொலை பற்றியும் பெரியார் என்ன சொன்னார் என்று இங்கே கேட்கப்பட்டது. வெண்மணி பற்றித் தெரியவில்லை. இம்மானுவேல் கொலை மற்றும் சாதிக் கலவரங்களுக்குப்பின் முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டதை ஆதரித்த ஒரே தமிழகத் தலைவர் பெரியார்தான். தேவர் கைதுக்குப் பின்புதான் சாதிக்கலவரம் ஓய்ந்தது தி.மு.க. உட்பட அனைவரும் தேவர் கைதை கண்டித்தபோது பெரியார் அதனை ஆதரித்தார்

கடைசியாக: பெரியாரின் நாத்திகப் பிரச்சாரத்தையும் மீறி கோயில் பெருக்கம், கடவுள் வணக்கம் அதிகமாகியிருக்கிறது. இதனைச் செவ்வியல் மார்க்சியத்தின் மூலம்தான் விளக்க முடியும். மதம் மக்களின் அபினி. ஒடுக்கப்பட்ட மக்களின் ஆறுதல் பெருமூச்சு. ஏகாதிபத்தியம், புதிய பொருளாதாரக் கொள்கைகள் என தனி மனிதன் மேலும் மேலும் எதார்த்த வாழ்க்கையிலிருந்து அன்னியமாகிப் போகிறான் எல்லாம் அர்த்தம் இழந்து போகின்றன. இந்தச் சூழலில் மதம் அவனுக்கு ஆறுதலளிக்கிறது. சாதி அவனுக்கு ஒரு அடையாளத்தைத் தருகிறது. ஆனால் இந்த ஆறுதல் பொய்யான ஆறுதல் இன்றைய பாசிச வெளிப்பாட்டில் ரொம்ப ஆபத்தான ஆறுதலும்கூட அதிலும் சாதிய அடையாளம் அதில் உயர்சாதி அடையாளம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. க.நா.சுவின் சீடர் தமிழவன் போல இதனை நல்ல குணாம்சமாகப் பார்க்கமுடியாது க.நா.சு. மௌனி பாணியிலான 'நவீன' இலக்கியம் நசிந்து போனதற்குக் காரணமாகவும் தமிழவன் பெரியாரையும் திராவிட இயக்கத்தையும் சுட்டிக் காட்டுகிறார். இலக்கியச் சூழலில் நவ பார்ப்பனியத்தின் வெளிப்பாடாக வந்திருக்கும் 'இந்தியாடுடே' இலக்கிய மலரில் விசத்தைக் கக்கியிருக்கும் வெங்கட்சாமிநாதனின் எதிரொலிதான் இது. மௌனி, க.நா.சு பாணியிலான இலக்கியச் செயற்பாடுகள் என்பன பார்ப்பனீய மேலாண்மையை இலக்கிய களத்தில் உற்பத்தி செய்தலைதான். இவை அருகிப் போனதற்குப் பெரியாரியம் காரணம் என்றால் நாம் அதை வரவேற்க வேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. சிறு பத்திரிகைகள் பெரும்பாலான விசயங்களில் ஆதிக்கக் கருத்தியலையே பிரதிபலித்தன. சிறு பத்திரிகைகளின் Elitism-மேட்டிமைத்தனம் என்பது இவற்றில் ஆதிக்கம் செலுத்திய உயர் சாதியினரின் வெளிப்பாடுதான். திராவிட இயக்கங்களின் இலக்கியச் செயற்பாடுகள் என்பன ஓரளவு பார்ப்பனிய விலக்க முடையதாகவும், சனநாயகப் படுத்தக் கூடியதாகவும் அமைந்தன மேடைப்பேச்சு, நாடகங்கள். சினிமா, தினத்தந்தி, புதுக்கவிதைகள் வானம்பாடி இயக்கம் எனப் பல வடிவங்களில் வெளிப்பட்டன. சுமார் நாற்பதாண்டுகட்கு முன்பு தமிழகத்தில் பரவலாக வாசிக்கப்பட்ட மு.வ. போன்றோரின் எழுத்துக்களும் கூட திராவிட இயக்கப் பின்னணியின் வெளிப்பாடுதான். அறுபது எழுபதுகளில் கொடிகட்டிப் பறந்த தமிழ்ச் சிறு பத்திரிகைகள் பிற மொழி நடவடிக்கைகள் பற்றி எவைஎவையோ பற்றியெல்லாம் அறிமுகம் செய்தன. ஆனால் அதே சமயத்தில் மராட்டியில் பெரும் இயக்கமாக இருந்த தலித் இலக்கியச் செயற்பாடுகள் பற்றி ஏதும் குறிப்பிட்டதில்லை.

வெறும் பார்ப்பன எதிர்ப்பு இன்றில்லாமல் வெள்ளாள ஆதிக்கம், பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்சம் ஆகியவை பற்றியும் கவனம் குவிக்க வேண்டுமெனத்தொடர்ந்து நிறப்பிரிகை வற்புறுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இந்த பார்ப்பனரல்லாதவர்களின் ஆதிக்க எதிர்ப்பு என்பது பார்ப்பன ஆதரவுக்கான கவசமாக மாறிவிடக் கூடாது. தமிழவன் போன்றோரின் செயற்பாடுகள் அப்படித்தான் அமைகின்றன. இதுவரை தீண்டாமை, தலித் பிரச்சினைகள் பற்றியெல்லாம் கவலைப்படாத பலருக்கு பெரியாரை எதிர்ப்பதற்காக இன்று திடீரென இந்தப் பிரச்சினைகள் மீது அக்கறை வந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இது மிக முக்கியம்.

பெரியாரியக்கம் போன்ற எதிர் கலாச்சார இயக்கங்கள் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டி இருக்கிறது. பரந்த அளவிலான மக்களாதரவு என்பது உடனடி அரசியலதிகாரத்தை நோக்கிய இயக்கங்களுக்குக் கிடைப்பதுபோல எதிர் கலாச்சார இயக்கங்களுக்கும் நுண்களத்தில் அதிகாரத்தை எதிர்க்கும் இயக்கங்களுக்கும் இருக்க முடியாது. மக்கள் கல்வி இயக்கத்தில் கூட எங்களுக்கு இந்த அனுபவம் இருக்கிறது.

www.padippakam.com

**வேல்சாமி:** பெரியாரை மதிப்பிடும்போது நாம் சில விசயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 50 வயதில்தான் (1927) அவர் தீவிர அரசியலுக்கு வருகிறார். அதற்குப் பின் அவர் தீவிரமாக இயங்கிய காலத்தை 1927 முதல் 1947 வரை, 1947 முதல் 1967 வரை, 1967க்குப் பின் அவர் இறக்கும் வரை எனப் பிரித்துக் கொள்ளலாம். முதல் கட்டத்தில் ஏகாதிபத்தியிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகிற நோக்கத்தோடு காங்கிரசும் மற்ற இயக்கங்களும் சமூகப் பிரச்சினைகளை அணுகுகின்றன. அதிலொன்றுதான் ஆலய நுழைவு, தீண்டாமை ஒழிப்பு முதலியன. சொல்கிறவற்றை செயல்படுத்துகிற தலைமையாக காங்கிரசின் பார்ப்பனத் தலைமையில்லை என அதிலிருந்து விலகுகிறார். முதற்கட்டத்தில் பெரியாருக்குப் பின்னால் இருந்தவர்கள் இளைஞர்கள். இரண்டாவது கட்டத்தில் இந்த இளைஞர்களை அண்ணாவென்றெடுத்து விடுகிறார். பெரியார் வேலை செய்த சூழல் ரொம்ப சிக்கலானது. மொழி, சைவம், மதம் பற்றியெல்லாம் அவர் பேசும்போது அவருக்கு பார்ப்பனரல்லாதாரிடமிருந்து நிறைய எதிர்ப்புகள் வருகின்றன. சைவமும் பார்ப்பனீயமும் பெரிய அளவில் வேறுபட்டதல்ல என்பதை அவர் தொட்டுக் காட்டியபோது கடும் எதிர்ப்புகள் வருகின்றன. மூன்றாவது கட்டத்தில் இவருக்குப் பின்னால் வந்தவர்களே - அண்ணா போன்றவர்களே இவரது கருத்துக்களைப் புறக்கணித்துச் செல்லும் சூழல்-ஒன்றே குலம் ஒருவனே தெய்வம், தமிழ் மேன்மை பேசுதல் என்பது போல-இந்த மூன்று கட்டங்களிலும் பெரியார் என்ற ஒரே நபர் மூன்று வெவ்வேறு மக்கள் திரள் மத்தியில் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்த மூன்று கட்டங்களிலும் அவரது மையமான கருத்துக்களில் மாற்றமில்லை. தொடர்ச்சி இருந்தது.

**சூசை மாணிக்கம்:** பெரியாரின் சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ் வெறி எதிர்ப்பு என்பதை ஒரு முக்கிய அரசியல் குறுக்கீடாகப் பார்க்கிறேன். அரசியலதிகாரத்தை நோக்கிய ஒரு மாற்று அணி சேர்க்கை-கிராம்சியின் வார்த்தைகளில் சொல்வதானால் ஒரு மாற்று Historical Block உருவாக்குவதற்கான முயற்சியாக நான் பார்க்கிறேன். மாற்று கருத்தியல் மேலாண்மையை உருவாக்கும் முயற்சிதான். வடநாட்டில் ஜோதிபாபூலே, அம்பேத்கர் தென்னாட்டில் பெரியார், நாராயண குரு போன்றோர் பார்ப்பன எதிர்ப்பை முன் வைத்தனர். மராட்டியத்தில் பார்ப்பன எதிர்ப்பு என்கிற அணி சேர்க்கையின் தலைமையில் தலித்கள் இருந்தாலும் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களிடமே அந்தத் தலைமை இருந்தது. பெண்ணடிமை, பார்ப்பன எதிர்ப்பு என ஏதேனும் ஒரு கூறை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் இணைத்து முழுமையாகப் பார்ப்பதே பிரச்சினையை முழுமையாக விளங்கிக்கொள்ள உதவும். இப்படிப் பிரச்சினையைப் பகுதியாகப் பார்த்தால்தான் சில சமயங்களில் ஆங்கிலேயருடன் உறவு என்கிற நிலையையும் கூட எடுக்க நேர்ந்திருக்கிறது. வெவ்வேறு வர்க்கங்கள், சாதிகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு சரியான வரலாற்று அணியை உருவாக்கி பெரியாரியத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**ராஜன் குறை:** எதிர் கலாச்சாரமாய் பெரியாரின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வது அவசியம். ஆனா இங்கே எதிர் கலாச்சாரம் என்றாலே ஒரு அச்சம், பீதி, எதிர்ப்பு 'என்னடா எதிர்கலாச்சாரம் பேசுறே?' கலாச்சாரமும் அதிகாரமும் பிரிக்க முடியாத ஒன்று. அதிகாரத்தை நிலை நிறுத்துவது, தன்னிலைகளைக் கட்டமைப்பதுஎன்பதில் கலாச்சாரத்தின் பங்கு மிக முக்கியம். இன்று பெண்ணிலைவாதிகளெல்லாம் 'Personal is Political' என்கிறார்கள். என்மீது தாக்கப்படும் அதிகாரம்தான் அரசியல் இத்தகைய சிந்தனைகளையும் வர்க்க அரசியல் பற்றிய நமது புரிதல்களையும் இணைத்து Comprehensive ஆக இன்று ஒரு புரிதலை உருவாக்க வேண்டிய நிர்பந்தம் நமக்கு இன்று இருக்கிறது. அந்த வகையில்தான் பெரியாரின் எதிர் கலாச்சாரச் செயல்பாடுகளின் முக்கியத்துவம். உலகில் வேறெங்கும் எதிர் கலாச்சாரம் பேசுவதைக் காட்டிலும் இந்தியாவில் பேசுவது கஷ்டம். ஏன்னா இங்கே கலாச்சாரம்கிறது சாதீய கலாச்சாரம். உள்ளே வாய்யான்னு சொன்னாலும் இல்லை வரமாட்டேன் சாமி என மறுக்கிற தாழ்த்தப்பட்ட தன்னிலைகளை உருவாக்குகிற கலாச்சாரம். இதையெல்லாம் எந்தப் பொருளாதார வாதத்தை வச்சுப் புரிந்து கொள்வது? கலாச்சாரத்தோட இருக்கிற அரசியலைப் புரிந்து கொண்டால்தான் இதைப் புரிந்து கொள்வதும் எதிர் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும் இயலும். கலாச்சாரத்தின் அரசியலில் சாதி, அதைவிட முக்கியமா ஆனாதிக்கம் இரண்டையும் பேசியாகனும். இதையெல்லாம் நாம் பேசுகிறோம்னா ஒரு Intellectual Concern லே பேசுகிறோம், நீ என்ன ஆண், பெண்ணியம் பேசுவது, நீ என்ன உயர்சாதி தலித் பற்றிப் பேசுவது? என்றெல்லாம் கேட்கிறாங்க. இந்த உலகத்தில் மனிதனாய்ப் பிறந்த கவலையின் விளைவுதான் இதையெல்லாம் பேசுறது. அந்த வகையில் எதிர் கலாச்சாரச் செயல்பாடாகப் பெரியாரை விவாதிக்க வேண்டியதுதான் நம்ம கடமை. ஆனா Macro Politics லே தேசியப் பிரச்சினையிலே இப்படிப் பண்ணினார், சமதர்ம விசயத்திலே பின்னாடி



படிப்பகம்

www.padippakam.com

போனார் என்றெல்லாம் பேசப்பட்டு விட்டதால் அதைப் பற்றியும் கொஞ்சம் பேசிட்டு இந்த எதிர்கலாச்சார விசயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கனும். எதிர்கலாச்சாரம் பற்றி ரொம்ப Comprehensive ஆன, மிக அழகான ஒரு வரையறையை அவர் (நிற. 6. பக்:34) கொடுத்திருக்கிறார். எதிர் கலாச்சாரம் பேசுகிறவர்கள் ஒழுங்குமுறையாகSystamatic ஆக பேசிக்கொண்டிருக்க முடியாது. கிராமியன் சுட்டிக் காட்டியமாதிரி உண்டுங்கிற இடத்தில் இல்லையென்றும் இல்லைங்கிற இடத்தில் உண்டுன்னும் பேசித்தான் ஆகனும். பெரியார் தினசரி தலையங்கம் எழுதியவர், கூட்டங்களில் பேசியவர். எல்லாத்தையும் படிக்கணும், ஒரு கூட்டுச் செயல்பாடாகப் படிக்கனும். இன்று ஆணாதிக்கத்தை எதிர்க்காமல் Patrinual Familyயை (தந்தை வழிக்குடும்பத்தை) எதிர்க் காமல் எந்த அரசியலையும் பேச முடியாது. அப்படீன்னா என்ன மாற்று வச்சிருக்கிறே இப்படியெல்லாம் கேள்விகள் கேட்பதில் பயன் இல்லை. வரலாறு பூரா பாருங்க. அதிகாரம் செயல்பட்ட அம்சங்களையெல்லாம் (Units) பாருங்க. அப்புறம் ஏன் தந்தை வழிக் குடும்பத் தைப் பற்றிப் பேசுறோம்னு புரியும். ஆணாதிக் கத்தை எதிர்க்கிறோம்னு புரியும். கருத்தடை பண்ணிக்கனும்னு நிபந்தனை விதித்தாரா என்றெல்லாம் விசயத்தை எளிமைப்படுத்தி விட முடியாது. ஜெயில்லே இருக்கும்போது வகுப்பு வாரி ஒதுக்கீட்டை ஒத்துக்கொண்டால் காங்கிரசில் சேர்ந்து விடுகிறதென்று நிபந்தனை விதிக்கிறார். எதையாவது செய்து ஒரு காரியத் தை நிறைவேற்றுவது, மற்ற சமயங்களில் பிரச்சாரம் செய்வது என்றெல்லாம் தொடர்ந்து அவரது செயல்பாடுகள் பல தரப்பட்டதாய், குழப்பமானதாய் இருந்தது. இதையெல்லாம் முழுமையாய்ப் புரிந்து கொள்ளாததால்தான் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி பெரியாரைப் புரிஞ்சிருக்கோம். ராமர் சிலையை செருப்பால் அடிச்சதெல்லகம் Demolition of Symbols. எவ்வளவு பெரிய எதிர் கலாச்சார நடவடிக்கை! எதிர் கலாச்சாரம் பேசாமல் எந்த அரசியல் விடுதலையையும் நாம் சாதிக்க முடியாது. மார்க்சியத்தில் என்ன பிரச்சினைங்கிறதை எல்லாம் நாம இன்னைக்கி வெளிப்படையாய் பேசியாகணும். இன்னைக்குள்ள சூழலைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஒவ்வொரு பிரச்சினையிலும் அடியாழத்துக்குத் தான் போகனும். அப்பத்தான் அதிகாரத்தின் வேர்களைத் தொடமுடியும். எதிர்த்து நிற்கிற ஆற்றலைப் பெற முடியும்.

**அருண்சிவா:** நிறப்பிரிகையில் தொடர்ந்து பல கூட்டு விவாதங்கள் நடைபெற்றுள்ளன. கூட்டாகப் பல முடிவுகள் வந்தடையப்பட்டு உள்ளன. எல்லாத்தையும் அப்படி அப்படியே விட்டுட்டு அடுத்தடுத்து போய்ட்டு இருக்காம ஒட்டு மொத்தமாய்த் தொகுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக சாதியம், பெண்ணி யம் கூட்டு விவாதங்களில் வந்தடைந்த முடிவு களை விட்டுவிட்டுப் பெரியார் பற்றி பேச முடியாது. பெண்ணியம் விவாதத்தில் ஆண் பெண் சேர்க்கைக்கு எதிராக ஓரினச் சேர்க்கை பற்றிப் பேசியுள்ளேன். குழந்தை உற்பத்திப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று சொன்னேன். பலரும் அதனைக் கண்டித் தார்கள். அப்போது நான் பெரியாரைப் படிக்கலை. கருத்தடைங்கிற கட்டுரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ''கருத்தடை செய்து கொள்வதால்தான் பெண்ணுக்கு விடு தலை. இதனால் ஜீவனோற்பத்தி கெட்டு விடுமே என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். இதுவரை ஜீவனோற்பத்தி பண்ணி என்ன சாதித்து விட்டோம்?'' என்கிறார். அப்புறம் குறியீடுகளை அழித்தல் Cultural disturbances - நிலவுகிற கலாச்சாரத்தில் கலகம் விளை வித்தல் என்பது போன்ற எதிர் கலாச்சார அம் சங்களைப் பெரியாரியத்தில் நாம் எடுத்து வளர்த்துச் செல்ல வேண்டும். 'கல்யாணம்'கிற ஒப்பந்தத்தை அவர் மதிக்காதது தெரிகிறது. எல்லாரும் எல்லாருடனும் Free ஆக இருந்துக் கலாம் என்பது போல அவர் சொன்னாலும் Body, Sexality (உடல், பால்மை) பற்றி யெல்லாம் அவருக்கு ஆழமாகத் தெரிந்திருந் ததாகத் தெரியலே. ஆனால் அவர் சென்ற வரைக்கும் கூட நாம் விவாதத்தை நடத்த வில்லை. நடத்தியிருந்தால் இன்றைக்கு அடுத்த கட்டம் போயிருக்கலாம். Gay Culture பற்றி விவாதித்திருக்கலாம். நேற்றைய கரு வறை நுழைவுப் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். கோயில், கருவறை,பிரம்மணன் இந்த சமுகத்தில் ஒரு அர்த்தம் இருக்கிறது. இப்ப நாம என்ன போராடுகிறோம். எனக்கும் அதற்குள் ஒரு இடம், எனக்கும் அந்த அர்த்தம் கிடைக்க வேண்டும் என்று போராடுறோம். இது ஒருவிதம். இன்னொன்று அந்த அர்த்தத் தையே மொத்தமாய் சிதைப்பது. கோயிலுக்குப் போவது புண்ணியம் என்கிற அர்த்தத்தையே Frame work-ஐயே சிதைத்துக் கோயிலுக்குப் போவது பாவம் என நிறுவிவிட்டால் பிறகு பிராமணனது இடத்தைப் பற்றியே நமக்குக் கவலையில்லை. கடைசியாக, எப்படி போலீஸ் என்பது ஒரு அரசியல் நிறுவனமோ அதேபோல Hetro sexuality யும் ஒரு அரசியல் நிறுவனம் தான் என்பது இன்று நிருபணமாகி விட்டது. ஒரு திருடனைப் போலீஸ் கையாள்வதைப் போல ஒரு ஒரினப் புணர்ச்சியாளனையும் நடத்த முடியும். எனவே இதை ஒரு அரசியல் நிறுவ னமாய் ஏற்றுக் கொண்டால்தான் மாற்று பற்றிப் பேசமுடியும். ஆண்மை அழிந்தால்தான் பெண்மைக்கு விடுதலை என்கிறார் பெரியார்.



படிப்பகம்

www.padippakam.com

பெரியாரிடம் செயல்படும் இந்த ஆண்மை× பெண்மை போன்ற முரண் எதிர்வுகளைப் பற்றி யெல்லாம் நாம் பேசியாகணும். ஸ்ட்ரக்சுரலிசம் பேசுகிற யாரும் இதை எல்லாம் பேசிய தில்லை.

நான் முதலில் ஒரு ஆண். அப்புறம்தான் மற்ற எல்லாம். அதிலிருந்துதான் எல்லா அதிகாரமும் பிறக்கிறது. எனவே என்னை ஆணாக/பெண்ணாக உணராமலிருக்கச் செய்வது எப்படி என்பதிலிருந்துதான் விடுதலைக்கான எல்லாச் செயற்பாடுகளும் தொடங்குகிறது. இதற்குப் பெரியார் எந்த அளவுக்கு உதவுவார் என்பது தான் இன்றைய கேள்வி.

**ரவிக்குமார்:** கருவறை நுழைவுப் போராட்டம் என்பது வரையறையில் இடம் கேட்கிற மாதிரி இருக்கா, இல்லை வரையறையை உடைக்கிற மாதிரி இருக்கா? கருவறைக்குள் பிராம்மணன் மட்டும் இருக்கும் வரைக்கும்தான் வரையறை வேலை செய்கிறது. ஒரு பறையனோ இல்லை வேறு சாதியானோ நுழையும்போது அந்த வரையறையே உடைந்து விடுகிறது. எனவே பெரியார் பாணியிலான நுழைவுப் போராட்டங்கள் என்பன Frame Work ஐ உடைக்கிற போராட்டங்கள்தான்.

**கிராமியன்:** ஒரு பார்ப்பனரல்லாதவர் உள்ளே போகிறது என்கிற வரை அது வரையறையில் இடம் கேட்கிற வேலைதான். பெண்களும் உள்ளே போகணும்கிற போதுதான் அது வரையறையை உடைப்பதாக அமையும்.

**ரவிக்குமார்:** தலித்துக்கு இந்து மதத்திலேயே இடம் இல்லைங்கிற போது தலித்கள் நுழைவது என்பதே உடைப்பதுதான். பெண்கள் நுழைந்தால்போதும் என்றுல்-மருவத்தூரில் பெண்களே பூசை செய்கிறார்கள். அதை எப்படிப் பார்ப்பது?

**கிராமியன்:** சங்கராச்சாரியும் மருவத்தூராரும் சந்தித்துப் பேசியதால் இதுவும் ஒரு விசயம் என்று சொல்லப்படுகிறது.

**ரவிக்குமார்:** அதை இப்படிப் பார்க்கலாம். தலித்கள், பெண்கள் இருவரும்கூட Frame Workல் உள் வாங்கப் படலாம். நிலவுகிற Frame Work அழிக்கப்படுகிறதா என்பதுதான் அழிக்கப்படுகிறது. ஆனால் அவன் புதிய Frame Workஐ உருவாக்குவான். நாம் அதை மீண்டும் அழிக்க வேண்டும். இப்படித்தான். அதுனாலே நுழைவுப் போராட்டங்களை வெறும்னே இடம் கேட்பதாக சுருக்கிப் பார்க்க வேண்டியதில்லை.

**ராஜன்:** ம.க.இ.க. ஏற்கனவே தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்த போது மேற்கொண்டதைக் காட்டிலும் கடுமையான அடக்கு முறைகளை மேற்கொண்டு முளையிலேயே கிள்ளிவிட அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த நுழைவுப் போராட்டங்களை Frame Workல் இடம் கேட்கும் முயற்சியாக அரசு கருதவில்லை என்பது விளங்கும்.

**பொதியவெற்பன்:** கருவறை நுழைவுப் போராட்டத்தைப் பெரியார் ஒரு இன இழிவு எதிர்ப்புப் போராட்டமாகப் பார்த்தார். 'பறையன் உள்ளே போனால் பார்ப்பான் வெளியே வந்துடுவான்'னு சொன்னார்.

**கல்யாணி:** கருத்துப் பிரச்சாரத்திற்கு முதன்மை கொடுத்துச் செயற்பட்டதுங்கிறது பெரியாரிடத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விசயம். குறிப்பாக இட ஒதுக்கீடு, பார்ப்பன எதிர்ப்பு போன்ற விசயங்களில் பார்ப்பன சங்கம்கூட தமிழ்நாட்டுலே இட ஒதுக்கீட்டைஎதிர்த்து வெளிப்படையா ஒரு தீர்மானம் இயற்ற முடியலியே. அதேபோல மூடநம்பிக்கை எதிர்ப்பு. அவர் பிரச்சாரத்தால எல்லாரும் பகுத்தறிவாளரா மாறாம இருந்திருக்கலாம். ஆனா ஒரு இந்துமத வெறியனாகவோ முஸ்லிம் மத வெறியனாகவோ மாறாமல் தடுத்தது என்பது அவரது பிரச்சாரத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றிதான். தலித் விசயத்துலே அவர் மேல பல விமர்சனங்கள் வைக்கப்பட்டது. அதை அப்படிப் பார்க்க வேண்டியதில்லைன்னு நினைக்கிறேன். அவர் தலித்தா இல்லைங்கிற விசயத்தை அங்கீகரித்து நாம் இதைப் பார்க்கணும். தீண்டாமையை மற்றவர்கள் பேசினாலும் ஒரு தலித் உணர்வது போல உணரமுடியாது. எனவே அவர்கள் அந்தப் பிரச்சனையை எடுக்கும்போது மற்றவர்கள் ஆதரவாக வர வேண்டும். பெரியாரும்கூட நிச்சயமாய் அப்படி ஆதரவாக இருந்திருப்பார். இன்றுங்கூட தீண்டாமைப் பிரச்சினையை எடுக்கும்போது பெரியார் இயக்கத்தவர்கள் ஆதரவாக வருவது தான் அனுபவபூர்வமான உண்மை தவிர்க்க வேண்டிய விசயம்னு வரும்போது ... சனநாயக மறுப்பு என்பது அவரிடம் தொடர்ந்து இருந்து வந்தது. கட்சி உடைவதற்கு அதுவும் ஒரு காரணம். அப்புறம் அரசியல்னாலே மோசம், சாக்கடை அப்படீன்னு சொன்னதை நாம அங்கீகரிக்க முடியாது. நாம ஒரு மாற்றை வச்சாகணும். நான் கேட்ட ஒரு கூட்டத்திலேகூட முனிசிபாலிடியை யெல்லாம் அரசு நிர்வாகமாக மாற்றணும்; தேர்தல் அரசியல்னு வந்தால் உருப்படாதுன்னார். இது எங்கே கொண்டு போய் விடுதுன்னா, யார் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வந்துட்டுப் போகட்டும், நாம ஆதரிச்சு எதையாவது சாதிக்க முடியுமான்னு



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்போம் என்கிற நிலைபாடை மேற்கொள்ள வைத்து ஒட்டு மொத்தமாக அரசு எதிர்ப்பு என்பதை மழுங்கடித்து விடுகிறது. மாற்றுக் கலாச்சாரம் எல்லாமே அரசு எதிர்ப்புன்னு பார்த்திட முடியுமா? திராவிட இயக்கங்களெல்லாமே தேசிய இனப் பிரச்சினை போன்ற விசயங்களில் அரசை எதிர்க்க வேண்டிய நேரங்களிலெல்லாம் சமரசமாகிப் போனதற்கு இது எவ்வளவு காரணமாகியிருந்திருக்கிறது? சமீபத்தில்கூட ஜெயலலிதா கிட்ட அஞ்சு லட்சம் வாங்கியபோது இது ஈரோட்டுப் பாரம்பரியம் தான்னு வீரமணியால நியாயம் கற்பிக்க முடிந்ததை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால் தான் தடாவை எதிர்த்து நாங்கள் முன்னுக்கு வரல்லே. முதநாள் வரை பாப்பாத்தி, அது இதென்னல்லாம் சொல்லிட்டு ஆட்சிக்கு வந்ததும் ஆதரிப்பது என்பதைக் கட்சி அணிகளும் அங்கீகரித்து விடுவதையும் நாம் பார்க்கிறோம். கேசவன் இந்த விசயத்தைக்கொண்டு வந்திருக்கிறார்.

**ஞானி:** அரசு, முதலாளியம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை கட்சி மூலம் எதிர்க்கும் Marco Politics-பேருரு அரசியல் தோற்றுப் போய் விட்டது என்பது போல அ. மார்க்ஸ் முதலோர் பேசுகிறார்கள். ஆனால் இதை ஒதுக்கிவிட முடியாது பெரியார் அம்பேத்கரில் தொடங்கி பல நுண் அரசியல் செயல்பாடுகள் பற்றி இவர்கள் பேசுவார்கள். சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பெண் விடுதலை, சுற்றுச்சூழல் மாற்றுக்கலாச்சாரம் என்பவை அவற்றில் சில. இவை தன்னளவில் முழுமையாக இருக்கலாம். அல்லது ஒன்றிரண்டு இணைந்து கொள்ளலாம். இவற்றைத் தனி முதல் அரசியலாக நடத்துவது என்பது எனக்குப் பிடிபடவில்லை. என்ன நான் ஒரு மரபுவழி மார்க்சியன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சிலர் என்னை மார்க்சியத்தை மதவாதத்துடன் குழப்புகிறேன் என பழி சொல்கிறார்கள். எனக்கு எழும் கேள்வி ஒன்று இந்தப் பேருரு அரசியலுக்கும் நுண் அரசியலுக்கும் தொடர்பே இல்லையா? சாதி, மதம், பார்ப்பனியம் இவை எல்லாம் இன்றைய முதலாளியச் சூழலில் வைத்துப் புரிந்துகொள்ள வேண்டியவைகளாக மாறி இருக்கின்றன. இதே போல நுண் அரசியல் எதையும் பேருரு அரசியலிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. பேருரு அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நுண் அரசியலை நடத்த முடியுமா? மார்க்சியத்திற்கு மரியாதை குறைந்த சூழலில் அதற்குள் போகாமல் நுண் அரசியல் பேசலாம் என நினைக்கிறார்களா? பெரியாரை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சாதி/மத/பார்ப்பன எதிர்ப்பாக அதைச் சுருக்கிவிட வேண்டாம். இவையெல்லாம் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களாக ஒரே வடிவத்தில் இல்லை; இன்று பெரிதும் மாற்ற மடைந்துள்ளன. இவற்றை நமது காலத்தில் வைத்துச் செயற்படுத்த வேண்டுமானால் இவற்றை முதலாளியம், ஏகாதிபத்தியம், அரசு எதிர்ப்பு ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்த வேண்டும். சமதர்மம் என்பதை மையப்படுத்தி அவரது கோட்பாடுகளையெல்லாம் அதை நோக்கிக் குவிக்க வேண்டும். மாற்றுக் கலாச்சாரத்தையெல்லாம்முழுமையாக எதிர்க்க வேண்டாம். அதனையும் இதற்குள் கொண்டு வந்துவிடலாம். பழைய மார்க்சிய வாதிக்கு நுண் அரசியலைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கலாம். இன்றைய மார்க்சிய வாதிக்குப் பெண்ணியத்தைப் புரிந்து கொள்வது கஷ்டமில்லை. மார்க்சியப் பார்வை ரொம்ப வளமானது. பெரியாரையும் அம்பேத்காரையும் எதிர்நிலையாகப் பார்க்க வேண்டியதில்லை. இப்படிக்கூட பார்க்கிறேன். இந்தப் பெண்ணியம் மாதிரி நுண் அரசியலைக் கொஞ்ச காலத்திற்குத் தனி முதல் அரசியலாக நடத்துவதுகூட தேவைதான். பேருரு அரசியலுடன் எப்படி இணைப்பது என்பது தெளிவாகவில்லையானல் தனியாக நடத்துவதில் தவறில்லை.

**அ. மார்க்ஸ்:** நுண் அரசியலை தனிமுதல் இயக்கமாக நடத்துவது குறித்த ஞானி அவர்களின் எச்சரிக்கையோடு நான் முழுமையாக உடன்படுகின்றேன். ஏனெனில் இன்று அப்படிச் சில போக்குகள் உள்ளன. சுற்றுச் சூழல் பற்றி பேசுவார்கள். அம்பேத்கர் நூற்றாண்டு பற்றியும் சாதிக் கொடுமைகள் பற்றியும் கண்டு கொள்ள மாட்டார்கள். சுற்றுச்சூழல்—ஏகாதிபத்திய எதிர்ப்பு—அறிவியல் எதிர்ப்பு—காலனிய ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொற்காலம்—இந்துத்துவ மேன்மை என்பதாக ஒரு போக்கு இருக்கிறது தரம்பால், அஷிஷ்நந்தி ஜி,எஸ்.ஆர், கிருஷ்ணன் போன்றோர் இதற்கு உதாரணங்கள். சமீபத்தில் பாரதீய ஜனதாவின் கோவிந்தாச்சார்யா எழுதிய கட்டுரை ஒன்றில் தரம்பாலையும் நந்தியையும் ஆதாரம் காட்டி எழுதியுள்ளதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். பதினெட்டாம் நூற்றாண்டில் நூறு வகை அரிசி இருந்ததென்பார்கள். ஆனால் 90 சதம் மக்கள் கூழைத்தானே குடித்தார்கள் என்று கேட்டால் பதில் வராது.

அதே சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு,சுற்றுச் சூழல், சாதி எதிர்ப்பு போன்றவற்றை இணைப்பதில் கெயில் ஓம்வேத் போன்றோரை உதாரணமாகச் சொல்லலாம். ஞானி இவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். நிறப்பிரிகை நுண் அரசியலை மட்டும் பேசுவதாக ஞானி சொன்னார். தீவிரமான பேருரு அரசியலில் நேரடியாக ஈடுபடுபவர்கள் என தினமலர் எங்களைக் குற்றம் சாட்டுகிறது. சோசலிசக் கட்டுமானம், ஏகாதிபத்தியம்



படிப்பகம்

www.padippakam.com

போன்றவை குறித்து தொடர்ச்சியான அக்கறை காட்டி வருவது நிறப்பிரிகை. வளைகுடாப் போரில் ஏகாதிபத்தியத்தின் செயல்பாடு குறித்து மிக விரிவான கட்டுரை எழுதியுள்ளோம். தகவல் தொடர்பை மையமாய் வைத்து ஏகாதிபத்தியம் பற்றி எழுதியுள்ளோம். உலகப் பொருளாதார அமைப்பின் பின்னணியில் புதிய பொருளாதார கொள்கை பற்றி விரிவான கட்டுரை ஒன்று அடுத்த இதழில் வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பின்னணியில் பெரியாரைப் பார்ப்பது என்கிற வகையில் பெரியாரின் மொழி கொள்கை பற்றிய நிறப்பிரிகை-6ல் வெளிவந்துள்ள கட்டுரையையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். மார்க்சியம் காலாவதியாகிவிட்டதாகவும் நிறப்பிரிகை கருதவில்லை. இது குறித்த விரிவான ஆய்வுகளை தமிழ்ச் சூழலில் நடத்தியவர்களும் நிறப்பிரிகை சார்ந்த தோழர்கள்தான். 'மார்க்சியம் தோற்கவில்லை' என வாதிட்டவர்களும் நாங்கள்தான். அறியப்பட்ட மார்க்சியத்திற்குக் கிடைத்த அடிகளின் வெளிச்சத்தில் ஆழமாக ஆராயும் போதுதான் ஆளும் வர்க்கம் என்கிற உள்ளடக்கத்தை மட்டும்மாற்றி சிவில் சமூகத்தின் பல்வேறு வடிவங்களையும் அப்படியே வைத்திருந்ததன் விளைவுதான் இன்றைய தோல்விகள் என்கிற முடிவுக்கு வந்தோம். அந்த வகையில்தான் ஏகாதிபத்திய/முதலாளிய/அரசதிகார எதிர்ப்பு என்பதை வாயளவில் உச்சரித்துக் கொண்டு சிவில் சமூகத்தையும் மரபுக் கருத்தியலையும் வலுவூட்டும் வேலையைச் செய்வது அபத்தம் என்கிற அடிப்படையில் இதுவரை புறக்கணிக்கப்பட்ட நுண் களங்களில் அதிகார எதிர்ப்பு, சிவில் சமூக நிறுவனங்களின் மீது தாக்குதல் ஆகியவற்றின்பால் கவனம் ஈர்க்கிறோம். பேருரு அரசியல் முக்கியம் என்று சொல்லிக்கொள்ளும் யாருடைய செயல்பாட்டைக் காட்டிலும் பேருருக் களத்தில் எங்களின் செயல்பாடுகள் குறைந்தவையல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். மாறாக பேருரு அரசியல், ஏகாதிபத்திய எதிர்ப்புஎன்கிற போர்வையில் மதத்துக்கு, குறிப்பாக இந்து மதத்துக்கு வக்காலத்து வாங்கக்கூடாது என்கிற எச்சரிக்கை நமக்குத் தேவை. கிழக்கு அய்ரோப்பாவில் பல மாற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. சீசெங்கு போன்ற கொடுங்கோலர்கள் தூக்கி எறியப்பட்டுள்ளனர். இந்த எதிர்ப்பு இயக்கங்கள் பற்றிய விரிவான ஆய்வு நம் யாரிடமும் இல்லை. நானறிந்தவரை இவற்றில் பல 'சோசலிச' ஆட்சியின் கீழ் நுண் அரசியல் இயக்கங்களாக இருந்தவைதான். குறிப்பாக பசுமை இயக்கங்கள் போன்றவைகளாக எல்லா அம்சங்களிலும் இவை சரியானவை என நான் செல்லவில்லை. ஆனால் நுண் களங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த இந்த எதிர்ப்புகள் வாய்ப்பு வரும்போது வெடித்து அரசுகளைத் தூக்கி எறிந்துள்ளன. ருமேனியாவில் சீசெங்கு வீழ்ந்த பிறகு ஆட்சியதிகாரத்தை வைத்துக் கொள்வோமா, வேண்டாமா என்கிற பெரிய விவாதமே கவிழ்ப்பை நடத்தியவர்கள் மத்தியில் நிகழ்ந்தது நினைவிருக்கலாம். இவை குறித்தெல்லாம் விரிவான ஆய்வுகள் நமக்குத்தேவை சுருக்கமாய்ச் சொல்வதானால் நாங்கள் கூறுவதெல்லாம் இதுதான். தனி முதலான நுண் அரசியல் இயக்கங்களை நடத்துவது எங்கள் நோக்கமல்ல. அதே சமயத்தில் சிவில் சமூக நிறுவனங்கள், மரபுக் கருத்தியல் ஆகியவற்றோடு சமரசம் செய்துகொண்டு பேருரு அரசியல் பேச முடியாது.

**கோ. கேசவன்:** இங்கே பேசப்பட்ட கருத்துக்களில் தோழர் ஞானி பேசியவற்றில் எனக்குப் பேரளவு உடன்பாடு உண்டு. 'புத்திசம்', 'ஜெய்னிசம்' என்பது போல இந்தப் 'பெரியாரிசம்' என்கிற தொடரே நமக்குள் இருக்கிற சமயவழிப்பட்ட கலாச்சாரத்தின் ஒரு தாக்கம்தான். பெரியார் பற்றிய மதிப்பீடுகளை கம்யூனிஸ்ட் கட்சிகளில் செய்திருக்கிறார்கள். பெரியாரியப் பாரம்பரியத்திலேயே ஆனைமுத்து குணா போன்றவர்கள் செய்துள்ளனர். தமிழ் நாட்டில் பெரியாருக்கு உள்ள அளவிற்கு வேறு எந்தத் தலைவருக்கும் இவ்வளவு சிறந்த Documentation-ஆவணப் பதிவுகள் கிடையாது. இருந்தாலும் பெரியாருடைய தேர்ந்து எடுக்கப்பட்ட படைப்புக்கள்தான் தொகுக்கப் பட்டுள்ளனவே ஒழிய மார்க்ஸ்-ஏங்கல்ஸ்-லெனின் ஆகியோருக்கு உள்ளது போல Collected Works கலை வரிசைப்படி தொகுத்தால் இன்றைய நமது பெரியார் பற்றிய நமது மதிப்பீடுகளைக் கூட மாற்றிக்கொள்ள வசதியா இருக்கும். 1973ல் குணாவின் கட்டுரை வந்தது சிறந்த வழிகாட்டல் கட்டுரை இன்றும் அதற்கு மறுப்பு வந்ததில்லை. மறுப்பு வரவேண்டும். சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் பெரியார் பற்றிய மறு மதிப்பீட்டை அரசியல் ரீதியில் தேவையாக்கியிருக்கிறது. பெரியார் பற்றிய மதிப்பீட்டில் இரண்டு போக்குகள் உள்ளன. அ.மார்க்ஸ் சொன்னது போல பெரியாரியத்தில் இடைவெளிகள் உள்ளன. இப்படிச் சொல்லிக் கொண்டே முழு முற்றாக அங்கீகரிக்கும் போக்கும் உள்ளது. குணாவிடம் கூட இந்தப் போக்கை நாம் காணமுடியும். கருணா மனோகரன் கூட தனிப்பட்ட பேச்சில் பல விமர்சனங்களை வைத்தாலும் முற்றாக அங்கீகரிக்கும் போக்கே அவரிடமும் உள்ளது. மற்றொரு போக்கு இடைவெளிகளை விவாதத்திற்கு முன் வைப்பது. சாதக அம்சங்களைத் தொகுத்துக் கொள்வது.

**அ.மா: உங்கள் கட்டுரையில் பெரியாரை 'எதிர்மறை ஆசான்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் சாதக அம்சமே இல்லை**



படிப்பகம்

என்பதாகப் பொருள்படுகிறது. கொஞ்சம் விளக்கினால் உதவியாயிருக்கும்.

**கேசவன்:** சொல்கிறேன். ஞானி குறிப்பிட்டது போல பெரியாரிடம் தொடர்ந்து ஒரு அரசாதரவுப் போக்கு இருக்கிறது. அவரது அரசியல் வாழ்க்கையில் 1937-'39, 1952-'54 கால கட்டங்களிலிருந்த ராசாசி அரசுகளைத் தவிர மற்ற எல்லா தமிழக அரசுகளையும் அவர் ஆதரித்துள்ளார். போராட்டங்கள் நடத்தியிருந்தாலும் கூட அவை அய்க்கியத்தை நோக்கிய போராட்டங்களாகவும் அரசின் மீது நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய போராட்டங்களாகவுமே இருந்துள்ளன. அடுத்து பெரியாரிடம் தொடர்ச்சியாக ஏகாதிபத்திய ஆதரவு இருந்து வந்திருக்கிறது. இதில் பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. யூரிலோவ் என்கிற ரசியர் எழுதியுள்ள 'இந்தியாவில் தாழ்த்தப்பட்ட சாதிகள்' என்ற நூலில் அம்பேத்கரின் ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றிய குறிப்பு உள்ளது. பெரியாரைப் பொறுத்த மட்டில் அப்படி இல்லை பெரியார் பற்றிய 'Myth' தேவையில்லை. வரலாற்றுக்கு நேர்மையாக நாம் இருப்போம். பெரியாரிடம் நான் கற்றுக்கொள்ள எதுவுமில்லை மாறாக எதிர்க்கப்பட வேண்டியவராகவே உள்ளார். அதனால்தான் எதிர்மறை ஆசான் என்றேன். கம்யூனிசம் வேண்டுமென்றெல்லாம் அவர் சொல்லியிருந்தாலும் கூட அவரது சிந்தனைகள், செயல்கள் எல்லாவற்றையும் வரம்புக்குட்படுத்தியது எது என்று பார்த்தால் அது இந்த முதலாளியச் சிந்தனைதான். இது தான் என்னைப் பொறுத்தமட்டில் பெரியாரியத்தின் மையம். பல தளங்கள் இருந்தாலும் மையம் இதுதான். இந்த மையத்தை நான் எதிர்த்தாக வேண்டும். அதுதான் சரியான விமர்சனப் பார்வை, எஸ். வி. ராசதுரையும் வ. கீதாவும் கூட பெரியாரியத்தைக் கடக்க வேண்டும் என்கிறார்கள். அது சரிதான் ஆனல் அவர்களும்கூட எழுதும்போது. பெரியாரின் சாதகமான அம்சங்களை மட்டுமே முன் வைக்கிறார்கள். எந்த அம்சத்தில் ஊன்றி நின்று கொண்டு எந்த அம்சத்தைக் கடக்க வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும். என்னைப் போன்றவர்களைவிட நல்ல நூலக, நேர வசதியெல்லாம் உடையவர்கள் அவர்கள். அரசாங்கத்திடம் 5லட்சம் வாங்கியதை கோட்பாட்டு ரீதியில் நியாயப்படுத்த முடிகிறது பெரியாரியத்தில். இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால்தான் அவரை எதிர்மறை ஆசான் என்கிறேன். சிரீரங்கம் கருவறைப் போராட்டம் பற்றிச் சொன்னார்கள். அது Frame Workக்கு வரைவுச் சட்டகத்திற்கு உட்பட்ட போராட்டம் தான் அதை மீறிய போராட்டம் தேவை. அப்படிச் செய்தால் தான் சட்டகத்தை உடைக்க முடியும். சட்ட மீறல் செய்ய முயன்றார்கள். கைதானார்கள். தாண்டிக் குதித்தும் சிலர் உள்ளே நுழைய முயன்றார்கள். சட்ட மீறல் தேவை. ஒரு நீண்ட கால நோக்கில் மற்றவர்களையும் கோயிலுக்குள் அனுமதிக்கவும் அர்ச்சகராக்கவும் பார்ப்பனியம் தயாராக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழையலாம் என்பது சட்டமானது கூட ஒரு பார்ப்பனர் முதலமைச்சராகஇருந்தபோதுதான். நாம் சொல்வதை போல பார்ப்பனர்கள் எதிரிகள் என்றிருந்தால் சட்டமாகியிருக்காது. பார்ப்பனர்கள் ஒருவிதான நெகிழ்ச்சித் தன்மையோடு தங்களது ஆதிக்கத்தைக் கட்டமைத்துக் கொள்கிறார்கள். வேதாகமக் கல்லூரியில் இட ஒதுக்கீடும் பின்னர் அவர்களுக்கு வேலையும் தருவேன் என்கிறார் ஜெயலலிதா. திருப்பராய்துறை ராமகிருஷ்ண மடத்தில் ஆண்டுக்கு நான்கு முறை வேதாகம வழிபாட்டு முறை பயிற்சி பா ஜ.க, ஆர்.எஸ்.எஸ். சார்பில் நடைபெறுகிறது. எல்லா சாதிகளுக்கும் அங்கே வேதாகம பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஜெயலலிதா அதை நிறுவனப்படுத்துகிறார். 1938ல் கோயிலைத் திறந்துவிட்ட மாதிரி ஒரு 1998ல் கருவறையையும் கூடத் திறந்துவிடலாம். பார்ப்பனியத்தின் பொருளியல் வேர்களை நாம் கண்டறிய வேண்டும். அன்று அது நிலவுடைமையிலிருந்தது. இன்று முதலாளியத்தில் இருக்கிறது. இன்று தமிழ்நாட்டின் பொருளியல் நிலையை எடுத்துக்கொண்டால் மேலே இருப்பது இரண்டே இரண்டு சாதிகள்தான் ஒன்று பார்ப்பனர், அடுத்தது செட்டியார். பார்ப்பனியத்தின் வேர்கள் அரசதிகாரத்திலும், முதலாளியத்திலும் உள்ளன. இதனை உடைக்க சட்டகத்தை மீறிய போராட்டங்கள் வேண்டும். பெரியார் தொடர்ந்து பிரச்சாரம், கிளர்ச்சி மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். பிரச்சினையைக் கடைசிவரை கொண்டு போனதேயில்லை. பெரியாரது கிளர்ச்சி வடிவம் சாதாரணமானவர்களைக் கூட ஈர்ப்பதாகவும், புனிதங்களாக ஏற்றுக்கொண்டுள்ள குறிகளை உடைப்பதாகவும் அதிர்ச்சி மதிப்பீடு தரக்கூடியதாகவும் இருக்கும். அந்த வகையில் நீ சாமி கும்பிடுறியா, நான் கும்பிடமாட்டேன் என்கிற எதிர்கலாச்சார நடவடிக்கைகளை நாம் பெரியாரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அதைத் தாண்டி சமத்துவக் குறிக்கோளை பெரியாரிய நடைமுறை ஈட்டித் தருமா என்றால் அது முடியாது. எனவே பெரியார் ஒரு பகுதி ஆசானாக மட்டுமே இருக்க முடியும். யாருடைய முகமும் கோணும் என்றில்லாமல் பெரியாரை விமர்சனம் செய்து இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகளை நிரப்பி அவரைக் கடக்க வேண்டும். அப்படிக் கடக்கும் போதுதான் பெரியார் பயன்படுவார். கூட்டு விவாதத்தின்

முடிவு இப்படி இருந்தால் தான் அது பயன் படும்.

**பரமசிவன்:** 1993லேயே கருவறை நுழைவுப் போராட்டத்தின் வரைவுச் சட்டகத்தை உடைக்க முடியவில்லை. ஆனாலும் அதை வரவேற்கிறீர்கள். ஆனால் 1923, 28, 37ல் போராட்டங்கள் நடத்திய பெரியாரிடம் இத்தகைய வரம்புகள் இருந்தது இயற்கை தானே? அதை அங்கீகரிக்க மறுக்கிறீர்களே? இதற்கொரு அளவுகோல் அதற்கொரு அளவு கோலா?

**கேசவன்:** பெரியாருக்கு வரம்புகள் இருந்தது உண்மைதான். பெரியாரியத்திலிருந்து என்ன கற்றுக்கொள்கிறது என்பதுதான் இங்கே முக்கியம்.

**அ. மார்க்ஸ்:** கேசவன் அவர்களோடு எங்களுக்கும் கருத்துமாறுபாடுகள் இருந்தபோதிலும் தொடர்ந்து திராவிட இயக்கங்கள், பெரியார் குறித்து ஆய்வுகள் செய்து வருபவர் என்கிற முறையிலும் ஒரு மாற்றுப் பார்வையை juxta posed ஆகவெளியிடுவது பயனளிக்கும் என்ற வகையிலும் அவரிடம் கட்டுரை கேட்டோம். பெரியார் மையம் போன்ற வேறு பலரிடமும் கூட கேட்டோம். கேசவன் அதை ஏற்று கட்டுரை தந்தார். அதற்கு முதலில் நன்றி. தன்னுடைய பேச்சில் பெரியாரியம் என்பது 'புத்திசம்' என்பது போல நமக்குள் இருக்கும் மதஉணர்வின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார் அதிகாரம் செயல்படும் களங்களில் மொழியும் ஒன்று என்கிற வகையில் சொற் தேர்வில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியத்தை கேசவன் சுட்டிக் காட்டியதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்த எச்சரிக்கை மார்க்சியம் என்கிற சொல்லுக்கும் பொருந்தும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பேராசிரியர் பரமசிவன் கேட்டது போல அதற்கொரு நியாயம், இதற்கொரு நியாயம் கூடாது. கேசவன் தனது கட்டுரையில் (நிற. 6. பக். 14) வரையறையை மறுக்கிற, வரலாற்றுவாத, வர்க்கவாத, சாராம்சவாத நிலைபாடுகளைப் புறக்கணிக்கிற சூழலும் தமிழில் நிலவுவதாகக் குறிப்பிடுகிறார் 'அவர் எங்களைத்தான் குறிப்பிடுகிறார். என்பது இங்கே வந்துள்ள பலருக்கும் தெரியும். இந்தக் குற்றச்சாட்டு எந்த அளவிற்கு நியாயம் என்கிற கேள்விக்குள் இங்கே புகவேண்டாம். வரையறையை மறுப்பது குற்றம் எனச் சொல்லும் அவர் பின்னர் அத்தகைய வரையறை உருவாக்கும் முயற்சியை மதக் கலாச்சாரத்தின் வெளிப்பாடு எனச் சொல்வதிலும் ஒரு பெரிய முரண் இருப்பதாகத் தெரிகிறது. இதுகுறித்துக் கேசவனும் தோழர்களும் சிந்திக்க வேண்டும். சாராம்சம். மையம் என்ற இரண்டையும் குழப்பிக் கொள்ளும் ஒரு முறையியல் பிழையும் அவரது கட்டுரையிலுள்ளது. அதை வேறோர் சந்தர்ப்பத்திற்கு ஒதுக்கி வைத்து விட்டு விவாதப் புள்ளிக்கு வருவோம். எதிர்மறை ஆசான் என்ற கூற்றுக்கும் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகளை நிரப்பிக் கடத்தல் என்ற கூற்றுக்கும் இடையே முரண்கள் உள்ளன. இடைவெளிகளை நிரப்புதல் என்பது நிரப்பிப் பயன்படுத்துவதற்கா இல்லை கடந்து செல்வதற்கா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். சட்டகங்களை (Frame work)த் தாண்டுதல், சட்டத்தை மீறுதல் என்பதையும் கூட நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது. போராட்ட வடிவம் என்பது இயக்க வலிமையோடு தொடர்புடைய விசயமும் கூட. சிறிய இயக்கங்கள் பல தீவிரமான நடவடிக்கைகளில் பரந்துபட்டவர்களை இறக்கிவிட்டுப் பின்னடைவுக்குள்ளான உதாரணங்கள் நாம் அறிந்தவை. ஆனால் வலிமையாக இருந்த காலத்திலும் பெரியாரது போராட்டங்கள் வலுவாக அரசு எதிர்ப்புத் தன்மையுடன் இருந்ததில்லை என்பது சரியான விமர்சனம் தான். ஆனால் ராமன் சிலையைச் செருப்பால் அடித்தல், தேசப்படத்தை எரித்தல். கருவறை நுழைவு என்பதெல்லாம் குறியீடுகளை உடைப்பது என்பதோடு அரசுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடிய ஒன்று என்பதையும் மறந்து விடக் கூடாது. தேசியக் கொடியை எரிப்பது என்பதெல்லாம் ஒரு அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் ரொம்பவும் சிக்கலான விசயம். தடுத்து விட முயற்சிப்பார்கள். திடீரென நடந்து விட்டால் மறைக்க முயற்சிப்பார்கள். இறுதியாக: பார்ப்பனீயம் தன்னை நெகிழ்த்திக் கொள்கிறது; திருப்பராய்த்துறையில் தாழ்ந்த சாதியினருக்கும் வேதாகமப் பயிற்சி அளிக்கப் படுகிறது; 1998 வாக்கில் கருவறைக்குள்ளேயே கூட பார்ப்பனீயம் நம்மை அனுமதித்து விடலாம் என்று கேசவன் குறிப்பிட்டார். மார்க்சிஸ்ட் கட்சி ஆர். எஸ் எஸ் போன்றவை முன் வைக்கும் வாதம்தான் இது. இரண்டுநாள் முன்னதாக சிரீரங்கம் நகர ஆர். எஸ். எஸ் தலைவரைக் கள ஆய்வுக்காகப் பேட்டி கண்ட போது திருப்பராய்த்துறையில் தாழ்ந்த சாதியினருக்கு அர்ச்சகப் பயிற்சி அளிப்பதை அவரும்சொன்னார். உண்மை என்னவென்றால் தமிழ்நாட்டின் கிராமக் கோயில்கள் பலவற்றில் கீழ்சாதியினர் பூசாரிகளாக உள்ளனர். அங்கே எல்லாம் வேதாமகப் பூசைமுறைகள் கிடையாது. பார்ப்பனீய ஒதுக்கமும் கிடையாது. அத்தகைய கோயில்களையும் பார்ப்பனீய நெறிமுறைக்குள் கொண்டு வருவதற்கும் வேதாகம வழிமுறைக்குள் இழுப்பதற்கும் செய்யப்படும் பார்ப்பனீய மயமாக்கல் முயற்சிதான் இதுவேயொழிய பார்ப்பனீயம் நெகிழ்வதற்கான அடையாள

www.padippakam.com

மாய் இதைப் பார்த்தால் ஏமாந்து போவோம். பார்ப்பனர்கள் எள்ளளவும் இதற்குக் தயாராக இல்லை என்பதைத்தான் எங்கள் கள ஆய்வும் வெளிப்படுத்தியது. 98ல் ஒருவேளை கருவறை குள் நுழைவது சட்டமாக்கப் பட்டால் அது நமது போராட்டங்களின் விளைபொருளாகத் தான் இருக்குமேயொழிய பார்ப்பனீயம் விரும்பிச் செய்ததாக இருக்காது.

**காளிமுத்து (மதுக்கூர்):** சாதி இழிவுகளைப் போக்க எந்தத் தீவிரப் போராட்டத்தையும் பெரியாரியம் நடத்தவில்லை. எப்போதாவது நடந்த போராட்டங்களும் தீண்டாமையின் இழிவுகளிலிருந்து தொடங்கவில்லை பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வந்தவர்கள் இந்து மேலாதிக்க சாதிகளின் அடிவருடிகளாய் மாறிப் போய் சீரழிந்தார்கள். எந்தவொரு கருப்புச் சட்டைக்காரனும் ''தீண்டத்தகாதவர்களை இழிவாகக் கருதினானேயொழிய பார்ப்பன எதிர்ப்பில் பறையனாக மாற வேண்டும். அப்போதுதான் பெரியாரியம் வெல்லும். மார்க்சியத்துடனும் அம்பேத்கரியத்துடனும் இணைந்து பெரியாரியம் வர்க்கப் போராட்ட மாக மாறினாலன்றி வெற்றி பெறப் போவதில்லை.

**ராஜன்குறை:** பெரியாரை விரிவாக மட்டும் அல்ல ஆழமாகவும் படிக்க வேண்டும். பூணூல் போடுவதைத் தடுக்க வேண்டாமா என்று கேட்டுவிட்டு பார்ப்பான். பறையன் என்று இருந்தால் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை வேண்டும் என்கிறார். வாயால் தானே சொல் கிறார், தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை என்று சொல்லக் கூடாதா? ஆறுமாதம் என்றது ரொம்பவும் மலைப்பா இருக்கு? ஏன் அப்படி ஒரு token-ஆ ஒரு தண்டனையைச் சொல்றார்? முழுக்க முழுக்க வித்தியாசமான அவரது அரசியல் நோக்குகளை ஆராயக் கூடியசாத்திய கூறுகள் உள்ளன. கேசவன் என்னென்ன காரணங்களுக்காக அவரை எதிர்மறை ஆசான். பகுதி ஆசான் என்கிறாரோ அதே காரணங் களுக்காக அவரை நேர்மறை ஆசானாகப் படித்துப்பார்க்கணும். அதுவும் ஒரு முயற்சிதான் உலகப் புரட்சிகள் எத்தனை நடந்துருக்கு. 93ல் என்ன நடந்தது என்றெல்லாம் யோசித்தால் நாற்பதாண்டுகால அபத்த நாடகங்களை யோசித்தால் நிறைய விசயங்கள் நமக்குப் புரியும். பெரியாரை ஆசான்னு சொல்றது கூட ஏதோ அவர் செய்ததை அப்படியே செய்யணும் கிறதுக்கு அல்ல, இன்னைக்கு முற்றிலும் வேறுபட்ட வகையிலே கூட செய்ய வேண்டி இருக்கலாம், ஆனால் ஒரு முழு மதிப்பீடு என்கிற வகையில் அவரை ஆழமாகவும் அகலமாகவும் படிக்கணும்.

**தி. சு. நடராசன்:** பெரியாருடைய மையம் என்ன என்று யோசிப்பதைக் காட்டிலும் இன்றைய சமூகச் பொருளாதாரச் சூழலில் உங்களுடைய, நம்முடைய அரசியல் நிலைபாடு என்னன்னு தீர்மானம் பண்ணிக் கொண்டு, அவருடைய பொருத்தப்பாடு, இன்றைய Relevance என்னன்னு யோசிக்கணும்.

**ரவிக்குமார்:** ரசியா மற்றும் கிழக்கு அய்ரோப் பிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தலைமை, கட்சி பற்றியெல்லாம் நிறைய விமர்சனங்கள் வந்துட்ருக்க விசயம் எல்லோருக்கும் தெரியும். தலைவர் தன்னைப் பற்றிய பிம்பத்தை கட்டிய மைக்காகப் பாத்துகிறதுக்கு முக்கியமா தலைவருக்கும் அவர் யாருடன் உரையாடு கிறாரோ அந்த மக்களுக்கும் இடையிலான உரையாடலுக்குப் பயன்படுத்தப்படும் மொழி எத்தகையதுங்கிறது முக்கியமானது. அந்த வகையில் பெரியார் பயன்படுத்தும் மொழியில் இந்த சுய எள்ளல் ங்கிறது தொடர்ச்சியா இருக்கு குறிப்பா தலைவர்களது இரங்கற் செய்திகளில், அப்புறம் பேசுகிற இடங்களில் எல்லாம் நான் சொல்றதை அப்பிடியே நம்ப வேண்டான்னு சொல்றது. தன்னுடையது ஒரு பெரிய இயக்கமா மாறக்கூடாதுங்கிறத்துக்கு உள்ளுக்குள்ளேயே ஏதோ ஒரு Lever-ஐ வச்சிருந்தாரா? மணியம்மையைத் திருமணம் செய்றப்போ இத்தனை ஆண்டுகளா பொது வாழ்க்கையில நம்புறது மாதிரி ஒருத்தரு கூட இல்லைங்கிறார். பெரிய தொண்டர் பட்டாளத் தை உருவாக்கித் தன்னைத் தலைவராக்கிக் கொள்வதில் அவருக்கு ஆர்வமில்லையா? பனகல் அரசர் இறக்கும் போது வீட்டிலே அப்பா இறந்தா அடுத்து ஒரு அப்பா வந்து குடும்பத்தை நடத்துவார்னு நாம எதிர்பார்க் கிறதில்லே, ஆனால் தலைவர் இறந்தா மட்டும் அடுத்து ஒரு தலைவர் வந்து கட்சியை நடத்தணும்னு சொல்றோம். பனகல் அரசர் செத்தத ஒரு நல்ல தருணமாப் பயன்படுத்திக் கிட்டு அடுத்து நாம ஒவ்வொருத்தரும் ஆக வேண்டியதைச் செய்யனும்' கிறாரு. தலைமை வழிபாட்டை உடைக்கிற ஒரு சில கூறுகள் பெரியாரிடம் உள்ளதைக் கவனிக்கலாம்.

**விஜி:** பெரியாரியத்தில் முக்கியமான கூறு பெண் விடுதலை பற்றி அவர் சொன்னதுதான். தீண்டாமை ஒழிப்புடன் இதை இணைத்துச் செயல்படுத்துவதுதான் இன்று நமது கடமை. கருப்பாதையை சாத்திக்கோன்னு பெரியார் சொன்னார். அரசாங்கம் அதை வேறோர் அர்த்தத்தில் அதிகாரம் செயல்படுத்துற வழியா பயன்படுத்துது. உழைக்கும் பெண்கள் நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். நாம செய்ய வேண்டியது கருத்தறிப்பை நிர்ணயிப்பது உனது உரிமைங்கிற உணர்வை



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் மத்தியில் தீவிரமாய் பிரச்சாரம் செய்வதுதான். ஒதுக்கி வைக்கப்பட்ட இரு பெரும் பிரிவினராகிய பெண்களும் தாழ்த்தப் பட்டவர்களும் இணைவது என்பதன் மூலம்தான் இன்று பார்ப்பனியத்தை எதிர்க்க முடியும். பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் இணைப்பதுங்கிறது இதுதான். பெண்களுடைய பிரச்சினையைப் பெண்கள்தான் பேசணும்னு இன்று சிலர் சொல்கிறார்கள். எப்படித் தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையை தாழ்த் தப்பட்டவர்கள் மட்டும் பேசினால் போதாதோ அதே போல பெண்களும் அவர்களைப் போல ஒடுக்கப்படுகிற பிற சக்திகளோடு இணைஞ்சு நிக்கணும். இதற்கான செயல் திட்டங்கள் நாம் யோசிக்கணும்.

**கிராமியன்:** நடைமுறை அரசியலுக்காகத்தான் நாம பழைய வரலாறைப் பேசுகிறோம் என்றால் எதிர்கலாச்சாரத்தை வழிமுறையாகக் கொண்டு பெண்விடுதலையை நோக்கிய சாதி ஒழிப்பை தமிழக அரசியலில் பயன்படுத்துவதாக இருந்தால் பெரியாரை அந்த நோக்கிலே படிப்பதுதான் சரி. மற்றவையெல்லாம் தாங்கள் எத்தகைய தன்னிலைகளாகக் கட்டமைக்கப் பட்டிருக்கிறோமோ அதைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு தேங்கிக் கிடப்பதற்கான வழிதான். பெரியாரை பெண் விடுதலை நோக்கிய சாதி ஒழிப்பு அரசியல்வாதி; அவர் கருத்தியல் தளத்திலே செயல்பட்டார் என்பதை எடுத்துக்கொண்டு மார்க்சியத்தை வளப்படுத்த முயற்சித்தால் மட்டுமே அது விடுதலையை நோக்கிய உண்மையான நகர்வாக இருக்க முடியும்.

**ரவிக்குமார்:** தமிழவன் எழுப்பிய பிரச்சினை களை யாரும் விரிவாய்ப் பேசலை. க. நா. சு வுடன் பெரியாரை ஒப்பிட்டது, இலக்கியத்தைப் புறக்கணிச்சாங்கங்கிற குற்றச்சாட்டை அவர் பெரியார்மீது மட்டுமல்லாமல் நம் எல்லோர் மீதும் சுமத்தியது... எது இலக்கியம், எது இலக்கியமில்லேங்கிற போராட்டம் தொடர்ந்து நடந்துகிட்டிருக்கு. தமிழவன் எது இலக்கியம் யாரையெல்லாம் இலக்கியவாதியின்னு சொல் றார்ங்கிறதையெல்லாம் பார்த்தோமானால்... அவர் முன்னிலைப்படுத்தக் கூடிய ஆட்களுக்கு ஆபத்து வந்துட்டுங்கிறதுதான் அவர் வைக்கிற குற்றச்சாட்டு. மௌனி, க.நா.சு இது மாதிரி ஆட்களுக்கு. கார்ல் மார்க்சிடம் இருக்கக்கூடிய இசை பற்றிய ஆர்வம், கவிதை பற்றிய ஆர்வம் இதையெல்லாம் இவர்கள் வியந்து போற்று வார்கள். என்னை 'ஸ்தானோல்'ன்னு சொன் னாலும் சரி இது மாதிரிக் கூறுகள் மார்க்சிட மிருந்த ஹெகலியத் தாக்கத்தின் விளைவுகள். இது என்ன மாதிரி Meta Physical சிந்தனை களை அவரிடத்தில் ஏற்படுத்தியது என்றெல் லாம் பார்க்கணும். மார்க்சியத்திலுள்ள இடை வெளிகள் பற்றிய பேசும்போது இலக்கியம் பற்றிய அதனுடைய பார்வையும் ஒன்று. அந்த வகையில் மார்க்சிடமிருந்த சில தவறுகளுக்கு பெரியார் இடமில்லாமல் செய்திருந்தார் என்று தான் சொல்ல வேண்டியிருக்கு,

**வேல்சாமி:** நிறப்பிரிகை பெரியார் கட்டுரை களைப் படிச்சிட்டு தஞ்சையிலுள்ள ஒரு பெரியார் தொண்டர் சொன்னார்; இன்றைக்குப் பிரச்சார பலம் பார்ப்பனர்களிடம் பெரிய அளவில் இருக்கு இந்தச் சூழலில் பெரியார் நடுத்தர சாதிகளுக் காகத்தான் நின்னார், தாழ்த்தப்பட்டவர்களுக் காக இல்லை என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலும்கூட நேர்மையான ஆய்வு என்கிற பெயரில் அதையெல்லாம் முன்னிலைப் படுத்தி னால் பார்ப்பான் அதை ஊதிப் பெரிதாக்கி தன் நோக்கத்துக்குப் பயன்படுத்திடுவான். இன்னைக்கு சார்பு ஆய்வுதான் தேவைன்னு சொன்னார். அவர் சொன்னது நியாயம் போலவும் இருக்கு, தப்பு போலவும் இருக்கு. நாம யோசிக்கணும். 'சூத்திரன்' ங்கிற இழிவை பெரியார் போக்கினார். 'தீண்டத்தகாதவன்' ங்கிற இழிவு இன்னமும் இருக்கு. அதை இல்லாமல் செய்வதற்கான நடைமுறைதான் பெரியார் வழியைத் தொடர்வது.

**அ.மா:** பெரியார் பிற்படுத்தப்பட்டவர்கள் நலனைத்தான் கருதினார் என்பதற்கு ஆதார மாக அவர் தீண்டப்படாதவர்கள் மத்தியில் பேசும்போது அவர்களை 'நீங்கள்' என விளித்து தன்னை அவர்களிடமிருந்து விலக்கிக் கொண்ட தைச் சுட்டிக் காட்டுவதில் ஒரு சிக்கல் இருக் கிறது. இது குறித்து ஒரு சரியான புரிதலை அடைய கல்யாணியின் பேச்சில் வந்த ஒரு குறிப்பு பயன்படும். பெரியார் பிறப்பால் பிற் படுத்தப்பட்ட வகுப்பொன்றைச் சேர்ந்தவர் என்கிற பிரக்ஞையோடு நாம் அவரை அணுக வேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களோடு பணிபுரியக் கூடிய பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் என்கிற வகையில் நான் எதிர் கொள்ளும் சிக்கலொன்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். மன்னை கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களோடு விடுதிப் போராட்டத்தில் பங்கு பெற்றபோது அவர்களில் ஒருவனாக உணர்வதில் எனக்குச் சிக்கலில்லாமல் இருந்தது. 'நாம்' என்கிற சொல்லில் எல்லோரும் ஒன்றாய் உணர்ந்திருக் கிறோம். ஆனால் இன்று தலித் பண்பாட்டுப் பேரவை போன்ற அமைப்புக்களில் பணிபுரியும் ஒரு பிரச்சினை தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத வர்களை இணைத்துக் கொள்வதா இல்லையா என்பது பற்றி அங்கே விவாதம் நடக்கிறது. தாழ்த்தப்பட்டவரல்லாதவரை அமைப்புக்குள் அனுமதிக்கும் போது அவர்களுக்கு ஏற்கனவே



படிப்பகம்

www.padippakam.com

இருக்கக் கூடிய செல்வாக்கு, மரியாதை ஆகிய வற்றினடிப்படையில் மற்றவர்கள் பின் தள்ளப் படக் கூடிய அபாயம் குறித்த நியாயமான அச்சம் இருக்கிறது. இது சமயத்தில் நேரடியாக வும் வெளிப்பட்டு விடுகிறது. இந்தச் சூழலில் ஒரு தாழ்த்தப்பட்டவரல்லாதவர், தாழ்த்தப் பட்டவர்கள் மத்தியில் உரையாடும்போது 'நாங்கள்' 'நாம்' என விளித்தால் அது தந்திர மான உள்நோக்கம் கொண்ட நடவடிக்கையாக இருக்கக் கூடிய வாய்ப்பு அல்லது அத்தகைய வாய்ப்பு பற்றிய அய்யம் ஆகியவை ஒரு பிரச்சினையாகிவிடுகின்றன. சமீபத்தில் பாண் டிச்சேரி தலித் கலை விழா ஒன்றில் பேசும்போது முதலில் 'நாம்' என விளித்துப் பின்னர் நீங்கள் என்று சொல்லி எனது பேச்சில் ஒரு தடுமாற்றம் இருந்ததை யாரேனும் கவனித்திருக்கலாம். பெரியாரை மதிப்பிடும் போது சொற்களின் நேரடியான அகராதி அர்த்தங்கள் என்பதை எல்லாம் தாண்டி இத்தகைய சமூகப் பொருளா தாரத் தரவுகளையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

## தொகுப்புரைகள்

1. **சுந்தர்:** வழக்கமான நிறப்பிரிகை விவாதங் களிலிருந்து இது சற்று வேறு பட்டுள்ளதைத் தொடர்ந்து வருபவர்கள் உணரலாம் ஒருவர் பேசியதற்கு இன்னொருவர் பேச்சு துணை சேர்ப்பதாக இல்லாமல் ஒவ்வொன்றும் தனித் தனி உரைகளாக அமைந்துள்ளன. ஒருவேளை பெரியாரின் சிந்தனைகள்; செயல்பாடுகள்ங்கிற ஒரு ஆழமையமிட்ட விசயத்தை எடுத்துக் கொண்டதால் பங்கு பெறும் ஒவ்வொருவரும் உடனடியான விசுவாசம் அல்லது எதிர்ப்பு என்கிற நிலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் வந்துவிட்டதோ? இன்றைய விவாதத் தில் முன் வைக்கப்பட்ட முக்கிய நிலைபாடுகள் என்று பார்த்தோமானால் முதலில், பெரியாரை இன்று பேசுவதற்கான அவசியம் என்னஎன்பது பற்றி நிறப்பிரிகை சார்பாக வைக்கப்பட்டவற் றையும் அதனையொட்டி ராஜன்குறை கிராமியன் ஆகியோரது பெரியாரை ஒரு எதிர் கலாச்சார நடைமுறையாகப் பார்க்கும் நிலைப் பாட்டைச் சொல்லலாம். இரண்டாவதாக டி. என். கோபாலன், கோ. கேசவன் ஆகியோர் முன் வைத்த மரபு வழிப்பட்ட மார்க்சிய நிலை பாடு. பெரியாரை பெருமளவுக்கு நிராகரிக்கும் தொனி. பெரியார் பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சாதகமாய் இருந்தார், பொருளாதாரப் பிரச்சினைகளை எடுக்கவில்லை. அரசு வரம்பு களுக்குட்பட்டே செயல்பட்டார் என்கிற முக்கியத்துவமிக்க விமர்சனங்கள், மூன்றாவதாக ஞானி: சாதி, பெண்ணியம் போன்ற விசயங்க ளைப் பேசும்போது அவற்றைத் தனியாகப் பார்க்காமல் ஏகாதிபத்தியம், முதலாளியம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்திப் பார்ப்பது, பேருரு அரசியலோடு இணைப்பது, பெரியாரது சமதர்மப் பார்வைக்கு முக்கியத்துவமளிப்பது என்பவற்றை அவர் தனித்துவமான நிலை பாடாக வைத்தார். அப்புறம் பேராசிரியர் பரமசிவன் வரலாற்று ரீதியாய் பார்ப்பனீயம் எப்படி மாறி வந்துள்ளது, இன்று தலித் குரல் ஓங்கி நிற்கும்போது அது என்னவாக மாறும் என்பது முக்கியம். அதிகாரத்தை நோக்கிய நகர்வாக பார்ப்பனீயத்தை அவர் குறிப்பிட்டார் அதிகாரத்தை நோக்கிய நகர்வு, சாதிஎதிர்ப்பு, சாதி/ பாலியல் ஆகியவற்றிற்கிடையேயான ஒருங்கிணைவு என்கிற அடிப்படையில் பார்ப்பனீயத்தையே புதியதாக வரையறுப்பது என்கிற போது ரொம்ப இயல்பாகவே இவை எல்லாம் தனித்தனியாக இல்லாமல் பல புள்ளி களும் குறுக்கும் நெடுக்குமாகச் சந்திப்பது சாத்தியமாகிறது. சூசைபாணிக்கம் சொன்னது போல ஒரு புதிய வரலாற்று அணி உருவாக வாய்ப்பளிக்கிறது. சுற்றுச்சூழல் பேசுகிறவர்கள் பெண்ணியம் பேசுகிறவர்கள், தலித் விடுதலை யை முன்னெடுப்பவர்கள் திராவிட இயக்கத்தில் புதிய நிலைபாடுகளை எடுப்பவர்கள், நக்சல்பாரி இயக்கத்தினர் எனப் பலரும் சந்திக்கும் களமாக ''எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்' ஆய்வரங்கம் அமைந்தது. இன்றைக்கு அது அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருந்தால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும். பெரியாரின் ஒவ்வொரு கூறையும் மேலும் ஆழமாய் விவாதிக்கும் போது நாம் அதைச் செய்ய முடியும்.

2. **ஞானி:** பெரியாரின் மையமான விசயம் சுயமரியாதை. சுயமரியாதை பற்றி அவர் என்னவெல்லாம் சொன்னார்னு தொகுத்தால் சுயமரியாதையைச் சமுதர்மம்னுதான் அர்த்தப் படுத்த முடியும். ஒரு மாதிரியான கற்பனாவாத சோசலிசம். இதில் அவரது சாதி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, பெண் விடுதலை, மாற்றுக் கலாச்சார செயல்பாடுகள் எல்லாவற்றையும் இதில் இணைக்க முடியும். ஆக பெரியாரின் தத்துவம் இந்த சுயமரியாதைதான். என்னுடைய இலக்கு சமூக மாற்றம்தான், புரட்சிதான் அதற்குக் குறைந்து ஏதுமில்லைங் கிறார். ஆனா இடையில் சாதி, பார்ப்பனியம், அரசதிகாரம் எல்லாத்தையும் கொண்டுவந்து வழிமறிகிறார்கள் என்றார். எனவே சாதி, மத பார்ப்பனிய, முதலாளிய, அரசதிகார எதிர்ப்பு எல்லாம் பெரியாரியம்தான் பின்னால் பிரச்சனை களை எதிர்கொள்ளும்போது அவர் அரசு எதிர்ப்பில் பின் வாங்கினாலும் கூட அவரது எழுத்துக்களையெல்லாம் கூர்ந்து பார்த்தால் நிறைய இடங்களில் இந்த அரசு எதிர்ப்பு உள்ளதை இனங் காணலாம். ஆனால் அப்படி அவர் செயல்படலை. கடைசிவரை கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

போகலை. அரசதிகாரத்தையும் முதலாளியத்தையும் பெரியார் ஏற்றுக்கொண்டார் எனக் கேசவன் வைப்பது கடுமையான விமர்சனம். இதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சோவியத் யூனியனில் செயல்படுத்தப்பட்ட மார்க்சியமும் இப்படிப்பட்டதுதான். அரசதிகாரத்தை ஏற்றுக்கொண்டது; முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டது. இந்தியாவிலும் குறிப்பாக மைய நீரோட்டக் கட்சிகளின் மார்க்சியமும் இப்படிபபட்டதுதான். மிக முக்கியமான கோட்பாடாகிய மார்க்சியமே இப்படி என்றால் பெரியாரை எங்கே போய் குற்றவாளி என்பது! ஆக பெரியாரது சாதி, மத பார்ப்பனீய எதிர்ப்புகளையெல்லாம் சமதர்மத்திற்குள் கொண்டுவந்தால் நமது காலத்திற்கான வழிமுறை கிடைக்கும். பெரியாரை எதிர்மறையாகப் பார்ப்பது அவசியம் கிடையாது. பெரும் பகுதி உண்மையும் கிடையாது. விமர்சனங்கள் செய்யலாம். ஆனால் எதிர்நிலையில் நின்று விமர்சனம் செய்ய வேண்டியதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு பெரியாரில் குறைவாக இருந்தாலும் கூட அதற்கும் பெரியாருக்குள் ஆதாரம் இருக்கும். பெரியாரின் பார்வை அகன்ற பார்வை. அதில் ராஜன் குறைக்கும் மேற்கோள்கள் கிடைக்கும்; கேசவனுக்கும் கிடைக்கும் சரியானவற்றைத் தேர்வு செய்து இணைப்பது நமது பணி.

**அ. மார்க்ஸ்:** வழக்கமான நிறப்பிரிகை விவாதங்களைப் போலன்றி பெரியாரியம் விவாதத்தில் பொது முடிவுகள் எதையும் அடைய முடியாமல் போய் விடுவோமோ என்ற அச்சம் எங்களுக்கு இருந்தது. அப்படிப்பட்ட ஒரு சூழல் நேருமாயின் கூட்டுக் குரல் என்று ஓர் ஒற்றைக் குரலை உருவாக்கும் முயற்சியை விட்டு விட்டு Open ஆக விட்டுவிடுவது என்று முடிவு செய்து இருந்தோம். ஆனால் விவாதப் புள்ளிகளாக இனங் கண்டிருந்த ஒன்பது புள்ளிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவற்றில் நம்மால் சிலபொது முடிவுகளுக்கு வந்தடைய முடிந்திருக்கிறது. அந்த வகையில் நிறப்பிரிகை- 6ல் தொகுக்கப்பட்ட விவாதப் புள்ளிகளை மனங்கொண்டு இன்றைய விவாதத்தில் வந்தடைந்த சில ஒருமித்த சிந்தனைகளைத் தொகுத்தளிக்கிறேன். அதற்கு முன் இங்கே வந்திருப்பவர்களின் பொதுவான அரசியல் நிலைபாடு என்ன என்று தி. சு. நடராசன் கேட்டார். பலதரப்பட்ட அரசியல் போக்குடையவர்களும் இங்கே வந்துள்ளனர். வந்துள்ள அனைவரின் பொதுவான அரசியல் கரிசனங்கள் என்று சொல்வதானால் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் உள்ளூர் முகவர்கள். இந்துத்துவ சக்திகள் ஆகியவற்றை எதிர்த்தல் எனலாம்.

பெரியாரிடம் எடுத்துக்கொள்ள எதுவுமில்லை என்றொலித்த ஒரே ஒரு குரலைத் தவிர மற்றபடி அனைவரும் இன்றைய சூழலில் பெரியாரின் பொருத்தப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது முக்கியமான விசயம். பெரியாரியத்தின் மையமான விசயங்களை இனங்கண்டு கொள்வதற்கு அடிப்படையாக பெரியாரியத்தின் உண்மையான இலக்கு சமதர்மம்தான் என்கிற ஞானியின் கருத்தை நாம் வைத்துக் கொள்ளலாம். இந்த இறுதி இலக்கிற்குத் தடையாக மக்கள் மத்தியில் நிலவும் மரபு வழிப்பட்ட கருத்தியல் இந்தக் கருத்தியலைக் கட்டமைக்கும் சாதி, மதம், பாலாதிக்கம் போன்ற சிவில் சமூக நிறுவனங்கள், இந்த நிறுவனங்களைக் கட்டிக் காக்கும் அரசதிகாரம் , மற்றும் முதலாளியப் பொருளாதாரம், இப் பொருளாதாரம் பதிக்கப் பட்டுள்ள உலகப் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றைச் சொல்லலாம். இவை அனைத்தையும் நாம் எதிர்த்துத் தகர்த்தெறியவும் இவற்றிலிருந்து துண்டித்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இதற்கு முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட மக்கள் திரளில் மேலாண்மை செலுத்தும் மரபுக் கருத்தியலைத் தகர்த்தெறிய வேண்டியிருக்கிறது. பெரியாரது நடைமுறை என்பது இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுக்கும் எதிர்க் கலாச்சாரச் செயற்பாடாக இருந்தது பெரியாரின் அடையாளங்களாகக் கருதப்படும் பார்ப்பன எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, இன இழிவு எதிர்ப்பு ஆகியவற்றிற்கு அப்பால் சாதி அதிகாரம், பால் அதிகாரம் ஆகியவை சந்திக்கும் புள்ளியையும் அதற்கு எதிரான தாக்குதலையும் பெரியாரியத்தின் வாயிலாகச் சுட்டிக் காட்டியது என்பதை இன்றைய விவாதத்கின் முக்கிய பங்களிப்பாகக் கருதலாம். உலகெங்கிலும் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இந்தியாவிற்குள் கட்டமைக்கப்படும் இந்துப் பாசிசம் ஆகியவற்றின் பின்னணியில் பெரியாரியம் தகர்க்க முனையும் கட்டமைப்புக்கள் எத்தகைய வலிவுடன் அரசதிகாரத்தாலும், உலகப் பொருளாதாரக் கட்டமைப்பாலும் காப்பாற்றப்படும் என்பது சிந்திக்கத் தக்கது. இந்த வகையில் பெரியாரியத்தின் பலவீனமான புள்ளிகளாகப் பலரும் சுட்டிக் காட்டிய அரசாதரவுப் போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பில் கவனமின்மை ஆகியவற்றை புறந்தள்ள வேண்டிய இடைவெளிகளாக நாம் கருதலாம். உலகப் பெகருளாதார அமைப்பின் ஆசியோடு இன்று கட்டமைக்கப்படும் இந்துத்துவத்தை எதிர்த்து நிற்க பார்ப்பனீயத்தைத் தனிமைப் படுத்துவதும் தாழ்த்தப்பட்ட சக்திகள் ஒன்றிணைவதும் இன்றைய தேவை. இந்து மத எதிர்ப்பு, பார்ப்பனீய எதிர்ப்பு என்கிற அம்சத்தில் பெரியாரியமும். அம்பேத்கரியமும் குவிவதை நாம் கருத வேண்டும். அந்த வகையில் தீண்டாமை ஒழிப்பிற்கு முன்னுரிமை கொடுப்பதென்பதைக் பெரியாரில் நிரப்ப



படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய இடைவெளிகளில் முக்கியமானதாய் இன்றைய விவாதம் முன் வைத்துள்ளது. உலகப் பொருளாதார அமைப்பு, அரசு/ சிவில் சமூக நிறுவன அதிகாரம், இந்துத்துவம் ஆகிய வற்றிற்கெதிரான Macro அரசியலுடன் நுண் களங்களில் அதிகாரத்திற்கெதிரான செயற்பாடு கள், பாலாதிக்க எதிர்ப்பு உள்ளிட்ட எதிர்கலாச் சார நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத் தாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய வகையில் இன்றைய விவாதம் முக்கியத்துவம் பெறுகின்றது.

கடைசியாக ஒன்று: பெரியாரியம் குறித்த ஆழமான, விரிவான ஆய்வுகளின் முக்கியத்துவம் குறித்து ராஜன்குறை, கேசவன் ஆகியோர் வலியுறுத்தினர். தேவையான ஆவணப் பதிவு கள் உள்ளதையும் சுட்டிக்காட்டினர். சுமார் அறுபதாண்டுகாலம் மிகத் தீவிரமாக அன்றாட அரசியலில் மக்கள் மத்தியில் நின்று செயல்பட்ட ஒருவரின் செயல்பாட்டை மதிப்பிடும் போது கிடைக்கக் கூடிய நிறுவனம் சார்ந்த ஆவணப் பதிவுகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்தானென்றாலும் இந்த ஆவணக் காப்பகங்களுக்குள் மட்டுமே முடங்கி நாம் ஆய்வுகளைச் செய்து விட முடியாது. சமூக நீதிப் பிரச்சினைகளாக அணுக வேண்டியவற் றைச் சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக அரசு ஆவணங்களில் அணுகப் பட்டிருக்கும். இயக்கப் பத்திரிக்கைகள்.பெரியாரிய நிறுவனத் தொகுப்பு கள் ஆகியவற்றில் விருப்பபூர்வமான தேர்வுகள் செயல்பட்டிருக்கும். எனவே பெரியாரை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இவற்றையும் தாண்டி அன்றைய அரசியல், சம்மந்தமிருக்காது என நாம் கருதக் கூடிய பிற செயல்பாடுகள், பிற பதிவுகள், அவருக்கு எதிரான எதிர்ச் செயல்பாடுகள் இந்த எதிர்ச் செயற்பாடுகள் அவரைப் பாதித்த விதங்கள், சாதாரண மக்கள் அன்று இவை குறித்து தங்கள் நினைவுகள், புனைவுகள், கடிதங்கள், பழமொழிகள் போன்றவற்றின் வாயிலாக என்ன பதிவு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். அந்த வகையில் நாம் நினைப்பதைக் காட்டிலும் கடினமான ஆனால் அவசியமான பணி இது' காந்தி பற்றி வெளிவந்திருக்கும் சில 'சபால்டரன்' ஆய்வுகள் இதற்கொரு முன்னோடியாக அமையலாம். O

[விவாதம் முடியும்போது இரவு மணி 7.00 திருப்பித் திருப்பிச் சொல்லிய சில வரிகளைத் தவிர பிற கூடிய வரையில் பேசியவரின் வார்த்தைகளிலேயே முழுமையாக இம்முறை தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு: நிறப்பிரிகை]

---

O O O

**நிறப்பிரிகையில் வெளிவந்த பெண்ணியம் தொடர்பான கட்டுரைகள், கூட்டு விவாதம், எதிர்வினைகள் ஆகியவற்றைத் தொகுத்து தனி நூலாக வெளியிடுவது என டென்மார்க்கிலிருந்து வெளிவரும் *சஞ்சீவி* என்ற பத்திரிக்கை சார்ந்த நண்பர்கள் முடிவு செய்துள்ளனர். தொடர்ந்து பலநாடுகளில் நிறப்பிரிகையை வினியோகித்து விவாதிக்கவும் அவர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர். சென்ற இதழில் வெளியான கெய்ல் ஓம் வெத் எழுதிய கட்டுரை *சஞ்சீவி* இதழில் வெளி வர உள்ளது.**



படிப்பகம்

www.padippakam.com

# வகுப்புவாதம் - நான்கு கட்டுரைகள்

அ. மார்க்ஸ்

1. இந்துத்துவம் — ஒரு கோட்பாட்டுப் புரிதல்
2. இந்துத்துவம் — தலித்கள் — பெண்கள்
3. இந்துத்துவத்தின் பரிணாமம் — ஒரு வரலாற்றுக் குறிப்பு
4. இந்துத்துவ வகுப்புவாதம் மற்றும் வகுப்புக் கலவரங்களின் சில முக்கிய பரிமாணங்கள்

## 1. இந்துத்துவம்—ஒரு கோட்பாட்டுப் புரிதல்

**ஏதேனும் ஒரு நம்பிக்கை அல்லது அடையாளத்தினடிப்படையில் தங்களை இனம் கண்டு கொள்ளும் ஒரு சமூகப் பிரிவைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களின் சமூக / பொருளாதார/அரசியல் நலன்களும் ஒரே மாதிரியானவை என்கிற அடிப்படையில் அரசியல் இயக்கம் பெறும் நடவடிக்கையை வகுப்புவாதம் எனலாம்** இந்தியத் துணைக் கண்டத்தில் மதம் என்பது வகுப்புவாதத்தின் அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆக்ஸ்போர்டு அகராதி கூட வகுப்புவாதத்திற்குப் (Communalism) பொருள் சொல்லும்போது இந்தியாவில் இது மதம் சார்ந்த பொருள் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. இனி இந்த வரையறையின் இரண்டு பிரதான கூறுகளையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு பகுத்துப் பார்க்கலாம்.

**வரையறையின் முதல் கூறு: ஒரு சமூகப்பிரிவு ஏதேனும் ஒரு அடையாளத்தினடிப்படையில் தங்களை இனம் கண்டு கொள்ளுதல்:**

இந்த இனம் கண்டு கொள்ளும் செயல்பாடு என்பது இயல்பானது அல்லது இயற்கையானதல்ல. மாறாக இது செயற்கையாக மேலிருந்து கட்டுவிக்கப்படுவது. ஒரு அரசியல் நோக்குடன் ஒரு அரசியல் குறிக்கோளுக்காக இந்தக் கட்டுவிப்பு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் செயற்கையாகக் கட்டுவிக்கப் பட்டது என்கிற உண்மையை மறைத்து இதை ஒரு இயற்கையான உணர்வாக மக்களின் பொதுப் புத்தியில் பதிய வைப்பதை தனது முதன்மைப் பணியாக இதன் மூலம் அரசியல் லாபம் பெறுகிற குழு மேற்கொள்ளும். இதை ஒட்டிப் பல்வேறு புனைவுகள், கற்பிதங்கள் சடங்குகள் முதலியவை இதற்குப் பயன்படுத்தப்படும். இந்துத்துவ வெளியீடுகளில் இந்தியா என்னும் புவிப்பகுதி ரொம்பவும் இயற்கையாய் அமைந்துள்ளதாய்க் குறிப்பிடுவதை அடிக்கடி காண முடியும். இந்த அடிப்படையில் ''சிந்து முதல் இந்துவரை, அட்டாக் முதல் கட்டாக் வரை''—அகண்ட பாரதம் என்கிற முழக்கத்தை அவர்கள் முன் வைக்கின்றனர். இந்தியா என்கிற புவிப் பரப்பிற்குள் இந்து × இசுலாமியர் என்கிற பிரிவினை ஒரு இயற்கையான முரண் எதிர்வு என்பது அடுத்த கற்பிதம். சாராம்சரீதியாக இந்த எதிர்வு முற்றிலும் ஒன்றிலிருந்து ஒன்று விலக்கி வரையறுக்கப்படும். அதாவதுசாராம்சத்திலேயே இரண்டும் வேறுபட்டவை. நமக்குத் தெரிந்த வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே அவை ஒன்றையொன்று விலக்கியவை; நிரந்தரமானவை. இந்த இரண்டு பிரிவுகளும் ஒன்றையொன்று அழித்துக் கொண்டு தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போரும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நடைபெற்று வருகின்றது. இந்த வரலாற்றுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து இந்திய மண்ணுக்கு அதாவது பாரத தேசத்திற்கு இயற்கையாய் உரிய இந்து ஆட்சியை உருவாக்குவதே இயல்பானது. இன்றைய துன்பங்களுக்கெல்லாம் விடிவளிக்கக் கூடியது...... என்கிற கருத்துக்கள் இந்தக் கற்பிதத்தில் உள்ளடங்குகிறது. இவை அனைத்தும் பொய் என்பதை விளங்கிக் கொள்ள ரொம்பவும் யோசிக்க வேண்டியதில்லை. இந்த வகுப்புகள் (Communities) மற்றும் அவற்றின்எல்லைகள் அதாவது அவை எவ்வெவற்றை உள்ளடக்குகின்றன, எவற்றை விலக்குகின்றன என்பதைக் குறித்த இவர்களின் வரையறைகள் ரொம்பவும் தற்காலிகமானவை; அவை அரசியல் சூழலுக்கும் நோக்கத்திற்கும் தகுந்தாற் போல் மாறி வந்துள்ளன. எடுத்துக் காட்டாக 19ம்



படிப்பகம்

www.padippakam.com

நூற்றாண்டின் இறுதியில் ஒரு பிரம்மசமாஜிக்கு அல்லது ஆர்யசமாஜிக்கு 'பாரதவர்ஷம்' என்பது மேற்கு பஞ்சாப்பையும் கிழக்கு வங்கத்தையும் உள்ளடக்கும். 1900த்தின் தொடக்கத்தில் இந்த வரையறையை அவர்களே மாற்றிக் கொள்கிறார்கள். 1903 தொடங்கியே இந்து மகா சபையினர் இசுலாமியர் பெரும்பான்மை யாக உள்ள பகுதிகளைத் தனியே பிரித்துவிட லாம் என்கிற கருத்தை முன் வைக்கத் தொடங்கி விடுகின்றனர். இன்னொரு சமீபத்திய எடுத்துக் காட்டு: ஒரு நான்காண்டுகட்கு முன்னர் ஒரு அர்மீனியனது 'தேசபக்தி' என்பது சோவியத் யூனியனுக்கு விசுவாசமாக இருப்பது இன்று ஒரு அர்மீனியன் அப்படி நினைத்தால் அதற்குப் பெயர் தேசத் துரோகம். அன்றைய ஆளும் குழுமமும் இன்றைய ஆளும் குழுமமும் வெவ் வேறு. கொடிகள், நாட்டு எல்லைகள், தேசப் படங்கள், தேசீய வீரர்கள், சேயப் பாரம்பரியங் கள் ஆகியவற்றைக் ''கண்டுபிடித்து'' —ஆம் கண்டுபிடித்து—தேசம், தேசபக்தி, இனஉணர்வு மொழி உணர்வு ஆகியவற்றைக் கட்டமைக் கின்றன.

அதென்ன பாரம்பரியத்தைக் கண்டுபிடிப்பது (Invention of Traditions) என்றால்? எந்த ஒரு இன, மத ரீதியான கட்டமைப்பும் ஒரு பாரம்பரியத்தை முன் வைத்தே ஆக வேண்டும். எ.டு: தமிழ்ப் பாரம்பரியம், இந்தியப் பாரம் பரியம், இந்துப் பாரம்பரியம்... முதலியன. மேலிருந்து கட்டுவிக்கப்படும் இன/மத உணர் வென்பது கட்டமைக்கப்பட்டதல்ல, இயல் பானதுதான் என்பதை நிறுவ, பாரம்பரியம் ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. ஆனால் சொல்லப்படும் பாரம்பரியம் இயல்பானதல்ல. வரலாற்றுப் போக்கில் பல்வேறு காலகட்டங் களில் அவ்வக்கால ஆளும் வர்க்கங்கள் அன்றைய சூழலில் நிறைந்திருந்த பன்முகமான கலாச்சார, நிறுவனக் கூறுகளில் ஒருசிலவற்றை மட்டும் தேர்வுசெய்து ஏதோ ஒரு வகையில் இலக்கியமாகவோ, கல்வெட்டாகவோ பதிவு செய்துவிடுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு கலாச்சாரக் கூறுகள் இவ்வாறு பதிவிற்குள்ளாகாமற் போய்விடுவது வெளிப் படை. எடுத்துக் காட்டாக ஆற்றங்கரை உயர் சாதியினர் தவிர்த்த ஏனைய விளிம்புநிலை மக்கள் பேசிய 'கொடுந்தமிழ்' குறித்த பதிவுகள் நமக்கு இன்று இல்லை. வரலாற்றுப் போக்கில் ஏதேனும் ஒரு கட்டத்தில் தன்னை நிறுவிக் கொள்ள முயலும் ஒருகுழு அதற்குரிய வகையில் தன் கீழுள்ள மக்களைத் திரட்ட ஒரு பாரம்பரி யத்தை மேற்குறித்த பதிவுகளிலிருந்து தணிக் கை செய்து, தேர்வு செய்து தொகுத்தளிக்கும். இதையே நாம் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட— ஏற்கனவே இருந்ததை அல்ல (Invented not discovered) — பாரம்பரியம் என்கிறோம். ஏனெனில் வேறொரு குழு தனது மேன்மையை நிறுவும் போது முற்றிலும் வேறுபட்ட ஒரு புதிய பாரம்பரியத்தைக் கண்டு பிடிக்க முனையலாம். இந்துத்துவ சக்திகள் இன்று ராமனை முன் நிறுத்தி ஒரு பாரம்பரியத்தைக் கட்டமைக்க முனைகின்றன, பார்ப்பனீய மேலாண்மையைத் தகர்க்க முனைந்த முன்னோடி **ஜோதிபா பூலே** அவர்கள் பாலி மன்னனை (மகா பலி) இப்படி ஒரு எதிர்க் குறியீடாக உருவாக்க முனைந்தார். இந்துஸ்தான் என்பதற்குப் பதிலாக பாலிஸ் தான் எனவும் ராமநவமிக்குப் பதிலாக மகாபலி பிறந்த நாளைக் கொண்டாட்டமாக்கவும் அவர் முயற்சித்தார். எனவே மேலாண்மையை நிறுவுவதிலான போட்டியானது பாரம்பரியத் தைக் கண்டுபிடிப்பதிலான போட்டியாகவும் வெளிப்படுகிறது. கண்டுபிடிக்கப்பட்ட பாரம்பரி யம் பின்பு பல்வேறு வகையான குறியீட்டு நட வடிக்கைகள் மூலம் மக்களின் பொதுப் புத்தியில் பதிய வைக்கப் படுகிறது. இதில் நவீன தொடர்புச் சாதனங்கள் (தொலைக் காட்சி, ஒலி/ஒளிப் பேழைகள்) சடங்குகள் (ரதயாத் திரை, சிலான்யாஸ், கரசேவை, சோமயாகம் ...) எனப் பலவும் பயன்படுத்தப் படுகின்றன.

தங்களது கட்டமைப்பின் மூலம் மக்களை ஒரு அடையாளத்தின் கீழ் திரட்டுகிற முயற்சி யில் வரையறையின் எல்லைகள் அரசியல் சூழலுக்குத் தகுந்தாற்போல மாறி வருகின்றன என்பதன் பொருள் என்ன? தமிழ்த் தேசிய அரசியலில் 'தமிழன்' என்கிற வரையறை எப்போதும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம் (நிறப்பிரிகை-6ல் அ. மா கட்டுரை). யாரை உள்ளடக்குவது என்பதில் மட்டுமல்ல யாரை விலக்குவது/ யாரை எதிரியாக நிறுத்துவது என்பதிலும் இந்த ஊசலாட்டங்கள் வெளிப் படுவதைக் காணலாம் எ.டு: சிவசேனை தொடங்கப்படும் போது (1964) அது பம்பாய்த் தமிழர்களுக்கு எதிரான இயக்கமாகத் தோன்றி யது, பின்னர் அது கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான இயக்கமாகச் செயற்பட்டது. எழுபது களின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதி யிலும் அது தலித்களுக்கு எதிரான இயக்கமாய் இருந்தது. இன்று அது தன்னை இந்துத்துவ அலைக்குள் இணைத்துக் கொண்டு இசுலாமியர்க்கெதிரான வன்முறையில் முன்னணியில் நிற்கிறது.

இன ரீதியான செயல்பாடுகளை விளக்கு வதற்கு இதெல்லாம் சரி. மதத்திற்குப் பொருந்தி வருமா? மதத்திற்கும் பொருந்தி வரும். இந்து மதத்திற்கு நன்றாகவே பொருந்தி வரும். இந்து மதம் என்கிற பெயரே ஒரு சமீபத்திய கண்டுபிடிப்புதான் என்பது நாமெல்லோரும் அறிந்த ஒன்றுதான் ''நாம்'' என்றால் யார் என்பது **ராஜாராம் மோகன் ராய்** போன்ற 19ம் நூற்றாண்டு ஆட்களுக்குப்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினையாகவே இருந்தது. அந்த நூற்றாண்டின் இறுதியில் 'நாம்' என்றால் இந்தியப் புவிஎல்லைக்குள் வாழும் எல்லோரும் இசுலாமியர் உட்பட என்கிற கருத்தொருமிப்பு உருவாகியது. ''இந்துஸ்தானில் வாழும் எல்லோரும்— அவர்களது தோலின் நிறமும் சாதியும் என்னவாக இருந்தாலும் சரி— இந்துக்கள்தான். வங்காளிகள், மராத்தியர், பஞ்சாபிகள், மதராசிகள், வைதிகர்கள், சமணர்கள், முசல்மான்கள் எல்லோரும் இந்துக்கள் தான்'' என்றார் **பாரதேந்து அரிச்சந்திரா** (1884). இதே காலகட்டத்தில் **சையத் அகமத் கான்** கூட 'இந்து' என்கிற சொல்லை இந்துஸ்தானில் வசிப்பவர்கள் என்றே பயன்படுத்தினார். **பாய் பரமானந்தர்** அமெரிக்காவில் இந்துக்களெல்லாம் முசல்மான்களா? ''என ஒருவர் கேட்டதாக வருத்தப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் இந்து, இசுலாமியர் சீக்கியர் என்கிற விளிப்புகளெல்லாம் யாரை உள்ளடக்கின, யாரை விலக்கின என்பதெல்லாம் கடைசி வரை குழப்பமாகவே இருந்தது என்கிறார் **நானேந்திர பாண்டே**. இன்றும் கூட சமண, புத்த மதத்தவர்களையும் இந்துத்துவத்திற்குள் உள்ளடக்க இந்துத்துவ சக்திகள் முயற்சிப்பதைக் கவனிக்கலாம். தலித்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்ளலாமா இல்லையா என்பது குறித்து 1934 வரை வெளிப்படையாகவே விவாதங்கள் நடைபெற்றன. இறுதிவரை தலித்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்வதில் சனாதனிகள் தயக்கம் காட்டியே வந்தனர். **ராபர்ட் ஃப்ரைகன் பர்க்** இந்துச் சமூகத்தில் ''ஒரு கற்பிதம் செய்யப் பட்ட சமூகம்'' என்று கூறியது இந்தப் பொருளில்தான். ''இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தாழ்த்தப்பட்டோரை யாரும் இந்து என ஒத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் இசுலாமியர்க்கெதிராக எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் காட்டுவதற்காகத்தான் இந்து அரசியல்வாதிகள் தாழ்த்தப்பட்டோரை இந்துக்கள் என வரையறுக்க முற்பட்டனர்''. என்றார் ஓமெய்லி. **அம்பேத்கர்** இதனை இன்னும் தெளிவாக முன் வைத்தார்: ''**நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதல் அம்சம் இந்துச் சமூகம் ஒரு புனைவு என்பதுதான்.** ஒரு சமூகமாக இம் மக்கள் உணராததன் விளைவே ஒரு பொது பெயர் அல்லது அடையாளம் அவர்களுக்கு இல்லாமற் போனதாகும். இந்துச் சமூகம் என்று ஒன்று கிடையவே கிடையாது. சாதிகளின் தொகுதி என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்...... இந்து முஸ்லிம் கலவரங்களின் போது தவிர மற்ற நேரங்களில் எந்த ஒரு சாதியும் மற்ற சாதியோடு தன்னை இணைத்துக் கொள்வதில்லை. மாறாக பிரிந்து நிற்பதில்தான் நாட்டம் காட்டுகின்றன. இங்கே இந்து உணர்வு என்று ஒன்று இல்லவேயில்லை. சாதி உணர்வுதான் இருக்கிறது எனவே 'இந்துக்கள்' ஒரு தேசமாகவோ சமூகமாகவோ ஆக முடியாது.'' எனினும் ஒரு சில பழக்க வழக்கங்கள், பண்டிகைகள் முதலியன ஒன்றாக உள்ளனவே என்கிற கேள்வி எழலாம். அதற்குக்கூட **அம்பேத்கர்** அவர்களின் பதில் ஆணித்தரமாகவே உள்ளது: ''ஒரே மாதிரியான அம்சங்களைக் கொண்டிருப்பது என்பதும் ஒன்றைப் பொதுவாகக் கொண்டிருப்பது என்பதும் வேறு வேறு (To have similar things is totally different from posessing them common). பொதுவாகச் சிலவற்றைக் கொண்டிருப்பதற்கான ஒரே வழி ஒருவரோடொருவர் பரஸ்பரத் தொடர்பில் இருப்பதே (in communication with each other). சாதிய அமைப்பு என்பது பொதுச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட வாழ்வையும் உணர்வையும் கூடத் தடுத்து விடுகிறது. இந்து மதச் சடங்குகளில் கூட பொதுப்பங்கேற்பு கூடாது. இந்துக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தத்தம் சடங்குகளை —அவை ஒரே மாதிரியாக இருந்த போதிலும்— தனித்தனியாகவே செய்கின்றனர். எனவே சடங்குகள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும் அவர்கள் தனித்தனியானவர்களே!''

இருந்த போதிலும் கடந்த ஒரு நூற்றாண்டு கால திட்டமிட்ட அரசியற் செயற்பாடுகளின் விளைவாக இந்துமத உணர்வு என்பது இயற்கையானதுதான் என்கிற புனைவு ஓரளவு மக்களின் பொதுப் புத்தியில் பதிய வைக்கப்பட்டு விட்டது. ஆனாலும் இந்துப் படிநிலை அமைப்பில் மேலிருந்து கீழாக இறங்கி வர வர இந்த உணர்வு குறைந்து வருவதும் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் மிக மிகக் குறைவாக உள்ளதும் கவனிக்கத் தக்கது.

**அகில இந்தியத் தேசியம் பேசும் அரசியல் சக்திகள், இந்துத்துவ சக்திகள், பொதுவுடமையாளர்கள் ஆகிய மூன்று பிரிவினருமே இந்து×முஸ்லிம் முரண் எதிர்ப்பு என்பது இயற்கையானது, நிரந்தரமானது என்கிற சாராம்சவாதச் சிந்தனையுடன்தான் வகுப்புவாதப் பிரச்சினையை அணுகுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.** சனநாயக சக்திகளும் பொதுவுடைமையாளரும் சாராம்சமாக இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை அங்கீகரித்து இருவரும் சமமாக நல்லிணக்கத்தோடு வாழவேண்டுமென வற்புறுத்துகின்றனர். இந்துத்துவ சக்திகளோ சாராம்ச வேறுபாடுகளை அங்கீகரித்து அதனாலேயே இருவரும் சமமாக வாழ முடியாது என்று கூறுகின்றனர். இந்துத்துவ மேலாண்மைக்குள் இசுலாமியர் தங்களை ஆட்படுத்திக் கொண்டு வலிமையான இந்து ராஷ்டிரம் கட்டமைக்கப் பட வேண்டுமென்கின்றனர்.

**நாம் புரிந்து கொள்ள வேண்டியது: இந்து—**



படிப்பகம்

www.padippakam.com

இசுலாமியர் என்கிற உணர்வெல்லாம் வரலாற்று ரீதியாய்க் கட்டமைக்கப்பட்ட ஒன்றுதான். இரண்டையும் முரண் எதிர்வாகப் பார்க்க வேண்டியதில்லை. சாராம்சத்தில் வேறுபட்டதாயும் நாம் கருத வேண்டியதில்லை இந்து என்கிற உணர்வு மிகச் சமீபத்தில் அரசியல் ரீதியாய்க் கட்டமைக்கப்பட்ட ஒன்று. ''வகுப்புவாதம் என்பது ஒரு தற்கால நிகழ்வு. மத்திய காலத்தில் இந்து— இசுலாமியர் என்கிற மதப்பிரிவினையும், இந்துமன்னர் களுக்கும் இசுலாமிய மன்னர்களுககுமிடையில் சண்டைகளும் இருந்த போதிலும் இந்து× இசுலாமிய வகுப்புவாதம் இருந்ததில்லை'' என்கிற **பிபன் சந்திரா** வின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

**வரையறையின் இரண்டாம் கூறு: சமூகப் பிரிவின் அனைத்து உறுப்பினரின் அரசியல், பொருளாதார, சமூக நலன்கள் யாவும் ஒரே தன்மையானவை என்று நம்பி அரசியல் இயக்கம் பெறுதல்:**

இன்றைய இந்தியத் துணைக் கண்டத்தி லுள்ள மக்களனைவரது பிரச்சினைகளுக்குமான விடிவு வலிமையான இந்துராஷ்டிரத்தின் மூலம் மட்டுமே சாத்தியம். தேசபக்தி வளர்வ தன் மூலம் இந்த இழிவுகளிலிருந்து விடுதலை பெறமுடியும் என்பது தான் இந்துத்துவவாதி களின் நியாயம். ஒடுக்குகிற உயர்சாதியினர், முதலாளிகள், நிலவுடைமையாளர் மற்றும் ஒடுக்கப்பட்டுள்ள கீழ்ச்சாதியினர், பெண்கள், உழைப்பாளிகள் ஆகிய அனைவரது நலனும், பிரச்சினைகளும் ஒன்றே என்கிற பொருளாதார மறுப்பு வாதம் இதற்குள் உள்ளடங்கியிருப்பது குறிப்பிடதக்கது. **குரு கோல்வால்கர்:** ''இந்து சமூகத்தை ஒழிக்க விரும்புவோர் சாதி, பெண்ணடிமை, மூடநம்பிக்கை, கல்லாமை ஆகியவற்றைச் சாடுவார்கள். தருமன், அர்ஷன் புலிகேசி ஆகியோரது காலத்தில் இவையெல் லாம் (சாதி, பெண்ணடிமைத்தனம் முதலியன) இருக்கத்தான் செய்தன. ஆனாலும் அன்று நாம் வெற்றிகள் குவித்தோம் புகழ் ஈட்டினோம் எனவே இன்றைய இழிவுகட்குக் காரணம் மேற்கூறியவையல்ல. தேசிய உணர்வு இல்லாததே இதற்கெல்லாம் காரணம். சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பெண்ணடிமை ஆகியவற்றில் கைவைக்காமலேயே அதாவது 'இந்துச்' சமூகத்தின் கொடிய அம்சங்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாத இந்து ராஷ்டிரம் தான் இவர்களின் நோக்கம். அப்படியானால் இதன் மூலம் பயன் பெறுவோர் யாவர்? இந்தக் கேள்விக்குப் பதிலாக **கோல்வால்கரின்** கூற்றிலிருந்து இயண்டு அம்சங்களைப் பெற முடியும். அவை (1) உயர்சாதியினர் (2) ஆண்கள் வடமொழி பற்றிய இந்துத்துவ சக்திகளின் சொல்லாடல்கள் 'ஆர்யவர்த்தம்' பற்றிய அவர்களின் வரையறைகள் ஆகிய வற்றையும் கரசேவைக்குத் திட்டமிட்ட மக்கள் கூட்டம், மசூதி இடிப்பிற்குப் பின்பு இசுலாமிய அழிப்புக்கு கலவரங்களில் பங்கு பெற்ற சக்தி கள் ஆகியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தால் இந்துத்துவ வரையறை யினால் பயன்பெறும் மூன்றாம் சக்தியை நாம் இனம்காண முடியும். அது (3) இந்தி பேசும் வடமாநிலத்து மத்திய தர மற்றும் உயர் வர்க்கத்தினர். அப்படியானால் கீழ்ச்சாதியினர் பெண்கள், தென் மாநிலத்தவர், அடித்தட்டு உழைக்கும் மக்கள் ஆகியோர் இந்துத்துவ வலைக்குள் சிக்கவில்லையா? சொல்லாடலின் விளிம்பிற்குச் செவிசாய்க்கவில்லையா? ஆனால் அப்படித் தெரியவில்லையே? இந்தக் கேள்வி களுக்குப் பதிலையடைய வரையறையின் இரு கூறுகளையும் இணைத்துப் பார்க்கவேண்டும்.

இந்துத்துவம் என்பது அதன் விளிப்பிற்குட் பட்ட எல்லோருக்கும் பொதுவாகக் கட்டமைக்ப் படுகிறது என்றால் அக் கட்டமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது? அதனை மேற்கொள் வோர் யார்? கட்டமைப்பு மேலிருந்து கீழாக மேற்கொள்ளப்படுகிறது; கீழிருந்து மேலாக அல்ல. கீழே இருப்பவர்கள் கட்டமைப்பின் விளைவான செயற்பாடுகளில் செயலூக்கமான பங்கை வகித்தாலும் கூட அத்தகைய செயற் பாடுகளுக்கான ஊக்குவிப்பு என்பது மேலிருந்து வருகிறது. ஒரு 'சதி' (Conspiracy)யாக உருப்பெற்று கீழே திணிக்கப் படுகிறது ஆனால் சமூகத்தில் இடம் பெறும் பொதுவான சொல் லாடல்களில் மேலிருப்பவர்கள் (எ.டு அரசியல் தலைவர்கள்) மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபடுபவர்களாகவும் ஏழைகள், உதிரித் தொழிலாளிகள், சேரிவாழ்வோர் முதலியோர் கலவரங்கள், கொள்ளைகள், பாலியல் வன் முறைகள் ஆகியவற்றிற்குக் காரணமானவர் களாகவும் மத்திய தர வர்க்கத்தினர் இவற்றால் பாதிக்கப்படுபவர்களாகவும் கருத்துக்கள் முன் வைக்கப்படுவது வழக்கம். எடுத்துக்காட்டாக வகுப்புவாதம் பற்றிய **கே. பாலச் சந்தரின்** சமீபத்தில் திரைப்படம் ஒன்றில் (சாதி மல்லி) காந்தி, நேரு, இந்திரா, பா.ஜ.க தலைவர்கள் உட்பட அமைதி நாடுபவர்களாகவும் கலவரங் களில் ஈடுபடுவோர் கீழ்தட்டு மக்கள், கருப்பான தோற்றமுடையோர், கைலி அணிந்திருப்போர் என்பதாகவும் பாதிக்கப்படுவோர் இந்து மத்திய தர வர்கத்தினர்— தோற்றம், பெயர் மற்றும் இதர குறியீடுகளின் அடிப்படையில்— மற்றும் உயர்சாதியினராகவும் காட்டப்படுவது கவனிக்கத்தக்கது. ஆனால் உண்மையில் சமீபத்திய கலவரங்களில் மத்திய தரவர்க்க தினர், பெண்கள் ஆகியோர் பங்கு பெற்றது குறித்து ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன



படிப்பகம்

www.padippakam.com

கீழே இருப்பவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் மேலிருந்து ஆட்டுவிக்கப்படும் செயலூக்கமற்ற பொம்மைகள் என நாம் பார்க்க வேண்டியதில்லை. அவர்கள் மத்தியில் பல்வேறு விதமான அதிருப்திகள் உள்ளன. வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம், பசி பட்டினிச் சாவு கல்வி/மருத்துவம் போன்றவை கைக்கெட்டாமல் போய்விட்ட நிலைமை, சமூக நலத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் படிப்படியாகக் குறைந்து ஒன்றுமில்லாமல் போய்விட்ட நிலைமை, இன்னொரு பக்கம் அவர்கள் கண் முன் வளர்ந்துபோயுள்ள ஆடம்பரங்கள், ஊழல்கள் முதலியன. நகர்ப்புறங்களில் வளர்ச்சி, கிராமப்புறங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோர் வசதி வாய்ப்புகளின்றி நகர்ப்புறங்களில் குவிவதன் விளைவாகச் சமூகச் சமநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள். குடியிருப்புப் பற்றாக்குறைகள், கள்ளச் சாராயம் / ரவுடியிசம் / குற்ற நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு அரசியலரங்கில் ஏற்பட்டுள்ள அங்கீகாரம் வலுவுள்ளவர்கள் மட்டுமே வாழ முடியும் என்ற நிலைமை என்பனயெல்லாம் இங்கே அடித்தட்டு மக்கள் மத்தியில் பல்வேறு அளவில் வெறுப்பையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கெல்லாம் விடிவுகள் என நம்பப்பட்ட பொதுவுடைமை இயக்கங்கள் (திராவிட இயக்கங்கள் உள்ளிட்ட) தேசிய இன இயக்கங்கள் எல்லாம் சர்வதேச அளவிலும், உள்ளூர் அளவிலும் பொய்த்துப் போயுள்ளன. இந்தச் சூழலில் இன்றைய இழிவுகளுக்கெல்லாம் பகுத்தறிவு சாராத, பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட, உணர்வு ரீதியான பதில்களை இந்துத்துவ சக்திகள் (மேலிருந்து) முன் வைக்கின்றன. ''வலிமையான இந்து ராஜ்யம், தேசபக்தி ஆகியவை இல்லாமற் போய்விட்டன. எங்கும் ஊழல் மலிந்து விட்டது. பண்டைய நாட்களில் உலகிற்கே வழிகாட்டும் நாடாக இருந்த பாரதத்திற்கு இன்று இந்நிலைமை ஏன்? நமது பாரம்பரியம், மரபு, தர்மம் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள இழிவுதான் காரணம். சனநாயகம், சமத்துவம் என்ற பெயர்களில் இங்கே திறமையின்மை தலைவிரித்தாடுகிறது. ஒழுக்கக்கேடு தலைமை தாங்குகிறது. உதவி, மான்யம் என்ற பெயர்களில் தேசச் சொத்துக்கள் விரயமாக்கப்படுகின்றன. திறமைக்கு மதிப்பில்லை. தகுதியும் திறமையும் கோலோச்சும் நிலை வேண்டும். ஊழல் ஒழிந்து வலிமையான இந்து ராஜ்யம் அமைய வேண்டும். தேசபக்தி வளரவேண்டும். வரலாற்றில் நம்மீது பதிக்கப்பட்ட பழைய இழிவுகளை நாம் துறக்க வேண்டும். இழிவுக்குக் காரணமானவர்கள் ஒழிக்கப்பட வேண்டும். இந்து தருமம் நிலைநாட்டப் பட வேண்டும். இந்து தருமத்திற்கு அப்பார்பட்டவர்கள் இந்து தர்மத்தை ஏற்றுக்கொண்டு இந்து மயமாக வேண்டும்.''— என்பவைதான் இந்துத்துவ சக்திகளின் பல்வேறு சொல்லாடலிலும் திரும்பத் திரும்ப வெளிப்படும் கருத்துக்கள், இவற்றின் அரசியல் வெளிப்பாடுகளாக நேரு காலத்திய திட்டமிட்ட பொருளாதாரம், சுயச் சார்பான பெருந்தொழில் வளர்ச்சி, அரசுக் கட்டுப்பாடுகள், இட ஒதுக்கீடு, விவசாயம்/கைத்தொழில் இவற்றிற்கான மான்யங்கள் ஆகியவற்றை ஒழித்தல் என்கிற கருத்து முன் வைக்கப்படுகின்றது- இவற்றை ஏதோ நேரு காலத்திய முற்போக்கான நடைமுறைகளிலிருந்து ஒரு பிற்போக்கான புதிய விலக்கம் என்று பார்க்க வேண்டியதில்லை. நேரு காலத்தியப் பொருளாதாரச் செயற்பாடுகளின் தர்க்க பூர்வமான நீட்சியே இவை— கலாச்சார வெளிப்பாடுகளாக மசூதி இடிப்பு, சிறுபான்மை எதிர்ப்பு, இந்துத் திருவிழாக்களை கோயில்/பூசை அறை/குடும்ப மட்டங்களிலிருந்து வீதிக்குக் கொண்டு வருதல், தொடர்புச் சாதனங்கள், பாடப்புத்தகங்கள் ஆகியவற்றை இந்து மயமாக்கல் ஆகியவற்றை குறிப்பிடலாம், இந்தச் செயற்பாடுகளினடிப்படையில் கீழ் நோக்கிக் குறுக்காக ஓடும் உணர்வுகளை இந்துத்துவம் தன்னோடு ஒருங்கிணைத்து(articulation) தனதுமேலாண்மையின்கீழ் கொண்டு வருகிறது. மசூதிஇடிப்பு தொடர்பான கரசேவைமுதலிய நடவடிக்கைகள் அனைத்தும் இந்துத் திருவிழா (செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ) காலங்களிலேயே திட்டமிடப் பட்டது. குறிப்பிடத்தக்கது இதன் மூலம் மேலிருக்கும் இந்துத்துவ ஆதிக்க சக்திகள் தங்களின் மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்கின்றன. திறமைக்கு முன்னுரிமை என்பது பொருளாதாரத் துறையிலும் முன் வைக்கப்படுகின்றது. தொழில்கள் மீதான அரசுக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்கிற பழைய சுதந்திரக் கட்சி முழக்கங்கள் இன்று செயல் வடிவம் பெறுகின்றன. இந்த வகையில் இந்துத்துவத்தால் பயன் பெறும் நான்காவது சக்தியை நாம் **(4) இந்துவல்லாத பொருளாதார ஆதிக்க சக்திகள் எனலாம்.**

''(இந்துத்துவம் என்கிற) கோட்பாட்டின் கட்டுருவாக்கம் என்பது ஒருமேல்தட்டுச் சிறுபான்மை அல்லது சில மேல்தட்டுச் சிறுபான்மைகளின் கூட்டமைப்பு (உயர்சாதி+ அதிகாரவர்க்கம்+ ஆண்+ முதலாளிகள்...) மற்ற எல்லோரையும் மேலாண்மை செய்யும் முயற்சியைத் தவிர வேறொன்றுமில்லை''. -ராபர்ட் ஃப்ரைகன்ப்ர்க்

விசுவ இந்து பரிசத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான **ஆனந்த் சாகர் பாண்ட்யா:** துரதிர்ஷ்டவசமாக அதிகாரத்திலுள்ள மனிதர்கள், செல்வாக்கை அனுபவிக்கும் மனிதர்கள், தேசத்தின் பெரும்பகுதி வளன்களை உரிமையாகக் கொண்டிருப்போர், தங்களது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இந்துத்துவத்தைப் பின்னணியாகக் கொண்டோர் எல்லோரும் இன்று மானவதர்மத்திற்கு வந்துள்ள பேரழிவைப்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிக் கவலைப் படாமல் இருக்கிறார்களே'' என்கிறார். பாண்ட்யா குறிப்பிடும் பேரழிவு என்பது மண்டல் அறிக்கையைத் தொடர்ந்து பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியிலும் அம்பேத்கர் நூற்றாண்டை யொட்டித் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வைத்தான். மாலை தர்மம் என்பது மனுதர்மம் தான். பிற்படுத்தப்பட்ட + தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி மனுதர்மத்திற்கு ஆபத்து என்பதும் இதனால் அழியப் போவது மேல்சாதியினர், அதிகாரவர்க்கம், பொருளாதார ஆதிக்க சக்திகள் ஆகியோர்தான் என்பதும் பாண்ட்யாவின் கவலைகள்.

மேலாண்மை செய்ய விழையும் ஆதிக்க சக்திகள் யார் என்பதைக் கண்டோம். இந்தச் சக்திகளின் இந்துத்துவ சொல்லாடல் மக்களின் பொதுப் புத்தியில் படிந்து மேலாண்மைக் கருத்தியலாக மாறும் பட்சத்தில்,

* வருணாசிரமம் புதிய வடிவில் நிலை நிறுத்தப்படும்.
* சிறுபான்மையினரை இந்து மயமாக்கல் என்ற பெயரில் அவர்களின் கலாச்சாரங்கள் அழித்தொழிக்கப்படும். தலித் மற்றும் பல்வேறு குழுக்களின் பன்மைக் கலாச்சாரக் கூறுகள் தீய்க்கப்பட்டு, ஒற்றைக்கலாச்சார மேலாண்மை நிறுவப்படும்.
* வரலாற்றுப் போக்கில் அடைந்துள்ள பெண்ணுரிமைகள் ஒடுக்கப்படும்.
* தேசிய இன உணர்வுகள் தீய்க்கப்படும்.
* தகுதி, திறமை என்ற பெயரில் இட ஒதுக்கீடுகள், சலுகைகள், மான்யங்கள், ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி, மருத்துவ வசதிகள் முதலியன நீக்கப்படும்.
* சுதந்திரமான போட்டி என்கிற வகையில் தொழில் துறையில் எஞ்சியுள்ள கொஞ்ச நஞ்ச அரசுக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு பெருந்தொழில் நிறுவனங்கள் மட்டுமே நிலை நிறுத்தப்படும்.
* கட்டுப்பாடு, ஒழுங்கு என்கிற பெயர்களில் சனநாயக உரிமைகளும், அரசியல் நிறுவனங்களும் முடக்கப்படும்.

**விட்டுப்போன சில குறிப்புகள்:** (1) வகுப்பு என்பது மேலிருந்து வரையறுக்கப்படுகிறது; செயற்கையாய்க் கட்டமைக்கப்படுகிறது என்று சொன்னோம். வரையறுக்கப்படுகிற இன/மத மொழிக் குழுவைச் சேர்ந்த பெண்களின் பாலியல் அடையாளம் என்பது இக்கட்டுமானக் கூறுகளில் ஒன்றாகும். இதன் மறுதலையாக இன/மத/ மொழிக் குழுவின் அடையாளத்தின் மூலம் அந்தக் குழுவைச் சேர்ந்த பெண்களின் 'பெண்மை'/பாலியல் அடையாளம் கட்டுவிக்கப்படுகிறது. எ.டு. ''தமிழ்ப்பெண்'' என்கிற வரையறை மூலம் அச்சம், மடம், நாணம், கற்பு என்றும் 'அணிகலன்களோடு' தமிழ்ச் சமூகப் பெண்மை வரையறுக்கப் படுதல் இதன் மறுதலை; தமிழ்ச் சமூகம் என்பதன் அடையாளங்களில் ஒன்றாக தமிழ்ப் பெண்களின் கற்பு குறிக்கப் பெறுதல். தமிழ்ப்பெண் பற்றிய புனைவு/பிம்ப உருவாக்கமில்லாமல் தமிழ்ச் சமூக வரையறை முழுமையடையாது என்பதை நாம் அறிவோம் அதே போல ''இந்துப் பெண்'' என்கிற பிம்பமும் கட்டமைக்கப்படுதல் கவனிக்கத் தக்கது. தாய்மையின் வடிவமாய் 'மாத்ரி சக்தி'யாய் இந்துத்துவம் இந்துப் பெண்களை அடையாளப்படுத்துகிறது. ''சதி''மூலம் ராஜபுத்திரப் பெண்மை வரையறுக்கப்பட்டதும், இதன்மூலம் ரஜபுத்திர இனஉணர்வு மீண்டும் தொகுக்கப்பட்டதும், அரசியல் ரீதியாய் இது இந்துத்துவ சக்திகளின் ஓட்டு வங்கியாய் மாற்றப்பட்டதும் நினைவிருக்கும். இந்துத்துவத்தின் உருவாக்க காலத்தில் பாரதமாதா என்ற குறியீடு உருவாக்கப்பட்டதை மறந்திருக்க முடியாது. பாரதி தனது 'இந்தியா' இதழின் அட்டையில் பாரதமாதா படம் போட்டதையும் **சுப்பிரமணிய சிவம்** பாரதமாதா கோயில் கட்ட முனைந்ததையும் கூட மறந்திருக்க முடியாது. இந்தப் பாரதமாதா உயர்சாதி/உயர் வர்க்கப் பெண்ணின் அடையாளங்களுடன் (உடை உருவத்தோற்றம், உடல்வண்ணம்) உருவாக்கப்பட்டதும் இங்கு நினைவு கூறத்தக்கது. ஒரு வகுப்பை/குழுவைச் சேர்ந்த பெண்களின் 'பெண்மை' மூலம் அக்குழு கட்டமைக்கப்படுவதன் இன்னொரு விளைவு, அக்குழுவின் அடையாளங்களை அழித்தொழித்து அதைத் தனது மேலாண்மையின் கீழ் கொண்டு வர விரும்பும் இன்னொரு குழு முன்னதன் 'பெண்மை'யின் மீது தாக்குதல் தொடுப்பது. இசுலாமியப் பெண்களுக்கும் இந்துப் பெண்களுக்குச் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்கிற இந்துத்துவத்தின் திடீர் கரிசனத்தையும், வகுப்புக் கலவரங்களின் போது இசுலாமியப் பெண்களின் உடல்கள் என்பன இந்துத்துவத்தின் 'தர்மயுத்தக்' களங்களில் ஒன்றாக மாற்றப்படுவதும் கவனிக்கத் தக்கன. சமீபத்திய பம்பாய் சூரத் கலவரங்களில் வெள்ள விளக்குகளின் (Flood light) வெளிச்சத்தில் இசுலாமியப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதும், அந்நிகழ்ச்சி வீடியோ படம் எடுக்கப்பட்டதும் பின்னர் அப் பெண்கள் நிர்வாணமாய் நடத்திச் செல்லப்பட்டதும் நினைவிருக்கலாம். 1917 கலவரத்தின் போது இசுலாமியர் மீதான தாக்குதல் தொகுக்கப்பட வேண்டியது குறித்த சுற்றறிக்கைகளில் 'இதனைச் சுற்றுக்கு விடாதவர்களும், இதன்படி நடக்காதவர்களும் தமது



படிப்பகம்

www.padippakam.com

மகளைப் புணந்தவர்களாக, மனைவியின் மூத்திரத்தை குடித்தவர்களாக, ஒரு துலுக்கனுக்குத் தாயைக் கூட்டிக் கொடுத்தவர்களாகக் கருதப் படுபவர்'' எனக் குறிப்பிடப்பட்டதை **நானேந்திர பாண்டே** முதலியோர் எடுத்துக் காட்டியுள்ளதும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

(2) வகுப்புவாதம் (communalism), மீட்பு வாதம் (Revivalism) ஆகியவற்றை மத அடிப் படைவாதத்திலிருந்து (Fundamentalism) வேறுபடுத்திப் பார்ப்பது அவசியம். இசுலாமிய அடிப்படைவாதத்தையும் இந்து மீட்பு வாதத் தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சில உண்மைகள் விளங்கும். இரண்டுமே பின்னோக்கி இழுத்துச் செல்பவை; சனநாயகவிரோதமானவை, ஒழுக்க நியதிகளை வற்புறுத்துபவை என்பவை பொது அம்சங்கள். அடிப்படைவாதம் பெரும்பாலும் ஒரு மதத்தலைவரை மையமாகக் கொண்டிருக் கும் (எ.டு: **கோமேனி**). வகுப்புவாத மற்றும் மீட்புவாத நடவடிக்கைகளில் மதத் தலைவர்கள் பங்கு பெற்றாலும் இவர்கள் மையமாக விளங்க மாட்டார்கள். எனினும் அடிப்படைவாதம் வெறும் அரசியல் மேலாண்மை என்பதைக் காட்டிலும் சமூகத்தின் சகல அம்சங்களிலும் மத ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்கிற நோக்கைக் கொண்டிருக்கும். குற்றவாளிகள் எப்படி தண்டிக்கப்படவேண்டும், வணிகம் எப்படி நடத்தப்பட வேண்டும், பெண்கள் எவ்வாறு உடை உடுத்த வேண்டும் எனச் சகல அம்சங் களிலும் தனது கருத்தைத் தெரிவிப்பதோடு செயல்படுத்தவும் முனையும். வகுப்புவாதமும் மீட்பு வாதமும் அப்படிச் சகல துறைகளிலும் தனது கருத்துக்களை வெளிப்படையாக முன் வைக்காததோடு அடிப்படையான சமூக ஒழுங்கைப் பெரிதும் பாதிக்கக் கூடாது என்கிற எல்லைக்குள் நவீன காலத்திற்குத் தகுந்தாற் போல கருத்துக்களில் சில மாற்றங்களையும்கூட அனுமதிக்கும். அடிப்படைவாதம் இன்றைய பிரச்சனைகளுக்குச் சில அரசியல்/பொருளாதார தீர்வுகளை முன்வைக்கும். எ,டு: **ஷா காலத்திய ஈரானின்** இழிவுகளுக்குக் காரணமாக ஈரான் அமெரிக்காவின் புதிய காலனியாக மாறிப் போனதை அடிப்படைவாதம் சுட்டிக் காட்டியது ஆனால் மீட்பு வாதம் பிரச்சினைகளுக்கான அரசியல்/பொருளாதாரக் காரணிகளை மர்மப் படுத்த முனையும். இந்து மீட்பு வாதம் பொரு ளாதாரப் புலத்திலிருந்து பிரச்சினைகளை தர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட உணர்வுப் பிரச் சினையாக முன் வைப்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். அடிப்படைவாதம் என்பது வெறு மனே தனது மத நம்பிக்கையைக் காப்பாற்று வதற்காக மட்டுமின்றி தனது உறுப்பினர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடனும் செயல்படும். அந்த வகையில் அடிப்படைவாதம் இருக்கிற நிலையை மாற்றி யமைக்கும் நோக்குடையதாக இருக்கும். ஆனால் மீட்பு வாதமோ இருக்கிற சமூக நிலை யைத் தக்க வைப்பதாக இருக்கும். இந்து மீட்பு வாதம் மனு தருமத்தையும் வருணாசிரமத்தை புத்துயிர்க்கும் நோக்குடன் செயல்படும் உண்மை இதனை விளக்கும். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டிருந்தாலும் மத அடிப்படை யிலான கருத்தியல் என்பது கடைசியில் எங்கு இட்டுச் செல்லும் என்பதற்கு ஈரான் உதாரண மாக அமைந்த போதிலும் ஈரானிய அடிப்படை வாதத்தில் கண்ட தொடக்க நிலை முற்போக்கு கூறுகளையும்கூட மீட்பு வாதத்தில் நாம் தேட முடியாது. எந்த அம்சத்திலும் மனிதர்களை நேசிப்பவர்கள் இன்று மீட்பு வாதத்துடன் சமரசம் கொள்ளவே முடியாது.

3. ஒழுங்கு-நிலைத்தன்மை ஆகியவற்றை இந்துத்துவம் வற்புறுத்துகிறது. மேலிருந்து கீழான படிநிலை அமைப்பாகத் தொகுக்கப் பட்டுள்ள இந்துச் சமூகத்தில் எந்த ஒரு இடை நிலையிலுள்ள சாதியும் தனக்குக் கீழேயுள்ளவர் வர்கள் ஒழுங்கு நியதிகளுக்கு உட்படவேண்டும் என்கிற ஆர்வமுடையவர்களாக இருப்பதால் 'ஒழுங்கின்மை பற்றிய அச்சம்' என்கிற ஆதார மான மத உணர்வானது சகலரிடத்திலும் செல்லுபடியாகிறது. இதனை இந்துத்துவம் பயன்படுத்திக் கொள்கிறது.

## 2. இந்துத்துவம்—தலித்கள்—பெண்கள்

பெங்களூர் மாநாட்டின் இறுதியில் (ஜீன் 1993) பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் புலம்பி யிருக்கிறார்கள். எல்லோரும் அவர்களை வருணாசிரமத்தை நிலை நாட்டுபவர்கள் எனச் சொல்கிறோமாம். சிறுபான்மையினர் அவர்களை நம்ப மறுக்கிறார்களாம். உண்மையில் அவர்கள் அப்படியெல்லாம் கிடையாதாம். ஆனால் சில மாதங்களுக்கு முன்பு 'சன்டே' இதழுக்காகப் பேட்டியாளர்கள் நேரடியாக இதுபற்றிக் கேட்ட போது ரொம்பவும் மிதவாதியாக பா. ஜ. க. தலைமையால் முன்னிருத்தப்படும் **வாஜ்பாயி** யால் தங்கள் நோக்கம் வருணாசிரமமல்ல என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. இமாசலப் பிரதேச பா. ஜ. க. அரசு தனது ஆட்சிக் காலத்தில் சாதித்தவைகளில் ஒன்று மணலி என்னுமிடத்தில் 'மனு' கோயிலை ஏராளமான செலவில் புதுப்பித்தது 1992 ஏப்ரல் 18, 19 தேதிகளில் மதுராவில் உத்திரப் பிரதேச மாநில இந்து வக்கீல்கள் மாநாடு நடை பெற்றது. அதில் பா. ஜ.க. அரசின் அட்வகேட் ஜெனரல் **வி. கே. என். சந்தாரி** பேசுகையில் 'எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற சட்ட நூல் மனு ஸ்மிருதிதான்' என்று குறிப்பிட்டார். இதனை ஆர். எஸ். எஸ் சின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'ஆர்கனைசர்' (மே 10, 1992) ஒப்புதலுடன் வெளியிட்டுள்ளது. மற்றும் சில



படிப்பகம்

www.padippakam.com

இந்துத்துவ சக்திகளின் மனு தரும ஆதரவுக் குரல்கள்கீழே:

1. 'இந்துக்களுக்குப் படிப்பு எதற்கு? விவசாயிகள் யாரோடு தொடர்பு கொள்ளப் போகிறார்கள்?' எனச் சமீபத்தில் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி கொடுத்துப் புகழ்பெற்ற **கே. ஆர். மல்கானி**, 'ஆர். எஸ். எஸ் கதை' என்றொரு நூல் எழுதியுள்ளார். அதில் 'குருகி (**கோல்வால்கர்**) இசுலாமியர்கள் தனிச் சட்டம் வைத்துக் கொள்ளட்டும். இந்துக்களின் சட்டம் மனு ஸ்மிருதியுடன் தனது தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளாவிட்டால் போதும் என்றார்' என்கிற செய்தியைக் குறிப்பிட்டு உள்ளார்.

2. விஸ்வ இந்து பரிஷத்(வி.இ.ப)தின் **அசோக் சிங்கால்** 'நமது தர்மாசார்யர்கள் எதைத் 'தர்மம்' எனச் சொல்கிறார்களோ அதைச் சட்டமாக ஏற்றுக் கொள்வோம்' (பயனீர்,டிச4,'92) தர்மாசார்யர்கள் என்ன சொல்கிறார்கள்? **பூரி சங்கராச்சாரி** சாதியம், தீண்டாமை, சதி ஆகியவற்றை இந்து தர்மத்தின் பிரிக்க இயலாத கூறுகள் என்கிறார். **காஞ்சி பரமாச்சாரியோ** மனுதான் இந்துச் சட்டத்தின் அடிப்படை இலட்சிய இந்து அரசின் மையமாக அதுவே அமைய வேண்டும் என்கிறார்.

3. வி.இ.ப வின் 'சார்த் சமிதி' கூட்டத்தில் (அக். 13, 14, 1992) **சுவாமி முத்தானந்தா சரஸ்வதி** என்பவரின் தலைமையில் இன்றைய இந்து எதிர்ப்பு (!?!) அரசியல்|| சட்டத்தைத் திருத்தி அமைக்க ஒரு நால்வர் குழு நியமிக்கப் பட்டுள்ளது. இவரது பேட்டி 'ப்ரன்ட்லைன்' (ஜன 29,'93) இதழில் வந்துள்ளது. இன்றைய பசி, பட்டினி, அதர்மம் ஆகியவற்றிற்குக் காரணம் இந்திய அரசியல் சட்டத்திலுள்ள (கொஞ்ச நஞ்ச) சனநாயக அம்சங்கள்தான் என்கிறார் முத்தானந்தா. பெண்கள் மற்றும் ஒடுக்கப் பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் சமூக ஒற்றுமையைச் சிதைக்கும், சமத்துவத்தை(!)க்குலைக்கும்என்கிறார். மேலேயின மக்களுக்கு இயற்கையால் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மட்டும் பாதுகாத்தால் போதும் என்கிறார்.

4. **வீர் பாரத் தல்வார்** (ஆர்.எஸ்.எஸ்) 'இந்துவை அடையாளப்படுத்தும் மூன்று நடைமுறைகளாவன: (அ) வருணத்தை ஏற்றுக்கொள்ளல் (ஆ) பசுவை வணங்குதல் (இ) இறந்தவரைப் புதைத்தல்' மனுதர்மத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி பசுவை வணங்குதல் என்பதன் மூலம் பசுவை உண்ணும் தாழ்த்தப்பட்ட மக்களை இந்துச் சமூகத்திலிருந்து விலக்கி வைப்பது கவனிக்கத் தக்கது.

5. மனுதர்மத்தை நிலைநாட்டுவதற்கு இன்றைய சனநாயக நிறுவனங்கள் தடையாக இருக்கும் என்பதால் அவற்றையும் விட்டு வைக்கவில்லை இந்துத்துவம். காஞ்சி மட **நடு சங்கராச்சாரி** ஒரு கட்டுரை எழுதியுள்ளார் (பகவன்ஸ் ஜர்னல், நவ 30, 1989). அதில் 'பழைய ஆட்சிகள் தரும சாத்திரப்படி நடந்தன எந்த அரசனும் மனு ஸ்மிருதியை மாற்ற முனையவில்லை...எல்லோருக்கும் வாக்குரிமை என்பது தேவையில்லை. சொத்து, கல்வி, அரசியல் நீரோட்டங்களைப் புரிந்துகொள்ளும் திறமை, தரும சாஸ்திரத் தேர்ச்சி ஆகியவற்றைக் கொண்டவர்கள் மட்டும் வர்க்களித்தால் போதும்' **முத்தானந்தா** 'இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்கு வாக்குரிமை என்பது தேவையற்ற ஆடம்பரம். சனநாயகத்தின் அய்ந்து தூண்கள் எனச் சொல்லப்படும் நிர்வாகம், பாராளுமன்றம், குடியரசுத் தலைவர், நீதிமன்றம், தணிக்கை அதிகாரி போன்றவை இந்தியச் சூழலுக்குத் தேவையேயில்லை.' ஆர்.எஸ்.எஸ் பத்திரிகை பாஞ்ச ஜன்யம் (டிச6 92) 'உலகெங்கிலுமுள்ள இந்துக்களின் இதய சாம்ராஜ்யத்தில் ஆட்சி செலுத்துபவர் நேபாள மன்னர் வீரேந்திரர்' இந்துத்துவத்தின் மூலவர் **டி.வி. சாவர்க்கார்** 'பிரிட்டிஷார் (இந்திய) ஆட்சியை நேபாள மன்னரிடம் கொடுத்து விடுவது நல்லது' குவாலியர் ராணி விஜய ராஜே இந்தியா, உதய்ப்பூர் மன்னன் பக்வத்சிங் ஆகியோர் பா.ஜ.கா, வி.இ.ப ஆகியவற்றில் முக்கிய பொறுப்புக்களில் இருப்பது குறிப்பிடத் தக்கது.

பாரதிய ஜனதா போன்ற தேர்தல் களத்தில் செயல்படக்கூடிய கட்சிகள் எல்லாச் சமயங்களிலும் மனுவை நிலைநாட்டுவதுதான் தங்களின் நோக்கம் என்று சொல்லிவிட முடியாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தார்மிக வாழ்வு, ஸ்வதர்மம், தருமம், படிநிலையாய் ஒழுங்கமைக்கப் பட்ட "சன்சாரா" ஆகியவற்றை விதந்தோதுவதைக் காணலாம். ஆக மனு தருமத்தை நிலைநாட்டுவதும் சனநாயக உரிமைகளைக் குழி தோண்டிப் புதைப்பதுந்தான் இந்துத்துவத்தின் இறுதி இலக்கு என்பது தெளிவு. உலகெங்கிலுமிருந்த எந்த ஏற்றத்தாழ்வான சமூகங்களிலும் மனு போன்ற ஒரு கொடிய 'தரும சாஸ்திரம்' இருந்ததில்லை. மனுதருமம் எவ்வாறு கீழ்சாதியினருக்கும் பெண்களுக்கும் எதிரானது என்பதை விளங்கிக் கொள்ள **டாக்டர் அம்பேத்கரின்** 'பார்ப்பனீயத்தின் வெற்றி' நூலைப் படிக்கலாம்.

சாதி ரீதியான ஏற்றத் தாழ்வுகளையும் புறப் புரிமைகளையும் தக்கவைப்பதற்காக 'இந்துத் துவம்' செய்கிற தகிடுதத்தங்களில் ஒன்று 'சமத்துவம்' என்கிற கருத்தாக்கத்திற்கு



படிப்பகம்

இந்துத்துவ விளக்கமளிப்பது. இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்: பொதுவில் சமத்துவம் என்பதை இரு வழிகளில் வரையறுக்கலாம்.

**இலட்சியவரையறை** (Formal Definition): ''சமமானவர்களைச் சமமாக நடத்துதல்''. 2. **எதார்த்த வரையறை** (Substantive Definition) ''சமமற்ற இருவருக்குச் சமவாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர்களைச் சமமற்ற முறையில் நடத்துதல்''. (எ.டு): பேருந்துகளில் ஊனமுற்றோருக்குத் தனி இருக்கை அளித்தல். ஊனமுற்றோரும் ஆரோக்கியமானவர்களும் சமமற்றவர்கள். இருவரையும் சமமாக நடத்துதல் என்பது ஊனமுற்றோருக்கு அநீதி இழைப்பது எனவே அவர்களுக்குத் தனி இருக்கை அளித்து சமமற்ற முறையில் நடத்துவதே உண்மையான சமத்துவம். இவ்வாறு, ஏற்றத் தாழ்வான ஒரு அமைப்பில் ஈடுகட்டும் நோக்கிலான வேறுபடுத்தல் என்பது சமத்துவம் பற்றிய சொல்லாடலில் ஒரங்கம்தான். எனவே சமத்துவ நோக்கிலான உண்மையான செயல்பாடுகளுக்கு இருவகை அணுகல் முறைகளையுமே நாம் சூழலுக்குத் தகுந்தாற்போல செயல்படுத்த வேண்டியிருக்கிறது.

இப்போது பாலியல் **சமத்து**வம் என்கிற பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். மூன்று விதமான சமூக அணுகல் முறைகளை நாம் சுட்டிக் காட்ட முடியும். **ஆண்- பெண் பாலியல் வேறுபாடு சாராம்ச ரீதியிலானது**: பெண்கள் இயல்பாகவே பலவீனமானவர்கள். பெண் பலவீனம் என்பது ஒரு சாரம்சப் பண்பு எனவே பெண்களுக்கான சமூகக் கடமைகள் ஆண்களிலிருந்து வேறுபட்டவை. எ.டு: தாய்மை, குழந்தை வளர்ப்பு, வீட்டுப் பணிகள் முதலியன. நிலவும் பெண்ணடிமைத் தனத்தில் இருந்து விடுதலை பெற பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒதுக்கீடு அளிக்கலாம். வேலை இடங்களில் பெண்களுக்குக் குழந்தை காப்பு வசதிகள் முதலியவற்றைச் செய்து தரலாம். (ஆ) **ஆண்- பெண் வேறுபாடு சாராம்ச ரீதியானதல்ல**: எந்த விதத்திலும் பெண்களுக்குத் தனித்துவமான சமூகக் கடமைகளை அளிக்கக் கூடாது. பெண்களும் இத்தகைய நோக்கிலான கடமைகளை உதற வேண்டும். பெண்களைப் பலவீனர்களாகக் கருதித் தனிச் சலுகைகள் அளிப்பதென்பதுகூட வேறுபாடுகள் நீடிப்பதற்கே இட்டுச் செல்லும். (இ) **பெண்களை வரலாற்று ரீதியாய் பின்னால் தள்ளப்பட்டவர்களாக அணுகும் போக்கு**: ஆண்- பெண் வேறுபாடு சாராம்ச ரீதியானதல்ல. தாய்மை, குழந்தைப்பேறு போன்ற தனித்துவமானசமூகக் கடமைகளுக்கு தான் பெண் தகுதியானவள் என்பது பொய். எனினும் தந்தைவழிச் சமூகத்தில் இத்தகைய அணுகல்முறை நீண்டகாலமாக மேற்கொள்ளப் பட்டதால் பெண் வரலாற்று ரீதியாய்ப் பின் தங்கிய நிலையிலுள்ளாள். இந்நிலையில் இலட்சிய வடிவிலான சமத்துவ நோக்கில் இருவரையும் சமத்துவமாக நடத்துவதென்பது பெண்களை மேலும் பின்தங்கிய நிலைக்கே இட்டுச் செல்லும். எனவே இப்பின்தங்கிய நிலையை ஈடுகட்டும் போக்கில் பெண்களுக்கு வேறுபடுத்தப்பட்ட முன்னுரிமைகள் வழங்கப் பட வேண்டும். எ.டு: எல்லா வேலை வாய்ப்புகளிலும் பெண்களுக்கு 50 சத ஒதுக்கீடு. அதே சமயத்தில் எந்த வேலையையும்—தாய்மை உட்பட-பெண்களுக்கானது எனஒதுக்கக்கூடாது

இப்போது இந்துத்துவத்தின் சமத்துவம் குறித்த சொல்லாடலுக்குள் வருவோம். தருமம், கருமம் போன்ற கோட்பாடுகளை ஒரு மட்டத்திலும் (அதாவது ஒவ்வொருவரின் கரும வினைக்கு மூறப இப்பிறவியில் தருமம் நிர்ணயிக்கப்படுகிறது; தருமத்தை நிறைவேற்றி அவன் கருமத்தை முடித்து உயர வேண்டும்), ஒத்திசைவு (Harmony), (Symbiosis) போன்ற கோட்பாடுகளை இன்னொரு மட்டத்திலும் இந்துத்துவச் சொல்லாடல் பயன்படுத்துகிறது. ஒத்திசைவு என்பது சமத்துவமல்ல. மாறாக சமமற்றவைகள் ஒருகிணைந்து செயல்படுவது. இந்த ஒத்திசைவு சிதைந்தால் சமமற்றவைகளாவன முழுமை அழியும். அதாவது அதன் உறுப்புகள் ஒவ்வொன்றும் அழியும். எனவே எல்லாம் அழியாமல் இருக்க வேண்டுமானால் ஒவ்வொன்றும் த்தம் நிலையை ஏற்றுக் கொண்டு ஒத்திசைந்து செயல்பட வேண்டும். **கோல்வால்கர்**, புருஷசூக்தத்தின் அடிப்படையில் இதனை விளக்குவார். பிராமணன்— முகம்; சத்திரியன்— தோள்; வைசியன்— தொடை; சூத்திரன்— பாதம். இவை அனைத்தும் இணைந்ததே புருஷன். இவை எல்லாம் ஒத்திசைந்து செயல்படுவதே சமூக இயக்கம். இந்துத்துவ அணுகல்முறை சமத்துவம் குறித்த இலட்சிய அணுகல்முறை, எதார்த்த அணுகல்முறை ஆகிய இரண்டையுமே குழி தோண்டிப் புதைப்பது கண்கூடு. தவிரவும் இந்துத்துவம் இந்த வரையறையையும் கூட ஒரே சீராகக் கடைபிடிப்பதில்லை என்பது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம். எ.டு: ஷாபானு பிரச்சினையில் பெண்களை இசுலாமியப் பெண்கள் எனவும் இந்துப்பெண்கள் எனவும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது என்கிறது இந்துத்துவம். இருவரையும் பெண்கள் என்கிற வகையில் சமமாய் நடத்த வேண்டும் என்பது அதன் வாதம். காசுமீர் பிரச்சினை மற்றும் இதர சிறுபான்மைப் பிரச்சினைகளை

www.padippakam.com

யும் அது இப்படித்தான் அணுகுகிறது. இந்த அம்சங்களில் வேறுபாடுகளை அங்கீகரித்து சமூக ஒத்திசைவு என்ற கோட்பாட்டை இந்துத்துவம் ஏற்க மறுக்கிறது. ஆனால் வருணப் பிரச்சினையில் வேறுபாடுகளுக் கிடையே ஒத்திசைவு கோட்பாடு வலியுறுத்தப் படுகிறது. சிறுபான்மையினரின் வரலாற்று ரீதியான பின் தங்கிய நிலையைக் (Disadvantageous Position) கணக்கில் கொண்டு அவர்களுக்குச் சிறப்புச் சலுகைகளை அளிப்பதுதான் உண்மையான மதசார்பின்மை என்கிற கருத்தையும் வரலாற்று ரீதியான சாதியக் கொடுமைகளை ஈடுகட்டும் நோக்கில் கீழ் சாதியினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பதுதான் உண்மையான சமூக நீதி என்ற கருத்தையும் ''எல்லோரும் சமம்; சமமானவர்களுக்குச் சம வாய்ப்பும் திறமைக்கு முன்னுரிமை'' போன்ற முழக்கங்களால் கவிழ்க்கும் இந்துத்துவம் மனுதர்மம், வருணாசிரமம், மேல் சாதி ஆதிக்கம் ஆகிய அம்சங்களில் ''வேற்றுமையில் ஒத்திசைவு'' என்கிற அணுகல் முறையைக் கடைபிடிப்பது குறிப்பிடத் தக்கது.

**இந்துப் பெண்ணையும், இசுலாமியப் பெண்**ணையும் சமமாக நடத்த வேண்டும் எனச்சொல்லும் இந்துத்துவம் இந்துப் பெண்ணையும் இந்து ஆணையும் சமமாக நடத்தக் கூடாது எனச் சொல்கிறது. இந்துக் கடவுளரின் மனைவிகள், புராணப் பெண் பாத்திரங்கள் ஆகியவற்றினடிப்படையில் 'இந்துப்பெண்' கட்டமைக்கப்படுகின்றாள்— கடமை தவறாத மனைவி, தியாக உருவான தாய்— பா. ஜ. க வெளியிட்டுள்ள ''நமது அய்ந்து குறிக்கோள்கள்'' (1984) என்ற வெளியீட்டிலிருந்தும் அக் கட்சியின் 'மகிள மோர்ச்சா' அமைப்பைச் சேர்ந்த **சின் கா** என்பவரின் கருத்துக்களிலிருந்து (ஆர்கனைசர், செப் 1, 85) இக்கட்சியின் பாலியல் சமத்துவம் குறித்த கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளலாம். ''இந்தியப் பாரம்பரியம் முன் வைத்து ஏற்றுக் கொண்ட பாலியல் சமத்துவத்தைப் பெண்களுக்கு மீட்டுத் தருவதென பா. ஜ. க. சபதமேற்கிறது'' எனத்தனது பழைய பொற்காலச் சொல்லாடலோடு தனது பாலியல் சமத்துவச் சொல்லாடலை ஒருங்கிணைக்கிறது பா. ஜ. க. இந்துப்பாரம்பரியத்தின் பாலியல் சமத்துவம் பற்றி இங்கே நாம் விளக்க வேண்டியதில்லை, ''மேற்கில் வளர்ந்து வரும் பெண் விடுதலை இயக்கங்களிலிருந்து நாங்கள் கோட்பாட்டளவில் வேறுபடுகிறோம் சமூக மற்றும் பொருளாதார அளவிலான ஒரு வகையான மறுசீரமைப்பை நாங்கள் கோருகிறோம். மதிப்பீடுகளில் அடிப்படை மாற்றங்கள் தேவையில்லை. வீட்டுக்குள்ளும் சமூகத்திலும் இந்தியப் பெண்களுக்கு எப்போதும் ஒரு கவுரவமான இடம் இருந்து வந்திருக்கிறது. அதனை மறுஉறுதி செய்து மறுபடி நிறுவினால் போதுமானது''. என்கிறது மகிள மோர்ச்சா (அழுத்தம் நமது). ''ஆண்களும் பெண்களும் சமம்தான் ஆனால் ஒன்றல்ல'— பா. ஜ. க. சமத்துவம் என்கிற சொல்லாடலை முன் வைத்துக் கொண்டே அதன் உண்மையான பொருளை மறுக்கிற விசயத்தில் பா. ஜ. க. காரர்கள் கெட்டிக்காரர்கள்தான். பாசிசத்தின் முக்கிய பண்புகளிலொன்று குடும்ப அமைப்பை காப்பாற்றுவதில் முனைப்புக் காட்டுவது. இந்துத்துவமும் இதற்கு விதிவிலக்கில்லை. ''ஆணும் பெண்ணும் குடும்பத்தின் இருசக்கரங்கள். ஆண் பெண் ஒற்றுமை மற்றும் சமத்துவத்திற்கான மிகச் சிறந்த எடுத்துக் காட்டு அர்த்தநாரீசுவரர் தத்துவம்தான்'' இது மிருதுளா 'பெண்களுக்கு சம உரிமை அளிக்கப்படும் போதுதான் தந்தையின் பாசமும், கணவனின் அன்பும், மகனின் மரியாதையும் அவளுக்குக் கிடைக்கும்'' இதுவும் மிருதுளாதான். ஒரு சமூகத்தைச் சேர்ந்த பெண்களின் பெண்மையை வரையறுப்பதன் மூலம் அச் சமூகத்தின் வரையறை உருவாக்கப்படுகிறது என்றோம். எனவே அச் சமூகத்திய பெண்ணின் பாரம்பரியக் கடமைகளாகச் சொல்லப்படுபவைகளில் ஏதும் மாற்றங்கள் நிகழ்ந்தால் அந்தச் சமூக வரையறையையே அடையாளத்தையே கேள்விக்குள்ளாக்குவதாக கருதப்படும். இந்து விதவை மறுமணச் சட்டம் இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம் (1937) சிறப்புத் திருமணச் சட்டம் (1954), இந்துத் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் (1955) ஆகியவற்றின் மூலம் இந்துப் பெண்களுக்குச் சில சட்ட ரீதியான உரிமைகள் **அம்பேத்கர்** போன்றோரின் முயற்சியால் வழங்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசு வெளியிட்டுள்ள பாடப் புத்தகம் ஒன்றில், இத்தகைய சட்டத் திருத்தங்கள் 'குடும்ப அமைப்பிற்குள் சிதைவை ஏற்படுத்தவே பயன்பட்டுள்ளன. இத்தகைய சட்டத் திருத்தங்களின் மொத்த விளைவுகள் என்னவெனில் குடும்ப அமைப்பிற்குள் அழுத்தங்களும் சிக்கல்களும் உருவானதுதான்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. சமீபத்தில் சில இந்துச் சாமியார் 'இந்து ஆண்கள் பலதார மணம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும்' எனக் கூறியுள்ளதை மாலினி சட்டர்ஜி சுட்டிக் காட்டியுள்ளார் (ப்ரன்ட்லைன், ஜன 16, 1993).

நைரோபியில் நடைபெற்ற அய். நா பெண்கள் மாநாட்டில் பெண்களது வீட்டு வேலைக்கு ஊதியம் கணக்கிடப் படவேண்டுமெனவும் 'லெஸ்பியனிசம்' எனப்படும் ஒரு பால் புணர்ச்சிக்கு சட்ட ஏற்பு வழங்கப்பட வேண்டும் எனவும் வாதிடப்பட்டது. இதுகுறித்து மகிளமோர்ச்ச: இந்தியச் சமூக ஒழுங்கிற்கும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கும் இவை எதிரானவை. வீட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

பணிக்குக் கூலி நிர்ணயிப்பதென்பது இந்தியத் தாய்மையை இழிவு செய்வதாகும், லெஸ்பியனி சத்திற்குச்' சட்ட ஏற்பு என்பது ஆபாசமான கோரிக்கை. இந்தியச் சூழலுக்குப் பொருத்தமே இல்லாத ஒன்று'' இரண்டுமே பெண்களின் 'இயற்கை' கடமைகளாகிய தாய்மை, தாம் பத்யம் ஆகியவற்றைக் கேள்வி கேட்பதால் இந்துத்துவத்தால் இவற்றைச் சகிக்க முடிய வில்லை. வாஜ்பாய் கூறுகிறார்: ''பெண்கள் ஆண்களாக மாற விரும்புவது கேலிக்குரியது''.

பாலியல் சமத்துவம் குறித்து ஒரு நிலையில் சதி, பலதாரமணம் ஆகியவற்றை ஆதரிக்கும் தீவிரப் போக்கையும் இன்னொரு நிலையில் சம வேலை/ கல்வி வாய்ப்பு, புகையற்றஅடுப்பு/ சுகாதார வசதி கோருதல் போன்ற சற்று மித மான போக்கையும் இந்துத்துவ எல்லைக்குள் காண முடியும். இந்த இரண்டு போக்குகளிலும் பொதுவாக உள்ள அம்சம் குடும்ப அமைப்பு தக்க வைக்கப்பட வேண்டுமென்பதும். பாரம் பரியக் கடைமைகளிலிருந்து விலக்கமளித்துப் பெண்ணின் பாத்திரத்தை மறுவரையறை செய்வதைக் கடுமையாய் எதிர்ப்பதென்பதும் தான்.

**இப்போது தலித் பிரச்சினைக்கு வருவோம்.** மனுதர்மத்தை நிலை நாட்டுவதில் இந்துத்து வத்திற்குள்ள முனைப்பு பற்றி முன்பே குறிப் பிட்டோம். எனினும் வாக்குரிமை அடிப்படையி லான அரசியலதிகாரத்தை நோக்கி பா. ஜ. க. போன்றவை இயங்குவதன் விளைவாக நேரடி யாக இதனை முன் வைத்துவிட முடியாது என்ப தோடு எண்ணிக்கை ரீதியில் இந்துப் பெரும் பான்மையை நிறுவ வேண்டிய அவசியமும் அதற்குள்ளது. **இந்த அடிப்படையில் தலித் களுக்கும் இசுலாமியருக்குமான பிணைப்பு என்பதை இந்துத்துவம் மிக ஆபத்தான ஒரு அம்சமாகக் கருதுகிறது. ஹாஜி மஸ்தான்** தலைமையிலான 'தலித் முஸ்லிம் மைனாரிட்டி சுரக்ஷா சமிதி' (DMMSS) என்கிற அமைப்பு பம்பாயில் வலிமையான சக்தியாக உருவாகி யுள்ளது. **சாலமன் ரஷ்டியின்** 'சாத்தானின் பாடல்கள், நூலைத் தடை செய்ய வேண்டும் என இவ்வமைப்பு நடத்திய பிரம்மாண்டமான ஊர்வலத்தின் போது (பிப்24,'89) நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 11பேர் கொல்லப் பட்டதும் நினைவிருக்கலாம். பெரும்பாலும் ஏழைகள் மற்றும் உதிரித் தொழிலாளிகள் நிரம்பிய இவ்வியக்கத்தை சிவசேனா போன்ற இந்துத்துவ சக்திகளும் காவல்துறையும் பெரிய ஆபத்தாகக் கருதுகின்றன (இன்டியன் எக்ஸ் பிரஸ், ஏப்ரல் 2,'89 ஞாயிறுமலர்). 1989, '92 தேர்தல்களில் 'அகோலா' (மகாராஷ்டிரா) போன்ற தொகுதிகளில் தலித்களும் இசுலாமிய ரும் இணைந்து போட்டியிட்டதை பாரதிய ஜனதா, இந்திரா காங்கிரஸ் இரண்டுமே சேர்ந்து எதிர்த்துள்ளன. எனவே தலித்களை இசுலாமியரிடமிருந்து பிரித்து, இந்துத்துவத் தின் அங்கமாக உணரவைப்பதென்பதைத் தங்களின் செயல் திட்டங்களில் ஒன்றாகக் கொண்டு இந்துத்துவ சக்திகள் செயல்படு கின்றன. இதனை அவர்கள் செயல்படுத்தும் வழிமுறைகள் வேடிக்கையானவை.

**1. அம்பேத்கரை இசுலாமியர்க் கெதிராக நிறுத்துவது:** அம்பேத்கரின் சிந்தனைகளில் மதம், மார்க்சியம், பெண்ணியம் தொடர்பான கருத்துக்கள் ஆழ்ந்த பரிசீலனைக்குரியவை. இசுலாமுக்கு மாறாமல் புத்த மதத்திற்கு மாறு வது குறித்து **அம்பேத்கர்** கூறிய காரணங்களை யும், இந்துக்களும் இசுலாமியரும் தனித் தனி தேசங்கள் என ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதையும் முதன்மைப் படுத்தி **அம்பேத்கரை** இசுலாமி யர்க்கு எதிரானவராகச் சித்தரிக்கின்றனர். பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு எதிரான சில இசுலாமிய மதக் கோட்பாடுகளை யும், இசுலாமிய நில உடைமையாளர்கள் தலித் களை நடத்துவது குறித்தும் **அம்பேத்கர்** வைத்த விமரிசனங்களை நாம் தவறு எனச் சொல்ல முடியாது. தலித் இயக்க உருவாக்கத் தில் இசுலாமியரது உதவியை அவர் அங்கீகரித் துள்ளார். தவிரவும் சோலாப்பூர் இந்து-இசுலா மியக் கலவரத்தின் போது (1928) தலித்கள் இசுலாமியர்க்கெதிராக இந்துக்களோடு நிற்கக் கூடாது என **அம்பேத்கர்** அறிவுரைத்தது குறிப் பிடத்தக்கது. இதற்காக சோலாப்பூர் முனிசிபல் கவுன்சில் அம்பேத்கரைக் கண்டித்துத்தீர்மானம் இயற்றியுள்ளது. இன்னொரு சந்தர்ப்பத்தில் இந்து-முஸ்லிம் கலவரத்தின் போது இசுலாமி யர்க்கெதிரான வதந்திகளைப் பரப்புவதற்காக இசுலாமியரைக் கண்டித்துள்ளார். இசுலாமி யர்க்குத் தனித் தேசம் பற்றி அவர் கூறியிருந் தாலும் கூட எல்லா மதங்களிலுமுள்ள அடித் தட்டு சக்திகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டு முன்னணி அமைக்க வேண்டியதன் அவசியத் தை அவர் வலியுறுத்தி வந்துள்ளார்(Thoughts on Pak) எல்லாவற்றிக்கும் மேலாக இந்து ராஜ்யம் என்ற கருத்தை அம்பேத்கர் அளவு கண்டித்த சிந்தனையாளர் யாருமில்லை. **''இந்து ராஜ்யம் என்பது நடைமுறைப் படுத்தப் பட்டால் இந்த நாட்டிற்கு அதுவே மிகப் பெரிய பேரழிவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை'' -அம்பேத்கர்,**

**(2) தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக் குறியீடாக விளங்கும் அம்பேத்கர், பூலே**



படிப்பகம்

www.padippakam.com

**போன்றோரை இந்துத்துவச் சொல்லாடலுக்குள் அடக்க முனைதல்.** பூலே- அம்பேத்கர் கொள்கைப் பிரச்சாரப் பயணம் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்துத்துவ சக்திகள் மேற்கொள்கின்றன.

**(3) கரசேவை போன்ற சடங்குகள் தலித்களை இணைத்தல்:** மஹர் போன்ற தாழ்தப்பட்ட பிரிவில் ஒரு சிலர் இந்துத்துவ சக்திகளுக்கு ஆதரவாக இருப்பதைப் பெரிதுபடுத்தி விளம்பரம் செய்தல்- இந்து முஸ்லிம் கலவரங்களில் தலித்கள் தாக்கப்பட்டதாக பெரிய அளவில் வதந்திகளைப் பரப்புதல். தலித்களது ராய்தாஸ் கோயிலை இசுலாமியர் இடித்து விட்டதாகச் சமீபத்திய கலவரங்களில் வதந்திகள் பரப்பப்பட்டன.

தலித்கள் எந்த அளவிற்கு இந்துத்துவச் சொல்லாடலுக்கு ஆட்பட்டுள்ளனர் என்பது குறித்து சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. மஹர் போன்ற ஒருசில பிரிவினரது மனத்தில் தாங்கள் இந்துக்கள் எனகிற உணர்வு ஓரளவு பதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருசில தலித் தலைவர்கள் மசூதி இடிப்பு, இசுலாமியருக்கு எதிரான இந்துத்துவ வன்முறை ஆகியவற்றைக் கண்டிப்பதில் தயக்கம் காட்டியுள்ளனர். தலித் இலக்கியப் பேரவைக்கு ஆரம்ப முதல் ஆதரவளித்து வந்த பம்பாய் ஈரானி ஓட்டல் தாக்கப்பட்ட போது கூட அதனை தலித் எழுத்தாளர்கள் வன்மையாகக் கண்டிக்கவில்லை என்கிறார் **கோபால்குரு.**

எனினும் பெரும்பான்மையான தலித்கள் சிறுபான்மையினருக்கு ஆதரவாகவே இருந்துள்ளனர். இசுலாமியரிடமிருந்து தலித்களைப் பிரித்தெடுப்பதில் இந்துத்துவம் முழு வெற்றி பெற முடியவில்லை. 'யுவக் கிரந்திதன்' என்கிற அமைப்பு அவுரங்காபாத் பகுதியில் ஒரு ஆய்வு நடத்தியது. 22 கிராமங்களை ஆய்வு செய்ததில் ஒரே ஒரு தலித்தான் கரசேவைக்குச் சென்றார், அவரும்கூட பாதியிலேயே திரும்பிவிட்டார் என்பது நிறுவப்பட்டுள்ளது. கலவரங்களில் ஒரு சில தலித்கள் பங்கு பெற்றாலும்கூட அது கலவரங்களோடு தொடர்புடைய கடைகளைச் சூறையாடுதல் போன்ற தற்காலிகமானப் பலன்களுக்குத் தானேயொழிய பசுவதைக்கு எதிராக என்பதுபோன்ற மத ரீதியான நோக்கங்களுக்காக அல்ல என 1893 கலவரங்களை ஆய்வு செய்துள்ளவர்கள் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. சமீபத்திய கலவரங்களில் பல சந்தர்ப்பங்களில் தலித்கள் இசுலாமியர்க்கு ஆதரவாக நின்றுள்ளனர்; பாதுகாப்பளித்துள்ளனர். மாதுஸ்கா, விக்ரோலி, கட்கோபர் போன்ற இடங்களில் தலித்கள் கூட்டம் போட்டு இந்துத்துவ சக்திகளை எச்சரித்துள்ளனர். பந்துாப், செம்பூர் போன்ற இடங்களில் இசுலாமியர்க்குப் பாதுகாப்பு அளித்துள்ளனர். 'துள்சிவாடி'யில் **சாந்தி பாதிய** என்ற தலித் பெண் இசுலாமியர்க்குப் பாதுகாப்பளிக்கும் முயற்சியில் உயிரை இழந்துள்ளார். பல இடங்களில் தலித் போலிஸ் அதிகாரிகள் இசுலாமியருக்குப் பாதுகாப்பளித்துள்ளனர். நடுநிலையாகச் செயல்பட்டதற்காக பல இடங்களில் இந்துத்துவ சக்திகள் தலித் போலீஸ் அதிகாரிகளைத்தாக்கியுள்ளனர். நாகபுரியில் (ஜன '93) நடைபெற்ற 'தொழிலாளர் இலக்கிய' மாநாட்டில் புகழ்பெற்ற தலித் எழுத்தாளர் **பாபுராவ் பாகுல்** இந்துத்துவ சக்திகளைக் கடுமையாய்த் தாக்கிப் பேசியுள்ளார். அதே சமயத்தில் சதாராவில் நடைபெற்ற மராத்தி இலக்கிய மாநாட்டில் பிரபல எழுத்தாளர்கள் மசூதி இடிப்பைக் கண்டிக்காதது குறிப்பிடத்தக்கது. பிரபல முற்போக்கு **ராஜம் கிருஷ்ணன்** 'இந்தியாடுடே' இலக்கிய மலரில் ('93) எழுதியுள்ள கதையை இத்துடன் இணைத்துப் பார்க்கலாம்.)

கலவரங்களில் தலித்கள் இசுலாமியர்க்குப் பாதுகாப்பாக நின்றதற்குச் சில நடைமுறைக் காரணங்களைக் **கோபால்குரு** சுட்டிக் காட்டுகிறார். அவை:

(1) இயல்பான மனித நேயம்—தலித்களிடம் இது அதிகமாகவே உள்ளது. (2) நகர்ப்புறச் சேரிகளில் தலித்களும்—இசுலாமியரும் ஒரே மாதிரியான துன்ப வாழ்வைப் பங்கிட்டுக் கொள்ளும் அவலம் (3) கிராமப்புறங்களில் தலித்களுக்குத் தேவையான மாட்டுக் கறியை இசுலாமியக் கசாப்புக் கடைக்காரர்களே தொடர்ந்து அளித்து வருகின்றனர்.

மராட்டியத்திலுள்ள நிலைமைகள் இவை தமிழ் நாட்டில் சூழல் வேறு. தலித்கள் இந்துத்துவத்திலிருந்து பேரளவிற்கு விலகியே உள்ளனர். எனினும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகள் தலித்களை இணைத்துக் கொள்வதில் முனைப்புக்காட்டிச் செயல்படுகின்றன. சில தலித் தலைவர்களும் இந்துத்துவ சக்திகளுக்கு ஆதரவாக உள்ளனர். எனினும் தலித் மக்கள் இந்துத்துவத்திலிருந்து விலகியே உள்ளனர்.

அரசின் சமீபத்திய பொருளாதாரக் கொள்கைகளால் பெரிதும் பாதிக்கப்படக் கூடியவர்கள் அடித்தட்டு மக்களே. சமீபத்திய நிதிநிலை அறிக்கையில் சமூக நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி வெறும் ஒரு சதம்தான். தாழ்த்தப்பட்ட மற்றும் மலையின மக்களுக்கான ஒதுக்கீடு 0,85 சதம்தான். மருத்துவ/கல்வி வசதிகளின்மை, வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம் முதலியவை தலித்களை ஆழமாக பதிந்துள்ளன விடிவு குறித்த எந்த நம்பிக்கையும் சாத்திய



படிப்பகம்

www.padippakam.com

மில்லாத சூழலில் இவர்களின் கோபம் 'இந்து'ச் சமூக அமைப்பின் மீதும், அரசின் மீதும் மாறி விடக் கூடாது என்பதில் இந்துத்துவ சக்திகளும் இந்திய அரசும் குறிப்பாக இருக்கின்றன. தலித்களுக்குச் சலுகைகள் வழங்குவது சமத்துவ கோட்பாட்டிற்கு எதிரானது என்பதாகவும் இதன் விளைவே திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போவது என்பதாகவும் தலித் அல்லாதார் மத்தியில் ஒப்பீட்டு இழப்புணர்வை (Feeling of Relative deprivation) பரப்பி வரும் இந்துத்துவம் தலித்கள் மத்தியில் இதனை வேறுவிதமாகச் செயல்படுத்துகிறது. தலித்களுக் குள்ளேயே இத்தகைய ஒப்பிட்டு இழப்புணர்வை உருவாக்கி வருகிறது. தலித்களுக்குள்ளேயே ஒரு பிரிவினர் சலுகைகள் பெற்று முன்னேறி விட்டனர் என்கிற அடிப்படையில் இன்னொரு பிரிவை எதிராக நிறுத்துவது என்கிற முயற்சி கள் மேற்கொள்ளப் படுகின்றன. மராத்வாடா பகுதி தலித்களிடமிருந்து ஏனைய மராத்திய தலித்கள் விலகியும், தெலுங்கானா பகுதி தலித்கள் கடற்கரையோர ஆத்திர தலித்களிட மிருந்து விலகியும் நிற்கும் போக்குகள் உருவாகியுள்ளன.

இந்துத்துவத்தின் ஆதாரமாக விளங்கும் பார்ப் பனியத்தை ''ஒதுக்குதலும் ஒதுங்குதலும்'' என வரையறுத்தல் (பார்க்க: தாயகம்-12) அதற்கெதிரான செயல்பாடு அய்க்கியமாதலும் அத்துமீறுதலுமாகவே இருக்க முடியும். தலித் கள் முதலில் தங்களுக்குள்ளும் பிறகு சிறுபான் மையினருடனும் பிறகு இதர ஒடுக்கப்பட்ட சக்திகளுடனும் இந்துத்துவத்திற்கு எதிராக அய்க்கியமாதல், இந்து தரும அடிப்படையில் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வெளிகளிலிருந்து அத்துமீறுதல் (எ.டு: சுடுகாடு, கருவறை) என்ப தாக இந்நடவடிக்கைகள் அமையவேண்டும் மதத்தாலும், ஆணாதிக்கத்தாலும், சாதீயத் தாலும் கறைபட்டுப் போன நமது மொழி, பாரம்பரியம், கலாச்சாரம் என எல்லாவற்றிலும் இந்த அத்துமீறல்கள் மேற்கொள்ளப் படவேண் டும்; ஒழுக்கம், சுத்தம், தீட்டு, அழகு போன்ற கறைபட்டுப்போன கருத்தாக்கங்கள் கவிழ்க்கப் படவேண்டும். அரசியல். பொருளாதாரம், கலாச்சாரம், கருத்தியல் எனப் பல தளங்களில் மதச்சார்பின்மை, சமத்துவம், சமூக நீதிபோன்ற கருத்தாக்கங்களுக்கான அர்த்தங்களுக்காக நடைபெறும் போராட்டங்களில் தங்களுக்கான அர்த்தங்களை நிலை நாட்டுவதில் தலித்கள் + பெண்கள் + சிறுபான்மையினர் முன்னணியில் நிற்க வேண்டும். இதர ஒடுக்கப்பட்ட மற்றும் சனநாயக சக்திகள் அவர்களோடு இணைந்து நிற்க வேண்டும்.

இந்தியச் சமூகத்தில் உழைப்பிலும் உற்பத்தி யிலும் வரலாறு முழுவதிலும் பங்கு பெற்று வந்திருப்போர் கீழ்சாதியினரும் பெண்களும் தான். மற்றவர்கள் உற்பத்தியிலிருந்து நாட்டைப் பின்னுக்கிழுத்தவர்கள் சுரண்டி வாழ்ந்தவர்கள். எனவே இன்றைய பிரச்சினை களுக்கான தீர்வு என்பது எல்லோரையும் கீழ்ச் சாதியினராக—தலித்களாகவும் பெண்களாகவும் உணர வைப்பதுதான். இந்த வகையில் ஆண் களாகவும் தலித் அல்லாதவர்களாகவும் பிறந்து விட்ட சனநாயக சக்திகள் தங்களின் வரலாற்றுக் கடமையை அறிந்து தலித்களாகவும், பெண்க ளாகவும் உணர்ந்து அவர்களோடு இணைந்து நிற்பது அவசியம்.

## 3. இந்துத்துவத்தின் பரிணாமம்— ஒரு வரலாற்றுக் குறிப்பு.

வெள்ளையருக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் வந்த வெளிநாட்டு ஆக்ரமிப் பாளருக்கும், வெள்ளையருக்கும் நோக்கத்திலும் நடைமுறையிலுமிருந்த சில வேறுபாடுகள் எண்ணத் தக்கவை. வெள்ளையருக்கு முன் வந்தோர் இந்த நாட்டைக் சுரண்டி தங்கள் நாட்டிற்குக் கொண்டு சென்று வாழும் உத்தேச முடையவர்களல்ல வெள்ளையர்களது நோக்கம் இங்கே வந்து நிரந்தரமாகக் குடியேறுவது அல்ல. அவர்கள் இங்கே வந்தபோது அய்ரோப் பாவில் தொழிற் புரட்சி தொடங்கியிருந்தது. புராதன மூலதனத் திரட்டலும் இங்கிருந்த கச்சாப் பொருட்களைக் கொண்டு செல்வதுமே அவர்கள் நோக்கமாக இருந்தது. இங்கிருந்த மக்கட்செறிவு, சுகாதாரக் குறைவு, ஆட்சிக்குத் தேவையான அனைத்து உறுப்பினர்களையும் இங்கிலாந்திலிருந்து கொண்டு குவிப்பதிலுள்ள செலவினம்ஆகியவை பெருமளவில் குடியேற்றம் என்ற கருத்தை ஊக்குவிக்கவில்லை. இங்கிருந்த மக்கள் சக்தியைத் தேவையான அளவில் பயிற்றுவித்துப் பயன்படுத்துதல் என்ப தே அவர்களின் உத்தியாக இருந்தது. அதற் குரிய வகையில் அவர்களது கருத்தியல் நட வடிக்கைகளும். தகவமைப்புச் செயற்பாடுகளும் அமைந்தன. இதற்குரிய கல்வி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியமும், நவீன வடிவிலான அரசு நிறுவனங்களைக் கட்டமைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவர் களுக்கு இருந்தன. அரசுப் பணிகளுக்குரிய மத்திய தர வர்க்கம் ஒன்றை அவர்கள் உரு வாக்க முனைந்தபோது ஏற்கனவே இருந்த அரசமைப்புகளில் பணிபுரிந்தவர்களாகவும், நிதி நிர்வாகம் ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்தவர் களாகவுமிருந்த இந்து உயர்சாதி ஆதிக்க சக்தி கள் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர்.

வட இந்தியாவில் முகலாய அரசுகளில் ஓரளவு இசுலாமியர் அரசுப் பணிகளில் நிறைந்திருந்த னர். வணிகம், நிதி நிர்வாகம் ஆகியவற்றில்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்குத் தொடர்பில்லை.பெரும்பான்மை இசுலாமியர் கைவினைஞர்களாகவும், சாயத் தொழில்,தண்ணீர் சுமத்தல் போன்ற சாதாரண தொழில்களிலும் நிறைந்திருந்தனர். இந்தியா விலிருந்த தாழ்த்தப்பட்ட அடிநிலை மக்கள், உயர்சாதி ஆதிக்க சக்திகள், இசுலாமியர் ஆகிய மூன்று பிரிவினரும் வெள்ளையர்களை மூன்று விதமாக அணுகினர். தாழ்த்தப்பட்டவர் களைப் பொறுத்த மட்டில் வெள்ளை ஆட்சியா ளரை உயர்சாதி ஆதிக்க சக்திகளுக்கெதிரான நடுநிலையாளர்களாகப் பார்த்தனர். புதிய ஆட்சி, நிர்வாக, சட்ட முறைகளில் தங்களுக்கு நியாயம் கிடைக்க வழி மேற்கொள்வது அவர் களின் நோக்கமாக இருந்தது. உயர்சாதி ஆதிக்க சக்திகளோ புதிய நிர்வாக முறைகளில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதென் பதிலும் புதிய சமூக/ பொருளாதார/ அரசியல் மாற்றங்களின் விளைவாக இந்துச் சமூக அமைப் பில் பாரம்பரியமாக வந்த தங்களின் மேலாண் மையைப் பறிகொடுத்து விடக் கூடாது என்பதி லும் குறியாய் இருந்தனர். பல்வேறு வடி வங்களில் அழுத்தக் குழுக்களை உருவாக்கி அதிகாரத்தில் பங்கு பெறுவது அவர்களின் நோக்கமாக இருந்தது. இசுலாமியரைப் பொறுத்த மட்டில் 'சிலுவைப் போர்' இன்னும் அவர்கள் மனத்தில் பசுமையாய் இருந்தது. இந்தியாவிலுங் கூட ஆட்சி அதிகாரத்தைத் தங்களின் கையிலிருந்து பறித்தெடுத்த எதிரியா கவே வெள்ளையரைப் பார்த்தனர். சர்வதேச அளவில் சம காலத்தில் அய்ரோப்பியர் இசுலா மியர்க் கெதிராக மேற்கொண்டிருந்த தீங்கு களும் அவர்களது கோபத்தை அதிகப்படுத்தின. இவற்றின் விளைவாக வெள்ளையருக்கெதிரான தொடக்க கால எழுச்சிகளில் இசுலாமியரின் பங்கு அதிக வீச்சுடனும் வன்மையாகவும் இருந்தது. வெள்ளையரும் தங்கள் முதல் எதிரி யாக இசுலாமியரையே அணுகினர். இசுலாமிய வெறியர்கள் என அவர்களது குறிப்பேடுகளில் பதித்தனர். இசுலாமியரையும், 'இந்து'க்களை யும், தலித்களையும் தனித்தனியாய்ப் பிரித்து நிறுத்துவது அவர்களின் நோக்கமாக இருந்தது இந்த நோக்கில் இந்தியச் சமூகம் பற்றிய ஆய்வுகளையும் பின்னால் பல நூறு ஆண்டு களுக்கு நிலவப் போகிற இறுக்கமான சமூக வரைமாதிரிகளையும் (Social Paradigms) உருவாக்கினர். உருவாக்கியதோடு அதனையே உள்ளூர் மத்திய தரவர்கத்திற்கும் போதித்தனர் அவர்களும் இந்த வரைமாதிரியை ஏற்று தங்களுக்கு விதிக்கப்பட்ட இடங்களில் நின்று செயல்படப் பழகிக் கொண்டனர். இதன் மூலம் ஆங்கிலேயர் கண்டறிந்த இந்த வரைமாதிரிகள் மேலும் இறுக்கமானதாகவும் மாறின.

இந்து இசுலாமியர் என்கிற முரணும், வகுப்பு வாதம் என்கிற கருத்தாக்கமும் இவ்வாறு காலனிய ஆட்சியாளர்களால் கட்டமைக்கப் பட்டன. கல்வித் துறையில் மட்டுமின்றி அரசி யல் களத்திலும் இக் கட்டமைப்புச் செயற் பாடுகள் தொடர்ந்தன. இந்துக்களுக்கும் இசுலாமியருக்குமான முதல் பிரிவினை மொழி அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. 1774ல் கல்கத்தாவில் உச்சநீதி மன்றம் தொடங்கப் பட்டது இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய கால கட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. வட இந்தியாவில் அதுவரை கீழ்மட்ட நீதி மன்றங்களில் உருதும் மேல்மட்டங்களில் பெர்சிய மொழியும் பயன்படுத்தப்பட்டுவந்தன. வெள்ளையர்கள் அவற்றினிடத்தில் ஆங்கிலத் தை வைத்தனர். இது பலரின் வயிற்றிலடிக்கும் வேலையாக இருந்தது. சையத் அகமது கான் போன்ற இசுலாமியத் தலைவர்கள் பெர்சிய வரிவடிவத்துடன் கூடியஉருது நீடிக்கவேண்டும் என்றனர். மகாராஜா கிஷன் பிரசாத் போன் றோர் தேவனாகிரி வரிவடிவத்துடன் கூடிய இந்தியை முன் மொழிந்தனர். ஆங்கிலத்தை நீக்குவது சாத்தியமில்லை என்றானவுடன் இந்து உயர் சாதியினர் ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினர். இசுலாமியர் பின்தங்கினர்.

இந்தியர்களுக்கு ஆங்கிலக்கல்விபுகட்டப்பட்டது குறித்து நிறையச் சொல்லியாயிற்று. இன்னு மொரு முறை வேண்டாம் இந்திய வரலாறு, புவியியல், இந்தியப் பழம் பெருமை, பாரம்பரி யம் எல்லா வற்றையும் ஆங்கிலக் கல்வியாளர் களே கண்டுபிடித்துப் புகட்டத் தொடங்கினர். 1817ல் கல்கத்தா இந்துக் கல்லூரி தொடங்கப் பட்டது. ஆங்கில அரசு உதவி பெற்ற முதல் கல்லூரியின் பெயரில் 'இந்து' அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு வெள்ளையரால் உருவாக்கப்பட்ட இந்திய மத்திய தர வர்க்கம் என்பது முற்றிலும் உயர்சாதி இந்துக்களாலா னது. இந்துக்களை இசுலாமிய அடையாளங் களிலிருந்து விலக்குதலும் இந்து- இசுலாமிய ஒற்றுமையைக் குலைத்தலும் வெள்ளையரது தொடக்க கால முயற்சிகளிலொன்றாக இருந் தது. சில எடுத்துக் காட்டுகள்.

(அ) இந்துக்கள் பெர்சிய மொழியை விரும்பிக் கற்பது ஆங்கிலேயருக்கு எரிச்சல் மூட்டியது. 'பரேலி' யிலிருந்த ஒரு பெர்சியப் பள்ளி பற்றிய ஆங்கில அதிகாரி ஒருவனின் குறிப்பு: ''இந்துக் களும் முசல்மான்களும் ஒன்றாகப் படிப்பது குறித்துக் கொஞ்சமும் தயக்கம் காட்ட மாட்டே னென்கிறார்களே!''

(ஆ) பஞ்சாப் பற்றிய ஒரு ஆங்கில ஆவணக் குறிப்பு (1856): ''பள்ளிவாசலுக்கு வெளியில் முசல்மான் ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப் பட்ட போதிலும் இந்துப் பிள்ளைகள் அதிக அளவில் படிக்கிறார்கள். இசுலாமிய மதத்தைக்



படிப்பகம்

www.padippakam.com

கண்டு ஒதுங்குவது என்பதை விட பெரிய மொழியால் ஈர்க்கப் படுவது அதிகமாக இருக்கிறது.''

(இ) பஞ்சாப் பற்றிய பொதுக் கல்வி இயக்குன ரின் குறிப்பு (1858): மக்களுக்குப் புவியியல் பற்றிய அறிவே இல்லை. ஆனால் இப்போது நமது பள்ளிகளில் படிக்கும் எந்த ஒரு மாணவ னைக் கேட்டாலும் இந்தியா மீதான ஆரம்ப காலத்திய இசுலாமியப் படைஎடுப்புகள் பற்றி ஒரு புத்திசாலித்தனமான தொகுப்பைத் தருவான்.''

இந்தியாவிலிருந்த சாதிய ஏற்றத் தாழ்வுகளை யும் இசுலாமியர் வெளி நாட்டிலிருந்து வந்த வர்கள் என்பதையும் ஆங்கிலேயர் பள்ளிப் பிள்ளைகளின் மனத்தில் திரும்பத் திரும்பப் பதித்து வந்தனர்.

இசுலாமியர் ஆங்கிலக் கல்வியிலிருந்து ஒதுங்கும் நிலை நீடித்தது. 1835ல் ஆங்கிலப் பள்ளிகள் அனைத்திற்கும் நிதியுதவி செய்ய ஆங்கில அரசு முடிவு செய்த போது கல்கத்தாவைச் சேர்ந்த 8000 இசுலாமியர் அதனை எதிர்த்து மனு ஒன்றை அளித்தனர். கிறிஸ்தவத்திற்கு மதமாற்றச் செய்யும் சதி என்று இதனைக் குற்றம் சாட்டினர். இந்துக்களோ அரசு முயற்சி யை வரவேற்றனர்.

ஆங்கில ஆட்சி என்ற எதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு அந்த அமைப்பிற்குள் அதிகாரத்தில் பங்கு பெறும் முயற்சியை இசுலாமியர் மத்தியில் முதன் முதலில் முன் வைத்தவர் ''இசுலாமியர் களின் ராஜாராம் மோகன்ராய் என அழைக்கப் படும் **சர் சையத் அகமது கான்** (1817—'98) முகலாய அரசி கொடுத்த பட்டத்தைத் துறந்து விட்டு ஆங்கில அரசின் கீழ் பதவியில் சேர்ந்து அரசாதரவுடன் இசுலாமிய மேல் தட்டினரை ஆங்கில அரசுக்கு ஆதரவாக மாற்ற முனைந் தார் **சர் சையத்**. இவரது முயற்சியின் விளை வாக 'முகமதிய ஆங்கிலோ—ஓரியன்டல் பள்ளி' (1875) தொடங்கப்பட்டது. எனினும் கூட இசுலாமியர் ஆங்கிலக் கல்வியில் நாட்டம் செலுத்தவில்லை. இன்று வரை இந்நிலை தொடர்கிறது.

ஆங்கிலக் கல்வி பெற்று அதிகாரத்தில் பங்கு பெற்ற இந்து உயர்சாதி மத்திய தர வர்க்கத் தைப் பொறுத்த மட்டில் அதன் செயற்பாடுகள் முன்பே சொன்னது போல (i) மேலும் மேலும் அதிகாரத்தில் பங்கு பெறுவதாகவும் (ii) புதிய மாற்றங்களுக்கு ஏற்ப இந்துச் சமூகத்தை நவீனப் படுத்துவதாகவும் (iii) புதிய மாற்றங் களால் இந்துச் சமூகப் படிநிலை அமைப்பில் எந்தச் சிதைவும் ஏற்படாமல் காப்பது என்பதா கவும் அமைந்தன. இதன் அடிப்படையிலான செயற்பாடுகளில்ஒன்று மத்தியதர வர்க்கத்திற்கு ஏற்ற இந்து மனைவியரை உருவாக்குவது. இந்த நோக்கில் பெண்கல்வி பற்றிப் பேசினர். விதவைகளின் எண்ணிக்கை அதிகமானால் உயர்சாதிப் பெண்டிர்மத்தியில் விபச்சாரத்திற்கு வழி வகுக்கும், இதுகுடும்ப அமைப்பைக் கெடுக் கும் என்கிற நோக்கில் விதவை மறுமணம், இளமைத் திருமணத் தடை முதலியவற்றை உயர் சாதி இந்து சீர்திருத்தவாதிகள் முன் வைத்தனர்.

கிறிஸ்தவம்' இசுலாம் என்கிற சமயங்களை முன்நிறுத்தி அவற்றுக்கு மாற்றாகவும் அவற் றைப் போலவும் 'இந்து' மதத்தை உருவாக்க வேண்டும் என்கிற முனைப்பு இந்து மேல்தட்டி னர் மத்தியில் உருவாகியது. கிறிஸ்தவ, இசுலாம் மதங்களுடன் ஒப்பிட்டு இந்துமதத்தின் பலவீனங்களைக் கண்டறிந்து அவற்றைத் திருத்தியமைக்க இவர்கள் முயன்றனர். இந்து மதத்தின் ஆதாரச்சரடாகிய வருணதருமத்திற்கு குந்தகம் விளைவிக்காமல் இதனைச் செய்வது அவர்களின் நோக்கமாக இருந்தது. இந்தப் பின்னணியில் இந்துத்துவம் கட்டமைக்கப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகவும் வரிசையாகவும் பார்ப்போம்.

**1. பிரம்ம சமாஜம் (1828): ராஜாராம் மோகன் ராய்** என்கிற உயர் சாதி இந்துவால் தொடங் கப்பட்டது. இந்து மதத்தின் பலவீனமாக சிலை வணக்கமும் பலகடவுள் வழிபாடும் கண்டுபிடிக் கப்பட்டன. ''ஆனால் பிற்காலச் சீரழிவுகள் தான் இவையிரண்டும்; வேதத்தில் இவை கிடையாது. வேதத்தில் 'பிரம்மமே' கடவுளாக வணங்கப்பட்டது''—இது பிரம்ம சமாஜம் முன் வைத்த சீர்திருத்தம்.

**2. ஆர்ய சமாஜம் (1875): ஸ்வாமி தயானந்த சரஸ்வதி** இதனைத் தொடங்கி வைத்தவர். பிரம்ம சமாஜம் கிறிஸ்தவத்துடன் கொண்ட நெருக்கத்தை இவர் ஏற்றுக் கொள்ளாத போது வேதகாலத்தில் ஒரு கடவுள் வணக்கம்தான் என்பதை ஏற்றுக் கொண்டார். சிலை வணக்கத் தைக் கண்டித்தார். சாதியத்தை மறுத்த போதி லும் நெசிழ்ச்சியான வருண முறையையும், அகமண முறையயும் ஆர்ய சமாஜிகள் ஆதரித்தனர். ஆக, இந்துச் சமூக அமைப்பின் படிநிலை ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்குப் பதிலாக அவன் சமநிலையைக் காக்கவே முயற்சித்தனர். வருணத்திற்குள் அக மணக் கட்டுப்பாட்டை முன் வைத்தது இந்த நோக்கில் தான். மத்திய தர வர்க்கமும் நகர்ப்புற வணிக சாதிகளும் அதிக அளவில் இவ்வியக்கங்களில் ஈர்க்கப்பட்டனர். மேல்சாதி இந்துக்களின் மேலாண்மையைக் காக்கவே இந்துச் சமூகச்



படிப்பகம்

www.padippakam.com

சமநிலையைத் தக்க வைக்க இவர்கள் முயன்றனர். 'மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்து மதத்திற்குள் கொண்டு வருவதற்காக கிறிஸ்தவ / இசுலாமிய மதங்களிலிருந்து **தயானந்தர்** மதமாற்றம் என்கிற அம்சத்தை எடுத்துக்கொண்டார். 'சுத்தி' மூலம் பிற மதத்தினரை இந்து மதத்திற்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. இதற்குரிய வகையில் அவர் இந்து மதப் பாரம்பரியத்தில் சில புதிய புராணங்களை கண்டு பிடித்தார். அராபியப் படை எடுப்பின் போது 'சுத்தி, செய்வதற்காக எழுதப்பட்ட 'தேவலாஸ்மிருதி' ஆர்ய சமூகத்திலிருந்து விலகியவர்களை இணைக்கும் சடங்குகளாக அதர்வ வேதத்தில் சொல்லப்பட்ட 'வ்ரத்யஸ்தோமா' சடங்குகள் ஆகியவை இவரது கண்டுபிடிப்புகள். வேதப் பொற்காலம்—மொழிகளின் தாய் சமஸ்கிருதம்—ஆர்யவர்த்தம்—மகாபாரதம் என இந்துத் தேசிய அடையாளங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

**3. பஞ்சாப் இந்து சபை (1907-'09):** ஆர்ய சமாஜிகளால் உருவாக்கப் பட்டது. வெள்ளை அரசால் பஞ்சாபில் கொண்டு வரப்பட்ட நில விற்பனைச் சட்டம் (1901) பனியா, கத்ரி, அரோரா போன்ற நகர்ப்புற வணிக ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும் இசுலாமிய விவசாயிகளுக்கு ஆதரவாகவும் இருந்தது. 1908-09ல் கொண்டு வரப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் இசுலாமியருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளித்தன. இந்தப் பின்னணியில் **லால்சந்த், பாய் பரமானந்தர்** போன்ற ஆர்ய சமாஜிகள் பஞ்சாப் இந்து சபையைத் தொடங்கினர். இந்து ஒற்றுமை என்கிற கருத்தாக்கம் உருவாகியது. தேசபக்தி என்பது புவியியல் ரீதியாக இல்லாமல் வகுப்பு (Community) அடிப்படையிலானதாக இருக்க வேண்டும் என்றார் **லால் சந்த்.**

**4. இந்து மகா சபை (1922):** மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் மூலம் (1919) அரசதிகாரம் என்பது நகர்ப்புற ஆதிக்க சக்திகளிடமிருந்து இசுலாமியர், சீக்கியர், ஜாட், குன்பி போன்ற இதர பிரிவினருக்கும் பரவும் நிலை ஏற்பட்டது. குனபி விவசாயிகள் எழுச்சி மாப்பிளா இசுலாமிய விவசாய எழுச்சி(1921), கிலாபத் இயக்கம் ஆகியவற்றின் பின்னணியில் இந்து ஆதிக்க சக்திகள் தங்களின் நலனைத் தக்க வைத்துக் கொள்ள இந்துக்களை அரசியல் ரீதியாய்த் திரட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததன் விளைவே இந்து மகா சபை. **''இந்து சங்காதன்''**—அதாவது இந்து ஒற்றுமை என்கிற முழக்கம் அழுத்தமாக முன் வைக்கப்பட்டது. இசுலாமிய மதத்தினரிடையேயான ஒற்றுமையை மாதிரியாகக் கொண்டு இந்து சங்காதன் என்கிற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது, இசுலாமியர் போலப் பலரும் ஒன்றாய் அமர்ந்து வணங்கும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். 25,000 பேர் ஒன்றாக உட்கார்ந்து வணங்கக் கூடிய 'இந்து ராஷ்டிர மந்திர்'கள் கட்டப்பட வேண்டும் என்றெல்லாம் பேசப் பட்டன. இந்துப் பழம் பொற்காலத்தை உருவாக்கவே இந்து ஒற்றுமை இவர்கள் பேசிய இந்து ஒற்றுமை என்பது வருணம், இந்துதருமம் ஆகியவற்றிற்குட் பட்டதுதான். அதாவது இந்துப் படிநிலை அமைப்பு சிதையாமலேயே இந்து ஒற்றுமை.

**தாழ்த்தப்பட்டோரும் இந்து மகா சபையும்:** இந்துத்துவத்தின் மூலவர்கள் என **சாவர்க்காரையும், பாய் பரமானந்தரையும்** குறிப்பிடலாம். முன்னவர் மராட்டியர்; பின்னவர் பஞ்சாபியர், ஆர்ய சமாஜி. இருவர் எழுதிய முதல் புத்தகங்களும் 1909ல் வெளிவந்தன. 'முதல் சுதந்திரப் போர்' என்பது **சாவர்கரின்** நூல். 'எரிமலை' என இது தமிழில் பெயர்க்கப்பட்டது 'சுதந்திரத்திற்கான நமது ஆரம்ப கால முயற்சிகள்' என்பது **பரமானந்தரின்** நூல். இரண்டிலும் இசுலாமிய எதிர்ப்பு கிடையாது. ஏகாதிபத்திய எதிர்ப்பே பிரதானம். **நானா பனாலிஸ், ஹைதர் அலி** போன்ற இசுலாமியர் கூட அவர்களது ஆங்கிலேய எதிர்ப்பிற்காகப் போற்றப்பட்டனர் **பரமானந்தரின்** நூலில் இந்துக்கள் என்கிற உணர்வு கொஞ்சம் தூக்கலாக இருந்தது. இது அவரதுஆர்ய சமாஜ/பஞ்சாபியப் பின்புலத்தால் உருவாகியிருக்கலாம். 1923ல் **சாவர்கரின்** 'இந்துத்துவம் அல்லது இந்து என்பவன் யார்?' என்கிற நூல் வெளிவந்தது. 1925ல் அவரது 'இந்து பட் படாசாகி' வந்தது. இரண்டு நூல்களின் தலைப்புகளிலுமே இந்து என்ற சொல் அமைந்துள்ளது. இனம்,கலாச்சாரம்,புவியியல் என்கிற மூன்று அடையாளங்களினடிப்படையில் சமண' புத்த, சீக்கிய மதங்களையும் உள்ளடக்கி இந்துத்துவம் வரையறுக்கப்பட்டது. இந்துத்துவ வரையறையில் இசுலாமியர் மட்டும் விலக்கப் பட்டனர். 19ம் நூற்றாண்டின் இறுதியில் இந்து என்றால் 'இந்தியாவில் பிறந்த எல்லோரும்' என்று வரையறுத்த நிலை மாறி 1923 தொடங்கி இசுலாமியர் விலக்கி நிறுத்தும் போக்கு தொடங்குகிறது. இந்து—முஸ்லிம் ஒற்றுமை என்பதற்குப் பதிலாக இந்துஒற்றுமை வலியுறுத்தப்பட்ட போதிலும் இந்து—முசுலிம் பிளவும், இசுலாமிய எதிர்ப்பும் பிரதானப்படுத்தப்படவில்லை. இதே காலகட்டத்தில் **பரமானந்தரின்** இந்து சங்காதன் பற்றிய நூலும் வெளிவந்தது. இந்து ஒற்றுமை தவிர, 'மதப் பொறுமையின்மைக்காகவும் மத மாற்றத்திற்காகவும்' இசுலாமியரைப் பரமானந்தர் கண்டித்திருந்தார். இந்தச் சூழலில்தான் இந்து மகாசபை உருவாக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

மேல்சாதி இந்துக்கள் மத்தியில் 'இந்து ஒற்றுமை' என்கிற உணர்வு எவ்வாறு தோன்றியது? வெள்ளையர் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களின் விளைவாக அரசியலரங்கில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். தேர்தல் என்பது அரசியலதிகாரத்தில் எண்ணிக்கையின் முக்கியத்துவத்தை நிறுவியது. புதிய சீர்திருத்தங்களின் விளைவாக தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர், இசுலாமியர் உட்படப் பலரும் அரசியலரங்கில் பங்குபெறும் வாய்ப்பை உயர்சாதி இந்துத்துவச் சக்திகள் அச்சத்தோடு பார்த்தன. 1911ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டில் தாழ்த்தப்பட்டவர், இசுலாமியர், கிறிஸ்தவர் எல்லோரும் தனித்தனியாகக் கணக்கிடப்பட வேண்டுமென அரசு வெளியிட்ட 'கெயிட்' சுற்றறிக்கை அறிவுறுத்தியது. பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவை இணைந்திருந்த அன்றைய சூழலில் இசுலாமியர் 24 சதமிருந்தனர். இசுலாமியர் + தாழ்த்தப்பட்டவர் + இதர சிறுபான்மையினர் என்ற ஒரு நிலைமை உருவானால் தாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாகிவிடும் வாய்ப்பு பற்றிய அச்சம் உயர்சாதி இந்துக்களுக்கு உருவானது. இதனை அவர்கள் இரண்டுவழிகளில் சந்திக்கத் தயாராயினர். அவை:

(1) ''இசுலாமியர் பெரும்பான்மையாயுள்ள சிந்துக்கு அப்பாலுள்ள பகுதிகளும், வடமேற்கு மாகாணமும் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டு ஒரு முஸ்லீமான் பேரரசு உருவாக்கப்பட வேண்டும். அங்குள்ள இந்துக்கள் இங்கும், இங்குள்ள இசுலாமியர் அங்கும் போய்விடலாம்''-பரமானந்தர்(1933)
''இந்தியாவை ஒற்றைத்தேசமாக நாம் கருத வேண்டியதில்லை. இந்து-முஸ்லீம் என இரு தேசங்கள் இந்தியாவிற்குள் உள்ளன''
—சாவர்கார் [1937]

பிரிவினை என்கிற கருத்தை முஸ்லிம்லீக் லாகூர் மாநாட்டில்தான்(1940)முன் வைத்தது என்பது குறிப்பிடத் தக்கது.

(2) தாழ்த்தப்பட்டோரையும் இந்துத்துவ வரையறைக்குள் உள்ளடக்குவது. இதன் மூலம் இந்துவல்லாத மறுதரப்பைச் சிறுபான்மையாக்குவது. 'ஸ்வதர்மம்' போன்ற கோட்பாடுகளில் எந்த நெகிழ்ச்சிக்கும் இடம் கொடுக்காமலேயே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அரசியலதிகாரத்தை முன்வைத்துச் செயல்பட்ட இந்துத்துவ சக்திகள் தாழ்த்தப்பட்டோரை உள்ளடக்க முயற்சித்தாலும், ஆர்ய சமாஜிகள் போன்ற சனாதன சக்திகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதுகுறித்துத் தீர்மானிக்க இந்து மகா சபையின் சிறப்பு மாநாடொன்று அலகாபாத்தில் (Feb. 1924) கூட்டப்பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பின்பு,

''தாழ்த்தப்பட்டோர் பள்ளி, கோயில், பொது நீர்நிலை ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தடுக்கக் கூடாது. எனினும் அவர்களுக்குப் பூணூல் அணிவிப்பதும், வேதங்கள் பயிற்றுவிப்பதும், அவர்களோடு சமபந்தி போஜனம் செய்வதும் வேதத்திற்கும் இந்து மரபுக்கும் எதிரானது. எனவே இந்து ஒற்றுமையைக் கருதி இந்து சீர்திருத்தவாதிகள் இந்து மகா சபையின் பெயரால் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்'' என மாநாடு கேட்டுக் கொண்டது [JJF ஜோர்டன்ஸ், சுவாமி சிரத்தானந்தரின் வாழ்வும் பணியும், 1981, பக் 142] காசியைச் சேர்ந்த 75 பார்ப்பனப் பண்டிதர்களின் கருத்தை ஏற்று, ''இந்துவல்லாதவர்கள் இந்து மதத்திற்குள் வரலாம். ஆனால் அவர்களுக்குச் சாதி அந்தஸ்து எதுவும் வழங்கப்பட மாட்டாது'' எனவும் அறிவிக்கப்பட்டது [அதே நூல்].

5. **ஆர்.எஸ்.எஸ்.(1925):** இந்து மகாசபைத் தலைவர்களில் ஒருவரான **மூஞ்சேயின்** நம்பிக்கைக்குரிய சீடனாகிய நாகபுரியைச் சேர்ந்த **ஹெட்கேவரால்** தொடங்கப்பட்டது. நவீன சூழலுக்கேற்ப இந்து மனத்தில் உளவியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி வேற்றுமைகளுக்கிடையேயான ஒத்திசைவை வலுவாகஉருவாக்கும் நோக்குடன் இது தொடங்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவர் உட்படப் பல பிரிவினரையும் உள்ளடக்கி இறுக்கமான வடிவத்தில் ''இந்து தேசியத்தை''க் கட்டமைப்பதை ஆர்.எஸ்.எஸ் நோக்கமாகக் கொண்டுள்ளது. இறுக்கமான அமைப்பு முறை, அகில இந்திய அளவிலான வலைப்பின்னல் அமைப்பு, 'சக்கா' என்கிற கிளை அமைப்புகள் மூலம் உடல்/உளப் பயிற்சிகளை அளித்து உள் வாங்குதல் ஆகியவை இதன் சிறப்புகள். அமைப்பிற்குள் ஒரு ''குடும்பமாக' உணரும் தன்மை, தியாக உணர்வுடன் கூடிய பிரச்சாரகர்கள் —இவை இதன் கவர்ச்சி அம்சங்கள். இந்துமத உணர்வு என்பதை முழுமையான வகுப்புவாதமாகக் கட்டமைப்பதற்குத் தேவையான 'எதிரி'யாக இசுலாமியரை உருவாக்குவதில் ஆர்.எஸ்.எஸ். வெற்றி கண்டது.

6. **விஸ்வ இந்து பரிஷத் (1964):** கிறிஸ்தவ 'சர்ச்' போல இந்து மதத்தை மையப்படுத்தப்பட்ட இறுக்கமான அமைப்பாக மாற்றும் நோக்கில் **கோல்வால்கரின்** நம்பிக்கைக்குரிய ஆர்.எஸ் எஸ் பிரச்சாரகராகிய எஸ்.எஸ் **ஆப்தே**யால் உருவாக்கப்பட்டது. இந்து சம்ஸ்காரங்களை வலுப்படுத்தக் கூடிய ஒழுக்க நெறிமுறை ஒன்றை உருவாக்க ஒரு துணைக் குழுவும் உருவாக்கப்பட்டது. ''தரம் சன்சாட்'' என்ற மதப் பாராளுமன்றமும் உருவாக்கப்பட்டது. இதன் கூட்டமொன்றில் தான் அயோத்தி, மதுரா போன்ற இடங்களிலுள்ள மசூதிகளை இடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. மீனாட்சிபுரம் மத மாற்றத்தைக் காட்டி இதன் இயக்கம் தீவிரப்படுத்தப்பட்டது.



படிப்பகம்

பிரம்ம சமாஜம் -> ஆர்ய சமாஜம்-> இந்துசபை இந்து மகாசபை-> ஆர்எஸ்.எஸ்-> விஸ்வஇந்து பரிஷத் என்கிற பரிணாம மாற்றம் ஒன்றிலிருந்து ஒன்றாக திட்டமிட்டு அவ்வக்கால அரசியற் சூழலுக்கு ஏற்ப உருவாக்கப் பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. இந்தப் பரிணாம மாற்றங்களினூடாக மாறாமல் இருந்துவரும் மையச் சரடு இந்து தருமம் என்கிற வருணாசிரமம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## 4. இந்துத்துவ வகுப்புவாதம் மற்றும் வகுப்புக் கலவரங்களின் சில முக்கிய பரிமாணங்கள்.

**1. இந்துத்துவமும் ஏகாதிபத்தியமும்:** மசூதி இடிப்பைத் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்திப் பேசிய விஷயங்களில் ஒன்று தாங்கள் புதிய பொருளாதாரக் கொள்கைக்கும் தாராளமயமாக்கல் நடவடிக்கைகளுக்கும் எதிரானவர்கள் அல்ல என்பது. சுதேசிப் பொருட்களைப் பற்றி அவ்வப்போது முணகினாலும் புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கும், அதனடிப்படையிலான தொழிலாளர் வேலை நீக்கக் கொள்கைக்கும் எதிராக இந்தியாவிலுள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் இணைந்து போராடிய போது இந்துத்துவத் தொழிற்சங்கமாகிய 'பாரதீய மஸ்தூர் சங்' மட்டும் காங்கிரஸ் கட்சியின் 'அய்.என்.டி யூ.சி யுடன் இணைந்து கொண்டு போராட்டத்தை எதிர்த்தது. மசூதி இடிப்பைத் தொடர்ந்து பாரதீய ஜனதா கட்சியின் ராஜ்ய சபைத் தலைவர் **சிக்கந்தர் பக்த்** அவசரமாய் அமெரிக்கா சென்று வந்தார். அங்கே அவர் அமெரிக்கக் காங்கிரசில் பேசினார். அமெரிக்காவின் வெளி உறவுக் கொள்கை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் 'சர்வதேச அமைதிக்கான கார்னெஜி அறக்கட்டளை' அவரை வரவேற்று பேசியது. புகழ்பெற்ற சி.என்.என் தொலைக்காட்சி அவரைப் பேட்டி கண்டது. தொடர்ந்து செனட்டர் **மொய்ணிவதான்,** முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர் சொலார்ஸ் போன்ற முக்கிய புள்ளிகள் 34பேர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று கார்னெஜி நிறுவனம் சார்பாக வெளி வந்தது. **ஜேம்ஸ் க்ளாட்** என்கிற கார்னெஜி நிறுவனப் பொறுப்பாளர் ஒருவர் 'லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' (11, ஜன, '93) இதழில் ஒரு கட்டுரையும் எழுதினார். இந்தியாவில் அடுத்து ஆட்சியைப் பிடிக்க வாய்ப்புள்ள இந்துத்துவ சக்திகளுடன் கூட்டு வைத்துக் கொள்வது அமெரிக்காவிற்குப் பொறுத்தமானதாகவும் சரியாகவும் இருக்கும்' என்பதுதான் இவற்றின் சாராம்சம். ஆக, பக்தின் தூது வெற்றியடைந்தது.

சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு 'நேட்டோ' போன்ற கூட்டுக்களை தொடர்ந்து தக்கவைத்து அவற்றில் தனது மேலாண்மையைச் செயல்படுத்துவது அமெரிக்காவிற்குச் சிக்கலாக இருக்கிறது. ஜப்பான், ஜெர்மனி போன்றவை அமெரிக்காவை எல்லாத் துறைகளிலும் தாண்டிச் செல்லும் வாய்ப்பைக் கண்டும் அமெரிக்கா அஞ்சுகிறது. எனவே கம்யூனிச அபாயத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு அபாயத்தைக் காட்டி 'நேட்டோ' போன்ற கூட்டுகளையும் தனது மேலாண்மையையும் தக்க வைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது. 'இசுலாமிய அடிப்படைவாத விரிவாக்கம்' என்பதை இத்தகையப் புதிய எதிரியாக அமெரிக்கா படைத்துக் காட்டுகிறது. அந்த வகையில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், கிழக்கு வங்கம் ஆகிய இசுலாமிய நாடுகளுக்கிடையில் போர்த்தந்திர ரீதியில் முக்கிய மையமாக விளங்கும் இந்தியாவில் இசுலாமியத்திற்கெதிரான இந்துத்துவ அரசு ஒன்று உருவாவதை அமெரிக்கா வரவேற்கிறது. தனது நீண்ட நாள் தோழமைநாடாகிய பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்க அமெரிக்கா எத்தனிப்பதை இத்துடன் நாம் இணைத்து நோக்க வேண்டும். போஸ்னியா போன்ற இடங்களில் இசுலாமியர் இலட்சக் கணக்கில் கொல்லப்படுவதை ஏகாதியத்தியங்கள் கண்டு கொள்ளாததும் கவனிக்கத் தக்கது.

'கம்யூனிச வீழ்ச்சிக்கு'ப் பிறகு கிறிஸ்தவ மதத்தின் கை சற்று மேலோங்கியிருப்பதைக் காணலாம். போலந்து உட்படப் பல நாடுகளில் பெண்கள் போராடிப் பெற்ற கருக் கலைப்பு உரிமைகளெல்லாம் மீண்டும் தடை செய்யப் படுகின்றன. 'புதிய உலக ஒழுங்கு' என்பது அமெரிக்காவின் தலைமையிலான ஒழுங்காக மட்டுமின்றி கிறிஸ்தவ மதத் தலைமையிலான ஒழுங்காகவும், இசுலாமியர்க்கு எதிரான ஒழுங்காகவும் அமைகிறது. இந்தச் சூழலுடன் இந்துத்துவம் ஒத்திசைக்கிறது.

**2. அரசு, ராணுவம், நிதித்துறை ஆகியவற்றில் இந்துத்துவ ஊடுருவல்:**
பாசிசத்தின் முக்கிய கூறுகளில் ஒன்று அதிகார வர்க்கம், ராணுவம், நீதித்துறை ஆகியவற்றுக்குள் வலிமையாக ஊடுருவுவது. இந்துத்துவம் இந்த வகையிலும் ஒரு முழுமையான பாசிச சக்தியாக இருக்கிறது. நேருவுக்குப் பிறகு இந்திய அரசியல் தலைவர்கள் இந்து மத சக்திகளுடன் நேரடியாக உறவு வைத்துக் கொள்வது என்பதும் அவற்றைப் பகிரங்கப்படுத்துவது என்பதும் வாடிக்கையாகிவிட்டன. **ஆர். வெங்கட்ராமன்** பதவியிலிருந்த போது காஞ்சி மடத்துடன் கொண்டிருந்த வெளிப்படை

www.padippakam.com

யான நெருக்கத்தை நாமறிவோம். சந்திராசாமி போன்ற நபர்களுடன் ராஜீவ் காந்தி, நரசிம்ம ராவ் போன்றோர் கொண்டுள்ள உறவை நாம் அறிவோம். இந்திரா காந்தி விஸ்வ இந்துபரிசத் அரித்துவாரில் கட்டிய பாரத மாதா கோயிலைத் திறந்து வைத்தது (1982), ராஜீவ் காந்தி மேற் சட்டை போடாத மேனியுடன் குருவாயூர் துலா பாரத்தில் அமர்ந்தது, ஜம்மு காசுமீர்(1983) தேர்தல்களில் வெளிப்படையாக இந்து உணர் வைத் தூண்டியது என வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அரசு அதிகாரத் துறைகளில் இசுலாமியர், தலித்கள் போன்றொரின் எண்ணிக்கைகள் குறைந்திருப்பதும் அரசு எந்திரம் என்பது இந்து எந்திரமாகவே இருப்பதும், பெரிய அதிகாரிகளாக இருப்பவர்கள் வெளிப்படை யாகவே இந்துமத சக்திகளுடன் தொடர்பு கொண்டிருப்பதும்(எ.டு: சமீபத்தில் தேர்தல் ஆணையர் சேஷன் காஞ்சி சீனியர் சாமியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு கூட்டத்தை அமைதிப் படுத்தியது பற்றிய பத்திரிக்கைச் செய்திகள்) இந்தியஅரசு என்ப தை இந்து அரசாகவே மக்கள் முன் நிறுத்து கிறது. சிறுபான்மையினர் அரசிலிருந்து அன்னியப்பட்டு நிற்கும் வாய்ப்பிற்கு இது வழி வகுக்கிறது.

ராணுவம் இந்துமயமாகியிருப்பது பற்றி ஏராளமான புள்ளி விவரங்கள் உள்ளன. 1987 சிருட் கலவரத்தில் 'புரவின்சியல் ஆர்ம்ட் கான்ஸ்ட்டபுலரி' (பி.ஏ.சி) என்கிற அரை ராணுவ அமைப்பு இசுலாமியரைக் கொன்று குவித்ததை சர்வதேச பொது மன்னிப்புச் சபை கண்டித்துள்ளதை நாம் அறிவோம். 'பி.ஏ.சி. ஜிந்தாபாத்'என அடுத்த நாள் ஆர் எஸ்.எஸ் ஊர்வலத்தில் முழக்கமிடப்பட்டது. மசூதி இடிப்பில் இதே பி.ஏ.சியும் 'சி.ஆர்.பி.எப்'பும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றதையும் எல்லாம் முடிந்த பிறகு கரசேவகர்களை அப்புறப்படுத்த ஆணையிடப்பட்டவுடன் இவர் கள் தங்கள் ஷீக்களைக் கழற்றி வைத்துவிட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டு இடிந்த பகுதிக் குள் நுழைந்ததையும் தொலைக்காட்சி பார்த்த வர்கள் அறிவர்.

நீதிமன்றத்தைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் இந்துத்துவ சக்தி களுக்கு ஆதரவாகவே தீர்ப்பளித்தது. விஸ்வ இந்து பரிஷத்தும் பா.ஜ.கவும் நிதிமன்றத்தை அணுகிய போதெல்லாம் நீதிமன்றம் அவர் களுக்குச் சாதகமாகவே தீர்ப்பளித்தது. எ.டு: அயோத்தியில் நுழைவதற்கும், 'பஞ்சோக்ஷி பரிக்ராமா' செய்யக் கூடாது எனவும் தடை போட்டபோது அத்தடைகளை நீக்கநீதிமன்றம் உத்தரவிட்டது. மசூதி இடிப்பிற்குப் பிறகு அங்கே வைக்கப்பட்ட ராமன் சிலைகளை அரசு நீக்க முயற்சிக்காதது என்பது ஒருபுறம்; நீதி மன்றம் அதற்கு வழிபாடு நடத்த அனுமதித் துள்ளது என்பது சிறுபான்மையினர் எவரையும் அரசு, நீதிமன்றம் ஆகியவற்றின் மீது நம்பிக் கை இழக்க வைக்கும் என்பதில் அய்யமில்லை. மசூதி இடிப்பிற்குப் பிறகு பஜ்ரங்தள், ஆர்.எஸ் எஸ் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட தடைக ளை நீக்கிய நீதிமன்றம் 'அய்.எஸ்,எஸ் என்றும் இசுலாமிய அமைப்பின் மீதான தடையை அனுமதித்துள்ளது.

முதன் முதலில் 1948ல் பாபர் மசூதிக்குள் ராமன் சிலைகளை வைத்ததே ஃபைசாபாத் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டின் துணையோடு தான் என்பதும் பின்னால் அந்நபர் ஜனசங்கம் சார்பில் தேர்தலில் நின்றார் என்பதும் குறிப் பிடத்தக்கது. (சில ஆண்டுகளுக்கு முன்பு வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளராக இருந்த கங்கப்பா இரவோடிரவாக வேலூர் ஜலகண்டே சுவரர் ஆலயத்திற்குள் தொல்பொருள் துறை யின் ஆணையை மீறி திருட்டுத்தனமாய் விக்ர கங்களை வைத்தது நினைவிருக்கலாம்). ராம ராஜ்யம், வந்தே மாதரம் போன்ற மத அடை யாளங்களை அரசு அடையாளங்களாக மாற்றி யுள்ளதும் கவனிக்கத்தக்கது. தொலைக்காட்சி மகாபாரதத் தொடர் திரையிடப்படும்போது ஒவ்வொரு வாரமும் ''பாரத் கஹாயே...'' என்கிற பாடலோடு தொடங்கியதன் மூலம் மகாபாரதத்தை இந்திய வரலாறாகச் சித்தரித் ததையும் மறந்திருக்க முடியாது.

பத்திரிக்கைகள் பற்றிச் சொல்ல வேண்டியதில் லை. வட இந்திய இந்திப் பத்திரிக்கைகள் படு மோசம். 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் கிரியால் ஜெயின் இசுலாமியருக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருகிறது' எனத் தொடர்ந்து எழுதி வந்தது மொரதாபாத் கலவரத்திற்குத் தூண்டு சக்தியாக இருந்தது என்பதைப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். பாபர் மசூதியை ''disputed Structure'' (விவாதத்திற்குட்பட்ட கட்டு மானம்) என்ற சொல்லால் தான் ஆங்கிலப் பத்திரிக்கைகள் குறிப்பிட்டு வந்தன. ஆனால் சட்ட விரோதமாக மசூதி இருந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள நிலைகளை 'பாலராமர்' என்று குறிப்பிட்டு வருவது கவனிக்கத் தக்கது. மசூதி இடிப்பிற்கு அடுத்தநாள் (டிச7,92) தினமணி தலையங்கத்தில், ''பல நூற்றாண்டு கட்கு முன்பாக இஸ்லாமின் பெயரால் இந்துக் கோயில்களுக்கு என்ன நடந்ததோ அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஹிந்து மனோவிரதம் நடைமுறைப்படுத்தப்படும் சகாப்தம் தொடங்கி விட்டது என்று இந்து தீவிரவாதிகள் தங்களு டைய சாதனையை மார்தட்டிக் கொள்ளலாம்''



படிப்பகம்

www.padippakam.com

எனக் குறிப்பிடப் பட்டது. மேலோட்டமாய்ப் பார்க்கும் போது மசூதி இடிப்பைக் கடுமையாக அத்தலையங்கம் தாக்கியது போல எழுதப் பட்டிருந்தாலும் மேற்குறித்த வரிகளின் மூலம் இசுலாமிய மசூதிகள் இடிக்கப்பட வேண்டிய வைதான் என்கிற கருத்து நியாயப்படுத்தப் படுவது கவனிக்கத் தக்கது. ஆர் எஸ்.எஸ் முதலியவை தடைசெய்யப் பட்டபோது அதனை 'விவேகமற்ற முடிவு' எனத் தினமணி (டிச 12, 92) கண்டித்தது.

எல்லாவிதமான சட்டநியாயங்களையும் இல்லா மற் செய்வது என்பது பாசிசச் செயற்பாடு களில் ஒன்று. வன்முறையின்றி பேச்சு வார்த் தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளக் கூடிய எல்லா வாய்ப்புக்களையும் இந்துத்துவம் கேலி செய்து புறந்தள்ளுகிறது. ''இந்து உணர்வு என்பது நாடு முழுமையும் அலை வீசும் போது அந்தக் கோபத்திலிருந்து இசுலாமியரை அரசியல்கட்சி களோ, அரசோ, காவல்துறையோ காப்பாற்ற முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும்' என்றார் விஸ்வ இந்து பரிஷத்தின் **அசோக் சிங்கால்** (இந்தியன் எக்ஸ்பிரஸ் நவ 15, '91) மசூதி இடிப்பிற்கு முன் இந்துத்துவ தலைவர் களின் கூற்றுக்களைப் பாருங்கள்: **எல்.கே அத்வானி**: (டிச 2,92): ''கரசேவை என்பது பஜனை பாடுகிற விசயமல்ல. கடப்பாரைகளை யும் செங்கற்களையும் வைத்துத்தான் நாங்கள் கரசேவை செய்யப் போகிறோம்.'' **வினய் கத்தியார் எம்.பி (டிச 5, 92)**: ''பொறுத் திருந்து பாருங்கள். நிச்சயமாய் நாங்கள் கோயிலைக் கட்டத்தான் போகிறோம்''. **மகந்த் அத்வைத்யானந்த**(டிச 3,92):சட்டத்தை மீறுதல் என்பது இலக்கங்களில் தவிக்க சட்டத் தை மீறாமல் எந்தப் போராட்டமும் வென்ற தாய்ச் சரித்திரமில்லை.

மசூதி இடத்தில் எந்தப் புதிய கட்டுமானங்க ளையும் கட்டக்கூடாது என்பது உச்சநீதி மன்றத்தின் இடைக்கால உத்தரவு. நீதிமன்ற உத்தரவை மீற மாட்டோம் என உத்தரப் பிரதேச முதல்வர் **கல்யாண் சிங்** நவம்பர் 28ல் வாக்களித்ததோடு **சின்மயானந்தா, விஜயராணி சிந்தியா** ஆகியோரது உறுதி மொழிக் கடிதங் களும் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டன. இந்துத் துவத்தைச் சேர்ந்த எல்லா அமைப்புக்களும் மசூதியில் கை வைப்பதில்லை என உத்தரவா தத்தை அளித்தன. எனினும் மசூதி இடிக்கப் பட்டது இடித்த பிறகு அதற்காக வாயளவில் கூட இந்துத்துவம் வருத்தம் தெரிவிக்க மறுப் பது குறிப்பிடத் தக்கது.

**3. சமீபத்திய வகுப்புக் கலவரங்களில் கவனிக்க வேண்டிய சில ஆபத்தான தனித் தன்மைகள்:**

**(அ) இசுலாமியராக இருப்பதே தேசத்துரோக மானது என்கிற நிலையை இந்துத்துவ சக்திகள் ஏற்படுத்தியுள்ளன.** 'இந்துமயமாகு, இல்லா விட்டால் ஓடு'. பாபரின் பிள்ளைகளே பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்' 'மசூதியா மரணமா எது வேண்டும் சொல்?' போன்ற முழக்கங்கள் வெளிப்படையாக முன்வைக்கப்படுகின்றன. இசுலாமியர் என்றாலே பிரிவினைவாதிகள், பாகிஸ்தானுக்கு விசுவாசமானவர்கள், அராபிய நாடுகளிலிருந்து பணம் பெறுகிறவர்கள் என்கிற கருத்துக்கள் ஆழமாய்ப் பிரச்சாரம் செய்யப்படு கின்றன. இசுலாமியரது உரிமைகளுக்காகப் பேசுபவர்களை 'புதியஜின்னாக்கள்' 'பின்தரன் வாலேக்கள்' என **அருண்சோரி** போன்றவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பெரிய பத்தி ரிகைகளில் எழுதுவது (இன்டியன் எக்ஸ்பிரஸ் அக் 21, '88) வழக்கமாகி விட்டன. மசூதி இடிப்பிற்குப் பிறகு ரொம்பவும் எகத்தாளமாய் இசுலாமியருக்கு அறிவுரை கூறும் போக்கும் உள்ளது. ''சிறுபான்மையினர் என்பதை உணர்ந்து செயல்படுங்கள். பெரும்பான்மையை எதிர்த்துக்கொண்டு உங்களால் என்ன செய்ய முடியும்?'' (இந்தியன் எக்ஸ்பிரஸ், ஜன 7 '93, **வீரேந்திர கபூரின்** கட்டுரை). இசுலாமியரின் உயிரியல் இருப்பையே இந்துக்களுக்கு எதிரா னது எனப் பேசுதல். ''செத்துப்போகும்போது கூட ஒரு இசுலாமியன் ஆறடி இந்திய மண்ணை அபகரித்துவிடுகிறான்''. (நிஸாமுதீன் கலவர ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி)

**2. இசுலாமியர்க்கெதிரான வகுப்புக் கலவரங் கள் ஓரிடத்தில் வெடித்தால் அது அந்த இடத் தோடு முடிந்துவிடுவதில்லை.** ஒரே சமயத்தில் இந்தியா முழுமையும் பல்வேறு இடங்களில் தாக்குதல் உடனடியாகப் பரவுகிறது. இதற் கேற்ற வலைப்பின்னலை இந்துவெறி அமைப் புக்கள் நாடெங்கும் ஏற்படுத்தியுள்ளன. 'பம்பாயில்தானே கலவரம் இங்கே நமக்கென்ன வந்தது?' என வாணியம்பாடியில் ஒரு இசுலாமி யர் கவலையின்றி உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது.

**3. கலவரம் ஒரேநாளில் ஓய்ந்துவிடுவதில்லை.** புகைந்து புகைந்து பல நாட்கள் நீடிக்கின்றன. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று அச்சத்தோடு சிறுபான்மையினர் வாழவேண்டிய அவலம்.

**4. தாக்குதலின் தன்மைகள் கொடூரமாகி யுள்ளன.** நவீன ஆயுதங்கள், எந்திரத் துப் பாக்கிகள், வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படு கின்றன. பரோடா கலவரத்தில் (செப் 4, '90) 'கேஸ் கட்டர்களை'ப்பயன்படுத்தி இசுலாமி யரது கடைக் கதவுகள் உடைக்கப்பட்டன. பயணிகளைக் குத்திக்கொல்லுதல், முலைகளை



படிப்பகம்

www.padippakam.com

அறுத்து வீசுதல், குழந்தைகளைக் கொல்லுதல் முதலியன...

5. **தாக்குதலில் இந்துத்துவ விளிப்பிற்குட்பட்ட எல்லோரும் பங்கு பெறுகின்றனர்.** சமீபத்தில் பம்பாய் சூரத் கலவரங்களில் மாருதி காரில் வந்து சூறையாடியதாகவும், பெண்கள் உட்பட மத்தியதர வர்க்கத்தினர் அதிக அளவில் பங்கு பெற்றதாகவும் செய்திகள் வந்தன. வளையல்கள், செருப்புகள் முதலியவற்றை அணிந்து பார்த்து அளவைத் தேர்வு செய்து கொள்ளையடித்துள்ளனர். EPW, Jan.16-23, 1993)

6. ஆண்களைக் கொல்லுதல், பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்குதல் என்பவை தவிர **இசுலாமியப் பொருளாதாரத்தையே அழித்துவிடும் நோக்கோடு சொத்துக்களை அழித்தல்,** கடைகளையும் நிறுவனங்களையும் தரைமட்டமாக்குதல் என்பவை மேற்கொள்ளப்படுகின்றன. பம்பாயிலும் சூரத்திலும் இதனைக் காணலாம். சூரத்தில் இவ்வாறு அழிக்கப்பட்ட ஒரு சில நிறுவனங்கள்: முகமது அனிப் பின் 'கோக்சி மில்'—இழப்பு 1.25 கோடி. காசிம் பாய் யின் 'சில்க் மில்ஸ்'—இழப்பு 25 லட்சம். ஆரிப் தாதாவின் 'தாதா சில்க் மில்ஸ்' இழப்பு 2.5 கோடி. மொகிசின் பாய் ஹசூரியின் குளிர் பானத் தொழிற்சாலை—இழப்பு 25 லட்சம். (EPW, Jan 16-23, 1993).

7. கலவரங்களுக்குப் பின்னணியாக உள்ள அரசியல் பொருளாதாரக் காரணிகள் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளோம். **கலவரம் வெடிக்கும் பொறியமைவு** என்பது கீழ்க்கண்டவை போன்ற ஒரு சந்தர்ப்பமாகத்தான் அமைந்துவிடுகிறது என்பது கண்கூடு. அவை i) பெண்களிடம் அத்துமீறல்—காதல் திருமணம், குறிப்பாக இந்துப் பெண்ணை இசுலாமிய இளைஞன் திருமணம் செய்து கொள்ளுதல். ii) ஒதுக்கப்பட்ட இடங்களில் அத்துமீறுதல் — வழிபாட்டுத் தலங்களருகில் ஊர்வலம், சுடுகாட்டுப் பாதை முதலியன. iii) புனிதங்களுக்கு ஏற்படும் இழிவு—பசுவதை வழிபாட்டுத் தலங்களை அசுத்தம் செய்தல்... iv) பாபர் மசூதிப் பிரச்சினையை இந்துத்துவம் கட்டமைத்த பின்பு அது தொடர்பான முக்கிய நிகழ்ச்சிகள்—வரலாற்று அவமானம் குறித்த கட்டுக் கதைகளினடிப்படையான தூண்டுதல் என இதனைக் கொள்ளலாம். அரசியல் பொருளாதாரக் காரணிகள் எதுவாயினும் கலவர வெடிப்பு என்பது இத்தகைய சந்தர்ப்பங்களிலொன்றாக அமைவதென்பதை புரிந்துகொள்ள வகுப்புவாதம் கட்டப்படுவது பற்றியும் அதில் 'பெண்மை', 'வரலாறு', 'பழம்பொற்காலம்' 'புனிதக் குறியீடுகள்' ஆகியவை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். இவற்றைக் கவனிக்க மறந்து 'இந்துப்பெண்ணை அழைத்துக்கொண்டோடிய பையன் இசுலாமிய பீடி முதலாளியின் மகன். பீடித் தொழிலில் இசுலாமியர் வளர்ந்து வருவது இந்து முதலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. எனவேதான் கலவரம்'' என்கிற ரீதியில் விளக்கமளித்தல் பயன்தராது. இது குறித்த **ஞானேந்திர பாண்டே** யின் எச்சரிக்கை (EPW, ஆண்டுமலர் '91) கவனத்திற்குரியது.

4: **இசுலாமியர் மனநிலை:** மசூதி இடிப்பிற்குப் பின்பு அதற்குக் காரணமான சக்திகள் உதட்டளவு கூட வருத்தம் தெரிவிக்கத் தயாராக இல்லை. இந்து உயர்சாதி ஆதிக்க சக்திகள் உதட்டளவில் வருத்தம் தெரிவித்துக்கொண்டே இந்துவெறி அமைப்புகளைத் தடை செய்ததைக் கண்டிக்கின்றன, அரசோ எந்த மதத்தையும் கண்டித்துப் பேசவேண்டாம் என்ற போர்வையில் மசூதி இடிப்பைக் கண்டித்துக் கூட்டம் போடக்கூட அனுமதிப்பதில்லை. இந்து வெறியர்கள் தாக்குகிறார்கள், இசுலாமியர்கள் தாக்கப்படுகிறார்கள் என்பதை மறந்து அல்லது மறைத்து ஏதோ இருவருமே சமநிலையில் மோதிக் கொண்டிருப்பதைப் போல மைய நீரோட்ட இடதுசாரிக் கட்சிகள் மத நல்லிணக்க கூட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில புரட்சிகர இயக்கங்கள் தவிர மற்ற யாருமே இடித்த இடத்தில் மசூதியை மட்டுமே கட்டவேண்டும், ராமர் கோயிலைக் கட்டக் கூடாது எனச் சொல்லத் தயாராக இல்லை. அரசு, ராணுவம், நீதித்துறை எல்லாவற்றிலிருந்தும் அந்நியமாகி, தங்களது உயிரியல் இருப்பையே அய்யத்திற்கிடமானதாக உணரும் அவல நிலையிலுள்ள இந்திய இசுலாமியரது மனநிலையை 'முற்றுகையிடப்பட்ட மனநிலை' என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அச்சம், பாதுகாப்பின்மை, வெட்கம், அடையாளத்தைக் காத்துக்கொள்ள வேண்டி ஒன்றிணைதல் என்பதுதான் இசுலாமியரது இன்றைய நிலை. இசுலாமியர் தனிச்சட்டம், உருது, அலிகார் பல்கலைக் கழக உரிமை, பாடநூற்களில் அநீதிகளைக் களைதல் என்கிற கோரிக்கைகளின் மூலம் தங்களின் அடையாளத்தை அவர்கள் நிறுவ முயல்கின்றனர். இசுலாமியச் சிறுபான்மை உணர்வையும் இந்துத்துவத்தையும் நாம் ஒன்றாகப் பார்த்துவிட முடியாது. முன்னது தற்காப்புக்கானதுப் பின்னது தாக்குதலுக்கானது. **நேரு** சொன்னதுபோல இந்தியாவில் இந்துத்துவம்தான் பாசிசமாக வடிவெடுக்க முடியும், இசுலாமிய உணர்வு அல்ல. இசுலாமுக்குள்ளான ஏற்றத் தாழ்வுகள், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை விமர்சனம் செய்வது இன்றைய சூழலில் இங்குள்ள சனநாயக சக்திகளின் முன்னுரிமையாக இருக்க முடியாது. **இன்குலாப், அஸ்கார்** அலி என்ஜினியர் போன்றவர்கள் அதனைச் சிறப்பாகச் செய்கின்றனர். அது போதும்.



படிப்பகம்

www.padippakam.com

5. என்ன செய்யலாம்? பாசிசம் என்பது உலகந் தழுவிய நடைமுறையாகியுள்ளது. மார்க்சியத்திற்கு விழுந்த அடி இதற்கு உரமாகியுள்ளது. இந்தியாவில் நகர்ப்புற வளர்ச்சியால் ஏற்பட்ட சமநிலைக் குறைவு, வேலை இல்லாத் திண்டாட்டத்தால் விரக்தியுற்ற இளைஞர்களின் மனநிலை, ஒப்பீட்டளவில் கீழ்சாதியாக இருந்து வணிகம் போன்ற மேல்நோக்கிய இயக்கத்தால் வளர்ந்து வரும் சாதியினரின் மேல்நிலையாக மனநிலை, அரசியல் இயக்கங்கள், தொழிற் சங்க இயக்கங்கள் போன்றவற்றின் போலித் தனம் வெளிப்பட்டதனால் ஏற்பட்ட அரசியல் இடைவெளி ஆகியவற்றை இந்துத்துவ சக்திகள் வெற்றிகரமாய்ப் பயன்படுத்தியுள்ளன. சுதந்திர வணிகம், தாராளமயமாதல், ஒன்றை பரிமாணப் புதிய உலக ஒழுங்கு, இசுலாமிய எதிர்ப்பு ஆகியவற்றோடு இந்துத்துவம் பொருந்திப் போகிறது.

வகுப்புணர்வு என்பது இயற்கையான ஒன்றல்ல அது மேலிருந்து கட்டப்படுவது; அரசியல் நோக்கில் செயற்கையாகக் கட்டப்படுவது. அதற்குரிய வகையில் பாரம்பரியம், வரலாறு, புராணங்கள், பெண்மை பற்றிய வரையறை முதலியவை புதிதாய்க் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் பல்வேறு விதமான குறியீடுகள், பிம்பங்கள், புனைவுகள் மூலம் வகுப்புணர்வு கட்டமைக்கப்பட்டு அதன் சொல்லாடல் விளிப்பிற்குள் வரும் மக்கள் திரள் ஒருங்கு திரட்டப்படுகிறது. மேலிருந்து இதனை கட்டமைக்கும் ஆதிக்க சக்திகள் இவ்வாறு ஒருங்கு திரட்டப்பட்ட மக்கள் சக்தியைத் தம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றன. வகுப்புணர்வுக்கெதிரான செயற்பாடுகள் என்பன இந்தக் குறியீடுகள், பிம்பங்கள், புனைவுகள் ஆகியவற்றைக் கட்டவிழ்த்துத் தோலுரிப்பதாக அமைய வேண்டும். கண்டுபிடிக்கப்பட்ட பாரம்பரியங்கள் முதலியவற்றைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். பெண்மை குறித்த வரையறைகளைப் போட்டுடைக்க வேண்டும். ஒதுக்கப்பட்ட வெளிகளிலிருந்து அத்து மீற வேண்டும். வகுப்புவாதிகள் முன்னிலைப் படுத்துகிற ஒற்றைப் பரிமாணப் பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றிற்கெதிராக கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றின் பன்மைப் பண்புகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும். சிறுபான்மையோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரது கலாச்சாரங்களை ஏற்று கலாச்சாரத்தின் பன்மைப் பண்பை வலியுறுத்த வேண்டும். இந்துப் பண்டிகைகள், திருவிழாக்கள் ஆகியவற்றிற்கெதிராக மாற்றுப் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

உடனடியான அரசியற் செயற்பாடுகள் என்கிற வகையில் சிறுபான்மையோர், தாழ்த்தப்பட்டோர், சனநாயக சக்திகள் ஆகியோர் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். அம்பேத்கர் வழியில் வருணாசிரமத்திற்கெதிரான உணர்வுகளை ஒன்று குவித்தல், பெரியார் வழியில் நின்று ஒழுக்க மதிப்பீடுகள், புனிதக் குறியீடுகள் ஆகியவற்றைச் சிதைத்தல், வேலை இல்லாத் திண்டாட்டம், ஏழ்மை ஆகியவற்றிற்குக் காரணமான ஏகாதிபத்தியச் சார்பு நிலைக்கெதிரான போராட்டங்களில் இளைஞர்களை ஒன்றிணைத்தல் போன்றவை நமது உடனடிச் செயல் திட்டங்களாகின்றன. வகுப்புக் கலவரங்களில் இசுலாமியரது உரிமை, உயிர். உடைமை ஆகியவற்றைப் பாதுகாப்பது சனநாயக சக்திகளின் கடமை.

பாபர் மசூதி அழிப்பு என்பது இந்துத்துவ வெற்றியின் ஒரு குறியீடாக ஆகிப் போனதால் இடித்த இடத்தில் மசூதியை மட்டுமே கட்ட வேண்டும் எனக்குரல் எழுப்புவது தவிர்க்க இயலாததாகிறது. தேர்தலில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம், ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மைப் பிரிவினருக்கு இரட்டை வாக்குரிமை இட ஒதுக்கீடு ஆகியவற்றையும் முன் வைக்க வேண்டியிருக்கிறது.

இந்துத்துவத்திற்கெதிரான கண்டனச் செயற்பாடுகள் என்பன கோபத்தின் வடிகால்களாக அமையாமல், வகுப்பு வெறிக்கு எதிரானசெயலை நோக்கி ஆற்றல்களைக் குவிப்பதாக அமைய வேண்டும். இந்த அம்சத்தில் இந்துத்துவத்திடம் கூட நாம் பாடம் கற்க வேண்டியிருக்கிறது.

---

பயன்பட்ட நூற்கள், கட்டுரைகள் முதலியன கட்டுரையினூடே சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஆதாரங்கள் தவிர கீழ்கண்ட நூற்கள், கட்டுரைகள், ஆகியவற்றிலிருந்தும் தரவுகளும் செய்திகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

T. G. Jacob (Frontier, Autumn '90): Yoginder Sikand (Frontier Autumn '92); Frontier, May 9 '92, Frontier Ap '92; Frontier May 21 '92, Frontier Jan 9, '93; Frontier Ap 10 '93, Anjan Gosh (Frontier Aug 1 '92 Pratib Datta (Epw Nov 10 '90) Epw Nov 2 '91 Gyanendra Pandey (Epw Annual '91) Epw Dec 28 '91) Dipankar Gupta (Epw Annual '91) Gail Omvedt (Epw Ap 7 '90) Sumanta Banergy (Epw Jan 19 '91) Imitaz Ahmed (Epw June 2 '84 Sep 5 '81) David Hardiman (Epw Mar 17 '84) Azgar Ali Engineer (Epw May 5, '84 Aug 1 '92 Ap 20 '93 Nov 3 '90) Epw Oct 6 '90 Tca Rajaram (Epw Ap 9 '83); Gerald Huez (Epw Oct 3 '92) Ag Noorani (Epw Nov 3 '90) S. Gopal (Epw Nov 88) Mushirul Hassan (Epw Annual 88) PK Kuchhai (Epw Nov 28, '92) K Balagopai (Epw Ap 24 '93) Rathna Kapur (Epw Ap 24, '93) Sumit Sarkar (Epw Jan 30 '93) Christopher Jaffrelot (Epw Mar 20 '93) Gopal Guru (Epw Mar 8 '92) Iks (Frontier Ap 10 '93)



படிப்பகம்

www.padippakam.com

# அந்தோனியா கிராம்ஷி- மாற்றுக் கலாச்சாரம்-ஒரு பார்வை

சூமா

## I. இந்நூற்றாண்டின் தலைசிறந்த மார்க்சியர்களில் ஒருவர்

'பின்தங்கிய' பகுதியிலிருந்து ஒரு மார்க்சியர் உருவாக இயலுமா? இயலும் என்பதற்கு அந்தோனியோ கிராம்ஷி ஒரு சாட்சி. இவர் இத்தாலியின் தென்கோடியில் உள்ள சார்டினியாத் தீவிலுள்ள அலெஸ் என்ற கிராமத்தில் 1891 ஜனவரி 22-ம் நாள் பிறந்தார். 10ஆண்டு சிறைத்தண்டனையின் முடிவில் 46வயதில் 1937 ஏப்ரல் 27-ல் இரத்தநாள வெடிப்பு ஏற்பட்டு சிறை மருத்துவ மனையில் இறந்தார்.

போராட்டத்தை தனது உடலிலும் எடுத்துச் சென்றார். குழந்தையாக இருக்கும்போது முதுகில் ஏற்பட்ட கட்டியினால் கூன்விழுந்து உடல் வளர்ச்சியை 1½ மீட்டருடன் மட்டுப்படுத்தியது வறுமையும் தலைவலியும் அவரது பள்ளிப் படிப்பை விட்டு விட்டு தொடரவைத்தன. உடல் ஊனம் அவருக்கு கட்டாய ராணுவ சேவையிலிருந்து விலக்கு கொடுத்தபோதிலும் மற்ற மாணவர்கள் அல்லது இளைஞர்கள்போல் அனைத்து வேலைகளிலும் ஈடுபடுவதற்கு இவருக்கு தடையாகவே இருந்தது. எனினும் படிப்பிலும் உடல் உழைப்பிலும் சளைக்காமல் ஈடுபட்டு, உபகார சம்பளம் பெற்று, டூரின் நகரில் கல்லூரி படிப்பை (எதிர்கால கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டோல்யாட்டியுடன்) தொடர்ந்தார்.

இவருக்கு எட்டு வயது நடக்கும்போதே இவருடைய தந்தை ஃபிரான்செஸ்கோ கிராம்ஷி 6 ஆண்டுகள் சிறையில் அநியாயமாக அடைக்கப் பட்டதால் இவருடைய தாய் பெப்பினோ மார்சியாஸ் தனது நிலைகுலையாத கடின உழைப்பினால் நாலாவது குழந்தையாகிய கிராம்ஷியுடன் ஏழு குழந்தைகளையும் வளர்க்க வேண்டி வந்தது. அது கிராம்ஷிக்கு ஒருபாடமாகவே பதிந்தது. அண்ணன் ஜென்னாரோ தனது உழைப்பின் மூலமும், தொழிற் சங்க நடவடிக்கை மூலமும், சோசலிச கருத்துக்களை தம்பியுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் கிராம்ஷியின் வளர்ச்சியில் பங்கெடுத்தார்.

கார்ல் மார்க்சின் படைப்புகளை கிராம்ஷி தனது தாய் மொழியில் படிக்க வாய்ப்பிருந்தது. கிரரம்ஷி உயர்நிலைப் பள்ளி படிக்கும்போது கல்லூரியில் மொழியியல் படிக்கும்போதும் இவருக்கு தூண்டுதலாக இருந்த ஆசிரியர்கள் துணைநின்ற மாணவர்கள், இவர் எழுதிய கட்டுரைகள் ஆகியவை இவரை கருத்தியல் ரீதியாக வளர்த்தெடுக்க உதவின.

அன்று நடைபெற்ற பல போராட்டங்கள், துப்பாக்கி சூடுகள், வழக்குகள், வடக்கு தெற்கு பிளவு, சார்டினிய தேசியவாதம், தேசியவாதம் பேசிவந்த உடமை வர்க்கம் ரோமாபுரியுடன் கூட்டு சேர்ந்து துரோகம் விளைவித்தது, இத்தாலி, லிபியா மீது போர்தொடுத்தது. முதல் உலகப்போர் ஆகியவை கிராம்ஷியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. டூரின் நகரில் தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டார். 'முன்னேறுக' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும், 11ஆண்டுகள் 'புதிய அமைப்பு' என்ற பத்திரிக்கையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

'புதிய அமைப்பு' ஆசிரியரான கிராம்ஷியின் கருத்துக்கள். குறிப்பாக தொழிற் சாலை கவுன்சில் பற்றியது மூன்றாம் அகிலத்து பணியாளர்களின் கவனத்தை ஈர்த்தது, பாராட்டையும் பெற்றது. பலவற்றில் கிராம்ஷி லெனினுடன் ஒத்துபோனார் சிலவற்றில் வேறுபட்டார். தூய' கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிஸ்ட்களுடன் கூட்டு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அப்போது கட்சிக்கு தலைமை வகித்த போர்டிகாவுடன் கிராம்ஷி வேறுபட்டதால் கட்சியிலும் தொழிற் சங்கத்திலும் கிராம்ஷி செல்வாக்கு இன்றியே இருந்தார். ஆனால் கிராம்ஷீயின் கருத்துக்கள் அகிலத்தின் நிலைப் பாட்டிற்கு நெருக்கமாக இருந்ததால் மாஸ்கோவில் நடக்கவிருந்த அகிலத்தின் செயற் குழுவிற்கு இத்தாலியக் கட்சியின் பிரதிநிதியாக கிராம்ஷி அழைக்கப் பட்டார்.

மாஸ்கோவில் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபோது அங்கிருந்த நோயாளிகளில் ஒருவரின் தங்கையும் தனது வருங்கால மனைவியுமான ஜீலியாவை சந்தித்தார். ஆறுமாத சிகிச்சைக்குப் பிறகும் அவர் முழுதும் குணம் பெறவில்லை. அகிலத்தின் பணிகளில் ஈடுபட்டு வந்தார். இத்தாலியில் கட்சியின் தலைவர்கள் பாசிச அரசால் கைது



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டதால் அகிலம் கிராம்ஷியை ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவுக்கு அனுப்பியது. அங்கிருந்து கொண்டு இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின் பணிகளை கவனித்து வந்தார். இத்தாலிக்கு திரும்பியபின் நாடாளு மன்றத்திற்கு தேர்ந்து கொள்ளப்பட்டார்.

ஒருகாலத்தில் புரட்சிகரமானவனாகத் தோன்றியவனும். 'முன்னேறுக' என்ற சோசலிச பத்திரிகையின் இளம் பத்திரிகையாசிரியனாக இருந்தவனுமாகிய பெனிட்டோ முசோலினி அப்போது பாசிச ஆட்சிக்கு தலைமை ஏற்றிருந்தான். அவனுடன் நாடாளு மன்றத்தில் முதலும் கடைசியுமான மோதலுக்குபின் 1926 நவம்பர் 8-ம் நாள் இரவில் கிராம்ஷி கைது செய்யப்பட்டார்.

கிராம்ஷி ஜுலியா இருவருக்கும் இருமகன்கள் பிறந்தனர். ஜுலியா இத்தாலியிலிருந்து மாஸ்கோவிற்கு திரும்பிய பிறகு ஜுலியாவின் தமக்கை டாட்டியான கிராம்ஷியின் சிறைநாட்களில் இத்தாலியில் இருந்து கொண்டு அனைத்து விதத்திலும் ஈடுபாடு காட்டிவந்தார்.

முதலில் யுஸ்திகாசிறை, பிறகு மிலான், ரோமில் விசாரணை, பிறகு தூறி சிறை, இறுதியில் ரோமில் மருத்துவமனை என அவர் இடமாற்றப்பட்டார். கிராம்ஷியின் மூளை செயல்படுவதை இருபது ஆண்டுகளுக்கு தடைசெய்ய வேண்டும் என்ற முசோலினியின் விருப்பத்தை அரத தரப்பு வழக்கறிஞர் விசாரணையின்போது வலியுறுத்தினார். எனினும் சிறைகொடுமை, நெருக்கடிகள், உடல் சுகவீனம் அனைத்து மத்தியிலும் கிராம்ஷி தட்டச்சியில் 4000 பக்கங்கள் வரக்கூடிய 32 குறிப்பேடுகளை எழுதி முடித்திருந்தார். அவை ஒரு மாபெரும் கருத்துச் சுரங்கம், வரலாறு, இலக்கியம், கலாச்சாரம் தத்துவம் ஆகியவற்றின்கீழ் அரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். சிறை செல்லுமுன் எழுதியவற்றிற்கும் சிறைசென்ற பின் எழுதியவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காண முடிகின்றது. மேலும் அவரது குறிப்பேடுகளில் அரசு, மேலாண்மை, சிவில் சமூகம், அரசியல் சமூகம், கட்சி, தத்துவம் போன்ற கருத்தாக்கங்கள் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளதை காணமுடிகின்றது.

இவரது வாழ்வும் சிந்தனையும், தத்துவமும் நடைமுறையும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்து இருப்பதை காணமுடிகின்றது. மார்க்ஸ், லெனின், மாவோ, வரிசையில் சிலர் கிராம்ஷியையும் இடம் பெறச் செய்கின்றனர்.

## II. ஒடுக்கப்பட்ட வர்க்கம்தனது மேலாண்மை (Hegemony)யை நிலைநாட்டுதல்

சமூகத்தை அடித்தளம் மேல் கட்டுமானம் என இயந்திரகதியாக பிரித்துப் பார்க்காமல் அவற்றை தொகுத்துப் பார்க்க வேண்டும். அவற்றிடத்திலே நிலவும் சிக்கலான உறவை விளக்கிச் சொல்ல வேண்டும் என்பதற்காக வரலாற்று அணி (Historical Bloc) என்ற கருத்தாக்கத்தை கிராம்ஷி உருவாக்கினர். குறிப்பிட்ட சமூகத்தில், குறிப்பிட்ட காலகட்டத்தில் பொருளாதாரமும் அரசியலும் கருத்தியலும் பிணைந்திருக்கும் விதத்தை பரஸ்பரம் தாக்கத்தை ஏற்படுத்துவதை கோட்பாட்டு ரீதியாக விளக்குகிறார். குறிப்பிட்ட வரலாற்று அணியில் வெவ்வேறு உற்பத்தி முறைகளைச் சார்ந்த வர்க்கங்கள் (முதலாளி, தொழிலாளி, நிலப்பிரபு, பண்ணையார்...)இடம் பெற்றிருக்கலாம் இவற்றில் ஏதோ ஒரு வர்க்கம், ஒரு உற்பத்திமுறை ஆதிக்கம் வகிக்கலாம். பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கம்தான் அரசியலில் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்றல்ல. (உ.ம்)முசோலினியின் இத்தாலியப் பாசிசம் புறநிலையில் ஏகபோக முதலாளியத்தை சார்ந்திருந்த போதிலும் அரசியல் ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் அது சிறு முதலாளிகளின் அரசியல் அதிகாரத்தையே சாத்தியப்படுத்தியது. ஆதிக்க வர்க்கமானது பல்வேறு வகையான அரசு வடிவங்களுடன் (பாராளுமன்ற, ராணுவ, பாசிச வடிவங்களுடன்) ஒத்துபோகலாம். எனவே எந்தவொரு வர்க்கமும் அல்லது வர்க்கப் பிரிவு தனது வர்க்க நலன்களுடன் ஏனைய வர்க்கங்கள் மற்றும் வர்க்கம் சாரா குழுக்கள் ஆகியவற்றின் நலன்களை கணக்கில் எடுத்துக் கொண்டு அவற்றிற்கு சில சலுகைகளையும் வழங்கி தனது மேலாண்மையை நிலைநாட்டுவதன் மூலம் ஒரு வரலாற்று அணியை உருவாக்குகின்றது.

இம் மேலாண்மை என்பது Common Sense என்ற பாமர அறிவை ஏற்படுத்துவதின் மூலம் சாத்தியப்படுகின்றது. பாமர அறிவு என்பது ஆதிக்க வர்க்கத்தின் உலகப் பார்வையை ஏனைய பிரிவினர் தனதாக விரும்பி ஏற்றுக் கொள்வதால் நிகழ்கின்றது. எனினும் ஒடுக்கப்பட்ட வர்க்கம் தனது உலகப் பார்வையை முற்றிலும் இழந்துவிடுவது இல்லை. எனவே பாமர அறிவு என்பது ஏற்பும் எதிர்ப்பும் நிறைந்த கலவையாகவே இருக்கின்றது,

ஆதிக்க வர்க்கம் தனது உலகப் பார்வையை (கருத்தியலை) அரசியல் சமூகம், சிவில் சமூகம் மூலமாகவே அனைத்து மக்களின் உலகப் பார்வையாக ஏற்கச் செய்கின்றது. அரசியல் சமூகம் (ராணுவம், போலீஸ், நீதிமன்றம், சிறை...) பிரதானமாக பலவந்தத்தை (Coercion)பிரயோகிக்கின்றது. சிவில் சமூகம் (மதம், குடும்பம், கல்வி, கட்சி, செய்தி தொடர்பு சாதனங்கள்...) பிரதானமாக இணைங்கிப்



படிப்பகம்

போக (Persuasion) தூண்டுவதாக இருக்கின்றது.

வளர்ந்த சமூகத்தில் பொருளாதார அடிதளத் திற்கும் அரசியல் மேலடுக்குமிடையே உள்ள உறவு சிவில் சமூகத்தின் மூலமாகவே கட்டமைக் கப்படுகின்றது. இங்கு அரசியல் சமூகம் என்பது 'கோட்டை சுவருக்கு வெளியே உள்ள அகழி தான். அதற்குப் பின்புறமோ வலுவான கோட்டைகளும் மதில்களும்' நிற்கின்றன. அரசு அதிகாரத்தை கைப்பற்றுதல் என்ற போராட்டம் சிவில் சமூகத்தில் முதலில் நடந் தாக வேண்டும். சிவில் சமூகம் வளர்ச்சி குன்றிய சமூகத்தில் (உ.ம் 1917 ரஷ்யா) பாட்டாளி வர்க்க புரட்சி என்பது அரசியல் சமூகத்தை கைப்பற்றுவதாக இருக்கலாம். எனினும் அரசதி காரத்தை நிலைநாட்ட சிவில் சமூகத்திலும் புரட்சி தொடரவேண்டும். இல்லையென்றால் அதிகாரம் மறு உற்பத்தி செய்யப்படும்நிலையே ஏற்படும்.

ஆதிக்க வர்க்கத்தின் கருத்தியலுக்கு ஏற்பு நீடிக்க வேண்டும் என்றே மரபு அறிவு ஜீவிகள் (Traditional Intellectuals) மற்றும்(இன்று) முதலாளிய அறிவு ஜீவிகள் செயல்படுகின்றனர். பாமர அறிவில் உள்ள எதிர்ப்பு அம்சத்தை வளர்த்து எடுக்கவே பாட்டாளிய அறிவு ஜீவிகள் (Organic Intellectuals) (அல்லது அவயவ அறிவு ஜீவிகள்) செயல்படுகின்றனர். பாமர அறிவின் மூலம் ஆதிக்க வர்க்கம் நிலைநாட்டி யுள்ள மேலாண்மையில் சிதைவை ஏற்படுத்தி, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் மேலாண்மையை நிலைநாட்ட துணைநின்றவர்களையே பாட் டாளிய அறிவு ஜீவிகள் என அழைக்கலாம். ஒரு வர்க்கத்துடன் இணைந்து அவ்வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு செயல்படுகின்றவர்களை அவயவ அறிவு ஜீவிகள் (Organic Intellectuals) என்று கிராம்ஷி அழைக்கின் றார். எனவே நிலபிரபுத்துவசமூகத்தில் அவயவ அறிவு ஜீவிகளாக இருந்த பாதிரிகள் போன் றோர் முதலாளிய சமூகத்தில் பிற்போக்கை நிலைநாட்ட செயல்படுவதின் மூலம் மரபு அறிவு ஜீவிகள் என செயல்படுகின்றனர், அதே சமயத்தில் முதலாளிய சமூகத்தில் கட்சிகள், கல்விக்கூடம் போன்றவை அவயவ அறிவு ஜீவி களாக செயல்படுகின்றன என்பதையும்கிராம்ஷி விளக்குகின்றார். மரபு அறிவு ஜீவிகளை பாட் டாளிய அறிவு ஜீவிகளாக செயல்பட தூண்ட வேண்டிய கடமையையும் கிராம்ஷி வலியுறுத்து கின்றார். நிலபிரபுத்துவ வர்க்கத்திற்கு பணி செய்த பாதிரிகளைப்போல ஒரு அறிவு ஜீவிகுழு பாட்டாளி வர்க்க மேலாண்மைக்கு பணிசெய்ய தேவையென்கின்றார்.

இத்தாலிய முதலாளிய தேச-அரசின் உருவாக் கத்தை விளக்கிச் சொல்வதன் மூலமே கிராம்ஷி பலவற்றை விளக்கி கூறுகின்றார். இத்தாலிய முதலாளிய வர்க்கத்தின் பிரதிநிதிகளாக இருந்த மிதவாதிகள் இத்தாலியின் தென்பகுதி யில் இருந்த நிலவுடமையாளர்களை தம் பக்கம் சேர்த்துக் கொண்டனர். ஆனால் அப்போது தீவிரவாதக் கட்சியாக செயல்பட்டவர்களும் சரி அதன் பின்வந்த சோசலிச கட்சியும் சரி பாட் டாளிகளையும் விவசாயிகளையும் இணைக்க வில்லை. அதற்கு மாறாக மிதவாதிகள் பாட்டா ளிகளை தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டு விவ சாயிகளை தனிமைப்படுத்தி தங்களது இத் தாலிய தேசியத்தை, தேசிய அரசை உருவாக்கி னர். இத்தாலிய சோசலிச கட்சியும் கூட படிப் படியாக ஆளும் முதலாளிய வர்க்கத்தால் உள் ளிழுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாறு பிற் போக்கு சக்திகள் முற்போக்கு சக்திகளை உள் ளிழுத்துக் கொள்வதை, பரந்து பட்ட மக்களின் ஒப்புதலை பெறாததை, சமூகத்தை புரட்சிகர மாக மாற்றியமைக்காத ஒன்றை உயிர்ப்பற்ற புரட்சி (Passive Revolution) என கிராம்ஷி குறிப்பிடுகின்றார் இந்தியாவில் காந்தி தலைமை தாங்கி நடத்திய பலதும் இத்தகையதே என கிராம்ஷி வகைப்படுத்துகின்றார்.

இத்தாலியின் பிரபல எழுத்தாளர் பெனடெட் டோ குரொச்செவை உயிர்ப்பற்ற புரட்சியின் தத்துவவாதி என கிராம்ஷி இனம்காட்டுகின் றார். நிலபிரபுத்துவ இத்தாலியில் பாதிரிகள் செய்த பணியை குரொச்செ முதலாளிய இத் தாலிக்கு வழங்கினார். குரொச்செ எவ்வாறு போராட்டத்தின் பொருளாதாரக் கட்டத்தை (அதாவது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் எழுச்சி யை) புறக்கணிப்பதன்மூலம் கருத்து முதல்வாதி யாக செயல்படுகின்றார் என்பதை கிராம்ஷி அம்பலப்படுத்துகின்றார்.

15-ம் நூற்றாண்டின் இத்தாலியச் சிந்தனையா ளரான நிக்கோலோ மாக்யவெல்லி, இத்தாலி யை ஐக்கியப்படுத்துவதற்கான வழிமுறைகளை ''இளவரசன்'' (The Prince) என்ற நூலில் கூறியிருந்தார். ஐக்கியப்படும் சக்தியின்குறியீடு தான் ''இளவரசன்'' எனவே இத்தாலி முழுவ தையும் புரட்சிகரமாக மாற்றியமைக்கக்கூடிய ஒரு ஆக்கப்பூர்வமான செயல் பாட்டை புரியும் கட்சியின் குறியீடாக கிராம்ஷி 'நவீன இளவரசன், என்ற சொற்றொடரைப் பயன் படுத்துகின்றார். 'நவீன இளவரசன்' ஒரு தனி மனிதன் அல்ல. ஒரு அமைப்பு. நவீன இள வரசன் சிந்தனை ரீதியான, அறவியல்ரீதியான சீர்திருத்தத்தை பிரகடனப்படுத்துபவனாகவும் அச்சீர்திருத்தத்தை ஒழுங்கமைப்பவனாகவும் இருக்க வேண்டும். அதன் பொருள் என்ன வென்றால் ஒரு தேசிய அளவிலான மக்கள் சார்ந்த கூட்டுச்சித்தம் வருங்காலத்தில் வளர்ச்சி

அடைவதற்கான களத்தை உருவாக்குதல் என்பதாகும்'' என கிராம்ஷி கூறுகின்றார்.

'நவீன இளவரசன்' (அதாவது புரட்சிகரகட்சி) யின் ஒற்றுமை என்பது முக்கியம்தான் என்றாலும் அது கட்சித் தலைமைக்கு உறுப்பினர்கள் குருட்டுத்தனமாக அடிபணிந்துபோதல் அல்ல என்பதை வலியுறுத்துகின்றார். கட்சி ஜாகோபின் உணர்வைக் கொண்டிருக்க வேண்டும் என்றார் பிரான்சில் முதலாளிய வர்க்கம் தனது பிரத்தியேக நலன்களை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யாமல் விவசாயிகளின் நலன்களையும் முன்வைத்து போராடி அரசமைத்தது. (இத்தகைய உணர்வையே ஜாக்கோபின் உணர்வென்கின்றார்) அவ்வாறு இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி விவசாயிகள், சிறு முதலாளிகள் போன்ற நேசவர்க்கங்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார். குறிப்பாக முசோலினியின் பாசிசத்தை முறியடிக்க வர்க்கங்கள், வர்க்கப்சார குழுக்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஐக்கியமுன்னணி அமைத்து போராட வேண்டும் என்கிறார.

எதார்த்த நிலைமைகளை புரிந்து புரட்சி நடத்த இருவித போக்குகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என கிராம்ஷி கூறுகின்றார்.

1. அடிப்படை இயக்கப் போக்கு (Organic Movement)

2. சூழ்நிலை இணைவால் ஏற்படும் இயக்கப் போக்கு (Conjunctural Movement)
அடிப்படை இயக்கப்போக்கு நிரந்தரமாக உள்ள இயக்கப்போக்கு ஆகும். மற்றது (சூழ்நிலை இணைவால் ஏற்படும் இயக்கப்போக்கு) இப்போதுள்ள அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பை பேணி பாதுகாக்க போராடும் அரசியல் சக்திகளின் முரண்பாட்டை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தீர்க்க முயலும் களமாகும். முதலாவது 'மூலயுக்தி' (Strategy) பிரச்சாரம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இரண்டாவது தந்திரயுக்தி (Tactics), கிளர்ச்சி (Agitation) ஆகியவற்றுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. எனவேதான் அடித்தளத்தில் பொருளாதார மட்டத்தில் ஏற்படும் நெருக்கடிகள் அரசியல் பண்பாடு மேலடுக்குகளில் வெளிப்பாடு காணும் என்ற அவசியமில்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே முன்னேறி தாக்கிவிடலாம் என்று எண்ணுவது பொருளாதார குறுக்கல் வாதமாகும். எனவே இருவகை இயக்கப் போக்குகளுக்கு மிடையே உள்ள உறவை சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்றால், சமூகத்தில் நிலவும் பல்வேறு சக்திகளுக்குமிடையே உள்ள உறவையும், இவ்வுறவுகளின் பல்வேறு நிலைகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

1. பொருளாதார கட்டமைப்பு தொடர்பான விவரங்களை அறிவது மாற்றத்திற்கு அவசியமான நிலைமைகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய உதவும்.

2. பல்வேறு அரசியல் சக்திகளுக்கிடையே உள்ள உறவுகளை அறிவது பல்வேறு வர்க்கங்கள் எந்த அளவுக்கு தன்னுணர்வு பெற்றுள்ளன எந்த அளவுக்கு அவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என மதிப்பிட உதவும். இதில் மூன்று நிலைகள் உள்ளன:

அ) ஒரு வர்க்கத்தின் அனைத்து பிரிவினருக்காகவும் செயல்படுதல்.

ஆ) தனது வர்க்க நலனை மட்டும் காணாது கீழ்நிலை வர்க்கங்களின் நலனையும் கணக்கில் எடுத்துக்கொள்ளல். இது அவ்வர்க்கத்தின் அரசியல் ரீதியான வளர்ச்சி கட்டமாகும்.

சமூகம் முழுவதற்குமான பொருளாதார அரசியல் குறிக்கோள்களை மட்டும் அல்லாது பொதுவான சிந்தனை, பொதுவான அறவியல் ஆகியவற்றை நிலைநாட்டுகிறது. இவ்வாறே ஒரு அடிப்படை வர்க்கத்தின் மேலாண்மை உருவாகிறது.

3. ராணுவ சக்திகளுக்கிடையே உள்ள உறவை அறிதல் அரசியல்—இராணுவ நடவடிக்கைகளில் இறங்க உதவும்.

முன்னேறித் தாக்கும் போர் (War of Manouvre or war of Movements) எல்லா நாடுகளிலும் எல்லா சமயங்களிலும் சாத்தியமில்லை எனவும் சிவில் சமூகத்தில் போராடுவதற்குக் கையாளப்படவேண்டிய உத்தி முன்னேறித் தாக்கும் போர் அல்ல. நிலைபதிந்த போர் (War of Position) யுக்திதான் என கிராம்ஷி குறிப்பிடுகின்றார். இந்து மீட்புவாதிகள் வெவ்வேறு சங்கங்கள் மூலமாகவும். கூட்டங்கள், பிரச்சாரங்கள், நேரடி சந்திப்புகள், செங்கல் பூஜை, செய்தி தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் மூலம் தொடர்ந்ததை நிலைபதிந்த போர் என்றும் மசூதியை இடித்ததை முன்னேறி தாக்கும் போர் என்றும் நாம் புரிந்து கொள்ளலாம்.

### III மாற்றுக் கலாச்சார கூறுகள்

அ) தொழிலாளர்கள் அனைவரையும் பங்கெடுக்க வைக்கக்கூடிய **'தொழிற்சாலை கவுன்சில்'** என்ற அமைப்பை அவர் பரிசோ

www.padippakam.com

தித்து பார்த்தார். அது பாட்டாளி வர்க்கம் எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய சமூகத்தின் முன்மாதிரியாக இருக்குமென கிராம்ஷி கருதினார். உற்பத்தி இயக்கப்போக்கில் தொழிலாளர்கள் குறுக்கிடுவதால் அவர்களை வெறும் உழைப்பு வழங்குபவர்கள் என்ற மட்டத்திலிருந்து உற்பத்தியை செய்கின்றவர்கள் என்ற நிலைக்கு கொண்டுவர முயன்றார். கட்சி, தொழிற்சங்கம் ஆகியவற்றின் அதிகாரத்துவ போக்கிலிருந்து தொழிலாளர்கள் விடுபட்டு மேலும் இயக்கம் வெகுமக்கள் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்பதற்காகவே அதை மேற்கொண்டார்.

ஆ) புதிய தொழில் நுட்பங்கள் ஒழுக்க முறைகள் ஆகியவற்றைக் கொண்ட அமெரிக்கனிசம் ஃபோர்டினிஸம் தொழிலாளர்களை மந்தைகளாய், எதிர்ப்புணர்வு அற்றவர்களாய் ஒடுக்க முயற்சித்தபோது தொழிலாளர்கள் தாங்கள் மாடாக ஈடுபடுத்தப்படுவதை உணரவும், சிந்திக்கவும், எதிர்ப்பு உணர்வை வளர்க்கவும் இயலும் என்பதை கிராம்ஷி வலியுறுத்தினார்.

இ) அறிவு ஜீவிகள் யாரும் வர்க்கத்திற்கு அப்பாற்ப்பட்டவர்கள் அல்ல என்றும் அறிவு ஜீவிகளும் மக்களும் இணைந்திருக்க வேண்டும் என்றும், பாட்டாளிய அறிவு ஜீவிகள் மக்கள் மீது கருத்தைத் திணிப்பவர்கள் அல்ல அவர்களிடத்தில் இருக்கின்ற எதிர்ப்பு கூறுகளை வளர்த்தெடுப்பவர்கள் என்றும், உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையில் பகை விலக வேண்டும், சிந்தனைக்கும் செயலுக்கும் தொடர்பு இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார். மார்க்சியத்தையே ''நடைமுறையின் தத்துவம். (Philosophy of Praxis) என்றே அழைத்தார்.

''அறிவு ஜீவிகளுக்கும் மக்களுக்குமிடையே உள்ள உணர்ச்சிமிக்க தொடர்பு இல்லாமல், இந்த உணர்ச்சி வேட்கை இல்லாமல் அரசியல், வரலாறு ஆகியவற்றைப் படைக்க முடியாது. இத்தகைய தொடர்பு இல்லாமல்போனால் அறிவாளிகளுக்கும் மக்களுக்குமிடையே உள்ள உறவுகள் அதிகார வர்க்கத்திற்கும் மக்களுக்குமிடையே உள்ள உறவாகவோ அல்லது வெறும் பெயரளவுக்கான உறவாகவோ குறுகிவிடும். அறிவு ஜீவிகள் ஒரு தனி சாதியாகவோ அல்லது புரோகிதக் கூட்டமாகவோ மாறிவிடுவர்'' என சிறை குறிப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளார்.

ஈ) கட்சித்தலைமை, அறிவு ஜீவிகள், கட்சி அணிகள் ஆகியோரிடையே நிலவ வேண்டிய உறவை வடிவமைப்பது 'ஜனநாயக மத்தியத்துவம், தான் என்பதை வலியுறுத்தினார். அதிகார வர்க்கம் மத்தியத்துவம் குறுங்குழுவாதிகளால் உருவாக்கப்படுகின்றது. இவர்கள் தங்கள் ஆதிக்கத்தை கட்சி அணிகள் மீது திணிக்கும் அறிவாளிகள். அதற்கு மாறாக ஜனநாயக மத்தியத்துவம் என்பது கட்சி தன்னை இடைவிடாது தகவமைத்துக் கொள்ளுதல்; கீழிருந்து வரும் முன் முயற்சிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மேலிருந்து பிறப்பிக்கப்படும் ஆணைகள் அமைதல்... எனக் கூறுகின்றார். அதைப் போல் கட்சி கட்டுப்பாடு (Discipline) என்பதும் தலைவர்களுக்கும் அணிகளுக்குமிடையே உள்ள இடைவிடாத, நிரந்தரமான, கூட்டுச் சித்தத்தை உருவாக்கக் கூடிய உறவையே குறிக்கின்றது எனக்கூறினார். கிராம்ஷி வலியுறுத்தும் கட்சியின் முன்னணி பாத்திரம் இப்போது இங்கு நடை முறையில் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு.

உ) பாசிசம் அடிமைகளையே விரும்புகின்றது. முதலாளியத்தின் சட்டவிரோத வன்முறைதான் பாசிசம். இத்தாலியில் அது சிறு முதலாளித்துவ பிரிவினரை அணிதிரட்டுவதன் மூலமே தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. பாட்டாளி வர்க்கம் விவசாயிகளையும் அனைத்து சனநாயக சக்திகளையும் ஓரணியில் திரட்ட தவறினால் பாசிசத்தை அழித்தொழிப்பது இயலாது என்று கிராம்ஷி வலியுறுத்தினார். ஆனால் இன்று இங்கு பாசிசத்தைஇனம் காட்டுகின்றவர்கள் அனைவரும் ஐக்கிய முன்னணி கட்டுவதில் முழுவதும் இறங்குவதில்லை.

ஊ) ஆளும் வர்க்கம் சில சீர்திருத்தங்களை செய்வதின் மூலம் பாட்டாளி வர்க்கத்தை சமரசம் செய்து வைக்கின்றது. சீர்திருத்தவாதத்தை உயிர்ப்பற்ற புரட்சியாகவே கிராம்ஷி பார்க்கின்றார். பாட்டாளி வர்க்கம், சீர்திருத்தங்களை இயங்கியல் ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும். அச்சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது என்பது சமூகத்திலுள்ள பல்வேறு சக்திகளின் பலாபலத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா, இம்மாற்றம் பாட்டாளி வர்க்கத்திற்கு சாதகமாக அமையுமா என்பதை பொறுத்து தீர்மானிக்க வேண்டும் என்றும் அடிப்படை மாற்றத்திற்குமுன் வெவ்வேறு நிலைகளையும் கடந்து செல்ல வழிவகுக்க வேண்டும் என்றும் கிராம்ஷி கேட்டுக் கொள்கின்றார்.

எ) பழைய பண்பாட்டு மரபை அறவே நிராகரிப்பதை கிராம்ஷி எதிர்க்கின்றார். மானிட வளர்ச்சிக்கு தேவையான அம்சங்களை சேர்த்து அழித்துவிடக்கூடாது என்கின்றார். குரொச்செவை கிராம்ஷிகடுமையாக விமர்சித்த போதும் அவரிடம் இருந்து ஒருசில நல்ல அம்சங்களை ஏற்றுக் கொள்கின்றார். பொருளாதார வாதத்திற்கு (Economic Determinism) முற்றுப் புள்ளி வைத்து கருத்தியலின் பாத்திரத்தை முன்



படிப்பகம்

www.padippakam.com

கொணர்வதில் குரொச்செவே கிராம்ஷிக்கு உதவுவதாக குறிப்பிடுகின்றார். மேலாண்மை (Hegemony) என்றும் கருத்தாக்கத்தை லெனினிடம் இருந்தே கற்றுக் கொண்டதாக கூறுகின்றார்.

ஏ) பாட்டாளி வர்க்கத்தின் பண்பாட்டு வளர்ச்சி என்பதை பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மையை நிலைநாட்டுதலுடன் தொடர்புபடுத்தியே பார்க்கின்றனர். புதிய கல்வி அமைப்புகளை உருவாக்குதல் மூலமும் ஆர்வமிக்க இளைஞர்களை அவற்றில் பயிற்றுவிப்பதன் மூலமும் அதை நடைமுறைப்படுத்த சொல்கின்றார்.

ஐ) பாட்டாளி வர்க்க மேலாண்மையை உருவாக்குவதும் தேசிய மக்கள் பண்பாட்டை (National Popular Culture) உருவாக்குவதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றார். அன்று வாட்டிகனில் இருந்த தலைமை குருக்கள் கல்வி, கலை, மருத்துவம் போன்ற எல்லா துறைகளிலும் இலத்தீன் மொழியை பயன்படுத்தினர். மறுமலர்ச்சி காலத்தில் பயன்படுத்தப்பட்ட வட்டார மொழியும்கூட மேட்டுக்குடியினரின் மொழியாகவே இருந்தது. இத்தாலிய தேச உருவாக்கத்தில் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் — குறிப்பாக விவசாயிகள் பங்கேற்கவில்லை. இத்தாலிய தேச உருவாக்கம் முழுமை பெறவேண்டுமானால் அது பட்டாளி வர்க்கத்தின் தலைமையில் உழைக்கும் வர்க்கங்கள் ஒன்று திரட்டப்படும் புரட்சியை நடத்தியாக வேண்டும்' இங்கு இந்தியாவில் தேசியம் பேசிவந்தவர்கள் எவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்கள் இல்லாத தேசியத்தை உருவாக்கினர் என்பதும் புலப்படுகின்றது. ஐரோப்பா முழுவதற்கும் என செயற்கையாக உருவாக்கப்பட்ட 'எஸ் பிராண்டோ' என்ற மொழியை கிராம்ஷி கண்டித்து எழுதி, மேலிருந்து ஒரு பொது மொழியைத் திணிக்க முடியாது என்றார். இத்தாலியில் ஒரு பொது மொழி உருவாக வேண்டுமென்றால் அனைத்து இத்தாலியரும் பயன்படுத்தக்கூடிய மொழியாகவும் அவர்களது வாழ்வு வர்த்தகம், படைப்புகள் ஆகியற்றுடன் சம்பந்தப்பட்ட மொழியாகவும் அது இருக்க வேண்டும் அது வரலாற்று ரீதியாக மெல்ல மெல்ல உருவாகிவரவேண்டும். இங்கு இந்தித் திணிப்பை ஏன் முறியடிக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது. இங்கு பார்ப்பனிய பண்பாடே இந்தியப் பண்பாடாகவும் சைவ வெள்ளாளப் பண்பாடே தமிழ்ப் பண்பாடாகவும் சொல்லப்பட்டு வந்துள்ளது. அதே சமயத்தில் பார்ப்பனர் வெள்ளாளர் இருவருக்குமிடையே எதிர்ப்பு இருப்பதுபோல் காட்டிக் கொண்டாலும் இருவரும் வரணாசிரம தர்மத்தை ஏற்றுக்கொள்கின்றவர்கள். எனவே இங்கு தலித் பண்பாடுதான் தேசியப் பண்பாடாக உருவாக இயலும்.

ஓ) பரந்துபட்ட மக்களின் உலக கண்ணோட்டம் நாட்டார் வழக்காற்றில்தான் இடம்பெறுகின்றது. அது சமூகத்தில் மேலோங்கியிருக்கும் உலக கண்ணோட்டத்திற்கு மாறான ஒன்று. ஒழுங்கமைக்கப்படாததாகவும் முரணானதாகவும் இருக்கின்றது. ஆதிக்க வர்க்கம் தனக்கு சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்கின்றது. பாட்டாளி வர்க்க கட்சி நாட்டார் வழக்காற்றில் ஆழமான புரிதலை பெற்றிருக்க வேண்டும். வெகு மக்கள் உலகக் கண்ணோட்டம் பரிச்சயம் ஆக வேண்டும். தனது கருத்தை வெகு மக்கள் மீது திணிக்காமல் அவர்களிடத்தில் விமர்சன புரிதலை ஏற்படுத்த வேண்டும். எதிர்ப்பு கூறுகளை வளர்த்தெடுக்க வேண்டும்.

ஓ) சனரஞ்சக இலக்கியங்களைப் புறக்கணிக்காமல் அவற்றைப் படிக்கும் வாசகர்கள் மத்தியில் புதிய பண்பாட்டுக்கான வித்துக்களை விதைக்க வேண்டும். சனரஞ்சக இலக்கியங்களைப் படிக்கின்றவர்கள் நகரத்து சிறு முதலாளியக்கும்பல், மற்றும் பெண்கள் இவர்களுடைய வாழ்க்கை புளித்துபோன ஒன்றாக இருப்பதால் எதும் கிளுகிளுப்பூட்டக் கூடிய விஷயங்களைத் தேடி லயித்துப் போகின்றனர். சாகசக் கதைகளில் தங்களையே 'அதீத மனிதர்களாக' அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஒருசில மணி நேரமாவது சாகசம் நிறைந்த செயற்கை உலகம் அவர்களை வாழவைக்கின்றது. இந்த சனரஞ்சக இலக்கியத்திலிருந்து தான் புதிய விமர்சனங்களை உருவாக்க வேண்டும். தாங்கள் அநீதி இழைக்கப்பட்டவர்கள் என்ற உணர்வை பெறுபவர்களாக வேண்டும்.

ஔ) பாட்டாளி வர்க்கப் பத்திரிகை என்பது புரட்சிகர மாற்றத்தை உருவாக்குவதற்குப் பாடுபடுவதற்காக இருக்க வேண்டும். வெகு மக்கள் பத்திரிகையாக இருக்க வேண்டும். விமர்சனங்கள் பல தரப்பட்டவையாக இருந்தால் அது பத்திரிகை ஆரோக்கியமானதாக உள்ளது என்பதற்கான அறிகுறிதான். எந்தெந்த வடிவங்களில் பழைய உலகக் கண்ணோட்டம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது அதை எவ்வாறு வரலாற்று ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்க வேண்டும்'

(அம்) அரசியலையும் கலையையும் ஆராய்ந்து பார்க்க கிராம்ஷி அழைக்கின்றார். உருவமும் உள்ளடக்கமும் பொருந்தியிருந்தால்தான் கலை படைப்பு சிறப்பாக இருக்கும் என்று கூறுகின்றார். பொதுவாக கலை இலக்கிய விமர்சனம் என்பது பண்பாட்டை பற்றிய விமர்சனமாகத் தான் இருக்கமுடியுமேதவிர, அழகியல் ரீதியான விமர்சனமாக இருக்க முடியாது என்கின்றார்.

**துணை நின்ற நூல்:** அந்தோனியோ கிராம்ஷி — வாழ்வும் சிந்தனையும், எஸ்.வீ. ராஜதுரை வ. கீதா, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1991.



படிப்பகம்

www.padippakam.com

# மாற்றுக் கலாசாரங்கள் - வாழ்விற்கான சாத்தியங்கள் பற்றிய சில மேலோட்டமான வார்த்தைகள்

—ராஜன்குறை

**எச்சரிக்கை:** விவாதத்திற்கான ஒரு வசதி கருதி ஒரு சில வாக்கியங்கள் இங்கு அடுக்கப் படுகின்றன. கலாசாரம்—எதிர்ப்பு—மாற்றம்—மாற்று குறித்த பதிவுகள் 'நிறப்பிரிகை' இதழ் களனைத்திலும் நிறைந்துள்ளன. தவிர வெகு ஜனப் பேச்சில் இதுகுறித்த சிந்தனைகளை பிர மிப்பூட்டும் விதத்தில் ஒலித்த பெரியாரையும், சிறு பத்திரிகை தளத்தில் நிகழ்ந்துள்ள பல்வேறு சீரிய பதிவுகளையும் இங்கு நினைவு கொள்வ தும், தொகுத்துக் கொள்வதும் அவசியமாகும்.

**எல்லை:** மாற்றுக்கலாசாரங்கள் குறித்த பேச்சா னது தீர்வுகள் குறித்த பேச்சாக இல்லாமல், தேர்வுகள் குறித்த பேச்சாக இருப்பதே பொருத் தமானது. அதுவும் தேர்வுகளுக்கான தேவை களைவிட, சாத்தியங்களையே (Possibilities) இன்று அதிகம் பேசவேண்டியுள்ளது. மற்றபடி புனித ஆன்மாவையோ, புதிய தன்னிலைகளை யோ 'புதிய வார்ப்புகளில்' பெருமளவு உற்பத்தி செய்து விநியோகித்து விடலாம் என்பது போன்ற மதவாத நம்பிக்கைகளுக்கு வெளியே தான் நிற்க வேண்டும். தேர்வுகள் மறுப்பது ஒடுக்குமுறை. தேர்வு செய்யும் உரிமையை மீட்பது அரசியல் போராட்டம். கருச்சிதைவை தடை செய்யும் (Anti - Abortion) ஆதிக்க நிலைக்கெதிராக திரள்பவர்கள் தங்களை 'தேர்விற்கு ஆதரவாளர்களாக' (Pro-choice) அழைத்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

**வாழ்வின் இயங்குதிசை:** கலாசாரம் என்று அடையாளமாகக் கூடிய எதையும் ஒற்றைப் பரிமாணமாக எதிர்ப்பது அதீதமானதுதான். ஆனால் இதை எழுதுகின்ற, வாசிக்கின்ற உயிரி களுட்பட தத்தமது வாழ்வின் இயங்குதிசை யினை தீர்மானித்தது எது என்று கேட்கப் புகுந் தால் பெரியதொரு திகைப்பு ஆண் - பெண் என்ற வார்த்தைகள் தொடங்கி எண்ணற்ற வார்த்தைப் பாடுகளில் சிறைப்பட்ட உயிரி எப்படி வெளிவந்து தன்முன்னுள்ள சாத்தியங் களை கண்ணுற்று, உணர்ந்து தேர்வினை மேற்கொள்ளும் உறுதியைப் பெறுவது?

தேர்வுகளுக்கு எதிரான இரண்டு பயங்கரமான வார்த்தைகள் 'இயல்பு' (Normal) இயற்கை (Natural). இயல்பற்றது, இயற்கைக்கு விரோதமானது என எல்லாச் சாத்தியங்களும் மறைக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு தேர்விற்கான உரிமைகள் பறிக்கப்பட்டு அணிவிக்கப்படும் வேடங்களைத் தாங்கி வாழ்ந்து மாய்வதற்கு மனித உயிரிகள் தயாரிக்கப்பட்டு சமூக ஒழுங் கமைப்புகள் நிலவுகின்றன. அப்படியென்றால் தேர்வு செய்யும் உரிமை ஒழுங்கமைப்புகளை குலைக்குமா? உயிர் நசிந்து-வன்முறை பெருகி-இரத்த வெள்ளத்தில் முடிந்து விடுமா என்பது போன்ற அச்சுறுத்தல்கள் தொடர்ந்து புனையப் பட்டு வந்துள்ளன இதுவே அடிமையின் காதல்.

பொதுவாக இயங்குதிசை நிலைபெற்றுள்ள விதமானது:

உற்பத்திக்கான ஆற்றலைப் பெறுவது -> உற் பத்தியில் ஈடுபடுதல் -> திருமணம்-> மனித மறு உற்பத்தி -> உற்பத்திக்கான ஆற்றலைப் பெறும்படி சந்ததியரைத் தயாரித்தல் -> இச் சுழற்சியினை பாதுகாப்பது உறுதி செய்வது.

இதில் எந்த உடல் திசை திரும்பினாலும் ஓரங் கட்டப்படுவதும், தண்டிக்கப்படுவதும் நிகழ்வது தான். தமிழ்ச்சமூகத்தில் குறிப்பாக மனித மறு உற்பத்தி குறித்த மோகம் (obsession) அதிகம். சந்ததியர்க்காக வாழ்வதே இங்கு பிரதானம். உடலுறவில் கூட இன்பம் வேண் டாத உபரி; பிள்ளை பெறுவதே நோக்கமாக வேண்டும் என்று அறிவித்த 'தேசப்பிதா' தனி விசேஷம். இங்கு இன்னமும் இது குறித்த கேள்விகளை மால்தூஸுடன் இணைத்துப் பார்க்கும் பத்தாம் பசலித்தனம் நகைப்புக்குரி யது. 'பிள்ளை பெறும் செயல் நிறுவனமாக்கப் பட்டுள்ள விதத்தை தீவிர சர்ச்சைக்குள்ளாக்கா மல் எந்த மாற்றமும், மாற்றும் சாத்தியமில்லை. 'பிள்ளை பெறாமல்' வாழும் உரிமை மட்டுமல்ல தேவையும் கூட 'ஆண்' களுக்கும், 'பெண்' களுக்கும் உண்டு இதெல்லாம் தவிர இன் னொரு சிக்கல்- 'தமிழ்'ச் சமூகம் சாதியச்சமூகம் இங்கு உற்பத்தியில் ஈடுபடுதல்-மறுத்தல் இரண்டிற்குமே தனித்த அர்த்தங்கள் இருக் கின்றன. [உதாரணத்திற்கு பார்க்க 'காத்தவ ராய கிருஷ்ண காமராஜன்'—திரைப்படம்]

**குடும்பம்:** குடும்பம் என்ற 'சமூக அடிப்படை அலகு' பற்றிய பேச்சுகள் மிகுந்த சலிப்போடு எதிர் கொள்ளப்படுவது அறிந்ததே. 'என்ன மாற்று வைத்திருக்கிறாய்?' என்றும் 'ஸ்காண்டி நேவியால் என்ன நடந்தது தெரியுமா? என்றும் எனது தமிழ் அறிவுலக பெரிய தந்தையர், சிறிய தந்தையர் மற்றும் மாமன்மார்கள் அன்புடன்



படிப்பகம்

www.padippakam.com

வினவுகின்றனர். அவர்களுக்கு என் பதில்: 'தோழர்களே! அது கிடக்கட்டும் விடுங்கள். குடும்பம் டினோசார்கள் மாதிரி அழிந்து போனால் என்ன அல்லது கரப்பான்களைப் போல பெருகினால் என்ன? குடும்பம் என்பதன் துராக்ரமம் பற்றி சிறிது பேசுவோமே' என்பது தான். ஆனால் இங்கு குடும்பம் என்பதை வேறொரு கோணத்தில் அணுகவேண்டியுள்ளது ஒரு மனிதனுக்குப் பாதுகாப்புப் பெற, தன் அடையாளத்தை, வாழ்வு குறித்த நிச்சயத்தை, இயல்புணர்வைப் பெற குடும்பம் தவிர பல அதி-குடும்பங்கள், விரி-குடும்பங்கள் தேவைப் படுகின்றன. அது சாதிச் சமூகமாக, ஆண்சமூகக் குழுவாக, பெண் சமூகக் குழுவாக, தொழிற் சங்கமாக, ரசிகர் மன்றமாக, விளையாட்டுக் குழுவாக, டீக்கடை அரட்டைக் கும்பலாக, வழி பாட்டு மன்றமாக, இயக்கமாக, கட்சியாக இன்னும் எதுவாக வெல்லாமோ இருக்கமுடியும் இந்தப் பேச்சை 'கொல்லன் யார்?' 'வேல்எது? என்ற கேள்விகள் வரை கொண்டு செல்ல முடியு மென்பதும் தெரிந்ததே- ஆனால் 'ஆண்'களை விட, 'பெண்'கள் அதிகம் குடும்ப உயிரிகளாக உருவாக்கப் பட்டுள்ளதும் உண்மைதான். ஆண் களின் சமூகக் கவனம் (Social Occupation) பெண்களின் மத. சடங்கு ரீதியான கவனங் களால் (Religious Occupation) பதிலீடு செய்யப் படுகின்றன எனலாம். பல இடங்களில் பெண்களின் சமூகத்தளம், குடும்பத்தளமாக இதன்மூலம் குறுக்கப்பட்டுள்ளதால் பெண் விடு தலையுடன் குடும்பம் பற்றிய கேள்வி தவிர்க்க வியலாமல் பிணைந்துள்ளது வெளிப்படை. ஆனால் இங்கு தெளிவு பெறுவது என்னவென் றால் உரியதாகும் உணர்வை (Sense of belonging) பெறகுடும்பம் போதாதென்பதும், வேறு கலாசார அலகுகளும் தேவையென்பதும் தான் இதைத் தொடர்ந்து மனித உயிரியின் இருத்தலியல் தேவைகளைச் சமாளிக்கக் குடும் பம் இன்றியமையாதது அல்ல என்றும் அதில் லாவிட்டால் பெரியதொரு நெருக்கடி உருவாகச் சாத்தியமில்லை என்றும் கூறலாம்.

**மாற்று சமூக இடம்:** குடும்பத்தின் பிணவாடை வீசாத வசிப்பிடங்களில் வாழ்ந்த இன்பமான நேரங்களை பலரும் நினைவு கொள்வது சாத் தியமாகலாம். என்னைப் பொறுத்தவரையில் கேரளாவில் காலிகட் நகரில் ஒடெஸ்ஸா திரைப் பட இயக்கத்தின் 'இருப்பிடத்'தில் வாழ்ந்த தினங்களே மிக அருமையானவை. கட்டிடத்தில் நுழையும் போதே சிற்பங்களும், ஒவியங்களும், தரையில் உருவாகிக் கொண்டிருக்கும் ஒவியங் களும், புத்தகங்களும், திரைப்படச் சுருள் களடங்கிய பெட்டிகளும். 'டீ' தயாரிக்கக் கூடிய அளவில் ஒரு 'சமையலறை'—வேறு உணவுகள் சமைக்கப் படுவதில்லை. பின்புறம் 'OFFICE' என்ற அறிவிப்புப் பலகை தொங்கும் கதவைத் திறந்தால் கழிவறை. அவரவர் வசதிப்பட்ட நேரத்தில் வந்து ஓவியங்களை வரைவதும், கிராமங்களுக்குத் திரையிடல்களுக்குச் சென்று வருவதுமாயிருக்க, விடியற்காலை நான்கு மணிக்குக் கண்விழித்துப் பார்த்தால் இருவர் வாயிலில் உட்கார்ந்து சார்லி சாப்ளினை விவா தித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒடெஸ்ஸாவுடன் தொடர்புடைய ஓரிருவர் மட்டுமே அங்கு முழுமையாக வசிப்பவர்கள். மற்றவர்கள் குடும்பங்களில் வசிப்பவர்கள். பல் வேறு தொழில்கள் செய்பவர்கள். ஆனால் எந்த நேரமும் யாரும் அந்த இடத்திற்கு வரலாம், போகலாம். ஒடெஸ்ஸாவின் உருவாக்கமே காலிகட் அருகில் மற்றொரு இடத்தில் ஒரு பொது வெளியினை உருவாக்கியதும், அங்கு ஜான் அபிரஹாம் உட்பட பலரும் வந்து தங்கு வதாயிருந்த நடைமுறையின் ஒட்டித்தான். ஒடெஸ்ஸாவின் செயல்பாடுகளையும், சாதனை களையும், முழுமையாக விவாதிக்க இது இட மில்லை. ஆனால் கூட்டியக்கம் என்பது சாத் தியமாக மாற்றுசமூக இடம்மிக அவசியமானது என்பதை எடுத்துக்காட்டுகிறது ஒடெஸ்ஸா. அத்தகைய கூட்டியக்கத்திற்கு மனித உயிரி களின் படைப்பாற்றல் விகசிப்பதும், சுயேச்சை யான வெளிப்பாடுகள் ஒருங்கிணைவதுமே அடித்தளம் என்பதையுங்கூட உணர்த்துகிறது.

**பாலுணர்வு பாலுறவு:** துறவறம். இல்லறம் போன்ற அறங்களில் துவங்கி பாலியல் நிலை யும், பாலுறவும் நுட்பமான ஏராளமான மாயைகளாக, புனைவுகளாக ஒரு உயிரியைப் பிணைத்துள்ளதிலிருந்து அவிழ்த்துக் கொள் வது மாற்றக் கலாச்சார வாழ்நிலைகளைச் சாதிக்க பல சமயங்களில் அடிப்படைத் தேவை யாகிறது இயல்பற்ற நிலைகளை இயல்பாக வும், இயல்பானவற்றை இயற்கைக்கு விரோத மாகவும் நிறுவியுள்ளதை எதிர்த்து சொல்வணி (Rhetoric)களை உருவாக்கிப் போரிடுவது அவசியமாகிறது.

**எண்ணம்:** சுயேச்சையான கூட்டுவாழ்வினை சாத்தியமாக்கும் மாற்றுச் சமூக இடங்கள், இங்கு உருவாகும் மாற்று வாழ்முறைகள், விகசிக்கும் படைப்பாற்றல்-இவற்றால் நடை பெறும் ஒருவித அணு இணைவில் உருவாகும் கதிரியக்கம் பல மாற்றுக்களையும், மாற்றங் களையும் சாதிக்கும் என்று எண்ணமிடுவது இன்று ஒருவகையான தேவையாகிறது. ஏகாதி பத்தியங்கள் முன் நிறுத்தும் கோர அழிவு மாதிரிகளுக்கு மாற்றுகளை பரிசோதனையி லிருக்கும் கூட்டுவாழ்க்கை மாதிரிகளிலில்லா மல் வேறெங்கு தேடுவது என்ற எண்ணமும் தோன்றியபடியுள்ளது. O



படிப்பகம்

www.padippakam.com

# மருத்துவத்தில் மாற்றுகள் - ஓமியோபதி

—அ. மா.

**ஒன்று**

தொழிற் புரட்சியோடு தோன்றிய முதலாளியம் வாழ்வின் சகல துறைகளிலும் தனது பாதிப்பு களைப் பதிய வைத்தது. மருத்துவத்தைப் பொறுத்த மட்டில் அதுநாள் வரை மனித வரலாறு கண்டிராத ஒரு புதிய வேலைப் பிரிவினை அதற்குள் உருவாகியது. ❊A மருந்தை எழுதுபவர், தயாரிப்பவர், வினியோகிப்பவர் ஆகிய மூவரும் ஒரே நபராக இருந்த நிலை போய், மருந்தைத் தயாரிக்க மருந்துத் தொழிற் சாலைகளும் விற்பனை செய்ய மருந்துக் கடைகளும் உருவாகின. சுருங்கச் சொன்னால் மருந்து என்பது ஒரு பண்டமாகியது. நோயாளி நுகர்வோனாக மாற்றப்பட்டான். சுரண்டலும், லாபமும் கூடிய சந்தைத் தொழிலாய் மருத்துவம் மாறியது. முதலாளியம் தோன்றும் போதே ஒரு பன்னாட்டுத் தன்மையுடன் தோன்றுகிறது. மருத்துவத்திலும் இதனைக் காணலாம். காலனிய விரிவாக்க நடவடிக்கைகளில் மருத்துவர்கள் முக்கிய பங்கு வகித்ததை **பிரான்ஸ் ஃபனான்** போன்ற சிந்தனையாளர்களும் பிற வரலாற்றாசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். ''மருந்துகள் சில சந்தர்ப்பங்களில் துப்பாக்கிகளைக் காட்டிலும் பயனளிக்கின்றன எனவும், ''ராணுவம் அணுக முடியாத இடத்தில் கூட மருந்துகள் நுழைந்து விடும்'' எனவும் 'ராக்பெல்லர்' நிறுவனத் தலைவன் ஒரு முறை கூறினான், இன்றைய நவ காலனியச் சூழலில் மருந்துகள் மூலம் மூன்றாம் உலக நாடுகள் கொள்ளையடிக்கப்படும் நிலையை இங்கே விரிவாக விளக்க வேண்டியதில்லை. **''மருந்துக் காலனியம்''** எனப் பொருளாதார ஆசிரியர்கள் இதனைக் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதாரச் சுரண்டல், காலனியக் கொள்கை என்பதைத்தவிர நவீன மருத்துவம் என்பது அணுகல் முறையிலேயே பிற்கால முதலாளியத்திற்கேயுரிய வகையில் அதிகாரங்களை மக்களிடமிருந்து பிரித்தெடுத்து மையத்தில் குவிக்கும் நோக்குடையதாக இருக்கிறது. மனிதர்கள் செயலற்ற மந்தைகளாக்கப்படுகின்றனர். நவீன மருத்துவத்தின் மிகவும் ஆபத்தான அம்சம் இதுவேயாகும். இதனை அது நிறைவேற்றும் வழி முறைகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

(1) நகர் சார்ந்த மையப்படுத்தப்பட்ட மருத்துவமனை, விலை மதிப்புள்ள உயர் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நுண் கருவிகள், மெத்தப் படித்த அதீத நுண்திறன் மிக்க (over specialised) மருத்துவர்கள் ஆகிய வற்றைக் கொண்டதாக நவீன மருத்துவம் மாறியுள்ளது. ஆனால் உண்மையில் இந்நிலை தேவையில்லை. மூன்றாம் உலக நாடுகளில் அதிக அளவு மனிதச்சாவுகளுக்குக் காரணமான காசம், தொழுநோய், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களைக் கண்டறியவும், மருத்துவ உதவி அளிக்கவும் இவை எதுவும் தேவையில்லை. சீனா, கியூபா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது போன்ற அதிகம் படித்திராத-பயிற்சியளிக்கப்பட்ட- கிராமப்புற 'வெறுங்கால்' வைத்தியர்களைக்கொண்டே இந்நோய்களை நாம் உயர்தொழில்நுட்ப உதவிகளின்றி தீர்க்க முடியும். மக்களை நோக்கி மருத்துவம் சென்றடையும் வழி இதுதான்.

(2) மருத்துவரை அதிகாரியாகப் பார்க்கும் (Medical officer- மருத்துவ அதிகாரி) ஒரு மருத்துவ முறையாக நவீன மருத்துவம் உள்ளது. மருத்துவக் குழுவில் அங்கம் பெறும் நர்சுகள், மருந்தாளுனர்கள் முதலியோர் மருத்துவரின் எடுபிடிகளாக மட்டுமே கருதப்படுகின்றனர். இவர்களிடம் வேறெந்த மருத்துவப் பொறுப்புக்களும் கொடுக்கப் படுவதில்லை. மருத்துவர் எளிதில் அணுக முடியாதவராயும், அதிகம் சம்பாதிக்கும் ஒரு நபராகவும் சமூகத்தில் உலவுகிறார். நோயாளிகளிடம் இவர் வாய் திறந்து பேசுவதுகூட இல்லை. நோய் பற்றிய விளக்கங்களையும் சொல்வதில்லை. இவர் பயன் படுத்தும் 'கிளினிக்கல்' சோதனைக் குறிப்புகளும் நோயாளிகளுக்கு விளங்குவதில்லை. இதன் மூலம் மனித உடம்பும் மருத்துவமும் மர்மப்படுத்தப் படுகின்றன. மனிதனின் மிக அடிப்படையான அடையாளமாகிய அவனது உடம்பே அவனுக்குப் புரியாததாகவும் அதன் மீது ஆளுமை செலுத்தக் கூடிய நபராக மருத்துவரும் மாறும் நிலை உருவாகிறது. பொதுவில் மருத்துவர் என்றால் மேல்தட்டு மேல் சாதியைச் சேர்ந்த ஓர் ஆண் என்கிற நிலையே நிலவுகிறது.

(3) மனித உடல் என்பது ஒரு உயிரியல் முழுமையாகக் கருதப் படாமல் பல்வேறு உதிரி பாகங்களால் ஆன ஒரு எந்திரத் தொகுப்பாக அணுகப்படுகிறது. குறிப்பிட்ட உடலுறுப்புகளின் உபாதை என்பதை ஒரு பழுதடைந்த எந்திரத்தின் பாகமாக அணுகி வலி தணித்தல்



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பு மாற்றுதல் போன்ற பழுதுநீக்கும் நடைமுறையாக மருத்துவம் மாற்றப்படுகிறது.

(4) மருந்துகள் சந்தைப் பொருளான பின்பு விளம்பரம். லஞ்சம், ஊக்க ஊதியம் என எல்லாவிதமான வணிக நடைமுறைகளும் பயன்படுத்தப் படுவதோடு லாபத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு பின் விளைவுகள் பற்றிக் கவலைப்படாது மருந்துகளையும், கூட்டு மருந்துகளையும் உற்பத்தி செய்தல், மூன்றாம் உலக அப்பாவி மக்களைப் புதிய மருந்துகளைச் சோதனைசெய்யும் சோதனைப் பொருட்களாகப் பயன்படுத்துதல் முதலியன அதிக அளவில் நடைமுறையாயுள்ளது.

(5) மருந்துக் காலனித்தின் மூலம் மருத்துவத் துறையில் தனது அதிகாரத்தை இழந்த உள்நாட்டு அரசுகள் இந்நிலைக்கு எதிராகமுரண்டு பிடிக்க முயற்சித்தால் உடனடியாக ஏகாதிபத்தியங்கள் தலையிட்டு அவற்றை வழிக்குக் கொண்டு வந்துவிடுகின்றன. 'வங்க தேசத்திலும்' சிரிமாவோ காலத்து 'இலங்கை'யிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டபோது பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளும், அவற்றின் முகவர்களான உள்ளூர் (நவீன) மருத்துவர்களும், ஏகாதிபத்தியமும் இணைந்து தாக்குதல் தொடுத்து அம் முயற்சிகளை முளையிலேயே அழித்தன. இவை எல்லாம் கூட சுமார் இருபது ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சிகள். இன்றைய புதிய பொருளாதாரச் சூழலில் கேட்க வேண்டியதில்லை.

(6) நவீன மருத்துவ அறிவு என்பது ஏகாதிபத்தினங்களிடமும் அவற்றின் உள்ளூர் தரகு நிறுவனங்களிடமும் (எ.டு: அப்போலா, இந்துஜா போன்ற நிறுவனங்கள்) குவிகின்றன. எய்ட்ஸ்' யுகத்தில் ரத்தம் பற்றிய உயர் ஆய்வுகளும், அறிவும் அரசு நிறுவனங்களிடமிருந்து மேற்குறித்த நிறுவனங்களின் கைகளுக்கு மாறியுள்ளன: அறிவு முடக்கப்படும் போது மக்களிடமிருந்து அதிகாரம் பறிக்கப்படும் அவலத்தை இங்கே மீண்டும் விளக்க வேண்டியதில்லை.

(7) நவீன மருத்துவம் பெண்களுக்கே உரித்தான உடல் உபாதைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதில்லை.

## இரண்டு

மாற்று மருத்துவ முறைகள் பற்றிய அறிமுக நூலொன்றை எழுதிய **ஆன்ரு ஸ்டான்வே** மக்கள் மாற்று மருத்துவ முறைகளை அணுகுவதற்கு அய்ந்து காரணங்களைக் குறிப்பிடுவார் சில நோய்களில் நவீன மருத்துவம் தோல்வியுறுதல், அறுவை சிகிச்சை மற்றும் பின்விளைவுகளைப் பற்றி அஞ்சுதல், மதரீதியான காரணங்கள், பரவலாக ஆளுமை செலுத்தும் ஒன்றை எதிர்த்து நிற்கும் போக்கு, ஏதாவது வித்தியாசமாய்ச் செய்து பார்க்கும் ஆசை என்பவை அவர் குறிப்பிடும் காரணங்கள். மாற்று மருத்துவம் பற்றி சிந்திக்கும் போது இவை எல்லாவற்றையும் விட முக்கிய காரணியாக நமக்குப் படுவது நுண் அதிகாரக் கனங்களில் முக்கியமானதாக நவீன மருத்துவம் செயல்படுகிறது என்பது தான். மாற்று மருத்துவம் பற்றிப் பேசும்போது வழக்கமாக மாற்று குறித்துப் பேசும்போது கையாள வேண்டிய இரு எச்சரிக்கைகளை இங்கும் சொல்ல வேண்டியிருக்கிறது. (1) ஒன்றுக்கு இன்னொன்று மாற்று என்பதைக் காட்டிலும் பல்வேறு மாற்றுக்களையும், சாத்தியக் கூறுகளையும் நாம் அங்கீகரிக்கிறோம். (2) 'மாற்று' என்பது ஒரு நிரந்தரமான சார்பற்ற கருத்தாக்கமல்ல. மாற்று என்பது ஒப்பிட்டு ரீதியான ஒன்றே. நேற்று மாற்றாக இருந்தது இன்றைய ஆதிக்க மையமாகவும், இன்று மாற்றாக இருப்பது நாளை நேரெதிராகவும் மாறும் வாய்ப்புகள் உள்ளன. இன்று மாற்றாக முன் வைக்கப்படும் பல மருத்துவ முறைகள் (எ டு: சித்தம், ஆயுர் வேதம்...) நவீன (ஆங்கில) மருத்துவத்திற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் முந்தியவை ஒன்பது குறிப்பிடத் தக்கது.

நவீன (ஆங்கில) மருத்துவத்திற்கெதிராக நூற்றுக்கும் மேற்பட்ட மாற்று மருத்துவ முறைகள் உலகெங்கிலும் புழக்கத்திலுள்ள உண்மை இங்கே கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஒன்று. 'ரோம் பல்கலைக் கழக' மருத்துவத் துறை 1973ல் மாற்று மருத்துவம் பற்றி ஒரு மாநாடொன்றை நடத்தியது. அதில் 135 மாற்று மருத்துவ முறைகள் பற்றிக் கட்டுரைகள் வாசிக்கப் பட்டன. 1984ல் லண்டன் 'டைம்ஸ்' இதழ் நடத்திய ஆய்வொன்றின் படி மொத்த மருத்துவர்களில் 26 சதத்தினர் மாற்று மருத்துவ முறைகளைச் சிபாரிசு செய்கின்றனர் என்பது தெரியவந்தது. 1983ல் இங்கிலாந்திலுள்ள துணைமருத்துவ முறைகளுக்கான நிறுவனம்'' செய்த ஆய்வின்படி ஆண்டொன்றுக்கு 46லட்சம் நோயாளிகள் மாற்று மருத்துவர்களை நாடிச் செல்கின்றனர். 'பிரான்சில்' 18,000 மாற்று மருத்துவர்கள் (க்யூரிங்டுயர்ஸ்) உள்ளனர். ஜெர்மனியில் மாற்று மருத்துவர்களுக்கு 'ஹெய்ல் ப்ராக்டிகர்ஸ், என்றுபெயர் இந்தியாவில் புள்ளி விவரங்கள் சேகரித்தால் இதைவிட அதிக மாற்று மருத்துவர்கள் இருப்பது தெரிய வரலாம். ''விளிம்பு மருத்துவம்'' (Fringe Medicine) என வெளிநாடுகளில் மாற்று மருத்துவம் அழைக்கப்படுகிறது. நமக்குத் தெரிந்த சித்தம், ஆயுர்வேதம், மூலிகை, இயற்கை வைத்தியங்கள் தவிர அலெக்



படிப்பகம்

www.padippakam.com

சாந்தர் வைத்தியம், நீர் மருத்துவம், மனோ வசியம், வண்ண மருத்துவம், வாசனை மருத்துவம், ஒலி மருத்துவம், காந்த மருத்துவம் என்பவை மாற்று மருத்துவ முறைகளில் சில.

## மூன்று

இனி இம் மாற்று மருத்துவ முறைகளில் ஒன்றாகிய **ஓமியோபதி** பற்றி ஒரு சில. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு **சாமுவேல் ஹானிமன் (1755-1843)** என்கிற ஜெர்மானிய அல்லோபதி மருத்துவரால் கண்டுபிடிக்கப் பட்டது ஓமியோபதி. பிணி தீர்க்கும் நடவடிக் கைகளில் பழுத்த அனுபவத்தினடிப்படையில் அவர் ஒரு வியப்புக்குரிய உண்மையைக் கண்டு பிடித்தார். எந்த மருந்து ஒரு நோயைத் தீர்ப் பதற்காகப் பயன்படுகிறதோ அம் மருந்துசற்று அதிக அளவில் ஒரு ஆரோக்கியமான மனி தனுக்குக் கொடுக்கப்படும் போது அந்த நோய் அம்மனிதனில் ஏற்படுத்தக் கூடியது **போன்ற அதே மாதிரியான** விளைவுகளை ஏற்படுத்து கிறது என்பது தான் அது. கவனியுங்கள் நோய் ஏற்படுத்தும் **அதே** (idem) விளைவு களை ஏற்படுத்துவதில்லை. மாறாக **அதே போன்ற** (Similar) விளைவுகளை ஏற்படுத்து கின்றது. அதாவது நோய் அது தாக்குகிற உடம்பில் ஏற்படுத்தும் நோய்க் குறிகளும் (Clinical Symptoms). அந்நோய் தீர்க்கும் மருந்து ஆரோக்கியமான உடலில் ஏற்படுத்தும் குறிகளும் ஒன்றாய் உள்ளன. மலேரியாவுக்கு மருந்தாக பயன்படும் **'சின்கோனா'** மரப் பட்டையை அதிக அளவில் ஒரு ஆரோக்கிய மான மனிதன் சாப்பிடும் போது மலேரியா நோய்க்குறிகள் அவன் உடம்பில் தோன்றுகின் றன. இன்னொரு எடுத்துக்காட்டு: வாந்தி, கழிச்சல், தாகம் முதலியன காலரா நோயின் குறிகள். 'ஆர்சனிக்'-ஐ அதிக அளவில் உண் ணும்போதும் வாந்தி, கழிச்சல், தாகம் ஆகியவை ஏற்படுகின்றன. எனவே 'ஆர்சனிக்கை' மிகச் சிறிய அளவில் நீர்க்கச் செய்து ஒரு காலரா நோயாளிக்குக் கொடுத்தால் அவர் நோய் நீங்கி குணம் பெறுகின்றார். நோய் மாதிரியே நோய்க் குறிகளை உண்டாக்கும் ஒரே ஒரு மருந்தை மிகமிகமிக நீர்த்த நிலையில் கொடுத்தால் நோய் நீங்கும் என்கிறது ஓமியோபதி. மருந்தை எந்த அளவிற்கு நீர்க்கச் செய்கிறோமோ அந்த அளவிற்கு அதன் வலிமை அதாவது வீரியம் (Potency) அதிகரிக்கிறது. ❋B

சனாதன மருத்துவ முறை (அதாவது நவீன ஆங்கில மருத்துவ முறை) அளிக்காத என்ன வாய்ப்புகளை, உரிமைகளை, விடுதலையை ஓமியோபதி என்பது அதனைக் கையாளும் மருத்துவனுக்கு அளிக்கிறது? நோய்க் குறி களுக்கு ஒரு பெயரைச் சூட்டி அந்த நோய்ப் பெயரின் அடிப்படையில் மருத்துவம் செய்யும் போது நோயாளியின் தனித்தன்மையைக் கணக் கிலெடுத்துப் பிணி தீர்க்கும் முயற்சி மேற்கொள் ளும் உரிமையை மருத்துவன் இழக்கிறான். இது அவனது செயல்பாடுகளுக்குப் பல விதங் களில் விலங்கிட்டு விடுகின்றது.

இது எப்படி? ஒரே மாதிரியான ஒரு நோய்க் காரணி (எ.டு: கிருமி) இரு வேறு மனித உடல் களை தாக்குவதாகக் கொள்வோம். இருவருக் கும் ஒரே மாதிரியான பாதிப்புகள்தான் ஏற்படும் எனச்சொல்ல முடியாது. அந்தஇரு உடல்களின் பரம்பரைத் தன்மைகள், அவைஇயங்கும் சுற்றுச் சூழல்கள், அவை ஒவ்வொன்றின் நோய் எதிர்ப்பு வலிமை போன்றவற்றைப் பொறுத்து இரண்டும் இரு வேறு விதங்களில் பாதிப்படைகின்றன. இருவருக்கும் ''காசம்'' என்றும் ஒரு பொது வான நோய்ப் பெயரை இட்டு வைத்தியம் செய்ய முயலும்போதும் காசத்திற்கென மருத் துவ நூற்கள் சொல்லும் மூன்று நான்கு மருந்து களைத் தாண்டி பயன்படுத்தும் உரிமை மருத்து வருக்கு மறுக்கப்படுகிறது. மருந்தின் அளவைக் கூட்டி, குறைக்கும் உரிமை மட்டுமே அவருக்குக் கிடைக்கிறது. மாறாக நோய்ப் பெயரை மறந்து நோய்க் குறிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நோய் தீர்க்கும் முயற்சியில் ஈடுபடும் போது ஒவ்வொரு நோயாளியையும் பிரத்தியேக மாகப் பாவித்து சாத்தியமான சகல மருந்து களையும் எடுத்துக் கொண்டு அவற்றில் ஒன் றைத் தேர்வு செய்யும் வாய்ப்பை மருத்துவர் பெறுகிறார். இதன்மூலம் அவனது செயற்பாட் டிற்குக்கிடைக்கும் விடுதலை என்பது எத்துணை யானது என்பதைச் சிந்தித்தால் விளங்கும். தவிரவும் நீர்க்கச் செய்ய, நீர்க்கச் செய்ய மருந் தின் வீர்யம் அதிகமாகிறது என்பதால் நீர்க்கச் செய்யப்பட்ட இம்மருந்துகள் மனித உடம்பில் வேறு உப விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. இது ஓமியோபதியின் மிகப் பெரிய முக்கியமான சிறப்பு.

அறுவை சிகிச்சை கட்டாயமாய்த் தேவைப் படு கின்ற ஒரு சில வியாதிகளைத் தவிர மற்ற பல வற்றை மனித உடலே சமாளிக்கும் திறனைப் பெற்றுள்ளது எனச் சொல்கிறது ஓமியோபதி. வியாதியைத் தூக்கி எறியும் உடல் முயற்சியின் அடையாளங்கள்தான் நோய்க் குறிகள். நவீன மருத்துவம் இந்த நோய்க் குறிகளை அழுத்தி உள்ளே தள்ளுகிறது. இதனால் தானாகவே வியாதியை எதிர்த்துப் போராடும் உடலின் செயற்பாடு முடக்கப்படுகிறது. அடிக்கடி இப் படிச் செய்யும்போது மருந்தின் தலையீடு இல் லாமல் நோயை எதிர்க்கும் திராணியை மனித உடல் இழந்து விடுகிறது. ஓமியோபதி இந் நிலையை ஏற்படுத்துவதில்லை. ஒரே மாதிரி யான விளைவை ஏற்படுத்தும் ஒரு பொருள்



படிப்பகம்

www.padippakam.com

நீர்த்த நிலையில் மருந்தாகப்பயன்படுத்தப்படும் போது நோயை எதிர்த்துப் போராடும் உடலின் முயற்சிகள் தூண்டப்படுகின்றன; நுண்மைப் படுத்தப்படுகின்றன. தவிரவும் நோய்க்கான புறக்காரணியும் (miasm) நீக்கப்படுகிறது. மாறாக 'அல்லோபதி' என்னும் நவீன ஆங்கில மருத்துவம் நோய்க்குறிகளை மட்டுமே தடுத்து நிறுத்துகிறது. நோய்க் காரணிகளை உள்ளே அமுக்கி விடுகிறது. இக் காரணி உடலுக்குள்ளேயே இருந்து இன்னும் தீவிரமாய், வேறு வடிவில், பரிணாம மாற்றமடைந்து உடலைத் தாக்க முற்படுகிறது. எடுத்துக்காட்டாக, தும்மல், சளி, மூக்கடைப்பு, அரிப்பு போன்ற ஒவ்வாமைக் குறிகள் மனித உடல் 'இஸ்டாமினை' வெளிப்படுத்துவதால் ஏற்படுகின்றன. இந்நிலைக்கான காரணியைக் கண்டறிந்து நீக்காமல் 'இஸ்டாமின் எதிர்ப்பு' மருந்தொன்றை அலோபதி மருத்துவர் அந்த உடலில் செலுத்தும் போது அங்கே இஸ்டாமின் வெளிப்படுவது தடுக்கப்படுவதில்லை அது பிற உறுப்புகளைத் தாக்கி தும்மல், மூக்கடைப்பு, அரிப்பு முதலியன நோய்க்குறிகள் ஏற்படுத்துவதை மட்டுமே தடுக்கிறது. நோய் அப்படியே உடலில் தங்கி விடுகிறது,

மேலும் நவீன மருத்துவத்தில் நோய்த் தீர்வு பற்றி விதிகள் ஏதுமில்லை. நோய்க் காரணிகளின் அடிப்படையில் வைத்தியம் செய்யல், நோய்ப் பெயரின் அடிப்படையில் அணுகுதல் முன்கூட்டி அனுமானித்து வைத்தியம் செய்தல் எனப் பல்வேறு அணுகல் முறைகளை அது கையாள்கிறது. ஓமியோபதி மட்டுமே பிணி தீர்ப்பு பற்றி முதன் முதலில் ஒரு விதியை உருவாக்கியது. அணுகல் முறையின் அடிப்படையில் ஓமியோபதி விதிகளைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

**1: குறிகளின் ஒப்புடமை விதி:** அதாவது வியாதியைப் போன்ற நோய்க் குறிகளை ஆரோக்கியமான உடலில் ஏற்படுத்தும் ஒரு வெளிப் பொருள் அந்த நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படும் என்கிற விதி. சினிமா திரையில் காட்சிகள் தோன்றுவது போல மனித உடலில் நோய்க் குறிகள் தோன்றுகின்றன. இந்தக் குறிகளின் **மொத்தத்துவத்தைக்** கண்டறிந்து, ஓமியோபதி 'மெட்டீரியா மெடிகா'*C விலுள்ள பல்வேறு மருந்துகள் (நோய்த் தீர்வுகள்) ஆரோக்கிய உடலில் ஏற்படும் குறிகளுடன் அதனை ஒப்பிட்டு சரியான நோய்த் தீர்வு கண்டு பிடிக்கப்படுகின்றது. இந்த இடத்தில் நோய்க்குறிகளின் மொத்தத்துவம் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும், வாழும் மனிதனை எப்போதும் அவனது சூழலுடன் தொடர்புறுத்தியே பார்க்க வேண்டும். இம் மனிதனுக்கும் அவனது சூழலுக்குமிடையே தொடர்ந்து பரஸ்பர வினைகளும்,எதிர்வினைகளும் செயல்படுகின்றன. இவை நோய்க்குறிகள் செயல்படும் தன்மைகள் (Modalities) மூலம் வெளிப்படுகின்றன. எனவே நோய்க்குறிகள் எத்தகைய சூழலில் அதிகமாகின்றன எப்போது தணிகின்றன என்பதெல்லாம் மிகமுக்கிய அம்சங்களாகின்றன. ஒருவரது நோய்க்குறி, சாப்பிட்டவுடன் அல்லது குளித்தபின் கூடுதலாகலாம். இன்னொருவருக்குக் குறையலாம். ஒருவருக்கு இடதுபுறம் உள்ள வலி இன்னொருவருக்கு வலதுபுறமாக இருக்கலாம்.இன்னொருவருக்கு மாறி மாறி வரலாம். இவை அனைத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கிய நிபந்தனைகள் (Conditions), தலைவலி என்பது ஒரு பொதுக் குறி; வயிற்றுப் போக்கு என்பது இன்னொரு பொதுக்குறி. இரண்டும் இணைந்திருப்பது அல்லது அடுத்தடுத்து வருவது என்பது தனித்துவமானது. **இதனைக் கண்டறிவதன் மூலம் நோயாளியின் தனித்தன்மை மேலும் கணிக்கப்படுகின்றது:** மேலும் மேலும் அவர் பிரத்தியோகப்படுத்தப் படுகின்றார் (Individualised). அவருக்கே உரித்தான நோய்த் தீர்வு கண்டுபிடிக்கப் படுகிறது. எனவே உடலின் **எப்பகுதியில்** (Locality: எ.டு; இடது/வலது...); எத்தகைய **தனித்தன்மையோடு** (Peculiarity-எ.டு: திடீர் வலி...); எத்தகைய **நிபந்தனைகளுடன்** (Condition: எ.டு: குளித்தால் அதிகமாதல்...) நோய்க்குறிகள் வெளிப்படுகின்றன என எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டு நோய்க்குறிகளின் மொத்தத்துவம் தீர்மானிக்கப்படுகிறது. உடல் குறிகள் தவிர மனநிலைக் குறிகள்; குறிகள் தீவிரமடையும் அல்லது தணியும் நேரம் வெப்பநிலை முதலியன; வலி உடலில் மாறிச் செல்லும் திசை ஆகியவையும் கவனிக்கப்படுவதன் மூலம் நோயாளி மேலும் மேலும் பிரத்தியேகப்படுத்தப்படுகிறார்.

**2.வீரியம் பற்றிய விதி:** ஒத்த குறிகளை ஏற்படுத்தும் மருந்துகளை இயற்கையில் கிடைக்கும் வடிவத்தில் அப்படியே ஓமியோபதி மருத்துவர்கள் கொடுப்பதில்லை. அரைத்துச் சாராயத்தில் கலந்து **தாய்த்திரவம்** (mother tindture) தயாரிக்கப் படுகிறது. பின் அது 100 மடங்கு, 1000 மடங்கு, 10,000 மடங்கு, 100,000 மடங்கு சாராயத்தில் கலக்கப்பட்டு நீர்க்கப்படுகிறது. நீர்க்க நீர்க்க அதன் வீரிய மதிப்பு அதிகமாகிறது. **தீவிர நோய்களுக்கு** (acute diseaser) குறைந்த வீர்ய மருந்துகளை அடிக்கடியும், **நீண்ட கால நோய்களுக்கு** (Chroni diseases) அதிக வீர்ய மருந்துகளை அதிக இடைவெளியிலும் கொடுக்கின்றனர். வீரியங்களைத் தீர்மானிப்பதென்பது கூட அந்த நோயாளியின் நோய்க்குறிகளின் தனித் தன்மையைப் பொறுத்ததேயாகும். பொதுவில்



படிப்பகம்

www.padippakam.com

குறைந்த வீர்ய மருந்துகளே போதுமானவை எனக் கருதப்படுகிறது.

**3. நோய் பற்றிய விதி:** நோய் என்பது ஆரோக்கிய நிலையில் ஏற்படும் மாற்றம் சுற்றுச் சூழல் சுகாதாரமின்மை, போன்றவற்றால் ஏற்படும் சுணக்கத்தை (Indisposition) உணவுமுறை மாற்றம் சுகாதார வாழ்வு, ஆரோக்கியமான காற்று, உடற்பயிற்சி ஆகியவற்றின் மூலம் மருந்தின்றி குணப்படுத்திக் கொள்ளலாம். ஆரோக்கிய நிலையில் ஏற்படும் இம் மாற்றம் நிலையானதல்ல. தொடர்ச்சியான இயக்கத் தன்மையுடைய ஒரு மாற்றம். பரம்பரைக் கூறு, கிருமித் தாக்கம், ஒவ்வாத உயிர்ப்பொருளின் (மியாசம்—Miasm) நுழைவு என ஏதேனும் ஒரு காரணத்தால் ஆரோக்கிய நிலையில் மாற்றம் ஏற்பட்டு வியாதி ஏற்படுகிறது. புறத்தலையீடு மூலம் இதனைக் குணப்படுத்த முயல்கிறோம். இவ்வாறு ஏற்படும் நோயின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகக் குறிக்கலாம். (i) **தோற்றம்** (ii) **வளர்ச்சி** (iii) **வீழ்ச்சி** (நோய் அல்லது நோயாளியின் வீழ்ச்சியை இது குறிக்கிறது). இந்த வளர்ச்சி நிலைகளின்அடிப்

படையில் நோய்களை இரண்டாகப் பிரிக்கலாம் (அ) **தீவிர நோய்** (எ டு: அம்மை) தீவிர நோயுரியின் (Aucte miasm) நுழைவால் இது ஏற்படுகிறது. **மூன்று வளர்ச்சி நிலைகளையும்** இது [சுமார் மூன்று மாதத்திற்குள்] எட்டி விடுகின்றது.

(ஆ) **நீண்ட கால நோய்** [எ.டு: ஆஸ்த்மா]: நிரந்தரமான ஒவ்வாத உயிர்ப் பொருளின் [Chronie miasm] நுழைவால் இது ஏற்படுகிறது. நோய் வளர்ச்சி நிலையில் மூன்றாவது நிலையை இது எட்டுவதேயில்லை. இரண்டாவது நிலையோடு நின்று விடுகிறது. சரியாக நோய்க்குறிகளைக் கவனித்து பொருத்தமான நோய்த் தீர்வுகளைத் தந்த பின்னும் ஒரு சில நோயாளிகள் தற்காலிகமாக மட்டுமே பயனடைவதை **ஹானிமன்** கவனித்தார். இந்த அடிப்படையில் நீண்ட கால நோய்கள் பற்றிய அவரது கோட்பாடு உருவாகியது. இத்தகைய நிரந்தரத் தீர்வு ஏற்படாத வியாதிகள் சாதாரண தீவிர நோய் போன்ற வடிவத்தில் தோற்றமெடுத்தாலும் ஒரு தொடர்ச்சியான நோய்ச் சங்கிலியின் ஒரு இடைப்பட்ட கண்ணிதான் இத் தீவிர வெளிப்பாடு என **ஹானிமன்** வாதிட்டார். எனவே நோயிலிருந்து விடு பட வேண்டுமானால் இந்த **நோய்த்தொடருக்கேயான** தீர்வை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். எடுத்துக் காட்டாக 'ஆஸ்த்மா' என்பது ஒரு நோயாளியின் நோய் வரலாற்றில் ஒரு தனி நிகழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் நோயாளியைத் துருவி ஆராய்ந்தால் இதற்கு முன் அவருக்குத் தோற்புண்கள் [Skin eruptions-சொறி] வயிற்றுப் போக்கு முதலியன இருந்திருப்பது தெரியவரும் இவை யாவும் தனித்தனி வியாதிகளாய்த் தோன்றினாலும் தனித்தனி அல்ல. ஒரேநோய் முடக்கத்தின் [Morbidity] பல்வேறு பரிணாமங்கள்தான் இவை. இந்த வகையில் நோய்த் தொடரைத் தோற்றுவிக்கும் மூன்று விதமான நீண்ட கால நோய் விஷங்களை [ஒவ்வாத உயிர்ப் பொருட்களை-Miasm] **ஹானிமன்** பிரித்துக் காட்டினால் **சிபிலிஸ், சோரா, சைகோசிஸ்** என்பன அம்மூன்று நீண்டகால நோய் விஷங்களாகும் [Chronic miasms]. எனவே நோய்த் தீர்வுகளையும் **சிபிலிஸ்-சைகோசிஸ்-சோரா-எதிர்ப்புகள்** என மூன்றுகப் பிரிக்க இயலும் எனினும் தனித்துவமான நோய்க்குறிகளின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட வேண்டியதில்லை. ஒவ்வொரு வகையிலும் ஒரு குறிப்பிட்ட மருந்தைக் கண்டறிய தனித்துவமான குறிகள் கவனிக்கப் பட வேண்டும். **ஹானிமன்** கண்டறிந்த இம் மூன்று மியாசங்களோடு நிறுத்திக் கொள்ளாமல் இன்றைய சூழலுக்குத் தேவை எனில் மேலும் முக்கிய மியாசங்களைப் பிரித்தறியலாம் என **ஜே.எச். கிளார்க்** போன்றோர் விவாதிக்கின்றனர்.

**மேலும் சில முக்கிய தகவல்கள்:** [1] பரம்பரை நோய்க் கூறுகள் [எ.டு: பெற்றோர்கள் அல்லது சகோதரர்களுக்கு காச நோய் இருத்தல்], தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்தி இருத்தல் (எ.டு: அம்மைத் தடுப்பு ஊசி போடப்பட்டிருத்தல்) முதலியவை தடைச் சுவர்களாக இருந்து உண்மையான நோய்க் குறிகளை மறைக்கலாம் இவற்றைக் கண்டறிந்து ஒவ்வொன்றுக்குமான நோய்த் தீர்வுகளைக் கொடுத்து தடைச் சுவர்களைத் தகர்த்து அடிப்படை நோய்க்கான குறிகளை வெளிப்படச் செய்து பின் அதற்குரிய தீர்வு அளிக்கப்படுகிறது.

[2] ஒரு மருந்துக்கு இணையான மருந்துகள், துணை மருந்துகள், எதிர் மருந்துகள் என ஒமியோபதியில் உண்டு. ஒரு தீர்வு பயனளிக்காத பட்சத்தில் அல்லது போதாத பட்சத்தில் இணை/துணை மருந்துகளைக் கொடுக்கின்றனர். கொடுக்கப்பட்ட ஒரு மருந்தின் செயல்பாட்டை நிறுத்த வேண்டுமானால் எதிர் மருந்தைப் பயன்படுத்துகின்றனர்.

(3) தீவிர நோய்களை இரண்டாகப் பிரிக்கலாம் [அ] ஆங்காங்கு **தனித்தனியாய் ஏற்படும் தீவிர நோய்கள்** (Sporadic Acute disease) எ.டு. யாரேனும் ஒருவருக்கு அம்மை வருதல். (ஆ) **கொள்ளை நோய்** (Epidemics): ஒரு பகுதியில் கொள்ளை நோய் வரும்போது பல நோயாளிகளைப் பரிசோதிக்கும் ஒமியோபதி மருத்துவர் அந் நோய் வளர்ச்சிப் போக்கை ஆராய்ந்து பல்வேறு பொதுவான நோய்களையும் கண்ட



படிப்பகம்

www.padippakam.com

றிந்து பின் அதே போன்ற நோயாளிகளுக்கு அதே போன்ற மருந்தை அளிக்கிறார். இது சற்று விரைவில் நோயாளிகளைப் பரிசோதித்து தீர்வளிக்க உதவுகிறது. இங்கும் கூட ஒரு சில நோயாளிகளிடம் தென்படும் தனித்துவமான குறிகள் கவனிக்கப்பட வேண்டும். எனினும் கொள்ளை நோய்ச் சூழலில் இத்தகைய பொதுத் தீர்வுகள் பயன்படுத்தப் படலாம். அலோபதியு டன் போட்டி போட வேண்டிய சூழலில் பிரத்தி யோகமானநோய்க்குறிகளுக்கு அதிக முக்கியத் துவமளிக்காமல் நோய்ப் பெயர்களின் அடிப் படையில் மருந்துகளைத் தீர்மானிப்பது, அதிக வீர்ய மருந்துகளை எடுத்தவுடன் கொடுப்பது, ஒரே சமயத்தில் இருவேறு மருந்துகளைக் கொடுப்பது என்பன போன்ற சீரழிவுகள் ஓமி யோபதி மருத்துவர்கள் மத்தியிலும் ஊடுருவி யுள்ளன. பல்வேறு நோய்க்குறிகளுக்கான மருந்துகளைக் கலந்து சந்தை மருந்துகளும், டானிக்குகளும் விற்கப்படுகின்றன, இவை எல்லாம் ஓமியோபதியின் அடிப்படை அணுகல் முறைக்கு எதிரானவை.

மொத்தத்தில் ஒரு மாற்று மருத்துவமாக ஓமி யோபதி, நவீன ஆங்கில மருத்துவத்திலிருந்து வேறுபட்டு நிற்கும் புள்ளிகளைக் கீழ்க்கண்ட வாறு தொகுக்கலாம். (1) நவீன மருத்துவத் தைப் போல நோயைப் பொதுமைப் படுத்தி, நோய்ப் பெயரால் மருந்தைத் தீர்மானிக் காமல் ஓமியோபதியானது நோயாளியைப் பிரத்தியோகப் படுத்தி, நோய்க்குறிகளின் அடிப் படையில் குறிப்பிட்ட நோயாளிக்கான தீர்வைத் தீர்மானிக்கிறது. (2) அல்லோபதியைப் போல மனித உடலை உதிரிகளால் இணைக்கப்பட்ட ஒரு இயந்திரத் தொகுதியாகப் பார்க்காமல், ஓமியோபதி உடலை ஒரு உயிரியல் முழுமை யாய்ப் பார்க்கிறது. உதிரிகளின் கூட்டு என்ப தைக் காட்டிலும் முழுமையின் பண்புகள் மேம் பட்டு நிற்கும். (3)அல்லோபதியைப் போலன்றி நோய்த் தீர்வுக்கான விதிகளை ஓமியோபதி உருவாக்குகிறது. [4] நோய்க் குறிகளை மட்டும் நீக்கி நோய்க் காரணியை விட்டுவிடா மல், ஓமியோபதி நோய்க் குறிகளுக்கு அடிப் படையான காரணியை அகற்றுகிறது. (5)அல் லோபதியைப் போலன்றி மிருகங்களின் மீதான சோதனைகளின் அடிப்படையில் மருந்தின் பயன்பாட்டைத் தீர்மானிக்காமல், ஆரோக்கிய மான மனித உடலில் ஏற்படுத்தும் விளைவுகளி னடிப்படையில் மருந்தின் பயன்பாட்டை ஓமி யோபதி தீர்மானிக்கிறது. (6) மருத்துவம் என்பது ஒரு அறிவியலாக அல்லாமல் மருத்து வனின் படைப்புத் திறனுக்கு முழு வாய்ப்பளிக் கும் நோய் தீர்வுக்கலையாக அணுகப்படுகிறது. [7] உபாதைத் தணிப்பு, உறுப்பு மாற்று, கிருமி கொல்லி அணுகல் முறைகளைத் தவிர்த்து குறி களின் ஒப்புடைமை விதியடிப்படையில் குறைந்த அளவில் ஒற்றை மருந்தை ஒருசமயத் தில் பிரயோகிக்கும் அணுகல் முறையை ஓமி யோபதி மேற்கொள்கிறது. [8] உடலியல் போன்ற [Physiology, Pathology] பிற துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை நவீன மருத்துவம் சார்ந்துள்ளது. ஓமியோபதி நோய்த்தீர்வு என்பதை எதையும் சார்ந்திராத தனித்துறையாக மாற்றுகிறது. (9)ஓமியோபதி யில் குறிப்பிட்ட உடலுறுப்புகளின் பெயரால் நோயை அழைப்பதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக ஓமியோபதி மிகவும் மலிவான ஒரு மருத்துவ முறை. சுமார் ஒரு ரூபாய்க்கும் குறைவான விலையுள்ள மருந்தின் மூலம் பெரிய நோயையும் குணப்படுத்தி விட முடியும். நுணுக்கமான கருவிகள் மூலமான சோதனைகள் தேவையில்லை. தீங்கான உப விளைவுகள் ஏதுமில்லை என்பதால் சிறந்த பயிற்சியின் மூலம் அதிக நுண் படிப்பு தேவை யிராத மக்கள் மருத்துவர்களை உருவாக்கி விட முடியும். உடல் மற்றும் நோய் குறித்த மர்மப் படுத்தல்களிலிருந்து மக்களை விடுவிக்கமுடியும் அதிக மூலதனம், கருவிகள் மெத்தப் படித்த நுண் மருத்துவர்கள் ஆகிய தேவைகள் இல்லாத தால் நகர் சாராத, மருத்துவ மனையை மைய மாகக் கொள்ளாத ஏராளமான மக்கள் மருத் துவ மனைகளைக் கிராமப் புறங்களில் உருவாக் கலாம். மக்களை மருத்துவ மனையை நோக்கி இழுக்காமல் மருத்துவத்தை மக்களிடம் கொண்டு செல்லலாம். இத்தகைய நடவடிக் கைகள் மூலம் ஏகாதிபத்தியத்தின் கொள்ளைச் சாதனமாக விளங்கும் நவீன மருத்துவத்தையும் பன்னாட்டுக் கம்பெனிகளையும், உள்ளூர்க் கொள்ளையர்களையும் கட்டுக்குள் வைக்கலாம் தற்சார்பை உருவாக்கி மருத்துவத்தின் மூல மான அதிகாரக் குவிப்பைத் தகர்த்தெறியலாம்.

எளிய அறுவை சிகிச்சை, இதர சில எளிய மாற்று மருத்துவ முறைக் கூறுகள், சத்துப் பற்றாக்குறைகளை ஈடுகட்டும் உணவுப் பயிற்சி முறை முதலியவற்றை இணைத்து அவ்வச் சூழலுக்கேற்ற ஒருங்கிணைக்கப்பட்ட மாற்று மருத்துவ முறைகளை ஆங்காங்கே உருவாக்கு வது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த வகையில் முற்போக்குச் சிந்தனையும் மனித நேயமும் மிக்க நமது தோழர்கள் சிலரால் அய்ந்தாண்டுகளாக பாண்டிச் சேரியில் நடத்தப் படுகிற ''உலக சமூக நல வழி மேம்பாட்டுக் கழகத்தின்', [WISHED] ஓமியோபதி மருத்துவ சேவையை இங்கே சுட்டிக் காட்ட வேண்டி யிருக்கிறது. அய்ந்தாண்டுகளாக ஞாயிற்றுக் கிழமை தவிர ஏனைய நாட்களில் தினமும் மாலையில் நான்குமணி நேரம் [5-9மணிவரை] தினந்தோறும் சராசரியாக எண்பது நோயாளி களை முற்றிலும் இலவசமாய்ப் பரிசோதித்து இலவசமாய் மருந்துகளையும் இவர்கள் வழங்கி



படிப்பகம்

www.padippakam.com

வருகின்றனர். விடுமுறை தினங்களில் கிராமப் புறங்களுக்குச் சென்று மருத்துவ முகாம்களையும் நடத்துகின்றனர். 'மக்கள் கல்வி இயக்கத்துடன்' இணைந்து மன்னார்குடி, திண்டிவனம் குடந்தை பகுதிகளில் இத்தகைய முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. தோழர்கள் அபிமன்னன், சின்னத்துரை, விஜயன், முத்துக்கண்ணு, ஆகியோர் இக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் முகவரி: தியாகராயா வீதி ஆனந்தா திரையரங்கம் எதிர்புறம், பாண்டிச்சேரி—605001.

ஓமியோபதி பற்றிய சிறந்த அறிமுகத்தை தமிழில் பெற விரும்புவோர் சிறந்த ஓமியோபதி மருததுவரும், புகழ்பெற்ற எழுத்தாளரும், ஒய்வு பெற்ற ராணுவ அதிகாரியுமான திரு. தி.சா. ராஜு அவர்களது நூல்களைப் பயிலலாம் முகவரி: (தில்லை ஸ்தானம், திருவையாறுவழி), தஞ்சை மாவட்டம்.)

**குறிப்புகள்:-** ❋A தொடர்புடைய சில தகவல்கள்: வேதியல் பொருள்களை மருந்துகளாய்ப் பயன்படுத்த முடியும் என்பது 16ம்நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. பராசெல்கஸ் என்பவர் பாதரசத்தைக் கொண்டு சிபிலிஸ் நோய்க்கு சிகிச்சை அளித்தார். பால்எஹ்ர்லிக் என்பவர் சாயப் பொருட்களுக்கும் உடலுறுப்புகளுக்குமுள்ள தொடர்பைக் கண்டு பிடித்த பின்பு பல சாயத் தொழிற்சாலைகள் மருந்துத் தொழிற்சாலைகளாக மாறின. 1630ல் ஆண்டர்சன் மாத்திரை, பாட்மன் பெக்டோரால் துளி முதலியவை சந்தைக்கு வந்தன. 1715-பிளவ் கோட் பார்மசி என்கிற மருந்துக் கம்பெனி உருவாகியது. பிறகு அமெரிக்காவிலும் மருந்துக் கம்பெனிகள் உருவாகின 1787-மாத்திரை எந்திரம் 1853-ஊசி, 1903-சுழல் மாத்திரை எந்திரம் ஆகியவை கண்டு பிடிக்கப் பட்டன. 1860—லூயி பாஸ்டர்- கிருமிக் கொள்கை கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து 'ரூபார்ப்' ஆப்ரிகாவிலிருந்து 'சென்னா', ஜப்பானிலிருந்து 'பச்சைக் கற்பூரம்' கிழக்கு இந்திய தீவுகளிலிருந்து 'நட் மெக்' முதலியவை கொண்டு செல்லப்பட்டு மருந்துகளாக மாற்றப்பட்டன.

❋B ஆரோக்கியமான மனித உடம்பில் நோய்க்கு எதிரான ஒரு நிலையை உருவாக்கும் பொருளை மருந்தாகப் பயன்படுத்தும் முறை 'ஆண்டிபதி' (Antipathy) எனவும், எதிராக அல்லாமல் வேறு ஏதோ மாதிரியான மாற்று விளைவை ஏற்படுத்தும் முறையை ஹெட்ரோபதி அல்லது 'அலோபதி' (Hetropathy/ Alopathy) எனவும், ஒரே மாதிரியான விளைவை ஏற்படுத்தும் முறையை 'ஓமியோபதி' (Homeopathy) எனவும் குறிப்பிடுகின்றனர்.

❋C ஓமியோபதி 'மெட்டீரியா மெடுகா' என்பது ஓமியோபதி மருந்துகள் அல்லது தீர்வுகள் (Remedier) ஆரோக்கியமான உடலில் ஏற்படுத்தும் விளைவுகளைத் தொகுத்துத் தரும் நூல், எடுத்துக்காட்டாக 'அல்லியம் சிபா' என்பது சிவப்பு வெங்காயத்திலிருந்து தயாரிக்கப்படும் ஓமியோபதி மருந்து. சிவப்பு வெங்காயத்தைச் சற்று அதிக அளவில் உட்கொண்டால் ஆரோக்கியமான உடலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை உறுப்புக்கள் வாரியாக வரிசையாக மெட்டீரியா மெடிகா தருகிறது மனத்தில் ஏற்படும் மாற்றங்களையும், குறிகள் செயல்படும் தன்மைகள் (Modalities) ஆகியவற்றையும் தொகுத்துத் தருகிறது. மருந்துகள் அகர வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. கென்ட், போரிக் ஆகியோரின் தொகுப்புகள் முக்கியமானவை. நோய்க்குறிகளின் அடிப்படையிலான Repertoireகள், அல்லோபதிக்குப் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு நோய்ப் பெயர்களின் கீழ் நோய்க்குறிகளை முன்னிலைப் படுத்தி மருந்துகளைச் சொல்லும் அகரவரிசைத் தொகுதி எனப் பல வகை உண்டு. இவற்றைப் பயன்படுத்தி சரியான தீர்வைக் கண்டறிவது ஒரு சுவையான கலை. O

**உதவிய நூல்கள்**

S Hanneman, Organon of Medicine K. Sarkar, Introduction to Hahnemans Organon
H. C. Battacharya, The Homeopathy Family Practice J. H. Clarke, The Prescriber
Andrew Staneway, Alternative Medicine
அ. மார்க்ஸ், நமது மருத்துவ நல பிரச்சனைகள்



படிப்பகம்

www.padippakam.com

நூல் விமர்சனம்

# இந்துத்துவ மலத்திற்கு மாவோயிச முலாம்

## எஸ். என். நாகராசனின் மார்க்சியம் - கிழக்கும் மேற்கும்

அ. மார்க்ஸ் - பொ. வேல்சாமி

முப்பதாண்டு கால இயக்கப் போராட்டத்தின் விளைவு எனவும் தற்காலச் சூழலுக்கேற்ற மார்க்சியத்திற்கான புதிய உரை எனவும் ஞானி யால் படாடோபமாக அறிமுகப் படுத்தப்பட்டு வந்துள்ளது இந்நூல் ( நிகழ், கோவை-9, பக் 246, விலை ரூ 40 ). தமிழகம் முழுவதும் இந் நூலை அறிமுகம் செய்து கூட்டங்கள் நடத்தப் போகிறார்களாம். திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் [ டிசம்பர் 12, '93 ] இந்நூலில் தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுவதாக ஞானி கூறினார்.

கோவையிலிருந்து வந்த இவர்களின் ரசிகர் ஒருவர் இந்தியாவின் மூன்று தீர்க்கதரிசிகள் அம்பேத்கர். பெரியார், நாகராசன் என்றார். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சந்திரன், நாகராசனுக்கு யாரும் சமாதி கட்ட முடியாது, அவர் உயிர்த்தெழுவார் என்றார். தீர்க்கதரிசி என்றால் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்துதானே ஆகவேண்டும்!

மார்க்சியத்திற்கு அப்படி என்ன புதியஉரையை நாகராசன் எழுதிவிட்டார்? . '' மார்க்சியத்தின் மிகப் பெரிய குறை இயற்கையின்மீது ஆதிக்கம் செய்து உற்பத்திசக்திகளைத் தங்குதடையின்றி வளர்க்கவேண்டும் என்று சொல்வதே. மேலைச் சிந்தனைச் சூழலில் வளர்ந்த மார்க்சியம் முரண் பாட்டின் பகை அம்சத்தைப் பிரதானப் படுத்து கிறது. முரண்பாட்டின் பகையற்றகூறை முதன் மைப் படுத்தி கீழைமார்க்சியத்தை உருவாக்கிய வர் மாவோ. குறிக்கோளைக் காட்டிலும் அதனை அடையும் நெறி முறைக்கு முக்கியத் துவம் அளிக்கிறது கீழை மார்க்சியம்: அன்புவழி ஒழுக்கம், மனிதனுக்குச் சேவைசெய்தல் முதலிய வற்றை முதன்மைப் படுத்துவது கீழைமரபு. ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும், இராமாநுஜ ரின் விசிஷ்டாத்வைதத்திலும், தென் கலை வைணவ மரபிலும் இது சிறப்பாக வெளிப்படு கின்றது. இந்தியாவின் மாற்றுச் சிந்தனையாக மறு குரலாக வைணவத்தைத் தூக்கிப் பிடிக்க முடியும்; பிடிக்க வேண்டும். அன்பு வழியை மெய்காண்முறையாகவளர்த்தெடுக்க வேண்டும் இவை இந்நூலின் மையமான கருத்துக்கள். கொஞ்சம் விரிவாய் இவற்றைப் பார்ப்போம்.

முதலில் வைணவம் பற்றி: ''வைணவம் என்பது தாழ்த்தப்பட்ட சூத்திரனின் குரல் (பக் 219, 227); தென்னவர்களின் மெய்யியல் (பக். 221)—நாகராசன்.

வைணவம் என்பது இந்தியத் துணைக் கண்டத் தின் தொன்மைச் சமயங்களில் ஒன்று, தொன் மை வைணவத்தில் மூன்றுவிதக் கருத்தோட்டங் களைக் காணலாம். ஆதித்த உருவமாய் போற்றப்பட்ட ரிக் வேத விஷ்ணு, யாதவ வீரனாகிய பூர்வ வாசுதேவ கிருஷ்ணன், ரிஷி நாராயணன் ஆகிய மூன்று வழிபடு கடவுள்களும் ஒன்றி, நடப்பிலிருந்த பாமர தேவதைகளையும் வழிபாடுகளையும் உள்வாங்கி, புராணங்களின் கோகுல கிருஷ்ணனையும் இணைத்துக் கொண்டு வைணவம் பரிணமித்த காலமாக கி. மு 2-ம் நூற்றாண்டைக் குறிப்பிடுவர் கு. அருணாசலக் கவுண்டர், தமிழ்ப் பண்பாட் டில் வைணவம், பக். 16). முல்லை நில மேய்ச்சல் நாகரிகம் என்பது இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு இனக்குழு மக்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது. இங்கெல்லாம் வாழ்க்கை முறைகளில் மட்டு மல்ல, வழிபடு முறைகளிலும் பல பொதுமை கள் உண்டு. கங்கைச் சமவெளிப் பண்பாடு துணைக் கண்டம் முழுமையும் பரவ நேர்ந்த போது ஆங்காங்கிருந்த ஆயர் குலப்பண்பாடுகள் வைணவத்திற்குள் எளிதில் ஒருங்கிணைக்கப் பட்டன.

> ''வட புலத்திலே இவ்வாறு வளர்ந்து வந்த வைணவம் சங்க முற்காலத்திலேயே அதாவது கிறிஸ்தவப்தத்தை ஒட்டித் தென்னாடு போந்ததாகலாம். காரி, பாரி அனைய தமிழக வேளிர் துவாரகையினின் றும் போந்த கண்ணபிரான் வழியினர் தானாம். வேளிரில் ஆய மரபினர் தங்களை யாதவராகவே கருதிக்கொள்கின்றனர். இவர்கள் ஆராதனையில் இருந்து வந்த வாசுதேவ கிருஷ்ணன் தமிழக முல்லை நிலத்தின் ஆயர் வழிபாட்டிலிருந்த மால்-- மாயோனுடன் ஒன்றி, தமிழ் நாட்டு வைணவமாக மலர்ந்திருப்பதைத் தொல் காப்பியமும் சங்க இலக்கியமும் பிரிதிபலித்



படிப்பகம்

www.padippakam.com

திருப்பதைக் காணலாம்...வைணவ சமயத் தின் முழு வளர்ச்சியைப் பரிபாடலில் காணலாம்''.

என்பது வைணவ அறிஞர் கு. அருணாசலக் கவுண்டரது கூற்று (பக். 16,22) இதில் நாம் கவனிக்க வேண்டியது இவையனைத்தும் நிகழ்ந்தது ஆழ்வார்களும், இராமநுஜரும், ஆளவந்தார் தொடங்கி மணவாள மாமுனிகள் ஈறனெ தென்னாட்டு ஆசார்யார்களும் தோன்று வதற்கு முன்பு. அதாவது ஆழ்வார்கள் தோன்று வதற்கு முன்பே வைணவம் ஓரளவு இறுக்க மாக்கப் பட்டு விட்டது; நிறுவன மயமாக்கப் பட்டு விட்டது. மேய்ச்சல் இனக் குழுப் பண் பாட்டுக் கூறுகள் உள்ளடக்கப்பட்ட தெனினும் இந்நிறுவனமயமாக்கல் என்பது கங்கை வெளி ஆரியப் பண்பாட்டினடியாகவே மேற்கொள்ளப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பல்வேறு இனக்குழு மக்களும் இவ்வாறு வைணவத்திற்குள் உள் வாங்கப் பட்ட போது இம் மக்களின் இனக்குறி வழிபாடுகள் (totem) அவதாரங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டன. ஏதாவதொரு பழைய மக்களினத்தின் தூண் கடவுளை வைணவம் அடிமையாக்கிச் சேர்த்துக் கொண்டதைத்தான் நரசிம்மாவதாரக் கதை குறிப்பிடுகிறது என்கிறார் வைணவம் பற்றி அரியதொரு ஆய்வு நூலை எழுதியுள்ள சுவீரா ஜெயஸ்வால் (வைணவத்தின் தோற்ற மும் வளர்ச்சியும், பக். 199). ஒரிசா- ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சுவரர்- செஞ்சுக்களது இனக்குறிதான் நரசிம்மம்என்கிறார் கு. அருணா சலக்கவுண்டர் (பக். 64). மொத்தத்தில்,

> ''வெளி நாட்டினரையும் பழங்குடி மக்களை யும் ஆரிய மயமாக்குவதில் முக்கிய பங்காற்றிற்று. வளர்ச்சி பெற்ற கலாச்சாரம் இல்லாதவர்கள் இந்த இனக்குழு மக்கள். புனிதச் சடங்குகளையும் பிராமணர்களை யும் புறக்கணித்ததன் விளைவாகப் பல இனக்குழு மக்கள் சூத்திரர்களின் நிலைக்கு தாழ்ந்துவிட்டனர் என மனுஸ்மிருதி கூறு கிறது. கிராதர், ஹீனர், ஆந்திரர், புலிந்தர் புலிகேசர் ஆபிரர், கங்கர், யவனர், கசர் போன்ற பாவிகளான இனக்குழுக்களும் விஷ்ணு வழிபட்டால் தூய்மை அடைவர் என்று பாகவத புராணம் கூறுகிறது. இவ்வாறு தொல்லினங்களைப் பிராமணிய சமுதாய அமைப்பில் ஈர்த்துச் சேர்ந்து ஒன்றாக்கி அதற்கு ஏற்றவாறு இயைந்து போகும்படிச் செய்வதற்கு வைணவம் வலிமை மிக்கதோர் கருவியைத் தந்தது''

என **சுவீரா ஜெயஸ்வால்** குறிப்பிடுவது (பக். 261) கவனத்திற்குரியது.

இடைக் காலத்தில் வைணவம் தென்னாட்டை மையம் கொண்டது எனச் சொல்வதில் தவறில் லை. ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் தென் னாட்டவர்களே. ஆனால் இவர்களால் வளர்த் தெடுக்கப்பட்ட வைணவ மென்பது நாம் இது காறும் விவரித்த—ஏற்கனவே ஓரளவு ஒழுங்க மைக்கப்பட்ட—வைணவத்தின் தொடர்ச்சியே யன்றி வட புலச் சிந்தனை மரபிலிருந்து அறு பட்ட ஒரு புதிய சிந்தனை மரபாக இது உருவாகிவிட வில்லை. ஆரிய வேதங்களைப் பிரமாணங்களாகக் கொண்டே இந்தத் ''திராவிட'' வேதம் இங்கே உருவாகியது. ''வடமொழி வேதப் பொருளையே ஆழ்வார்கள் தமது அனுபூதியாக வெளியிட்டு வேதத்திற்குப் புத்துயிர் அளித்தார்கள்'' என்கிறார் **கு. அருணசலக் கவுண்டர்.**

> ''வியாசர் தொகுத்ததாகக் கூறப்படும் நான்கு வேதங்களையும் வைணவர்கள் பிரமாண நூற்களாகக் கொள்வர். வேதங்கள் பாராட் டும் பரம்பொருள் 'திருமாலே' என்பது அவர்கள் நம்பிக்கை. ஆழ்வார் பாடல்களில் இந் நம்பிக்கையின் எதிரொலியினைக் காணலாம். வேதவிளக்கு (3306), வேதநல் விளக்கு (1375), வேதநீதியாகி நின்ற நிமலன் (854), மறைப் பொருள் (429), மறைப் பெரும் பொருள் (1269), அங்கமாறு வேத நான்குமாகி நின்றவற்றுள்ளே தங்கு கின்ற தன்மையாய் (766), வேதத்தை, வேதத்தின் சுவைப் பயனை, வேதாந்த விழுப் பொருளை என்றெல்லாம் ஆழ்வார்கள் திருமாலைப் பாடுவர். மேலும் வேதங்களை திருமாலே அருளியதாகவும் குறிப்பிடுவர். 'மறைபயந்த பண்பன்' (2114) என்பர். இறைவன் வேதத்தை ஓதியவாறுள்ளான் என்ற கருத்தில் 'வேதநல் வாயன்' எனக் கூறுவதோடு சாம வேதத்தைப் பாடிக் கொண்டிருப்பதை 'நாமதேய இன்னதென்ன வல்லமல்ல வாகிலும் சாம வேத கீதனாய சக்ரபாணி யில்லையே' (764) என விதந்து பாடுவர்'' (அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் திவ்வியப் பிரபந்தத்தில் பாடல் எண்ணிக்கையைக் குறிக்கின்றன.)

என்பார் மற்றொரு தமிழ் அறிஞரான ப. அருணாசலம் (வைணவ சமயம், பக்.28), நால்வகை வேதம், அய்ந்து வேள்வி, ஆறங்கம் வல்லார்கள் உள்ளத்தில் தான் அவன் தோன்று வான் என்பது ஆழ்வார்கள் வாக்கு (1436). மறையென்றும் நன் கோதி உணர்வார்கள் மட்டுமே பைங்கோத வண்ணன் படியடைய முடியும் என்பது பேயாழ்வார் கூற்று (2293)

> ''கண்ணா நான்முகனைப் படைத்தானே காரணாகரியாய் அடியேன் நான் உண்ணா நாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோ நராயணா வென்று எண்ணா நாளும்



படிப்பகம்

www.padippakam.com

> இருக்கு, யசுர், சாம, வேத, நாண் மலர் கொண்டுன் பாதம் நண்ணா நான் அவை தத்துறுமாகில் அன்றெனக் கவை பட்டினி நாளே''

என்பது பெரியாழ்வார் திருமொழி(438)மேலும்

> ''வேதத்தைப் பொதுவாக ஏற்றுக் கொண்டாலும் இருக்கு வேதத்திலுள்ள 'புருஷ சூக்தத்தையே'வைணவப் பெரியோர்கள் சிறப்பாய்ப் பாராட்டுவர். அவர்கள் எழுதியஉரையும் இதற்குண்டு.,இருக்கிலங்கு திருமொழி' (1506) என்னும் பிரபந்தத் தொடருக்கு 'வேதத்திலுள்ள புருஷ சூக்தாதிகள், எனப் பொருள் கூறுவர். நல்ல மறை (562) என்பதற்கு 'ஆராதநா விஷயமாய் பரந்தவைஅன்றிக்கே ஆராத்யனுடைய சொரூபத்தைச் சொல்லும் ஸ்ரீ புருஷ சூக்தாதிகள்' என்பர். மறை கொண்ட மந்திரம் (2390) என்பதற்கும் புருஷ சூக்தம் என்றே கூறுவர்''.

என்கிற ப. அருணாசலத்தின் கூற்று ஆராய்ந்து நோக்கத் தக்சது. ரிக் வேதத்தில் உள்ள புருஷ சூக்தத்தில் தான் வருணாசிரமக் கொடுமையின் தோற்றம் குறிப்பிடப் படுகிறது. அந்தப் புருஷ சூக்தத்தைத் தான் ஆழ்வார்கள் இப்படித் தூக்கிப் பிடிக்கின்றனர். தவிரவும் பகவத்கீதையை வைணவம் போற்றுகிறது. ''என்னை அடைக்கலமாக அடைவோர் தாழ்ந்த பிறவியராயினும் பெண்களோ, வைசியர்களோ, சூத்திரர்களோ ஆயினும் இறுதி இலட்சியத்தை அடைவர்'' என்கிற கீதாச்சாரியானின் கூற்றில் ஒலிப்பது வைணவக் குரலே என மகிழ்வர். இதே கீதைதான் வருணதருமத்தையும் சுய தர்மத்தையும் வலியுறுத்துகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆழ்வார்களில் மூவர் மட்டுமே (பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி, மதுரகவி) பார்ப்பனர்கள் என்கிறார் நாகராசன். உண்மைதான் அதற்காக மற்ற ஒன்பது பேரையும் சூத்திரர் அல்லது தாழ்த்தப் பட்டோர் என்று சொல்லிவிட முடியாது.முதல் மூவரும் திருமாலம்சங்கள்; அவதாரங்கள்! பாஞ்சஜன்யம் (சங்கு) பொய்கையாராகவும், கௌமோதகி (கதை) பூதத்தாழ்வாராகவும், நாந்தகம் (வாள்) பேயாழ்வாராகவும் அவதரித்தன. ஒருவர் தாமரை மலரிலிருந்தும், அடுத்தவர் குருக்கத்தி மலரிலிருந்தும், மூன்றாமவர் அல்லிமலரிலிருந்தும் வெளிப் போந்தனர். இவர்களைச் சூத்திரர் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. குலசேகரர் சத்திரியர். திருமழிசை பார்க்கவ முனிவரின் பிள்ளை. நம்மாழ்வார் திருநெல்வேலிவேளாளர் தமிழ்ச் சூழலில் வேளாளரைப் பார்ப்பனருக்குச் சமமாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஆண்டாள் கண்டெடுக்கப்பட்ட குழந்தை; பார்ப்பனப் பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டவள் மன்னனாயினும் ஆலிநாடனாகிய திருமங்கையைக் கள்ளர் என்றும் திருப்பாணாழ்வாரைத் தீண்டத் தகாத பாணரென்றும் கொள்ளலாம். நாலாயிரத்தில் இவர் பாடியது வெறும் பத்து பாடல்களே. திருமங்கை சற்று கூடுதலான பாடல்கள் பாடியிருப்பினும் (1137) மற்ற பாடல்கள் அனைத்தும்(2629)பிறரால் பாடப்பட்டவையே

பெரும்பான்மையோர் சூத்திரரில்லை என்பதொரு பக்கம். சூத்திரராக இருந்தபோதிலும் கூட அதனால் இவர்களது குரலைச் சூத்திரக் குரல் எனச் சொல்லிவிட முடியாது என்பது முக்கியம். நாயன்மார்களிலும் கூட சூத்திரர்களும் தீண்டத் தகாதவர்களுமிருந்தனர் என்பதையும் ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்களை அவர்களும் உள்வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்ததையும் நாம் மறந்து விட முடியாது.

**விசிஷ்டாத்வைதம், வடகலை - தென்கலை பற்றிச் சில குறிப்புகள்:**

நில்வுடைமையும் சாதீயமும் இறுக்கம் பெற்ற மத்திய காலத்தின் இரு முக்கிய மத வெளிப்பாடுகளாக மடங்களின் தோற்றத்தையும் பெருந்தத்துவ உருவாக்கங்களையும் குறிப்பிடலாம். வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டு அவற்றிற்கு விளக்கம் சொல்லும் முகமாகவே இப் பெருந்தத்துவங்கள் உருவாயின. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம் ஆகிய எல்லாவற்றிற்குமேஇதுபொருந்தும்.வேதங்கள் தோன்றிய காலத்தில் பிற்காலத்திய மடங்கள், தத்துவங்கள் ஆகிய நிறுவனங்களின் நோக்கத்தை முன்னிறுத்தி அவை உருவாக்கப் படவில்லை எனவே வேதங்களில் கலந்து கிடந்த பல்வேறு குரல்களில் தமக்குத் தேவையானவற்றைப் பொறுக்கி விளக்கமளித்துப் பல்வேறு தத்துவங்களும் உருவாக்கப் பட்டன. ஜீவனும் பரமாத்மாவும் வேறு வேறு அல்ல என்பதை அத்வைதமும், வேறு வேறு தான் என்பதைத் துவைதமும், உடலும் உயிரும் போலத் தனித் தனியே வேறாக இருந்தபோதிலும் என்றுதான் என்பதை விசிஷ்டாத்வைதமும் சொல்கின்றன என்பது நமக்குத் தெரியும் துவைத தத்துவத்திற்கு ஆதாரமாக உள்ள வேத வாக்கியங்கள் பேத சுருதிகள் எனவும், அத்வைதத்திற்கு ஆதாரமாக உள்ளவை அபேத சுருதிகள் எனவும், இரண்டையும் சமரசப்படுத்தி 'ஜாயின்ட்' அடிப்பதற்கு (துவைதம் பிற்காலத்தில் தோன்றியது) இராமநுஜரால் பயன்படுத்தப் பட்டவை கடக சுருதிகள் (கடகம்—பொருந்துதல்) எனவும் கூறப்படும் (பி.ஸ்ரீ, இராமநுஜர், பக் 303-304).



படிப்பகம்

www.padippakam.com

வடமொழி வேதங்கள், ஆழ்வார் பிரபந்தங்கள் இராமானுஜ விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பின்னாளைய வைணவம் இறுக்கமாக்கப் பட்டது. இராமானுஜருக்கு முன்பே 'வடமொழிவேதக்கடல்குடைந்தாடின' நாதமுனிகள் பிரபந்தங்களைத் தொகுத்தார். இராமானுஜர் ஸ்ரீ பாஷ்யமுரைத்துத் தத்துவாச் சாரியார் ஆனார். யாமுனாசாரியார் (ஆளவந்தார்), வேதாந்த தேசிகர் (5ம் பீடாதிபதி-கி.பி 1268), அவரது சம காலத்தவரான பிள்ளை லோகாசாரியார் (ஸ்ரீ வசன பூஷணம்), அவரது சகோதரர் மணவாள மாமுனிகள் (ஆசார்ய இருதயம்) ஆகியோர் வைணவ மரபின் முக்கிய ஆச்சாரியார்கள். ஆசாரியார்கள் அனைவரும் தென்னாட்டைச் சேர்ந்தவர் மட்டுமல்ல பார்ப்பனர்களும் கூட என்பதையும் நாம் எப்படிப் புறக்கணிக்கமுடியும்? இவர்கள் உபயவேதாந்தப் பிரவர்த்தகர்கள் என அழைக்கப் பட்டது குறிப்பிடத் தக்கது.

இராமானுஜருக்குப் பின் 13ம் நூற்றாண்டில் வடகலை-தென்கலை பிரிவுகள் வைணவத்திற்குள் தோன்றின. வடமொழிவேதங்களுக்கு அதிக முக்கியத்துவமளித்தனர் வடகலையினர் (வேதாந்த தேசிகர் முதலானோர்). வடமொழி வேதங்களினடியாகத் தோன்றிய ஆழ்வார் பிரபந்தங்களுக்கு அதிக அழுத்தம் தந்தனர் தென்கலையினர் (பிள்ளை லோகாச்சாரியார் முதலானோர்) பொதுவில் தென்கலை என்பது சற்று சனரஞ்சகத் தன்மை (populist)வாய்ந்த தாகவும், வடகலை சற்று மேட்டிமைத் தன்மை (Elitist) யானதாகவும் அமைந்தன. இறைவனின் கருணைக்குக் காரணமில்லை (திக்ஹ நிர்ஹேதுகம்); அவனை அடைய பரபக்தி நெறி போதும்; பூனை தன் குட்டியைக் கடித்தெடுத்து ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு எடுத்துச் செல்வது போல இறைவன் ஆன்மாவைப் பேணுகிறான்; ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆன்மாவின் பக்கம் முயற்சி தேவையில்லைஇது தென்கலை (மார்ஜார நியாயம்). இறைவனையடைய பிரபத்தி நெறி மட்டும் போதாது, ஞானநெறியும் தேவை; தாய்க் குரங்கு குட்டிக் குரங்கை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு எடுத்துச் சென்றாலும் குட்டியும் தாயைப் பற்றிக் கொள்ள வேண்டும், எனவே ஆன்மா பக்கமும் முயற்சி தேவை— இது வடகலை(மர்க்கட நியாயம்).

மேற்கொள்வதற்கு எளிய நெறி என்பதால் வடகலையைக் காட்டிலும் தென்கலை பரந்து பட்டதாக இருந்தது. ஆனால் சனரஞ்சகவாதத்தின் (populism) இன்னொரு பக்கம் எதேச்சாதிகாரம் (despotism) என்பதையும் நாம் மறந்து விட முடியாது, வடகலையினர் வடமொழி வேதங்களோடு ஆழ்வார் பிரபந்தங்களையும் ஏற்றுக் கொள்வர். திருமாலோடு திருமகளையும் சமமெனக் கருதுவர். தென்கலையினரோ ஆழ்வார் பிரபந்தங்களைமட்டுமே பெரிதெனச் சொல்வர். திருமாலுக்குச் சமமாக திருமகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**இங்கு நாம் சில முடிவுகளைத் தொகுத்துக் கொள்ளலாம்:**

1. சைவ சமயம் விவசாயச் சமூகத்தின் வெளிப்பாடாகவும், சமண—பௌத்த அவைதீக மதங்கள் வணிகச் சமூகங்களின் வெளிப்பாடகவும் நிலைபெற்றன; விவசாயவிரிவாக்க காலத்தில் சமண—பௌத்த மதங்கள் வீழ்ச்சியுற்று சைவ மதம் வேரூன்றியது என்கிற கருத்திய பெரிய தவறேதுமில்லை. அப்படிப் பார்க்கும் வேரூன்றியது என்கிற கருத்திய பெரிய அளவில் தவறேதுமில்லை. அப்படிப் பார்க்கும் யாது வைணவ மதத்தை மேய்ச்சல் இனக் குழுக் கூறுகள் மிகுந்த ஒருமதம்எனச்சொல்ல முடியும். விவசாய மதமாக இது உருப்பெறாததன் விளைவாக நாயக்கர் காலம் வரையில் வைணவம் தமிழகத்தில் அரச மதமாக இல்லை. சில சமயங்களில் அரசோடு முரண்பாடுகளுமிருந்தன என்பதை 'இராமநுஜரும்' கம்பனும் சோழ நாட்டை விட்டோடியதாகச் சொல்லப்படும் கதைகள் வெளிப்படுத்துகின்றன. இதன் பொருள் வைணவம் அரச எதிர்ப்பு மதமாக எல்லாக் காலங்களிலும் விளங்கியது என்பதல்ல Tribal/ Nomadic கூறுகள், அரச மதமாக இல்லாமை ஆகியவற்றின் விளைவாக சைவத்தைக் காட்டிலும் வைணவம் நெகிழ்ச்சியுற்ற மதமாகவே இருந்தது. இறுக்கமான படிநிலை ஏற்றத் தாழ்வுகளைச் சைவம் வலியுறுத்திய அளவிற்கு வைணவம் வலியுறுத்தவில்லை தீண்டாமை விசயத்திலும் இது பொருந்தும். திருப்பாணாழ்வார், மாறனேர் நம்பி, நல்லான் சக்கரவர்த்தி, பிள்ளை உறங்காவில்லி தாசர் ஆகியோரின் கதைகளுக்கும், நந்தன் கதைக்குமுள்ள வேறுபாடு இதனை விளக்கும் தனது விரிவாக்கத்திற்கு அரசை நம்பியிருக்க இயலாத நிலையில் மக்களிடம் தயைந்து போகும் நிலையை அது மேற்கொள்ள வேண்டியிருந்தது.

2. அரச மதமாக இல்லாத போதிலும் (சமண, பௌத்த அவைதீக மதங்கள் எதிர்த்தொழிக்கப் பட்ட அளவிற்கு வைணவம் அரசர்களால் எதிர் கொள்ளப் படவில்லை. பொதுவான வைதீக நெறிகளையும் ஆகம, கோயில் வழிபாடுகளையும் வைணவம் எதிர்க்காதது இதற்கொரு காரணம். விவசாயப் பண்பாட்டிற்கு வெளியில் நின்ற சாதாரண மக்களை வைதீக நெறிக்குள் இழுக்கும் சாதனமாக வைணவம்செயற்பட்டதும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

3. அவைதீக நெறிகளைஎதிர் கொண்ட வகையில் வைணவம் சைவத்திற்கு எந்த வகையிலும் குறைவாக இல்லை. சமணர்களையும், சாக்கியர்களையும்''கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகருளானே'' எனத் தொண்டரப் பொடி பாடியது குறிப்பிடத் தக்கது. பின்னாளில் நாயக்கர் காலத்தில் அரச மதமாகும் பேறு பெற்றவைணவம் இசுலாமியத்திற்கெதிரான கொடுரமான மதமாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

4. வைதீக நெறிக்குட்பட்ட வைணவத்தைத் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் சூத்திரர்களின் விடுதலைக்கான மாற்றுச் சிந்தனையாக நாகராசனும் ஞானியும் முன் வைப்பது அபத்தத்திலும் அபத்தம். வருணாசிரமத்தையும் வைதீக நெறிகளையும் எதிர்த்து உருவான உலோகாயதக் கூறுகளையும்' சமண—பௌத்த சிந்தனை மரபையும் மாற்றுத் தத்துவ மரபாக முன் வைக்கிற **தேவிபிரசாத் சட்டோபாத்யா**வை திட்டித் தீர்க்கும் இவர்கள் வைணவம் என்கிற வைதீக நெறியை மாற்றுச் சிந்தனையாக முன் வைக்கும் நோக்கம் கேள்விக் குரியது கோட்பாட்டளவில் வைணவம் வருணாசிரமத்தை எங்கே மறுக்கிறது என்பதை ஞானியும் நாகராசனும் தெளிவுபடுத்தியாக வேண்டும். சூத்திரர்கள் மற்றும் தாழ்த்தப் பட்டவர்களின் விடுதலையை முன் வைத்து இயங்கிய எந்த இந்தியத் தலைவர்களும் வைதீக நெறியை மாற்றுச் சிந்தனையாக, மாற்று நெறியாக முன் வைத்ததில்லைஎன்பதையும் தோழர்கள்சிந்திக்க வேண்டும். இராம வழிபாட்டையும், பார்ப்பனீயத்தையும், இந்து மதத்தையும் வாழ்நாளெல்லாம் தாக்கித் தகர்த்தெறிந்து வந்து டாக்டர் **அம்பேத்கர்**, பௌத்த நெறியைத்தான் மாற்று நெறியாக முன் வைத்தார். வைணவத்தில் அரக்கனாகச் சித்திரிக்கப் பட்ட மகாபலி மன்னனின் ஆட்சிக் காலத்தைப் பார்பனர்களுக்கெதிரான பொற்காலமாக முன் வைத்த **ஜோதி பாபூலே** அவர்கள் இந்த நாட்டை இந் நுஸ்தான்என அழைப்பதுதவறு, பாலிஸ்தான் என அழைக்க வேண்டுமென்றார். இராமநவமிக்குப் பதிலாக 'பாலி நவமி' கொண்டாடவேண்டுமென ஒரு மாற்று நெறியைமுன் வைக்க முயன்றார். **சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டோர்கள் விடுதலைக்காக எந்த வைதீகநெறியை அம்பேத்கரும், பூலேயும், பெரியாரும் புறக்கணித்தார்களோ அந்தவைதீக நெறியை கொல்லைப்புறம் வழியாக அன்புவழி என்றும், மாவோ வழி என்றும் பெயர் சூட்டிக் கொண்டு ஞானியும் நாகராசனும் முன் வைக்க முயல்வதை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையில் அக்கறையுடைய எவரும் சந்தேகிக்காமல் இருக்க முடியாது.**

5. சைவம்-வைணவம் மட்டுமல்ல வைதீக எதிர்ப்பாகத் தோன்றி பின்னாளில் அரச மதங்களாக மாறி, வருணாசிரமத்திற்கும் பலியான சமண, பௌத்த மதங்களையும் நாம் இங்கே **அதிகாரபூர்வ மதங்களாகவே**(Official Religions)கருதமுடியும். இத்தகைய நெறிகளிலிருந்து அப்பாற்பட்ட இனக்குழு மற்றும் விளிம்புநிலை மக்களின் வழிபாட்டு நெறிகளையே **அதிகாரபூர்வமற்ற மதங்களாக** (Un-official Religions) கருதமுடியும். **மாற்றுக் கூறுகளை இவைகளில்தான் தேட முடியும். உண்மையான சமத்துவத்தை இம்மதங்களில் தான் காணமுடியும்.**

6. இந்துத்துவ அரசியல் நிலைபெற்றுள்ள ஒரு சூழலில் ஒரு தந்திரோபாயமாகக் கூட வைணவத்தை நாம் உயர்த்திப் பிடிக்கமுடியாது இந்துத்துவச் சொல்லாடலுக்குள் இந்தியத் துணைக்கண்ட மக்களனைவரையும் சிக்கவைக்கும் கண்ணி வலையாகப் பயன்படும் இராமயண மகாபாரதப் பெரும் புராணங்கள் இரண்டுமே வைணவ மரபிற்குட்பட்டவை. அந்த வகையில் இசுலாமியர்க் கெதிராக மக்களைத் திரட்டி ஒருங்கிணைக்கும் பாசிசக் கருவியாக வைணவ மரபே இங்கு அதிக அளவில் பயன்படும் என்கிற உண்மையை இந்துத்துவப் பாசிச சக்திகள் இங்கு சரியாகவே உணர்ந்துள்ளன.

**அப்புறம் இந்த அன்பு வழி பற்றி:** அன்பு, கற்பு, ஒழுக்கம், திருடாமை முதலிய அறவியற் கருத்தாக்கங்கள் எல்லாம் சொத்துடைமை, ஆணாதிக்கம் அதிகாரம், ஆகியவைஉருப்பெற்றுவிட்ட எற்றத் தாழ்வான சமூகத்தின் விளைபொருட்கள். குடும்பம் தனிச்சொத்து அரசுஆகியவற்றிற்கு முந்திய சமத்துவச் சமூகத்தில் இத்தகைய கருத்தாக்கங்களுக்கு இடமில்லை அரசு உதிர்கிற பொதுவுடைமைச் சமூகத்திலும் இவை அனைத்தும் உதிர்ந்து போகும். உடைமை உருப் பெற்ற சமூகத்திலேயே திருடாமை பற்றியும், ஆணாதிக்கம் நிலை பெற்ற சமூகத்திலேயே கற்பு பற்றியும் பேசப்படும். தங்களது உடைமையையும், ஆதிக்கத்திற்கும் ஆபத்து வரக்கூடாது என முனைபவர்களே இவற்றை வலியுறுத்துவர். தங்களது கொடூரமான சுரண்டலையும் தக்க வைக்க முனைபவர்களே அகிம்சை பற்றியும் அன்பு பற்றியும் அதிகம் பேசுவர். அன்பு செலுத்துதல் என்பதிலேயே ஒரு படிநிலைத் தன்மை வந்து விடுகிறது. வர்க்கசமுதாயத்தில் அன்பு என்கிற நாணயத்தின் மற்றொரு பக்கம் பகை யாகத் தான் இருக்க முடியும் தன் குடும்பத்தின் மீதுள்ள அன்பு தான் இன்னொரு உயிர் அழிவதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கச் சொல்கிறது. குட்டிகளின் மீதுள்ள அன்பால் தான் புலி, மானைக் கொல்கிறது. மு.க. ஸ்டாலின் மீதுள்ள அன்பால் தான் கருணாநிதி கட்சியைத் தாரைவார்க்க விரும்புகிறார், இதனைத் தான்,



படிப்பகம்

www.padippakam.com

அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்கிறார் திருவள்ளுவர். அறத்தையும் அன்பையும் நாகராசன் இணைக்க முயல்வதைத் திருவள்ளுவரைப் போல அறியாமை என ஒதுக்குவதா? இல்லை, இவரது இதர கருத்துக்களோடு இணைத்துப்பார்த்து இதன் உள்நோக்கங்களை ஆராய்வதா?

அன்பு பற்றி ஏதோ வைணவமும் கீழை நெறிகளும்மட்டுமே பேசுகின்றன எனச் சொல்வதும் அபத்தம். முன்பே சொன்னது போல படிநிலைச் சமூகங்கள் உருவாகிறபோது அதனை உறுதிப்படுத்தத்தோன்றும் எல்லாமதங்களும் அன்பைப் போற்றவே செய்கின்றன. 'அன்பே சிவம்' என்கிறது சைவம்; God is Love என்கிறது அய்ரோப்பிய மதம்; 'அன்பே சமயம்' என்கின்றனர் சூஃபி துறவிகள். உயிர்களிடத்தில் அன்பைச் சமணம் வலியுறுத்திய அளவிற்கு வேறெந்த மதமும் சொல்லியதில்லை. முதலாளியச்சமூகத்தில் அன்பு கொண்டு சேவகம் செய்தல் என்பது நுகர்வோரை ஈர்க்கும் ஒரு தந்திரம். டி.வி.எஸ். பஸ்களில் கூட அன்பு கொண்டு சேவை செய்வது பற்றிய முழக்கங்கள் எழுதப்பட்டிருந்தது நினைவிருக்கலாம். டி.வி எஸ். அய்யங்காரின் நோக்கம் லாபம்தானே யொழிய கைங்கர்யம் அல்ல.

அறவியல்/ ஒழுக்கம் பற்றின தனது மதவழிப்பட்ட கருத்துகளுக்கு ஆதரவாக நாகராசன் மார்க்சியத்தையும், மாவோயிசத்தையும் இழுப்பதும் ரொம்பவும் நரித்தனமான செயல்தான். ''எல்லாக் காலத்திலும் மாறாத அடிப்படையான ஒழுக்கம் ஒன்று உண்டுஎன்ற கருத்தில்தான் மார்க்ஸ் பேசினார்'' என்கிறார் நாகராசன் (பக். 131): எப்போது, எங்கே என்று அவர் வழக்கம் போல சொல்லவில்லை எல்லாக் காலத்திற்குமான அறவியல் மதிப்பீடுகள் இருக்க முடியாது என்பதுதான் மார்க்சிய வரலாற்றுக் கொள்கையின் அடிப்படையே. எல்லாக் காலத்திற்குமாக ஒழுக்க மதிப்பீடுகளைப் பொதுமைப் படுத்துவது (abstract) மதத்தின் பணி. எல்லா மதங்களும் பொய் சொல்லாதே, கொலை செய்யாதே, திருடாதே கற்பு தவறாதே என எதிர்மறைப் போதங்கள் செய்து ஒழுக்க மதிப்பிடுகளைப் பொதுமைப் படுத்தும் நாற்பத்திநான்குபேர்களை உயிரோடு கொளுத்திய ஒருவனைக் குற்றமற்றவன் என்று நீதிமன்றங்கள் விடுதலை செய்யும் போது அவனைத்தோழர்கள் கொன்று போடுகிறார்கள் என்றால் அங்கே நியாயத்தை தூலமான பரிசீலனையின் அடிப்படையிலேயே சொல்ல முடியும். ''கொலை செய்யாதே'' என்பதை எல்லாக் காலத்திற்குமான பொது மொழியாக இங்கே பிரயோகிக்க முடியுமா? திருடாதே, கற்பு தவறாதே என்கிற எல்லாப் போதங்களுக்குமே இதனைப் பொருத்திப் பார்க்கலாம், எனவே ஒழுக்க மதிப்பீடுகளைத் தூலமாகப் (Concrete) பார்ப்பதே மார்க்சியப் பார்வை. எல்லாக் காலத்திற்குமான ஒழுக்க மதிப்பீட்டிற்கு உதாரணமாகப் ''பெண்களிடம் தகாத முறையில் நடக்காதே'' என்பதைச் சொல்கிறார் நாகராசன் (பக்- 132) பிரச்சினை என்னவெனில் ''தகாதமுறை'' எது என்பது தான் காலத்திற்கும், இடத்திற்கும், தகுந்தாற் போல வேறுபடுகிற ஒன்று ஒரு பழங்குடி மக்கள் மத்தியில் வயதுவந்த ஆடவரும் மகளிரும் ஊர்ப் பொதுக்குடிலில் ஒன்றாக வைக்கப்படும் நாட்களில் ஒரு பெண், ஒரு ஆடவனைப் புணர்ச்சிக்கு அழைப்பது அங்கே ஒழுக்கக் கேடாகக் கருதப்படுவதில்லை. ஆனால் பொதுக் குடிலிலிருந்து வெளியேவந்து கணவன் மனைவியாய் வாழ நேர்ந்த பின் இத்தகைய மீறல் தகாத ஒன்றாகக் கருதப் படலாம். இப்படிப் பல உதாரணங்களைச் சுட்ட முடியும். அப்படியானால் யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் கையைப் பிடித்து இழுப்பதுதான் விடுதலை என்கிறீர்களா என நாகராசன் கேட்கலாம் (உண்மையில் திருச்சி கூட்ட இறுதியில் நாகராசன் இப்படிக் கேட்கவே செய்தார்). இதைத்தான் நாம் தூலமாகப் பார்க்கவேண்டும் என்கிறோம். இன்றைய சூழலில் விருப்பமில்லாத ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரத்திற்குட் படுத்துவது வன்முறை. கற்பு வேண்டாம் எனச் சொல்கிற நாம் தான் இத்தகைய வன்முறைகளை எதிர்த்துப் போராட வேண்டிய வர்களாக இருக்கிறோம்; போராடுகிறோம்.

மதங்களுக்கிடையே பல்வேறு வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் எல்லா மதங்களுக்குமான பொதுமான அம்சம் ஒன்று உண்டென்றால் அது ''ஒழுங்கின்மை பற்றிய அச்சத்தை'' (Fear of Anacrhy) ஊட்டுவதே, ஆதியிலே எல்லாம் ஒழுங்கில்லாமல் இருந்தன எனவும் மதமும் கடவுளும் தான் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தின என்றும் எல்லா மதங்களும் சொல்கின்றன மக்களின் அன்றாடப் பழககவழக்கங்களை அதுகுற்றம் சார்ந்தஒன்றாக உணர்த்தும் (guilt feeling)கள்ளுண்பதைப் பாவம் என்றும் நான் கள் குடிப்பதில்லையே என்று சொன்னால் புலால் சாப்பிடுகிறாயே அது பாவம் என்னும், காந்தி ஆமதாபாத்மில் தொழிலாளர் போராட்டத்தில் (1623) தொழிலாளர்கள் டீக்கடைக்குப் போவதே பாவம் என்றார் (பார்க்க- பஞ்சமர் —விடியல் வெளியீடு- முன்னுரை) நாகராசனின் அறம் பற்றிய கோட்பாடு முழுமையாக மதம் சார்ந்தவையே.

### பகுதி இரண்டு

வரிக்குவரி மறுத்து புறக்கணித் தொதுக்கப்பட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய இந்நூலின் அபத்தங்கள், பிழைகள் பொய்கள், திரிபுகள் எல்லாவற்றையும் பட்டிய லிடுவதற்கு இங்கு வாய்ப்பில்லை. முக்கியமான ஒரு சில மட்டும்.

1. தனது முப்பதாண்டு கால ''போராட்ட'' ''இயக்க வாழ்வில் **அம்பேத்கர்** சிந்தனை களின் முக்கியத்துவத்தை நாகராசன் உணர்ந்து கொண்டதிற்குச் சான்று களில்லை, கடைசியாக இப்போது அவரை ஏற்றுக் கொண்டுள்ளதாகச் சொல்கிறார், நல் லது அம்பேத்கர் நூற்றாண்டையொட்டிய எழுச் சியின் விளைவாக இதனை எடுத்துக் கொள் வோம். ஆனால் தாழ்த்தப்பட்டோரின் விடுதலை நோக்கில் அம்பேத்கரின் முக்கியமான பங்களிப் பாக இன்று வெளிப்போந்திருப்பது அவரது இந்துமத எதிர்ப்பும், பார்ப்பனிய எதிர்ப்பும்தான் அம்பேத்கரிடம் உள்ள பலவீனமான அம்சம் மதஉணர்வு பற்றிய அவரது கருத்துக்கள் தான் அந்த அடிப்படையிலேயே அவர்இன்று இந்துத் துவத்தால் உள்வாங்க முயற்சிக்கப்படுகிறார் இசுலாமியர்க்கெதிரானவராக அவரை இன்று இந்துத்துவ சக்திகள் முன்வைக்கும் முயற்சி களுக்கும் இதுவே கைகொடுக்கிறது. பாரதீய ஜனதாவும் இந்துத்துவ சக்திகளும் அம்பேத்கரி டம் எந்த அம்சத்தை எடுத்துக் கொள்கின்றன வோஅவற்றைத்தான் நமது நாகராசனும் அம் பேத்கரின் சிறப்புக்களாக அடையாளம் காண் கின்றார். வறட்டு நாத்திகத்தை ஒப்புக் கொள் ளாத சமய உணர்வும், இந்தியா ஒன்றாக இருக்கவேண்டும் என அவர் கருதியதையும் பாராட்டுகிறார். அம்பேத்கரின் இந்து மத எதிர்ப்பு 'நாத்திக மதமாகிய' பௌத்த மத மாற்றம் ஆகியவற்றை நாகராசன் விளக்கியாக வேண்டும்.

2. மூன்றுவிதமான 'மதச்சார்பின்மை' பற்றி நாகராசன் குறிப்பிடுகிறார். (பக்.208—210), முதலாவது **பாரதீய ஜனதா** வின் 'மதச்சார்பின் மை' இதனை ஏற்க முடியாது என அவர் குறிப் பிட்டாலும் பாரதீய ஜனதாவின் கொள்கையை மதச் சார்பின்மை என அவர் குறிப்பிடுவது அய்யத்தை ஏற்படுத்துகிறது. இந்து மத வெறி என்று தான் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். தீனதயாளு உபாத்யாயா நிறுவனம், எம். எம். ஜோஷி போன்றோருடன் அவருக்குள்ள தொடர்பு இப்படிச் சொல்வதைத் தடுக்கிறது போலும். சும்மா கேலியாகச் சொன்னேன்என்று தப்பித்துக் கொள்ளும் படியாக அவரது எழுத்து முறை இல்லை. அடுத்தது **காந்தி**யின் மதச் சார்பின்மை. அதிகக் கண்டனமில்லாமல் இதை முன் வைக்கிறார். (பக்,209) மூன்றாவது **நேரு** வின் மதச் சார்பின்மை. இதனைக் கடுமையாகக் கண்டிக்கிறார். காரணம் இது நாத்திக வாதத் தின் அடிப்படையிலானதாம். ,மாவோ ஒருவரே நாத்திகவாதத்திலிருந்து தப்பித்துக் கொண்டவ ராம்! எப்படி? வழக்கம் போல பதிலில்லை. நேருவின் மதச் சார்பின்மையில் குறைகள் இருந்த போதிலும் பாரதீய ஜனதா, காந்தி, நேரு ஆகியோரை ஒன்றாக நிறுத்தினால் நிச்சயமாக நேருவின் மதச்சார்பின்மையையே நாம் பாராட்ட முடியும். நாகராசனின் தலை கீழான நிலைபாடும், நாத்திக வெறுப்பும், அடிப் படையில் பொருள் முதல் வாதக் கோட்பாடு களை முன் வைத்த அவைதீக மதங்கள் மீதான எரிச்சலும் கவனிக்கத் தக்கன.

3, ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பொதுவுடைமைக் கட்சிகள் கைவிட்டுவிட்டன என்றும் மத அடிப் படையிலேயே இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு நடைபெறுகிறது என்றும் கூறுகிற நாகராசன் அதற்கு எடுத்துக் காட்டுகளாக விடுதலை இறையியல், கோமேனியின் தலைமையிலான ஈரானிய எழுச்சி, இந்துத்துவம் (பக்,38) ஆகிய வற்றைக் குறிப்பிடுகிறார் முதலிரண்டோடு இந்துத்துவத்தையும் வைப்பதுநமது அய்யத்தை அதிகரிக்கிறது. பாரதீய ஜனதா பேசும் சுதே சியம் பொய்யானது; ஏகாதிபத்தியத்துடன் இந்துத்துவத்திற்கு முரண்பாடில்லை. (பார்க்க. இதே இதழிலுள்ள வகுப்புவாதம் பற்றிய கட்டுரை). அடிப்படை **வாதத்தையும்** (Fundamentalism) இந்துமீட்பு **வாதத்தையும்** (Revivalism) நாம் வேறு படுத்திப் பார்க்க வேண்டும். (பார்க்க: அதே கட்டுரை). அடிப் படைவாதம் இருக்கிறநிலையில் மாற்றங்களைக் கோருவது. இந்துத்துவமோ மீண்டும் வருணா சிரமத்தை நிலை நாட்ட வருவது. விடுதலை இறையியலிலோ, இசுலாமிய அடிப்படைவாதத் திலோ காணப்படும் இம்மியளவு முற்போக்கை யும் கூட இந்துத்துவத்தில் காண முடியாது.

4. மேலைXகீழை என மார்க்சியத்தைப்பிரிப்பது படு அபத்தம். மேலை மார்க்சியம் என நாக ராசன் எதைச் சொல்கிறார்? மேலை மார்க்சியம் என ஒற்றைப் பரிமாணமாய் ஏதும் உள்ளதா? போல்செவிசம், ஃப்ராங்பர்ட் மார்க்சிசம், யூரோ கம்யூனிசம், அல்தூசரிய மார்க்சியம் ஆகிய அனைத்தும் ஒன்றுதானா?- இதனை நாகராசன் விளக்கியாக வேண்டும்.

5: கீழைமரபு 'என்பது'' உற்பத்தி சக்திகளின் தங்கு தடையற்ற வளர்ச்சியைக் கோராத —இயற்கையோடு இயைந்த மரபு என்றால் ஜப்பானைப்பற்றி என்னசொல்கிறார்நாகராசன் ஜப்பான் கீழை மரபில் வந்த நாடில்லையா? அங்கும் பௌத்தம் என்கிற கீழை மதம்தானே ஆட்சி செலுத்தியது? அங்கே எப்படி மேலை நாடுகளுக்கு ஒப்பாக உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைந்தன? கோளாறு நாத்திக அடிப் படையிலான பௌத்த மதத்தில் ஒன்று நாகராசன் சொல்வாரே யானால் சீனத்திலும்



படிப்பகம்

www.padippakam.com

பௌத்தம் தானே இருந்தது. அங்கே எப்படி மாவோ உருவானார்?.

6. மார்க்சியத்தில் அன்புவழி இல்லை என்றால் மாவோயிசத்தில் அது எப்படி வந்தது? மாவோவுக்கு வைணவ மரபு கிடையாதே. புத்த மதத்தின் சங்கக் கோட்பாடு போன்றவற்றின் அடிப்படையில்தான் மாவோயிசத்தில் கைங்கர்ய மரபு (!) தோன்றியதென்றால் வைணவத்திற்கு பதிலாக நாகராசன் பௌத்தத்தை முன் வைத்தாலென்ன?.

7. நாகராசனின் அசட்டுத்தனத்தின் உச்சத்தை அவரது விஞ்ஞானம்பற்றிய அணுகல் முறையில் காணலாம். எய்சன்பர்கின் நிர்ணயிக்க இயலாமைக் கொள்கை (Uncertainity Principle) என்பது நவீன இயற்பியலின் மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று. மிக நுண்மையான அணுத்துகள்களின் நிலையையும் (Position) வேகத்தையும் (Momertum) ஒரே சமயத்தில் முழுத்துல்லியத்துடன் கண்டுபிடிக்க முடியாது என்பது இக் கொள்கை. இயங்கும் நுண்ணிய பொருட்துகள்களுக்கு அலைப் பண்பும் உண்டு என்கிற இன்னொரு முக்கிய கண்டு பிடிப்பின் அடியாக எய்சன்பர்க் தனது கொள்கையைக் கண்டு பிடித்தார் இதனைச் சற்று விளக்குவோம் எந்த ஒரு பொருளின் பண்பையும் கண்டறிவதற்கு இன்னொரு பொருளில் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு முதல் பொருளின் பண்பை அறிகிறோம்: எடுத்துக்காட்டாகக் கொதிக்கும் திரவமொன்றின் வெப்பநிலையை அறிய பாதரசம் நிரம்பிய ஒரு வெப்பமானியை அதில் வைத்து அந்தப் பாதரசத்தில் ஏற்படும் விரிவை வைத்து வெப்பநிலையை அளக்கிறோம் ,இப்படிச் செய்யும் போது பாதரசம் சிறிது வெப்பத்தை எடுத்துக் கொள்வதால் அளக்கப்பட்ட பொருளின் வெப்ப நிலையில் சிறிது மாற்றம் ஏற்படுவது தவிர்க்க இயலாது. ஆனால் இது புறக்கணிக்கத் தக்க அளவிற்கு மிகமிகச் சிறியது. ஆனால் மிக மிக நுண்மையான அணுத்துகள்களில் இப்படி ஏற்படும் மாற்றத்தைப் புறக்கணித்து விட முடியாது என்கிறார் எய்சன்பர்க். ஒரு எலக்ட்ரானின் வேகத்தையும், நிலையையும் கண்டறிவதற்கு அதனை ஒரு எலக்ட்ரான் மைக்ராஸ் கோப் கருவி கொண்டு ஆராய்கிறோம். வெப்பமானியில் பயன்படுவது போல இங்கே ஒளித்துகள் (Photon) பயன்படுகிறது. இந்த ஒளித்துகளின் வேகம்(உந்தம்) அளக்கப் போகும் எலக்ட்ரானின் உந்தத்தோடு ஒப்பிடத் தக்கதாய் இருக்கும். இந்தத்துகள் எலக்ட்ரானின் மீது மோதி திரும்பி வருவதை வைத்து எலக்ட்ரானின் நிலையைக் காண்கிறோம். ஆனால் துகள் எலக்ட்ரானின் மீது மோதுவதன் விளைவாக அந்த எலக்ட்ரானின் வேகம் மாறி விடுகிறது. எவ்வளவு மாறும் என்பதைத் துல்லியமாய்ச் சொல்ல முடியாது. ஆனால் இதைப் புறக்கணித்து விடவும் முடியாது, இவ்வாறு எலக்ட்ரானின் நிலையில் ஏற்படும் நிர்ணயிக்க இயலாமையை $\Lambda X$ எனவும் அதன் உந்தத்தில் ஏற்படும் நிர்ணயிக்க இயலாமையை $\Lambda P$ எனவும் கொண்டால்,

$$\Lambda X. \Lambda P \leq h/2\Pi$$

என்பது எய்சன்பர்க் கொள்கை. இதில் வரும் h ன் மதிப்பு மிகமிகச் சிறிது. $h = 6.63 \times 10^{-34}$ JS. எனவே இவ் விதி நுண்மையான அணுத்துகள்களுக்கு மட்டுமே பொருந்தும் நாகராசன் உளறுவது போல கல்லுக்கும், மண்ணுக்கும், மலைக்கும் இது பொருந்தாது. அணுத்துகள்களின் அளவையில் ஏற்படும் இந்த நிர்ணயிக்க இயலாமை என்பது கருவியின் போதாமையாலோ இல்லை அளப்பவரின் ''நொள்ளைக் கண்ணாலோ'' ஏற்படுவது அல்ல. மாறாகநுண் துகள்களுக்கான இத்தகைய மதிப்புகளின் துல்லியமற்ற தன்மையே இந்த நிர்ணயிக்க வியலாமைக்குக் காரணம். (முதலில்குறிப்பிட்ட பாதரசம்-வெப்பநிலை உதாரணம் கூட முழுமையாகப் பொருத்தமான ஒன்றல்ல. விளக்குவதற்காகவே அதைக் குறிப்பிட்டோம்).

இதையெல்லாம் தோழர்கள் எங்கே படிக்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் நாகராசன் என்னென்னவோ பேசுகிறார். ''அவள் கண் நொள்ளிக்கண்- குழந்தையைக் காட்டாதே'' எனச் சொல்லும் மூடத்தனத்திற்குச் சமமாம் எய்சன்பர்க் கொள்கை! புத்தகத்தின் இந்தப் பகுதியைப் படித்துப் பாருங்கள் நாகராசன் குழம்பிக் கிடப்பது அல்லது குழப்ப முனைவது தெள்ளென விளங்கும்.

அறிவியல் உண்மைகள் வர்க்கம் சார்ந்தவை என்று சொல்லும் நாகராசன் யார் வேண்டுமானாலும் விஞ்ஞான உண்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனச் சொல்லும் போது அது வர்க்கத்திற்கு அப்பாற்பட்டது என்கிற கருத்து வந்துவிடுகிறது. இந்த முரண்பாட்டையும் நாகராசன் விளக்கியாகவேண்டும்.

## பகுதி மூன்று

நாகராசனின் எழுத்து முறையைப் பற்றி இங்கொன்றைச் சொல்லி விட வேண்டும். தனது ''புரட்சிகரமான'' கொள்கை அறிவிப்புகள் எதற்கும் அடிப்படையான ஆதாரங்களை அவர் முன் வைப்பதேயில்லை. வரிக்குவரி ஆதாரக் குறிப்புகளோடு எழுதுவது ஒரு முறை. அந்த அளவிற்கு ஆதாரங்களை இறுக்கமாகச் சொல்லாமல் எழுதுவது ஒரு முறை. பல்வேறு தளங்களில் செயல்படும் போது இரண்டு முறைகளையுமே பயன்படுத்துவதுண்டு. ஆனால் ஆதாரங்



படிப்பகம்

www.padippakam.com

களைச் சொல்வதே பாவம் என்பது போல் தடலடியாகக் கருத்துக்களை விளாசிச் செல்லும் போது கூட எந்தக் குறிப்பையும் சொல்லாமல் எழுதுவது நியாயமாகப் படவில்லை. 'அனுபூதி'த்தனமான எழுத்துமுறை என நாகராசனைத் தூக்கிப் பிடிப்போர் இதனைச் சிலாகிக்க முடியும். ஆனால் இப்படி ஆதாரமில்லாமலே புரட்டல் வேலைகளைச் செய்யும் போது நமக்கு அய்யம்தான் வருகிறது, ''பசிபிக் கடலுக்கிடையில் ஒரு தீவு மீன் பிடிப்பதுதான் மக்கள் தொழில். அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை. மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். சோசலிசம் வந்து இவர்களுக்கு எந்த முன்னேற்றத்தைச் செய்ய வேண்டும்?'' என்றோரிடத்தில் எழுதுகிறார் (பக். 129). இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் சோசலிசம் தேவையில்லை என்கிற கருத்துப்பட இதனை அவர் முன் வைக்கும் போது அந்தத் தீவின் பெயரையாவது சொன்னால் என்ன?

வைணவம் என்கிற பெயரில் வைதீக நெறியை உயர்த்திப் பிடிக்கும் தனது முயற்சிகளுக்கு மாவோவின் பெயரை அவர் பயன்படித்துவதும் இப்படித்தான். தனது நோக்கில் ஏதாவதொன்றைச் சொல்லிக் கொண்டே வருவார். திடீரென இதை சரியாக உணர்ந்து கொண்டவர் மாவோ ஒருவர்தான் என்கிற ரீதியில் ஆதாரமில்லாமல் எதையாவது சொல்லித் தனது மதவாத உளறல்களுக்கு மாவோவைத் துணைக் கழைப்பார்,

அகந்தையை ஒழித்து மக்களிடம் அன்பு செய், ஊழியம் செய் என்பதெல்லாம் கட்சிகளில் எல்லாக் காலங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கிற விசயங்கள் தான். ஒருவன் பல்வேறு தியாகங்களையும் மேற்கொண்டு கம்யூனிஸ்டாக வாழ்வதென்பதே மக்களின் மீதுள்ள அன்பின் விளைவுதான். அப்படி வருகிறவன் எப்படி அதிகாரத்துகத்திற்கு பலியாகிப்போகிறான் என்பது இன்று நம் எல்லோர் முன்னும் உள்ள கேள்வி. மக்களிடம் அன்பில்லாமல் போனதுதான் இதற்கெல்லாம் காரணம், இதைச் சரியாய்ச் சொன்னது மாவோதான் என்றால் மாவோவின் சீனத்திலும் இன்று ஏன் அதே பிரச்சினைகள் என்பது தான் நமது கேள்வி. புரட்டல்வாதம் தான் காரணம் என்று சொல்லித் தப்பித்து விட முடியாது. இங்கே தான் நாம் கட்சி வடிவம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், கலாச்சாரப் புரட்சி பற்றியெல்லாம் பரிசீலனையில் இறங்க வேண்டியிருக்கிறது. ''தலைமையகத்தைத் தகர்த்தெறியுங்கள்'' என்று சொன்ன மாவோவும் அந்தப் போராட்டத்தை இறுதி வரை அனுமதித்ததில்லை. கட்சி பற்றிய போல்செவிச அணுகல் முறையைப் பெரிய அளவில் மீறியதில்லை.

மக்களது ஆதரவைத் திரட்டுவதை அடிப்படையாகக் கொள்கிற எந்தக் கட்சியுமே ஊழியம் செய் போன்றவற்றைச் சொல்லித்தான் வந்திருக்கிறது. லெனின் சொல்லவில்லையா? 'தன்னலமற்ற சேவை, கோடிக் கணக்கான மக்களுக்குப் பொறுப்பாயிருத்தல், மக்களுக்காக எழுதும் போது எளிமையாக எழுதுதல், மக்களிடமிருந்து அன்னியப் பட்டவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுதல்' முதலியவற்றை அவர் கூடத்தான் சொல்லியுள்ளார் (பார்க்க: ஊழியர் பயிற்சி).

நடைமுறையிலில்லாதவர்கள் கட்சி வழியை வகுப்பதற்கும், விமர்சனம் செய்வதற்கும் இம்மியளவும் உரிமையில்லை''என்பது லெனின் மாவோ, ஹோசிமின் போன்றவர்களின் உறுதியான கொள்கை இவர்களை நாம் புரட்சிவாதிகளின் ஆசானாக ஏற்க முடியுமேயன்றி தஞ்சாவூர் எத்தர்களையும், பம்பாய் அயோக்கியர்களையுமல்ல'' என்கிறார் நாகராசன் (பக்.92). கட்சிக்குக் சம்பந்தமில்லாதவர்களெல்லாம் கட்சிக் கொள்கையை வகுக்க முடியாது என்பதெல்லாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். இதற்காகக் கட்சியை விமர்சிக்க, அக்கட்சியின் செயல்பாடுகளால் பாதிக்கப்படுகிற, மக்களுக்கு உரிமையே இல்லை எனச் சொல்வது போல்செவிசத்தின் மோசமான குறைகளில் ஒன்று. மேலை மார்க்சியத்தைத் திட்டித் தாம் தூரம் என்று குதிக்கும் நாகராசன் இந்த மோசமான அம்சத்தில் மட்டும் தன்னை ஒரு போல்செவிஸ்டாக நிறுவக் கொள்கிறார். இவர் ஓதும் ''மக்களிடல் அன்பு செய்''என்கிற மந்திரமெல்லாம் எத்தனை பம்மாத்து என்பது இங்கே வெளிப்பட்டு விடுகிறது. போல்செவிச நடைமுறை எப்படி இருந்திருந்தாலும் மேலை மார்க்சியரான லெனின் அப்படியெல்லாம் மக்களை ஒதுக்கிவிடவில்லை என்பது தான் உண்மை. கட்சியில் கட்டளை மனப்பான்மையும், அதிகார மனப்பாங்குமுடைய நபர்களைப் பற்றிப் பேச வரும் போது ''கட்சியைச் சாராத பாட்டாளி வர்க்க மற்றும் விவசாய வெகுஜனங்களின் குறிப்புகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை'' என்கிறார் லெனின். மேலும்,

> ''கட்சியைச் சாராத உழைப்பாளிகளின் கருத்துக்களைக் கணக்கில் கொண்டு கட்சியைத் தூய்மைப் படுத்துவது ஒரு மாபெரும் செயலாகும். இது நமக்குக் கருத்தாழமுடைய பயன்களைத் தரும். இது கட்சியை முன்பிருந்ததை விட பன் மடங்கு அதிக சக்தி வாய்ந்த வர்க்க முன்னணிப் படையாக, வர்க்கத்தோடு தொடர்புடையதாக ஆக்கும்''

(ஊழியர் பயிற்சி பக். 163)



படிப்பகம்

www.padippakam.com

என்பதும் லெனின் கூற்றுதான். மக்களிடம் நேசமுள்ளவராகத் தன்னை நாகராசன் காட்டிக் கொண்ட போதும் உண்மை அதுவல்ல என்பது அவ்வப்போது வெளிப்பட்டு விடுகிறது.

''இந்த மனிதர்களை இயக்க அன்பு தான் முக்கியம் எங்களுரில் தாழ்த்தப்பட்டவர்கள் என்னிடம் கூறுகிற மாதிரி மற்றவர்களிடம் சொல்ல மாட்டார்கள்''.

என்பது நாகராசன் கூற்று (பக்.127). 'இந்த மனிதர்கள்' என்று சொல்லித் தன்னை அவர்களிடமிருந்து விலக்கி, உயர்த்தி வைத்துக் கொள்ளும் மனப்பாங்கைக் கவனியுங்கள். தன்னை இயக்குபவராகவும், தாழ்த்தப்பட்டவர்களையும் சூத்திரர்களையும் இயக்கப்படுபவர்களாகவும் அவர் கருதிக் கொண்டிருப்பதும் இங்கு வெளிப்பட்டுவிடுகிறது.

தன்னைப் பெண் விடுதலையில் நம்பிக்கையுள்ளவராய் நாகராசன் காட்டிக்கொள்வதிலும் அர்த்தமில்லை என்பது கற்பு பற்றிய 'ஒரே தம்ளரில் பலர் குடிக்கமுடியாது'என்கிற(பக்:126)அவரது கூற்றில் வெளிப்பட்டு விடுகிறது. பெண்ணியம் பேசுகிற யாரும் இதனை ஏற்கவே மாட்டார்கள் என்பது வெளிப்படை.

முரண்பாட்டின் பகையற்ற அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதுதான் மாவோவின் சிறப்பு என்கிறார் நாகராசன். பகைக் கூறுகளுடன் கூடிய முரண்கள் ஒருமையாய் இருக்கும்என்பது மார்க்சிய இயங்கியலின் அடிப்படை. பாட்டாளி வர்க்கம் இதர ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் இணைந்து தலைமை ஏற்று முதலாளியத்தைத் தூக்கி எறியும் என்பது மார்க்சிய முன்னோடிகள் வைத்த கருத்து. இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. சக ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் இணைந்து நிற்றல் என்பது இவ்வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடு பகைமையற்றது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அதே சமயத்தில் முதலாளியத்தைப் பகைமையாய்த்தான் கருத வேண்டும் என்பதே மார்க்சியம். முதலாளியத்தை எதிர்ப்பதென்பது தூலமான நிலையில் முதலாளி வர்க்கத்தை எதிர்ப்பதாகத்தான் இருக்கும். ஒரு முதலாளியச் சமுதயாயத்தில் முதலாளி வர்க்கத்தை எதிர்க்காமல் முதலாளியத்தை மட்டும் எதிர்க்க இயலாது.

முரண்பாடு குறித்த மார்க்சிய இயங்கியலை விரிவுபடுத்தி விளக்கியதுதான் மாவோவின் பங்களிப்பே யொழிய நாகராசன் சொல்வதுபோல இயங்கியலின் அடிப்படையே அவர் மாற்றிவிடவில்லை. வெவ்வேறு வகையான முரண்பாடுகளை வெவ்வேறு வகைகளில் தீர்க்க வேண்டும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்திற்குமுள்ள முரண்பாட்டைச் சோசலிசப் புரட்சியின் மூலம் தீர்க்க வேண்டும். பரந்துபட்ட மக்களுக்கும் நிலவுடைமைக்குமுள்ள முரண்பாட்டை சனநாயகப் புரட்சி மூலம் தீர்க்கவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிக்குள் உள்ள முரண்பாடு சுயவிமர்சன முறையில் தீர்க்கப்படவேண்டும். சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாய வர்க்கத்திற்குமுள்ள முரண்பாடு விவசாயத்தைக் கூட்டுறவு மயமாக்கி எந்திரமயமாக்கல் மூலம் தீர்க்கப்படவேண்டும்—என்பது தான் மாவோ சொன்னது. சோசலிச சமுதாயத்தில் பாட்டாளிகளுக்கும் விவசாயிகளுக்குமுள்ள முரண்பாட்டையும், கம்யூனிஸ்ட் கட்சிக்குள் உள்ள முரண்பாட்டையும பற்றிச் சொல்லும் போதுதான் மாவோ பகைமையற்ற முரண்பாட்டைக் கருத்தில் கொள்கிறார். ஆனால் நமது நரசிம்ம அய்யங்காரின் புதல்வரோ மாவோவையும், வைணவத்தையும் காட்டி ''ஆண்டைகளிடம் அனுதாபம் கொள்'' (பக். 184)என்கிறார். காலம் காலமாய் மனுநீதி மூலம்,வருணாசிரமத்தின் மூலம், இந்துமதத்தின் மூலம் தீண்டாமையையும், சாதிக் கொடுமைகளையும் ஏவிவிட்ட, சுரண்டிக் கொழுத்த, இன்னும் சங்கர மடங்கள் மூலமும், ஜீயர் மடங்கள் மூலமும், அரசதிகாரத்தின் மூலமும் ஆதிக்கம் செலுத்துகிற பார்ப்பன உயர்சாதி ஆண்டைகளிடம் பகைமையற்ற முரணைக் காண்பதற்கு நாகராசனால் முடியலாம் நம்மால் முடியாது. இந்தச் சதி வேலைக்கு வைணவத்தைத் துணைக் கழைப்பதோடு நாகராசன் நிறுத்திக் கொள்ளட்டும். மாவோவைத் துணைக்கழைக்கும் போதுதான் நாம் அவரது உள்நோக்கத்தைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

நாகராசன் புதியது எதையும் படிப்பது கிடையாது. இதனை ஞானியே ஏற்றுக்கொண்டுள்ளார். 'அவர் தனது சொந்த எழுத்துக்களைத் தவிர வேறெதையும் படிப்பதில்லை' என்பது ஞானி கூற்று (நேர்ப் பேச்சில்) இதைத்தான் ''சுயமாச்சார்யப்''பாரம்பரியம் என நாகராசன் கூறிக் கொள்கிறாரோ என்னவோ. சுயமாச்சார்யா-என்பதையே அகந்தையின் ஒரு வெளிப்பாடாகத்தான் பார்க்கவேண்டும் இதன் விளைவாக நவீன சிந்தனைகள் அனைத்தும் தமக்குத் தானாகவே தரிசனமாகிவிடும் என்கிற அசட்டு நம்பிக்கை அவருக்கு வந்துவிடுகிறது, சமிர் அமின் முதல் அல்துஸ்ஸா வரை எல்லாம் தமக்கு அத்துப்படி என்கிற ரீதியில் அவர் ஆங்காங்கு கருத்துக்களை உதிர்த்துச் செல்வது இந்நூலின் நகைச்சுவைப் பகுதிகள் எனலாம். ''பலவீனமான கண்ணியை உடை என்றார் லெனின். எனவே (புரட்சிக்கு) வாய்ப்பான நிலை அய்ரோப்பாவில் இல்லை என்றுதான் முடிவு செய்யவேண்டும். இதனைத்தான் விளிம்புக் கோட்பாடு என்று சமீர் அமின் போன்றவர்



படிப்பகம்

www.padippakam.com

கள் மற்றுமொரு வகையில் கூறுகின்றனர்'' என்கிறார் நாகராசன் (பக். 27) லெனினது ''ஏகாதிபத்தியம்'' பற்றிய கோட்பாட்டிற்கும் சமீர் அமின் போன்றவர்கள் முன் வைக்கும் ''உலக முதலாளியம்'' (மையம்—விளிம்பு) என்கிற சிந்தனைக்கும் பேரளவு வேறுபாடு உண்டு. முதலாளியத்தின் உச்ச கட்டமாக ஏகாதிபத்திய சுரண்டலைப் பார்ப்பது லெனினியம் உலக முதலாளியக் கோட்பாட்டின்படி முதலாளியம் அது தோன்றிய அன்றிலிருந்தே உலகு தழுவியதாக இருக்கிறது. இந்த அடிப்படை வேறுபாடு பல புதிய சிக்கல்களை, தேசங்களின் அரசியல் சுதந்திரம் போன்ற பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள உதவுகிறது.

ஒருமுறை நாகராசன் நவீன ஓவியம் பற்றிச் சொன்னது நினைவிற்கு வருகிறது—ஒரு குரங்கின் கையில் வண்ணம் தோய்த்த தூரிகையைக் கொடுத்தார்களாம். அது ஒரு தாளின் மீது கண்டபடி கிறுக்கிற்றாம். பிறகு அந்தக் கிறுக்கல்களை மூன்று நவீன ஓவியர்களிடம் காட்டினார்களாம். அவர்கள் அதற்கு ஆளுக்கொரு விளக்கம் தந்தார்களாம்-(இது ஏதோ நாகராசன் புத்தகத்திற்கு ஞானி, சந்திரன் போன்றோர் விளக்கம் சொல்வது பற்றிய கதை அல்ல. நாகராசனே சொன்னது) இந்த இடத்தில் ஞானி புகுந்து (அவராலேயே சகிக்க முடியவில்லை), 'நாகராசன் நிறுத்துய்யா மாடர்ன் ஆர்ட் பற்றி உனக்கு என்ன தெரியும் தெரியாததைப் பேசாதே' என்று சொன்னபின் நிறுத்திக்கொண்டார். ஞானி இந்த அறிவுரையை மற்ற விசயங்களிலும் நாகராசனுக்குச் சொல்லியிருக்கலாம்.

## மொத்தத்தில்...

இந்தப் புத்தகத்திற்காக நிறப்பிரிகையில் இத்தனை பக்கங்களை நாம்வீணடித்திருக்கவேண்டியதில்லைதான். இந்துத்துவத்தை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையை முதற் பணியாக எடுத்துக் கொள்ள வேண்டிய சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மார்க்சிய வட்டத்தில் இந்துத்துவத்தை முன்வைக்கும் வேலையை ஞானி, நாகராசன் போன்றோர் தொடர்ந்து செய்து வருகின்றனர். மார்க்சியத்தை அடிக்க விரும்பும் இந்துத்துவ சக்திகளும் முதலாளியர்களும்''சரியான மார்க்சியர்களாக'' இவர்களை முன் நிறுத்துவதன் மூலம் தங்களின் நோக்கத்திற்கு இவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த வகையில் ஆர். எஸ். எஸ்—> தீனதயாளு உபாத்யாயா நிறுவனம்—> நாகராசன்—> ஞானி—> கோமல் சுவாமிநாதன்—> என்.எஸ். ஜகன்னாதன்—> சுஜாதா—> சுபமங்களா—> இந்தியாடுடே—> வெங்கட்சாமிநாதன்—> வாசந்தி என்கிறவலைபின்னலை நாம் மிகவும் எச்சரிக்கையோடு எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே தான் இத்தனை விரிவான விமர்சனம்.

இவர்களே மார்க்சியத்தைக் காப்பாற்றுபவர்களாகவும் இரட்டை வேடமிடுவது மிகப் பெரிய வேடிக்கை சுபமங்களா (டிச.93) வில் ஞானி, பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு எழுதியுள்ள பதிலைப் பார்க்கும்போது நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. ''அருட்செல்வரே, மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்பதை நீங்கள் சொல்லாதீர்கள். அது எடுபடாது. திருவருட் செல்வராகிய நான் அதைப் பார்த்துக் கொள்கிறேன் மார்க்சியம் காலாவதியாகவில்லை— மேற்கட்டுமானத்தைப் புறக்கணித்தவகையில் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் தான் காலாவதியாகிவிட்டது மார்க்சியம் காலாவதியாகவில்லை-பகையற்ற முரண்பாட்டைப் புறக்கணித்ததன் வகையில் இயங்கியல்தான் காலாவதியாகிவிட்டது. மார்க்சியம் காலாவதியாகவில்லை — சுற்றுச் சூழலை மறந்து உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டும் பேசியதால் அதன் பொருளியல் கொள்கைதான் காலாவதியாகிவிட்டது என்கிற ரீதியில் பேசி, இந்துத்துவத்தை உயர்த்திப் பிடித்து உங்கள் வேலையை நான் செய்து விடுகிறேன்'' என்று பேசுவதாய்த்தான் நமக்குப் படுகிறது.

தீண்டாமையைப் பற்றி, சாதீயத்தைப் பற்றி, பார்ப்பனீயத்தைப் பற்றி நாகராசனின் நூலில் அதிக விமர்சனமில்லை. இவற்றை விமர்சனம் செய்யாமல் சுற்றுச் சூழலையும ஏகாதிபத்திய எதிர்ப்பையும் மட்டும் பேசிக் கொண்டிருப்பது இன்று ஒரு மத்திய தர வர்க்க—பார்ப்பனீய 'ஸ்டைல்' ஆகிவிட்டது. மேற்கத்திய சனநாயகத்தைப் புற்று நோய் எனச் சொல்லும் நாகராசன் தான் (பக்:35). கிழக்கந்திய சொர்க்கம் (பக்:58)எனப்பார்ப்பனீய இந்தியாவைச் சொல்கிறார். பார்ப்பனர்களைப் பகையாகக் கருதாதே என்கிறார். டறையர்களே உங்கள் வேலை பார்ப்பானுக்கு வ்டுதலை வாங்கித் தருவதுதான், எனவே பகைவனிடம் அதாவது பார்ப்பானிடம் அன்பாயிருங்கள் என்று உபதேசம் புரிகிறார். யாவோவின் பெயராலும் மார்க்சியத்தின் பெயராலும் இவற்றைமுன் வைப்பதால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. சைலத்தைக் காட்டிலும் வைணவம் எப்படி முற்போக்கானது என விளக்கி நாகராசனும் ஞானியும் புத்தகம் எழுதிக் கொண்டிருக்கட்டும் ஆனால் அதுதான் மார்க்சியம் என இங்கே கடைவிரிக்க முயல்வது வீண் வேலை என உணர்த்தவேண்டிய அவசியம் நமக்கிருக்கிறது.

O



படிப்பகம்

www.padippakam.com

# அஜித் சிங் பெய்ன்ஸ் - நேர் காணல்

வ. கீதா – எஸ். வி. ராஜதுரை

*அஜித் சிங் பெய்ன்ஸ் (Ajit Singh Bains) பஞ்சாப் மனிதவுரிமை அமைப்பின் (Punjab Human Rights Onganisation) தலைவர்; பஞ்சாப்-அரியானா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி 1992 ஏப்ரலில் அவர் தடா மற்றும் பிற கொடூரச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு மிருகத்தனமான முறையில் சித்திரைவதை செய்யப் பட்டார் போலிசாரால் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டுக் குற்றுயிரும் குளையுமாக நிர்வாணக் கோலத்திலிருந்த ஒரு இளைஞன் முன்னால் அவர்நிறுத்தப்பட்டு அவனுக்கு நேர்ந்த கதிதான் அவருக்கும் ஏற்படும் என மிரட்டப்பட்டார். இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் செயல்படும் மனித/சிவில் உரிமை இயக்கங்கள் எழுப்பிய கண்டனக் குரல்கள் பல மாத சிறைவாசத்திற்குப் பிறகு அவரை விடுதலை செய்ய வைத்தன.*

*அண்மையில், மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சென்னையில் நடத்திய விகிதாச்சார இடஒதுக்கீடு மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த பெய்ன்ஸ் 'நிறப்பிரிகைக்' கென ஒரு நேர்காணலுக்கு இசைவு தந்தார்.*

**கேள்வி:** உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள். மனிதவுரிமைப் பாதுகாப்பு இயக்கத்தில் நீங்கள் ஆர்வம் கொள்ளக் காரணம் என்ன?

**பதில்:** நான் பஞ்சாபில் கிராமப்புறக் குடும்பமொன்றில் பிறந்தவன் எனது தந்தையாரும் அவரது சகோதரரும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள். எனது தந்தையாரின் சகோதரர் கனடா நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட கத்தார் கட்சியைத் (Gaddar Party) தொடங்கியவர்களில் ஒருவராவார். எனது தந்தையார் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுபத்தாண்டுச் சிறைவாசம் அனுபவித்தார். பிறகு அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். அதன் பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1977-இல் காலமான அவர் கடைசிவரை ஒருஇடதுசாரியாகவே விளங்கினார். சுதந்திரப் போராட்டத்தின் இறுதியாண்டுகளின் போது நான் லக்னோ பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தேன் அப்போது என்தந்தையார் சிறையிலிருந்ததால் லக்னோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த அவரது சகோதரர் ஒருவரின் கண்காணிப்பில் படித்து வந்தேன். மாணவர் இயக்கங்களில் கலந்து கொண்டேன். பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டம் பெற்றபின் நான் பஞ்சாப்பிற்குத் திரும்பினேன். சிலகாலம் ஒரு கல்லூரியில் பொருளாதாரத்துறையில் ஆசிரியராக வேலைப்பார்த்தேன். அப்போது கல்லூரியின் தலைமை ஆசிரியராலும் கல்லூரி நிர்வாகத்தாலும் ஏய்க்கப்பட்டு வந்த மாணவர்களுக்காகப் பரிந்துப் பேசியதற்காக, நானும் வேறு 4 ஆசிரியர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டோம். இதற்குப் பிறகு நான் எனது சட்டப் படிப்பைப் பயன்படுத்திக் கொண்டு சட்டத்துறையில் செயல்படத் தொடங்கினேன். முதல் இரண்டாண்டுகள் ஒரு மாவட்டத் தலைமையகத்தில் (District Headquarters) வழக்குரைஞராகயிருந்தேன். 1961 இல் சண்டிகரில் இருந்த உயர்நீதி மன்றத்தில் செயலாற்றத் தொடங்கினேன். பஞ்சாப்-அரியானா பார் கவுன்சிலில் ஒரு உறுப்பினராக்கப்பட்டுப் பிறகு கவுன்சிலின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். உயர்நீதி மன்ற நீதிபதியாகவும் அமர்த்தப்பட்டேன். 1984 இல் வேலையிலிருந்து ஓய்வு பெற்றேன். அப்போது தான் மத்திய அரசு பஞ்சாப்பில் **'ஆபரேசன் ப்ளுஸ்டார்'*** என்ற ராணுவ நடவடிக்கையை தொடங்கியிருந்தது. ப்ளுஸ்டார் நடவடிக்கை என்னை மிகவும் பாதித்தது. என் மனதை உலுக்கியது. அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தினத்தன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் அமிர்தசரஸில் இருந்த பொற்கோயில் (Golden temple) கூடியிருந்தனர். சீக்கியர்களின் 5ஆவது மதகுருவான குரு அர்ஜுன் தேவ் வீர மரணம் அடைந்த நாள் அது. அவரை நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்த வந்தவர்களில் ஒரு சில (காலிஸ்தான்) போராளிகளும் இருந்தனர்-நான் இதை மறுக்கவில்லை. ஆனால் அன்று பொற்கோயிலில் தங்கள் சமய குருவை வழிபடவந்தவர்களில் பெரும்பான்மையாய் இருந்தவர்கள் சாதாரண குடிமக்கள்தான் 'ப்ளுஸ்டார்' நடவடிக்கையின் போது ஒன்றுமே அறியாத, சாதாரண மக்களுமே ஆயிரக்கணக்கில் மாண்டனர்.

* **ஆப்ரேசன் ப்ளுஸ்டார்:** அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் மீது இந்திய இராணுவம் நடத்திய தாக்குதல்.



படிப்பகம்

www.padippakam.com

'ப்ளூஸ்டார்' நடவடிக்கைக்குப் பிறகு சிறிது சிறிதாக நான் அரசாங்கத்தை விமர்சிக்கத் தொடங்கினேன்: மக்கள்மீது அது கட்டவிழ்த்து விட்டிருந்த வன்முறையை கண்டித்தேன். இதற்கிடையே லோங்கொவால்-ராஜீவ் ஒப்பந்தம் (Longowal-Rajiv pact) ஏற்பட்டது. பஞ்சாப்பில் தேர்தல்கள் நடைபெற்றன. அகாலித் தலைவர்களுள் ஒருவரான திரு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களின் தலைமையில் ஒரு அரசு ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தஇரண்டாம் நாளே அவர். 'ப்ளூஸ்டார்' நடவடிக்கையின் போதும், அதற்கு முன்னும் பின்னும், கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிரான புகார்களில் இருந்த உண்மைகளை அறிய ஒரு குழுவை நியமித்தார். நான் அக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றேன். என்னைத் தவிர குழுவில் ஜலந்தரைச் சேர்ந்த ஒரு மூத்த வழக்குரைஞரும் (இவர் பி. ஜே. பிக்கு சார்பானவர்), அரசாங்கத் தலைமை வழக்குரைஞர் ஒருவரும், பஞ்சாப்பின் அட்வகேட் ஜெனரலும் இடம் பெற்றிருந்தனர் நாங்கள் எங்கள் விசாரணையைத் தொடங்கி அறிக்கையும் முதல்வர் பர்னாலாவிடம் சமர்ப்பித்தோம். சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களில் 6000பேருக்கு எதிராக எந்தக் குற்றச் சாட்டும் இல்லை என்றும், இவர்கள் உடனே விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் பரிந்துரைத்தோம். இது எங்கள் அனைவரின் ஒருமித்தக் கருத்தாக விளங்கியது. 'ஜோத்பூர் கைதி'கள் ❋ என்று குறிக்கப்பட்டவர்களும விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கூறினோம். ஆனால் பர்னாலா அரசு எங்களது பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. 3500-4000 பேர்தான் விடுவிக்கப்பட்டனர். இது எங்களுக்கு, குறிப்பாக எனக்கு பெரும் ஏமாற்றத்தையளித்தது. எனது ஏமாற்றத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும் வண்ணம் அக்குழுவிலிருந்து விலகினேன். லோங்கொவால்- ராஜீவ் ஒப்பந்தத்தின்படி ஜனவரி 26, 1986 தேதியன்று சண்டிகர் அரியானாவிலிருந்து பஞ்சாப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதுவும் நடக்கவில்லை. பர்னாலா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கூறினோம. அவர் கேட்கவில்லை. அப்போது அவர் 'தில்லி தர்பாரு'க்கு அடிப்பணியத் தொடங்கிவிட்டார். அந்தக் காலகட்டத்தில்தான் நான் பஞ்சாப் மனிதவுரிமை கழகத்தை (Punjab Human Rights Organisation) தொடங்கினேன். பல்வேறு இடங்களில் நடைபெற்றுவந்த, அரசால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களைப் பற்றியஉண்மைகளை கண்டறிந்து அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரும் முயற்சிகளை நாங்கள் தொடங்கினோம். பர்னாலாஅரசு நீக்கம் செய்யப்பட்டது என்றாலும் நாங்கள் எங்கள் பணியை தொடர்ந்தோம். பஞ்சாப், அரியானா, தில்லி ஆகிய இடங்களிலிருந்து வெளிவந்தபார்ப்பனியப்பத்திரிகைகள் என்னை தனிப்பட்டமுறையில் குற்றங் கூறத் தொடங்கின-ப்ளூஸ்டார் நடவடிக்கைத் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்ததற்காக. ''ஜோத்பூர் கைதி''கள் அப்போது விடுவிக்கப் படவில்லை. 1989இல்தான், அதாவது நாங்கள் அறிக்கை சமர்ப்பித்து நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டிருந்த போது தான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதுவும் 1989 நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்து ஒரு புது மத்திய அரசு அமைக்கப்பட்ட பிறகே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

**கேள்வி:** தற்போது பஞ்சாப்பில் நிலைமை எப்படி இருக்கிறது 'பஞ்சாப்புக்கு அமைதி திரும்பி விட்டது' என்று அரசு கூறி வருகிறதே, அது உண்மைதானே?

**பதில்:** பஞ்சாப் இன்று ராணுவத்தாலும், துணை ராணுவப் பிரிவுகளாலும் முற்றுகையிடப் பட்ட ஒரு மாநிலமாகவே விளங்குகிறது. இங்கு 'சட்டம்' என்ற ஒன்று செயல்படுவதாகத் தெரியவில்லை. 20,000க்கும் மேற்பட்டோர் சிறைசாலைகளில் வாடுகின்றனர். அவர்களில் பலர் 5,6, ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து வந்துள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்டப்படி வழக்குகள் தொடங்கப்படாத நிலையில் அவர்கள் காரணமின்றி காவலில்வைக்கப்பட்டுள்ளனர். பஞ்சாப்பில் ஒரு'போலீஸ் ஆட்சி' தான் நடைபெறுகிறது. சிவில் நிர்வாகம் என்பது பெயருக்குத்தான் நடக்கிறது அதற்கு எந்தவொரு தகுதியும் அதிகாரமும் கிடையாது இன்றைய பஞ்சாப் முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்று 2 ஆண்டுகள் முழுமையாக இன்னும் முடியவில்லை (பிப்பரவரி 1994இல் தான் 2 ஆண்டுகள் முடியும்) ஆனால் அவரது இந்தக் குறுகியகால ஆட்சியில் 6000-7000க்கு மேற்பட்ட இளைஞர்கள் போலீஸ் காவலில் கொல்லப்பட்டுள்ளனர். பாலியல் வன்முறைகள், ஆட்களை கடத்திச் செல்லல், கொலை, சித்திரவதை—இவை அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. அண்மையில் மூன்று வழக்குரைஞர்களும் 2பத்திரிகையாளரும் சீக்கிய சமயப் பெரியவர் ஒருவரும் ராணுவத்தால் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட வழக்குரைஞர்களில் ஒருவரான குல்வந்த் சிங் அவர்களுடன் அவரது மனைவியும், ஒன்றரை வயதுக் குழந்தையும் சேர்த்துக் கொல்லப்பட்ட

❋ பொற்கோயில் இந்திய ராணுவத்தினரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட பிறகு கைது செய்யப் பட்ட சீக்கியர்கள் அவர்கள் ராஜஸ்தானிலுள்ள ஜோத்பூருக்குக்கொண்டு செல்லப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி ஐந்தாண்டுக் காலம் சிறைவைக்கப்பட்டிருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

னர். பஞ்சாப்பில் காணப்படும் 'அமைதி'யின் அறிகுறிகள்தான் இம்மாதிரியான கொலைகள்! நடைபெற்று வரும் அக்கிரமங்களில் ஒருசிலவற்றையே நான் உங்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளேன். இவை யாவும் வெளி உலகுக்குத் தெரிய வருவதில்லை. பத்திரிகைகள் உட்பட அனைத்துத் தகவல் தொடர்புச் சாதனங்களும் உயர்சாதி/ஆதிக்க வர்க்கத்தினரின் கைவசம் தானே இருக்கின்றன. அவையாவும் 'தில்லி தர்பாரி'ன் சொற்படிதான் நடப்பன. எனவேதான் அவை இடைவிடாது. ''பஞ்சாப்புக்கு அமைதி திரும்பிவிட்டது'' என்று பொய்யுரைத்து வருகின்றன. ஆனால், பஞ்சாப்பில் எவ்வாறு அமைதி நிலவக்கூடும்? துப்பாக்கித் தோட்டாக்களைக் கொண்டு அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. அவை போராளிகளால் சுடப்படும் தோட்டாக்களாக இருந்தாலும் சரி, பாதுகாப்பு ராணுவத்தினரின் துப்பாக்கிகள் கக்கும் தோட்டாகளானாலும்சரி-அவற்றால்அமைதியை நிறுவிடமுடியாது. பஞ்சாப்பில் காணப்படுவது ஒரு சட்ட-ஒழுங்குப் பிரச்சனையல்ல. அது ஒரு அரசியல் பிரச்சனை. தோட்டாக்களால் நாசத்தீயை உருவாக்க முடியுமே தவிர அரசியல் தீர்வுகளையல்ல, இன்று பொது மக்கள் ஒரு மாபெரும் பயங்கரத்தால்,அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நான் என்றுமே வன்முறையை ஆதரித்ததில்லை. போலீஸும் ராணுவமும் சட்டப்படி நடக்கவேண்டும்; சட்டத்தை மதிக்க வேண்டும்; போலிசால் கைது செய்யப்படுபவர்கள் மறுநாளே கைதான 24மணி நேரத்துக்குள் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்படவேண்டும். என்றுதான் கூறி வந்துள்ளேன். ஆனால் என்னைப் போன்றவர்களையுங்கூட விட்டுவைக்க அவர்கள் தயாராக இல்லை. என் வாயை அடைக்கவேண்டும், எனது மனோவலிமையைக் குலைக்கவேண்டும் என்ற எண்ணத்தில், பஞ்சாப்/அரியானா உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதியான என்னை ஒரு வாரண்ட் இன்றிக் கைது செய்தனர், கைது செய்த தகவலை எனது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவில்லை. நான் கைதான செய்தி பத்திரிகையாளருக்குத் தெரிய வந்தப்பிறகு, பி.பி.சியில் அச்செய்தி அறிவிக்கப்பட்டப் பிறகுதான் என்னை ''முறைப்படி'' 'தடா'வில் கைது செய்தனர். அதாவது, நான் ஏப்ரல் 3, 1992 அன்று இரவு கைது செய்யப்பட்டேன். ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு தான்நான் கைது செய்யப்பட்டதாகவும் அதுவும் மற்றொரு இடத்திலிருந்து கைது செய்யப்பட்டதாகவும் அறிவித்தனர். (நான் கைது செய்யப்பட்டதோ எனது வீட்டில்தான்) என்னைப் போன்றவர்களுக்கே இந்த கதியென்றால் சாதாரண மக்களின் கதியை எண்ணிப் பாருங்கள். ஒருவாரண்ட் இன்றி எனது வீட்டுக்குள் புகுந்து எனது உடைமைகளை சின்னாபின்னமாக்கினர் இதையெல்லாம் எதற்காக செய்தனர்? சாதாரண மக்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கதான்; ''எங்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். யாரை வேண்டுமானாலும் கைது செய்ய முடியும்'' என்று காட்டத்தான்.

பஞ்சாப்பில் காணப்படுவது அரசியல் பிரச்சனை போராளிக் குழுக்கள் தோன்றக் காரணமாகயிருந்த அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் இன்னும் மாறவில்லை. அரசியல் பிரச்சனை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படாத வரை பஞ்சாப்பில் அமைதி ஏற்படாது. வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் இந்த 'அமைதி' இப்போதுள்ள 'அமைதி' ஒரு மயான அமைதி தான்; புயலுக்குமுன் காணப்படும் அமைதிதான் பஞ்சாப்பில் மட்டுமல்ல, காஷ்மீரத்திலும், வடகிழக்கு மாநிலங்களிலிம்கூட இந்திய அரசால் 'அமைதி'யை ஏற்படுத்திவிட முடியாது—அமைதிக்கு முன் நிபந்தனையாக இம் மாநிலங்களில் முதலில் அரசியல்,சமூக, பொருளாதார நீதியும் சமத்துவமும் நிலைநிறுத்தப்படவேண்டும்.

**கேள்வி:** பஞ்சாப்பில் காணப்படும் ஒடுக்கு முறையை எதிர்கொள்ள மக்கள் என்ன வழி முறைகளை கையாண்டு வருகின்றனர். மக்களுக்கு வழிக்காட்டக்கூடிய தலைவர்கள் யாரேனும் இருக்கின்றனரா?

**பதில்:** பஞ்சாபிய மக்களுக்கு சரியான தலைவர்கள் வாய்க்கவில்லை என்றுதான் கூற வேண்டும். இருக்கக்கூடிய தலைவர்களும்கூட வெவ்வேறு குழுக்களில் பிரிந்து காணப்படுகின்றனர். அகாலிக்கட்சி (உங்கள் தி. மு. க.வைப் போன்றது) பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துப்போய் விட்டது. சில அகாலித் தலைவர்கள் 'தில்லி தர்பாரி'ன் அடிவருடிகளாகவும் சுய நலக்காரர்களாகவும் விளங்குகின்றனர். மக்களோ பீதியாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டுள்ளனர் நம்பிக்கைக் குலைந்தவர்களாக, மனோவலிமை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கூட்டம் நடத்த அரசாங்கம் அனுமதி வழங்குவதில்லை. சமயச் சடங்குகளில் மக்கள் பங்கேற்பதையும் வரக்கூட அனுமதிப்பதில்லை.பஞ்சாப்பிலிருந்து கூடிய செய்திகள் பெரும்பாலும் இருட்டடிப்புச் செய்யப்படுவதால், இவ்விவரங்கள் ஒருவேளை உங்களுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்.

மத்திய அரசோ ஜனநாயகத்தன்மையற்ற அரசாகவும் சோசலிசம், மதச் சார்பின்மை ஆகிய நிலைபாடுகளிலிருந்து விலகியே செயல்படும் அரசாகவும்தான் விளங்குகிறது. 'சோசலிச' அரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் தகுதியையும் அரசு இழந்துவிட்டது; மக்கள் தொகை



படிப்பகம்

www.padippakam.com

யில் பாதிக்கு மேற்பட்டவர்கள் —இவர்கள் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்தாம் — பசியால் வாடுகையில் அரசு அவ்வாறு கூறிக்கொண்டாலும்,அதை யார் நம்புவர் இங்கு என்ன ஜனநாயகம் காணப்படுகிறது. 2 ஆண்டுகளுக்கு முன் நடந்த பஞ்சாப் சட்டசபை தேர்தல்களை 90 /. மக்கள் புறக்கணித்தனர். இன்று முதல்வராக ஆட்சிபுரியும் பியான்த்சிங்கை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அவர்களது அரசியல் விருப்பங்களை நிறைவேற்றவல்ல பிரதிநிதியாக யாரால் ஏற்றுக்கொள்ள முடியும்? நடந்தது தேர்தலு மல்ல. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்கள் பிரதிநிதிகளும் அல்லர். இன்று பஞ்சாப்பில் ஆட்சி புரியும் அரசாங்கம் மத்திய அரசின் கையாளாகத்தான் செயல்படுகிறது. இது எங்கள் தலைவிதிபோலும்...

**கேள்வி:** போராளிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கி வருகின்றனரா?

பதில்: உண்மையில், போராளி இயக்கம் சரியான அரசியல் பாதையை பிற்பற்றவில்லை என்றே கூறவேண்டும். மேலும் அவ்வியக்கத்தில் அரசாங்க ஏஜெண்டுகள் ஊடுருவி புகுந்து நாசவேலை செய்து வருகின்றனர். இவர்கள் தான் பேருந்துகள், ரயில் பெட்டிகள், ஆகியவற்றுக்குள் நுழைந்து அவற்றுக்கு தீ வைப்பதும், பயணிகளை கொல்வதும் போன்ற செயல்களை மேற்கொண்டனர். பர்னாலா முதல்வராக இருந்தபோது, இம்மாதிரியான செயல்களுக்கு பின் ஒளிந்து கொண்டிருக்கும் உண்மைகளை அறிய ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று நான் கூறினேன். ஆனால் அவர் கேட்கவில்லை. அவ்வாறு ஒருவிசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளிப்பட்டுயிருக்கும் எனினும், ஒருநாள் இல்லையென்றாலும் ஒருநாள் உண்மை வெளிப்படத்தானே வேண்டும். பொதுவாக சீக்கியர்கள் வன்முறையை ஒரு வழிமுறையாகக் கொள்வதை அவர்களது மதம் அங்கீகரிப்பதில்லை. சீக்கியர்கள் குருத்வாராக்களில் வழிபாடு நடத்துகையில் தங்களது சமயத்தலைவர்களையும், சமயத்தின் பொருட்டு வீரமரணம் எய்தியவர்களையும், சமய குருமார்களையும் நினைவு கூர்ந்து, பிறகு உலக நன்மைக்காகப் பிரார்த்தனை செய்வர்.

இன்றுள்ள தலைமையைப் பொறுத்தவரை, மக்களுக்குத் தலைவர்கள்பால் நம்பிக்கையில்லை. நான் போராளிக்குழுக்களின் தலைமையையும் சேர்த்துதான் சொல்கிறேன். போராளிகள் சிலசமயம் பொருளற்ற, பயன்தராத வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். மக்கள்விரோத சக்திகளை அவர்கள் எதிர்கொண்டு தாக்குவது நியாயமான செயல்தான். ஆனால் சாதாரண மக்களின் சாவுகளுக்கும் அவர்கள் சில நேரம் காரணமாக உள்ளனர். இதை நாம் ஏற்றுக் கொள்ளவே முடியாது போராளிக்குழுக்களுக்கு அரசியல் விவேகம் இல்லை. ஒரு பரந்த ஆழமான அரசியல், சமூக குறிக்கோளும் தரிசனமும் இல்லை. ஒரு உண்மையான வெகுமக்கள் இயக்கத்தால்தான் பஞ்சாப் மக்களுக்கு வழி காட்ட முடியும்.

**கேள்வி:** போராளிக்குழுக்களின் மீது வேறுசில குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டு வருகின்றன சீக்கிய/பஞ்சாபிய மக்களுக்கு ஆதரவாக அவர்களது பிரச்சனைகளில் அக்கறையுடையவர்கள் கூட முன்வைக்கும் குற்றச்சாட்டு இதுதான். போராளிக்குழுக்களில் பெரும்பாலானவை 'ஜாட்' வகுப்பினைச் சேர்ந்த பணக்கார விவசாயிகளின் நலன்களை முன்னிட்டுத் தான் செயல்படுகின்றன. அவற்றால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை தங்கள்போராட்டத்தில் ஈடுபடுத்த முடியவில்லை. அவ்வாறு ஈடுபடுத்த அவை தவறிவிட்டன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: தொலை நோக்குப் பார்வையுடைய சில போராளிக்குழுக்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை தமது போராட்டத்தில் ஈடுபடுத்தவும், அவர்களது நலன்களை முன்நிறுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் போராளி இயக்கமானது, பொதுவாக, இந்தப் பிரச்சனையில் தேவையான அக்கறை காட்டவில்லை. சீக்கியர்களின் சமயத்தைப் பொறுத்தவரை' அது அடிப்படையில் ஒருபார்ப்பனிய எதிர்ப்புச் சமயம்தான். அரசு ஒடுக்குமுறையைத் தொடர்ந்து எதிர்த்து வந்த ஒன்றுதான். சமூகநீதிக்காக பாடுபட்ட ஒரு சமய இயக்கம் தான். சீக்கியசமய நெறியைக்காக்க உயிர் துறந்த தியாகிகளில் பலர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளை சேர்ந்தவர்கள்தான். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த பியான்த்சிங் தலித் வகுப்பினர்தான், 'ஜாட்' வகுப்பினரை எடுத்துக் கொண்டாலும், அவர்களில் ஒரு சிலர் பணக்கார விவசாயிகளாக இருப்பினும், பலர் சாதாரண சிறு விவசாயிகள் தான் 'ஜாட்' வகுப்பும் பிற்படுத்தபட்ட வகுப்பு தான். ஆனால் சில பணக்கார ஜாட் தலைவர்கள், நிலச்சுவான்தர்கள்' 'தில்லிதர்பாரு'டன் சமரசம் செய்து கொண்டுள்ளனர். பிரகாஷ்சிங்க் பாதல் போன்றவர்கள் தொடர்ந்து இந்துவெறி சக்திகளுடன் இணங்கிப் போயுள்ளனர். வடமாநிலங்களில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களில் பாதல், பி ஜே. பியை தில்லியிலும், ராஜஸ்தானிலும் ஆதரித்தார். ஆனால் இத்த



படிப்பகம்

www.padippakam.com

கைய ஜாட் தலைவர்களுக்கும் ஏழை ஜாட் மக்களுக்கும் இடையே எந்தவித சமன்பாடும் ஒற்றுமையும் இருக்க முடியாது.

**கேள்வி:** 'நிரன்காரி சீக்கியர்கள்'* எந்த சாதியை சேர்ந்தவர்கள். பஞ்சாப் தன்னுரிமைப் பிரச்சனையில் அவர்களது நிலைப்பாடு என்ன?

**பதில்:** நிரன்காரிகளில் பெரும்பாலானோர் உயர்வகுப்பினர்தான். பார்ப்பனர், பனியா வகுப்பினர், ஒரு சில உயர்வர்க்க 'ஜாட்' வகுப்பினர்......நிரன்காரிகள் தில்லி தர்பாரின் கைகூலிகள்தாம்; நம்பிக்கைத் துரோகிகள்தாம். பஞ்சாப் தன்னுரிமைப் பிரச்சனையில் அவர்களுக்கு அக்கறையில்லை.

**கேள்வி:** சிம்ரஞ்ஜித் சிங் மான் போன்ற தலைவர்கள் பற்றி......

**பதில்:** சிம்ரஞ்ஜித் சிங் மான் நேர்மையானவர். தில்லி ஆட்சியை எதிர்ப்பவர். ஆனால் அவருமே பாதலைப் போல் பணக்கார விவசாய வகுப்பினர். அவரது வர்க்க நலன்களுக்கு துணை போகின்றவர்.

**கேள்வி:** அவர் அமெரிக்க பன்னாட்டு மூலதனத்தை வரவேற்றுள்ளாரல்லவா? பஞ்சாப் பிரச்சனையில் அமெரிகா தலையிட வேண்டும் என்று கூறியுள்ளாரல்லவா?

**பதில்:** ஆம். மேலும், அவரால் ஒரு சிறந்த தலைவராகச் செயல்பட முடியவில்லை. 1989 தேர்தல்களில் 4லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவர் வென்றார். தேர்தலில் போட்டியிட்ட அவரது கட்சியினர் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டேயிரண்டு இடங்கள்தான் கிடைத்தன. இருந்தும், அவரால் மக்களை ஒன்றுதிரட்ட முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைமையில் மேற்கொள்ளப்படும் ஒரு வெகுமக்கள் போராட்டத்தால்தான் பஞ்சாப் மக்களின் அரசியல் ஆர்வங்கள் நிறைவேற்றப்படும்,

**கேள்வி:** பஞ்சாபில் கம்யுனிஸ்ட் கட்சிகளின் செயல்பாடு எத்தகையானதாக இருந்து வந்துள்ளது? தேசிய இனப்பிரச்சனையில் அவற்றின் நிலைபாடு என்ன?

**பதில்:** பஞ்சாபில் சி.பி.ஐ, சி.பி.எம். ஆகிய கட்சிகளின் செயல்பாடு மிகவும் துரோகத்தனமான ஒன்றாக இருந்து வந்துள்ளது. அவர்கள் அரசாங்கத்தின் கையாட்களாகவும் பஞ்சாப் போலிசின் கைக்கூலிகளாகவும் விளங்குகின்றனர் அரசாங்கம் அவர்களை விலைக்கு வாங்கி விட்டது. தங்களது 'தற்காப்பின்' பொருட்டு அவர்களும் தங்களை விற்றுக் கொள்ளவும் தயாராகி விட்டனர். அரசாங்கம் அவர்களுக்கு ஜீப்புகள், இலவச பெட்ரோல், இலவசப் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கியுள்ளது. ஆனால் இக்கட்சிகளுக்கு பஞ்சாபில் எந்த சமூக அடித்தளமும் கிடையாது.

மார்க்சிய-லெனினியக்கட்சிகள் பிளவுண்டு கிடக்கின்றன. ஆனால் ஒரு சில மக்களுக்கு ஆதரவாக நிற்கின்றன கத்தர் கட்சி தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கிறது இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் அரசாங்க ஒடுக்குமுறையை எதிர்த்து வருகின்றனர். தேசிய விடுதலைப் போராட்டத்தை அக்கட்சியோ பிற மா.லெ குழுக்களோ ஆதரிக்கின்றனவா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**கேள்வி:** மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் ஆதரவாளராக இருதய கவிஞர் பாஷ் (Pash) போராளிகளால் கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறதே......

**பதில்:** நான் இதை நம்பவில்லை. பாஷ் ஒரு மக்கள் கவிஞர். அருமையான தோழர். போராளிகளுக்கு ஆதரவு காட்டிவந்தவர். அவரைப் போராளிகள் ஏன்கொல்ல வேண்டும்? அரசாங்க கைக்கூலிகள்தான் இதைச் செய்திருக்க வேண்டும். இம்மாதிரியான படுபாதகமான செயல்களை செய்வதும் பின்னர் சீக்கிய மக்களை இழிவுப்படுத்தும் பொருட்டு பழியைப் போராளிகளின் மீதுச் சுமத்துவதும் அவர்களுக்குக் கைவந்த கலையாயிற்றே.

**கேள்வி:** பஞ்சாபில் நிலவும் ஒடுக்குமுறை சூழலில் பெண்களின் வாழ்வு எவ்வகையில் பாதிக்கப்பட்டுள்ளது? போலிசும் ராணுவமும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது பெண்கள் பல்வேறு தொல்லைகளை சந்திக்க வேண்டியிருக்கிறதே! இதுபற்றிய செய்திகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**பதில்:** பெண்கள் சந்திக்க நேரும் அச்சுறுத்தல்கள், வன்முறைகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து நம் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. சிறைக்காவலில் நடைபெறும் பாலியல் வன்முறைகள் எண்ணற்றவை. அண்மையில் சண்டிகருக்கு அருகே உள்ள ஒரு ஊரில் வசிக்கும் ஒரு பெண்மணியின் இல்லத்தைப்

---

* சீக்கியர்களில் ஒரு பிரிவினர், இவர்களில் மிகப் பெரும்பாலோர் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றனர்,



படிப்பகம்

www.padippakam.com

போலிசார் சூழ்ந்துக் கொண்டனர். அப்பெண்ணின் கணவர் போலிசால் ஏற்கனவே கொல்லப்பட்டிருந்தவர். அவரது மகன் தலைமறைவாகி விட்டான். அந்த அம்மாள் தனியாகத்தான் வாழ்ந்து வருகிறார். போலிஸ் அவரது வீட்டை கைப்பற்றியதுடன் நிற்காமல் அங்கேயே முகாமிட்டிருக்கிறது. ஊர் பஞ்சாயத்துக் கேட்டுக் கொண்டும்கூட போலிஸ் அவ்வீட்டை விட்டு அகல மறுத்துள்ளது. அந்த அம்மாளுக்கு கண நேர நிம்மதியில்லை. தனிமையில்லை. இது பற்றி ஆராய்ந்தறிய ஒரு உண்மை அறியும் குழுவை நாங்கள் அனுப்பவிருக்கிறோம். இது போன்ற பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன போராளிகளில்சிலர் கூட பாலியல் பலாத்காரத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆனால் இவ்வகைக் குற்றம் புரிந்தவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு படையினரும் போலிசும் தான்-

**கேள்வி:** காலஞ்சென்ற பிந்த்ரன்வாலாவின் தலைமையைப் பெண்கள் விரும்பி ஏற்றுக் கொண்டனர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் வரதட்சணை எதிர்ப்புப் போராட்டங்களை தீவிரமாக செயல்படுத்தினார் என்றும் கூறப்படுகிறது.

**பதில்:** பிந்த்ரன்வாலா இம்மாதிரி விஷயங்களில் ஆர்வங்காட்டியது உண்மைதான் பல போராளிக் குழுக்கள் கூட வரதட்சணை எதிர்ப்பு ஒழிப்புப் பணிகள், சாராய ஒழிப்புப் பணி, பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்புப் பணிகள் ஆகியவற்றை செயல்படுத்தி வந்துள்ளன. திருமணங்களின் போது ஆடம்பரச்செலவுகளைச் செய்யக் கூடாது என்றும் இவை கூறி வந்துள்ளன. ஆனால் சிலநேரங்களில் போராளிகள் அதிதீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுவதால், காரியம் கெட்டு விடுகிறது. சாராயம் விற்கும் ஏழையைக் கொல்வதால், சாராய இடைத்தரகர்கள் தங்களது தொழிலை விட்டுவிடப் போகிறார்களா என்ன? சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களை பரப்புவதும் செயல் படுத்துவதும் அவசியம் ஆனால் பலவந்தத்தின் மூலம் சமூக சீர்த்திருத்தங்களை கொண்டு வரமுடியாது. பிந்த்ரன்வாலா ஏழை விவசாயக் குடியைச் சேர்ந்தவர். பெரும் நிலமுதலைகளை எதிர்த்தவர். ஆனால் ஏமாற்றத்தையும் சூழ்ச்சி செய்வதையுமே தமது தொழிலாகக் கொண்டுள்ள தில்லி அரசியல்வாதிகளின் சூதுக்கு அவர் பலியாகிப்போனார். என்றாலும், முடிவில், வீரத்தியாகியாகவே உயிர் துறந்தார்.

*சீக்கிய சமயக்கருத்துக்கள் சாதியம்,தீண்டாமை அரசு ஒடுக்குமுறை ஆகியவற்றை எப்போதும் சாடிவந்துள்ளன, சீக்கிய சமயத்தை நிறுவிய குருநானக்கைப் பற்றிஒருகதை சொல்வதுண்டு; ஒரு முறை ஒரு நிலச்சுவான்தார் அவரைத் தனது இல்லத்துக்கு வந்து உணவு உட்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். ஆனால் நானக் அந்த அழைப்பை ஏற்கவில்லை ''நீ உண்ணும் உணவு உனது உழைப்பால் ஈட்டப்பட்டதல்ல. உன் வீட்டு உணவை நான் உட்கொண்டால் உனக்கு உழைத்துப் போடும் மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்தவன் என்றாகிவிடுவேன்'' என்று கூறி விட்டு ஏழை குடியானவர் வீட்டுக்குச் சென்று உணவருந்தினார். சீக்கியசமயம் சமூகநீதி, உழைப்பின் உன்னதம் ஆகியவற்றை என்றுமே உயர்த்திப் பிடித்துள்ளது. ஆனால், இன்றோ சீக்கிய சமயத்தின் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கைகள் கைவிடப்பட்டுள்ளன. பார்ப்பனர்கள் கெட்டிக்காரர்கள் அவர்களது மதத்தை எதிர்த்தவர்களே அவர்களது பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொண்டு விட்டனரே...*

**கேள்வி:** ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு புதிய தலைமை உருவாவதற்கான அறிகுறிகள் ஏதேனும் தென்படுகின்றனவா?

**பதில்:** புதிய தலைமை ஒன்று கண்டிப்பாக உருவாகும். ஆனால் தற்போது அதற்கான அறிகுறிகள் மிகக்குறைவாகவே உள்ளன. நிலைமை இன்னும் கவலையூட்டுவதாகத்தான் உள்ளது. எனினும் ஒரு புதிய தலைமை உருவாகும் உருவாக வேண்டும். அது பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைமையாக இருக்க வேண்டும். அநீதிக்கும் ஒரு எல்லை உண்டுஅல்லவா? ஒடுக்குமுறையும் என்றாவது ஒரு நாள் முடிவுக்கு வரத்தானே வேண்டும்.

**கேள்வி:** இந்தியகூட்டமைப்புக்கான முன்னணி (Front for Federal India) என்று அமைப்புப் பற்றி நீங்கள் எப்படி அறிய வந்தீர்கள்?

**பதில்:** 1987 இல் திரு ஆனைமுத்து அவர்களை ஜலந்தரில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் சந்தித்தேன், அவருடன் முனைவர் மூர்த்தியும் இருந்தார். ஆனைமுத்துவை மீண்டும் 1990-91இல் சந்தித்தேன். பிறகு நான் கைதாவதற்கு 2மாதங்களுக்கு முன், அலிகார் முஸ்லிம் பல்கலைகழகத்தில் பணிப்புரிந்து வரும் முனைவர் மூர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு சென்று 'கூட்டமைப்புக் கொள்கை'ப் பற்றி உரையாற்றினேன். இந்தத் தொடர்புகளும் நட்புகளுமே இம்முன்னணியில் நான் ஆர்வங் கொள்ளக் காரணமாயிருந்தன.

**கேள்வி:** இன்று தன்னுரிமைப் போராட்டத்தின் அவசியம், கூட்டாட்சியின் முக்கியத்துவம்



படிப்பகம்

www.padippakam.com

என்பன போன்ற கருத்துக்கள் பல்வேறு இடங்களில் பேசப்பட்டு வருகின்றன. ஒரு உண்மையான. கூட்டாட்சி அரசியல் சூழலை, அரசியல் கூட்டாட்சிக்கான சாத்தியப்பாடுகளை நாம் உருவாக்க விரும்புகிறோம். ஆனால், வட்டார அளவில், நமதுகுறிப்பிட்ட மொழி-பண்பாட்டுப் பகுதிகளில் 'தில்லிதர்பாரி'ன் ஒற்றையாட்சித் தத்துவத்தை நாம் மறு உற்பத்திச் செய்யாது இருக்கவேண்டும் அல்லவா? அவ்வாறு நமது பகுதிகளில் ஒரு ஒடுக்கும் தேச அரசை, குறிப்பிட்ட பகுதியில் ஆதிக்கஞ் செலுத்தும் சாதியினரின் நலன்களைக் காக்கும் அரசை நாம் உருவாக்கிவிடக்கூடாதல்லவா? ஒரு பார்ப்பனரல்லாத, கூட்டாட்சி இந்தியாவைத்தானே நாம் உருவாக்க விரும்புகிறோம்...

பதில்: சட்டரீதியான கண்ணோட்டத்தில் இப்பிரச்சனையை நாம் ஆராயத்தலைப்பட்டால், மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதையும், மத்திய அரசு 2 அல்லது 3துறைகளை மட்டும் தனது ஆளுகையின்கீழ் வைத்திருப்பதுதான் முறையானது' இம்மாதிரியான கூட்டாட்சி அரசுகள்தான் அமெரிக்கா,கனடா போன்ற பல் தேசிய இனநாடுகளில் காணப்படுகின்றன. இந்தியாவை எடுத்துக் கொண்டால், அது என்றுமே ஒரு தேசமாக விளங்கியதில்லை முகலாயர்கள் ஆங்கிலேயர்கள் போன்றவர்கள் இந்நாட்டின் கணிசமான பகுதிகளை தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த போது மட்டும் இங்கு ஏதோவொரு 'ஒற்றுமை' சாத்தியப்பட்டது. 'இந்தியா' என்ற பெயர் எப்போதும் வழங்கி வந்த ஒன்றல்ல. ஆங்கிலேயர்தான் இந்தப் பெயரைக்கொண்டு நம்மை அழைக்கத் தொடங்கினர். முகலாயர்கள் இந்தப்பகுதியை 'இந்துஸ்தான்' என்றே குறிப்பிட்டு வந்தனர். என்னைப் பொறுத்தவரை, இந்தியா ஒரு தேசமல்ல. மாறாக அல்லது பல தேசங்களை உள்ளடக்கிய ஒரு ஒன்றியம் தான் (Union of Nations) இங்கு தமிழர்கள் ஒரு தேசமாக அமைகின்றனர். பஞ்சாபில் மற்றொரு தேசமாக விளங்குகின்றனர். வங்காளம் வேறொரு தேசமாக விளங்குகிறது... இந்தத்துணைக் கண்டத்தில் இருந்த அனைத்து நிலப்பரப்புகளுக்கும், இன்றைய பாகிஸ்தான்,மயன்மார் (பர்மா)உட்பட்ட பல்வேறு வகையான நிலப்பரப்புகளுக்கும் 'இந்தியா' என்ற பெயரை வெள்ளையர் வழங்கினர்.

கூட்டாட்சிக் கொள்கையின்படி, மத்திய அரசு மூன்றே மூன்று துறைகளில் மட்டுமே அதிகாரங்களைப் பெற்றிருக்கும் அவையாவன; பாதுகாப்பு, வெளி உறவு, தகவல் தொடர்பு துறைகள். ஏனைய அதிகாரங்கள் மாநில அரசாங்களுக்கு உரியவையே. மத்திய அரசும், மாநில அரசுகளும் தாம் அதிகாரம் வகிக்கும் துறைகளில் இறையாண்மை பெற்று விளங்கும். இவ்விரு அரசுகளும் தமது அதிகார எல்லைகளை மீறி ஒருவர் துறையில் மற்றொருவர் புகுந்து தலையிடக்கூடாது ஒரு உண்மையான கூட்டாட்சியமைப்பில், தத்தம் துறைகளுக்குரிய நிர்வாகிகளை அந்தந்த அரசுகள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் இந்தியாவில், 1947க்குப் பிறகும்கூட இக்கூட்டாட்சிக் கொள்கைக் கடைப்பிடிக்கப்படவில்லை. இந்திய ஆட்சித்துறை (IAS) இந்தியக் காவல் துறை (IPS) ஆகியவற்றுக்கான பணியாளர்கள் மத்திய அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில அரசுகளின் மேல் திணிக்கப்படுகின்றனர் ஒரு உண்மையான கூட்டாட்சியில் இப்பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மாநில அரசுகளே அல்லது நாட்டின் அலகுகளே. பெற்றிருக்கும். ஆட்சித்துறை, காவல்துறை அதிகாரிகளை அமர்த்தும் உரிமை மாநில அரசுகளுக்கு வழங்கபட்டிருந்தால் இத்துறைகளில் இப்போது காணப்படும் உயர்சாதி ஆதிக்கம் ஏற்பட்டிருக்காது. நீதித்துறை மாநில அரசின் அதிகாரத்துக்குட்பட்டது என்றாலும், உயர்நீதி மன்ற நீதிபதிகளை மத்திய அரசுதான் நியமித்து வருகிறது. மாநிலங்களுக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டால் அமர்த்தப்படும் நீதிபதிகளில் முக்கால் வாசிப் பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருப்பர்.

குறிப்பிட்ட மொழிப் பகுதியைச்சேர்ந்த ஆதிக்க சாதியானது சிறுபான்மையின் மக்களை ஒடுக்கக்கூடிய சாத்தியப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். சட்டத்தில் அவர்களுக்குரிய பாதுகாப்புகளை நாம் ஏற்படுத்தித் தரலாம். ஆனால் ஒரு உண்மையான கூட்டாட்சி நிலவும் சமுதாயத்தில், ஒவ்வொரு மொழிப் பகுதியிலும் பார்ப்பனர்கள்தான் சிறுபான்மையினராக இருப்பர். அவர்கள்தான் சிறுபான்மையினருக்கு நாம் வழங்கக்கூடிய பாதுகாப்புகளுக்கு உரிமை கொண்டாட வருவர்! எந்தவொரு மொழிப் பகுதியிலும் அவர்கள் பெரும்பான்மையாக இல்லை பிற்படுத்தப்பட்ட. தாழ்த்தப்பட்ட மக்கள்தானே பெரும்பான்மையில் உள்ளனர்...

**கேள்வி:** நாங்கள் தேசியச் சிறுபான்மையினரையும், மதச் சிறுபான்மையினரையும் மனத்தில் வைத்துக்கொண்டுதான் இக்கேள்வியை கேட்டோம். எ.காட்டாக, பஞ்சாபில் வசிக்கக் கூடிய இந்துக்களின் நிலை......

பதில்: பஞ்சாபிய இந்துக்களைப் பொறுத்தவரை, அவர்களில் உயர் சாதியினராக உள்ளவரிடம்தான் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் பார்ப்பனர்களும் பனியாக்களும்தான். அவர்கள் பஞ்சாபி மொழியை எதிர்ப்பவர்கள். பஞ்சாபிப் பண்பாட்டு



படிப்பகம்

www.padippakam.com

டன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாதவர்கள். சண்டிகர் பஞ்சாபுடன் இணைவதை விரும்பாதவர்கள். மாநிலஅரசுக்கு அதிக அதிகாரங்கள் வாய்க்கப் பெற்றால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்கள் அவர்கள்தான். ஆனால் அவர்கள் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். அம்மாதிரியான சூழ்நிலைமை ஏற்பட்டால் (மாநில அரசாங்கத்திற்கு அதிக அதிகாரம் கிடைத்துவிட்டால்) உடனே நம் பக்கம் சாய்ந்துவிடுவர் ஆளும் வர்க்கத்தை எப்போதும் சார்ந்து நிற்பவர்கள்தானே அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் கடைசியாகக் கொண்டு வரப்பட்ட பகுதிதான் பஞ்சாப். 1849இல்தான் அது பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதியாயிற்று அப்போது பார்ப்பனர்களும் பிற உயர்சாதியினரும் ஆங்கிலம் கற்கத் தலைப்பட்டனர். அதற்குமுன் பாரசீகம் உருது போன்ற முந்தைய ஆட்சியாளர்களின் மொழிகளைக் கற்று வைத்திருந்த அவர்கள் ஆட்சி கைமாறியதும் அதற்குத் தக்கபடித் தங்களை மாற்றிக் கொண்டனர்.

தென்னிந்தியாவில் வரலாற்று ரீதியாகவே பார்ப்பனியம் மேலாண்மை செலுத்தி வந்துள்ளது என்று அறியவந்தேன். பஞ்சாப்பில் பார்ப்பனியத்துக்கு அவ்வளவு செல்வாக்கு இல்லை. சீக்கியர் சமயக் குருக்களின் கருத்துக்கள் ஏற்படுத்திய தாக்கத்தால் தீண்டாமைக்கூட அந்தளவுக்கு அங்குக் காணப்படுவதில்லை. கோயில்களுக்கு பஞ்சாப்பில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. சீக்கியர் சமயம் பெற்றிருக்கும் செல்வாக்குதான் அதற்குக் காரணம். அச்சமயம் தொடர்ந்து அரசு ஒடுக்குமுறையை முகலாயர் காலந்தொட்டு எதிர்த்து வந்துள்ளது. மேலும் ஒடுக்குமுறைக்கு எதிரான இயக்கங்களில் பல அமிர்தசரஸ் பொன் ஆலயம் போன்ற இடங்களிலிருந்துதான் தொடங்கின. எனவே குருத்வாராக்களின் செல்வாக்கும் பெருமையும் வளரவளர கோயில்களுக்கிருத்த முக்கியத்துவம் குறைய தொடங்கியது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குருத்வாராக்களிலும்கூட பார்ப்பன புரோகிதர்கள் நியமிக்கப்பட்டனர். எனவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், குறிப்பாக 1920களில், ‘குருத்வரர் விடுதலை இயக்கம்’ ஒன்று தொடங்கப்பட்டது. பார்ப்பனக் கட்டுப்பாட்டிலிருந்த குருத்வாராக்களை மீட்டெடுத்து, அங்குப் புகுத்தப்பட்டிருத்த தீண்டாமை கொள்கையை முறியடிப்பதே அவ்வியக்கத்தின் குறிக்கோள். ஆங்கிலேயர்களால் அமர்த்தப்பட்ட பார்ப்பன ‘பகந்து’கள் (Mahants) தாழ்த்தப்பட்ட மக்கள் குருத்வாராவுக்குள் நுழையக்கூடாது, அங்கு வழிபடக்கூடாது என்று கூறி வந்தனர். ஆனால், பொதுவாகச் சொல்லப்போனால், பஞ்சாப்பில் பார்ப்பனியம் ஏறக்குறைய முறியடிக்கப்பட்டுவிட்டது என்றே சொல்லவேண்டும்.

‘ப்ளூஸ்டார்’ நடவடிக்கை நிகழ்ந்தபோதும் அதற்குப் பிறகும் தொடுக்கப்பட்ட எதிர்வினைக்கு உந்துதலாய் அமைந்தது எங்களது எதிர்ப்புணர்வுதான் என்னைப்போன்றவர்களின் மனம் ஏன் அந்நடவடிக்கையினால் புண்படுத்தப்பட்டது? நான் அப்படியொன்றும் சமய ஆர்வங்கொண்ட நபர் அல்ல. சொல்லப்போனால் இடதுசாரி சிந்தனையுடையவன். ஆனால் அன்று என் போன்றவர்கள் மனம் வெதுப்பக் காரணம், அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் எங்களைப் பொறுத்தவரை வெறும் ஆலயம் மட்டுமல்ல, வெறும் செங்கல், சுண்ணாம்புக் கட்டிடம் மட்டுமல்ல. அங்குள்ள ஒவ்வொரு கல்லிலும் சீக்கியர்கள் தங்கள் சமயக் கொள்கைக்காக சிந்திய ரத்தம் உறைந்துப் போயுள்ளது. அந்த ஆலயம் 400 ஆண்டுகளுக்குமுன், குரு அர்ஜுன்தேவ் அவர்களால் கட்டப்பட்டது. அவர் முகலாயப் பேரரசன் ஜகாங்கீரால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அன்று முதல் இன்று வரை எல்லாப் பேரரசுகளும் அந்த ஆலயத்தின் செயல்பாடுகளில் தலையிட்டு வந்துள்ளனர். அத்தகைய அரசுகளை எதிர்த்துப் புறப்பட்ட இயக்கங்களும் அங்குதான் தொடங்கின. அஹமத்ஷா அப்தாலி என்ற வேற்றரசன் பொற்கோயிலை மூன்றுமுறை சூறையாடினான் அத்தகைய முக்கியத்துவம் பெற்ற தலம் அது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான இயக்கம் அங்குதான் உருவானது. இந்திய அரசியலமைப்புச் சபையின் சீக்கியப் பிரதிநிதிகள் இந்திய அரசியல் சட்டத்தில் கையெழுத்திட மறுத்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதற்குப் பிறகு பஞ்சாபி மொழி பேசும் மக்களுக்கான தனி மாநிலம் பெற போராட்டம் நடந்தது. அதுவும் இங்குதான் தொடங்கியது. அவசர நிலைச்சட்டம் பிறப்பிக்கப்பட்டபோது அதற்கான எதிர்ப்பும் இங்கு தான்வெடித்தது.

**கேள்வி: சீக்கியர்கள் இன்னமும் ராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனரா?**

**பதில்:** ஒரளவுக்கு, ஆனால் முன்போல பெரிய அளவில் இல்லை. அதுவும் குறைந்துகொண்டே வருகிறது.

**கேள்வி: பாபர் மசூதி தகர்க்கப்பட்டது சீக்கியர்களை பெருமளவுக்குப் பாதித்ததா?**

**பதில்:** ஒவ்வொரு சீக்கியனும் இதனால் பாதிக்கப்பட்டான்—பிரகாஷ்சிங்க் பாதலும் அவரது குழுவினரையும் தவிர, அப்போதும்கூட அவர்கள் பி. ஜே. பி. பக்கம்தான் நின்றனர். மசூதியை தகர்ப்பதற்கான ஒரு ‘திருப்பணி’க்குழுவை அவர்கள் அயோத்திக்கு அனுப்பி வைத்தனர். மசூதி தகர்க்கப்பட்டதற்காக ஒவ்வொரு குடிமகனும் வருந்தவேண்டும். எந்தவொரு வழி



படிப்பகம்

www.padippakam.com

பாட்டுத்தலம் தகர்க்கப்பட்டாலும் அது இந்தியா தகர்த்தப்படுவதற்கான ஒரு குறியீடுதான்

மசூதி தகர்க்கப்பட்டதன் காரணமாக உண்டான விளைவுகளிலிருந்து பி. ஜே. பி இன்னும் மீண்டு வரவில்லை அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்கள் இதற்குச் சான்று ஒரு வேளை அந்த துர்விளைவுகளே அவர்கள் செல்வாக்குக் குறைய காரணமாக விளங்கக்கூடும். ஆனால் நான் ஏற்கனவே கூறியதுபோல் பார்ப்பனர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். இதோ பாருங்கள் (28—12—93 தேதியிட்ட இந்து நாளேட்டில் வந்துள்ள ஒரு செய்தியை சுட்டிக் காட்டுகிறார்.); 'ஐவிட்னெஸ்' என்ற வீடியோ கம்பெனியார் நடத்திய ஒரு வாக்கெடுப்பின்படி இந்தியாவின் நான்கு பெரு நகரங்களில் வாழ்பவர்களில்பெரும்பான்மையினர் சர்வாதிகார ஆட்சியை விரும்புகின்றனராம். இத்தகைய வாக்கெடுப்புகள் மூலம் வெளிப்படும் 'உண்மை' எத்தகையது என்பதை நாம் எளிதில் தோலுரித்துக் காட்டிவிடலாம். ஆனால் அதுவல்ல பிரச்சனை.

**கேள்வி:** கான்ஷிராம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவரது பகுஜன் சமாஜம் பற்றிய உங்கள் கணிப்பு என்ன? அவருக்குப் பஞ்சாப்பிலிங்கூட ஆதரவாளர்கள் இருக்கின்றனர்.

**பதில்:** ஆம் பஞ்சாப்பில் தாழ்த்தப்பட்ட மக்கள் அவரது கட்சியைத்தான் ஆதரிக்கின்றனர். அவர் பஞ்சாப்பின் ரோப்பா மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான்.

**கேள்வி:** தேசிய தன்னுரிமைப் போராட்டம் பற்றி குறிப்பாக பஞ்சாப்பின் தன்னுரிமைப் போராட்டம் பற்றி அவர் கருத்து தெரிவித்திருக்கிறாரா?

**பதில்:** இந்தப் பிரச்சனையில் இதுவரையில் அவர் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை அந்தப்பேச்சை எடுக்கத் தயங்குகிறார் போலும் ஆனால் ஏன் என்று தெரியவில்லை, ஆனால் அவரும் முலாயம் சிங் யாதவும் இணைந்து செயல்படுவதைப்பொறுத்திருந்துப்பார்ப்போம். உ.பி.இல் அவர்களது ஆட்சி வட மாநிலங்கள் அனைத்தும் பின்பற்றக்கூடிய ஒரு நல்ல முன் உதாரணமாக அமையவேண்டும். கடந்த இரண்டு, மூன்று கால அனுபவங்களிலிருந்து முலாயம் நிறைய கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் சீரியமுறையில் ஆட்சி நடத்துவார் என்று நம்பகிறேன். நமது நம்பிக்கை வீண்போகாமல் இருக்கவேண்டும். அப்படி அந்நம்பிக்கை வீண்போகும் வகையில் ஏதேனும் நடந்தால் நமக்கு அதைவிடப் பெரிய இழப்பு, அவலம் வேறொன்றுமிருக்க முடியாது. பார்ப்பனியம் தனது காலம் முடிந்து போகப் போவதை நன்கு அறிந்து கொண்டுவிட்டது. பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் கரம் ஓங்கத் தொடங்கியுள்ள இந்த வேளையில் தனது அதிகார வரம்பினைக் கட்டிக்காக்க இத்தகைய கட்டுக்கதைகளை அது புனையத் தலைப்பட்டுள்ளது. இந்தவொரு சூழலில் முலாயம்சிங்யாதவ் கான்ஷிராம் ஆகியோரிடத்து வரலாறு ஒரு மாபெரும் பொறுப்பை ஒப்படைத்துள்ளது. அவர்கள் அப்பொறுப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படவேண்டும்.

○○

---



## நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு

**இதழ். 1 சனவரி—1994**

**நிறப்பிரிகை அளவில் சுமார் 70 பக்கங்களில்... விலை ரூ 12/- நிறப்பிரிகை கிடைக்கும் இடங்களில் கிடைக்கும்.**

**இந்த இதழில்...**

- தமிழ்க் கவிதை பற்றி மூன்றாம் உலகக் கண்ணோட்டம் —கலாநிதி சுரேஷ் கனகராஜா
- புதுஅரங்கமா அல்லது மாற்று அரங்கமா —அ. இராமசாமி
- நமது உதடுகள் ஒன்றாகப் பேசும் போது... —லூசி எரிசாரே
- உடலின் உயர்வு—உடலின் அழிவு—சப்தங்களும், நிசப்தங்களும் (நாக்-அவுட் சினிமா விமர்சனம்) —ரவிக்குமார்
- ஒழுங்க மைத்தல்—மீறல்—பாலியல் கதைகள் —அ. மார்க்ஸ்
- டொப்ரிஞ்சா முற்றுகையின் பத்தொன்பதாவது நாள் —நெழாத் இப்ரிசி மோவிச்
- சாவித்ரி புலே ஜோதிபா புலேக்கு எழுதிய கடிதம்
- தமிழ்இலக்கியப் பாரம்பரியத்தில் சாதி எதிர்ப்புக் குரல்கள் —பொ. வேல்சாமி-அ. மார்க்ஸ்


---



படிப்பகம்

www.padippakam.com

# தலித்களும் டங்கல் அறிக்கையும்

## இரண்டு கட்டுரைகள்

1 டங்கல் திட்டமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் —கெயில் ஓம்வேத்
2 தலித்களுக்கு ஆதரவாக பன்னாட்டு நிறுவனங்கள்! —எஸ். சி.

தமிழில் தஞ்சை நா. ரமேஷ்– ப. ஸ்ரீதர்

அம்பேத்கர்—பூலே போன்றோரின் சிந்தனைகளை முதன்மைப்படுத்தி இந்தியப் புரட்சியில் சாதி எதிர்ப்பின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வருபவர் தோழர் **கெயில் ஓம்வேத்.** டங்கல் அறிக்கை குறித்து ஒரு மாறுபட்ட கருத்தை அவர் முன் வைக்கிறார் கெயில் முன்வைக்கும் கருத்துக்களில் நமக்குப் பல கேள்விகள் உள்ள போதும் விவாதத்திற்காக அவரது கட்டுரையையும், அதற்கு மறுப்பாக எழுதப்பட்ட தோழர் எஸ். சி. அவர்களது கட்டுரையையும் முன் வைக்கிறோம். தோழர்கள் விவாதத்தில் பங்கு பெற வேண்டுகிறோம்.

நன்றி: ப்ரான்டியர்—மே 15, '93; மே 22, '93, ஆக 21, '93; ஆக 28, '93.

**கட்டுரை-1.**

## டங்கல் திட்டமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும்

**—கெயில் ஓம்வேத்**

விவசாயிகள் டெல்லியில் இரண்டு பேரணிகளை நடத்தினார்கள். ஒரு பேரணி 'டங்கல் திட்டம் 'நவீன காலனியாதிக்கமே' என்று எதிர்ப்புக் குரல் எழுப்பியது. மற்றொரு பேரணியோ 'சுதந்திரத்திற்கான விவசாயிகள்' என்று தன்னை சித்தரித்துக்கொண்டு சந்தை தாராளமயமாக்கத்தை வரவேற்றது; வர்த்தகம் மற்றும் சுங்கவரிக்கான பொது ஒப்பந்த (General Agreement on Trade and Tariffs-Gatt) பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வருவது விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என்றும் கூறியது. இவ்வாறு இரண்டு பேரணிகள்/இயக்கங்களால் எதிரும், புதிருமான நிலை எடுக்கப்படும் வேளையில் 'டங்கல் திட்டம்' குறித்த சில விவாதங்களை மறுபரிசீலனைசெய்வது அவசியமாகிறது.

விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழுவைச் (Kisan Coordination Committee) சேர்ந்த **சரத்ஜோஷீ, புபேந்திரசிங்மான்** ஆகியோர் தலைமையிலான இரண்டாவது பேரணி தான் பெரியதாக இருந்தது. இந்தப்பேரணியில்தான் பெண்கள் அதிக அளவில் திரண்டிருந்தனர். கூட்டத்தில்பேசியவர்களில்பெண்கள் இருந்ததும் இந்தப் பேரணியில்தான். குறைந்த இடுபொருளுடன் கூடிய நிலைத்த வேளாண்மைக்கான (Low-input Sustainable Agriculture) நடைமுறைத்திட்டத்தை கொண்டிருக்கும் **சேத்காரி சங்கதனா** போன்ற விவசாய அமைப்புகள் கலந்து கொண்டதும் இரண்டாவது பேரணியில் தான். இவ்வளவு இருந்தும் முதல் பேரணிதான் டெல்லி அறிவுஜீவிகளின் ஆரவாரமிக்க ஆதரவைப் பெற்றிருந்தது 'டங்கல் திட்டத்திற்கு' எதிர்ப்பு என்பது இடதுசாரி, முற்போக்கு அறிவு ஜீவிகளின் முடிந்த முடிவாகிவிட்டது. எனவே தான் இந்த எதிர்ப்பு குறித்து கேள்வி கேட்பது கூட ஏகாதிபத்திய ஆதரவு நிலை என்ற உணர்வை உண்டாக்குவதாக இருக்கிறது. எனினும் ஆரம்பத்திலிருந்தே இந்த டங்கல் எதிர்ப்பு குறித்து எனக்கு கேள்விகள் இருந்தன, அதாவது 1992- ஜனவரியில் இடதுசாரி கட்சிகளும், தன்னார்வ குழுக்களும் டங்கலுக்கான எதிர்ப்புநிலை எடுக்க ஆரம்பித்தபோதே கேள்விகள் இருந்தன. கட்டமைப்பு ரீதியிலான சீரமைப்பினால் (Structural Adjustment) மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்படும் சீரழிவுகளைப்பற்றிய விவரங்களை வெளியிடும் இந்த தன்னார்வகுழுக்கள் (இவைகளில் பல வெளிநாட்டு நிதியில் கொளிப்பவை), கட்டமைப்பு ரீதியிலான சீரமைப்பால் (அதாவது உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தை முடிவுகள் அமல்படுத்தப்பட்டால்), இந்த அமைப்புகளுக்கு நிதிதரும் ஐரோப்பிய) நாடுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து மூச்சுகூட விடுவதில்லை.

எதிர்ப்பு எழுப்பப்பட்ட முறையாலேயே எனது பல கேள்விகள் உருவாகின. உதாரணத்திற்கு **லோக்விதியான் சங்கதனா** என்ற அமைப்பு, முதன்முதலில் மராத்தியில் வெளியிடப்பட்டதனது பிரசுரத்தில், 1970- ம் வருடத்திய காப்புரிமைச்



படிப்பகம்

www.padippakam.com

சட்டத்தால் தான் நாம் அணு சக்தி உற்பத்தி செய்ய முடிந்தது, நமது சொந்தபூச்சி கொல்லி களை உருவாக்கியதன் மூலம் பசுமைப்புரட் சியை சாத்தியமாக்க முடிந்தது என்றெல்லாம் வாதிட்டது, அணுசக்தி ஒட்டுமொத்தமாகவோ அபாயகரமானது என்றும், அதற்கு மாற்று உருவாக்கப்படவேண்டும் என்றும் நம்புகிறவர் களில் நாங்களும் உண்டு. அதேபோல பசுமைப் புரட்சி தொழில்நுட்பம் இயற்கைச் சூழலுக் கும், உடல்நலத்திற்கும் பெரும் தீங்கு விளை வித் திருப்பதாகவும் நாங்கள் நம்புகிறோம்.

1970—ம் வருடத்திய இந்திய காப்புரிமைச் சட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட முதல் இரண்டு பூச்சிகொல்லிகள் டி.டி.டி. (DDT) மற் றும் பி ஹெச். சி (B'H'C) என்று எதிர்ப்பாளர் களின்தலைவர்களில் ஒருவரான பி கே கெய்லா தனது கட்டுரையில் எழுதியிருந்தது (பார்க்க, B.K. KEAYLA in Colloquium on Foreign Trade, GATT & Third world Development P-115) எனது கேள்விகளை மேலும் ஆதிகரித் தது. இந்த பூச்சிகொல்லிகள் மிக அபாயகரமா னவற்றில் சிலவாகும், இவை மேற்கத்திய நாடு களில் சிலபத்தாண்டுகளுக்கு முன்பே தடைசெய் யப்பட்டவை. இவை இப்போது இந்தியாவிலும் தடை செய்யப்பட்டிருந்தாலும், இன்றும் அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டுவருகின் றன எனவே டங்கல் திட்ட எதிர்ப்பு அணிக்கு மாற்று தொழில் நுட்பம், மாற்று வளர்ச்சிக்கான தேவையைப்பற்றிய பார்வை இல்லை என்பது எனக்கு தெள்ளத் தெளிவானது. அவர்களின் வாதம் வெளிநாட்டு விஷத்திற்கு, சுதேசி விஷமே பரவாயில்லை என்தே என்றும் தெரிய வந்தது.

மேலும் பலகேள்விகள் எழுந்தன. டங்கல் திட்ட எதிர்ப்பு அணியினர் வர்த்தகம், விவசாயம், மான்யங்கள் மற்றும் உற்பத்தி விலையை விட குறைந்த விலையில் சர்வதேச சந்தையில் பொ ருள்களை குவிப்பது (Dumping) போன்றவை குறித்து எதுவுமே பேசவில்லை, காப்புரிமை மற் றும் அறிவுசார் சொத்துரிமை குறித்து மட்டுமே பேசினர், வர்த்தகம் சம்பந்தமானவை குறித்து ஒன்றுமே இல்லையா? வர்த்தகம், விவசாயம் குறித்த அவர்களது வாதமெல்லாம் ''டங்கல் திட்டம் நமது விவசாயிகளுக்கு மான்யம்வழங்கு வதை தடைசெய்கிறது'' என்பது மட்டும்தான் டங்கல் அறிக்கையை படித்து, தர்க்கரீதியில் இவ்விஷயத்தை அணுகினால் இவர்களது வாதம் நடைமுறையில் நேர்மையற்றதாகவே தோன்றுகிறது, வளரும் நாடுகள் உணவு பாது காப்புக்காக (Food Security) மான்யம் வழங்குவதற்கு டங்கல் திட்டம் சலுகை தருகிறது பெரும்பாலான ஆய்வறிக்கைகளின் முடிவுகள் காட்டுவதுபோல, மற்ற மூன்றாம் உலக நாடு களைப்போலவே, இந்தியாவும் தனது விவசா யிகளுக்கு மான்யம் வழங்குவதில்லை, மாறாக விவசாயத்திலிருந்து நிதி ஆதாரங் களை சுரண்டி எடுத்து உரத்திற்கும், பொது விநியோக முறையில் வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்கும் தான் மான்யம் வழங்கு கிறது. உரமான்யம் உரக்கம்பெனிகளுக்கு தான் லாபம் தருகிறது; ஐரோப்பா, அமெரிக்கா ஜப்பான் போன்றவைதான் தமது விவசாய விளைபொருள் ஏற்றுமதிக்கு மிக அதிகமாக மான்யங்கள் வழங்குகின்றன டங்கல் திட்டமும் உருகுவே சுற்றுப்பேச்சுவார்த்தையும் அந்த நாடுகள் ஏற்றுமதி மான்யங்களை நிறுத்து வதற்கு வழிகோலும், இது மூன்றாம் உலகவிவ சாயத்திற்கு நன்மைபயப்பதாகவே அமையும் டங்கல் திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு உண்மை யிலேயே இது தெரியதா? இந்தியா விவசாயத் திற்கு மான்யம் வழங்குவதாக அவர்கள் நம்பு கிறார்களா? சொல்லப்போனால் டங்கல்திட்டத் தை எதிர்ப்பவர்களில் ஒருவரான அபர்ணாவிஸ் வநாதன் என்பவர்பொது விநியோகமுறைக்காக விவசாயிகளுக்கு சந்தை விலையை விட குறை வாக கொடுத்து விளைபொருள்களை வாங்கு வதை டங்கல்திட்டம் தடை செய்யும் என்று எழு தினார் (அபர்ணா விஸ்வநாதன் டைம்ஸ் ஆப் இந்தியா செப்-14, 1992), இது உண்மைதான். விவசாயிகள் டங்கல் திட்டத்தின் இந்தவிதியை எதிர்ப்பார்களா? இந்த விதிக்கு அபர்ணா விஸ் வநாதன் ஆட்சேபம் தெரிவிப்பதானது, மூன்றாம் உலக மேட்டுக்குடியினர், மூன்றாம் உலகவிவசாயிகளை அடிமைப்படுத்துவதை தடுப்பதன் மூலம் டங்கல்திட்டம் மேட்டுகுடி யினரை அடிமைப்படுத்துகிறது என கூறு வதற்கு ஒப்பாகும் அல்லவா?

விதை மற்றும் காப்புரிமை பிரச்சினை குறித்து என்ன? நமது விவசாயத்தை பன்னாட்டு நிறு வனங்கள் கைப்பற்றிவிடும்' அவை நமது விவ சாயிகள் விதைகளை தமது விளைச்சலிலிருந்து சேமித்து வைப்பதை அனுமதிக்காது என டங்கல்திட்டத்தை எதிர்ப்பவர்கள் கூக்குரலிடு கிறார்கள் டங்கல்திட்டத்தை படிக்காதவர் கள் அல்லது விவசாய உற்பத்தி முறையைப் பற்றி தெரியாதவர்களே இத்தகையவாதத்தை முன்வைக்க முடியும் என்று தோன்றுகிறது. முத லாவதாக பாரம்பரிய விதை வகைகளுக்கு காப் புரிமை பெறமுடியாது (தொழில்துறை உபயோ கத்திற்காக மாறுதல்கள் செய்யப்பட்டவற்றிற் கே காப்புரிமைபெறமுடியும்) எனவே பாரம்பரிய விதைகளை உபயோகிப்பவர்கள் அவற்றை தொடர்ந்து உபயோகிக்க முடியும்.

இரண்டாவதாக தற்போது வீரியவிதைகளை உபயோகிக்கும் விவசாயிகள் பொதுவாக ஒவ் வொரு வருடமும் புதுவிதைகளை வாங்க வேண்



படிப்பகம்

www.padippakam.com

டியிருக்கிறது. ஆனால் இதற்கு காரணம் அவை காப்புரிமை பெற்ற விதைகள் என்பதல்ல, வீரிய விதைகள் இரண்டாவது தலைமுறையில் தமது உற்பத்திதிறனை இழந்துவிடுவதே இதற்கு காரணமாகும். வீரியவிதைகள் உற்பத்தி செய்யப்படும் தொழில் நுட்பத்தினாலேயே இந்த உற்பத்தி திறன் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிகழ்வுகளை காப்புரிமை பாதிக்காது.

இந்தியாவில் எற்கனவே தனியார்துறையிலும் பொதுத்துறையிலும் விதை நிறுவனங்கள் உள்ளன. இத்துறையில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவது மேலும் போட்டியை உருவாக்குவதால் அதிகமான விதை ரகங்கள் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேர்ந்தெடுக்கும் அறிவும் உண்டு. ஐரோப்பிய, அமெரிக்க அரசுகளும், முதலாளிகளும் பாரம்பரிய ரகங்களை கொள்ளையடித்தனர் என்பதுஉண்மைதான். இந்தியா தனது சொந்த விதை ரகங்களை பாதுகாப்பதும் உருவாக்குவதும் இந்தியவிவசாயியும், இந்திய நிறுவனங்களும் தாம் உருவாக்கும் புதிய ரகங்களுக்கு காப்புரிமை (Patent) பெறுவதை உறுதி செய்வதுமே இதற்கு தீர்வாகும் (காப்புரிமைகளின் காலம் 20வருடங்கள் என்பதில்லாமல் 5 அல்லது 7 வருடங்களாக இருக்க வேண்டும். அது வேறு விஷயம்).

இதுபோன்ற பிரச்சினைகள் குறித்து கேள்விகள் கேட்பது (டங்கல் திட்டத்தை) எதிர்ப்பவர்களுக்கு பிடிப்பதில்லை. பெங்களூரில் ஒருகருத்தரங்கம் நடைபெற்றது, 'இளம் விஞ்ஞானிகள் அமைப்பின், பிரதிநிதி ஒருவர் பேசுகையில் ''டங்கல் திட்டத்தின் காப்புரிமை விதிகள் விவசாயி தனது சொந்த விதைகளை ஆராய்ச்சிக்காக உபயோகப்படுத்துவதை தடைசெய்கிறது, பன்னாட்டு நிறுவனங்கள் விதைத்துறையை பிடித்துவிட்டால், தாம் விற்கும் விதையின் விளைச்சலில் இருந்து விதை எடுத்து விவசாயி உபயோகிப்பதை தடுக்க பன்னாடடு நிறுவனங்களால் முடியும். ஏனெனில் தாம் அவ்வாறு குற்றம் செய்யவில்லை என நிரூபிக்கும் பொறுப்பு அந்த விவசாயிக்கே உள்ளது. இது குற்றம் சாற்றியவரே, குற்றத்தை நிரூபிக்கவேண்டும் என்பதை மாற்றி, குற்றம் சாட்டப்பட்டவரே தாம் குற்றமற்றவர் என வழிவகை செய்வதாகும்'' எனவாதிட்டார். அப்போது நான் ஒரு கேள்வியை எழுப்பினேன். ''நிருபணப் பொறுப்பை மாற்றுவது ஒருதீவிரமான சட்டதிருத்த நடவடிக்கை. டங்கல்திட்டத்தில் இதுகுறித்து நான் அறிந்தவரை (நான் அப்போது டங்கல் திட்டத்தை முழுமையாக படித்திருக்கவில்லை) 'செய்முறை காப்புரிமை' (Process patent) விஷயத்தில் மட்டுமே 'நிருபணப் பொறுப்பை' மாற்றுவது கூறப்பட்டிருக்கிறது'', என்று கூறினேன். அதற்கு அவர் ''இல்லையில்லை. இந்தப்பிரச்சினை நீங்கள கூறுவதைக் காட்டிலும் அதிகப்பரிமாணமுடையது என்றார். டங்கல் திட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்த விதிகளை 'நகல்' எடுத்து தருவதாக கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தவர்கள் என்னிடம் உறுதி கூறினார்கள். ஆனால் அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. மேலும் இவ்வாறு கேள்விகளை எழுப்பிய எங்களை கருத்தரங்கம் முடியும் வரை மீண்டும் பேச அனுமதிக்கவேயில்லை.

குறிப்பு: 'நிருபணல் பொறுப்பை மாற்றும்விதி செய்முறை காப்புரிமை (Process patent) விஷயத்தில் மட்டுமே செல்லுபடியாகும். அதாவது ஒருவர் உற்பத்தி பொருள் (Product) மற்றவர் உற்பத்தி செய்ததைப் போலவே இருக்கும் பட்சத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் தனது பொருள் வேறு செய்முறை (Process) மூலம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டும். இதனால் செய்முறை காப்புரிமை என்றபெயரில் மற்றவரின் உற்பத்தி பொருளைப் போலவே உற்பத்தி செய்வதை பெருமளவு தடுக்க உதவும்; மேலும் குற்றம் சாட்டுபவர், குற்றம் சாட்டப்படுபவருடைய உற்பத்தி பொருள், தனது உற்பத்திபொருளைப் போன்றதே (identical) என்பதையும் நிரூபிக்க வேண்டும். சிறிது சிந்தனையை உபயோகித்தாலே (நமது சொந்த ஆராய்ச்சி செய்வதை அவர்கள் தடுப்பார்கள் போன்ற கண் மூடித்தனமான விவாதங்களை எழுப்ப முடியாது எனத்தெரியும்.)

மேலும், டங்கல் திட்டத்திற்கான எதிர்ப்பும் கூட பார்ப்பனீய முறைகளிலேயே மேற்கொள்ளப்படுகிறது, மேலிருந்து கீழே திணித்தல், கேள்வி கேட்கும் முயற்சிகளை தடுத்தல் திரித்துக்கூறல், என்ற அனைத்து முறைகளும் பின்பற்றப்படுகின்றன. அரசாங்கம் 'டங்கல் திட்டத்தை) மிக ரகசியமாகவே வைத்துவிட்டது என குற்றச்சாட்டுகள் எழுப்பப் படுகின்றன. ஆனால் எதிர்ப்பாளர்களும் கூட முழுமையான 'டங்கல் திட்டத்தை' விநியோகிக்கவோ அல்லது அதன் சாரம்சங்களை நேர்மையாக தொகுத்தளிப்பதன் மூலம்இது குறித்துஅக்கறை கொண்டவர்கள் தங்களது கருத்துக்களை உருவாக்கி கொள்ளவோ முயற்சி எதுவும் எடுக்கவில்லை.

மிக ஆரம்பத்தில் மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் டெல்லியிலிருந்து கொண்டு வந்திருந்த டங்கல்திட்டம் குறித்த சிலபிரசுரங்களை, அவற்றில் 'டங்கல் திட்டத்தின் சாரம்சம் கொடுக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில் 50ரூபாய் கொடுத்து வாங்கினேன். ஆனால் அவற்றில் இருந்ததோ, டங்கல்திட்டம் குறித்த



படிப்பகம்

www.padippakam.com

பார்வைகளும், விமர்சனங்களும், டங்கல் திட்டத்திற்கெதிரான கூட்டங்கள் பற்றி தினசரிகளில் வந்த செய்திகளுமே. இதைப்பற்றிக் கேட்டபோது 'டங்கல் திட்டம் மிக நீளமான அறிக்கை. 500பக்கங்கள் கொண்டது' என்றோ 'அது முழுக்க சட்டமொழியில் உள்ளது. மக்களுக்கு புரியாது' என்றோ பதில் வந்தது. அதாவது சரியான முடிவுகள் அளவுக்கு மக்கள் படிக்காதவர்கள். எனவே மெத்தப்படித்தவர்கள் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இத்தப்போக்கு எதிர்ப்பின் பார்ப்பனீய அம்சத்தையே காட்டுகிறது. டங்கல்திட்டம் குறித்த கூட்டங்கள் இந்தியகல்வி முறையைப் போலவே நடக்கின்றன. அதாவது அதிகாரம் மிகுந்த ஆசிரியர்கள், புத்தகங்களுக்கு பதில் 'கோனார் நோட்ஸ்' ஆகியவை ஒருபுறம, மறுபுறம் ஒன்றுமே அறியாத மாணவர்கள் (அதாவது கட்சிகளின் ஊழியர்கள்). இவர்கள் தமக்கு சொல்லப்பட்டதை மனப்பாடம் செய்து எழுத்தறிவில்லாத மக்களிடம் ஒப்பித்து தமதுதலைவர் அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்வார்கள்.

ஏகாதிபத்தியம் 'டங்கல் திட்டம், இந்தியா போன்ற நாடுகளை காலனிகளாக்குவதற்கான அமெரிக்க ஏகாதிபத்தியம், மற்றும் உலகவங்கி சர்வதேச நிதிநிறுவனம் ஆகியவற்றின் முயற்சி ஆகும்.

மறு காலனியாதிக்கம் என்றஇந்த வரையறுப்பு (பிரம்மை என்றுதான் கூற வேண்டும்) தான், டங்கல்திட்டம் மற்றும், வர்த்தகம் மற்றும் சுங்கவரிக்கான ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களின் வாதங்களுக்கு அடிப்படையாக உள்ளது.

இந்த வரையறுப்பு லெனினியத்தின் அடிப்படையிலோ அல்லது வேறு அறிவியல் பூர்வமான பகுப்பாய்வின் அடிப்படையிலோ செய்யப்படவில்லை வெறும் கோஷங்களின் அடிப்படையிலேயே எழுப்பப்பட்டுள்ளது, ஏகாதிபத்தியத்திற் கெதிராகவோ, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கெதிராகவோ கோஷம் எழுப்புவதும், அவற்றை எதிர்த்து திறம்பட போராடுவதும் வெவ்வேறானவை. இந்திய அரசாங்கம் கடந்த நாற்பது வருடங்களாக 'ஏகாதிபத்திய எதிர்ப்பு'. 'பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிர்ப்பு', 'வறுமையை ஒழிப்போம்' என்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டு தான் மேல் தட்டு வர்க்க நலனைப்பிரதிபலிக்கும்,சுரண்டல் மிகுந்த தனது வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்ததே தவிர அது தனது கோஷங்கள்படி செயல்படவேயில்லை.

கடந்த சில பத்தாண்டுகளின் உலகப்பொருளாதாரத்தைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளை மீண்டும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகிறது முதலில், கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்த (சோசலிச வீழ்ச்சியால்' உலக அமைப்புகளையும், உலகபொருளாதாரத்தையும் தன் விருப்பத்திற்கேற்ப வளைத்துக் கொள்ளும் 'ஒரே வல்லரசாக' அமெரிக்கா மாறிவிடவில்லை. இன்றும் அதுமிகப்பெரிய ராணுவ இயந்திரத்தை பெற்றிருக்கிறது தான். அதனுடைய கொடூரமான ராணுவ வலிமை நேரடியாக இராக், லிபியா, கிரனடா போன்ற நாடுகளால் உணரப்படுவது மட்டுமல்லாமல், அதன் அச்சுறுத்தல்களுக்கும் குறைவில்லைதான். ஆனால் அதன் பொருளாதாரம் வீழ்ச்சிப் பாதையில் இருக்கிறது. உலகப்பொருளாதாரத்தில் அதன் பங்கு 1965-ல் 35·/. வீதத்திலிருந்து, 1990-ல் 24 /. வீதமாக குறைந்திருக்கிறது இதே காலகட்டத்தில் ஐரோப்பாவின் பங்கு30 . வீதத்திலிருந்து 36·/. வீதமாக உயர்ந்திருக்கிறது ஜப்பானின்பங்கோ 4·/. வீதத்திலிருந்து 13·/ வீதமாக உயர்ந்து விட்டது. வளர்ச்சியடைந்த தொழில் மய நாடுகள் மூன்று வல்லரசுகளாக பிரிந்துள்ளன. எனவே உலகம் ஒரே வல்லரசு கொண்டதாக மாறவில்லை. மூன்று வல்லரசுகளை கொண்டதாக மாறியிருக்கிறது.

மேலும் உலகப் பொருளாதாரத்தில் குறைந்த வருமானமுள்ள மற்றும் நடுத்தர வருமானமுள்ள (மூன்றாம் உலக நாடுகளின்) பங்கு இதே காலகட்டத்தில் 18.8./·வீதத்திலிருந்து 19.9./· வீதமாக சிறிதளவே வளர்ந்திருந்த போதிலும் இந்த குழுவில் உள்ள சிலநாடுகள் தங்கள் பங்கை இரட்டிப்பாக்கி உள்ளன. சிங்கப்பூர், ஹாங்காங், தென்கொரியா, தைவான் போன்றவை மட்டுமல்ல சீனாவைத் தவிர்க்க அனைத்து கிழக்கு ஆசிய நாடுகளும் உலகப் பொருளாதாரத்தில் தமது பங்கை இரட்டிப்பாக்கி உள்ளன.

மூன்றாம் உலகநாடுகளில் அரசுசார் [Statist] பொருளாதாரங்களை கொண்டிருந்த நாடுகளின் வளர்ச்சி மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவாகவே இருந்தது. அரசு சார் பொருளாதார நாடுகள் என்று இங்கு குறிக்கப்படுவை 'பன்னாட்டு நிறுவனங்களை' எதிர்ப்பதற்காக,

1. இறக்குமதிக்கு மாற்றாக(Import substitution] உள்நாட்டிலேயே இறக்குமதி செய்யப்படும் பொருள்களை தயாரிப்பதற்கான கட்டமைப்பு உருதாக்குதல்,

2. கனரகத் தொழிலை வளர்ப்பதற்காக விவசாயத் துறையையும், ஏற்றுமதி வாய்ப்புள்ள எளிய ரக தொழிலையும் பின் தள்ளுதல்,

3. பரவலான அரசு கட்டுப்பாடுகள், பெரும்பான்மை தொழில்களை அரசுடமையாக



படிப்பகம்

www.padippakam.com

வைத்திருத்தல், போன்ற நடவடிக்கைகளில் இறங்கிய நாடுகளாகும்.

மூன்றாம் உலகநாடுகளின் தொழில் வளர்ச்சி என்பது உண்மையில் 'சுதந்திரமான தொழில் வளர்ச்சியே' அல்ல, இந்நாடுகளில் உற்பத்தியில் ஈடுபடும் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சியே ஆகும் என ஃப்ராங்க், மேக்தோப் போன்ற நவீன மார்க்சிய இடதுசாரி பொருளாதார அறிஞர்கள் சிலசமயங்களில் வாதிடுவார்கள். ஆனால் பன்னாட்டு நிறுவனங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை நோக்கும் போது இந்தக் கூற்றும் தவறானதே என்று தெரிய வரும் உலகப் பொருளாதாரத்தில் நாடுகளின் பங்கைப் போலவே [GDP], பன்னாட்டு நிறுவனங்களின் சதவீதமும் இருக்கிறது. உலகின் முதல் 200 பன்னாட்டு நிறுவனங்களில் 1960-ல் 127ஆக இருந்த அமெரிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை, 1990-ல் 68ஆக குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் ஐரோப்பாவின் பங்கு 66லிருந்து 73 நிறுவனங்களாக உயர்ந்துள்ளது.

ஜப்பானின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கது. 1960ல் 5 நிறுவனங்களாக இருந்த ஜப்பானின் பங்கு 1990-ல் 40 நிறுவனங்களாக உயர்ந்துள்ளது. 1960-ல் முதல் 200 இடங்களில் ஒன்று கூட இல்லாதிருந்த மூன்றாம் உலக நாடுகளின் எண்ணிக்கை 1990-ல் 12ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 6 கொரிய நிறுவனங்கள்.

வேறுவிதமாக சொல்வதென்றால், உலக சுதந்திர சந்தை முறை கட்டமைப்புக்குள் 'மறு காலனியாதிக்கப் போக்குகள் நிலவுவதாக கூற முடியாது. பொருளாதார போட்டிகள் நிலவுவதைப்போலவே(வர்த்தககுழுமங்களில் (Trade blocks) உருவாக்கம் போன்று) ஐ. நா.சபை' 'காட், அமைப்பு, உலக வங்கி போன்ற உலக அமைப்புகளை யார் கட்டுப்பாட்டில் இயக்குவது என்பதற்கான போட்டியும் நிலவுகிறது.இந்த அமைப்புகளை அமெரிக்காதன்னிச்சையாக கட்டுப்படுத்துகிறது என்று சொல்ல முடியாது.மூன்றாம் உலகநாடுகளும்கூட, தமது எண்ணிக்கையினால் மட்டுமல்ல' பொருளாதார பலத்தாலும், (சைனாவும்இப்போது சேர முயற்சிக்கும், 'காட்' போன்ற அமைப்புகளில் சேர்ந்துவிட்டால்) இந்த அமைப்புகளின் நடவடிக்கைளிலும், முடிவெடுப்பதிலும் பெருமளவு பங்கெடுக்க முடியும். ஆனால் இது வரை இந்நாடுகள் நான்காவது ஏழைப்பங்காளியாகவே இருந்து வருகின்றன. மேலும் இம்மூன்றாம் ஒருங்கிணைந்து செயலாற்றுவதும இல்லை. பொருளாதாரம் பன்முகப்படுவதைப் போலவே, சர்வதேச அமைப்புகளின் சீர்திருத்தபிரச்சினையும் எழுப்பப்படவேண்டும். ஐ. நா பாதுகாப்பு சபையில் ஒருசில நாடுகளின் ஏகபோகத்தை எதிர்த்துப் போராடலாம். ஆனால் சீர்திருத்தம் (reform) செய்யப்பட வேண்டும் எனகோருவதும், அமைப்பையே கலைத்துவிட வேண்டும் என்பது வெவ்வேறானவை. பொது ஒப்பந்தம் (GATT) போன்ற அமைப்புகளை ஏகாதிபத்திய கருவிகள் என்று கூறுவது அந்த அமைப்புகளை சீர்திருத்துவது உள்ளிருந்தபடியே ஏகாதிபத்திய மேலாண்மையை எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றிற்கான முயற்சிகளை கைவிடுவதில் கொண்டுபோய்விடும்

**சீனம்**

சமீபகாலமாக இடதுசாரிகளிடையே சீனாவைப்பற்றிய கேள்விகளிலிருந்து ஒதுங்கும் போக்கு காணப்படுகிறது. 'சோசலிச சந்தை பொருளாதாரம்' என்பது ஒரு சாத்தியமான கருதுகோள்தானா இல்லையா?, தியானென்மின் சதுக்கத்தில் நடந்தது படுகொலையா? ஜனநாயகம் தேவையா? போன்ற கேள்விகளை மட்டுமல்ல அவர்கள் ஒதுக்கியது. சந்தையை நோககிய எந்தவித திருப்பத்தையும்,எந்த வொரு 'புதிய பொருளாதாரக் கொள்கையையும்' இடதுசாரிகள் எதிர்க்கிறார்கள். சீனா தனது புதிய பொருளாதாரக் கொள்கையை (ராவ்/மன்மோகனின் புதிய பொருளாதாரக் கொள்கையுடன் குழம்பிக் கொள்ளக் கூடாது) வகுத்து, வெற்றிகரமாகச் செயல்படுத்துவதும் இந்திய இடதுசாரிகளுக்கு தர்மசங்கடமான நிலையை உண்டாக்கியிருக்கிறது. அரசு/ஆணை பொருளாதாரத்தின் எந்த ஒரு பகுதியையும் கைவிட்டால் நேரும் கதியை சுட்டிக்காட்ட இருக்கவே இருக்கிறது ரஷ்யாவின் வீழ்ச்சி. ஆனால் இந்த வரையறையை மறுதலித்து சீனா குழப்பத்தை மேலும் அதிகமாக்குகிறது. சீனர்களுக்கு தான் எவ்வளவு தைரியம் (audacity)? உலகவங்கியை அனுமதிக்கலாம். பெப்ஸி கோலாவை அனுமதிக்கலாம். மெக்டொனால்டின் ஹாம்பர்கரை அனுமதிக்கலாம். பொது ஒப்பந்த அமைப்பில் சேரலாம். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சீனாவின் உற்பத்திபொருள்களை அள்ளிவீசி விட்டு பயங்கரமான பன்னாட்டு நிறுவனங்களை அவர்கள் பாணியிலேயே தோற்கடிக்கலாம் என்று நினைக்கிறது. அது போல் நடக்கவும் செய்யலாம்.

1978 லிருந்து நடைபெற்று வரும் சீனாவின் 'பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பலவித பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இந்த சீர்திருத்தங்கள் சீனாவின் பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகத்தை அளிக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. பழைய முறை அரசும், கம்யூன் அமைப்பும் அடிப்படை நல



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வுத்தேவைகளையும், கல்வி தேவைகளையும் பூர்த்தி செய்தது. கனரகத் தொழில்களையும் உருவாக்கியது ஆனால் இதே அமைப்பு தான் நகரத்திற்கும், கிராமத்திற்கும் உள்ள வருவாய் இடைவெளியை அதிகமாக்கியது. [1950களில் விவசாயிகளின் வருமானத்தை விட நகர்ப்புற தொழிலாளியின் வருமானம் இரண்டு மடங்காக இருந்தது, ஆனால் 1970 களிலோ விவசாயியுடையதைவிட. நகர்ப்புற தொழிலாளியின் வருமானம் 4லிருந்து 6மடங்கு வரை உயர்ந்தது]. அதேபோலவே கம்யூன்களுக்குள் சமத்துவம் நிலைநாட்டப்பட்டாலும், கம்யூன்களுக்கிடையே சமத்துவம் நிறுவப்படவில்லை. விவசாயிகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து செல்வது மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததும் இந்த சமத்துவமின்மை நீடிக்க வழி செய்தது. இடம் பெயர இருந்த இக்கட்டுப்பாடுதான் 1959 லிருந்து 1962வரை நிலவிய கொடிய பஞ்சத்தில் கோடிக்கணக்கான மக்கள் மடிவதற்கும் காரணமாயிருந்தது. இப்பஞ்சத்தால் 1.7 கோடியிலிருந்து 3கோடி வரையிலானோர் மாண்டனர். ஜனநாயக உரிமைமறுக்கப்பட்டிருந்ததால் விவசாயிகள் இக்கொடுமையை எதிர்த்து குரல் கொடுக்கவோ, தமது இடத்தை விட்டு குடிபெயரவோ இயலாமல் போனது.[3] எனவேதான் தனிபட்ட குத்தகையில் நிலம் கொடுக்கப்படுவதற்காக கம்யூன்கள் கலைக்கப்பட்டது உட்பட்ட சீர்திருத்தங்களை விவசாயிகள் உற்சாகத்தோடு வரவேற்றனர்.[4] சீர்திருத்தங்களின் ஆரம்பக்கட்டத்தில் விவசாய விளைபொருள்களின் விலை வேகமாக உயர்ந்தது (1979க்கும் 1982க்கும் இடையே 50சதவீதத்திலிருந்து, 100சதவீதம் வரை விலை உயர்ந்தது). இவ்விலை உயர்வின் மூலம் விவசாயிகளுக்கு கிடைத்த உபரியானது (Surplus) விவசாயத்தை விட கிராமப்புற சிறுதொழில்களில் அதிகம் முதலீடு செய்யப்பட்டது. இந்த சிறுதொழிற்சாலைகள் நகர நிர்வாகத்திற்கோ, கிராமப்பஞ்சாயத்திற்கோ, சில தனியாருக்கோ சொந்தமாக இருந்தன. இவை டிவிபி (TVP) என அழைக்கப்பட்டன. இதனால் மொத்த கிராமச் சமுதாய உற்பத்தியில் தொழிற் சாலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 1980-ல் 19.5சதவீதத்திலிருந்து, 1986-ல் 31.5சதவீதமாக உயர்ந்தது.[5] வழக்கம் போல இந்த நிகழ்வுக்கும் சீனர்களிடம் ரத்தின சுருக்கமான வழக்கு மொழி இருந்தது 'நிலத்திலிருந்து வெளியேறினோம், கிராமத்திலிருந்து அல்ல; தொழிற்சாலைகளுள் புகுந்தோம்; நகரத்தினுள் அல்ல''. சீனாவின் திருத்தங்களால் 1980 களில் அந்நாட்டு சீர் விவசாயத்துறையில் 6சதவீதமும், தொழிற்துறையில் 12சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டது. 1965-லிருந்து 1980வரை வருடத்திற்கு வருடத்திற்கு 7.4சதவீதம் வளர்ச்சியடைந்த இறக்குமதியும், 4.8சதவீதம் வளர்ச்சியடைந்த ஏற்றுமதியும் 1980களில் முறையே 9.8சதவீதமாகவும், 11சதவீதமாகவும் உயர்ந்தன.[6]

சீனாவின் பொருளாதார சீர்திருத்தம் (ஜனநாயக சீர்திருத்தம் உட்பட) இன்னும் நிறைவு பெறவில்லை தான். 'தியானென் மென் சதுக்க படுகொலை' ஆரம்பத்தில் பெரிதுபடுத்தி கூறப்பட்டிருந்தாலும் கூட (பெரும்பாலான சாவுகள் சதுக்கத்திற்கு வெளியே தான் நடந்தது, இறந்தவர்களும் அல்ல) அரசு இன்றும் சர்வாதிகாரம் படைத்ததாகத்தான் இருக்கிறது. 1980களின் பின்பாதியில் அதிகார வர்க்கத்தினர், சலுகை பெற்ற ஊழியர்கள் ஆகியோரது நலன்களைப் பாதிக்கும் வகையில் 'மலிவான உணவு' கொள்கைகள் மீண்டும் அமல்படுத்தப்பட்டன. இதனால் விவசாயிகள் உணவுப்பயிர்கள் மீது ஆர்வம் காட்டவில்லை. உணவு உற்பத்தி குறைந்தது. இந்தப் போக்கு உணவுக்காக பிற நாடுகளை சார்ந்திருக்க வேண்டியநிலையை உருவாக்கக் கூடும்.[7] இயற்கைச் சூழல்கேடு பிரச்சினைகளும் அதிகமாயிருக்கின்றன. நமது நர்மதை திட்டத்தையொத்த பாதிப்புகளை ஏற்படுத்தும். 'மூன்று கோர்ஜஸ்' (Gorges) திட்டம் அதிகாரவர்க்க நலன்களால் வடிவமைக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட்டும்வருகிறது.[8] அதே வேளையில் பெட்ரோலியம் சார்ந்த வேதியியல் இடுபொருள்களின் மீதான சார்பை குறைக்கும் நோக்கில் அரசாங்கம் கடந்த பத்தாண்டுகளாக நிலைத்த விவசாயமுறையை நோக்கி (Sustainable Agricultural Methods) தனது விவசாய கொள்கைகளை மாற்றியமைத்து வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.[9] சீனாவின் வகையிலான 'மறுசீரமைப்பு' தெளிவாக சான்று பகர்வது என்னவென்றால், சந்தையை மையமாக கொண்ட முறை ஒட்டு மொத்த மக்கள்நலனுக்கு அனுகூலத்தை கொடுக்குமே தவிர இழப்பை அல்ல என்பதே ஆகும்.

'சந்தை'தான் அனைத்து முதலாளித்துவ சுரண்டலுக்கும் காரணம் என்று வாதிடும் போக்கு இன்று நிலவுகிறது. இப்போக்கு, முதலாளித்துவம் உருவாகுவதற்கு முன்பும் சந்தை இருந்தது என்ற உண்மையையும், 'சோசலிச சந்தை பொருளாதாரம்' என்ற சவாலையும் சுலபமாக புறந்தள்ளுவதாகவே அமைகிறது. 'சந்தையை' மட்டுமே அனைத்து பிரச்சினைகளுக்கும் பொறுப்பாக்குவது என்பது சந்தையின் எதிர்மறையான 'அரசை' (State) சோசலிசத்திற்கு சமமானதாகவோ, அல்லது சந்தையின் சுரண்டல்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் அமைப்பாகவோ அர்த்தப்படுத்துவதாகும். பன்னாட்டு நிறுவனங்களை பெரும் அபாயமாகக் கருதி அவற்றிலிருந்து இந்திய



படிப்பகம்

www.padippakam.com

மக்களை (அல்லது சிறு உற்பத்தியாளர்கள், முதலாளிகளை) காக்கவேண்டும் என்று கூறு பவர்கள், பன்னாட்டு நிறுவனங்களை இந்திய சந்தைக்குள் நுழைய விடாமல் செய்து இந்தப் பாதுகாப்பை அளிக்க இந்திய அரசால் முடியும் (அது அவ்வாறு செய்ய வேண்டும்) என்று நம்பு வதாகவே கருதமுடியும்.

இந்திய அரசும், அதனால் இதுவரை கடைப் பிடிக்கப் பட்டுவந்த கொள்கைகளால் பயன் பெற்ற தரகு முதலாளிகளும் ஒரு ஜனநாயக முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை அல்லது 'தேசிய முதலாளித்துவ வளர்ச்சி' பாதையை உருவாக்குவார்கள் என்ற அனுமானத்தின் (assumption) அடிப்படையில் தான் இவ்வாதம் அமைகிறது.

இங்கு சொல்லாடலில் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. 'சோவியத் மாதிரி' 'நேரு மாதிரு' போன்ற அரசு சார்ந்த, ஆணை வழிப்பட்ட சுரண்டல் பொருளாதாரங்களோடு இணைத்தே பார்க்கப்படுவதால்(சோசலிசம்)போன்றபதங்கள் மதிப்பிழந்துவிட்டன. இதில் முரண்நகை என்ன வென்றால்'சந்தை' 'சுதந்திரம்' போன்ற பதங் களும் சித்தாந்த ரீதியில் இயங்கியதன் மூலம் தான்,சுதந்திரபொருளாதாரத்தின் கோட்டை என அழைக்கப்பட்ட அமெரிக்காவில் மத்திய அரசின்அதிகார குவிப்பு சாத்தியமானது; அதே போல மானியங்கள், சுங்கவரிகள், உள்ளூர் தொழில்களின் பாதுகாப்பிற்கான இறக்குமதி தடைகளும் அடங்கிய ஒரு வலிமையான கட்ட மைப்பையும் அமெரிக்கா உருவாக்க முடிந்தது.

விவசாயத்தை பொறுத்தவரை இந்த மான்யங் கள் முக்கியம் வாய்ந்தவைகளாக உள்ளன. இவற்றில் பெரும்பான்மை விவசாய விளை பொருட்களின் ஏற்றுமதிக்கான மான்யங்களே. ஏனெனில் தனது தொழில்துறை உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத் தில் ஏற்பட்ட பற்றாக்குறையை சரிசெய்ய விவ சாய விளைபொருள் வர்த்தக உபரியைக் கொண் டே அமெரிக்கா பல பத்தாண்டுகளாக சமாளிக்க வேண்டியிருக்கிறது.

1985-ல் அமெரிக்கா தனது கோதுமை உற்பத்தி யில் 69சதவீதத்தையும் சோள உற்பத்தியில் 41 சதவீதத்தையும், சோயாமொச்சை மற்றும் சோயாமொச்சை பொருட்களின் உற்பத்தியில் 50சதவீதத்தையும், பருத்தி உற்பத்தியில் 50 சதவீதத்தையும், ஏற்றுமதி செய்தது.[9] இதன் மூலம் உலக உணவு தானிய உற்பத்தியில் சரி பாதிஅளவை அமெரிக்கா தனது கட்டுக்குள் வைத்திருந்தது. அதாவது உலக கோதுமை ஏற்றுமதியில் 37சதவீதமும், கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளின் ஏற்றுமதியில் 56 சதவீதமும், சோயாமொச்சை, சோயாமொச்சை பொருட்களின் ஏற்றுமதியில் 86சதவீதமும், அரிசி ஏற்றுமதியில் 21சதவீதமும் அமெரிக்கா வினுடையதாகவே இருந்தது.[10] அமெரிக்க கொள்கை வகுப்போர் இந்த ஆதிக்கத்தை கண்டு கவலைப்பட்டனர். 1980களின் மத்தியில் சில மூன்றாம் உலகநாடுகள் (முக்கியமாக இந்தியா வும், சீனாவும்) உணவு உற்பத்தியில் தன்னிற வடைந்ததாலும், ஐரோப்பிய சமுதாயத்தின் பொது விவசாயக் கொள்கையின் கீழ் விவசாயத் திற்கு மானியங்கள் வழங்கப்பட்டதன் மூலம். ஐரோப்பிய விவசாய விளைபொருட்கள் உலக சந்தையில் அமெரிக்காவிற்குசவாலாக அமைந்த தாலும், 1970களின் 'ஏற்றுமதியின் பெருக்கம்' 1980களில் 'ஏற்றுமதி வீழ்ச்சியாக' மாறிவரு கிறது என அமெரிக்க கொள்கை வகுப்போர் அஞ்சினர்.[11]

இரண்டாம் உலகப் போரையடுத்த வருடங் களில், மூன்றாம் உலக நாடுகளின் உணவு உற்பத்தி சீரழிக்கப்பட்டதற்கு 'சுதந்திரசந்தை' அடிப்படை காரணமல்ல அரசாங்கங்களின் தீவிர தலையீடு இரண்டு வகைகளில் செய்யப் பட்டதே இதற்கு காரணம். முதலாவதாக அமெரிக்காவும், ஐரோப்பாவும் தமது உணவு உற்பத்திக்கும், விவசாய விளைபொருள் ஏற்று மதிக்கும் பெருமளவு மான்யம் கொடுத்ததன் மூலம், உலகச்சந்தையில் உணவுப் பொருள் களை உற்பத்தி விலைக்கும் மிகக்குறைந்த விலையில் குவிக்கமுடிந்தது இரண்டாவதாக மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் தமது விவசாயிகள் விளைவித்த உணவுப் பொருட் களுக்கு, சர்வதேச சந்தை விலையைவிட குறைவாகவும். மிகக் குறைவாகவே இருந்த உற்பத்தி செலவைவிடவும் குறைத்தும் விலை கொடுத்ததன் மூலம், விவசாயிகளின் உணவு உற்பத்தி செய்வதற்கான ஊக்கத்தை இழக்கச செய்தன. இவ்வரசுகள் தனது நகர்ப்புற, பணி களில் இருந்த திரட்டப்பட்ட (employed)பகுதி யினருக்கு 'மலிவு உணவு' கொடுத்ததன் மூலம் இப்பகுதியினருக்கு மானியம் வழங்கினர். பொது ஒப்பந்த (காட்) உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இதுபோன்ற விவசாயிகள்-விரோத கொள்கைகளை படிப்படியாக முடிவுக்கு கொண்டுவர அரசுகளை நிர்ப்பந்திக்கும். டங்கல் திட்டத்தின் 'உற்பத்தி விலையை விட குறைந்த விலையில் சர்வதேச சந்தையில் பொருட்களை கொட்டுதல் (Dumping) குறித்த பகுதி இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். விவசாய சமுதாயங்கள் டங்கல் திட்டத்தை ஆதரிக்க வேண்டியதற்கு முக்கிய காரணம் இது வேயாகும். அறிவுஜீவி மேல்தட்டு வர்க்கம் டங்கல் திட்டத்தை எதிர்க்கவும் இதுவே முக்கிய காரணமல்லவா? என்ற கேள்வியையும் கூட நாம் கேட்டாக வேண்டும், தெற்கு குழு (South



படிப்பகம்

www.padippakam.com

Commission), பிரண்ட்லான்ட்குழு, ஐ.நா. வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) போன்றவை 'மலிவான உணவு', மானியங்கள் ஆகிய கொள்கைகளின் பாதகமான விளைவு களை தற்போது உணர்ந்துள்ளன. இந்தப்பிரச் சினை குறித்து இடதுசாரி அறிவுஜீவிகளும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான்.

இறுதியாக ஒன்றை கூறியாக வேண்டும். விவ சாயிகளின் நலனுக்காக என்ற பெயரில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஏற்றுமதி மானியங்கள் வழங்கப்பட்டாலும், இம்மானியங் களால் உணவுப் பதப்படுத்துபவர்கள் (Food processing industry), (மூன்றாம் உலகநாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பதப்படுத் தப்பட்ட உணவுப்பொருள்களுக்கு மிக அதிக சுங்கவரி விதிக்கப்படுகிறது.) உணவுப்பொருள் வர்த்தக நிறுவனங்கள், வேதியியல் உரங்கள், வேதியியற் பொருட்கள் பெட்ரோலியம் ஆகிய வற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஆகி யவை பயன் பெற்ற அளவுக்கு அந்நாடுகளின் விவசாயிகள் பயனடையவில்லை. மூன்றாம் உலகநாடுகளின் விவசாயம் சீரழிந்து அதே, பத்தாண்டுகளில் தான் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் சிறுவிவசாயிகள் எண்ணிக்கையும் படு வீழ்ச்சி அடைந்தது. விவசாயி-மற்றும் இயற்கைச் சூழலியரான வெண்டல் பெர்ரி கூறினார் ''சிறு குடும்ப பண்ணைகளில் தனிஉடமையின் இறுதி அழிவை மட்டுமல்ல, எல்லாவகையிலுமான உபயோகமுள்ள சிறு உடமைகளின் இறுதி அழிவை தினமும் நெருங் கிக் கொண்டிருக்கிறோம்''[12] அரசு தலையீட்டின் மூலம் கட்டமைக்கப்பட்ட வணிக உலகில் விவ சாயிகள் உயிர் பிழைத்திருக்க வேண்டுமா னால் (மிகச்சிலரே உயிர் பிழைத்திருக்கும் வகையில்), மிக விலையுயர்ந்த இடுபொருள் களுக்காகச் செலவிட வேண்டியுள்ளது. சர்வதேச விவசாய விளைபொருள் சந்தையில் அமெரிக்கா ஏன் போட்டியிட முடியாத நிலையில் உள்ளது? விவசாயத்திற்கு தேவையான சூரிய ஒளி போன்றவற்றில் மூன்றாம் உலக நாடுகளில் (ஒப்பீட்டளவில் சாதகமான நிலை, நிலவுவதும் இந்நாடுகளில் கிடைக்கும் மிக மலிவான உழைப்பும்) மட்டுமல்ல காரணம். 'அதிகவளர்ச்சி யும், தேவையே இல்லாததும், இயற்கைச்சூழல் ரீதியிலும், மானுடரீதியிலும் அழிவையே விளை விக்கக்கூடியதுமான வேதியியல் பொருட்கள் மற்றும் படிவ எரிபொருள்களின் அடிப்படையி லான எரிசக்தியை உபயோகப்படுத்துவதுமே அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவை போட்டியிட முடியாத நிலைக்கு காரணம் ஆகும். இந்தப் 'போட்டியிட முடியாத தன்மையை', நீடித் திருக்கக்கூடியதல்லாத (Unsustainable) உற் பத்திக்கு மானியங்கள் வழங்கும் அரசின் கொள் கைகளை மாற்றுவதன் மூலம்தான் போக்க முடியும். மானியங்களை நிறுத்த நிர்ப்பந்திக் கப்பட்டால் இதுபோன்ற நாடுகள் வீணானதும், இயற்கைச்சூழல் ரீதியில அழிவை உண்டாக்கு வதுமான தங்களது உற்பத்தி முறைகளை மாற் றுவதற்கு முயற்சிக்கும்.

'வளர்ந்த' உயிர் தொழில் நுட்பங்கள் போன்ற உயர்விலை தொழில் நுட்பங்கள் தன்னள விலேயே சிறந்த மாற்றாக இருப்பதில்லை. ஏனெனில் மானியங்கள் வழங்கப்படுவதன் மூல மாகவே இவை இயற்கை பொருள்களைவிட மலிவாக கிடைக்க முடியும். உதாரணமாக அமெரிக்காவிலும், ஜப்பானிலும் இயற்மை சர்க் கரையின் விலை பன்மடங்கு உயர்த்தப்பட்டதன் மூலமே உயர் பிரக்டோஸ் சோளச்சாறின் (High Fructose Cora Syrup) உபயோகத்தை அதிகப்படுத்த முடிந்தது. மற்ற நாடுகளில் இயற்கை சர்க்கரையே சந்தையில் முன்னனியில் உள்ளது [13] இன்றைய நிலையில் ஒரு நியாய மான சுதந்திர உலக சந்தையானது (அதாவது அனைத்துத் தரப்பினருக்கும் ஒரே மாதிரியான விதிகளை விதிக்கும்) 'முன்னேற்றமடைந்த நாடுகள்' என கூறப்படும் நாடுகளின் நிறுவ னங்களுக்கு சாதகமாக இருக்காது. ஏனெனில் இந்த நிறுவனங்களின் உற்பத்தி முறைகள் வளங்களை அதிகம் வீணடிக்கின்றன. மூன்றாம் உலகநாடுகளின் உழைக்கும் மக்களுக்கும், சிறு உற்பத்தியாளர்களுக்கும் எதிரியாக இருப்பது சந்தையின் ஏகபோகமே (Monopolisation of Market) தவிர சந்தைஅல்ல. இந்த ஏகபோக ங்கள் அரசுகளால் பராமரிக்கப்படுபவை. இந் தியாவின் 'நேருமாதிரி'யிலான அரசு சார்ந்த வளர்ச்சி சந்தைகளை ஏகபோகமாக்கியிருந்தது. இந்த ஏகபோகத்தால் பஞ்சாபில் கோதுமை கொள்முதல் செய்பவராகவும், அமெரிக்காவி லிருந்துகோதுமை வாங்குபவராகவும் அரசே சில சமயங்களிலும், லைசன்ஸ்-அனுமதி முறையின் மூலம் பயனடைய முடிந்த நிறுவனங்கள் சில சமயங்களிலும் பலனடைந்துள்ளன. இந்த சந் தையை திறந்து விடுவது இந்தியதொழிற்துறை க்கும், விவசாயத்திற்கும் ஊக்குவிகுப்பு (Stimu lus) தருவதாக அமையும். அமெரிக்க, ஐரோ ப்பிய சந்தைகள் திறந்து விடப்படுமானால் இந் நாடுகளுக்கான இந்திய ஏற்றுமதிகள் பெரும ளவு அதிகரிக்கும். தற்போது சீனாவினுடைய ஏற்றுமதிகள் சிறந்து விளங்குகின்றன.

**பார்ப்பனீயத்திற்கெதிரான சந்தை (Brahminism Vs Market)**

பாரதீய ஜனதா கட்சியின் கோரிக்கைகளில் அதன் வர்க்க/சாதி அடிப்படையை நன்கு வெளிப்படுத்துகிறது. அது உள்நாட்டில் 'தாராளமயத்தையும்', வெளியிலிருந்து அதா வது பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து 'பாது காப்பையும்' (Protectionism) கோருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் போக்குக்கு ஆர். எஸ். எஸ். ஸின் தூண்டுதல் காரணமாயிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது கட்சியின் பார்ப்பனீய சக்திகளிடமிருந்து (அதிகாரவர்க்க சக்திகள்) இந்தப்போக்கு ஆதரவு பெறுகிறது. பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து 'பாதுகாப்பு' (Protectionism) என்ற போக்கு தொழில் துறையையோ, தொழில் முனைப்புத் தன்மையையோ கட்டமைக்க உதவப்போவதில்லை. மாறாக இந்தப்போக்கு அதிகாரவர்க்கம், தரகு முதலாளித்துவ நலன்கள், திறமையற்ற பொதுத்துறை நிறுவனங்கள், அதிகாரவர்க்கத்தின் 'ஆதரவை' பெற்றுள்ள, பெறக்கூடிய தனியார் நிறுவனங்களின் ஆகியவற்றிற்குத்தான் நலன் பயப்பதாக அமையும்.

பாதுகாப்பின் (Protection) தேவையைப்பற்றி பேசும்போது, முற்போக்குவாதிகள் மத்தியிலும் கூட ,மழலைப்பருவ தொழில்துறை' பாதுகாக்கப்பட வேண்டும் என்றவாதம் முன்வைக்கப்படுகிறது. காலம் தாழ்த்தி வளரும் நாடுகளில் எப்போதுமே அ ர சி ன் தலையீடு அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது ஆனால் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும், 'மழலைப்பருவ தொழில்கள்' அதிகம் செல்லம் கொடுக்கப்பட்ட குழந்தைகளாக, 'லாலிபாப்பும்' மற்ற ஆடம்பரப்பொருட்களாலும் மட்டுமே உயிர் பிழைத்திருக்கக்கூடியவைகளாகவே வளர்ந்திருக்கின்றன. கண் மூடித்தனமான போட்டிக்கெதிராகவும், கடுமையான சூழ் நிலையிலும் கூட வேலை செய்யும் தம்மை பயிற்றுவித்துக்கொண்ட தொழில்முனைவோரே (Entrepreneurs) யதார்த்தத்தில் செயல்திறன் படைத்த, பிழைத்துக் கொள்ளக்கூடிய தொழில் முனைவோர் ஆவர். மற்றொரு உவமையில் கூறுவதென்றால் பெருமளவிலான விளையாட்டுத் திட்டமும், ஆரோக்கியமான மக்களும், நியாயமானதும். திறன்பட்டதுமான பயிற்சி திட்டமும் இல்லாமல் ஒலிம்பிக் பந்தயத்தில் இந்தியா சிறக்க முடியாது. இதில் அரசுக்கான பங்கு உண்டு. ஆனால் அது நம் வீரர்களை மற்ற நாட்டு விளையாட்டு வீரர்களுடன் போட்டிகளில் கலந்து கொள்வதை தடுப்பதன் மூலமும், சாதனை அளவை குறைப்பதன் மூலமும் நம் நாட்டு வீரர்கள் சிறந்தவர்கள் என காட்டுவதல்ல. சிறந்த பயிற்சி மற்றும் கருவிகளுக்கு ஏற்பாடு செய்வதும், செயற்கையான வகையில் சுரப்பிகளை தூண்டும் மருந்துகளை உபயோகப் படுத்துவது போன்ற நியாயமற்ற, ஆரோக்கிய மற்ற போட்டியை தடுப்பதுமே அரசின் பங்காக இருக்க வேண்டும். இதுபோன்ற நிலைமைகளில் செல்லம் கொடுக்கப்பட்ட மேல்தட்டு வர்க்கக் குழந்தைகள் அல்லாமல் கிராமங்கள், சேரிகளில் இருந்து தலித்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், வி வ சா யி க ள் மற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் சிறந்த போட்டியாளர்களாக உருவாகுவார்கள். இதேபோல தொழிலிலோ, விவசாயத்திலோ வெற்றிபெறுவதற்கு அரசாங்க சலுகைகளையோ, அரவணைப்பையோ, தில்லுமுல்லுகளையோ சார்ந்திருக்க தேவையில்லாமல் உற்பத்திதிறனும், கடின உழைப்புமே அடிப்படை என்றாகும் போது 'காஞ்சா இலையா' வால் 'உற்பத்தி சாதிகள்' என மிகச்சரியாக அழைக்கப் படுவோரே சாதகமான நிலையில் இருப்பர். இந்தியாவில், அரசுத்துறை பார்பனீய புகலிடம் என்று கூறுமளவுக்கு, 'உற்பத்தி சாதிகளுக்கு' மிகச்சில வாய்ப்புகளையே தந்துள்ளது பாரதீயஜனதாவின் தற்போதைய கொள்கை இந்த பார்ப்பனீய புகலிடத்தை அப்படியே பாதுகாப்பதாக அமைந்துள்ளது. ஏ னெ னி ல் 'பன்னாட்டு நிறுவனங்களை தடுத்து நிறுத்த' ஏராளமான அதிகார வர்க்கத்தினரும், லைசன்ஸ் முறையும் தேவைப்படும். அதே போல சுருங்கிய தாக இருக்கும் உள்நாட்டு சந்தையை ஏற்கனவே முன்னிலையில் இருக்கும் நிறுவனங்கள் எளிதாக ஆதிக்கம் செலுத்தலாம்.

## காப்புரிமைகள்

காப்புரிமைகள் பிரச்சினையும் கூட அறிவுத் துறை மேட்டுக்குடியினரால் தேவைக்கும் அதிகமான பெ ரி து ப ட் ட வாதம் எழுப்பப்படும் ஒரு விஷயமாகவே இருந்து வருகிறது. ஆனால் தங்கள் ஆய்வுகளை பதிவு செய்வதிலும், பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் பதிப்பித்தலிலும் அதிககவனம் செலுத்தும் இதே அறிவுத்துறையினர் தான் விவசாயிகளும் சிறுதொழில் முனைவோரும் காப்புரிமை பெறுவதெற்கெதிராக வாதிடுகின்றனர். முதலில் பொருள்காப்புரிமைக் (Product Patent) கெதிராக செய்முறை காப்புரிமை (Process Patent) முன்வைக்கப் படுவதை குறித்து பார்ப்போம். செய்முறை காப்புரிமையை, காப்புரிமை என கூறுவதை புரிந்துகொள்வதே கடினமாயிருக்கிறது. எப்படி இருப்பினும் ஒரு குறிப்பிட்ட பொருள் தான் (Product) (அது மருந்தோ, வெறெதுவோ) மக்கள் அதனிடமிருந்து எதிர்ப்பார்க்கும் செயலை திறம்பட செய்கிறது. நோயை தீர்ப்பதோ, அதிக மகசூலை தருவதோ எதுவாக இருந்தாலும் பொருள்தான் அதைசெய்கிறது. அந்தப் பொருள் எந்த செய்முறை (Process) மூலம் உருவானது என்பது தயாரிப்பாளருக்குத்தான் தேவையான ஒன்றாகும்.

இந்திய காப்புரிமைச்சட்டத்தில் பொருள் காப்புரிமை(Product Patent) தருவதில்லை என்பது மட்டுமல்ல, உயிருள்ள வள ஆதாரங்களுக்கும், காப்புரிமை வழங்கப்படுவதில்லை இந்தியாவில் காப்புரிமை பாதுகாப்பே இல்லையென்றே கூறலாம் இதனால் வெளிநாட்டினருக்கு காப்



படிப்பகம்

www.padippakam.com

புரிமை வழங்கப்படுவதில்லை என்பதுமட்டுமல்ல ஒரு புதிய மருந்தையோ, புதிதாக கண்டுபிடிக்கும் இந்தியருக்கும் காப்புரிமை வழங்கப் படுவதில்லை.

''விதைகளைஏற்றுமதி செய்யும் போதுஇந்தியா எவ்வித மரபுரிமையையும் அனுபவிப்பதில்லை. இந்தியாவிலிருந்து 1900ரகங்கள் 12நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இவற்றிற்காக ஒரு பைசா கூட ராயல்டி தொகையாக இந்தியா பெறவில்லை. சந்தை என்பது என்னவென்பதை குறித்து புரிந்து கொள்ள இந்தியா ஒருபோதும் கவலைப் படாததனாலேயே இது போன்றவையெல்லாம் நடக்கிறது. விதைகளை உருவாக்குவதற்கு செலவிடப்பட்ட உழைப்பின் விலையாக தனக்கு சேரவேண்டிய நியாயமான தொகையை பெறாமல் தானாக ஏன் மறுத்துக் கொள்ள வேண்டும்?'' எனக்கேட்கிறார். வேளாண் ஆராய்ச்சிக்கான இந்தியக்கவுன்சிலின் (ICAR) இயக்குநர் டாக்டர் ராய். ('தி வீக்' மார்ச் 21-1993-ப.37) இந்தியாவின் இன்றைய நிலை என்னவெனில்ஒருவிஞ்ஞானியோ அல்லது ஒரு விவசாயியோ ஒரு புதுக்கண்டு பிடிப்பை நிகழ்த்து வாரென்றால், நிறுவனமொன்றில் பணிபுரிந்தால் மட்டுமே அவரது கண்டு பிடிப்பிற்கான சன்மானம் கிடைக்கும். அதுவும் அவர் செய்யும் வழக்கமான பணிக்கு தரப்படும் ஊதியத்திலேயே அடங்குவதாக இருக்கும். பல நிறுவனங்கள் வேலையையும், புதிய கண்டறியும் திறனையும் தவிர்த்த மற்றவற்றிற்கு தான் ஊதியம் தவருதால் கண்டு பிடிப்பு திறன் சிறப்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவே எனவே இந்தியர்களுக்கு பயனளிக்கும் பொருட்டிலாவது இந்தியா காப்புரிமை பெற வேண்டுமா? இல்லையா? என்பதுதான் கேள்வி. அறிவும கண்டு பிடிப்புத்திறனும் (Inventireness) சமுதாய நடவடிக்கைகள் மூலமே உருவாகுவதால் இவற்றிற்காக தனிநபர்களுக்கோ, தனியார் நிறுவனங்களுக்கோ சன்மானம் வழங்குவது தவறாகும் (பேராசை பிடித்ததாகும். தனிநபர்போக்காகும்)என்று வாதிடலாம். சமுதாயத்திற்காக' என்ற பெயரில் காப்புரிமைகளை ஒட்டு மொத்தமாக எதிர்க்கலாம் இங்கு பிரச்சினை என்னவெனில் உற்பத்தி சிறிய அளவில் இருந்த, அரசு, வர்க்கங்கள், சாதி ஆகியவற்றிற்கு முந்தைய சமுதாயங்கள் தாம் ஜனநாயக பூர்வமான சமுதாயங்களாகும். 'பொதுவில்' (ammons) இருந்த நிலம், காடு, தண்ணீர் மணல் போன்றவை எவ்வாறு அரசின் கட்டுப்பாட்டிற்கும் மாறியதோ அதேபோல விவசாயியோ உருவாக்கிய விவசாயமுறைகள் விதைகள் முதலியவற்றின் மீதுபொதுவான அறிவுத்துறை பாரம்பரியம் என்ற பெயரில் மிகப்பெரிய அதிகாரவர்க்க அரசுக்களோ, பன்னாட்டு நிறுவனங்களோ ஆதிக்கம் செலுத்தக்கூடும் பாதுபாரம்பரியம் என்றபெயரில் ஜனநாயகமற்ற அரசுகளும், மற்ற அதிகாரவர்க்க குழுக்களும், ஏகபோகம் பெறுவதை தடுக்க ஏதோ ஒரு முறையிலான 'காப்புரிமை' (Patant) பாதுகாப்பை தவிர மாற்று வேறு ஏதும் இருப்பதாக தெரியவில்லை.

'காப்புரிமைகள்' அறிவு மீதான மறைமுக ஏக போகம் என கூறப்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு பொருளின் மீது காப்புரிமை பெற்றுவிட்டால், அவற்றை இந்தியர்கள் பெறுவது தடுக்கப்படும் என வாதிடப்படுகிறது. இது காப்புரிமை குறித்த தவறானபுரிதல் அல்லது திரித்துக் கூறலே ஆகும். சில வகையான அறிவுத்துறைகள் மீது பார்ப்பனர் சத்ரியர் போன்ற சில குழுக்கள் ஏகபோகம் செலுத்திய சாதிய-நிலப்பிரபுத்துவ இந்தியாவில் 'அறிவின் ஏகபோகம்' இருந்தது. ஆனால் காப்புரிமை பெற்றுள்ள ஒருவர் தனக்கு ராயல்டி தொகை தரும் எவருக்கும் தனதுஅறிவைத் தரவேண்டும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு அவருக்கு அந்த பொருள் மீது மட்டும் தான் ஏகபோக உரிமை உண்டு, சந்தைமீது அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை. வாங்குபவர் தவறான 'தோல் நிறத்தவரா' என்றோ, அல்லது வாங்குபவரின் சாதிய பின்னனியைப் பார்த்தோ தனது பொருளை தரமுடியாது. யார் விலை கொடுத்தாலும் அவருக்கு தரவேண்டும். ஏகலைவனுக்கு வில்வித்தை சொல்லித்தர மறுத்த, அதே நேரத்தில் ஏகலைவனின் கட்டை விரலை 'ராயல்டியாக'வும் பெற்ற துரோணாசாரியின் ஏகபோகத்தைவிட இது மிகவும் மாறுபட்டது.

ஒப்பிட்டளவில் ஏழைகளாக இருப்பவர்கள் (விலைகொடுத்து) வாங்க முடியாத அளவுக்கு 'ராயல்டி' தொகையோ அல்லது வேறு பொருள்களின் விலையோ மிக அதிகமாக நிர்ணயிக்கப் படலாம். ஆனால் இவ்வாறு விலையை உயர்த்துவது பொருளின் விற்பனையை பாதிக்கும். சிலவகை அறிவையோ, தொழில்நுட்பத்தையோ பெறவிரும்பும் ஏகலைவர்கள் அனைவரும் ஒரு துரோணாச்சாரியருக்கு பதில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தையே தெரிவு செய்யக் கூடும் அரசு இவர்களின் காடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்களின் மீதான உரிமைகளை பறிப்பதற்கு பதில், அந்த உரிமைகளை உறுதி செய்தால் இதுபோன்ற அறிவிற்கோ, தொழில்நுட்பத்திற்கோ அவர்களால் சுலபமாக விலைதர முடியும்.

மூன்றாம் உலகநாடுகள் நெடுங்காலமாக, முன்னேறிய தொழில்வளநாடுகளிடமிருந்து அவர்களின் சந்தையை திறந்து விடகோருவதன் மூலம் வர்த்தகத்தைதான் கேட்கின்றனவே தவிர உதவியை அல்ல என்பதை 'டங்கல்' திட்டம் மற்றும் 'காட்' ஒப்பந்தத்தை எதிர்ப்ப



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் கண்டுகொள்வதே இல்லை. மூன்றாம் உலகநாடுகளின் அமைப்பான ஜி-15 நாடுகளும் இன்று உருகுவே சுற்றுப் பேச்சுகளின் முடிவையே கோருகின்றன என்பதையும் அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. சந்தை திறந்து விடப்பட்டால் பன்னாட்டு நிறுவனங்கள் புகுந்து இந்தியாவின் உற்பத்தியாளர்களையும் உழைக்கும் மக்களையும் விழுங்கி விடுமளவுக்கு அவர்கள் பலவீனமான நிலையில் இருப்பதாக எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து சித்தரித்து வருகிறார்கள். எனவே உற்பத்தியாளர்களுக்கும், உழைக்கும் மக்களுக்கும் அரசுபாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதே அவர்கள் வாதம். ஆனால் தன்னுடைய துரோணாச்சாரியர்களையும், சாணக்கியர்களையும் கொண்டு மக்களை பலமற்றவர்களாகவும், துயரம் மிகுந்தவர்களாகவும் வைத்திருப்பதே இந்திய அரசு தான்.

**குறிப்புகள்:**

1 'உலக வளர்ச்சி அறிக்கை(World Develop mnet Report) 1992-அட்டவணை 3 லிருந்து கணக்கிடப்பட்டது.

2 'டிரான்ஸ்நேஷனல் கார்ப்பரேஷன்ஸ் அண்டு த ஸ்டிரகின் பார் த குளோபல் மார்க்கட் பிரடரிக் எப் கிளயர்மாண்ட் மற்றும் ஜான் கேவனாவ் 'ஜர்னல் ஆப் காண்டம்பரரி ஆசியர் 13-4-1984; த பார்சூன் குளோபல் 500' பார்சூன் சூலை 29, 1991.

3 பார்க்க:- ஜில் மாட்ஸன், மார்க் செல்டன், 'பாவர்டி அண்ட் இன்ஈகுவாலிடி இன் சைனா அண்ட் இண்டியா'-எ.பொ.வீ-ஏப்ரல் 4,1992.

4 இந்த அறிக்கையை தயாரித்தவர்களின் ஆய்வு நேர்மையை நான் மதிப்பதற்கு தகுந்த காரணங்கள் உண்டு அதாவது 'பொறுப்புமிக்க ஆசிய ஆய்வாளர்கள் குழுவில்'1960- 70களில் இருந்த புரட்சிகர சீன ஆய்வாளர்களின் அறிக்கையாகும்.

5 பார்க்க: (சைனாஸ் ரூரல் இண்டஸ்ட்ரி' தொகுத்தவர்கள்; வில்லியம் ஏ பைர்ட்,லின், புதுதில்லி ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ்1990 அட்டவணை 1-3, ரூ கையாள்- 'காசஸ் ஆப் ரேபிட் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட்).

6 'வோர்ல்ட் டெவலப்மெண்ட் ரிபோர்ட் 1992 அட்டவணைகள் 2மற்றும் 14

7 'கோலின் கார்டர் மற்றும் ஃபூநிங் ஜோங்க் 'சைனாஸ் பாஸ்ட் அண்டு ஃப்யூச்சர் ரோல் இன் த க்ரெய்ன் டிரேட், எகனாமிக் டெவலப்மெண்ட் அண்ட் கல்ச்சுரல் சேன்ஜ்' 39(4), ஜூலை1991. ஹயின் பிட்டர்மேன் 'டியுரலிஸம் அண்ட் ரிபாம் இன் சைனா'-எகனாமிக் அண்ட் கல்ச்சுரல் சேன்ஜ் 40(3),ஏப்ரல் 1992.

8 எட்வர்ட் பிரீட்மான், ரிவியூ ஆப் த்ரீ டேமிங் த த்ரீ கோர்ஜஸ்' பை கிரெய்னீ ரைடர், 'ஜர்னல் ஆப் ஆசியன் ஸ்டடிஸ்' 50,2(மே, 1991)

9 டோனால்ட் டைலர், 'சஸ்டய்னபிள் அக்ரி கல்சுரல் டெவலப்மெண்ட் இன் சைனா, 'வோர்ல்ட் டெவலப்மெண்ட்' 20(8)1992.

10 1985இயர்புக் ஆப் அக்ரிகல்சர், 'யு.எஸ்.3 அக்ரிகல்சர் இன் எ குளோபல் எகானமி' (வாஷிங்டன் டி. சி.)

11 புரூஸ் கார்டனர் 'இன்டர் நேஷனல் காம் படிசன் அண்ட் யு.எஸ். பார்ம் பாலிசி' மற்றும் டி.ஹெச்.பி. அட்வாடர், 'பிரம் த கிளப் ஆப் ரோம் டு அக்ரிகல்ச்சுரல் சர்ப்ளஸ்,: த டிராமாடிக் ரிவர்ஸல் இன் வோர்ல்ட் அக்ரிகல்சுரல் டிரேட்,இன் மார்டின் பெல்ட்ஸ்டின், (தொகுப்பு) (த யுனைட்டட் ஸ்டேட்ஸ் இன் த வோர்ல்ட் எகானமி'(யுனிவர்சிடிஆப் சிகாகோ பிரஸ்1985)

12 வெண்டல் பெர்ரி 'த அன்செட்லிங் ஆப் அமெரிக்கா, கல்சர் அண்ட் அக்ரிகல்சர்' (சான் பிரான்ஸிஸ்கோ: சியர்ரா கிளப் புக்ஸ், 1986), பக்கம்viii.

13 பார்க்க டி சில்வா, ராட்லட்ஜ் அண்டு சாஸன், (தொகுப்பாளர்கள்) பயோ-டெக்னாலஜி; இஸ்யூஸ்பார் டெவலப்பிங் கன்ட்ரிஸ்' (கேம்ப்ரிட்ஸ் யுனிவர்சிடி பிரஸ்/யுனெஸ்கோ, 1992) பக்கம்168-70, 176-80. ○

**அடுத்த இதழில்**

| | |
|---|---|
| யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி அமைப்பு... | வ. ஜ. ச. ஜெயபாலன் |
| உலக முதலாலியக் கோட்பாடு ... | அ. மார்க்ஸ் |

**கொழும்பில் மனித உரிமைகள்...**

அதுலத் முதலி, பிரேமதாசா ஆகியோர்களது கொலைகளைத் தொடர்ந்து கொழும்பில் வசிக்கும் தமிழர்களின் நிலை மிகுந்த அவலத்திற்குள்ளாகியுள்ளது. எந்நேரமும் யாரை வேண்டுமானாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாம் என்கிற நிலை. அரசு கொடுத்த வாக்குறுதிகளையும் மீறி பத்திரிகை ஆசிரியர்கள் கூட கைது செய்யப்படுகின்றனர். சில மாதங்களுக்கு முன்பு ''அருவி''— தமிழ் இதழின் ஆசிரியர் பாஸ்கரன் இவ்வாறு கைது செய்யப்பட்டு மீண்டும் விடுவிக்கப்பட்டுள்ளார். தமிழர் மீதான இன அடிப்படையிலான இத்தகைய மனித உரிமை மீறல்களை நிறப்பிரிகை வன்மையாகக் கண்டிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை: 2

# தலித்துகளுக்கு ஆதரவாக பன்னாட்டு நிறுவனங்கள்

—எஸ்.சி.

15. 5. 93 மற்றும் 22. 5. 93 தேதிகளிட்ட 'பிரான்டியர்' இதழ்களில் வெளியான 'டங்கல் திட்டமும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் என்ற கட்டுரை கவனிக்கப்பட வேண்டியஒன்றாகும். 'டங்கல் திட்டம்'(Dunkel Draft) இன்றுஉலக அளவில் முக்கியமானதும், சர்ச்சைக்குரியது மான பிரச்சினைகளில் ஒன்றாகவும் மாறியுள் ளது இத்திட்டம் உலகப் பொருளாதாரத்தின் போக்கையே மாற்றக்கூடும்

டங்கல் திட்டத்தின் விவசாயம் குறித்த பகுதி உள்ளடக்கியுள்ள சில அம்சங்களை காண்போம்

(1) சந்தையைத் திறந்துவிடல்; வளரும் நாடு கள் தமது விவசாய விளைபொருள் சந்தையை 1993-ல் 2சதவீதமும், அடுத்த பத்தாண்டுகளில் 3·3 சதவீதமும் திறந்துவிட வேண்டும். இதற்கு ஏற்ப வளர்ந்த நாடுகள் தமதுசந்தையின 3சத வீதத்தை திறந்து விடவேண்டும் இதைத்தவிர அனைத்து 'காட்' (GATT) உறுப்பு நாடுகளும் 1986-88-ல் இருந்த உணவு இறக்குமதி அளவுக்கு சமமான இறக்குமதியை அனுமதிக்க வேண்டும் வளர்ந்த நாடுகள் உணவுப்பொருள் களுக்கான இறக்குமதி சுங்கத்தீர்வையை 1993க்குள் தற்போதுள்ள அளவைவிட 36சதவீதம் குறைக்க வேண்டும். அதேபோல் வளரும் நாடுகள் 2003-ம் ஆண்டுகள் 24சத வீதம் குறைக்க வேண்டும்.

வளரும்நாடுகள் தங்களது ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தக பற்றுவரவு நிலை (Balance of Payment) பாதகமாக இருக்கிறது என்கிற காரணத்தைக் காட்டி, இந்த நிபந்தனைகளி லிருந்து தப்பிக்கலாம் தான். ஆனால் வர்த்தக பற்று -வரவு நிலை பிரச்சினை இருக்கிறது என்பதை இந்நாடுகளே முடிவுசெய்து கொள்ள முடியாது. இவ்வாறு ஏற்றுமதி-இறக்குமதி பற்று இருக்கிறதா என்பதையும், அவ்வாறு இருந்தால் அதை எவ்வாறு சமாளிப்பது என்ப தையும் சர்வதேச நிதி நிறுவனம் (IMF) தான் முடிவுசெய்யும். டங்கல் திட்டம் இறக்குமதி களுக்கு அளவின் அடிப்படையிலான(Quantity Based)கட்டுபாடுகளுக்கு பதில் விலை சார்ந்த (Price Based) நடவடிக்கைகளை பரிந்துரை செய்கிறது.

### மான்யங்கள்

மான்யங்கள், நுகர்வு மான்யம், உற்பத்தி மான்யம், ஏற்றுமதிமான்யம் என்று பலவகைப் பட்டவை. டங்கல் திட்டம் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உற்பத்தி சாரா இனங்களுக்கான வருமான உதவிகளுக்கு (income support) தனது கட்டுப்பாட்டிலிருந்து விலக்களித்துள்ளது சமூக மான்யங்கள் வடிவிலான இவ்வகை மான் யங்கள் மேற்கத்திய நாடுகளில் தான் அதிகம் காணப்படுகிறது. இந்தியாவிலோ, மற்ற மூன்றாம் உலக நாடுகளிலோ இந்த வகையி லான மான்யம் வழங்கப்படுவதில்லை. 'காட்டின்' (GATT) 'தாராள' குணத்திற்கு இது தான் காரணம்.

உற்பத்திக்கான மான்யங்கள், உற்பத்தி பொரு ளின் மதிப்பில் வளர்ந்த நாடுகளாயிருந்தால் 5 சதவீதத்திற்குள்ளும், வளரும் நாடுகளாயிருந் தால் 10சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும் என்கிறது டங்கல் திட்டம். இந்தியாவில் வழங் கப்படும் இவ்வகை மான்யங்கள் 6 சதவீதத்திற் குள்ளேயே இருப்பதால்,இந்திய விவசாயத்தை டங்கல் திட்டம் பாதிக்காது என்று வர்த்தக அமைச்சர் பிரணாப் முகர்ஜியும், மற்ற டங்கல் திட்ட ஆதரவாளர்களும் வாதிடுகிறார்கள். முதலில் இவர்களின் கணக்கிடும்,முறையிலேயே சில சந்தேகங்கள் உண்டு. இருப்பினும் இவர் கள் சொல்வதையே ஒப்புக்கொண்டாலும் கூட 6 அல்லது 10 சதவீதம் என்பது எப்போதுமே மாறாமல் இருக்கும் ஒரு தொகையா என்ன? எவ்வாறு இருப்பினும் டங்கல்திட்டம் அனைத்து சூழ் நிலைகளிலும், எதிர்காலத்திலும் அரசின் கையை கட்டிப்போடும். பன்னாட்டு நிறுவனங் களுக்கான மான்யங்கள் தடங்கலின்றி நீடிப்ப தால் அவை அதிகஅளவில் செயலூக்கத்துடன் செயல்படும். பொதுவாக முதலீடுகளுக்கு மான்யம் வழங்குவதற்கு அரசாங்கங்கள் அனு மதிக்கப்படும். மேலும் குறுவிவசாயிகளுக்கு மான்யம் வழங்குவதற்கு சிறப்பு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது

டங்கல் திட்டப்படி ஏற்றுமதி மான்யங்களும் திருத்தியமைக்கப்பட்டதாக வேண்டும். வளரும் நாடுகளும் ஏற்றுமதி மான்யங்களை குறைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவு வளர்ந்த நாடுகள் குறைக்கும் அளவில் மூன்றில் இரண்டு பங்காவது இருக்க வேண்டும்.

'முக்கியமாக கவனிக்கப் பட வேண்டியது என்னவெனில் ஏற்றுமதி மான்யங்களை குறைத்த பின்பும் வளரும் நாடுகள், தங்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுமதிக்கு கணிசமான அளவு மான்யங்கள் அளித்துக்கொண்டு தானிருக்கும். ஏனெனில் ஏற்றுமதி மான்யங்களுக்கு வழங்கப்படும் பட்ஜெட் ஆதரவில் 36சதவீதத்தையும், 1986-90க்கிடையில் ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்பட்ட மதிப்பைவிட 1999-ல் 24 சதவீதத்தையும் குறைப்பதாகவுமே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. டங்கல் திட்டத்தின் அடிப்படையாக கணக்கிடப்படும்-காலகட்டத்தில் வளர்ந்த நாடுகளின் ஏற்றுமதி மான்யங்கள் 50சதவீதமாக- இருக்கின்றது;[1]

மற்ரென்றையும் இங்கு கூறியாக வேண்டும். விவசாய மான்யங்களை குறைப்பதற்கு மேற்கத்திய நாடுகளின் விவசாய நலன்களிடையே, குறிப்பாக பிரான்ஸில், பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் கோரிக்கைகளை விட மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கே அதிக அளவில் செவிசாய்க்கும் 'பொது ஒப்பந்த அமைப்பு' இந்தத்துறையில் தனது சட்டங்களை கறாராக அமல்படுத்தாமல் இருப்பதற்கும் வாய்புண்டு.

## உணவுபாதுகாப்பு

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின்கவலையாக உணவுபாதுகாப்பு (Food security) விளங்கிய போது அது சர்வதேச வர்த்தக சட்டங்களின் வரையறைகளிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. அந்தக்கட்டத்தை மேற்கத்தியநாடுகள் இப்போது தாண்டிவிட்டன. இந்த பணக்கார நாடுகளிலும் 'சத்துக்குறைவால்' (Mal nutrition) பாதிக்கப்பட்ட குழுமங்கள் இருந்தாலும், அதற்கு காரணம் விவசாயத்துறையின் பின்னடைவல்ல. முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வுகளும், சமத்துவமற்ற தன்மையுமே இதற்கு காரணமாகும் மேற்கத்திய நாடுகளின் தற்போதைய பிரச்சினைஎன்னவெனில் விவசாயிகளுக்கு வருவாய் ஆதரவு (Income support)வழங்குவதும், உபரியாக உள்ள விவசாயவிளை பொருள்களை விற்றுத்தீர்ப்பதுமேயாகும் எனவே அந்நாடுகளின் போக்கு மாறியுள்ளது. ஆனால் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் 'உணவு பாதுகாப்பு' நிலையோ கவலைத் தரத்தக்க நிலையில் தான் உள்ளது. எனவே 'காட்' (GATT) வரையறைகள் இந்நாடுகளுக்கு பெருந்தீங்கு விளைவிப்பவையாகவே அமையும்.

பொது விநியோக முறையை கைவிட வேண்டும் என்று வெளிப்படையாக டங்கல் திட்டம் கோரவில்லை. ஆனால் இரண்டு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, அரசாங்கம் தனது உணவுக்கையிருப்புக்காக உணவுப் பொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள் முதல் செய்யும் போது, சந்தை விலையை (Market Price) விட குறைத்து விலை நிர்ணயம் செய்யக் கூடாது. அதாவது சில சமயங்களில் பணக்கார விவசாயிகளுக்கு விதிக்கப்படும் லெவி முறை ஒட்டு மொத்தமாக கைவிடப் பட வேண்டும். இரண்டாவதாக 'தெளிவாக வரையறுக்கப் பட்ட சத்து தேவை [Nutritional] குறிக்கோளின் கீழ்' தகுதி பெற்றவர்களுக்காக மட்டுமே பொது விநியோக முறை செயல்பட வேண்டும். ஏற்கனவே இந்திய அரசாங்கம் ரேஷன் வழங்குவதற்கான வாய்ப்புகளை குறைத்துள்ளது. மேலும் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

## காப்புரிமைகள்

டங்கல் திட்டத்தின் மிக முக்கியபகுதி வர்த்தகம் சார் அறிவுச்செத்துரிமைகள் தான் (Trade related Intellectual Property rights-TRIPS). விவசாயத்துறையை பொறுத்தவரை, தொழிற்துறையை விடவும், அறிவுசார் சொத்துரிமை முக்கியதுவம் வாய்ந்தது. இந்தியாவில் இதுவரை பன்னாட்டு நிறுவனங்கள் நிலத்தை விலை கொடுத்து வாங்கவில்லை. ஆனால் கிராமப்புறத்தில் பெரும் நிலப்பரப்புகளை தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைவிடுவது பற்றி பேச்சு அடிபடுகிறது. இருப்பினும் இப்போதும் கூட பன்னாட்டு நிறுவனங்கள் விவசாயத்திற்கான இடுபொருள்களை, முக்கியமாக விதைகளை, கட்டுப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் மீதுதமது மேலாதிக்கத்தைத் தக்கவைத்திருக்கின்றன.

1970-ம் வருடத்திய இந்திய காப்புரிமைசட்டம், விவசாயம், தோட்டகலை மற்றும் உயிரியல் மூலக்கூறு வளங்களுக்கு காப்புரிமை வழங்குவதில்லை. உணவு, மருந்துகள், வேதியியல் பொருள்கள் போன்றவற்றிற்கு பொருள் காப்புரிமை (*Product patent*) வழங்கப்படுவதில்லை; செய்முறை காப்புரிமையே (*Process Patent*) வழங்கப்படுகிறது. அதாவது ஒரே பொருளை வேரெருவர் மாற்று செய்முறை மூலம் தயாரிப்பதற்கு இம்முறை வழிசெய்கிறது. சிறந்த அறிவியல், தொழில் நுட்பவியலாளரைக் கொண்டுள்ள இந்தியா போன்ற நாடுகள், தமது சூழ்நிலைக்கேற்ற செய்முறைகளை உருவாக்கி ஒப்பிட்டளவில் விலைகுறைவான பொருட்களை உற்பத்தி செய்ய இம்முறை வழிவகுக்கிறது. டங்கல்திட்டத்தால் இம்முறையெல்லாம் மாற்றப்பட வேண்டியுள்ளது. மேலும் காப்புரிமைகளின் காலம் 7அல்லது 14வருடங்களிலிருந்து 20வருடங்களாக நீடிக்கப்படுகிறது.

விவசாயத்துறையை பொறுத்தவரை வர்த்தகம் சார் அறிவுச்சொத்துரிமைகள் (*TRIPS*) ஒப்பந்தத்தின் 27-வது பிரிவு, ''காப்புரிமை மூலமோ,



படிப்பகம்

www.padippakam.com

திறம்பட 'சூ ஜெனரிஸ்' (Sudi Generis) முறைமூலமோ அல்லது இரண்டின் கலப்புமுறை மூலமோ தாவரவகைகள் (Plant Varieties) பாதுகாக்கப்பட வழி செய்யவேண்டும். ஒப்பந்தம் கையெழுத்தாகி நான்கு வருடங்களுக்கு பிறகு இம்முறை பரிசீலனைக்குட்படுத்தப்படும்' என்று சொல்கிறது.

இவ்வாறாக கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

'புது தாவர வகைகளுக்கான தாவர உற்பத்தியாளரின் (Plant breeders) உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். நுண்உயிர்களுக்கான காப்புரிமைகள் அங்கீகரிக்கபபடவேண்டும் நுண் உயிரி-உயிரியியல் நிகழ்வு முறைகளுக்கான காப்புரிமைகள் அங்கீகரிக்கபபடவேண்டும்.'

டங்கல் திட்டம் அனைத்து நாடுகளும் புதியரக தாவரங்களை பாதுகாக்கும் சர்வதேச ஒப்பந்தத்திற்கு (UPOV) இந்த ஒப்பந்தம் புதியரக தாவர உற்பத்தியாளர்களுக்கு (Plant breeder's) பாதுகாப்பு தரும் அதே வேளையில் மற்றவர்கள் அந்தரக தாவரங்களை விற்பனை செய்வதை தடை செய்கிறது, 1991-ல் திருத்தப்பட்ட இந்த ஒப்பந்தப்படி பாதுகாக்கப்பட்ட ரகங்களைக் கொண்டு புதிய வகையினங்களை உருவாக்குவதும் தடைசெய்யப்பட்டது இவ்வாறாக ஏகபோகம் நிறுவப்பட்டுள்ளது. உயிர் வடிவங்களுக்கும், உயிர் நிகழ்வுகளுக்குமான காப்புரிமைகள் இன்னும் அதிக விளைவுகளைக் கொண்டதாக அமையும்.

மேலும் பன்னெடுங்காலமாக இருந்துவரும் தாவரங்கள் கூட அற்பமான காரணங்கள் காட்டப்பட்டு காப்புரிமை செய்யப்படலாம். இது போலத்தான் மருத்துவ குணங்களைக் கொண்ட 'கெலியோ போர்' என்ற கவுதமாலா நாட்டின் தாவரம் சில தனியார் நிறுவனங்களால் சொந்தம் கொண்டாடப்பட்டது. நைஜீரியாவிலிருந்து மலேசியா வரை பல தாவரங்களுக்கு இது போன்ற கதியே ஏற்பட்டது இப்போதோ நாமறிந்ததும், மிகஉபயோகமுள்ளதுமான 'வேம்பும்' அபாயத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

டங்கல்-ஆதரவாளர்கள் இரண்டு வாதங்களை முன்வைக்கிறார்கள் (1) விதைகள் உள்ளிட்ட இடுபொருள்களின் விலை பெருமளவுக்கு உயராது விலைசரியவும் கூடவாய்ப்பிருக்கிறது இது செயில் ஓம்வெத்தின் வாதம். இதை பிறகு பார்ப்போம். (2) விலைகள் ஓரளவுஉயரக்கூடும் ஆனால் மிகச்சிறந்த புதியரக விதைகள் மற்றும் இடுபொருள்கள் கிடைப்பதால் இந்த விலை யேற்றம் பெரிதாகத் தோன்றாது. யுனிலிவர் பன்னாட்டு நிறுவனத்தின் முன்னால் அதிகாரி கூறுவது என்னவெனில் ''அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு நடைமுறையில் இருக்கும் காலகட்டத்தில் விலை அதிகமாக இருப்பதற்கான காரணத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் விலை ஏற்றத்தின் மூலம் தான் ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்டதை மீட்க முடியும்.''

இருப்பினும், காப்புரிமைகள், பன்னாட்டு நிறுவனங்களின் தங்கு தடையற்ற நுழைவு, விலையேற்றம் ஆகியவைகளால் இடுபொருள்களின் தரம் உயர்ந்ததற்கான சான்றுகள் ஏதுமில்லை. டங்கல் திட்டத்தின் பிரதிவிளைவுகள் மோசமாக இருக்கும் என்று அச்சப்படும் கர்நாடக விவசாயிகள் அமைப்பினர், மிகப்பெரும் உணவுத்துறை பன்னாட்டு நிறுவனமான 'கார்கிலை' தாக்கினார்கள் இந்த நிறுவனம் ஒரு புதியரக சூரிய காந்தி விதையை கண்டுபிடித்தது, இதுசாதாரணரகத்தை விட நான்கு மடங்கு விலை கூடுதலானது. இந்த விதைரகம் பெற்றிருந்ததாக பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட சிறப்புகுணாம்சங்கள் ஏதும் இல்லை என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டது. 'பெப்ஸி' சிலவருடங்களுக்கு முன் இந்தியாவிற்குள் நுழைந்தபோது தக்காளி புரட்சியை கொண்டு வருவோம் என்றெல்லாம் மிகப்பெரிய வாக்குறுதிகளை அளித்தது. ஆனால் நடைமுறையிலோ இந்நிறுவனம் குளிர்பானங்களையும், உருளைக்கிழங்கு சிப்சையும் விற்று குறுகிய காலத்தில் கொள்ளை லாபம் அடிப்பதிலேயே கவனம் செலுத்தியது.

டங்கல்-ஆதரவாளர்கள் நம்மை நம்பச்சொல்வதுபோல், காப்புரிமை (Patent) என்பது எப்போதுமே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பை நிகழ்த்திய சிறந்த தகுதிக்கு அளிக்கப்படும் சன்மானம் அல்ல. ஒரு தனியார் நிறுவனம், அநேகசமயங்களில், ஆயிரக்கணக்கான வருடங்கள் இவ்வுலகில் நிலவிவரும் தாவரங்களை தேர்ந்தெடுத்து அதில் சிறிய மாற்றங்கள் செய்தபின் புதியரகத்தை உருவாக்கி விட்டதாக அறிவிக்கும்.

> ''மூன்றாம் உலகநாடுகளில் இன்னும் பெருமளவில் நிலவும் மரபுக்கூறு வளங்களை அபகரிப்பதற்காக ஒரு மிகப்பெரிய கொள்ளையே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது மரபுக்கூறு பன்முகத்தன்மையையும், மூன்றாம் உலக விவசாயிகளின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான உலகம் தழுவிய கூட்டமைப்பான 'விதை நடவடிக்கை ஒருங்கிணைப்புக்' குழுவின் (Seed action network) ஹெங்க் ஹோப்லிங்க் கூறுவதைப்போல; 'வரலாற்று ரீதியாக, மூன்றாம் உலக விவசாயிகளால் உருவாக்கப்பட்ட மரபுக்கூறு வளங்களை சிறிது மாற்றியமைத்து 'இறுதி வடிவம்' கொடுப்பதை மட்டுமே செய்யும் இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

'தாவர உற்பத்தியாளர்கள்' (Plant breed-er's) தங்களது நலன்களைப் பாதுகாக்க அறிவு)சார் சொத்துரிமை (property rights) என்ற பலம்மிகுந்த சட்ட ஆயுதத்தை பெற்றுள்ளார்கள்.'' வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் பன்னாட்டு நிறுவனங்கள் (MNC's) மூன்றாம் உலக நாடுகளுக்கு சொந்தமான விதைகளையும், மரபுக்கூறுகளையும் அபகரித்து அவற்றில் சில மாறுதல்களைச் செய்து அவற்றிற்கு காப்புரிமையும் (patent) பெற்றுவிடுகின்றன. ஒரு விஞ்ஞானி கூறியது போல ''இந்திய விதைகள் கடற்கரையைத்தாண்டிய உடனே அமெரிக்க பாஸ்போர்ட் பெற்று விடுகின்றனபோலும்.''[3]

டங்கல் திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம், நிரூபணச் சுமை (burden of proof) உபயோகிப்பாளரையேச்சாரும் என்பதாகும். அதாவது காப்புரிமை பெற்ற விதைகளை சட்ட விரோதமாக தாங்கள் உபயோகிக்கவில்லை என்று விவசாயிகள் தான் நிரூபிக்கவேண்டும். இதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்களும் (MNC's) அவர்களது உள்ளூர் முகவர்களும் தகுந்த ஆதாரங்கள் இல்லாமலேயே விவசாயிகளை குற்றம் சாட்ட முடியும். நடைமுறையில் இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதைக் காண்போம்.

''மிகவும் வெற்றிகரமாக விற்பனையாகும் ஒரு உருளைக்கிழங்கு வகையின் காப்புரிமை பெற்ற நிறுவனத்தின் உள்ளூர் முகவர் தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்த முகவர் கோவை மாவட்ட நிலவருவாய் ஆவணங்களிலிருந்து கோவை மாவட்டத்தில் சுமார் 10,000ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளமுடியும். அந்தவகை உருளைக்கிழங்கு விதையை விற்பது ஒரே முகவர் என்பதால், இந்த 10,000ஏக்கருக்கு எவ்வளவு விதை விற்பனையாக வேண்டும் என்பது அவருக்கு தெரியும். 5000ஏக்கருக்கான விதை மட்டுமே விற்பனையாக இருந்தது 10,000 ஏக்கரில்உருளைக்கிழங்கு விதைக்கப்பட்டிருந்தால், மீதமுள்ளவிதை முந்தைய விளைச்சலில் இருந்து எடுத்து வைக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்துவிடும். இவ்வாறு செய்வது புதிய 'காட்' விதிகளின்படி காப்புரிமை விதியைமீறும் செயலாகும். இதனடிப்படையில் முகவர் புகார்செய்யலாம். இவ்வகை மீறல்களை குறித்து விதைமுகவர்கள் எப்போதுமே கவனமாக இருப்பார்கள் என்று நாம் நம்பஇடமிருக்கிறது. விவசாயி ஒவ்வொரு மகசூலின் போதும் விதை எடுத்து வைத்துக் கொள்வதன் மூலம் புதிய விதை விற்பனை குறையும். விற்பனைக் குறைவால் காப்புரிமை பெற்றிருக்கும் நிறுவனத்திற்கு வருமானமும் குறையும்.

நிரூபணச்சுமை மாற்றப்பட்டு விட்டதால் விதை நிறுவன முகவர், யார் சட்டத்தை மீறினார்கள் என்று அடையாளம் காட்டவோ, சான்று காட்டவோ, அல்லது எந்த கிராமத்தில், எந்த அளவிற்கு சட்டம் மீறப்பட்டிருக்கிறது என்று கூறவோ தேவையில்லை. கோவை பகுதியில் உருளைக்கிழங்கு விதை உற்பத்தியை பொறுத்தவரை காப்புரிமை மீறல் நடைபெறுகிறது என்று அரசாங்கத்திடம் முறையிட்டாலே போதுமானதாகும். பின்பு யார் சட்டத்தை மீறியிருக்கிறார்கள் என கண்டுபிடித்து காப்புரிமை பெற்றிருப்பவர்திருப்திபடும் வகையில் அவர்களை தண்டிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சேரும். வேறு வகையில் கூறுவோமானால் காப்புரிமை பெற்றிருக்கும் நிறுவனம் கோவை மாவட்ட விவசாயிகள் காப்புரிமையை மீறியிருக்கிறார்கள் என குற்றம் சாட்ட முடியும்.''[4]

18-ம் நூற்றாண்டு வங்காளத்தில் நெசவாளர்கள் தங்களது உற்பத்திபொருளை அடிமட்ட விலையில் கிழக்கிந்திய கம்பெனிக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்டதை குறித்தும், கயமை மிகுந்த இண்டிகோ முதலாளிகளின் அடக்கு முறை குறித்துப் வரலாற்று நூல்களில் நாம் படித்துள்ளோம். ஆனால் இம்முறை அடிமைப்படுத்துதல் மறைமுகமாகவும், நளினமான முறையிலும்தான் நிகழப்போகிறது சாட்டையோ, துப்பாக்கியோ, வெளிப்படையான நேரடியான வன்முறையோ இருக்காது. குளிர்பதன அறையில் கையெழுத்திடப்படும் காகிதம் மட்டும்தான்...

ஓம்வெத்தும், மற்றைய டங்கல் ஆதரவாளர்களும் நாம் தேவையில்லாமல் ஓலமிடுவதாக குற்றம் சாட்டலாம். தற்போதைக்கு டங்கல் திட்டம் விவசாயிகள் தங்கள் சொந்த வித்துகளை பயன்படுத்துவதை வெளிப்படையாக தடுப்பதில்லை. விவசாயிகளுக்கிடையே வணிக-ரீதியற்ற பரிவர்த்தனையும் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் காப்புரிமை பெற்ற விதைகளை இவ்வாறு விற்பதோ வாங்குவதோ தடை செய்யப்பட்டிருக்கிறது முதலாவதாக நிரூபணப் பொறுப்பு இன்னும் உபயோகிப்பவரை சார்ந்ததாகஉள்ளது ஒரு விவசாயிதான் தனது சொந்த வித்தை பயன்படுத்துகிறாரா அல்லது அக்கம் பக்கத்தவர் இலவசமாக கொடுத்த விதையை பயன்படுத்துகிறாரா என்பதை எவ்வாறு நிரூபிப்பது? பன்னாட்டு நிறுவனத்தின் உள்ளூர் முகவர் ஒரு விவசாயி விதையை விற்பதாகவோ, வாங்குவதாகவோ குற்றம் சாட்ட முடியும். புதிய முறைப்படி இதுமிகப்பெரிய குற்றம்.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாவதாக டங்கல் திட்டம் தற்போதைய வடிவத்தில், ஆப்பின் மெலிந்த பக்கம் போல் உள்ளது. காட்டும், பன்னாட்டு நிறுவனங்களும் விவசாயிகள் தங்கள் சொந்த வித்துக்களை உபயோகப்படுத்தும் உரிமை எப்போதுமே முழு மனதுடன் ஏற்றுக்கொண்டதில்லை. முதல்சுற்றில் வெற்றிபெற்ற பிறகு, கொட்டகையில் முதலில் தலையை வைத்துக் கொள்ள மட்டும் இடம் கேட்டு பிறகு கொட்டகைக்குள்ளேயே நுழைந்த ஒட்டகத்தின் கதைபோல அவை நடந்துகொள்ளும். இதற்குத் தேவையான ஏற்பாடுகளும், சட்ட ஓட்டைகளும் டங்கல் திட்டத்தில் உள்ளன

நாம் ஏற்கனவே கூறியது போல எவற்றிற்கெல்லாம் காப்புரிமை பெறலாம், பெறக்கூடாது என்பதை வரையறை செய்யும் 27வது பிரிவை மறு பரிசீலனை செய்ய டங்கல் திட்டம் பரிந்துரைக்கிறது. நான்கு வருடங்களுக்குப் பிறகு இவ்வாறு மறு பரிசீலனை செய்யப்படும் போது தாவரங்கள், விலங்குகளுக்கும் காப்புரிமை பெறுவது கட்டாயமாக்கப்படுவது நிச்சயம் என்றே படுகிறது. தாவரங்களுக்கு காப்புரிமை அனுமதிக்கப்பட்டால் விதைகளை சேமிக்கும் உரிமை விவசாயிகளிடமிருந்து பறிக்கப்படும். யு பி.ஓ.வி (UPOV) ஒப்பந்தப்படியே கூட விவசாயிகள் தங்கள் வித்துக்களை சேமிக்கும் உரிமையை இழக்கக்கூடும். இதற்காகத் தொடர்ந்து வாதாடிவரும் விதைநிறுவனங்கள், யு.பி ஓ வி. (UPOV) ஒப்பந்தம் கடைசி முறையாக திருத்தியமைக்கப்பட்டபோது, விவசாயிகள் தங்கள் விளைச்சலிலிருந்து வித்தை எடுத்து சேமிக்கும் உரிமையை பறிக்க முயற்சி செய்தன. ஆனால் அந்த சமயத்தில் விவசாயிகள் விதையை சேமித்து வைக்கவும், அதைவெளியில் கொடுத்து சுத்தம் செய்து கொள்ளவும் இருந்த உரிமை பறிக்கப் படுவதற்கெதிராக ஐரோப்பாவில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் மிகநலிந்த வகையிலாவது (in weak form) விதை சேமிக்கும் உரிமை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது.

விதையை சேமித்து வைக்கும் உரிமை 1991க்கு முந்தைய யு.பி.ஓ.வி ஒப்பந்தத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது. ஆனால் மார்ச் 1991-ல் திருத்தியமைக்கப்பட்ட ஒப்பந்தவடிவத்தில் புதியரக உற்பத்தியாளர் (breeders irght) உரிமையிலிருந்து விலகலாகவே (exemption) விதைசேமிக்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இந்த உரிமை கூட 'ஒரு அளவிற்குட்பட்டும், விதை உற்பத்தியாளரின் நியாயமான உரிமையை பாதுகாக்கும் வகையிலும் தான் (பிரிவு15)' அளிக்கப்படவேண்டும் தனது பண்ணைக்கு வெளியே விதைகளை சுத்தம் செய்து கொள்ளும் உரிமையை, இந்த திருத்தப்பட்ட ஒப்பந்தப்படி, விவசாயிகள் முற்றிலும் இழந்தனர். அது மட்டுமல்ல இந்தப் புதிய விதிகள் வித்துக்களை தனது சாகுபடியிலிருந்தே சேமித்துக் கொள்ளும் விவசாயிகளிடமிருந்து 'ராயல்டி' தொகை வசூலிக்கவும் வகை செய்கின்றன! வளர்ந்த நாடுகளில் விவசாய கட்டமைப்பு மாறிவருவதை கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும் போது விவசாயிகள் இந்த முறை மீட்டெடுத்த உரிமைகள் கூட எதிர்காலத்தில் இழந்து விடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.[6]

இவை இந்திய விவசாயத்திற்கு டங்கல் திட்டத்தால் ஏற்படும் விளைவுகளின் ஒரு சில அம்சங்களே தனது வாதத்தின் தொடக்கமாக ஓம்வெத் இந்திய இதிகாசமான மகாபாரதத்திலிருந்து ஒரு கதையை எடுத்து கையாண்டுள்ளார். போர் என்பது பொதுவாக பார்ப்பனர்களின் தொழிலாக இல்லாதிருந்தபோதும், தமது காலத்தின் மிகப்பெரிய ராணுவப் பயிற்சியாளராக இருந்த துரோணாச்சாரியர் ஒரு பார்ப்பனர். அவர் அரச குடும்பத்தை சேர்ந்த இளவரசர்களுக்கு போர்கலையை கற்றுக் கொடுத்து வந்தார். நிஷாத் என்ற வேட்டையாடும் பழங்குடி இனத் தலைவர் ஒருவனின் மகனான ஏகலைவருக்கு துரோணாச்சாரியாரின் மாணவனாக விருப்பம். ஆனால் ஏகலைவர் சமூகத்தின் கீழ்நிலைப்பிரிவை சேர்ந்தவர் எனக்கூறி சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார் துரோணாச்சாரியார், இருப்பினும் தனது விடாமுயற்சியால் ஏகலைவர் நாட்டிலேயே பெரிய வில்வீரராக உயர்ந்தார்.

ஒரு கீழ்சாதி (அல்லது பழங்குடி இனத்தை சேர்ந்தவனாதலால், சாதி அமைப்பை விட்டே வெளியே உள்ளவன்) இளைஞன், இளவரசர்களைவிட பெரும்போர் வீரனாக விளங்குவது என்பது ஒப்புகொள்ளப்பட்ட சமூக நியதிகளுக்கெல்லாம் எதிரானதாக இருந்தது. எனவே துரோணாச்சாரியார், ஏகலைவர் தனது கட்டைவிரலை தானே வெட்டிக்கொள்ளும்படி செய்தன் மூலம் வாழ்நாள் முழுவதும் ஏகலைவரை முடமாக்கினார். கீழ்சாதி மக்கள் கல்வி கற்பதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தார்கள். மேல்சாதி கல்வி தாமாகவே கற்றுக்கொண்டாலும் கூட அத்திறமையை பயன்படுத்துவதும் தடுக்கப்பட்டது.

இக்கதையில் வேறொரு நீதியும் அடங்கியுள்ளது அனைத்து வகை சுரண்டல் அமைப்புகளைப் போலவே, சாதீய அமைப்பும் பெருமளவுக்கு தன்வயப்படுத்தப்பட்டிருந்தது (Internalised) கீழ்சாதிமக்கள் தங்களின் கீழான நிலையை ஒப்புக்கொள்கிறார்கள், அல்லது ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டார்கள் ஏகலைவர் தனது விரலை வெட்டிக்கொள்ள துரோணாச்சாரியாவால் நிர்பந்திக்க முடியவில்லை. பாரம்பரியமாக மேல் சாதிக்கும், வர்க்கத்துக்கும் காட்டப்பட்டுவந்த மரியாதைக்காகவே ஏகலைவர் பணிந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த பழைய கதையில் உருவகப்படுத்தப்படும் மோதல்களும், அநீதிகளும், நவீனஇந்தியாவிலும் தொடர்வதாக ஓம்வெத் நினைக்கிறார். தலித்துக்கள் ஏகலைவர்களின் வழித்தோன்றல்கள் என்பது வரை சரிதான். ஆனால் இன்றைய துரோணாச்சாரியார்கள் யார்? ஓம்வெத்தை பொறுத்தவரை 'காட்'டும், டங்கல் திட்டமும், பன்னாட்டு நிறுவனங்களும் (MNCs) தலித்துகளுக்கு தேவையான திறமைகளையும் (skills) இடுபொருள்களையும் கொடுத்து அவர்களை அதிகாரம் பெற்றவர்களாக்கும், எனவே இந்த அமைப்புகளையும், திட்டங்களையும் எதிர்ப்பவர்கள் நவீன துரோணாச்சாரியர்களாவர்.

'காலாவதியாக' போய்விட்ட சோசலிசக் கருத்தாக்கங்களையும், அரசுடமையையும், அரசின் தலையீட்டையும் சாடுகிறார் கெயில் ஓம்வெத். அவரைப் பொறுத்தவரை அரசு எப்போதுமே ஒடுக்குவதும், செயல்திறன் அற்றதுமே ஆகும் அதிலும் இந்தியஅரசு தலித்துகளின் இயல்பான எதிரிகளான மேல்சாதியினரால் ஆதிக்கம் செலுத்தபடுவதாகும். அவர் பிராண்டியர் இதழில் பின்னாளில் எழுதிய கட்டுரையும் இதே கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது

''எப்படி இருப்பினும் மேல்சாதியினரது நலன்களின் காப்பிடமாக பொதுத்துறை மாறியுள்ளதும், தாழ்த்தப்பட்ட, மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள் அரசு இயந்திரத்தின் கடைநிலை ஊழியராகவே இருப்பதுமான உண்மை மறுக்க முடியாதது. மேலும் அவர்கள் அதிகார வர்க்கத்தில் சிறுபான்மைசக்தியாகவே உள்ளனர். இந்திய சூழலில் 'அரசு' மையவாதம் என்பது பார்ப்பனீயத்தோடு இணைந்தது. உயர் சாதியினரின் கட்டுக்குள் இருப்பது.''[6]

இதைக் கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தனியார் நிறுவனங்கள், அதிலும் டங்கல் திட்டத்தின் பலனை அறுவடை செய்யப்போகின்ற பன்னாட்டு நிறுவனங்கள், தலித்துகளுக்கு நலன்பயப்பதாக அமையும் என்பதை நம்புவதற்கு இடமேயில்லை. போபாலில் யூனியன் கார்பைடு விஷவாயுவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் ஏகலைவர்களின் வழித்தோன்றல்கள் இல்லையா?

சத்திஸ்கரில் முதலாளிகளும், அதிகாரவர்க்கமும் வன்முறையை கட்டவிழ்த்து விட்டதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் கீழ்சாதியினர் என்பதை மறுக்க முடியுமா? சங்கர்குகா நியோகி ஒருசாதி இந்து என்ற காரணத்திற்காக அவர் செய்த அளப்பரிய தியாகத்தை நிராகரிக்க முடியுமா? ஓம்வெத் தூக்கிப்பிடிக்கும் 'காட்' ஜனநாயகம் மற்றும் ஏழை நலனை காக்கும் அமைப்பு என்பதற்கு நிறுவப்பட்ட ஆதாரம் கிடையாது.

நியுயார்க்கிலுள்ள ஒரு மனித உரிமைகள் ஆராய்ச்சி மற்றும் பிரச்சார குழுவான ''சர்வதேச மற்றும் பொது பிரச்சினைகளுக்காக குழு'' வின் தலைவரான வார்ட் வோர் ஹவுளின் கருத்தை கவனத்தில் கொள்வோம். அவர் கூறுகிறார் ''காட் அமைப்பை பொறுத்த இரண்டாவது பிரச்சினை என்னவெனில் அங்கு முடிவெடுக்கும் முறையின் ஜனநாயகமற்றதன்மையே. காட்டின் 'பச்சை அறை' (Green Room) பேச்சுவார்த்தைகளில் ஒரு சில தொழில்மய நாடுகளின் பிரதிநிதிகள் மட்டும் பங்கேற்பதும், இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும்ஏன் மூன்றாம் உலக நாடுகளின் அரசு பிரதிநிதிகளுக்கும் அனுமதி மறுக்கப்படுவதும் ஜனநாயக மற்றதன்மையையே காட்டுகின்றன. இதே போலவே எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்படும் அமைப்பும் ஜனநாயகமற்றதாகவே அமையவிருக்கிறது. கோடிக் கணக்கான மக்களின், குறிப்பாக வளரும் நாடுகளை சேர்ந்த மக்களின் வாழ்வின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் கட்டற்றஅதிகாரத்தை ஒரு சர்வதேச வர்த்தக செயலகத்தின் முகமற்ற அதிகார வர்க்கத்தின் கைகளில் அளிக்கிறது இந்த அமைப்பு.

பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசினைத் தமது முகவராகச் செயல்படுத்தி டங்கல் தீர்மானங்களையொட்டி காட் அமைப்பை விரிவுபடுத்தவும்,வலுப்படுத்தவும் முயல்கிற அமெரிக்காவிலும் கூட விரிவுபடுத்தப்பட்ட சுதந்திர வர்த்தகத்தால் ஏற்கனவே மக்களின்வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. வறுமை அதிகரித்து ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகிஉள்ளன. பிற நாடுகளுடனான அமெரிக்க வர்த்தகம் இருமடங்காக உயர்ந்த அதே காலகட்டத்தில் தான் அமெரிக்க தொழிலாளியின் சராசரி வார ஊதியம் 18சதவீதம் வீழ்ச்சியடைந்தது; ஏழை அமெரிக்கர்களின் எண்ணிக்கை முன்னெப்போதையும் விட அதிகரித்தது; வருமானப் பங்கீட்டில் 40 வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட அதிக சமமின்மை உருவானது.'''

மிகக்குறைந்த எண்ணிக்கையில் அரசு கடைநிலைப்பணிகளில் தலித்துகளுக்கு இடம் கிடைப்பது.அவர்களை அதிகாரம் உள்ளவர்களாக்காது என்பது உண்மையே. ஆனாலும் இட ஒதுக்கீடு முறை தனது போதாமைகளையும், திரித்தல்களையும் மீறி, மிகக்குறைந்த அளவிளாவது தாழ்த்தப்பட்டவர்கள் அரசு துறையில் நுழைவதற்கு வாய்ப்பளிக்கிறது. ஆனால் தனியார் துறையின் உயர்பதவி வகிப்போர் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் இந்திய மேலாளர்களின் பட்டியலைப்பார்த்தோமானால் மிகக் குறைந்த ஏகலைவர்களையே அதில் நாம் காண முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

தனிமனித விருப்பு வெறுப்பற்ற, லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட உலகமுதலாளித்துவ அமைப்பு சாதிய வேறுபாடுகளை மீறி நடந்து கொள்ளும் எனஓம்வெத் அர்த்தப்படுத்துகிறார்போலும். முதலாளித்துவம் மத,இன பாகுபாடுகளை சமனப்படுத்தி உலகளாவிய இரண்டேவர்க்கங்களை எதிரும் புதிருமாக நிறுத்தும் என ஒரு காலத்தில் நம்பப்பட்டது. பணம் பண்ணுவதில் தோற்றுப் போனவர்களே மத நம்பிக்கை மறுப்பாளர்கள் என 18-ம் நூற்றாண்டில் வால்டேர் கூறினார். அதாவது பொருளாதார வெற்றியே, மதநம்பிக்கைகளையும் மீறி சமூக மதிப்புடையதாயிருந்தது. 19-ம் நூற்றாண்டில் மெக்காலே, ஒரு ஹைலாக்கினுடைய நிதி பங்களிப்புக் கூட ஏற்றுக்கொள்ளப்படலாம் என்கிற நிலையில் நவீனமுதலாளித்துவம் செமிட்டிஸ எதிர்ப்பை காலவதியாக்கி விட்டது என்று எண்ணினார். இந்தியாவில் முதலாளித்துவம், குறிப்பாக, சாதீய முறையை ஒழித்து விடும் என்று நம்பப்பட்டது. இந்த அனுமானங்களெல்லாவும் ஓரளவு மட்டுமே நடைமுறையில் உண்மையானது.

முதலாளித்துவம் முன்னெப்போதும் கண்டிருந்ததைவிட உலகமயமாதலை கொண்டுவந்தது உண்மைதான். ஆனால் அது இன மோதல்களை தனது லாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டதையும் மறுக்க முடியாது. முந்தைய சோவியத் நாட்டில் ஏற்பட்ட முதலாளிய மீட்பிற்கு ஆணிவேராய் விளங்கியது இன அதீத உணர்வுகளே. மத்திய காலம் அல்லது அதற்கு முந்திய காலத்தில் நிலவிய சாதிய அமைப்பே இன்று நிலவுவதாகக் கூறமுடியாது. ஆனாலும் சாதீய அமைப்பே இன்றளவும் சமூக-பொருளாதார சுரண்டலில் முக்கியபங்கு வகிக்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் ஏகலைவர்களுடன் கூட்டு சேர்வதைவிட துரோணர்களை பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகிறது.

சந்தை பொருளாதாரத்திற்காக வாதிடும் ஓம்வெத், சந்தை முதலாளித்துவ அமைப்பிற்கு மட்டும் உரியதல்ல என்கிறார். ஒருநிலைவரை அது சரியே. உண்மையில் இது மாவோவிற்கு பிந்திய சீன தலைமைக்கு மிகப்பிடித்த வாதமே ஆகும். புதிய கற்கால புரட்சியிலிருந்தே சந்தை என்பது ஏதோ ஒருவடிவத்தில் இருந்து வந்திருக்க வேண்டும். சோசலிசம் இருந்தபோது, சோசலிசப் பொருளாதாரமும் காலத்திற்கு ஏற்பவும், நாட்டிற்கு ஏற்பவும் வேறுபட்ட அளவில் ஒரு சந்தை முறையை உள்ளடக்கியதாகவே இருந்தது. ஆனால்சோசலிச சந்தை முதலாளித்துவ சந்தையிலிருந்து குணாம்ச ரீதியில் வேறுபட்டது. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உலக நிதி நிறுவனங்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள உலக முதலாளித்துவ சந்தையின் கதை வேறு.

சந்தை, சமத்துவத்திற்கு கொண்டு செல்லும் என ஓம்வெத் எண்ணுகிறார். இது ஏட்டளவில் சாத்தியமே. இங்கிலாந்து உள்நாட்டு யுத்தத்தின் சமப்படுத்துவோர், அமெரிக்கப் புரட்சி காலத்து பெய்ன் மற்றும் ஜெபர்ஸனின் ஆதரவாளர்கள், பிரஞ்சு புரட்சியின் ஜெகோபின்ஸ் ஆகியோர் ஓரளவிற்கு சமமான, சிறிய உற்பத்தியாளர்களை கொண்ட சமூகத்தை கற்பனை செய்தனர். நடைமுறையில் இது சாத்தியப்பட்டிருக்குமா என்பதை சொல்ல முடியாது. சந்தையின் விதிகள் விரைவில் சமத்துவ இன்மைக்கு இட்டுச்சென்றிருக்கக்கூடும். ஆனால் இந்த பரிசோதனை நடைமுறையில் நிகழ்த்தப்படவேயில்லை. தொழிற்புரட்சி உலகத்தை முழுமையாக வேறு வழியில் நடத்தி சென்று விட்டது. கண்மூடித்தனமான பகாசுர நிறுவனங்களின் கூட்டமைப்பு உருவாக்கமும், உலகமயமாக்கலும் நடைபெறும் இந்த சகாப்தத்தில் அது நெடுந்தொலைவுக் கனவாகத் தோன்றுகிறது.

எப்படி இருப்பினும் சந்தை பற்றிய ஆய்வு, கெயிலின் வாதத்தை ஆதரிப்பதாக இல்லை டங்கல் திட்டம் ஒரு சுதந்திர சந்தை உலகை உருவாக்கவும் வழிசெய்யவில்லை. மாறாக ஒரு சில நாடுகள் மற்றும் குழுக்களின் முன்னெப்போதும் கண்டிராத ஏகபோகத்தையே அறிவுறுத்துகிறது

டங்கல் திட்டம். தலித்துகளுக்கு பெருமளவில் முதல் தரமான இடுபொருள்களை பெறுவதற்கான வாய்ப்பை தருமென ஓம்வெத் நம்புகிறார். இந்த நம்பிக்கையின் ஆதாரம் சிறிதும் பிடிபடவில்லை. வரும் காலத்தில் டங்கல் திட்டம் தனது வலையை பெரிதுபடுத்தும் என்பதைக்கண்டோம் பெயரைத்தவிர மற்ற அனைத்து அம்சங்களிலும் விவசாயிகள் பண்ணையடிமைகளாக்கப்படுவர். டங்கல் திட்டம் இப்பொது இருக்கும் வடிவத்திலும் கூட விவசாயிக்குழுக்கள் விதைகளை தங்களுக்குள் பரிவர்த்தனை செய்துகொள்வதை தடைசெய்கிறது. இந்த பரிவர்த்தனை முறையே பசுமைப்புரட்சியை பரப்புவதில் முக்கிய பங்காற்றியது. மற்ற நிறுவனங்களும் முடக்கப்படும்

"இந்தியாவில் விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICAR), மாநில விவசாய பல்கலைக் கழகங்கள். மாநில விவசாயத்துறைகள் ஆகியவற்றில் விதைகளை குறித்த ஆராய்சிகள் நிறைய நடந்துள்ளன புதிய ரகப்பயிர்களின் விதைகள் விவசாயிகளும், மற்ற விதை நிறுவனங்களுக்கும் கட்டுப்பாடின்றி வழங்கப்பட்டன. இதன் மூலம் பொதுத்துறை நிறுவனங்கள்கள் வழங்கிய விதைகளைக் கொண்டு சிறு விதை உற்பத்தி நிறுவனங்கள் அதிக அளவில் மறு உற்பத்தி செய்து அவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்தன. விவசாயிகளும் விருப்பப்பட்டால்



படிப்பகம்

www.padippakam.com

இவ் விதைகளை மறு உற்பத்தி செய்து விற்பனை செய்யவும் அனுமதிக்கப் பட்டனர்.... ஆனால் காப்புரிமை (Patent right) பெறும் முறையோ அல்லது தாவர உற்பத்தியாளர் உரிமையோ(Plant breeders right)அறிமுகப் படுத்தப்பட்டால், விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICAR), மாநில விவசாயப் பல்கலைக் கழகங்கள், மற்றும் இதர பொதுத் துறை அமைப்புகளின் ஆராய்ச்சிப் பணிகள் முடக்கப்படும்.

ஒவ்வொரு கட்டத்திலும் விதைகளின் விலை பன்மடங்கு உயருவதால் உணவுப் பொருட்கள் விலையும் பன்மடங்கு உயரும். இதை விட மோசம் என்னவென்றால் எந்த வகைப்பட்ட விதை சந்தையில் உலவ வேண்டும் என்பதை பன்னாட்டு நிறுவனங்கள் முடிவு செய்யும் நிலையும் ஏற்படும். இதே பன்னாட்டு நிறுவனங்களே விவசாய-ரசாயனங்களையும் உற்பத்தி செய்வதால் நாம் மேலும் மேலும் அதிக ரசாயன உரங்களை உபயோகப் படுத்தவேண்டிவரும்.[8]

'பொதுநிறுவனங்கள்' துரோணரிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றன என்பதை நாம் ஒப்புக் கொண்டாலும், மேலே கண்ட நிலைமை ஏகலைவர்களுக்கு சாதகமான ஒன்றல்ல. பாதுகாக்கப்பட்ட உற்பத்திக்கு, சுதந்திர வர்த்தகம் எதிர்நிலை என்றும், ஏகபோகத்திற்கு எதிர்நிலை போட்டி என்றும் பழையவாதத்தையே ஓம்வெத் முன்வைக்கிறார். போட்டியும், சுதந்திர வர்த்தகமும் விலைகளை குறைக்கும் என்று எதிர்ப் பார்க்கப்பட்டது. எனினும் பன்னாட்டு நிறுவனங்களின் தங்குதடையற்ற நுழைவு என்பது ஏகபோக நிலையை குறைப்பதற்கு பதில் அதிகரிக்கவே செய்யும். இதை விலை நீட்சித்தன்மை மற்றும் சந்தையின் பங்கை விரிவுபடுத்துதல் என்ற வாதத்தைக் கொண்டு ஓம்வெத் மறுக்கப் பார்க்கிறார்.

அவர் கூறுகிறார்: ''ஒரு பன்னாட்டு நிறுவனம் என்றாலும். அல்லது இந்திய நிறுவனம் என்றாலும் இந்தியாவில் விதைகளை விற்பனை செய்ய முயலும்போது சந்தையை ஒட்டியே விலை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும். அதிகம் விலை நிர்ணயம் செய்யமுடியாது. எந்த விதமான அறிவையோ, தொழில் நுட்பத்தையோ பெறவிரும்பும் ஏகலைவர்கள் துரோணாச்சாரியருக்குப் பதில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தையே தேர்ந்தெடுக்கக்கூடும்''[9].

இப்போது ஏகபோக விலைகளுக்கு கூட ஒரு வரம்பு உண்டு என்பது உண்மைதான். ஒரு முழுமையான ஏகபோகம்கூட ஒரு பொருளுக்கு 10 லட்சம் டாலர் விலை நிர்ணயிக்க முடியாது. அப்படி நிர்ணயித்தால் வாங்குவதற்கு ஆளே இருக்காது. ஆனால் அதே சமயத்தில் ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயனுறும் வகையிலும் தனது பொருட்களின் விலையை பன்னாட்டு நிறுவனங்களோ அல்லது இந்திய நிறுவனங்களோ விலையை நிர்ணயிப்பதுமில்லை. இந்த நிறுவனங்கள் குறிபார்ப்பது, நிதிவசதி அடிப்படையில், மக்கள் தொகையில் மேல்தட்டில் உள்ளவர்களையே. மேலும், பிரச்சினை இவ்வளவு எளிமையானதாக இருக்குமென்றால், துரோணாச்சாரியாகளும் (அதாவது பொதுத்துறை நிறுவனங்களும், அமைப்புகளும்) சந்தையில் தமது பங்கை அதிகரிப்பதற்காக ஏன் குறைந்த விலையில் இடுபொருள்களை விற்கக்கூடாது? ஓம்வெத்தின் பதில் பொருளாதார அடிப்படையில் கூறப்படவில்லை. இந்த மோசமான துரோணாச்சார்யர்கள் செயற்கையான விலையேற்றத்தின் மூலம், ஏகலைவர்கள் வாங்க முடியாத நிலையை உருவாக்குகிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் பொருட்களை (சந்தைக்கு கொண்டுவராமலேயே அமைதியாக தமது மேல் சாதி நண்பர்களுக்குக் கொடுத்து விடுகின்றனர் வழக்கமான வாதம் கீழ்வருவாறு செல்கிறது. பன்னாட்டு நிறுவனங்களால் தங்களது முன்னேறிய தொழில் நுட்பம் மற்றும் ஏராளமான நிதி ஆதாரங்கள் மூலம் மிகத் தரம் வாய்ந்த அதே சமயத்தில் விலை மலிவான விதைகளை உற்பத்தி செய்யமுடியும். ஆனால் கார்கில் மற்றும் பெப்ஸி விஷயத்தில் இதற்கு நேர் எதிரான உண்மையை எதிர்கொண்டோம்.

இரண்டு ஸ்தூலமான அட்டவணை அல்லது கணக்குகள் தருவதன் மூலம் ஓம்வெத் தனது வாதத்தை வலிமைப்படுத்த வேண்டும் ஒன்று டங்கல் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு இடுபொருள்களின் விலை எப்படி இருக்கும் என்பது, மற்றொன்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான தலித்துக்களின் வருமானம்.

டங்கல் திட்டம் இந்தியா மற்றும் பிற மூன்றாம் உலக நாடுகளுக்கு மேற்கத்திய நாடுகளின் சந்தையை பெருமளவுக்கு திறந்துவிடும் என்று ஓம்வெத் நம்புகிறார். மூன்றாம் உலக மக்களின் வறுமை பிரச்சினையை போக்க அவர் கூறுகிற மந்திரத் திறவுகோல் 'வர்த்தகம்,உதவி அல்ல'. இதுதான் டங்கல் ஆதரவாளர்களின் முக்கிய வாதமும்கூட. டங்கல் திட்டம் சந்தைகளை திறந்து விடுமானால், விவசாய உற்பத்தி விலைகள் குறைவாக உள்ள இந்தியா தனது மலிவான உணவுப்பொருள்களை வடஅமெரிக்க மேற்கு ஐரோப்பிய சந்தையில் குவித்துவிடலாம் டங்கல் திட்ட ஆதரவாளரான வர்த்தகத் துறை செயலாளர் கணேசன், புதிய நிலைமைகளில் இந்திய ஏற்றுமதி மிகப் பெரிய அளவுக்கு அதிகரிக்கும் என உறுதி கூறுகிறார். டங்கல் ஆதர



படிப்பகம்

www.padippakam.com

வாளர்களில் மற்றொருவரான சுப்பிரமணியம் சாமியும் இதையே கூறுகிறார். ''இதில் ஒரு பொது ஒப்பந்தம் ஏற்படுமானால், இந்திய ஏற்றுமதியை ஒரு சில வருடங்களில் தற் போதைய 450 கோடி ரூபாயிலிருந்து, 5,000 கோடி ரூபாயாக உயர்த்தும்.'' 10

ஓம்வெத்தும்கூட சுதந்திரபோட்டி சூழ்நிலையில் அதிகம் செல்லம் கொடுக்கப்பட்ட, அதிக ரசா யனமயப்படுத்தப்பட்ட மேற்கத்திய விவசாயத்-தை இந்திய விவசாயம் எளிதில் வெற்றி கொள் ளும் என நம்புகிறார்.

மேலும் ஓம்வெத் கூறுகிறார்: அதேபோல், எப் போது தொழிலிலோ விவசாயத்திலோ வெற்றி என்பது அரசின் மான்யங்கள், சலுகைகள் புர வலர்கள், ஊழல் ஆகியவற்றை சார்ந்தில்லாமல் கடின உழைப்பை சார்ந்ததாக மாறுகிறதோ அப்போதுதான் காஞ்சா இலையா 'உற்பத்தி சாதிகள்' என சரியாக அழைக்கும் சாதியினரே சிறந்து விளங்குவர். 11

மிகச் சரியாக போட்டி நிலவும் உலகில் இந்த முன் அனுமானம் மெய்யாகலாம் அல்லது இல் லாமல் போகலாம். ஆனால் இது டிராக்டர் வைத்திருக்கும் பிரஞ்சு விவசாயிக்கும், மாடு களை உபயோகிக்கும் இந்திய விவசாயிக்கும் இடையே நடக்கும் நேரடியான போட்டி யன்று. உணவு உற்பத்தியில் ஈடுபடும் நிறுனங்கள் நாளுக்கு நாள் ஒருங்கு கூடி கூட்டு நிறுவனங் கள் ஏற்படுத்திக் கொள்கின்றன (Cartalisong) மேலை நாட்டு பன்னாட்டு நிறுவனங்கள் ஒன்றை ஒன்று விழுங்கிக் கொண்டு, மேலும் மூன்றாம் உலக நாடுகள் மற்றும் முந்தைய சோவியத் நிறுவனங்களையும் விழுங்குகின்றன. பிரான்ஸின் சோர்ஸ் பெர்ரின் அல்லது ஹங்கே ரியன் பேவோரிஸா ஆகிய குளிர்பான நிறுவ னங்களின் கதி இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்று (இந்தியாவில் டாடா ஆயில் மில்ஸை, இந்துஸ் தான் லீவர் மற்றும் கோத்ரேஜ், புராக்டர் அண்டு கேம்பிள், மற்றும் பார்லே, கோகோ கோலா இணைப்பு/விழுங்கல் குறிப்பிட வேண்டி யவை—மொ.பெ.) இந்த விவசாயம்—சார்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் (MNC's) மிகக் குறைந்த விலையிலான பொருட்களுக்கு போட்டி போட்டு, ஒரு மூன்றாம் உலக நாட்டு உற்பத்தி யாளரை மற்றொரு நாட்டு உற்பத்தியாளருக்கு எதிராக நிறுத்தும். ஒட்டு மொத்த உணவு வர்த் தகத்தில் ஒரு வேளை லாபம் கிடைத்தாலும் கூட இந்திய விவசாயிக்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை.

மேலை நாடுகளில் மான்யம் குறைக்கப்படுவ தால், சர்வதேச சந்தையில் இந்திய விவசாய விளை பொருள்களின் போட்டியிடும் தன்மை அதிகரிக்கும் என்பது டங்கல்-ஆதாவாளர்களின் மற்றொரு வாதமாக இருக்கிறது. எனினும் இந்த மான்யக்குறைப்பு அமலுக்கு வருமானால், ஐரோப்பாவில் இந்த குறைப்புக்கு கடும் எதிர்ப்பு நிலவுவதை நாம் காண்கிறோம், இந்தியா இறக்குமதி செய்யும் சர்க்கரை, உணவு எண்ணெ போன்ற பொருட்களின் விலைதான் உயருமே ஒழிய, இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட் களின் விலை உயராது.

'டங்கல் திட்டம் ஏற்றுக் கொள்ளப் படுமானால் இந்திய விவசாய ஏற்றுமதி மேலை நாடுகளுடன் போட்டியிடும் அளவுக்கு மாறும் என்று சொல் வதற்கில்லை. உள் நாட்டு மற்றும் ஏற்றுமதி மான்யங்கள் குறைப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு தளர்த்தல் போன்றவையின் மொத்த அளவு 30 சதத்திற்கு கீழ்தான். எனவே ஏற்கனவே நிலவியதில் 70 சதம் மான்யம் நடை முறையில் இருக்கும் போது நம்மை போன்ற மூன்றாம் உலக நாடுகளால் மேலை நாடுகளின் மான்யம் பெற்ற விவசாயத்தோடு போட்டியிட முடியாது. மேலும் பல விவசாய உற்பத்தி பொருள்களைப் பொறுத்த வரை இந்தியா குறைந்த விலை உற்பத்தியாளர்களில் ஒன்று அல்ல. 12''

மேலும் ஒன்றைக் கூறியாக வேண்டும். டங்கல் திட்டம் சந்தை திறந்து விடல் மூலம் லாபம் அடைய முடியாத அளவுக்கு இந்திய விவசாயி களை வேறு வழிகளில் கடுமையாக தடுக்கிறது.

இவ்வாறாக புதிய அமைப்பில் இந்தியா உணவு பொருள் ஏற்றுமதியில் முக்கிய இடத்தைப் பெறு வதற்கு எதிரான விஷயங்களே அதிகம் உள் ளது. இவற்றையெல்லாம் மீறி இந்த அதிசயம் நடந்து விட்டாலும், அது முழு அளவில் பயன் தருவதாக அமையுமா? மக்கள் உணவுத் தேவை பூர்த்தியான பிறகு ஏற்றுமதி செய்வது என்பது வேறு விஷயம். ஆனால் இந்தியா மற்றும் வேறு மூன்றாம் உலக நாடுகளின் நிலை இதுவல்லவே. பிரிட்டிஷ் இந்தியாவில் குறிப்பிட்ட காலங்களில் தொடர்ந்த மிகக் கொடுமையான பஞ்சங்கள் தற்போது மறைந்து விட்டாலும், அங்கொன் றும் இங்கொன்றும் சிறிய பஞ்சங்கள் ஏற்படுவ தும், கணிசமான மக்கள் தொகையினர் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப் பட்டுள்ளனர். இப் போது கூட ஒரிஸ்ஸா, பீகார், ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசத்தின் பகுதிகளில் 'பஞ் சம்' நிலவுவதை நாம் காணலாம். வரலாற்றை திரும்பிப் பார்க்கையில் 19-ம் நூற்றாண்டின் மத்தியில் அயர்லாந்து கோதுமையை ஏற்றுமதி செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் பெரும் பான்மையான மக்கள் பஞ்சத்தால் இறந்தனர். மிகச் சமீப காலத்தில் பல மூன்றாம் உலக நாடு களில் ஏற்றுமதிக்கான பணப்பயிர்களுக்கு முக்கி



படிப்பகம்

www.padippakam.com

யத்துவம் கொடுக்கப்பட்டதால், அந்நாட்டு மக்களின் உணவுப்பொருள் நுகர்வு கடுமையாக பாதிக்கப்பட்டது. இருந்தாலும், புதிய ஏற்பாட்டில் உணவு உற்பத்தி பாய்ச்சல் வேகத்தில் முன்னேறும் என்பது டங்கல் ஆதரவாளர்களின் வாதம். அதாவது நமது மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்துவிட்டபிறகு, மிகப்பெரிய அளவு ஏற்றுமதியும் செய்யும் அளவுக்கு உற்பத்தியும் பெருகும் எனக் கூறப்படுகிறது. இது கேள்விக் குறியதே ஆகும்.

'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற வாதத்தை ஓம்வெத் பயன் படுத்துகிறார். போர்க்குணமிக்க மேல்சாதியினரின் கட்சியான பாரதீய ஜனதா கட்சி டங்கல் திட்டத்தை எதிர்க்கிறது. எனவே சந்தேகத்துக்கிடமின்றி டங்கல் திட்டம் ஏகலைவர்களுக்கு ஆதரவாகவே அமையவேண்டும். பா. ஜ. கட்சி ஒரு விஷயத்தை எதிர்க்கிறது என்ற ஒரே காரணத்தால் அந்த விஷயம் தன்னிச்சையாகவே சரியானதாக அமைந்து விடமுடியாது. பொய்களின் தந்தையான சாத்தான் கூட சில சமயங்களில் உண்மையைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று மத்திய கால கிறித்துவ இறையியல் நமக்கு கூறுகிறது.

ஏன், ஹிட்லருக்கு கூட போருக்கான சில சரியான காரணங்களைக் கூறமுடிந்தது; நியாயமற்ற வெர்செய்லிஸ் ஒப்பந்தம், வெய்மர்குடியரசின் கீழ் நிலவிய ஊழல், மற்றும் பொருளாதார துயரம், மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் ஒடுக்குமுறை மற்றும் ஏமாற்று வேடம் ஆனால் அவன் என்ன செய்தான் என்பது வேறு கதை.

எப்படியிருப்பினும் பா.ஜ.கட்சி நிலைப்பாட்டின் நேர்மை சந்தேகத்திற்குரியது. மக்களின் பல்வேறுபட்ட பகுதிகளை ஈர்க்க சங்பரிவார் பல குரல்களில் பேசிவருகிறது. இது நெடுநாளைய நோக்கில் இது பலவீனமாக மாறினாலும் கூட அதன் பலத்திற்கான மூலங்களில் இது ஒன்று உதாரணத்திற்கு, பரிவாருடன் தொடர்புடைய பல (சன்னியாசிகள்) 'மனு'வுடைய சட்டங்கள் நடைமுறைப்படுத்தவும், ஒரு இறுகிய சாதி-அடிப்படையிலான சமூகத்திற்கு திரும்பவும் கோருகின்றனர். ஆனால் இது சமீபத்தில் பா ஜ. கட்சி தீண்டாமையை கண்டித்தும், வேலைக் ஒதுக்கீட்டிற்கான மண்டல் அறிக்கையை அமுல் படுத்துவோம் என்ற வாக்குறுதி அடங்கியது மான 'சமூக அறிக்கை' வெளியிடுவதை தடுக்கவில்லை பாரதீய ஜனதா கட்சி இசுலாமியர்களை படுகொலை செய்யும் அதே நேரத்தில், இசுலாமிய வாக்காளரை கெஞ்சவும் தயங்குவதில்லை.

அதனுடைய 'பொருளாதார திட்டத்தில்' அது அனைவருக்கும், எல்லாம் தருவதாக கூறுகிறது இவ்வாறாக ஆர். எஸ். எஸ். பழையவகையிலான பொருளாதார தேசியவாதத்தை உமிழ முடிகிறது. தாராள மயவாதம் இந்தியாவை கடன் பொறியில் சிக்கவைக்கிறது என ஜோஷி கூற முடியும். இது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவரே முரண்பட்டு நிற்கிறார். உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் பரிந்துரைக்கும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி, அதிக இறக்குமதியையும் கோருவதாகும். இரண்டு வெற்றிக்கரமான மாதிரிகளை பார்ப்போம். 60 பில்லியன் டாலர்களுக்கு மேல் அன்னியச் செலவாணி பெறும் சைனாவுக்கு, 60—70 பில்லியன் டாலர் அன்னியக்கடனும்உள்ளது.[14] அதே போல தாய்லாந்தும். பாலியல் சுற்றுலா மூலம் கிடைக்கும் லாபம்தான் அந்நாட்டு வர்த்தக பற்றாக்குறையை சமாளிக்கக் கூடிய வரம்புக்குள் வைக்க முடிந்துள்ளது.[15] அதே சமயம் பா. ஜ. க. தனது நடுத்தர வணிகர் கட்சி என்ற பிம்பத்தை விட்டு விட்டு, பெரிய வணிகர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் ஆதரவை பெற விளைந்திருக்கிறது. அமெரிக்காவிற்கு சென்ற பா.ஜ.கவின் பிரதிநிதிகள் அங்குள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு தமது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளனர். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தனது தேசிய சொல்லாடல்களை கைவிட்டு விட்டு டங்கல் திட்டத்தை ஏற்கும் என்று நாம் தைரியமாக நம்பலாம்.

மேலும், பா. ஜ. கட்சி தற்போது தலித்துகளை தன்பக்கம் இழுக்க முனைந்து செயல்பட்டுவருகிறது இது அந்தக்கட்சியை ஏகலைவர்களின் 'தாயத்து' என கூறப்படும் டங்கல் திட்டத்தை ஆதரிக்கும் நிலை எடுக்கத் தள்ளக் கூடும்.
மற்றொரு கட்டுரையில் இந்தப்பிரச்சினையை வேறொரு கோணத்திலிருந்து அணுகுகிறார் கெயில் ஓம்வெத்

> ''இறுதியாக, நடைமுறையில் காப்புரிமை பிரச்சினை, அது பெரிதுபடுத்தப்பட்டுள்ள அளவு அவ்வளவு தீவிரமானதல்ல: காப்புரிமைகள் விலை அதிகம் இருப்பதன் மூலம், நீடித்து நிலைத்திருக்காத உயிரியல் தொழில் நுட்பத்தை வாங்க முடியாமல் போனால் மிகவும் நல்லது''[16]

குறைந்தபட்சம் இது ஒரு சுவாரசியமான வாதமாகும். நாம் ஏற்கனவே பார்த்தபடி டங்கல் திட்டம் விவசாயத்தை இன்னும் இயற்கை சூழலை அழிக்கும்படி செய்யும். மேலும் இது அவரது மையவாதத்திலிருந்து முரண்படுகிறது. விலைகுறைந்த நவீன இடுபொருள்களை தலித்துகள் பெற வழிவகை செய்கிறது என்பதற்காக டங்கல் திட்டம் ஆதரிக்கப்பட வேண்டுமா? அல்லது இதற்கு நேர்மாறாக நவீன இடுபொருள்கள் கிடைப்பதை தடுக்கிறது என்பதற்காக ஆதரிக்கப்பட வேண்டுமா?



படிப்பகம்

www.padippakam.com

இதுவரை கீழ் சாதிகளும், வர்க்கங்களும் மோசமாக நடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் விரைவாக மறு காலனியாக்கப்படும் இந்தியாவில் அவர்கள் வளமாகவும், தன்மானத்துடனும் வாழப் போகிறார்களா? இது நடக்காது என்றே தோன்றுகிறது. அவர்கள் நிலை மேலும் மோசமடையக் கூடும்.

**குறிப்புகள்:—**

1. 'டங்கல் புரபோஸல்ஸ் அண்டு இந்தியன் அக்ரிகல்சர்', உஷாமேனன் இன் டங்கல்'ஸ் டிராப்ட் டெக்ஸ்ட்; இந்தியன் அக்ரிகல்சர் நேஷனல் வொர்க்கிங் குரூப் ஆன் பேடன்ட் லாஸ்-1992.

2. 'ஐ.பி.ஆர்.எஸ்.: இந்தியாஸ் அன்பவுண்டட்பியர்ஸ்': டி. தாமஸ், எகனாமிக் டைம்ஸ். 16—6—93.

3. பேடண்ட் பால்லி: பி. சாய்நாத், தி இண்டியன் ஸ்கூல் ஆப் சோசியல் சயன்சஸ், பம்பாய், 1992.

4. 'பர்டன் ஆப் புரூப்: டேஞ்சர் கிளாஸ் இன் டங்கல் டிராப்ட்': சுமன் சகாய், எகனாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி 15—5—93.

5. மேனன். மேலே சொல்லப்பட்டது.

6. 'த பகுஜன் சமாஜ் பார்ட்டி': கெயில்ஓம் வெத் பிரண்டியர், 12—6—93.

7. 'ரெஸிஸ்டிங் டங்கல்'ஸ் டிசைன்': வார்ட் மோர்ஹவுஸ், பிரண்ட்லைன், மே. 8—12—93

8. பேடண்ட் போல்லி,

9. 'த டங்கல் டிராப்ட் அண்டு அமெரிக்கன் இம்பீரியலிசம்-11, கெயில் ஓம்வெத், பிரண்டியர், 22—5—93.

10. பீப்பிள்ஸ் கன்சன்ஸஸ் அகெய்ன்ஸ்ட் டங்கல் டிராப்ட் டெக்ஸ்ட்: நேஷனல் வொர்கிங் குரூப் ஆன் பேடன்ட்லாஸ், 1993.

11. ஓம்வெத்—ஆப்—சிட்.

12. பொலிடிகல் எகானமி ஆப் உருகுவே ரவுண்ட் ஆப் டிரேட் நெகோஷியேசன்ஸ்: முச்குண்ட்துபே இன் 'டங்கல்ஸ் டிராப்ட் டெக்ஸ்ட்; கிரிடிகல் அனாலிஸஸ், நேஷனல் வொர்க்கிங் குரூப் ஆன் பேடன்ட்லாஸ் 1992.

13. இது பற்றிய பார்வை நூல்கள் ஏராளம். உதாரணத்திற்கு ஒன்று, 'ஹவ் த அதர் ஹாப் டைஸ்' : சூசன் ஜார்ஜ்; பெங்குவின், 1976.

14. இன்டர்வியூ வித் வில்லியம் ஹின்டன், ரீபிரிண்டட் இன் ஜனசக்தி மார்ச் 1993.

15. 'தாய்லாந்து: ப்ரீமார்க்கெட்ஸ், எய்ட்ஸ் அண்ட் சைல்ட் பிராஸ்டிடியூசன்,: ஜேம்ஸ் பெட்ரஸ் அண்டு டியன்சாய் வோங் சாய் சுவான் இ பி. டபுள்யூ-13—3—93.

16. 'பயோ டெக்னாலஜி: மிராகுலஸ் ஆர் மர்டரஸ்': கெயில் ஓம்வெத் 22—5—93. ●

---

## சில முக்கிய பிழை திருத்தங்கள்

1. சென்ற இதழில் (6) ''பெரியார் பார்வையில் மொழி'' (பக் 111-115) முழுவதிலும் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டவை அனைத்தும் சம்மந்தா சம்மந்தமில்லாமல் கட்டுரை முழுதும் ஆங்காங்கு கலந்து அச்சிடப்பட்டு விட்டன. அச்சகத்தில் ஏற்பட்டுவிட்ட இந்தப் பெரும் பிழையை மன்னிக்க வேண்டுகிறோம்.

2. சென்ற இதழில் (6) பக்கம் 86-ல் இடப்பத்தியில் கடைசிக்கு முதல் வரியில் See below என அச்சிடப்பட்டுள்ள இடத்தில் உள்ள இரண்டு வரிகள் (மற்றும் மன ரீதியிலான வலிமை புரியும், பொருளாதார ரீதியிலான) வலப்பத்தியில் 19-20 வரிகளாக சேர்க்கப்பட்டுள்ளன. அங்கு இவற்றை நீக்கி விடவும்.

3. (i) இந்த இதழில் (7) பக்கம் 37-ல் வலப்பத்தியில் 38வது வரியில் ''இந்துவல்லாத'' என்பதற்குப் பதிலாக ''இசுலாமியரல்லாத'' எனத் திருத்தி வாசிக்கவும்.

(ii) பக்கம் 42-ல் இடப்பத்தியில் 35வது வரியில் ''சின்கா'' என்பதற்குப் பதிலாக ''மிருதுளா சின்கா'' எனத் திருத்தி வாசிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

களஆய்வு

## சங்கும் வேண்டாம் சக்கரமும் வேண்டாம் ஒரு ''மெட்டல் டிடக்டர்' கொண்டாங்கோ'' என அலறும் அரங்கநாதன்

# சிறீரங்கம் கோயிலில் ஒரு நாள்

சிறீரங்கம் கோயில் கருவறையில் நுழையப் போவதென மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் அறிவிப்பு செய்திருந்த (மே1, '93) தேதிக்கு முதல் நாள் சிறீரங்கம் சென்றிருந்தோம். கிராமியன், ராஜன் குறை, வேல்சாமி, அ: மார்க்ஸ்- நால்வர் மட்டும். திருச்சி முழுவதும் சுவரொட்டிகள் சிறீரங்கம் நகரம் முழுவதும் சுவரெழுத்துக்கள். கருவறை நுழைவிற்கு எதிரான இந்து முன்னணியினர் நடத்திய கூட்டமொன்றின் சுவரொட்டிகள் ஆங்காங்கு ஒன்றிரண்டு மட்டும் கோயிலைச் சேர்ந்த பார்ப்பனப் புரோகிதர்கள், கோயிலுக்குள் கடைவைத்திருப்போர், வந்திருந்த சில பக்தர்கள், கோயில் அதிகாரி, கோயிலைச் சுற்றி வசிக்கும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், ஆர்.எஸ்.எஸ் உட்பட சில கட்சிக்காரர்கள் ஆகியோருடன் உரையாடிப் பதிவு செய்து கொண்டோம்.

### பார்வைகள்

1 நாம் எதிர்பார்ப்பது போல கருவறை நுழைவுக்கு கடும் எதிர்ப்பு பார்ப்பனர்களிடமிருந்தே வருகிறது. நிச்சயமாக நடக்காது. போலீஸ், கோவில் நிர்வாகம், முனிசிபாலிடி ஆகியவை திறமையாகச் செயல்பட்டு இதனைத் தடுத்து விடும் என்கிற நம்பிக்கையோடு பேசினர். அப்பட்டமான வருணாசிரம அடிப்படையிலேயே கருவறை நுழைவுக் கெதிரான தங்கள் வாதங்களை முன் வைத்தனர்.

''நான் ஒரு பிராமணன். ஆனா நான்கூட கருவறைக்குள்ளே போக முடியாது சார். அதுக்குன்னு ஒரு ஐதீகம், மரபு இருக்கு. ஒரு குறிப்பிட்ட பரம்பரையைச் சேர்ந்தவங்க தான் முறையா படிச்சுட்டு] கருவறைக்குள் நுழையலாம்'' என்றார் கருவறை வெளி மண்டபத்தில் நன்கொடைச் சீட்டுக்கள் விற்றுக் கொண்டிருந்த ஒரு புரோகிதஅய்யங்கார் இவர்ஒருஓய்வுபெற்ற ரயில்வே அதிகாரி, சிறீரங்கம் கோயிலுக்குள் கடை வைத்துள்ள ஆர்.எஸ்.எஸ் தலைவராக உள்ள ஒரு பார்ப்பனரும், சிறீரங்கத்தில் வசிக்கும் ஆங்கில-தமிழ் எழுத்தாளரும் அய்யங்கார்ப் பெண்மணியுமான பிரேமா நந்தகுமாரும் இதே கருத்துக்களை வலியுறுத்தினர் ''எந்தஒருகல்வி அல்லது தொழிலையும் குடும்ப ரீதியாய் கற்கும் போதுதான் அது ஒழுங்காக வரும். என் அப்பா ஒரு பத்திரிகையாளர்; அதனால் நான் சுலபமாக எழுத்தாளராக முடிந்தது. இப்படிச் சொல்வது குலக்கல்வியை ஆதரிப்பதல்ல. திருப்பாணாழ்வாரை குருவாக ஏற்றுக் கொள்ளும் வைணவ மரபில் வந்தவள் நான். இருந்தாலும் சொல்கிறேன். ஆகமங்களைப் படித்து விடுவதால் மட்டும் ஒரு தீண்டத்தகாதவர் அர்ச்சகர் வேலையில் Fit in (பொருத்தமாக) ஆகிவிட முடியாது'' என்றார் பிரேமா. ''கருவறையில் நுழையனும்னு சொல்றவா, வேதாகமக் கல்லூரியிலே யார் வேணும்னாலும் படிச்சு அர்ச்சகர் ஆகலாம்னு சொன்னப்போ ஏன் எதிர்த்தேன்? எல்லாத்துக்கும் ஒரு அடிப்படைத் தகுதி வேணாமா? அர்ச்சகராகணும்னா நாலு பாசுரங்களாவது தெரிய வேணாமா? சாதி வித்தியாசமில்லாமல் 32பேருக்கு நாங்கள் (ஆர்.எஸ்.எஸ்) பூசாரி பயிற்சி கொடுத்திருக்கோம் தெரியுமா?'' என்றார் ஆர்.எஸ் எஸ் அய்யர். இந்த32பேரில் ஒருத்தரை சிறீரங்கம் கோயிலில் அர்ச்சகராக்கினால் என்ன என நாங்கள் கேட்டதற்கு ''இந்தக் கோயிலுக்குன்னு ஒரு மரபு இருக்கில்லியா?'' என்றார். அப்படியானால் உங்கள் நோக்கம் எல்லாச் சாதியையும் அர்ச்சகறாக்குவதல்ல. மாறாக சாதாரண கிராம தேவதை வழிபாடுகளையும் ஆரியமயப் படுத்துவதுதான், அதற்காகத்தான் நீங்கள் சாதி வித்தியாசமில்லாமல் பயிற்சி கொடுக்கிறீர்கள். உங்கள் வழிபாட்டு முறைகளை இந்து என்ற பெயரில் பிற்படுத்தப்பட்ட கிராம மக்கள் மீறி திணிக்க விரும்பும் நீங்கள், அவர்கள் வழக்கமான ஆடு, கோழி பலியிடுவதை சிறீரங்கத்தில் அனுமதிப்பீர்களா? என கிராமியன் வினவியபோது ''அதெப்படி? ஒவ்வொரு கோயிலுக்கும் ஒருவிதி முறை இருக்கே'' என்றார் ஆர்.எஸ்.எஸ். தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு காலத்தில் கோயிலுக்குள்ளேயே நுழையக்கூடாது என விதிமுறை இருந்தது. இப்போ மாறிவிட்டதே எனக் கேட்டதற்கு ''அவர்கள் கோயிலுக்குள் நுழைய வந்த போது இங்கே மிளகாய்ப்பொடி சகிதம் தாக்குதலுக்குத் தயாராக இருந்தார்கள். கடைசியாக ராஜாஜி தலையிட்டுத்தான் தாழ்த்தப்பட்டவர்களை உள்ளே விட்டார்''-இதையும் எல்லாப்பார்ப்பனரும் சொன்னார்கள். பெரியார் போன்றோரின் முயற்சியால் கிடைத்த ஆலயப் பிரவேச உரிமை



படிப்பகம்

www.padippakam.com

ஐய ராஜாஜி போட்ட பிச்சையாக இவர்கள் தலைகீழாக்கிச் சொல்வதும் கவனிக்கத்தக்கது.

2. பார்ப்பனர்கள் கருவறை நுழைவுப்பிரச்சாரத்தால் ரொம்பவும் எரிச்சல் பட்டிருந்தது விளங்கியது. பிரச்சாரத்தில் Cultured approach (பண்பு) இல்லை என்றார் பிரேமா. ''போராட்டத்தில் அறிவு ஜீவிகள் தலைமை எடுக்கணும் ஜனநாயக பூர்வமாக விவாதம் நடத்தி ஜனங்களின் கருத்தை மாத்தணும். ஒரு சங்கர பக்தர் பெரியாரைத் திட்டினால் உங்களுக்குக் கோபம் வராதா? மனசைப் புண்படுத்தாமல் இருப்பது தான் அகிம்சை; அகிம்சைதான் பரமதர்மம்''—பிரேமா. நீங்கள் சூத்திரர்கள். தீண்டத்தகாதவர்கள்கோயிலுக்குள் நுழையக்கூடாது, செருப்பு போடக் கூடாது, கருவறைக்குள் வரக் கூடாது என்றெல்லாம் காலங்காலமாய்ச் சொல்லி வருவது மட்டும் மனசைப் புண்படுத்துகிற வேலையில்லையா என நாங்கள் கேட்டபோது, ''அதுக்கெல்லாம் சட்டம் இருக்கு, கோர்ட் இருக்கு, ஜனநாயக வழி முறை இருக்கு எல்லாத்துக்கும் போராட்டம்தானா? நுழைகிறேன்னு கொஞ்ச பேர்; தடுக்கிறேன்னு கொஞ்ச பேர் மோதிண்டா பாதிக்கப்படுவது யாரு, தலைவர்களா? தொண்டர்களும் வீட்டுப் பெண்களும் தானே? என்றார் பிரேமா. சமூக நீதிப் பிரச்சினையைச் சட்ட—ஒழுங்குப் பிரச்சினையாக முன் வைத்து அமுக்கப் பார்ப்பது அரசு மற்றும் ஆதிக்க சாதிகளின் ஒரு தந்திரம் நாங்கள் சந்தித்த எல்லாப் பார்ப்பனர்களும், அறநிலையத்துறை அதிகாரியும், கடைக்காரர்களும் இந்த வாதத்தை முன் வைத்தனர்.

3. பார்ப்பனரல்லாத சாதிகளிடையே உள்ள சாதி ஒதுக்கங்களைச் சுட்டிக்காட்டி தங்களது செயல்களை நியாயப்படுத்தும் தந்திரத்தையும் எல்லாப் பார்ப்பனரும் மேற் கொண்டனர். நன்கொடைச் சீட்டு விற்ற புரோகிதரும், ஆர். எஸ். எஸ். ஆளும் இதைச் சொன்னார்கள். அருகிலுள்ள திருவானைக் கோயிலுள்ள ஒரு கோயிலில் சாமி ஊர்வலம் பள்ளர் தெருவுக்கு முதலில் வந்துவிட்டுப் பின்பு முத்தரையர் தெருவிற்கு வருவதை எதிர்த்து நடக்கும் ஒரு தகராறை அவர்கள் சுட்டிக் காட்டினர் ''பிராமணீயம் எல்லார்ட்டேயும் இருக்கு. சீர்திருத்தம் பண்ற நீ அங்கேயிருந்து தொடங்கு'' என்றார் ஆர். எஸ். எஸ்.

4. சட்டபூர்வமான அங்கீகாரம் தங்களுக்கு மட்டுமே இருப்பதை எல்லாப் பார்ப்பனர்களும் சுட்டிக் காட்டினர். பார்ப்பனரல்லாதவர்கள் அர்ச்சகராவதைத் தடை செய்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பை இவர்களும் கோயில் அதிகாரியும் சுட்டிக் காட்டினர். எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்குக் கூட ஒரு சமூக அங்கீகாரம் தேவை என்கிற மனநிலையையும் பார்ப்பனர் வெளிப்படுத்தினர். ஜனதா கட்சித் தலைவருடன் பேசிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த ஒரு பார்ப்பனப் பெண்மணி, ''அது யார் ஜனமக இக? இந்தப் பேரையே நாங்கள் கேள்விப் பட்டதில்லையே, தி. க. தி. மு. க. வெல்லாம் சரி. இவுங்களைத் தெரியவே தெரியாதே. இவுங்க போய் இதைச் செய்றாங்களே? எனத் திருப்பித் திருப்பி கேட்டார் வேறு பலர் இது தி. க., தி. மு. க. வினர் வேலைதான் என்றும் மனப்பூர்வமாக நம்பியிருந்தனர். தி. க. தி. மு. க. போன்றவை எவ்வளவுதான் சீரழிந்திருந்த போதிலும் பார்ப்பனர்களைப் பொறுத்த மட்டில் இன்றும் அவர்களை எதிராகவும், அய்யத்தோடுமே பார்க்கின்றனர்.

5. அரசும் காவல்துறையும் பார்ப்பனர்களுக்குச் சாதகமாகவே இருந்தது. முனிசிபாலிடி, காவல்துறை இணைந்து நடத்திய ஆலோசனைக் கூட்டத்திற்கு பார்ப்பன சங்கத் தலைவர்கள் மட்டும் அழைக்கப் பட்டிருந்ததாக ஜனதா தலைவர் கடையில் சந்தித்த பார்ப்பனப் பெண்மணி சொன்னார். ஆளுக்கொரு தேங்காய் கொண்டுவந்து நுழைபவர்கள் மண்டையை உடையுங்கள் என இராம கோபாலன் சொல்லியிருப்பது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என கோயில் அதிகாரியைக் கேட்டபோது முதலில் தெரியாது என மறுத்த அதிகாரி, பின்பு ''தேங்காய் கொண்டுவரச் சொல்லியுள்ளதைப் பிரசுரத்தில் படித்தேன். தலையை உடைப்பது என அதற்கு எப்படிப் பொருள் கொள்ள முடியும்?'' என வினவினார்.

6. கோயில் வளாகத்திற்குள் கடை வைத்திருந்த எல்லோரும்—அவர்கள் என்ன சாதியாக இருந்தாலும் (பெரும்பாலும் மேற்சாதியினர் தான்) கருவறை நுழைவுக்குக் கடுமையாக எதிராக இருந்தனர். வணிக நலனிலிருந்து இந்தப் பார்வை அவர்களுக்கு உருவாகிறது. வணிகர்கள் Status quo வுக்கு ஆதரவான நிலையையே பொதுவில் எடுப்பர் என்பதற்கு இது எடுத்துக் காட்டாக இருந்தது.

7. பக்தர்கள் பலர் (கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள்) இது குறித்துக் கருத்துக்கள் ஏதுமில்லாமல் இருந்தனர். கருவறை நுழைவுக்கு எதிராகவும் இல்லை. தெரியுமா? என ஒரு பக்தரைக் கேட்டதற்கு ''ஆமா. ஆட்டோவிலே சொல்லிட்டுப் போனாங்க'' என்றார். கருவறைமுன் நிற்கவிடாமல் துரத்துவதைப் பற்றித் தான் எரிச்சலோடு குறிப்பிட்டனர்.

8. பிற்படுத்தப்பட்டவர்கள்—அவர்கள் என்ன கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் (மனசளவிலாவது) கருவறை நுழைவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஆதரவாகவே இருந்தனர். எம். ஜி. ஆர். தி. மு. க. ஜனதா கட்சித் தலைவர்கள் கருவறை நுழைவை எதிர்க்க வில்லை. இதில் ஜனதா தலைவர். வளாகத்திற்குள் நகைக் கடை வைத்துள்ள ஒரு சேட், மண்டல் அறிக்கையை ஆதரிப்பதாகச் சொன்ன அவர் ரொம்பவும் நழுப்பலாகப் பதில் சொன்னார். நுழைவை ஆதரிப்பது அவர் நோக்கமில்லை என்பது புரிந்தது. தஞ்சையில் நடைபெற்ற கூட்ட மொன்றில் பிற்படுத்தப் பட்ட சாதியைச் சேர்ந்த ஜனதா தளத் தலைவ ரொருவர் கருவறை நுழைவை ஆதரித்துப் பேசினார். கருவறை நுழைவை மிகக் கடுமையாகக் கண்டித்துப் பேசிய அ. தி. மு. க. அமைச்சர் ஒருவரின் உறவினரும் சிறீரங்கம் பகுதி அ. தி. மு. க. தலைவருமான ஒருவரைச் சந்தித்தோம். பத்திரிகைக்கு என்றவுடன் முதலில் பதில் சொல்லத் தயங்கினார். பிறகு ''ஐதிகம்னு ஒண்ணு இருக்குல்ல; ஒரு சமுதாயத்தை ஏன் எதிர்க்க ணும்? நான் தி. க. கொள்கையுடையவன். அமைச்சர் வரும்போது மட்டும்தான் கோயில் பக்கம் போவேன்'' என்றார். தி. க. என்கிறீர்களே, இது ஒரு நியாயமான போராட்டம்தானே எனக் கேட்டபோது, ''ஏன் சார், என் வாயைப் பிடுங்குறீங்க. நுழைய வேண்டியதுதான். திரையை மூடிகிட்டு இந்தப் பயலுக பண்ணாத அக்கிரமமா? இதையெல்லாம் யாரு கேட்கிறது!'' என்றார். **கோயில் நுழைவை எதிர்த்து அணிகளிடம் கருத்துருவாக்கி வைத்திருந்த இன்னொரு கட்சி மார்க்சிஸ்ட் கட்சி.** அக்கட்சியைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு தோழரைச் சந்தித்தோம். ''சுதந்திரத்துக்குப் பின் மக்களுக்கு எத்தனையோ உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கு. எல்லாத்தையும் விட்டுட்டு இந்தப் பிரச்சினையை எடுக்கிறது திசை திருப்புற வேலை'' என்றார். இப்படி அவர் சொன்ன போதும் கடைசிவரை அவர் எங்களோடு இணக்கமாக நின்று பல உதவிகளைச் செய்தார். கடைசிவரை கூடவே வந்தார்.

**9. திராவிட இயக்கங்களைச் சார்ந்திருந்த இன உணர்வுள்ள புல இளைஞர்கள் கருவறை நுழைவில் மிகுந்த உற்சாகமடைந்திருந்தனர்.** சிறீரங்கம் பாரதிதாசன் இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் மிகுந்த உற்சாகத்தோடு பேசினர். செயலிழந்து கிடக்கும் தி. க., தி. மு. க. கட்சிகளைக் கடுமையாகச் சாடினர். ''பெரியார் செத்த பிறகு கடந்த இருபது வருசமா தமிழ் இளைஞர்கள் இருட்டில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். கருவறை நுழைவுப் போராட்டம் எங்களைப் போன்ற இளைஞர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்திருக்கிறது. பார்ப்பனர்களை மட்டும் குற்றம் சாட்டி பயனில்லே. அவர்கள் இதையெல்லாம் கற்பிப்பவர்கள் கற்பிப்பதை ஏற்றுக் கொண்டு செயல்படும் மக்கள் மத்தியில் Educate (பிரச்சாரம்) பண்ணனும்'' என்றார் அன்பழகன். அப்படியானால் எந்த அளவிற்கு இந்தப் போராட்டத்தில் நீங்கள் இணைந்து நிற்பீர்கள் என்று கேட்ட போது, ''முழுமையாக ஆதரிக்கிறோம். தனிப்பட்ட காரணங்களின் விளைவாக இந்த ஆதரவு தார்மீக ஆதரவாக மட்டுமே இருக்கும்'' என்றனர். இந்த தார்மீக ஆதரவையும் கூட திரட்டிக் கொள்ளும் (Consolidate) அய்க்கியப் பண்பு ம. க. இ. க. விடம் எந்த அளவிற்கு இருக்கும்? என்கிற கேள்வி எங்களுள் எழுந்தது.

**10. தீட்டு கருவறை போன்ற கருத்தாக்கங்கள் மொழி, மதிப்பீடுகள் முதலியன விடுதலை நோக்கிய செயற்பாடுகளுக்கு எத்தனை தடையாக உள்ளன என்பது இங்கே பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.** ''கருவறைக்குள்ளே நுழையணும்னு சொல்றீங்களே; உங்க அம்மாவோட கருவறைக்குள்ளே நீங்க மறுபடி நுழைவீங்களா? என ஒருவர் ஆவேசமாகக் கேட்டார். எல்லோரிடமும் நாங்கள் கேட்ட கேள்வி, **பெண்களை அர்ச்சகராக்கினால் என்ன?** பெண்கள் உட்பட எல்லாப் பார்ப்பனர்களும் இதனை உடனடியாக மறுத்தனர். ''இதெல்லாம் பெண்கள் எப்படிச் செய்ய முடியும் 'மென்சஸ்' வீட்டு விலக்கு இதெல்லாம் இருக்கு அவுங்க உடம்பிலேயே ஒரு அழுக்கு இருக்கே'' என்றார் ஆர். எஸ். எஸ். பார்ப்பனர். இதே கருத்தை ஜனதா தலைவர் கடையில் சந்தித்த பார்ப்பனப் பெண்மணியும் சொன்னார். ''கோட்டீஸ் '' எல்லாம் வந்திருக்கே, ஆபீசெல்லாம் அனுப்புகிறோமே, பஸ் டிரைவர்ராக வெல்லாம் பெண்கள் நியமிக்கப்படுகிறார்களே அர்ச்சகராக மட்டும் கூடாதா? என நாங்கள் கேட்டவுடன் ''அப்படிப் போக விட்டதால் தான் ஆயிரம் புது வியாதிகளெல்லாம் வந்திருக்கு'' என்றார் ஆர். எஸ். எஸ். ''டிரைவராகிறதும், அர்ச்சகராகிறதும் ஒண்ணுல்ல. பெண்கள் அர்ச்சனையும் பண்றாங்க. சாயிமாதா பிருந்தாதேவி, அப்புறம் இந்த மேல் மருவத்தூர் (பங்காரு அடிகள் பக்தர்கள்)க் காரங்க எல்லாம் அர்ச்சனை பண்றாங்க தான். ஆனா அவுங்கல்லாம் ஒரு கோயிலைக் கட்டி வச்சிட்டு அதிலே பண்றாங்க. இது ஒரு புராதனக் கோயில். இதுக்குன்னு சில மரபுகள் இருக்கே'' என்றார் அந்தப் பார்ப்பனப் பெண்மணி. ''வேத காலத்திலே பெண்கள் பூணுலெல்லாம் போட்டாங்க. நடுவிலே நீங்க (ஆண்கள்) தான் மனுதர்மம் அதுஇது எல்லாம் செய்து எல்லா உரிமைகளையும் இல்லாமல் செஞ்சுட்டீங்க. இது சரியான கோரிக்கைதான் ஆனா உடனடியாக நாளைக்கே விடணும்னு சொன்னா அது ஆகாது......பல காரணங்கள் இருக்கு'' என்றார் பிரேமா நந்தகுமார். ஆணாதிக்கச் சமூக மதிப்பீடுகள் உயர்சாதிப் பெண்களிடம் ஆழமாக வேர் விட்டிருந்த போதும் ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் இக்கோரிக்கை



படிப்பகம்

www.padippakam.com

**யில் நியாயம் சற்றுக் கூடுதலாக படுவது கவனிக்கத்தக்கு.**

**11. கருவறை நுழைவுக் கோரிக்கையாகட்டும் பெண்களை அர்ச்சகராக்குகிற கோரிக்கையாகட்டும் உடனடியான ஆதரவு விளிம்பு நிலை மக்களிடமிருந்து வந்தது.**

கோயில் பிரகாரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஒரு தோழரை எழுப்பிக் கேட்டோம் காஸ்-சிலிண்டர் 'லோட்' இறக்குவதும் விறகு வெட்டுவதும் அவர் தொழில். கருவறை நுழைவைப் பற்றிக் கேட்ட போது, ''ஆமா பூந்துற வேண்டியதுதான். இந்தப் பார்ப்பான்க கொஞ்ச நஞ்ச அக்கிரமமா பண்றாங்க. கோயில் எல்லாருக்கும் பொதுன்னா, அப்புறம் எல்லாரும் கருவறையிலே நுழையணும்கிறது நியாயம்தானே'' என்றார் பெண்களை அர்ச்சகராக ஆக்குவதைப் பற்றிக் கேட்டவுடன் சிரித்தார். ஒரு நிமிட யோசனைக்குப் பின். ''ஆமா போடலாந்தான். நான் யோசிச்சது இல்லை. பெண்கள் முதலமைச்சராகலாம் தமிழக அரசுலே பஸ் டிரைவர் ஆகலாம்னா, ஏன் அர்ச்சகராகக் கூடாது. பொம்பளைங்க முன்னணியிலே இருக்க காலமாச்சே இது''என்றார் நீங்கள் கோயிலுக்குப் போவதுண்டா, சாமிகும்பிடத்தான் வந்தீங்களா என்று கேட்டதற்கு ''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. பட்டை அடிச்சுட்டு வந்தேன். அப்பிடியே படுத்துட்டேன்'' என்றார். நாங்கள் சிரித்தோம். ''உள்ளதைத்தான் சொல்கிறேன். பக்தியெல்லாம் உண்டு. ஆனா இவங்க பண்ற அக்கிரமத்திலே அங்கேபோக மனசே வர்றதில்லை'' என்றார்.

**12 விளிம்பிலுள்ள இன்னொரு பிரிவினராகிய தலித்களின் ஆதரவும் போராட்டத்திற்கு முழுமையாக இருந்தது.** கோயிலுக்குப் கிழக்கே கோகலே நகர், அம்பேத்கர் நகர், அம்பேத்கர் புதுக்காலனி ஆகிய இடங்களில் பறையர், பள்ளர் சக்கிலியர் என்கிறமூன்று பிரிவினரும் உள்ளனர். கருவறை நுழைவுப் போராட்டத்தை இவர்கள் முழுமையாக ஆதரித்தனர். நான்கைந்து பேர்கள் போராட்டத்தில் பங்குபெறப் போவதாகவும் சொன்னார்கள் கோயிலுக்கு மிக அருகேயிருந்தாலும் அந்தக் கோயிலிலிருந்து மிகவும் அந்நியப் பட்டவர்களாகவே இருந்தனர். சமயபுரம் மாரியம்மன், இவர்களுக்கென உள்ள இன்னொரு மாரியம்மன், இன்னொரு தனியாரின் உரிமையான செல்லாயி அம்மன் ஆகியவையே இவர்களின் கடவுள்கள். அந்தக்கடவுள்களுக்குத் தான் வேண்டுதல் செய்வார்களாம். செல்லாயி அம்மன் கோயிலில் காப்பு கட்டுவதே நாங்கள் தான் எனப் பெருமையாய்ச் சொன்னார்கள். சிறீரங்கம் கோயிலில் எல்லாச் சாதியினருக்கும் ஏதோ ஒரு பாத்தியதை இருப்பது போல உங்களுக்கு ஏதும் உண்டா எனக் கேட்ட போது, ''நம்ம நல்லா இருந்துல்லே, கோயிலுக்குக் செய்யிறது'' என்றார் சேகர். அதில்லே, கோயிலில் உங்களுக்கு ஏதும் உரிமையுண்டா என்று கேட்டோம். ''யாராவது செத்துப் போனா கோயில்லே போய் சொல்வோம். சாமிக்குப் போட்ட மாலை ஒண்ணு, பட்டுத் துணி ஒண்ணு சட்டியிலே வச்சு குடுப்பாங்க எங்களுக்கு மட்டும் தான் இந்த மரியாதை வேற எந்த சாதிக்கும் கிடையாது''- இதை ரொம்பப் பெருமையாகச் சொன்னார்கள். இதற்குப் பதிலாக நீங்க என்ன செய்யணும்? ''யார்செத்துப் போனாலும்வெட்டி வேலை செய்யனும் மாடு செத்துப் போனா தூக்கிப் போடணும்'' அர்ச்சகராக உங்களை அனுமதித்தால் செய்யத் தயாரா? ''தயார். எல்லாருக்கும் பொதுன்னா எல்லார்போல பூசையும் செய்ய வேண்டியது தானே. ஆனா பாருங்க இதையெல்லாம் பாப்பானுங்க விடுவாங்கன்னா நினைக்கிறீங்க. தடுத்துடுவாங்க எல்லாஇடத்திலேயும் அவன் தானே இருக்கான். இந்த இடத்தில் நம்முடன் வந்த மார்க்சிஸ்ட் கட்சித்தோழர் கேட்டார்: ''உங்கள்லேயே ஒரு பணக்காரர் இருக்கார்னு வைச்சுக்குவோம் உங்களை உள்ளே விடுவாரா?'' ''மாட்டாருங்க சாதியை விட பணம் அங்கே முக்கியமாயிடும்'' மறுபடியும் மார்க்சிஸ்ட் தோழர். ''அப்படீன்னா நாமசெய்ய வேண்டியது பொருளாதார சமத்துதும் தான்னு சொல்றீங்க''என்று கேட்டுவிட்டு நம்மைப் பார்த்தார். ''பொருளாதாரம் ரொப்ப முக்கியம் தாங்க. பத்து பைசா இல்லாம வெளியே போக முடியுமா? ஆனாபாப்பான்களுக்கு இது பிரச்சினை இல்லீங்க. பம்பாயிலே ஒரு 'வேகன்சி' இருந்தா அத்திம்பேர் அங்கேருந்து 'லெட்டர்' போட்டிருவார். கருமாதி பண்ண ஆத்துக்குப் போனாலும் ஒரு பார்ப்பனை அழைச்சுட்டுப் போயி ரெண்டு காசு வாங்கித் தந்துடுவான்க பாப்பான்கள்லே ஏழைஏதுங்க?''என்றார் சேகர் இந்த ஒத்துமை அவுங்களுக்கு எப்படி வந்துச்சு என்று கேட்டோம். ''அவங்கதான் விசுவஇந்து பரிசத், அது இது, லொட்டு லொசுக்குன்னு என்னென்னவோ மடமெல்லாம் வச்சிருக்கான்களே அதிலெல்லாம் இதைத்தான் படிப்பிக்கிறாங்க'' என்றார். கோயிலுக்குள்ளே பல சாதிகளுக்கும்மடங்கள் இருக்கின்றனவேஉங்களுக்கு உண்டா என்று கேட்டோம். ''இல்லை. நம்மாளுங்க இந்த ஏரியாவையே ஒழுங்கா வச்சிக்கிற மாட்டாங்க. மடத்தையா ஒழுங்கா வச்சிக்குவாங்க!'' என்றார். **அடித்தட்டு மக்களின் பொதுப் புத்தியில் (Common Sense) உறைந்துள்ள இந்த இருகூறுகளையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.** மேலே இருப்பவர்களின் கொடூரமான எத்துவாளித் தனங்கள் பற்றிய தெளிவு முழுமையாக இருப்பது ஒருபக்கம் தங்கள்பக்கம் ஒற்றுமையில்லை, தூய்மையில்லை, தாங்கள் தகுதியற்றவர்கள் என்கிற குற்ற உணர்வும், தங்கள் சாதிக்கென உள்ள ''தனி உரிமை'' யில் உள்ள பெருமிதமும் இன்னொரு பக்கம் இதிலுள்ள எதிர்ப்புக் கூறை ஒருங்கிணைப்பது எப்படிஎன்பதேநாம் கவனத்தில் எடுக்கவேண்டியது

**தொகுப்பு: நிறப்பிரிகை.**

www.padippakam.com



## 1 மலம் துடைக்க 'இந்தியா டுடே' — இலக்கிய மலர்

**மே 30 1993.** பாண்டிச்சேரி வணிக அவையில் நிறப்பிரிகை சார்பில் 'இந்தியாடுடே' வெளியிட்டுள்ள இலக்கிய மலர் (93-94) விமர்சிக்கப்பட்டது. பார்ப்பனீயத்தின் அப்பட்டமான வெளிப்பாடாக வந்துள்ள இந்தமலர் பற்றியவிமர்சனக் கூட்டம் ஒரு பகல் பொழுது முழுவதும் நடைபெற்றது. 100பேர் பங்கு பெற்றனர்.

மலரை அறிமுகம் செய்து விமர்சனத்தைத் தொடங்கி வைத்தார் **அ. மார்க்ஸ்**, இந்தமலரின் 172பக்கங்கள் விளம்பரம் 52பக்கங்கள்;அட்டை, தலையங்கம் முதலியவை 9 பக்கங்கள். விளம்பரங்களில் 20க்குமேல் ஆங்கிலத்தில் இருப்பதும், விளம்பரப் பொருள்களின் தன்மையும்'இந்தியா டுடே' வாசகர்கள் மத்திய தர மற்றும் உயர் தர வர்த்தகத்தினர் தான் . என்பதற்குச் சாட்சியமாக அமைகின்றன. மீதமுள்ள 111 பக்கங்களில் சுமார் 76பக்கங்களுக்கும் மேலாக (அதாவது சுமார் 70சதம்) பார்ப்பன எழுத்தாளர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்குக் கிடைப்பது 14பக்கங்கள் மட்டுமே. ''பாருங்கள் பத்திரிக்கைகளில் கூட இடஒதுக்கீடு கேட்கிறான்கள். எழுத்தாளர்களைக் கூட சாதி வாரியாய்ப் பிரிக்கிறான்கள்'' என அவர்கள் கூச்சலிடலாம். 'இந்தியாடுடே' சிறப்பிதழை இவ்வாறு பகுத்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏன் நேர்ந்தது என்றால் 'அந்த' 76 பக்கங்களில் ஒவ்வொரு வரியிலும் பார்ப்பனீயம் வெளிப்பட்டு நிற்பதால்தான். இவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ''இலக்கிய மரபை''த் தாண்டிய புதிய முயற்சிகள் கடும் கண்டனத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளன. பத்தாண்டுகளுக்கு முன் செத்துப் போன வெங்கட் சாமிநாதனை தோண்டி எடுத்து வந்து இந்த முயற்சிக்குப் பயன்படுத்தியுள்ளனர். 'சோ'- ஒரு அற்புத நிகழ்வு என்கிறார் வெங்கிடு பூணூலுக்குத் தொடர்ந்து விசுவாசமாய்ச் செயல்பட்டது தவிர வேறெந்த வகையில் சோ அற்புத நிகழ்வானார் என்று நமது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட புத்திகளுக்கு விளங்கவில்லை. பார்ப்பனீயத்திற்கு இந்து மதத்திற்கும் வக்காலத்து வாங்கி வருபவரும் ஆர் எஸ்.எஸ்-சைச் சேர்ந்த ஜெயமோகன், மசூதியை இடிப்பதற்கு முன்பே இடிப்பது சரிதான் என்று சொன்ன 'சிந்தனையாளர்' ஜி. எஸ். ஆர். கிருஷ்ணன் போன்றோருடன் கூடிக் குலாவி வருபவருமான நிகழ் ஞானியை வெங்கிடு செல்லஞ் கொஞ்சுகிறார் மண்டல் மற்றும் வேதாகமக் கல்லூரி விசயங்களில் மனம் திறந்து கருத்துக்களைக் கூறிய எஸ்.வி.ஆரையும் பிரபஞ்சனையும் திட்டித் தீர்க்கிறார். டெல்லியில் இருந்து கொண்டு தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றும் வாசந்தி,கி,ராவையும் சுப்ர பாரதி மணியனையும் பிறமொழி எழுத்தாளர்களாகப் படம் பிடித்துப் பார்ப்பனக் குசும்பு செய்கிறார். தேசிய இன உணர்வைக் கொச்சைப் படுத்துகிறார். இந்த வல்லிக்கண்ணன் இருக்கிறாரே யாராவது பத்திரிகை, புத்தகம் என்கிற பெயரில் நாலு காகிதங்களைப் 'பின்' பண்ணி அனுப்பினால் போதும், அதைப் பாராட்டி இரண்டு பக்கங்கள் எழுதிவிடும் நபர் அவர் இந்த இதழில் புதிய முறை எழுத்துக்களை மட்டும் காய்ந்திருக்கிறார் சாதி வெறியைச் சுட்டிக் காட்டுபவர் மீது காழ்ப்படித்திருக்கிறார். புதிய எழுத்து, சிந்தனை முறைகளின் விளைவாகப் பழைய தலைமுறையைச் சேர்ந்த தாங்கள் 'அவுட்' ஆகி விடுவோமோ என்கிற அச்சம் பழசுகளைப் பிடித்தாட்டுவதை வல்லிக் கண்ணன் கட்டுரை வெளிப்படுத்துகிறது. பொதுவாகவே தமிழ்ச் சூழலில் பார்ப்பனீய சக்திகள் ஒன்று குவிகின்றன. நிலவும் சிவில் சமூக ஒழுங்கமைவுகளைக் கேள்வி கேட்கும் நம்மை பார்த்துக் குலை நடுங்குகின்றன. நிறப்பிரிகை சார்பாக நடைபெற்ற பெண்ணியம் விவாதத்தை விமர்சித்து இந்திரா பார்த்தசாரதி தினமணியில் கட்டுரை எழுதுகிறார். ''குடும்பம் என்கிற நிறுவனத்தின் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். நான் குடும்பத்தின் மகிமையைக் காப்பாற்ற கதைத் தொடர் ஆரம்பிக்கிறேன்'' என பாலகுமாரன் 'தினமணி கதிரில்' எழுதுகிறார். நிறப்பிரிகை விவாதத்தைக் கண்டித்து 'துக்ளக்' சிறப்புக் கட்டுரை வெளியிடுகிறது. இந்தச் சூழலின் உச்ச பட்ச வெளிப்பாடாக இந்தியா டுடே மலர் வந்துள்ளது.

சுப்புடுவின் இசை பற்றிய கட்டுரையை எடுத்துக் கொண்டு மலரின் பொதுப் போக்கை விமர்சித்தார் **கி. ராஜநாராயணன்** பழைய இசை வித்வான்களை நினைவு கூற வேண்டுமானால் அரியக்குடி இராமநுஜ அய்யங்கார், செம்பை வைத்திய நாத பாகவர்,பாலக்காடு மணி அய்யர் எனப் பார்ப்பனர்கள் மட்டுந்தான் சுப்புடுவின் கண்ணில் பட்டார்களா? விளாத்தி குளம் சுவாமிகள், காஞ்சிபுரம் நயினாப் பிள்ளை, சித்தூர் சுப்பிரபணிய பிள்ளை, மதுரை சோமு இவர்களையெல்லாம் விட்டு விட்டு பழைய வித்வான்களைப் பற்றிப் பேச முடியுமா? திருவாவடுதுறை டி. என். இராஜரத்னம் பிள்ளை எவ்வாறு ஞாபகம் வராமல் போனார்? இதெல்லாம் வேணும்னே செய்வது. முன்பெல்லாம் சிறுகதை என்



படிப்பகம்

www.padippakam.com

றால் புதுமைப்பித்தன், கு. ப. ரா., மௌனி என்று சொல்வது வழக்கம். அப்புறம் மௌனி, கு. ப. ரா, புதுமைப்பித்தன் என்றார்கள். இப்போது மௌனி, கு. ப. ராவோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அந்த மாதிரி வேலைதான் இதுவும் என்றார் கி. ரா.

பண்பாட்டுத் தளத்தில் வேலை செய்ய எங்களுக்குத்தான் தகுதி எனப் பார்ப்பனர்கள் பறை சாற்றிக் கொள்ளும் முயற்சிதான் இது; தமிழர்கள் மொழி ரீதியாக அடையாளம் காண்பதைக் கண்டிக்கும் டெல்லி வாசந்தி, கி.ராவை மட்டும் தெலுங்கன் என்பாரம்—இது என்ன நியாயம்?- இது டாக்டர் பஞ்சு திராவிட இயக்கங்கள் இலக்கிய வளர்ச்சியைத் தடுத்துவிட்டது என்கிறீர்களே, நீங்கள் எழுதியதெல்லாம் இலக்கியமென்றால் அண்ணா அதைவிட நல்ல இலக்கியங்கள் செய்துள்ளார்! ஜெயகாந்தனுக்கு ஈடாக உங்களில் யாரடா இருக்கிறார்கள்? வெங்கிடு சொல்வதைத்தான் தமிழவன் இன்னொரு மாதிரி சொல்கிறார். பெரியாரைவிடக் க. நா. சு. பரவாயில்லையாம். என்ன கொடுமை இது! —இது சாரு நிவேதிதா. இந்தியா டுடே யில் காம சூத்ரா விளம்பரம் மட்டும்தான் பார்க்கும்படியாக இருக்கிறது எனக் கேலியுடன் துவங்கிய ராஜ் கௌதமன், புரோகிதர்கள் தங்கள் நலனைப் பாதுகாக்க அவ்வப் போது ஏதாவது செய்வார்கள் அதிலொன்றுதான் இது தி. ஜானகிராமன், ப்ராய்டு, 'இத்' மசுரு என எதையாவது சொல்லி மர்மம்படுத்தி அதன் மூலம் அதிகாரத்தை நிலை நாட்டுவதுதான் பார்ப்பனர் வேலை என்றார். பெண் எழுத்தாளர் கதைகள் என நான்கைந்து மலரில் போட்டிருக்கிறீர்களே, இந்த அம்மாக்களுக்கும் பெண்ணியச் சிந்தனைகட்கும் என்ன சம்மந்தம் என்று வினவிய விஜி, 'பெரியார் பூலே வழியில் பெண்ணுரிமை'- என்றொரு கட்டுரையை ராஜம் கிருஷ்ணனிடம் கொடுத்தேன், பெரியார் என்ற பெயரைப் பார்த்தவுடனேயே முகம் சிவந்து கட்டுரையை எறிந்துவிட்டார் என்றார். சுஜாதாவின் 'மஞ்சள் ரத்தம்' கதையை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் வெளிப்படும் பார்ப்பனீயக் கருத்தியலைக் கட்டுடைத்தார் ரவிக்குமார் [இந்தக் கட்டுரை முழுமையாக 'மூன்றில்' இதழில் வந்துள்ளது]. பார்ப்பனர்கள் 'தகுதி'யுடையவர்கள், சிறப்பாக இந்த மீடியத்தைப் பயன்படுத்தியுள்ளனர்; நீங்கள் ஏன் உணர்ச்சிவயப் படுகிறீர்கள் என்றார் பழமலய் பசூதி இடிப்பைப் பின்னணியாகக் கொண்ட ராஜம் கிருஷ்ணன், சிவகாமி கதைகளை ஒப்பிட்டுக்காட்டி ஒரு பாப்பாத்தியின் பார்வைக்கும் தலித்தின் பார்வைக்கும் உள்ள வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டினார் பொதிய வெற்பன் மலரில் வெளிப்படும் பார்ப்பான் கூறுகளை வன்மையாகக் கண்டித்தார் தலித் பண்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த உஞ்சை ராஜன் சத்யஜித் ரேயுடன் பால சந்தரை ஒப்பிட்டுள்ளதைக் கேலி செய்த டாக்டர் அ. ராமசாமி, பாலசந்தர் எப்படி தமிழின உணர்வுக்கு எதிராகவும் பார்ப்பன நலன்களை உயர்த்தியும் வருகிறார் என்பதை விளக்கினார் பார்ப்பனப் புத்தியை நடித்துக் காட்டி சிரிப்பில் மூழ்கடித்தார் அருணன் கடலூர், 'குரல்' அமைப்பின் சார்பாகப் பேசிய நடராசன் இந்தியாடுடேவுக்கு எதிரான நடவடிக்கைகளை வெறும் விமர்சனக் கூட்டங்களோடு நிறுத்திவிடக் கூடாது என்றார். மலரைக் கண்டித்து ரமேஷ், ராஜன் குறை. ஓவியர் புகழேந்தி ஆகியோரும் பேசினர்.

கடைசியில் விவாதங்களைத் தொகுத்தபோது பார்ப்பனியத்தின் வெளிப்பாடுகளாக கீழ்க் கண்ட அம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. அவை: இனமொழி உணர்வுகளை எதிர்த்தல் ஆணாதிக்கம்/குடும்ப அமைப்பு/நிலவும் ஒழுக்க மதிப்பீடுகள் ஆகியவற்றை ஆதரித்தல் இலக்கிய /கலாச்சார அம்சங்களில் எதார்த்தவாதத்தை மீறுதல் நிலவும் ஒழுக்க மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்குதல் ஆகியவற்றைக் கண்டு அலறுதல் அரசியல் ரீதியில் திராவிட/தேசிய இன உரிமை இயக்கங்களை எதிர்த்தல் பார்ப்பனர்களை முன்னிலைப் படுத்தல் பார்ப்பனரல்லாதவர்களில் பார்ப்பனீயத்திற்கு ஆபத்தில்லாதவர்களை மட்டும் முன்னிலைப்படுத்தல் மற்றவர்களை ஒதுக்குதல் முதலியன.

இந்த அளவுகோல்களை வைத்துப் பார்க்கும்போது 'இந்தியாடுடே'யில் ஒரு சில பக்கங்கள் தவிர மற்றவை பார்ப்பனீயத்தின் வெளிப்பாடுதான் என்பதில் அய்யமில்லை. ஒரு சில பக்கங்கள் தவிர மற்றவை வேறு சாத்தியமான வாசிப்புகளுக்குக்கூட வாய்ப்பளிக்கவில்லை. இதனைக் கண்டித்து அனைவரும் பிரச்சாரம் செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இறுதியாக அப்பட்டமான பார்ப்பனீய வெளிப்பாடாக உள்ள இந்தியாடுடே மலரைக் கிழித்து அடுத்த நாள் பீ துடைக்கப் பயன் படுத்துவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. உடன் இந்தியாடுடே மலரொன்று கிழிக்கப்பட்டு எல்லோரும் அதன் பக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்துமதி கதையைத் தாருங்கள், வெங்கட் சாமிநாதன் கட்டுரையைத் தாருங்கள் எனச் சிலர் குறிப்பிட்ட பக்கங்களை விரும்பிக் கேட்டும் வாங்கிச் சென்றனர்.

நிகழ்ச்சி குறித்த நமது அறிக்கை எல்லா இதழ்களுக்கும் அனுப்பப்பட்டன. இலட்சியப் பாதை, உண்மை, அரங்கேற்றம் முதலிய தமிழின உணர்வை முதன்மைப்படுத்தும் இதழ்கள் மட்டுமே செய்தியை வெளியிட்டன. மனுசங்க- இதழும் குறிப்பு வெளியிட்டது இன்னொரு பத்திரிகையைத் தாக்கிய விவரத்தை வெளியிட



படிப்பகம்

www.padippakam.com

முடியாது என்கிற பெயரில் சுபமங்களா வெளியிட இயலாது எனக் கைவிரித்தது. அவசர அவசரமாக அந்த மாதசுப மங்களாவில் வாசந்தி பேட்டி மட்டும் வெளியிடப்பட்டது. தனது பாண்டிச்சேரி நிருபரை அனுப்பி நிகழ்ச்சி முழுவதையும் பதிவு செய்து கொண்டது தினமணி. 'ஜன்னலுக்கு வெளியே' பகுதியில் நிகழ்ச்சி மறைமுகமாகப் பதிவு செய்யப்பட்டது. பார்ப்பனப் பத்திரிகை வட்டாரத்தில் பரபரப்பையும், ஆத்திரத்தையும் இந் நிகழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது. ○

---

2. குடந்தையில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்':

ஜூலை 24, '93: அதிகாரபூர்வ நிறுவனங்களால் இலேசான கண்டனத்தோடு புறக்கணிக்கப்படும் கி. ரா. வின் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்கிற நாட்டுப் புறப் பாலியல் கதைகளின் தொகுப்பிற்கு குடந்தையில் ஒரு விமர்சன அரங்கை நிறப்பிரிகையும், திரைப்பட விமர்சனக் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்தன. இரு எதிரெதிர்க் கருத்துக்களின் விவாத அரங்காக இது அமைந்தது. இந்தக் கதைகளால் என்ன பயன்? உடனடிச் சமூக மாற்றத்திற்கு ஏதாவது வழி சொல்லப் பட்டுள்ளதா? நிறப்பிரிகை ஆட்கள் 'இந்த மாதிரி' விசயங்களுக்கே முன்னுரிமை கொடுப்பதேன்? என்கிற கேள்விகளை உஞ்சை ராஜன், அரங்க. குணசேகரன், சிவப்பிரகாசம், வழக்கறிஞர் திருநாவுக்கரசு ஆகியோர் முன் வைத்தனர். இதற்குரிய தங்கள் நியாயங்களை அ. மார்க்ஸ், ரவிக்குமார், கிராமியன், ராஜன் குறை, வேல்சாமி, விஜி, பொதிய வெற்பன், பஞ்சு, கி. ரா முதலியோர் முன்வைத்தனர். நூலைப் பொதுவாக வரவேற்று டாக்டர்முகமது உசேன், டாக்டர்மதிவாணன், ரவிசுப்பிரமணியம் கணேசமூர்த்தி, ஜெயபாலன் ஆகியோர் பேசினர். [கி. ரா தொகுத்துள்ள பாலியல் கதைகள் குறித்த விரிவான கட்டுரை ஒன்று நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு-இதழ் 1ல் வந்துள்ளது.] நிகழ்ச்சி பற்றிய குறிப்பு சுபமங்களா [செப், 93] இதழில் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து பாண்டிச்சேரி 'இன்ன பிற' அமைப்பு பாலியல் கதைகள் குறித்த ஒருநாள் கருத்தரங்கொன்றை [அக் 2, '93] நடத்தியது. ○

---

3. எஸ். வி. ஆர். நலம் பெறுகிறார்:

ஆகஸ்ட் 4, '93: தனது வாழ்வின் பெரும் பகுதியை சமூக நலனுக்காக செலவிட்டு வருபவரும், தனக்கென சொத்துக்கள் எதையும் சேர்த்துக் கொள்ளாதவரும், குடியுரிமைப் போராளியும், தமிழக மார்க்சிய அறிஞர்களில் முதன்மையாகக் கருதப்படுபவருமான தோழர் எஸ்.வி.ராஜதுரை அவர்கள் இதய நோயால் பாதிக்கப்பட்டு விஜயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சென்ற ஆகஸ்டு 4ம் தேதி அவருக்கு அறுவை மருத்துவம் செய்யப்பட்டது. அரசின் உதவிகளைப் புறக்கணித்த அவருக்கு அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டியது நமது கடைமையாயிற்று. நிறப்பிரிகையோடு நெருக்கமாய்த் தொடர்புடையவர்களுக்கு இது தொடர்பாக ஒரு கடிதம் அனுப்பினோம். கடிதத்திற்குச் செவி சாய்த்த அனைவருக்கும் நன்றிகளையும், நலம் பெற்று பணிகளை மீண்டும் தொடங்கியுள்ள எஸ்.வி.ஆர். அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ○

---

4. தலித் அரசியல்:

நவம்பர் 27, '93: தலித் பண்பாடு குறித்த விவாதங்கள் நடைபெற்ற அளவிற்குக் கூட தலித் அரசியல் குறித்த விவாதங்கள் தமிழ்ச் சூழலில் ஏற்படவில்லை. அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி ஏற்பட்டுள்ள இன்றைய எழுச்சியில் இத்தகைய முயற்சியொன்று தேவை; குறைபாடுகளுடையதாயினும் இன்றைய புரிதலின் அடிப்படையில் தலித் அரசியலறிக்கையொன்றை விவாதத்திற்கு வைக்கும் முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்கிற கருத்தை முன் மொழிந்தார் கல்யாணி, ரவிக்குமார், மதியழகன், கே. ஏ. குணசேகரன், கல்யாணி, அ. மா. ஆகியோர் அடங்கிய கூட்டமொன்றில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. உருளச்சு செய்யப்பட்ட இவ்வறிக்கை தலித் தலைவர்கள், தலித் செயல் வீரர்கள், பிற தலித் அரசியலாளர்கள் ஆகியோருக்கு ரவிக்குமார், சுகுமாரன் ஆகியோரால் அனுப்பி வைக்கப்பட்டது. 27—11—93 அன்று தஞ்சையில் கூட்டப்பட்ட தலித் தலைவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டமொன்றில் இவ்வறிக்கை விவாதிக்கப்பட்டு தேவையான திருத்தங்களும் செய்யப்பட்டன. திருத்தப்பட்ட அறிக்கையை நிறப்பிரிகை சார்பாக வெளியிட வேண்டுமென அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பல்வேறு தலித் அமைப்புகளின் நன்கொடையின் உதவியோடு அச்சிடப்படும் இவ்வறிக்கை அடுத்த சில நாட்களில் வெளிவரும். ○



படிப்பகம்

www.padippakam.com



வர்க்கம் சாரத அம்சங்களை நீங்கள் பிரதானப் படுத்துகிறீர்கள். எனவே புரட்சி பற்றிய உங்கள் விருப்பம் ஒரு வரலாற்று அவசியமாக இல்லாமல் ஒரு வெறும் விருப்பமாகவே, முடிந்துவிடுகிறது. வரலாற்றுத் தேவையாக மாறுவதற்கு வர்க்க மற்றும் பொருளாதாரக் கூறுகள் அவசியமாகின்றன. எல்லா அம்சங்களிலும் இதுமறுக்க முடியாத விதியாகிவிடுகிறது. பொதுவான உளவியலும், பிரக்ஞையும் கூட வர்க்க அடிப்படையிலேயே கட்டப்படுகிறது. வர்க்கம் சாராத விசயங்களைப் பேசுவதென்பது உறுதியான வர்க்க அடித்தளத்திற்கு வலுசேர்ப்பதாக மட்டுமே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது வர்க்கத்தின் பங்களிப்பை மறுப்பதாகிவிடும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் கார்ல் மார்க்சையே மறுப்பதாகிவிடும்.

23—7—93 சந்தர் ராஜீ.
கல்பாக்கம்

தேசியம் என்பது கற்பிதம் செய்யப்பட்டஒரு சமூகம் என்கிறீர்கள். தேசியம் என்பது அன்றைய காலகட்டத் தேவை என்றே நான் விளங்கிக் கொள்கிறேன். ஈழத் தேசிய இனப் பிரச்சினை எனப் பார்க்கும் போது இலங்கை பௌத்த சிங்கள பேரனவாத அரசின் ஒடுக்கு முறைகளான திட்டமிட்ட குடியேற்றம் என்பது தமிழ் விவசாயிகளின், நகர்புற மக்களின் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை; தரப்படுத்துதல் தமிழ் மாணவர்களின் பிரச்சினை; இனஅழிப்பு, இனக் கொலை என்பவை தமிழ் மக்களின் உயிர் தொடர்பான பிரச்சினை மொத்தத்தில் ஈழத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை கற்பிதம் என்று பார்ப்பதால் சமூக முன்னோட்டம் வேண்டி நிற்கும் உணர்வுகளின் உயிரோட்டம் அழிகிறது. மொத்தத்தில் இது மலட்டு மார்க்சியர்களுக்கு உதவுவதாகவே அமையும். இது அ. மார்க்ஸ் இன்னும் பழையமரபு மார்க்சியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாமல் இருப்பதையே காட்டுகிறது.

12—10—93 சிவா
டன்மார்க்

பெண்ணியம் விவாதத்தில் பங்கு பெற்றுள்ள எல்லோரும் பாலியல் சுதந்திரம் என்பது பெண்களுக்குச் சமூக விடுதலை அளித்து விடும் எனத் தவறாகக் கருதியுள்ளனர். பாலியல் உணர்வு என்பது உடல் சார்ந்த ஒன்றாகவும் கருதியுள்ளனர். ஆனால் பாலியல் உணர்வைப் பொறுத்த மட்டில் உடல் போலவே மனமும் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலைப் பார்த்துதான் பாலியல் உணர்வு தூண்டப்படுகிறது எனப்பொதுவாக நம்பப் படுகிறது. பிறவிக் குருடர்களின் பாலியல் உணர்வு ஆய்வு செய்யப் பட வேண்டிய ஒன்று. பெண்விடுதலைஎன்ற பெயரிலும்கூட பெண்கள் சுரண்டப்படலாம். சமூகப் பிரக்ஞையும், அறவியல் பிரக்ஞையும் இல்லாமல் ஆண்களோடு பாலியல் ரீதியாய்க் கலப்பதன் மூலம் பெண்கள் சமூகத்திற்குப் பயனற்றவர்களாக ஆகிவிடுகின்றனர்.

தஞ்சாவூர் கே.ஆர். சங்கரன்
4—5—93

O O O

திரு. சாருநிவேதிதா அவரது வழக்கமான பாணியில் ஒரு கடிதம் எழுதியுள்ளார். புதிய பெண்ணியச் சிந்தனைகளை அறிமுகப்படுத்தியது, பகூனினை அறிமுகப்படுத்தியது, போவாலைத் தமிழில் மொழி பெயர்த்தது ஆகிய விசயங்களில் சாருநிவேதிதா மற்றும் அவரது நண்பர்களின் பெயர்களை நி.பி. இருட்டடிப்பு செய்கிறது என்கிற குற்றச்சாட்டு அக்கடிதத்தின் சாராம்சம். ''ஆனால் தோழர் கல்யாணி குசுவிட்டால் கூட அது நி.பி.யில் பெட்டிச் செய்தியாக'' வெளியிடப்படுகிறதே என்றும் கேட்டுள்ளார். சென்ற இதழ் 'பதிவுகள்' பகுதியில் அகஸ்தோ போவாலின் நூலொன்று தமிழில் வரப் போவது பற்றிக் குறித்திருந்தோம். அதனை மொழிபெயர்த்துள்ளது திரு. சாருநிவேதிதா என்கிற தகவல் அதில் விடப்பட்டுப் போயுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். ஒரு குறிப்பிட்ட பக்தியில் வேரூன்றி மக்களோடு அய்க்கியமாகி உரிமைப் போராட்டங்களை நிகழ்த்துவதில் தோழர் கல்யாணியின் செயல்பாடு குறிப்பிடத்தக்க 'மாதிரி'யாக அமைந்துள்ளதை அனைவரும் அறிவர். இதனாலேயே அரசின் தாக்குதலும் அவரைநோக்கிக் குவிக்கப்பட்டுள்ளது. தவிரவும் நிறப்பிரிகையின் தொடக்கம் முதல் அதன் நலனிலும் வளர்ச்சியிலும் ஈடுபாடு காட்டி வருபவர் கல்யாணி. அவரது செயற்பாடுகள், அவர் மீதான தாக்குதல்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்தலை நிறப்பிரிகை தவறு எனக் கருதவில்லை. தனது முக்கிய பணிகளில் ஒன்றாகவே கருதுகிறது. O



படிப்பகம்

www.padippakam.com

# மாற்றுக் கலாச்சாரம் - கூட்டு விவாதம்

நிறப்பிரிகையின் முதல் இதழிலிருந்தே மாற்றுக் கலாச்சாரம் குறித்த விவாதங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன சிந்தனை தளத்தில் மட்டுமின்றி செயல்முறைக் களங்களிலும் இது விரிவாக்கப் பட்டுள்ளது. சாதி, கல்வி, பெண்ணியம், பெரியாரியம், தொடர்பு சாதனங்கள் எனஎல்லா கூட்டு விவாதங்களிலும் கலாச்சாரம் குறித்த பார்வைகள் விரிவாகவே தொகுக்கப்பட்டுள்ளன இன்னும் விரிவாக இந்தப்பிரச்சனையை அணுகும் நோக்கோடு இந்தக் கூட்டுவிவாதம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அறுபதுகளை உலக அளவில் முக்கியமான பத்தாண்டுகளாகக் (Decade) குறிக்கலாம்.

ஐரோப்பிய நாடுகளில் மாணவர்புரட்சி (Student Revolution) ஏற்பட்டது. இந்திய அளவில் நக்சல்பாரி போராட்டங்கள் எழுந்தது. தமிழகத்தில் திராவிட அரசியல் தீவிரம்பெற்றது இந்தப் பத்தாண்டுகளில் தான்.

இன்று, அறுபதுகளை மறுபடியும் நிகழ்த்திக் காட்டும் யத்தனிப்பு பல முனைகளிலும், தீவிரம் பெற்றுள்ளது.

திராவிட அரசியல் பற்றிய விவாதம்புத்தெழுச்சி அடைந்துள்ளது.

மகாராஷ்டிராவில் அறுபதுகளில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய தலித் கலாச்சார/அரசியல் பற்றிய பேச்சு தமிழில் இப்போது எழுந்துள்ளது

ஐரோப்பிய மாணவர் புரட்சியின் சாயல்களாக (பேச்சளவில்) சிலவும் தென்படுகின்றன.

கலாச்சார அடையாளம் மறுக்கப்பட்ட மக்கள் அடையாளம் வேண்டிப் போராடுவதும்.

கலாச்சார அடையாளங்களால் சுமையேற்றப் பட்டவர்கள் அதனை மறுத்து நிராகரிப்பதும் உலக அளவில் நடந்து கொண்டுள்ளது.

இந்நிலையில், இங்கு ஏற்பாடாகும் இந்தகூட்டு விவாதம் மிகமுக்கியமானதாக அமைகிறது. இதில் விவாதிக்க சில புள்ளிகளைத் தொகுத்துள்ளோம்.

1 கலாச்சார மேலாதிக்கம் நமது சூழலில் எந்தெந்த தளங்களில் எப்படி எப்படி நடக்கிறது

2 இன்று மேலாதிக்கம் செய்யும் கலாச்சாரக் கூறுகளாக நாம் எவற்றைச் சுட்டலாம்.

3 ஒருமுகப்பட்ட கலாச்சாரத்தை மறுக்கும் மாற்றுக் கலாச்சார நடவடிக்கைகள் பன்முகப் பட்ட அடையாளங்களைக் கொண்டிருக்குமென்றால் அவற்றை எவ்விதம் இனங்கண்டு தொகுப்பது

4 ஏகாதிபத்திய கலாச்சாரத்துக்கு எதிர்நிலையில் வைக்கப்படும் மூன்றாம் உலக/இந்திய கலாச்சார அடையாளத்தின் கீழ் நசுக்கப்படும் குரல்கள் எவை.

5 விளிம்புநிலைக் கலாச்சாரங்களை அடையாளம்காண மையங்களை அடையாளம் காண்பது அவசியம். இன்று செயலாற்றும் மையங்கள் யாவை.

6 மையங்களும் விளிம்புகளும் மாறாத தன்மை கொண்டவையா?

7 மாற்றுக்கலாச்சாரத்தின் இயங்கியல்தன்மையை உணர்ந்தால் நடவடிக்கைகளை எப்படி அமைப்பது

8 உச்சபட்சமான விளிம்பின் எல்லையென எது உள்ளது? அங்கிருந்து நமது நோக்கினை எவ்விதம் கட்டமைப்பது?

9 கலாச்சார செயல் முறையின் நுணுக்கங்களைக்கற்றுத் தேர்வதுதான் மாற்றா? அல்லது வழங்கப்படும் சட்டகங்களை எப்போதும் கேள்விக்குட்படுத்துவது வழியா?

இவை சிலபுள்ளிகள் வழக்கம்போல. விவாதம் இவற்றை மீறியும் அமையலாம்.

கூட்டுவிவாத தேதி:
மார்ச் 13 ஞாயிறு காலை 10 மணி.
இடம்: கோயம்புத்தூர்

சரியான இடம் கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.



படிப்பகம்

ளாதார வீழ்ச்சியைப் போல மீண்டும் ஒரு முறை ஏற்படக் கூடாது என்கிற நோக்கில் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய உலக முதலாளியம் 1947ல் 'காட்' ஒப்பந்தத்தை உருவாக்கியது. தொடக்கம் முதல் மைய நாடுகளின் நலன்களின் நோக்கிலேயே இது உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதுவரை ஏழு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. உருகுவே பேச்சுவார்த்தை ஏழாவது சுற்று. 80களில் ரீகனது ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அமெரிக்க பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு உருகுவே பேச்சு வார்த்தை (1986) முடுக்கி விடப்பட்டது. அமெரிக்கவணிக நலன்களே இதன் நோக்கம். தொடக்கம் முதல் அமெரிக்காவுக்கும் அய்ரோப்பிய நாடுகளுக்கும் உள்ள முரண்பாடுகளும் மைய நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் உள்ள முரண்பாடுகளும் வெளிப்பட்டு வந்துள்ளன. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி என்பது உலக அளவிலான சம நிலையில் எந்த அளவிற்கு மூன்றாம் உலக விளிம்பு நாடுகளின் நலன்களைப் பலவீனமடையச் செய்துள்ளது என்பதற்கு உருகுவே பேச்சுவார்த்தைகள் மிகச் சிறந்த சாட்சியம் ஏழு ஆண்டுகளுக்கு முன் இந்தியா முன்வைத்த பல நிலைபாடுகளை படிப்படியாக விலக்கிக் கொண்டு முழுமையாகக் சரணாகதி அடைந்த வரலாற்றை நாம் நுண்மையாகக் கவனிக்க வேண்டும். அமெரிக்காவுக்கும் இதர மைய நாடுகளுக்குமிடையேயான முரண்கள் நாடக பாணியில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதர மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டுகிற அடிப்படையில் மையங்களுக்கிடையே ஒரு சமரசம் வந்துள்ளதே உண்மை. இந் நிலையில் டங்கல் அறிக்கை குறித்த இரு எதிரெதிர்ப் பார்வைகள் இங்கே முன் வைக்கப்பட்டுள்ளன. நிறப்பிரிகையோடு தொடர்புடையவரும் தலித்/பெண்ணிய/சுற்றுச் சூழல் அரசியல்களை முன்னிலைப் படுத்தி வருபவருமான தோழர் கெயில் ஓம்வெத் டங்கல் எதிர்ப்பில் உள்ள பார்ப்பன அடிப்படையைச் சுட்டிக் காட்டுகிறார். மார்க்ஸியம் சந்தையை முழுமையாகப் புறக்கணிக்கச் சொல்லவில்லை என்கிறார். மாவோவுக்குப் பிந்திய சீனத்தின் பொருளாதாரச் 'சீர்திருத்தங்களை' கண்ணை மூடிக்கொண்டு திட்டித் தீர்ப்பதில் பொருளில்லை என்கிறார். டங்கல் அறிக்கையின் கூறுகளை இந்திய விவசாயிகளின் நலம் நோக்கில் பயன்படுத்துவது எப்படி எனச் சிந்திக்க வேண்டும் என்கிறார். கெயிலின் கருத்துக்களில் நிறப்பிரிகைக்கு உடன்பாடு இல்லையெனினும் இந்தச் சிந்தனையைத் தோழர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியம் எனக் கருதுகிறது. மாவோயிச நிலைபாட்டில் நின்று கெயிலின் கருத்துக்களை மறுக்கும் தோழர் எஸ்.சி அவர்களின் கட்டுரை ஒன்றும் இந்த இதழிலேயே உள்ளது. தோழர்கள் இவற்றைப் படித்துவிட்டுஆழமாகச் சிந்திக்கவும், கருத்துக்களை நிறப்பிரிகைக்கு எழுதவும் வேண்டுகிறோம்.

எஸ் என். நாகராசனின் புதிய (!) நூலுக்கு ஒரு விரிவான விமர்சனம் இந்த இதழில் வந்துள்ளது. ஒரு நூலுக்கு இத்தனை பக்க விமர்சனங்கள் தேவையில்லை யெனினும் ஞானி–நாகராசன் குழுவினர் சமீப காலங்களில் முன் வைத்து வரும் கருத்துக்களுக்கு பொதுவான ஒரு மறுப்பாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. வைணவம்- பற்றிய அடிப்படையாக சில குறிப்புகளையும் இக் கட்டுரை முன் வைக்கிறது.

தலித்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளைத் தாண்டிப் பொதுவான பிரச்சினைகளைப் பேசும் தலித் தலைவர்களை அரசு அதிக எரிச்சலுடன் பார்ப்பது கவனிக்கத் தக்கது. இந்த வகையில் தோழர்கள் திருமாவளவன், சந்திரபோஸ், அரங்க. குணசேகரன் ஆகியோர் அடிக்கடி அரசின் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகின்றனர். காவிரி நீர்ப்பிரச்சினை பற்றிப் பேசியதற்காக குணசேகரனை தேசியப் பாதுகாப்புச்

www.padippakam.com

சட்டத்தில் கைது செய்தது தமிழக அரசு. எனினும் இக் கைதுக்கு எதிராக தலித் தோழர்களும், தோழமைச் சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு இயக்கங் களின் விளைவாக அரங்க குணசேகரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த இடத் தில் ஒன்றைச் சொல்லத் தோன்றுகிறது வடமாநிலங்களில் நடைபெற்றதேர்தல்களில் மேற்சாதி நலன் காக்கும் இந்துத்துவத்திற்கு எதிர்ப்பாக தாழ்த்தப்பட்டோர்+பிற் படுத்தப்பட்டோர்+சிறுபான்மையினரின் ஒன்றிணைப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டாய் தோன்றியுள்ள பகுஜன் சமாஜக்கட்சி+சமாஜ்வாதிக்கட்சியின் வெற்றி இந்திய அரசியலில் ஒரு புதிய போக்கை வேகப்படுத்தியுள்ளது. இதன் தமிழ்நாட்டு வெளிப் பாடு எப்படியிருக்கும் இதில் நமக்கான பாத்திரமென்ன என நாம் சிந்திக்க வேண்டி யது அவசியமாகியுள்ளது.

நேர்காணல் பகுதியில் அஜித்சிங் பெய்ன்சின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பி.யு.சி.எல் பணிகளில் ஓய்வுஒழிவின்றி ஈடுபடும் தோழர்கள் எஸ்.வி.ஆரும் வ.கீதாவும் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவர்கள். இதய நோய்க்கான அறுவை சிகிச்சை முடிந்து ஒரு சில மாதங்களே ஆகியிருந்த போதிலும் கொஞ்சமும் உற்சாகம் குறையாமல் எஸ்.வி.ஆர் இந்த நேர்காணலை எடுத்து உதவினார். இந்தியாவில் குற்றங்கள் மிகுந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில் மனித உரிமை மீறல்களும் மிகவும் அதிகரித்து வருகின்றன. கூடிய விரைவில் இதிலும் தமிழ்நாடு முதலிடம் பெறக்கூடும். அரசியல் கட்சிகள் யாவும் போலீஸ் அமைப்பை எதிர்க்கத் துணியாத இன்றைய சூழலில் மனிதஉரிமை இயக்கங்கள்தான் இதனைச் செய்ய வேண்டியுள்ளது. பெய்ன்சின் கருத்துக்கள் இந்தவகையிலும் நமக்கு உதவக்கூடியவை.

நிறப்பிரிகை வெளியிடும் அடுத்த இலக்கிய இணைப்பு தலித் இலக்கியம் பற்றியதாக இருக்கும். இந்திய அளவில் இந்தத் தளத்தில் செயல் படுபவர்களின் கட்டுரைகள், பேட்டிகள், படைப்புகள் இடம் பெறும்.


தனிச்சுற்றுக்கு நன்கொடை ரூ. 20 நிறுவனங்களுக்கு ரூ. 30

# நிறப்பிரிகை

ஆசிரியர் குழு

ரவிக்குமார் — வேல்சாமி — அ. மா.

வெளியீடு:

தோழமை
20, கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்-612 001.

நன்கொடைகள், கடிதங்கள், கட்டுரைகளுக்கு

அஞ்சல் பெட்டி எண்: 192
பாண்டிச்சேரி-1
605 001.

அச்சிட்டோர்: அன்பு அச்சகம், 12, தெற்கு மாடவீதி, காஞ்சிபுரம்-631 503. தொலைபேசி: 5312


படிப்பகம்